உ

# நல்லந்துவனார்
# கலித்தொகை.

மதுரை-பாரத்துவாசி

நச்சினார்க்கினியார்

உரையோடும்

யாழ்ப்பாணம்

சி. வை. தாமோதரம்பிள்ளையால்

பலதேசப்பிரதிருபங்களைக்கொண்டு

பரிசோதித்து

ஸ்ரீ தொண்டமான் புதுக்கோட்டை மகாராசாவின்

மந்திரியும் பிரதிகாவலருமாகிய

கௌரவ அ. சேஷையசாஸ்திரிகள்

C. S. I.

காருண்யோபகார திரவியத்தைக்கொண்டு

பதிப்பிக்கப்பட்டது.

சர்வஜித்துவை ஆடிமீ.

**Copyright Registered.**

MADRAS.
PRINTED AT THE SCOTTISH PRESS, BY GRAVES, COOKSON AND CO.

1887.

## உரையாசிரியர் சிறப்பு.

பச்சைமா லனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சினாற் றிசையு முண்ணா மமிழ்தென வெழுநா வெச்சில்
மெச்சினா ணாளும் விண்ணோர் மிசைகுவர் வேத போத
நச்சினார்க் கினியா னெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்.

# சிறப்புப்பாயிரம்.

பாற்கடல் போலப் பரந்த நன்னெறி
நூற்படு வான்பொரு ளுண்ணிதி னுணர்ந்து
போக்கறு கேள்விப் புலவோர் புலத்தி
னுற்பொருள் பொதிந்த தூக்கமை யாப்பினைத்
தேக்கிய சிந்தைய னாகிப் பாற்பட
வெழுத்துஞ் சொல்லும் பொருளு மிம்மூன்று
மிழுக்கற வாய்ந்த வழுக்கிறொல் சீர்த்தித்
தொல்காப் பியமெனுந் தொடுகடற் பரப்பை
மறுவுங் குறைவு மின்றி யென்றுங்
கலையி னிறைந்த கதிர்மதி யென்ன
நிலையுடை கலத்தி னெடுங்கணா காணுக்
கல்லா மாந்தர் கற்பது வேண்டியு
நல்லறி வுடையோர் நயப்பது வேண்டியு
முரை யிடையிட்ட காண்டிகை யுரைத்தும்,
ஆன்றோர் புகழ்ந்த வறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரிய
லொருபது பாட்டு முணர்பவர்க் கெல்லா
முரையற முழுதும் புரைபட வுரைத்தும்,
ஒலித்திரைத் தலத்தி னுணர்ந்தோ ருரைக்குங்
கலித்தொகைக் கருத்தினைக் காட்சியிற் கண்டதற்
குள்ளுறை யுவமமு மேனை யுவமமுந்
தெள்ளிதிற் றெரிந்து திணைப்பொருட் கேற்ப
வுள்ளுறை யுவமத் தொளித்த பொருளைக்
கொள்பவர் கொள்ளக் குறிப்பறிந் துணர்த்தி
யிறைச்சிப் பொருளுக் கெய்தும் வகையைத்
திறப்படத் தெரிந்து சீர்பெறக் கொளீஇத்
துறைப்படு பொருளொடு சொற்பொருள் விளக்கி
முறைப்பட வினையை முடித்துக் காட்டிப்

பாட்டிடை மெய்ப்பாடு பாங்குறத் தெரித்துப்
பாற்பட நூலின் யாப்புற வுரைத்த
நாற்பெயர் பெயரா நடப்பக் கிடத்திப்
போற்ற வின்னுரை பொருள்பெற விளம்பியும்,
வையம் புகழ்ந்து மணிமுடி சூட்டிய
பொய்யில் வான்கதை பொதிந்த செந்தமிழ்ச்
சிந்தா மணியைத் தெண்கடன் மாநிலம்
வந்தா தரிப்ப வண்பெரு வஞ்சிப்
பொய்யா மொழிபுகழ் மையறு காட்சித்
திருத்தகு முனிவன் கருத்திது வென்னப்
பருப்பொருள் கடிந்து பொருட்டொடர்ப் படுத்து
வினையொடு முடியப் புனையுரை யுரைத்தும்,
நல்லறி வுடைய தொல்பே ராசிரியன்
கல்வியுங் காட்சியுங் காசினி யறியப்
பொருடெரி குறுந்தொகை யிருபது பாட்டிற்
கிதுபொரு ளென்றவ னெழுதா தொழிய
விதுபொரு ளென்றதற் கேற்ப வுரைத்துங்,
தண்டமிழ் தெரித்த வண்புகழ் மறையோன்
வண்டிமிர் சோலை மதுரா புரிதனி
லெண்டிசை விளங்க வந்த வாசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாச
னுண்மறை துணிந்த நற்பொரு ளாகிய
தூய ஞான நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாள
னவின்ற வாய்மை நச்சினார்க் கினியா
னிருவினை கடியு மருவியம் பொதியின்
மருவிய குறுமுனி தெரிதமிழ் விளங்க
வூழி யூழி காலம்
வாழி வாழியிம் மண்மிசை யானே.

பாயிரம் முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்.

# கலித்தொகைப்

# பதிப்புரை.

கயிலை மன்னிய கடவுட னனுக்கிர கத்தி
னியல்பு காட்டிமற் றேழையேம் பொருட்டுரு வேய்ந்த
செயல்கை லாயநா தக்குரு திருமறைக் காட்டிற்
பயில வாய்ந்ததென் ருய்ந்தவ னிணையடி பணிவாம்.

திங்க ளாம்பலுஞ் செங்கதிர்ச் செல்வன் - கொங்கவிழ் நறையிதழ்ப் பங்கய மலரு - நீர்மிசை யலர்த்துஞ் சீர்வறி தாக - வளமலி யுலகி லுளநிறை புலமைக் - கலைக்கதிர் கொடுகருஞ் சிலைக்கிணை கடந்த - என் இதயமுஞ் சிறிதறிவு உதயமாம்படி பார்மிசைப் பக்குவிட நெகிழ்த்திய மிக்க சிறப்பிணையுடைய

சுன்னை முத்துக் குமாரன் றுணைக்கழல்
சென்னி நாவோடு சிர்தை திருந்தவைத்
தன்ன மூதறி வாளர் பதந்துதித்
தீந்தி லத்திவ் வுரையின் றியம்புகேன்.

தமிழ் சுயபாஷையென்பதூஉம், அதன் பெயர் திரவிடமரூஉவன்று தமிழ்மொழியேயென்பதூஉம், அஃது பரதகண்டத்தில் எப்பாஷைக்கும் பிந்தியதன்றென்பதூஉம், எவ்வாற்றானும் பிறபாஷைகளுக்குத் தாழ்ந்ததொன்றன்றென்பதூஉம் வீரசோழியப் பதிப்புரையில் ஆக்ஷேப நிராகரணசகிதமாக விவரித்தெழுதியிருக்கின்றேன்.

ஆயினும் என் கூற்றை நன்குணராது, திரவிடமென்னுஞ் சமஸ்கிருதபதந் தமிழெனத்திரிதற்கு மார்க்கமில்லையென்று யான் மறுத்ததுபோலச் சிலர் மயங்கி, வெகுகஷ்டப்பட்டு விதிநாட்டித், திரவென்பது தவ்வாகியும் வகரடகரங்

கள் மகரழகரங்களாகியும் மருவி அம்மீறுகெட்டுத் தமிழாயி ற்றென்று பல்லுதாகரணங்கள்காட்டி வாதித்து, இனி யான் தம்மதத்திற்கு உடம்படுதலே தக்கதென்றும் போதித்தனர். இப்படி மருவுதற்கு விதியிலதென்று யான் யாண்டுஞ் சாதித் திலேன். இதுவும் ஒரு பெருமயக்கே. தமிழென்பதற்குந் திரவிடமென்பதற்கும் உள்ள சப்தபேதத்தைக்குறித்து விசா ரிப்புழியன்றே இது பயன்படுவது? அன்றியும் மரூஉமொழி யிலக்கணமுமொன்று உளதாக விதிவிதியென்று மாரடிக்க வேண்டிய தலைவிதிதானென்னே? மரூஉவிற்கு ஒருவழிப்ப ட்ட விதியுண்டா? திரவிடந் தமிழென மரீஇயிற்றென்ருற் போதாதா? தமிழென்னுஞ்சொல் தமிழ்ப்பாஷைச்சுயமொ ழியா திரவிடமென்னும் வடமொழித்திரிபா எஃதுண்மை யென ஆராய்ச்சிசெய்வான் புகுந்தபோதே திரவிடமென் பது தமிழென மாறுதற்கு விதியுண்டென்று யான் ஒத்துக் கொண்டது தானே போதருமல்லவா?

இனி இவர்கூற்றின் சாராமிசத்தைச் சிறிது கவனிப் பேம். மதுரையில் ஒரு திருமலைநாயக்கன் இருந்தனன், சென் னையில் ஒரு திருமலைநாயக்கன் இருந்தனன், இருவரும் வடு கர், சென்னைக்கும் மதுரைக்கும் மிகச்சுளுவிலும் விரைவி லும் போய்வரத்தக்கதாகப் புகைரதவீதியுண்டு, ஆதலால் இரண்டிடத்தும் இருந்தது ஓரே திருமலைநாயக்கன்தானெ ன்பதே. இஃதென்னதர்க்கலக்ஷணம்! என்னவிபரீதம்!! ஓரே காலத்தில் இருந்தாரொன்று கொள்ளினும் இது சித்தாந்தமா காதே. பின்னை அகத்தியர்காலத்தின்முன்தொட்டுள்ள பதி னாறாயிரம் வயதுள்ள தமிழ்ப்பதத்தையும் உச்சயினிபுரத் தில் இரண்டாயிரம் வருஷத்தின்முன் பிறந்த திரவிடபதத் தையும் ஒன்றென்ருல் யார்தான் நகையார்? மூதாதை திரு மன்றலிற் பௌத்திரன் சந்தனதாம்பூலம் பரிமாறினனென் பதற்கும் இதற்கும் யாதுபேதம்? தமிழென்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்தியதொல்காப்பியர் காலத்துச் சம்ஸ்கி ருதநூலுடையோராய் நாரதவியாசவசிஷ்டராதியர் வாய்

மொழியினின்று திரவிடசப்தம் வழங்கியதை முதற் காட்டியன்றோ பின்னர் இம்மதம் நாட்டப்புகுதல் வேண்டும்? சிவபெருமான் அகத்தியனைப் பொதியிற்கு அனுப்பியகதை ஸ்காந்தம் முதலிய பழையபுராணங்களில் உளதாகவும், ஆண்டுத்திரவிடசப்தத்தைக் காண்கிலமே. ஆலசியபுராணம் பாகவதம் முதலிய பிற்றைநாள் நூல்களிலன்றோ அது முளைத்தது? யான் போகும் இடங் கலைவல்லோரும் முனிவரும் நிறைந்தபெருமாண்பினதாதலில் அவர்கள் மொழியை உபதேசித்து என்னை ஆண்டனுப்புக என்றதன்றித் திரவிடமென்று கேட்டதில்லையே.

வியாசர் புராணங்கள் செய்தகாலத்திற் தமிழ் இல்லை, இருப்பினன்றோ அதன் பெயர் வரும், இஃதொன்றே தமிழ் பிற்றைநாளது என்பதற்குச் சான்றாகுமென்றும் வாதிப்பார் போலும். புராண இதிகாசங்களினகத்துச் சேய்ஞலூர் மணலியூர் முதலிய சுத்த தமிழ்ப்பெயர்கள் கூறப்பட்டுக்கிடப்பதே தமிழ் அவர் காலத்து உண்மைக்குச் சான்றாகும்.

ஒன்றினின்று ஒன்று பிறந்தது உண்மையாயின், அதற்கு வேறு எது காட்டி முடிவுசெய்யாமல், எழுத்திலக்கணவிதியினால் ஒன்றனை ஒன்றன் யாயென்று கூறி, அதுமாத்திரத்தாற் தமது மதந் தாபிக்கப்பட்டதென்று முழங்குவது ஆன்றோர் அறிவிற்குப்பெருமையன்று. மேலும் ஸ்தாபனப்பொறுப்பும் அவரதே. எழுத்திலக்கணவிதியொன்று மாத்திரமே கொண்டு நியாயம்பேசில் (Wall) உவால் என்னும் அங்கிலேய பதம் பந்தல்பந்தர் சாம்பல் சாம்பரொன்றாற்போல லகரம் ரகரமாகிப் பிரவாளம் பவளம் பிரயாணம்பயணமென்றாற்போல ஆகாரங்குறுகிச் சீலம் சுசீலம் சுகம் சுசுகமென்றாற்போல்ச் சுப்பிரத்தியம்பெற்றுச் சுவரொன்னுந் தமிழ்ச்சொற் சனித்ததென்றுஞ் சிவிறி விசிறியென்றாற்போல (Horse) ஹோர்ஸ் குதிரையென்றும் (Rice) றைஸ் சோறென்றும் ஆயிற்றென்றுஞ் சொல்லலாமே. (Sunday) ஸன்டே முதலிய வாரப் பெயர்களெல்லாம் ஸன்னினின்று சூரியனும் மூனிலிருந்து

சோமனுந் தியூஸ் ஸ்யூத்தெனமாறிச் செவ்வாயும் பிறந்த தென்று சாதிக்கலாமே. இதுவா அந்தோ! இவர்கள் கற்ற எழுத்திலக்கணமுடிவு?

இனிக் காலநிர்ணயத்தையாவது கொஞ்சமேனுங் கவனிக்கின்றீர்களா? சோமசுந்தரபாண்டியனென்ற பெயரை ஒருவற்கதிகம் வகித்தல் தகாதென்றாற்போலக் கிரேக்கர் இந்தியாவிலே ஒரு சோமசுந்தரபாண்டியனோடு இற்றைக்கு க,௫00 வருஷத்திற்குமுன் கொண்டாட்டமுடையராயிருந்தனராதலால் அவனே ஆதி சோமசுந்தரபாண்டியனென் மயங்கி மதுரைத் திருவிளையாடற் சரிதையெல்லாம் மூந்நாளைச்சரிதையென்று துணியுங் காலுவலாசிரியர் கூற்று எத்தன்மையது? இன்னோரன்னோர்க்குத் தமிழ்க்கு கரு,000 வயதும் திரவிடத்துக்கு உ,000 வயதுமென்று யாங் காட்டுவதனால் யாதுபயன்?

மேலும் ஆனனம் பங்கசங் கிரீடமென்றின்னனவொப்பத் தமிழென்பதுந் திரவிடமென்பதும் ஒருபொருளனவா? அதுவுமன்று. அங்கம் வங்கங் குலிங்கம் வங்காளமென்றாற்போலத் திராவிடம் முதலில் நாட்டைக்குறித்துப் பின்னர் ஆகுபெயராய் அந்நாட்டு மொழியைக்குறிப்பது. அங்கர் வங்கர்போலத் திராவிடரென்பது திராவிடதேசத்தாரென்னும் பொருளதன்றித் திராவிடபாடைபேசுவோரென்னும் பொருளுடையதன்று. தமிழ் அங்ஙனமன்று. தமிழரென்றாற் தமிழ்நாட்டாரென்னும் பொருள் தொனியாது தமிழ்மொழி பேசுவோரென்னும் பொருளே தொனிப்பது. சமஸ்கிருதத்தினின்று தமிழில்வந்த சொற்களுக்கு இவ்வாறாய பொருட்பேதமின்று. சமஸ்கிருதத்திற் குறிக்கும்பொருள் எதுவோ அதுவே தமிழகத்துங் குறிக்கப்படும். இதனானுந் தமிழுந் திரவிடமும் வேறுவேறென்பது போதரும்.

இன்னும் இரண்டொரு நியாயந் தமிழ்வழக்கை ஒட்டி ஈண்டுக் கூறுவன். தமிழ் திரவிடத்தின் திரிபாகிய வடமொ

ழியாமாயிற் பஞ்சதிரவிடமென்பார் பஞ்சகுற்றம் பஞ்ச கேள்வி பஞ்சதொழில் பஞ்சதாயர் பஞ்சதிணை பஞ்சபா லென்று இன்னோரன்ன தொகைகளை ஒழித்துவிட்டாற் போலப் பஞ்சதமிழென்பதனையும் விலக்கிவிட்டதென்னோ? ஐவகைப்பொருள் தொக்க வடமொழிப்பெயர்களெல்லாம் பஞ்ச என்னும் எண்ணுப்பெயர் புணர்தற்பாலவன்றோ? முத்தீயைத் திரிதீயென்றார் முப்பழத்தைத் திரிபழமென்றார் அஃதொப்ப முத்தமிழைத் திரிதமிழென்றார். மேலுந் திரிபுரத்தைத் திரிபட்டணமென்றார் பஞ்சபாதகத்தைப் பஞ்சமறமென்றார் அவ்வாறே பஞ்சதிரவிடத்தையும் பஞ்சதமிழென்றார். வேறென்ன சாட்சி வேண்டும்? சிறுகால் அருகி வழங்குஞ் சதுர்மறை சத்தகடலென்னும் அற்பவழக்கு விலக்கென்றொழிக. அதுவும் அடிப்பட்ட ஆன்றோர் வழக்கன்று. கொடுந்தமிழின்பாற்பட்ட இழிவுவழக்கேயாம். பஞ்சதமிழ் திரிதமிழென்று அங்ஙனே இழிந்தும் வழங்கிற்றிலதென்பது யான் கூறவேண்டியதில்லை.

உரியநெய் தாளதாமரை எனல்போலத் தமிழப்பிள்ளை தமிழப்பல்லவன் தமிழவண்ணல் தமிழநாகன் எனத் தமிழென்னுஞ்சொல் அகரச்சாரியைபெற்று வருதலும் அஃது ஆரியமொழியல்லாத சுத்த தமிழ்ச்சொல்லாதல் பற்றியேயென்றறிக. தமிழில் மகர ஈறுபெற்று அதுபற்றி அத்துச்சாரியை சேரப்பெற்ற சிலமொழி தவிர யாதொரு சொல் தமிழ்ச்சாரியை பெற்றது அது தமிழ்ச்சொல்லென்றே துணிக.

இனி ஆரியத்தில்வழங்கிய திரவிடமென்னும்பெயர் யாதுபொருளைக்குறித்தது? அப்பொருள் உள்ள இடத்தில் யாதுபெயர் அதற்கு நிகழ்ந்தது? பல்லாயிரவருஷமாகத் தமிழ் தனக்கொரு பெயரில்லாமலா இருந்தது? என்று யான் கேட்டதற்கு முகமென்னும்பெயர் வடமொழியினின்று வருதற்குமுன்னே தமிழில் முகத்திற்கு யாதுபெயர் வழங்கிற்றென்றுங் கேட்பாருளர். யாதாயினும் ஒருமொழியில் இரண்டோரெழுத்துச் சமஸ்கிருதத்திற்குந் தமிழிற்கும் பொது

வாயின் அது சமஸ்கிருதத்திலிருந்து வந்ததென்று சாதித்தல் சரியன்றென்றும் இங்கிலீஷிலுள்ள பாதர் மதர் ஒப்பத் தமிழிற் பிதா மாதா என்றிருத்தலால் ஒன்றினின்று ஒன்று வந்ததல்லவென்றும் யான் வற்புறுத்தியதைச் சிந்தைசெய்தனராயின் முகமென்பதும் அங்ஙனே இருமொழிக்கும் பொதுவென்று கொள்ளாது இவ்வாறு கேட்பது சாத்தியக்கோளென்னும் போலிநியாயமல்லவா? சமஸ்கிருதமொழி ஒன்றுவது பயிலாத கலித்தொகைமுதலிய சங்கத்தார் நூல்களில் முகமென்பது எத்தனையோ இடத்தில் வருகின்றதே. அன்றியும் முகமென்னும் பலபொருளொருசொல் தமிழ்த்திரிசொல்லென்பது அதற்குச் சமஸ்கிருதத்தில் வழங்காத பொருள்களும் வழங்குவதினாற் போதரும். இதுபோலத் திரு அகம் புதன் தாமரை மனமென்றற்றொடக்கத்து அளவிறந்த சொற்கள் இருமொழிக்கும் பொதுவாயுள்ளனவற்றை ஒன்றற்கே உரியதென்றுகோடல் நடுவுநிலைமையன்று. ஒருமொழி பலபாஷைக்குப் பொதுவாய் நிகழ்வது பாஷாசம்பந்தம் உணர்ந்தோர்க்கு நூதனமன்று. திருமண் திருநீறு திருவிழா அங்கை அஞ்செவி புதன்கிழமை செந்தாமரை முதலிய செந்தமிழ்வழக்கும் புணர்ச்சியும் சமஸ்கிருத மணமுமில்லாத பண்டைய சுத்த தமிழ்நூல்களில் ஆங்காங்குப் பல இடங்களிலுங் காணலாம்.

இவற்றோடு பெரும்பாலும் ஊடாடாது பிற்றைக்காலத்தனவாகிய இதிகாச புராணாதிகளிலுஞ் சமயசாஸ்திரங்களிலும் மிக்க பயிற்சியுடையோரே தமிழின் தொன்மையையுஞ் சுவயத்துவத்தையும் நன்குணராமல் அதனை வடமொழியினின்று உற்பத்தியாயிற்றென்பர். இலக்கணக்கடலாகிய ஈசானதேசிகரே இவ்வாறு மயங்கினரெனின் மற்றையோர் பிழைப்பது அதிசயமா? இவர் "அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று—ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ" என்று கூறியதே அவர் இந்நூல்களிற் பயிலாமைக்குச்சான்றாம். தமிழ் செய்த தவக்குறைவே அன்னோர் வட

மொழிச்சாகரத்தில் மூழ்கி ஆனந்தித்துத் தமிழை அலட்சியஞ்செய்தது.

* வடநூற்பயிற்சியில்லாத என்போலியர் இவ்விதஆராய்ச்சியில் ஒரு முடிவுகாண அருகரன்றென்று சிலர் வாதித்தனர். காண்டல் கருதல் உரையென்னும் மூன்று பிரமாணங்களே அறிவிற்குக் கருவியாம். அவற்றுள் முன்னையது இவ்வாராய்ச்சிக்கு ஒவ்வாது. பின்னையவற்றுள்ளுங் கருதல் காண்டலானும் உரையானும் பெற்ற சாதனங்கள்மேற் சென்று நிகழ்வது. ஆதலால் உரையே ஈண்டு இன்றியமையாததாம். இனி இவ்வுரைப்பிரமாணங் கல்விகேள்விகளால் அடைவது. இவற்றுட் கேள்வியில்லாக் கல்வி சிறப்புறாது. கல்வியின்றியுங் கேள்வி சிறப்புறும். "முற்றப்பகலு முனியாதினிதோதிக் - கற்றலிற் கேட்டலே நன்று." திருவள்ளுவநாயனாருஞ் "செல்வத்துளெல்லாந்தலை" என்றது அதனையே. பின்னைச் சமஸ்கிருதநூற்களின் பொருள் அந்நூற்களில் வல்ல புலவர் வாயிலாகக் கேட்டறிந்த அறிவின்மேல் யுத்திபூர்வமாகக் கருதல் நடந்துழி வருங் குறைவு யாதோ? அன்றியுங் கல்வியாலாகும் அறிவிற் கேள்வியான்வருவது நூறுமடங்காகுமே. ஆதலாற் பலகாலும் விபரீதஉணர்ச்சியையுந் தருவதாகிய கல்வியே இதற்கு உபகாரப்படுவதன்றென மறுக்க.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

வடமொழியின் மகத்துவத்தை யான் எஞ்ஞான்றும் எட்டுணையும் அவமதித்திலேன். தமிழ் அநாதியென்றாவது

* "வடநூற் பயிற்சியில்லாத எனக்கு" என்று யான் வீரசோழியப்பதிப்புரையில் எழுதியது அப்பாஷையறிவு சிறிதும் இன்மையானன்று. சமஸ்கிருதத்திற் சந்தியுங் கிரியையும் பாடம்பண்ணி அமரமும் நானார்த்தரத்தினாவலியும் ஓதி இதோபதேசமும் ரகுவம்சமும் பார்த்துளேனாயினுஞ் சின்னூல் கற்றுப் பன்னூற்புலவர்போலத் தம்மை மதிப்பார்போலாது என் வடமொழியுணர்ச்சி ஒருணர்ச்சியன்றென்று யான் கருதியமைபற்றியேயெனக் கொள்க. தமிழிலேதானும் யான் என்னை ஒருபொருளாக மதியாமை தொல்காப்பியப்பதிப்புரையிற் பண்டிதர் கவிராசர் வித்துவான் புலவனென்றின்னோரன்ன பட்டத்திற்கு அருகனாகாது இன்னும் பலகாலந் தமிழ்ப்படித்தற்கு உரிமை பூண்டுநிற்கும் என்போலியரென்பதனான் விளங்கும். நமது தமிழ்நூல்களுக்கு வந்த விதியையும் கையெழுத்துப் பிரதிகளின் கதியையும் அவை அடைந்திருக்கும் ஸ்திதியையும் பார்த்துச் சகிக்கமாட்டாமையொன்றே என்னை இத்தொழில்களில் வலிப்பது.

சமஸ்கிருதத்திற்கு முந்தியதென்றாவது கொள்கிலேன். ஆரியர் வருதற்குமுன் பரதகண்டத்திலிருந்த பாஷை தமிழென்றும் ஆரியரால் முரியடிக்கப்பட்ட தமிழர் * தென்றிசைச்சென்று சேரசோழபாண்டிய ராச்சியங்களை ஏற்படுத்தினார்களென்றும் ஆதலாற் பரதகண்டத்திற்குத் தமிழே முந்தியதென்றுஞ் சாதிப்பாருளராகவும், யான்

"இருமொழிக்குங்கண்ணுதலார் முதற்குரவரிசைவாய்ப்ப
இருமொழியும்வழிப்படுத்தார் முனிவேந்தரிசைபரப்பும்
இருமொழியுமான்றவரோ தழீஇயினாரென்றாலிவ்
இருமொழியுநிகரென்னு மிதற்கையமுளதேயோ."

என்ற முனிவரர் பதத்தைச் சிரமேற் தாங்கி இருமொழியுஞ் சமத்துவமுடையனவென்றும் ஆகவே தமிழிற்குச் சமஸ்கிருதந் தாய்மொழியன்றென்றுந் தமிழின்பெயர் திரவிடமென்பதன் மரூஉவன்றென்றுஞ் சாதிப்பான் நின்றனன்.

ஆயினுஞ் சுதேசமித்திரன் வாயிலாகத் தோன்றிய ஒருவர் யான் கூறாத கூற்றுக்களையும் என் தலைமேலேற்றிச் சமஸ்கிருதத்திலும் வைஷ்ணவத்திலும் அசூயைகொண்டிருக்கின்றேனென்று பழிசுமத்தினார். சைவருஞ் சமணரும்போல வைஷ்ணவர் தமிழைப் பரிபாலித்திலரென்று யான் சாற்றியதில் வைஷ்ணவநிந்தை எவ்வாறு பெறப்பட்டதோ? "வைணவர்கள் திராவிடத்தைப் பள்ளித் தமிழென்று ஏளனமாயுரைப்பர்" "வைணவக்கிரந்தந் தமிழிற் செய்தால் அது தமிழுக்குக் கவுரவம்" என்று கழறிய அவர்கூற்றே என் சொல்லை மெய்ப்பிக்கவில்லையா? பின்னை என்மேல் ஏன் அவர்க்கு இவ்வளவு நிந்தனை! விதவையை மொட்டையடிக்கும் உறவினர் அவள் அளகத்தின்மேற்கொண்ட வெறுப்பினாலா அவ்வாறு செய்விக்கின்றனர்?

---

* இதற்கு அயற்சாட்சிகளும் பிற உளவென்றேன். சென்னை ஹைகோர்ட் சிரேஷ்டநியாயாதிபதியாயிருந்த சர் சாள்ஸ் தேணர்துரையவர்கள் இமயமலைச் சாரலில் இருக்கும் ஒருவேடச்சாதியாருடைய பாஷை தமிழோடொற்றுமையுடையதென்று தெரிவித்தனர். இதனால் தென்றிசைச்சென்றோர் பலராகச் சிலர் வடதிசைச்சென்று மலையடிவாரங்களிற் குடியுறைந்தனரென்றுங் காலாந்தரத்திற் பல விகற்பங்களையடைந்த அவர்தமிழ் இப்பொழுது பிறிதொரு பாஷையாயிற்றென்றுங் கொள்ளலாம். இங்குவந்த தமிழர்நின்று சிதறி நீலகிரியிலுங் குடகத்திலும் வதிந்த தோடர் குடகர் பாஷைகளும் அன்ன என்றறிக.

யானை தன் தலைமேல் மண்ணை வாரிப்போட்டுகொள்வதுபோல் இன்னும் பல சைவநிந்தனைகளுக்கும் சைவாசிரியநிந்தனைகளுக்கும் இவர் தன்னை ஆட்படுத்திக்கொண்டதனால் எனக்கு யாதும் மனக்கோட்டமிலது. ஆயினும் அவர் கடிதத்தில் என் கூற்றுக்கு ஆக்ஷேபமாகச் சிலவாதந் தொடுக்கப்பட்டமையால் அவற்றை மாத்திரம் ஈண்டு நிராகரிக்கின்றேன்.

"ஆரியசம்பந்தமின்றித் தமிழ்க்கிரந்தங்கள் கிடையா" என்றார். இது பிறவிக்குருடன் சூரியசந்திருருண்மையை மறுத்ததொக்கும். இதனை முன்னரே நிராகரித்திருக்கின்றேன். இதன்பொய்மைய்ய மதுரைச்சங்கத்து நூல்களுள் ஒன்றையாவது பார்த்து உணர்வாராக. இக்கலித்தொகையே இதற்குச் சான்றுபகரும்.

"அகத்தியத்திற் கீர்வாணத்தோரணைகள் அனேகங் காணலாம். நாடகத்தை நாடகமெனவே அகத்தியர் கூறுவர்" என்றார். அகத்தியத்தை இப்பெருமான் யாண்டுக் கண்டனரோ! இரண்டொரு தோரணைகளைக்காட்டி உதாகரித்தாலன்றோ அஃது ஆரியச்சிறப்புத் தோரணையென்று தெரியலாம்? அங்கிலேய பிராஞ்சிய ஜர்மானிய ருஷிய கிரேக்க லத்தீனாதி பாஷைகளின் வியாகரணங்களிலெல்லாஞ் சமஸ்கிருதத் தோரணை காணலாமே. எழுவாய் பயனிலைகொண்டு முடியுமென்றால் இது எந்தப்பாஷைத் தோரணை? வியாகரணமென்றபோதே எல்லாப்பாஷை வியாகரணங்கட்கும் பொது இலக்கணமுண்டாயிருத்தல் அவசியமாமே. இயலிசைநாடகத்தமிழெனத் தமிழிற்கூறிய நாடகமும் புராண இதிகாச காவிய நாடகமென வடமொழியார் கூறும் நாடகமும் வேறு வேறென்று அவர் அறிந்திலர் போலும். ஒன்று மொழியியை புவிலாசங்களைக் குறிப்பது. மற்றது கிரந்தநடைசுவைகளைக் குறிப்பது. இவை தம்முள்வேற்றுமையாம்.

"தமிழெழுத்துக்களே கிரந்தாக்ஷரங்களின் திரிபு" என்றார். இதனாற் போந்ததென்? கிரந்தாக்ஷரம் முந்தியதெ

ன்றாகும். தருமன் துரியோதனனுக்கு மூத்தவனென்றாற் பாண்டு திரிதராட்டிரன் தமையனுவானா? இனி "ஆதிகாலத்தில் மனுமான்கள் தேவபாடை பேசினதாகத் தெரியவருகிறது; மூலவாக்கிய வேதம் கீர்வாணமே" என்றதனாற் சித்தாந்தமானது யாது. வடமொழி முந்தியதென்பதே. அவ்வாறு வடமொழியே முந்தியதாகுக. காலத்தால் முந்தியதெல்லாம் பிந்தியதற்குக் காரணமாமா? அதிதி முந்தியவளாதலால் தைத்தியருக்குத் தாயாயினளா? ஒன்றைச் சித்தாந்தஞ்செய்யும்போது அதன் பூர்வோத்தரபக்ஷங்கள் திருட்டாந்தங்களை நிச்சயித்தன்றோ துணிதல்வேண்டும்?

"காசியிற்சங்கத்தை அடக்கத் தவம்புரிந்து வரம்பெற்றுத் தமிழையடைந்தது உலகம் அகத்தியன்மூலம்" என யான் எஞ்ஞான்றுங் கூறிற்றிலேன்.

"கீர்வாணநாயகனை மணந்தவள் வேட்கைவேளையில் மாத்திரம் அவனை இச்சித்துத் தன்மனவழியே நடந்ததினாலன்றோ அந்தப்பட்டி சோபியாமல் இழிவடைந்தாள்" என்று திட்டியுங் "காளமேகமே நீ எமதுநாளை மேகம்போல் பொய்த்தனையே! சிறப்புத்தானுனக்கு" என்று புலம்பியும் இன்னோரன்ன இழிமொழிகள் செறிந்தும் வருங் கூற்றுக்களுக்கு யான் விடையெழுதுவேனல்லேன். உலகத்தில் இவர் போலியரால் திட்டப்படுவதற்குத் தகுந்த யோக்கியதையாவது உள்ளவனாக யான் மதிக்கப்பட்டதே எனக்குப் பெருஞ்சிறப்பென்று கொண்டனன்.

தமிழுக்குக் காலாந்தரத்தில் இரண்டு பெரும் பூதங்களால் இரண்டு பேரிடையூறுகள் நிகழ்ந்தன. குமரியாறும் அதன் தெற்கணுள்ள நாடுகளுஞ் சமுத்திரத்தின் வாய்ப்பட்டமிழ்ந்தியபோது தமிழ்ச்சங்கத்திற்கு ஆலயமாய்ச் சர்வதமிழ்க் கிரந்த மண்டபமாயிருந்த கபாடபுரம் அதன்கண் இருந்த எண்ணுயிரத்தொருநூற்றுநாற்பத்தொன்பது கிரந்தங்களோடு வருணபகவானுக்கு ஆசமனமாயிற்று. பாண்டியநாட்டின் வடபாலில் ஆங்காங்குச் சிதறுண்டு குலாவிய,

சாதாரண சனவிநோதார்த்தமான சில கிரந்தங்களும் பள்ளிக்கூடங்களிற் சிறுவர்தங் கல்வித்தேர்ச்சிக்குரியவாய் வழங்கிய சிறுநூல்களுஞ் சில்லறை வாகடசோதிடாதிகளுமே பிற்காலத்தார் கைக்கு எட்டுவனவாயின.

"ஏரணமுருவம்யோக மிசைகணக்கிரதஞ்சாலந்
தாரணமறமேசந்தந் தம்பநீர்நிலமுலோகம்
மாரணம்பொருளென்றின்ன மானநூல்யாவும்வாரி
வாரணங்கொண்டதந்தோ வழிவழிப்பெயருமாள."

எனப்புலம்பிய நமது முன்னோரிடத்திலிருந்து நாம் அடைந்த பிதிரார்ச்சிதம் வெறும்பெயரினுஞ் சிலவேயாம்.

இப்பால் வடமதுரைச்சங்கம் ஏற்பட்டு, இடமிடந்தோறும் நடைபெற்றுள்ள சுவடிகளைச் சேகரித்துத், தமிழ்ப்பரிபாலனம்பண்ணித், தன்காலத்தும் நானூற்றைம்பது புதுநூல்களை அரங்கேற்றிவைத்தது. அதன்பின்னர்ச் சமணவித்துவான்கள் தலையெடுத்துப் பலபல நூல்கள் இயற்றித் தமிழை வளர்த்தனர். அதன்மேல் இதிகாசபுராணாதிகள் சம்ஸ்கிருதமொழியினின்று வித்துவான்களால் மொழிபெயர்க்கப்பட்டு மறுபடியுந் தமிழ் தலையெடுத்தபோது, நாடு முகமதீயர் கைப்பட, அவர்கள் கோரானுக்கு மாறாகவும் வீறாவதோ கிரந்தங்கள் மண்மேல் என்று மத வைராக்கியங்கொண்டு, அந்தோ ! நமது நூற்சாலைகள் அனைத்தும் நீறாக அக்கினிபகவானுக்குத் தத்தஞ்செய்தனர். இவர்கள் கைக்குத் தப்பின சின்னூல்களே இந்நாளில் நமக்குப் பெரிய அரிய நூல்களாயின. அவையும் இக்காலத்து இன்னுந் தமக்கு என்ன பேரவதி வருமோவென்று பயந்தாற்போல இங்கும் அங்கும் ஒளித்துக்கிடந்து படிப்பாரும் எழுதுவாரும் பரிபாலிப்பாருமின்றிச் "செல்துளைத்தபுள்ளியன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னோலேட்டிற்-பல்துளைத்துவண்டுமண லூழுத வரியெழுத்து" உடையவாய்ச் செல்லினால் அரிக்கப்பட்டும் பாணங்களாற் துளைக்கப்பெற்றும் மூன்றாவதுபூதமான மண்ணின்வாய்ப்படுகின்றன.

என் சிறுபிராயத்தில் எனது தந்தையார் எனக்குக் கற்பித்த சிலநூல்கள் இப்போது தமிழ் நாடெங்குந் தேடியும் அகப்படவில்லை. ஓட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களுங் கெட்டுச்சிதைந்துகிடக்கும் நிலைமையைத் தொட்டுப்பார்த்தாலன்றோ தெரியவரும்! ஏடு எடுக்கும்போது ஓரஞ்சொரிகிறது, கட்டு அவிழ்க்கும்போது இதழ் முரிகிறது, ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலுந்தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது.

இது நிற்க இக்காலத்துப் புத்தகங்களைத் தேடிப் பரிசோதித்து அச்சியற்றும் வித்வசனர்களோ தமக்குப்பொருள்வரவையே கருதி விரைவில் விலைபோகும் விநோத நூல்களையும் பள்ளிக்கூடங்களுக்கு உபயோகமான பாடபுத்தகங்களையுஞ் சர்வகலாசாலையாராற் பற்பல பரீக்ஷைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட போதனுபாகங்களையுமே அச்சிடுகின்றனர். சரஸ்வதியின் திருநடனஞ் சொலிக்கப் பெற்றனவாகிய சங்கமரீஇய நூல்கள் சிதைந்தழியவும் அவைகளில் அவர்களுக்குச் சற்றேனுந் திருட்டி சென்றிலது.

இதனைக்கண்டு சகிக்கலாற்றாது மனநொந்து அழிந்து போகுஞ் சுவடிகளை இயன்றமட்டுந்தேடி, அவற்றுட் தமிழிற்குப் பேரிலக்கணமாகிய தொல்காப்பியம் சொல்லதிகாரஞ் சேனாவரையம், அதன் பொருளதிகாரம் நச்சினார்க்கினியம், வீரசோழியம், இறையனாரகப்பொருள், திருத்தணிகைப்புராண மென்று இன்னவற்றைப் பலதேசப் பிரதிகள்கொண்டு பரிசோதித்து அச்சிடுவித்தேன். இதனால் எனக்குப் பிரதிகள் விலைபோகாமல் மூவாயிரத்தைஞ்ஞூறு ரூபா வரை

யிற் திரவியநஷ்டம் நேரிட்டது. இவ்வாறான நஷ்டத்தைத் தருமசீலரான பிரபுக்கள் நன்கொடை முதலிய சகாயஞ் செய்து பரிகரித்தாலன்றி என் முயற்சியைக் கைவிடும்படி நேரிடுவது கண்டு பரிபவமுற்றுச் சென்ற வருஷம் ஆடிமாதம் ஹிந்துபத்திரவாயிலாக ஓர் அபயம் எழுதி என் குறைமுறையை உலகத்திற்குத் தெரிவித்ததுமன்றி எனது இஷ்டர்கள் பலர்க்குந் தமிழ்ப்பிரபுக்கள் சிலர்க்கும் அக்கடிதத்தின் பிரதியைப் பிரத்தியேகமாகவும் அனுப்பினேன். அது கண்டு அநுதாபமுற்றோர் சிலரன்றி இலர்.

விசு(வ) தொல்காப்பியம் பொருளதிகாரம் அச்சிட ஆரம்பித்தபோது மேல்வரும் நஷ்டத்தை முன்னுணர்ந்து யான் மனந்தளர்ந்தது கண்டு என்னை உற்சாகப்படுத்தி அதனை அச்சிடப்பிடிக்குங் காகிதச்செலவிற்காக, இப்பொழுது மைசூர் சீப்-கோர்ட்டுநியாயாதிபதிகளில் ஒருவராக இருக்குங் கவுரவ அ. இராமச்சந்திரையரவர்கள் கஉ௫-ரூபாவுஞ் சென்னை இராஜதானி வித்தியாசாலைக் கணிதாசிரியர் இராயபஹதூர் பூ. அரங்கநாதமுதலியாரவர்கள் க00-ரூபாவும் முன்னேறக்கொடுத்ததுமன்றி, அந்நூலைப் பதிப்பித்தலால் எனக்கு நஷ்டம் நேரிடும் பட்சத்தில் தாங் கையளித்த பணத்தை யான் தமக்குத் திரும்பக் கொடுக்கவேண்டியதில்லையென்றும் மிக்க தயாளத்தோடு துணைபுரிந்தனர். இவர்களது பாஷாபிமான சிந்தை எவராலும் ஏத்தித் துதிக்கற்பாலதன்றோ?

திருத்தணிகைப்புராணச்செலவை எனது உயிர் நண்பரும் யாழ்ப்பாணத்தில் ஒரு வித்துவானும் பிரபுவுமாகிய கொழும்புத்துறை ஸ்ரீ தி. குமாரசாமிச் செட்டியாரவர்கள் தருவதாக ஒத்துக்கொண்டனர்.

2

இந்து பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்திய கடிதத்தைக் கண்டு, ஈண்டுப் பக்கத்திலே குறித்திருக்கும் பிரபுக்கள் தங்கள் தங்கள் பெயர்க்கு நேரே காட்டிய தொகையை எனது முயற்சிக்கும் பிரயாசைக்குந் தமது வெகுமதியாக அனுப்பி உபசரித்து என்னை மிகவுங் கௌரவப்படுத்தினர். அவர்கள் தயாளத்தையும் பரோபகார தேசோபகாரசீலத்துவத்தையும் பாராட்டி யான் அவர்கள் அனைவர்க்கும் மிக்க நன்றி கூறுகின்றேன். சென்னைப் பாடசாலைப் புத்தக சமாசியார் முதலியோர் என் முயற்சிக்குத் துணை செய்யும் பொருட்டு வாங்கிய புத்தகங்களின் கிரயமும் ஷெ வெகுமதிகளின் தொகையுஞ் சில்லறையில் விலையானதுஞ் சேர்ந்து இப்போது யான் செலவிட்ட பணத்தில் முக்காற் பங்கு வந்து விட்டது எனக்குப் பேருக்கத்தைக்கொடுத்தது.

| | ரூபாய். |
|---|---|
| இராஜா சர். த. மாதவராயர். ... ... | ௧00 |
| சர். ச. இராமசாமி முதலியார் ... ... | ௧00 |
| கவுரவ நியாயாதிபதி அ. இராமச்சந்திரையர் ... | ௩௫0 |
| கவுரவ இராயபஹதூர் ரு. சு. சுப்பிரமணியையர். | ௫0 |
| கவுரவ ப. சென்சல்ராயர் ... ... | ௪0 |
| பேரூர் ஜமீன்தார் முத்துவிஜய ரகுநாத தும்பைய சாமி துப்பச்சி நாயக்கர் ... ... | ௫0 |
| ஊற்றுமலை ஜமீன்தார் இருதாலய மருதப்பதேவர் | ௧00 |
| கும்பகோணம் சப் கோர்ட் நீதிபதி தி. கணபதி யையர் ... ... ... ... | ௨0 |
| கும்பகோணம் சப் கோர்ட் வக்கீல் சா. இராகவையங்கார் ... ... ... | ௨௫ |
| கும்பகோணம் துரைத்தன வித்தியாசாலைத்தலைவர் ஜே. பி. பில்டர்பெக்துரை ... ... | ௨0 |
| கும்பகோணம் துரைத்தன வித்தியாசாலை பாஷாசிரியர் சா. சேஷையர் ... ... | ௫0 |
| * கொழும்பு சுப்பிரீம் கோர்ட் நியாயதுரந்தரர் பொ. குமாரசாமி முதலியார் ... ... | ௨௫ |
| * கொழும்பு சுப்பிரீம் கோர்ட் அத்வக்கார்த் கவுரவ பொ. இராமநாத முதலியார் ... | ௨௫ |
| * மாத்துறை டிஸ்திரிக்ட் கோர்ட் நீதிபதி பொ. அருணாசல முதலியார்... ... ... | ௨௫ |
| யாழ்ப்பாணம் வலிகாமமேற்கு மணியம் ஆ. இரகுநாத முதலியார் ... ... ... | ௨0 |
| † சீகாழி கிஷ்ணசாமி முதலியார் ... ... | ௨0 |
| ஸ்ரீமத் திருப்பனந்தாளாதீனம் குமாரசாமித்தம்பிரான் ... ... ... ... | ௫0 |
| வித்தியாவிசாரணைக்கருத்தர் கு. நாகோஜிராயர்... | ௩0 |
| கவிததலம் துரைசாமி மூப்பனார் ... ... | ௬0 |
| ராவுணாகிப் சேலம் இராமசாமி முதலியார் ... | ௨0 |

* இவர்கள் மூவரும் யான் இனிமேற் பிரசுரஞ் செய்யும் ஒவ்வொரு கிரந்தத்திற்குந் தலைக்கு இருபத்தைந்து ரூபா உபசரிப்பதாக எழுதியிருக்கின்றனர்.

† இவர் இதனை யான் அனுப்பிய பிரதிகளின் கிரயமென்றுந் தாம் யாதாயினும் ஒரு நூலை முழுச்செலவுந் தந்து பதிப்பிப்பதாகவும் எழுதியனுப்பினர். இவரிடத்தும், எனது பரமாசாரியர் தேவாரணியாதீனம் சற்குருநாத சுவாமிகள் ஸ்ரீ ஸ்ரீ கைலாசநாததேசிகமூர்த்திகளிடத்தும், திருப்பனந்தாளாதீனம் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் மரபிலெழுந்தருளிய ஸ்ரீமத் குமாரசாமி முனிவரிடத்தும் பெரும் ஒத்தாசையை எதிர்பார்த்திருந்தேன். எனது தவக்குறையோ தமிழின் துரதிஷ்டமோ தெரிகிலேன் இம்மூவரும் இளம்வயதிலே சிவபதமடைய என் நம்பிக்கை நிறைவுறுமுன் போய்விட்டது.

தஞ்சாவூர் சப்கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ திரு. கனகசபை முதலியாரவர்கள் எனக்கு இம்முயற்சியிற் பணத்திலும்பார்க்கப் பிராசீன நூல்கள் தேடித்தருவதே மிக்க உபயோகமாமென உணர்ந்து மதுரையிலிருந்து ருரு பூர்வக்கிரந்த ஏட்டுப்பிரதிகள் அழைப்பித்துத் தந்தார்கள். இவற்றை யான் அத்துணைப் பொன் மொகராவாகமதித்து அவர்களுக்கு வந்தனஞ் செய்கின்றேன்.

தொண்டமான் புதுக்கோட்டை மகாராஜாவின் மந்திரியும் பிரதிகாவலருமாகிய கவுரவ அ. சேஷையசாஸ்திரியாரவர்கள், பூர்வக்கிரந்த பரிபாலனங் காரணமாக யான் படும் பிரயாசையையும் அதனால் எனக்கு நேரிடும் நஷ்டத்தையும் சொல்லக் கேட்டலும், பரமதயாள சீலத்துவம் முகத்தே நின்று சொலிக்கத், தமிழாகிய தமது தாயாருக்கு வந்த நிலைமையான் மிக நாணமுற்றார்போல, "யான் யாது செய்தல் வேண்டும்" என்று என்னையே கடைக்கணித்தார்கள். ஏதாவது ஓர் பழையநூல் தாங்கள் தங்கள் பொறுப்பிற் பதிப்பித்தால் நல்லதென்று யான் சொல்லிமுடிக்கா முன்னரே, தொல்காப்பியப் பதிப்புரையிலும் இந்து பத்திரிகையிற் கடிதத்திலும் யான் கூறியிருக்குமாறு, அப்படியாதுக என்று உத்தரவருளிச் சங்கத்தார் காலத்துப் பேரிலக்கியமாயுள்ளதொன்றைத் தெரிந்து கொள்ளும்படி ஆஞ்ஞாபித்தார்கள். உடனே "கற்றறிந்தா ரேத்துங் கலியே" அவ்விலக்ஷணஞ் செறிந்ததெனவும் முன்னரே இதனை அச்சிடுதற்கு யான் கொண்ட அவா நிறைவேறுதற்கு இஃது சரஸ்வதிகடாக்ஷமெனவுந் துணிந்து, இதனை அவர்கள் காருண்ணிய திரவியோபகாரத்தைக் கொண்டு இப்பொழுது அச்சிட்டு முடிக்கலாயினேன். அதன் செலவு முழுவதும் அவர்களே கொடுத்தருளினமையாற், கலித்தொகைப் பிரதிகள் விற்பனவாகும் பணத்தைக் கொண்டு பின்னர்க் குறிக்கப்படும் எட்டுத்தொகையில் இன்னும் இரண்டொரு நூலை அவர்கள் பெயரால் அச்சிடுவிக்க உத்தேசித்திருக்கின்றேன்.

இந்து பத்திராதிபர்களாகிய ஸ்ரீ க. சுப்பிரமணியையர், ஸ்ரீ மு. வீரராகவாசாரியாரிருவரும், ௩0 - ௩௫ - பாரத்திற்கு மேற்படாமல் ஒரு நூல் காகிதச் செலவோடு கூடத் தமது அச்சியந்திரசாலையிற் பதித்துத்தருவதாக உத்தரவு செய்தார்கள். இருவர்க்கும் மிக்க வந்தனை செய்து, இவர்களைக் கொண்டு பதிப்பிக்கும்படி, இன்னும் ஒருவராலும் அச்சிற் தோற்றாத தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் சொல்லதிகாரத்தையும், இஃது என் பொருளதிகாரத்தோடு கூடி நச்சினார்க்கினியம் பூரணமாதற்பொருட்டு, முன் மகாலிங்கையரால் அச்சிடப்பட்ட சொற்பபாகமாகிய எழுத்ததிகாரத்தையுஞ் சேர்த்து ஏட்டுப்பிரதிகள் தேடிப் பரிசோதித்து வருகின்றேன்: இவர்கள் முன் மாதிரியைப் பின்பற்றிப் பிற அச்சுக்கூடத் தலைவர்களுந் தலைக்கொரு பழைய நூலைத் தத்தம யந்திரசாலையில் தக்க வித்துவான்களைக்கொண்டு பரிசோதிப்பித்துப் பதிப்பராயின் எத்தனை நூல் அழியாதொழியும்? அன்றியும் அஃது அருந்தந்திரங்கள் இறவாமல் நிலைபெறுவதற்கானதோர் பெருந்தந்திரமாகுமன்றே?

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்முன்னர் அவ்வக்காலத்துப்புலவர் கொண்டுவந்து அரங்கேற்றிய நூல்கள் பல்லாயிரமாகும். அவையல்லாமல் அச்சங்கத்தார் தாமாக நமக்கு அருளிய நூல்கள் அனேகம் உண்டு. அவற்றுட் கடைச்சங்கத்தார் அருளியன எட்டுத்தொகை பத்துப்பாடல் பதினெண்கீழ்க்கணக்கென்று மூவகைய. அவை இன்னனவென்பது முறையே

"நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே யகம்புறமென்
றித்திறத்த வெட்டுத் தொகை."

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வடமதுரைக் காஞ்சி—மருவினிய
கோல நெடுவாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடேஉம் பத்து"

"நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி—மாமூல
மின்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு."

என்னுஞ்செய்யுட்களான் அறிக. இவற்றுட் கோவையென்றது ஆசாரக்கோவையை. முப்பாலென்றது திரிகடுகம் ஆசாரக்கோவை பழமொழி பஞ்சமூலம் ஆதிய போன்று நாலடி வெண்பாவான் இயன்று அக்காலத்திலே வழங்கிய மூன்று சிறுத்தருமநூல்களையென்றும் இன்னிலை சொல் என்றது இன்னிலை இன்சொல் என்னும் பெயரிய இரண்டு நூல்களின் பெயரையென்றும் உத்தேசிக்கின்றேன். அன்றேல் ஐந்திணை அகப்பொருட்டுறைத்தாய் ஐம்பது செய்யுளான் மாறன் பொறையனார் இயற்றியது ஓர் நூலாக, இவர்க்குக் கீழ்க்கணக்குத் தொகை பதினெட்டாயதெவ்வாறோ? இவ்விடர் நோக்கிப் போலுஞ் சிலர் ஐந்திணையை ஐந்தொகையென்று பாடம் ஓதுவர். அன்னோர் நெடுந்தொகையொன்றொழிய வேறுதொகையின்மையிற் சட்டி சுட்டதென்று நெருப்பிற் பாய்ந்த கள்வனார் போலப் பின்னர் எட்டுத்தொகைக்கு நூல் காணாது பேரிடர்ப்படுவர். "இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே" என்றும் பாடமுண்டு. அதனால் இன்னும் இரண்டு குறைவதன்றிக் கணக்குச் சரிபெறாது.

இவ்வாறு கொள்ளாது சிலர் கோவை முப்பால்களை, வாதபுரீசராகிய மாணிக்கவாசகசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவையாருஞ் சங்கத்தாரைப் பங்கப்படுத்தி அழித்துவிட்ட தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது பொய்யாமொழித் திருக்குறளுமென்று மயங்கித் தடுமாறுப. பெயர்படைத்த வித்துவான்களுள்ளுஞ் சிலர் இவ்வாறு மயங்கினது நம்போலியரை மிகமயக்குகின்றது. இவ்விரண்டும் நமது தமிழ் வேதமென்றுவது சிந்தித்தாரில்லை. திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தா கீழ்க்கணக்கின் கீழகப்பட்டது !!! இதனை நிராகரிக்க அயற்சாட்

சியும் வேண்டுமோ ? பன்னிரண்டு திருமுறையையும் ஒருங்கு சேர்த்து முப்பதாக்கிவிட்டாரில்லை!! மேலும் "நாலடி நான் மணி" என்றற்றொடக்கத்துச் செய்யுள் யாரது ? யார்கால த்தது ? யாண்டையது ? சங்கத்தார் காலத்துச் சங்கத்திரு முன்னர்ச் சங்கப்புலவருளொருவராற் சொல்லப்பட்டதெ ன்பது உண்மையாயின், நாயனார் திருக்குறளின்பின் சங்கம் எங்கேயிருந்தது ? இருப்பினன்றோ குறளுங்கூட்டிக் கூறப் படும் ! நாற்பத்தொன்பதின்மர் புலவருங் கூடி மனத்தா லும் வாயாலும் வாழ்த்திய மாலையின் சாரம் அதனைத் தம து சிறுநூல்களோடு ஒக்கவைத்தற் கருத்தினையுடையதா !

இந்நூல், முதலிற் குறித்த எட்டுத்தொகையுள் ஒன்று. அது மதுரைக் கடைச்சங்கத்துப் புலவர் நாற்பத்தொன்ப தின்மருள் ஒருவராகிய நல்லந்துவனார் இயற்றியது. சிலர் இவர் இஃது இயற்றினாரன்று, சிறந்த கலிச்செய்யுட்களைப் பல நூல்களிலுமிருந்து திரட்டித் தொகுத்தவரென்பர். அ வ்வாறு தொகுக்கப்பட்ட அகம் புறம் நற்றிணையென்றின் னோரன்ன நூலுளெல்லாம் அவ்வச் செய்யுளின் கீழ் அதன் ஆக்கியோன் பெயர் குறிக்கப்பட்டதுபோல இதனுட் குறிக் கப்படாமையானும், நல்லந்துவனார் தொகுத்தாரொன்று பல்லாசிரியர்கள் கூறிய இடம் அனைத்தும் அவர் "முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" எனவும் "நடுவ ணைந்திணை நடுவ ண தொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே" என வும் ஆசிரியர் தொல்காப்பியனார் அடுக்கிய முறைபிறழப் பா லை குறிஞ்சி மருதம் முல்லை நெய்தலெனக் கோத்த தொகுதி யையே கொள்ளக் கிடத்தலானும், "உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியார்" புரிவுண்ட புணர்ச்சியென்றற் தொட க்கத்து நெய்தற்கலியின் கீழ்ச் "சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை - புல்லிய கிளவி யெச்ச மாகும்" என் பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம்பேரறி வு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட்செய்தாரெ

ணக் கூறியமையானும் இஃது அவ்வாசிரியராற்றுமே இயற்ற ப்பட்டமை தெள்ளிதின்விளங்கக்கிடந்ததெனக் கூறிமறுக்க.

இது சங்கத்தார் காலத்து இலக்கியங்களுக்கெல்லாம் பேரிலக்கியமாக மதிக்கப்பட்டதென்பது அவராற்றுமே கொடுக்கப்பட்ட "கற்றறிந்தாரேத்தும்" என்னும் விசேஷணத் தாற் பெறப்படும். ஆகவே இதன் சிறப்பு இத்துணைத்தென் பது எம்போலியரால் எடுத்துச் சொல்லக்கடவதொன்ற ன்று. இதன் மகத்துவத்திற்கு யான் காரணங் கற்பிக்கப்பு கிற் பொன்னின் மாட்சிமைக்கு மங்கலகரமாகிய மஞ்சணி றத்தையும் வைரத்தின் பெருமைக்கு அதன் துல்லிய வெண் மையையுங் கூறி மெய்ப்பிக்கப் புகுவதொக்கும்.

இது சமஸ்கிருத மொழிகள் தமிழோடுவந்து கலக்கப் பெறாத சுத்த தமிழ்க் காலத்ததென்பது இக்கவிகளுள் வட மொழியென்ற மணமும் இல்லாமையே தெரிவிக்கும். நற் றிணைமுதற் புறநானூறீறாகக் கிடந்த தொகையனைத்தும் இப் பெருஞ்சிறப்பு வாய்ந்தனவாகவும் "ஒன்றே யாயினுந் தனித் தமிழுண்டோ" என்று ஈசானதேசிகர் கூறியது, இற்றைக்கு இருநூறு வருஷத்தின் முன் இவர் காலத்தேதானே இந்நூற் கள் கற்போர் கைக்கு அகப்படாது அருமையாய் மறைந்து விட்டன என்பதற்குச் சான்றாகுமெனிற் பிழையாமா? பி ன்னை இக்காலத்தில் இதன் அருமை கூறல் வேண்டுவதென்? இவற்றைக் கற்றோரைக் கண்டாரைக் காண்டலுங் கார் த்திகைப் பிறையாயிற்று.

இது கடைச்சங்கத்தார் காலத்து நடுக்கூற்றின்கட் தோன்றியது. கடைச்சங்கம் ஒழிந்து இரண்டாயிரம் வரு டமாயிற்றென்பது வீரசோழியப் பதிப்புரையிற் தமிழின் கா லநிரூபணம் கூறிய இடத்துச் சித்தாந்தஞ் செய்து காட்டி யிருக்கின்றேன். ஆதலால் இந்நூல் உண்டுபட்டு இப்போது எவ்வாற்றானும் இரண்டாயிரத்தைஞ்ஞூறுவருஷத்திற் குறை யாது. மூவாயிரமெனினும் இழுக்காது.

இதற்கு உரையெழுதினூர் மதுரையாசிரியர் பாரத்து வாசி நச்சினூர்க்கினியார். இம்மகான் இதற்கு உரை எழுதி வையாதொழியின் இந்நூலைப் படித்துணர்தல் இக்காலத்தா ர்க்கு இசையாது. ஆகவே இத்தமிழ் நமக்கு நச்சினூர்க்கி னியார் இட்டதோர் பிச்சையென்றுணர்க.

"பச்சைமாலனையமேகம் பவ்வநீர்பருகிக் கான்ற
எச்சினூற் றிசையுமுண்ணு மமிழ்தென வெழுநா வெச்சில்
மெச்சிநா ளுளும் விண்ணேர் மிசைகுவர் வேதபோத
நச்சினூர்க்கினியானெச்சி னறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

என்றதன் வாய்மைக்கு இஃதொன்றே திருஷ்டாந்தமாம்.

"பாலெல்லாநல்லாவின் பாலாமோ" என்ற உவமை க்கு உவமேயமாக "நூலிற் றெரித்தவுரை யெல்லாம் பரி மேலழகர் - பரித்தவுரையோ பகர்" என்ப. அது பெரும் பான்மைபற்றி அவரது சொல்வன்மையையும் பொருணு ண்மையையுமே நோக்கியது. இஃது அவற்றோடு, "உள் ளுறையுவமமும் இறைச்சிப் பொருளும் - வள்ளிய நவரச வா ரிச மலரீஇத் - தெள்ளிதின் விளக்கிய தீந்தமிழ் செறிந்தது."

பரிமேலழகரும் நச்சினூர்க்கினியாரும் ஒரே காலத் தினர். அவர் திருக்குறள் ஒன்றற்கே உரையெழுதினவர். இவரோ தமது காலத்து உரைபெறுது சிக்குமுக்காய்க்கிட ந்த பன்னூல்களைப் பட்டப்பகலில் வெட்டவெளிபோல ம யக்கறுத்துக் காட்டி உரைவகுத்த மஹாவியாக்கியானி. பேராசிரியரும் விளங்காமற் தடுமாறிய குறுந்தொகை இரு பதுபாட்டிற்குப் பொருள் இவரே யாவர்க்கும் இனிது புலப் பட மொழித்திறத்தின் முட்டறப் பிட்டுக்காட்டியவரொன் ருல் இவர் வல்லபத்திற்கு வேறு சான்று வேண்டிலது.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குச் சேனுவரை யருரையும் திருக்குறளுக்குப் பரிமேலழகருரையும் இவரு ரையினின்றும் வியந்து கொண்டாடப்படற்பாலனவென்றே கொள்ளினுங் கொள்க. அதனுல் அவர்கள் இவரினும் பெ ருஞ்சிறப்பும் பயனும் உடையவர்களாகார்கள். என்னே?

அன்னோரிருவரும் தாந்தாம் தாமெடுத்த ஒவ்வொருநூலுக்கே உரையியற்றியவராதலின். இருவரும் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்து அதன் இயைபு கொணர்ந்து காட்டியவர்கள். இவரும் வடநூற்பயிற்சியில்லாதவரல்லர். தமிழிற்கு அவரினுங்காட்டிற் சிறந்த அதிகாரி. இது கருத்தானன்றே "நச்சினார்க்கினியார் சேனாவரையர் பரிமேலழகர் உரையாசிரியர் முதலாயினோர்" என நன்னூல் விருத்தியுரையார் முறைப்படுத்துவைத்தது? தமிழிலுள்ள நுணுக்கங்களை இவர்போல எடுத்துக்காட்டி மாணாக்கர்க்கு மிக உபயோகமாம்படி பெருநூல்கட்கு உரைசெய்த ஆசிரியர் யாரும் இலர்.

இதனால் இவரினுந் தமிழ்வல்லோர் இருந்திலரென்று சொல்லப் புகுந்தேனல்லேன். அகத்தியமஹாமுனிவர்வரத்திற்றோன்றி மிகக் கூரிய விவேகமும் வடகலைப்பயிற்சியும் நுண்ணிய தமிழறிவுமுடையராய், ஸ்ரீ கைலாசபரம்பரைத் திருவாவடுதுறையிலெழுந்தருளி விளங்கிய சிவஞானசுவாமிகள் இவரையும் புறங்காணவல்லரென்பது அவர் சங்கரநமச்சிவாயதேசிகரியற்றிய நன்னூல் விருத்தியுரையிற் செய்த திருத்தங்களானுந் தொல்காப்பியமுதற் சூத்திரத்திற்கு விரித்துரையாக இயற்றிய தொல்காப்பியச் சூத்திரவிருத்தியானும் நன்கு துணியப்படும். ஆயினும் இலக்கிய இலக்கணங்களுள் யாதாயினுமோர் அரிய பெரிய நூற்கு அவர் உரையெழுதாமையானுஞ், சித்தாந்தசாத்திரத்தை விளக்குதலே முக்கிய கருத்தாயினுந், தமிழின் சிறப்பும் அதன் நுண்மையும் அருமையும் இடந்தொறுஞ் சொலிக்க அவர் செய்த சிவஞானபாடியம் அவராதீனத்து மடாதிபதிகட்கு ஓர் இரத்தின மகுடமாய்க்கிடந்து துலங்கப் பெறுவதன்றித் தமிழ்ப்புலவர் கைக்கு அகப்படாமையானும் அவர் சாமர்த்தியத்துக்குத் தக்க பெரும் பயனைத் தமிழுலகம் அடைந்திலது.

இவரது மகாபாடியத் திவ்வியாமிர்தத்தை உலகம் உண்டுகளிக்க வையாதது, சந்திரனுக்குக் களங்கமுஞ் சூரியனுக்குப் பன்முறிவும்போல, ஒன்றானுங் குறைவின்றி

எல்லாச் சுகுணமும் நிறைந்திலங்கும் பரமதயாள மூர்த்திகளாகிய ஸ்ரீ ௰ ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளுக்கும் ஒரு குறைவுண்டென்று சொல்வதற்கு ஏதுவாகின்றது. பூலோகத்தில் ஒரு குறைவாயினுந் தம்பால் இருக்கப் பெறுதார் இலராதலிற் றிருஷ்டிபரிகார நிமித்தமாய் இக்குறையைச் சகித்திருக்கின்றனர் போலும். சைவசமயசாத்திரமாதலிற் பரிபக்குவர்க்கன்றி அளித்தறகாதெனிற், சித்தாந்த சாத்திரமெல்லாம் அச்சின்வாய்த்தோன்றி அகிலலோகமும் பரவிக்கிடக்கும் இஞ்ஞான்றைக்கு ஈதமையாதென்றன்றோ மறுக்கப்படும். மகாசந்நிதானத்தின் திருவுள்ளம் இதனைச் சற்றே சிந்தித்தற்குச் சிவபெருமான் கிருபை புரிவாராக.

நச்சினார்க்கினியார்சமணர்காலத்தராதலின் இந்நூற்கு இவர் உரையெழுதி ஆயிரத்திருநூறுவருஷத்திற்குறையாது. சங்கமரீஇய நூல்களிற்போலச் சீவகசிந்தாமணி முதலிய பிற்றைநூல்களினின்று தமது உரைகட்கு வேண்டிய உதாரணங்கள் ஆங்காங்கு எடுத்து ஆண்ட இவர் அவைகள்மலிந்து கிடக்கும் பாரதஸ்காந்தராமாயணங்களிலிருந்து ஓர் இலக்கியமுங்காட்டாததே இவையனைத்தும் இவர்காலத்திற்குப் பிந்தியனவென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோலக் கொள்ளக் கிடக்கின்றது. இந்நூற்களின் காலமே அவ்வளவாயிற்றே.

இந்நூற் பதிப்பை எட்டுப்பிரதிகளின் போக்கிலே விடாது சிற்சில இடங்களிற் சிலவிகற்பங்கள் செய்திருக்கின்றேன். அவை இன்னனவென உணர்த்தல் என் கடமையாம்.

க. பாட்டுக்கடோறும் முதலிலே அவ்வப்பாட்டின் முதற்குறிப்பைச் சொல்லி இஃதின்னதுறைத்தென்று கிளவி கூறிப் பின்னர்ப் பாட்டு வரும். அதனை யான் மாற்றி முதலிலே பாட்டை அச்சிட்டு அதன்கீழ் இஃதின்ன கிளவியெனக் கூறுங் கருத்துரையை அச்சிட்டிருக்கின்றேன்.

உ. பாட்டு முழுதும் ஒருங்கே தொடர்ந்து வாராது எடுத்துக்கொண்ட உரைக்கு வேண்டிய அளவாய்ப் பிளவுப

ட்டுப் பின்னம் பின்னமாய்க் கிடந்ததை ஒரு தொடராகச் சேர்த்து ஒவ்வொரு கலிப்பாவையும் முடித்த பின்னர் அவ்வப்பகுதியை முதலும் ஈறுங்காட்டி மீளவும் பகுத்து அப்பகுதியின் உரையைப் பதித்திருக்கின்றேன்.

௩. விசேட உரைகள் சில உரைக்குமுன்னுஞ் சில உரைக்குப்பின்னுஞ் சில இடைப்பிறவரலாக உரைக்கிடையினுங் கிடந்தவற்றை ஒருகிரமப்படுத்தி அனைத்தும் பாடமும் உரையுமானபின்னரே வரும்படி சேர்த்திருக்கின்றேன்.

௪. தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகமென நிகழும் பாட்டுறுப்புக்களில் மூலம் ஒன்றினும் உரை ஒன்றினுமாகச் சில இடங்களிற் பிறழ்ந்துகிடந்தவற்றை இரண்டும் ஒரிடத்தாம்படி உரையிடத்தை மாற்றியிருக்கின்றேன்.

இவைகளுக்கெல்லாம் உதாரணம் எடுத்துக் காட்டி விளக்கின் மிகவிரியுமென்றஞ்சியும் அதனால் ஒரு பெரும் பயனில்லாமை நோக்கியும் ஒழித்தனன். இவ்விகற்பங்களிலெல்லாம் ஓரிடத்துக் கிடந்த வாக்கியத்தைப் பின்னோரிடத்தில் இடமாற்றிவைத்ததேயன்றி ஆசிரியர் மொழி நடைகளில் ஒரெழுத்தையாவது யான் மாற்றியதேயில்லை.

௫. "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும் - பொன்னேபோற் போற்றுதல்" அவரினின்று வேறாக வழிநூல் சார்புநூல் செய்தோர்க்குங் கடனாகவே, அவர் நூலையே அச்சொருபமாக எடுத்துப் பதிப்பிப்போர் ஓர் அக்ஷரமாவது மாற்றுதல் பெருந்தவறென்பது யார்க்கும் உடம்பாடே. ஆயினும் இந்நூல் துரைத்தனவித்தியாசாலைகளிலும் பிறகல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் பயிலல்வேண்டுமென்னும் அவாவினாற் றற்காலம் அவையிற்றுக்கு இணங்காததோர் இழிசொல்லும் மகளிரின் சிறப்பவயவத்தின் இடக்கர்ப்பெயருமாகிய குஃறொடர்ந்த அன்மொழி இந்நூல் முழுதினும் பதினோரிடத்திற் பிரயோகிக்கப்பட்டதை ஒழித்துஞ் செய்யுள் ஊனமுறாதிருத்தற்பொருட்டு அதற்குப்

பதிலாக அவ்வவ்விடத்திற்கு இசைந்த பிற அவயவத்தின் பெயரைச் சந்தத்திற்கு வேண்டிய அளவு விசேஷணத்தோடு புணர்த்தியும் இருக்கின்றேன். அவ்வாறு சொருகியது இன்ன இன்ன மொழி இன்ன இன்ன பாட்டில் இன்ன இன்ன அடியிலென்பதை யாவரொருவராயினும் அறிய விரும்பின் அவற்றை ஈண்டுக் காண்க. மாற்றிவைத்த பிரதிமொழியின் பொருளே உரையகத்தும் மாறியிருக்குமென்பது சொல்லவேண்டியதில்லை. நாலாவது பந்தியில் நட்சத்திரக்குறி அக்குறிக்குரிய மூலபாடத்தி லுள்ள அம்மொழித்தானத்தைக்காட்டும்.

| கலி. | பாட்டு. | வரி. | முன் பாடம். | பிரதி மொழி. |
|---|---|---|---|---|
| கடவுள் வாழ்த்து. | | சு | அகல். * | அகல் குறி. |
| பாலை. | கஙு | ரு | அகன்ற. * | ஆரெழிற்றிதனி. |
| குறிஞ்சி. | கச | உச | * என்றோழி. | ஆகத்தென்றோழி. |
| ,, | கசு | கசு | அகல் * ஆள். | அமர்நுசுப்பினாள். |
| ,, | உச | ச | வரியார்ந்த * ஆய். | மயிலியன் மடநல்லாய். |
| மருதம். | உ | க0 | அகல். * | பிறைநுதல். |
| ,, | கரு | உக | * வரி. | ஒல்குமிடை. |
| ,, | உஉ | ஙஎ | அகல் * காழகம். | அரைசெறி காழகம். |
| முல்லை. | அ | உ | அகல். * | நகிலம். |
| ,, | கூ | க0 | அகல். * | அகல் குறி. |
| நெய்தல். | அ | கஎ | தடவர. * | தடவரவாகம். |

இவ்வாறு மாற்றியது குற்றமாயின் அதனை உலகம் மன்னிக்கும்படி பலமுறையும் பிரார்த்திக்கின்றேன்.

'நிராந்தி ரந்தனர் நுவல்குறை பொறுத்திடா ராக்கஞ்
சிந்து மென்பது செகத்தினிற் சுருதியா கமங்கள்
முந்து வாய்மையின் மொழிந்தது நீதியு மதுவே
தந்த தாமெனி லீண்டது தவிர்க்கலாந் தகைத்தே.''

நெய்தற்கலி உகூ-ம் செய்யுள் எ-ம் அடியில் "உண்க ணிறைமல்க" எனவும் ககூ-ம் அடியிற் "தூவற" எனவும் பாடமாக, உரையில் அவற்றிற்கு முறையே "உண்கண் நீர் நிறைகையினாலே" எனவும் "வலியறும்படி" எனவும் பொருள் கூறியிருப்பது பிற்காலத்து ஏடெழுதுவோரால் நேரிட்ட தவறென்றும் நீரொன்றதற்கும் வலியென்றதற்கும் இயையுமாறு பாடத்தை உறையென்றுந் தாவென்றும் மாற்றி விடுதல் தகுதியென்றுஞ் சில தக்கோர் சொல்லியும் யான் அதற்கு உடம்பட்டிலேன். நீரிற்கு உறையென்பது போல இறையென்றும் வலிமைக்குத் தாவென்பது போலத் தூவென்றும் முற்காலவழக்கு இருந்திருக்கலாமே. எத்தனை சொற்கள் தற்கால வழக்கில் எடுத்தாளாத பொருளிற் பண்டையோரால் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. இலக்கிய இலக்கண ஆதாரமாக ஒன்றனைத் தவறென்று ஒருதலையாக நிச்சயித்துழியன்றி ஏட்டுப்பிரதிகள் யாவும் ஒத்திருந்தனவற்றை யான் மாற்றகில்லேன். அடியேன் சிற்றறிவுக்கேற்றமட்டும் பரிசோதனை செய்து அச்சிட்டு அடியோடழிந்து போகும் பழையநூற்களை நிலைநிறுத்துவான் புகுந்தேனதலின் நூலைத்திருத்துவதும் பொருள் இசையச் செய்வதும் என்கடமையன்று. இயன்றளவும் பூர்வரூபம் பெறச் செய்வதும் இயலாத இடத்து இருந்தபடி உலகிற்கொப்பிப்பதுமே யான் தலையிட்ட தொழிலென்பதை இன்னும் ஒருகால் உலகத்தார் முன் விண்ணப்பஞ் செய்துகொள்கின்றேன். பிழையாயினவற்றைத் திருத்திப் படித்தல் ஆன்றோர்கடன். கண்ணுக்கும் அகப்படாமற் கிடந்த ஏட்டுப்பிரதிகளைக் கடிதத்திற் பலபிரதிரூபஞ் செய்து கைக்கெட்டப்பண்ணுகின்றேனென்றே கொள்ளுக. முற்றும் வழுவறப் பரிசோதித்துப்

பிரசுரஞ்செய்ய வல்லோர்க்குத், தொல்காப்பியப் பதிப்புரையில் யான் விவரித்துக் கூறிய பல ஏதுக்களால் இவ்வித முயற்சியிற் சிந்தைசென்றிலதாதலினன்றோ, சகிக்கலாற்றாத பரிதாப சிந்தையோடு, பதினாலாம் நாளைப்போரிற் துரியோதனன் தன் சேனாபதியிடஞ் சென்று முறையிட்டு இனி அர்ச்சுனனோடு சண்டையிட யானாவது போகின்றேனென்று போனதையொப்ப யான் இத்தொழிலிற் பிரவேசித்தது. ஆதலால் என்னைக்கடந்து சிற்சில வழுக்கள் இலைமறைகாய் போல் அங்குமிங்குங் கிடப்பின் அதையிட்டு என்மேற் குற்றமேற்றல் மறைமுகத்தாற் தர்மமாகாதுபோவதினில்லாது நேர்முகத்தாற் பேரநியாயமாமென்றறிக.

இலக்கணக் கொத்துடையார் நூலாசிரியர் உரையாசிரியர் போதகாசிரியரென வகுத்த மூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனாசிரியரென இன்னுமொன்று கூட்டி, இவர் தொழில் முன் மூவர் தொழிலினும் பார்க்க மிகக் கடியதென்றும் அவர் அறிவுமுழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தூக்கினாலன்றோ தெரியுந் தலைச்சுமை? பரிசோதனாசிரியர் படுங் கஷ்டமும் ஒரு அரியபழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங்காது. இவையெல்லாம் அனுபவத்தாலன்றி அறியப்படாப் பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதிகளையும் அடுக்கிவைத்துக்கொண்டு என் கண்காணச் சிந்தாமணி பரிசோதனைசெய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமிநாதையரைக் கேட்டால் இந்நால்வகையாசிரியர் பாட்டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம். எனக்கு அவரும் அவருக்கு நானுமே சாட்சி.

ஒரு நூலைப் பரிசோதித்து அச்சிடுதற்கு, முதலிற் கையெழுத்துப் பிரதிகள் சம்பாதிப்பதே மஹாபிரயாசை. அதிலும் ஒருநூல்பழையதும் இலேசில் விளங்காததுமானால் எழுதுவாரும் ஓதுவாருமில்லாமல் இருக்கிற இடமுந் தெரியா

மற் போய்விடுகின்றது. கலித்தொகைப் பிரதிகள் தேட யான் பட்ட கட்டம் வாயினாற்கூறும் அளவைத்தன்று. முதன் முதல் யான் பார்த்தது புதுவை நயனப்பமுதலியாரது மூலபாடப்பிரதி. அது தலையுங் கடையுமின்றிய குறைப்பிரதி. மேலும் பெரும்பாலும் எழுத்துக்கள் சிதைந்து ஒருபாட்டின் ஒருறுப்பாவது முற்றும் வாசிக்க முடியாமற் கிடந்ததாற் படிப்பதற்கே வெறுப்புண்டாய் நீக்கிவிட்டேன்.

பின்னர்த் தொல்காப்பியப்பரிசோதனைக்காகத் தேடியபோது ஸ்ரீ ௵ ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பிரதி அகப்பட்டது. அது கொண்டு கலித்தொகை அருமையுணர்ந்து அதனை எப்படியும் உலகிற்குப் பயன்பட அச்சிடவேண்டுமென்னும் அவாவுற்று ஸ்ரீஆதீனமடாதிபதிகளுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டேன். காருண்ணியமுங் கலாபரிபாலனமுமே தமது திருமேனியாகக்கொண்டு விளங்குந் திருவாவடுதுறைச் சற்குருநாதசுவாமிகள் உடனே தங்கள் மடத்துப் பிரதியுடன் வேறும் இரண்டு பிரதி தென்தேசத்தினின்று வருவித்தனுப்பி அச்சிட்ட பிரதியும் உ௦ எடுத்துக்கொள்வதாக உத்தரவுசெய்தது. இப்பேருபகாரத்திற்கு யானே அங்கு அடிமையாவதன்றி வேறு யாது கைம்மாறுளது?

விண்ணுடைகலைவழித்தேசிகர் வெவ்வினைக்குநெற்றிக்
கண்ணனனசுப்ர மண்யசுவாமிகள் கான்மலரை
நண்ணுத் தலையினசைதீரத்தாங்க நற்கோகழிவாய்
மண்ணுய்ப்பிறந்திலனே ஐயகோ! இந்த வையகத்தே.

சிரமாலையாகவுஞ் சின்முடியாகவுஞ் செய்யகண்ட
சரமாலையாகவும் யானடியேனினையேன் றருவாய்
பரமார்கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்ரமண்யா
மரமாய் நின்பாதகுறடாய் வருதற்கொருவரமே.

மதுரை மடாதிபதிகள் அத்தருணத்தில் தெக்ஷணத்திலே ஸ்தலயாத்திரையிற் பிரசன்னமாகியிருந்தமையாற் திரும்பி ஆதீனம் வந்து சேர்ந்ததன்மேல் என் விண்ணப்பங் கவனிக்கப்படுமென்று கட்டளையிட்டருளியது. பின்னர்

அதனைத் திருவுள்ளத்து அமைத்திலதுபோலும். எஞ்சிய மடங்களிலிருந்து யாதும் பதில் வராமையால் இந்நூல் ஆண்டு இல்லதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

சுவாமிகள் அனுப்பிய பிரதிகளைக்கொண்டு மூலபாடத்தையாவது பரிசோதித்து, ஓர் அரும்பத அகராதியும் இலக்கணக்குறிப்புஞ் சேர்த்து முதலில் அச்சிட உத்தேசித்து, அதனை நல்ல பரம்பரைத் தமிழ் விற்பத்தியுங் கூரிய விவேகமுமுடைய யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீ சிற். கைலாசபிள்ளையைக் கொண்டு எழுதுவித்தேன். பின்னர் மேலே தெரிவித்தவாறு கவுரவ சேஷைய சாஸ்திரியாரவர்கள் ஆஞ்ஞை கிடைக்கப் பெற்றமையால் வேறுபிரதிகளுந் தேடுவான் முயன்று பல இடங்களுக்கும் எழுதலாயினேன்.

யாழ்ப்பாணத்து மல்லாகம் விசுவநாதபிள்ளையவர்கள் புத்திரருந் தமிழ்க்கலைவிநோதந் தமக்குப் பொழுது போக்காக உடையவருமான ஸ்ரீ கனகசபைப்பிள்ளையவர்கள் தமது பிரதியுந், திருமணம் கேசவ சுப்பராயமுதலியார் மயிலை இராமலிங்கப்பிள்ளை பிரதியுந் தயை செய்தார்கள். சென்னைப் பிராசியகிரந்த மண்டபத்துந் தஞ்சைச் சரஸ்வதிமாலிலும் இங்கும் அங்குஞ் சிதறுண்ட சில ஒற்றைகளைச் சேர்த்துக்கட்டி ஒரொரு பிடியேடு கலித்தொகையென்று அபிதானஞ் சூட்டி வைக்கப்பட்டிருந்தது. இவற்றாற் பிரயோசனமிராதென்று நீக்கிவிட்டு வேறு எவ்விடத்தும் பிரதி அகப்படாமையால் அகப்பட்ட பிரதிகளை வைத்துக்கொண்டு அச்சிட ஆரம்பித்தனன். போகப்போக ஒன்றொன்றாக ஆங்காங்கு முடிவுபெற்று நான்காவது முல்லைக்கலி முடியுமுன்னந் திருவாவடுதுறைப் பிரதி ஒன்றொழிய ஏனைய அனைத்துந் தலைகட்டிக்கொண்டன. இத்தசையில் யாது செய்வதென்று தெரியாது மயங்கி, வேலையை நிறுத்தி, இன்னும் பிரதி தேடும்படி ஒரொரு திசைக்கொருவராகக் குணதுதெனுது குடாது மூன்றற்கும் மூன்று பெயரை அவ்வத்திசையினுள்ள தக்க உத்தியோகஸ்தர்கள் பெரிய மனுஷர்

களுக்குக் கடிதமெழுதி அனுப்பிவைத்துவடாது திக்கிற்கு யானே பிரயாணமானேன்.

யான் முப்பத்தைந்து வருஷத்தின்முன் பிரமாதீச வருஷம் ஒரு தரம் அருமையான தமிழ் நூல்கள் தேடி யாழ்ப்பாணத்தினின்று இக்கண்டத்தில் வந்து நடமாடியபோது, கூடலூரில் மஞ்சக்குப்பத்திற் சண்முக உபாத்தியாயரென்றோர் வயோதிகரும் புதுச்சேரியில் நெல்லித்தோப்பிற் சொக்கலிங்கபிள்ளையென்றோர் தமிழ்ப்பண்டிதருங் கலித்தொகை வைத்திருந்தது என் ஞாபகத்திற்கு வர, அந்த இடங்களிற் சென்று விசாரித்தேன். முன்னையவர் இருந்த இடமுந் தென்பட்டிலது. பின்னையவர் இருந்த இடத்தில் விசாரித்து, அவர் வமிசத்தில் அவரது தௌகித்திரியுங் குடும்பமும் அடுத்த ஊரில் இருப்பதாகக் கேள்வியுற்று, ஆங்கடைந்து தௌகித்திரியின் நாயகனை வினவியபோது, அவர் ஏதோ ஒரு கட்டுச் சுவடிகள் பூர்வார்ச்சிதமாக வைத்திருக்கின்றோம், நமக்கு அவற்றின் பெயருந் தெரியாது, தங்களுக்கு வேண்டியதிருந்தாற் பார்த்து எடுத்துக்கொள்ளலாமென்று மகா உதாரத்துவத்தோடு ஏட்டுக்கட்டை அளித்தனர். ஏடுகள் இருந்த நிலைமைகண்டு யானுற்ற பரிபவத்திற்கு என்விழியினின்று பெருகிய கண்ணீரோ சாக்ஷி. கலித்தொகையும் அங்கும் இங்கும் மிக ஊனம் அடைந்திருந்தும் எனக்கு வேண்டிய நெய்தற்கலியிருந்தமையால் மிக மகிழ்வோடு வாங்கிவந்தேன்.

அப்பால் திண்டிவனத்திலும் ஒருபிரதி அகப்பட்டது. அதில் நெய்தற்கலியின் முதற்பாகம் இருந்தது.

திரிகோணமலை ஸ்ரீ த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள் சென்னைப் பிராசிய கிரந்தமண்டபத்திற் றான் நெய்தற்கலி பார்த்தேனென்று உறுதியாகச் சொன்னமையால் மீளவும் அவ்விடஞ் சென்று முன் யான் நீக்கிவைத்த ஏடுகளை இப்பொழுது எனக்கு வேண்டிய நெய்தற்கலியுடையவாயிருத்தல் கண்டு அளவற்ற சந்தோஷமடைந்தேன். அஃதல்லாமற் பின்னும் ஒரு பிரதி நெய்தற்கலி உ௩-ம் செய்யுள்

வாைக்கும் அம்மண்டபத்தே அகப்பட்டது. உடனே பிள்ளையவர்களும் யானுமாக இருந்து அதனை எனது பிரதியோடு ஒத்துப் பார்வையிட்டு ஆங்காங்குக் கண்ட பாடபேதங்களைக் குறித்துக்கொண்டோம்.

பின்னர்த் திருத்தணிகைக் குருசாமி ஐயர் கிரகத்திற் சென்று, சென்னையில் மிகப்பெயர் பெற்றிருந்த வித்துவானாகிய அவரது பிதாமகன் ஸ்ரீ சரவணப்பெருமாளையருடைய புத்தக நாமாவலியைப் பார்வையிட்டதில், அவரது கலித்தொகைச்சுவடி கோயமுத்தூரில் ஒருவர் கையிற் போயிருப்பதாகத் தெரியவந்தது. அதனைச் சின்னாள் இரவலாக வாங்கியனுப்பும்படி அவ்வூரிற் பெரியமனுஷர் சிலருக்குக் கடிதம் விடுத்தேன். அவர்கள் அரவின் சுடிகை அரதனத்திற்கும் ஆழிவாய் இப்பியுண் முத்திற்கும் அவை உயிரோடிருக்குங்காறும் ஆசைகொளல் வேண்டாவாறு போல, இம்மஹானுடைய சீவதிசையில் இவர்கைப்பட்ட புஸ்தகங்களைக் கண்ணுற் பார்க்கும் அவாவினை ஒழிகவென்று பதிலெழுதினர். சிவனே! சிவனே! இதுவுங் கலித்தொகையைப் பிடித்ததோர் கலித்தொகையோ என்று உளநொந்தேற்குக், கடைசியில், அதுவும் மற்றைப்பெரும்பான்மைய பிரதிகளொப்ப நெய்தல்வளம்பெறுது முல்லையோடு முடிந்த பிரதியெனக் கேள்வியுற்றுச் சஞ்சலம் ஒழிந்தேன்.

ஸ்ரீ இராமசாமிசாஸ்திரிகள், ஸ்ரீ கோபாலகிஷ்ணமச்செட்டியார், ஸ்ரீ வைத்தியலிங்கச்செட்டியார் முதலிய உத்தியோகஸ்தர்களும், ஸ்ரீ வெங்கட்டராமணசாஸ்திரிகள், ஸ்ரீதிருச்சிற்றம்பலபிள்ளை, ஸ்ரீ விசுவலிங்கபிள்ளை, ஸ்ரீ சொக்கலிங்கக்கவிராயர் முதலிய வித்துவான்களும் யான் கடிதவாயிலாகக் கேட்டுக்கொண்டபடி தங்கடங்களாலான பிரயாசப்பட்டும் பிரதி கிடையாமையால் அவர்களிடம் யான் அனுப்பிவைத்த மூவரும் வெறுங்கையாய் வந்து சேர்ந்தார்கள். ஆதலால் நெய்தற்கலி முழுமையும் பரிசோதித்தற்கு உபயோகப்பட்டது மூன்று பிரதியே.

குறைப் பிரதியாயினும் முழுப்பிரதியாயினும் அகப்பட்ட இப்பத்துப் பிரதிகளையுங் கொண்டு கலித்தொகையைப் பதிப்பித்து நிறைவேற்றியதில், ஸ்ரீ தொண்டமான் புதுக்கோட்டை மஹாராஜாவின் மந்திரியும் பிரதிகாவலருமாகிய கவுரவ சேஷையசாஸ்திரியாரவர்கள் காருண்ணியத்திற்கு மிக்க கடமை பூண்டொழுகுகின்றேன். இன்னும் இவ்வகைப்பட்ட பழைய அருமையான நூல்களைத்தேடி எடுத்து உலோகோபகாரமாக அச்சிட்டுப் பரிபாலனம் பண்ணத்தக்க ஸ்திதியில் அவர்கள் என்னை வைத்திருப்பதற்காகத் தமிழ் நாடுமுழுவதும் அவர்களுக்கு ஒருங்கு கடமைப்பட்டிருக்கின்றது.

இது நிற்க, இக்காலந் தமிழிலக்கணங் கற்போர் பெரும்பாலும் நன்னூலொன்றையே கற்றுப் பொருள் யாப்பணிகளின் பயிற்சி குன்றிப்போவதால், இலக்கணவிளக்கம் ஐந்திலக்கணமுஞ் சேர்ந்திருப்பதனானும், பேரறிவினர்க்கே புலப்படுந் தகைத்தாய தொல்காப்பியம் போலாகாது சாதாரணமாணவகர்களுக்கும் உபயோகமாதற்பாலதாதலானும், அது கற்போர்க்கு எளிதின் அகப்படாது ஏட்டுப்பிரதிகளில் மிக அருமையாக மறைந்துகிடத்தலானும், அதனை அச்சிட்டாற் தமிழ் நாடனைத்திற்கும் பேருபகாரமாமென்று எண்ணினேன். அஃது இற்றைக்கு இருநூறு வருஷத்தின் முன், திருவாரூரிலுள்ள அபிஷேகத்தர் மரபிலுதித்த தமிழ் ஞானபானுவாகிய வைத்தியநாத நாவலர் அருளிச்செய்தது. அதனது மகத்துவத்தை அதற்கு இன்று காறுஞ் சான்றோரால் வழங்கிவருங் குட்டித் தொல்காப்பியமென்னும் பெயரே இனிது விளக்கும். அன்றியும் அது தோன்றியபின்னர் நன்னூற் பயிற்சி குன்ற, அதுவே தலையெடுத்து வந்தமை ஒன்றுமே அதன் மாட்சியை நன்கு புலப்படுத்தும். ஐம்பது வருஷத்தின்முன் சரவணப்பெருமாளையர் நன்னூற்காண்டிகையை அச்சிட்டு யாவர்க்கும் மிக எளிதில் அகப்படச் செய்யும் வரைக்குங் கற்போர் யாரும் ஓதிவந்ததும் அதுவே.

சூருவளி மாருய்மோதியென்? சூத்திரவிருத்திவான் ஆர்த்ததிர்த் திடித்தென்? கன்னதுரோண சயித்திரதர் என்னதுரோகம் இயைத்திடினுந் "தேரொன்றுகிடையாத குறையன்றேகளத்தவிந்தான் சிறுவன்", அச்சுவாகனங் கிடையாத குறையன்றே இலக்கணவிளக்கம் மடங்கியது?

அதனை யான் எடுத்துப் பிரசுரஞ்செய்யத் துணிந்தும் இதுவரையும் அச்சிட்ட நூல்களால் எனக்கு நேரிட்டிருக்கும் நஷ்டம் இடங்கொடுத்திலதாதலாற் பிறர் திரவிய சகாயம் அவசியம் வேண்டியதாய் அது விஷயத்தை ஆங்காங்குள்ள சில மஹான்களுக்குத் தெரிவித்தேன். அப்பொழுதுந் திருவாவடுதுறை மகாசந்நிதானம் அம்மடத்துப் பிரதிகளும் அனுப்பி க00-ரூபாவும் தருவதாக உத்தரவு செய்தது.

அதனை அச்சிட க,000-ரூபா பிடிக்குமென்று யான் பகிரங்கஞ் செய்ததோர் விளம்பரத்தைக் கண்ணுற்று, இறங்கூன் கமீஷனராபீஸ் மானேஜர் எனது சகோதரன் செல்வச் சிரஞ்சீவி இளையதம்பிப்பிள்ளையும் அவரது இஷ்டர் சிலருஞ் சேர்ந்து ரு00-ரூபா அனுப்பிவைத்தார்கள். அவ்வுதவியை முன்னிட்டு இலக்கணவிளக்கம் அச்சிடத் தொடங்குவதற்குள், மதுரை போடிநாயக்கனூர் ஜமீன்தார் ஸ்ரீ திருமலைபோடய காமராசயபாண்டிய நாயக்கர் துரையவர்கள் செலவு முழுவதுந் தாமே தருவதாக ஒத்துக்கொண்டு, ரு00-ரூபா அனுப்பி, மீதி அச்சிட ஆரம்பித்தபின் தருவதாகத் தயைபுரிந்தார்கள். இவர்கள் தயாளத்துவம் யாவரானும் வியக்கற்பாலதே. இலக்கணவிளக்கம் இப்போது அதிவிரைவில் அச்சாகிவருகின்றது. சர்வதாரி வருஷத்தோடு பவனிவருமென்று நம்புகின்றேன்.

இறங்கூனிலிருந்து வந்த பணத்திற்கு அதனை அனுப்பினோரது சம்மதிபெற்றுப் பஞ்சகாவியங்களுட் சிறந்த சூளாமணியை அச்சிடக்கருதிப் பரிசோதித்துவருகின்றேன். இஃது யாப்பருங்கலக்காரிகையுரைக் குணசாகரமுனிவர் முதலியோராற் தமக்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட மாண்

பிணையுடையதோர் அரிய பூர்வக்கிரந்தம். தமிழ்நாடனைத்தினும் இதற்கு மூன்றுகையெழுத்துப்பிரதியே அகப்பட்டது. பின்னை இஃது எவ்வளவு சீக்கிரத்தில் அந்தரத்தானமடையும் ஸ்திதியிலிருந்ததென்பது வாசிப்போரே உணர்வாராக.

சங்கமரீஇய நூல்களாய் வகுக்கப்பட்ட எட்டுத்தொகை பத்துப்பாடல் பதினெண்கீழ்க்கணக்குட் தலைமைபெற்ற எட்டுத்தொகைகளில் இக்கலித்தொகையும், பத்துப்பாடலுட் திருமுருகாற்றுப்படையுமே இப்பொழுது அச்சில் வந்தன. எஞ்சிய பதினாறனையும் பெயர்மாத்திரையானே அறிந்தாற் போதுமா? பதினெண்கீழ்க்கணக்குட்டானும் இன்னும் வெளிவராது கிடப்பன உள. இவைகளைத் தங்கள் தங்களால் நன்கு மதிக்கப்பட்ட சில வித்வாம்சர்களைக்கொண்டு பரிசோதிப்பித்து வெளியில் வரச் செய்யத்தக்க சீமான்கள் யாரும் இல்லையா! தமிழின் அருமையுணர்ந்த பெரியோர் மடாதிபதிகளென்றின்னோர் இவற்றிற் கடைக்கண் சாத்துமாறு சரஸ்வதியே அனுக்கிரகிப்பாளாக.

பழைய சுவடிகள் யாவுங் கிலமாய் ஒன்றொன்றாய் அழிந்துபோகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதிவைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதின்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வசிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை. திருவுடையீர்! நுங்கருணை இந்நாட் தவறினால் பின்பு தவம்புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ்நூற்களை மீட்டல் அரிது. யானைவாய்ப்பட்ட விளம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்துமென்? ஓடன்றோ கிட்டுவது! காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினுங் கம்பையும் நாராசமுந்தான் மீறும். அரைக்காசுக்கழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வாராது. சங்கமரீஇய நூல்களுட் சில இப்போது தானுங் கிடைப்பது சமுசயம். முப்பால் அப்பாலாய்விட்டது. என்காலத்தில் யான் பார்க்கப்பெற்ற ஐங்குறுநூறு இப்பொழுது தேசங்டோறுந் தேடியும் அக

ப்பட்டிலது. எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக்காண்கினும் மனந்தளம்புகின்றதே! தமிழ் மாது நுந் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா! தேசாபிமானம் மதாபிமானம் பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெருமையும் பெருமையாமா! இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக.

இந்நூலைப் பதிப்பிக்கும்பொருட்டு ஏட்டுப்பிரதியளித்த கனவான்களுக்கும் இதனைப் பரிசோதித்து அச்சிடுவதில் எனக்கு அப்போதப்போது சகாயஞ்செய்த ஸ்ரீமத் ந. க. சதாசிவப்பிள்ளையவர்கட்கும் ஸ்ரீ யாழ்ப்பாணம் சிந்தாமணி உபாத்தியாயர் வேலுப்பிள்ளையவர்கட்கும் ஸ்ரீ நல்லூர் சிற். கைலாசபிள்ளையவர்கட்கும் ஸ்ரீ திரிகோணமலை ந. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கட்கும் என் நன்றி கூறுகின்றேன்.

இந்நூற்பதிப்பில் யாவர்க்காயினுங் குற்றங்கூற இஷ்டமுளதாயின், அன்னோர் இன்னும் அச்சிற் றோற்றாத நற்றிணை பரிபாடல் அகம்புறமென்றிவற்றினொன்றைத் தாமாகப் பரிசோதித்து அச்சிடுவித்து அதன்மேற் குறைகூறும்படி வேண்டிக்கொள்கின்றேன். யான் வித்தியாகங்காரத்தினாலாவது திரவிய ஈட்டத்தினாலாவது இதில் ஏற்பட்டவனல்லனென்பதை இன்னுமொருகால் வற்புறுத்துகின்றேன்.

"குற்றமே தெரிவார் குறுமாமுனி
சொற்றபாவினு மோர்குறை சொல்வராற்
கற்றிலாவென் கவிவழு வாயினும்
உற்றுநாடி வல்லோ ருய்த்துணாக்கவே."

கயிலாயநாதசரவேநம:

திருச்சிற்றம்பலம்.

புதுக்கோட்டை.
சர்வஜித்து ஆவணிமீ ௩௨

இங்ஙனம்,
சி. வை. தா.

# கலித்தொகை முதற்குறிப்பகராதி.

| முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். | முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| அகலாங்கணிரு | நெய் | ௨௬ | ௪௫௦ | உரவுநீர்த்திரை | நெய் | ௧௫ | ௪௧௬ |
| அகவினம்பாடு | குறி | ௪ | ௧௧௮ | உரைசெலவுயர் | நெய் | ௨௯ | ௪௬௭ |
| அகன்ஞாலம் | நெய் | ௨ | ௩௮௧ | உறுவளிதூக்கு | மரு | ௧௯ | ௨௪௯ |
| அகன்றுறைய | மரு | ௮ | ௨௧௮ | ஊர்க்காணிவந்த | குறி | ௨௦ | ௧௬௮ |
| அணிமுகமதி | குறி | ௨௮ | ௧௯௧ | எஃகிடைதொட் | பாலை | ௩௧ | ௯௨ |
| அணைமருளின் | பாலை | ௧௩ | ௪௩ | எல்லாவிஃதொ | குறி | ௨௫ | ௧௮௩ |
| அரிதாயவறன் | பாலை | ௧௦ | ௩௪ | எல்லாவிஃதொ | முல் | ௭ | ௩௪௬ |
| அரிதினிற்றே | நெய் | ௨௪ | ௪௪௦ | எழின்மருப்பெ | நெய் | ௨௧ | ௪௩௦ |
| அரிதேதோழி | நெய் | ௨௦ | ௪௨௭ | எறித்தருகதிர் | பாலை | ௮ | ௨௮ |
| அரிநீரவிழ்நீலம் | மரு | ௨௬ | ௨௭௧ | என்னோற்றனை | மரு | ௨௯ | ௨௮௫ |
| அரிமாணிடித் | பாலை | ௧௪ | ௪௬ | ஏஎயிஃதொத் | குறி | ௨௬ | ௧௮௭ |
| அருடீர்ந்தகாட் | நெய் | ௩ | ௩௮௩ | ஏந்தெழின்மார் | மரு | ௩௧ | ௨௯௪ |
| அருந்தவமாற்றி | பாலை | ௨௯ | ௮௬ | ஒண்சுடர்கல் | நெய் | ௪ | ௩௮௫ |
| அரும்பொருள் | பாலை | ௧௭ | ௫௫ | ஒருகுழையொ | பாலை | ௨௫ | ௭௪ |
| அரைசுபடக்க | முல் | ௫ | ௩௩௫ | ஒரூஉக்கொடியி | மரு | ௨௩ | ௨௬௨ |
| அலர்ந்திகழ்நறு | நெய் | ௩௩ | ௪௮௪ | ஒரூஉநீயெங் | மரு | ௨௨ | ௨௬௦ |
| அறனின்றிய | பாலை | ௨ | ௧௧ | ஒன், றிரப்பான் | குறி | ௧௧ | ௧௪௫ |
| அன்னைகடுஞ் | மரு | ௩௨ | ௨௯௮ | கடிகொளிருங் | முல் | ௧௦ | ௩௫௯ |
| ஆமிழியணிமலை | குறி | ௧௨ | ௧௪௮ | கடும்புனல்கால் | பாலை | ௩௦ | ௮௯ |
| ஆறல்லமொழி | நெய் | ௩௦ | ௪௭௩ | கண்டவரில்லெ | நெய் | ௮ | ௩௯௫ |
| ஆறறியந்தணர் | கடவுள் | வாழ்த்து | ௧ | கண்டவிரொல்லா | நெய் | ௨௩ | ௪௩௭ |
| இகல்வேந்தன் | முல் | ௮ | ௩௫௦ | கண்டேனின் | மரு | ௨௫ | ௨௬௮ |
| இடுமுணெடுவே | பாலை | ௧௧ | ௩௮ | கண்ணகனிரு | முல் | ௨ | ௩௧௬ |
| இணைபடநிவந் | மரு | ௭ | ௨௧௫ | கதிர்விரிகனை | குறி | ௮ | ௧௩௬ |
| இணையிரண்டி | மரு | ௧௨ | ௨௨௮ | கயமலருண்கண் | குறி | ௧ | ௧௦௭ |
| இமயவில்வாங் | குறி | ௨ | ௧௦௯ | கருங்கோட்டு | நெய் | ௬ | ௩௯௦ |
| இலங்கொளிம | பாலை | ௨௨ | ௬௬ | கழுவொடுசுடு | முல் | ௬ | ௩௪௨ |
| இவர்திமிலெறி | நெய் | ௧௯ | ௪௨௫ | காமர்கடும்புனல் | குறி | ௩ | ௧௧௩ |
| ஈண்டுநீர்மிசை | மரு | ௩௫ | ௩௦௮ | காராரப்பெய்த | முல் | ௯ | ௩௫௬ |
| ஈதலிற்குறை | பாலை | ௨௬ | ௭௭ | கார்முற்றியிணை | மரு | ௨ | ௨௦௧ |
| உண்கடன்வழி | பாலை | ௨௧ | ௬௩ | காலவை,சுடு | மரு | ௨௦ | ௨௫௩ |

| முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். | முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| கொடியவுங்கோ | குறி | ௧௮ | ௧௬௩ | பல்வளம்பகர்பூ | பா | ௧௧ | ௫௯ |
| கொடுமிடனுஞ் | பாலை | ௩௫ | ௧௦௪ | பன்மலர்ப்பழ | மரு | ௧௩ | ௨௩௧ |
| கொடுவரிதாக்கி | குறி | ௧௩ | ௧௫௦ | பாஅலஞ்செவி | பாலை | ௪ | ௧௮ |
| கோதையாயமு | நெய் | ௫ | ௩௮௮ | பாங்கரும்பாட் | முல் | ௧௬ | ௩௭௪ |
| சான்றவிர்வாழி | நெய் | ௨௨ | ௪௩௩ | பாடல்சால் | பாலை | ௨௭ | ௮௦ |
| சுடர்த்தொடீ | குறி | ௧௫ | ௧௫௫ | பாடின்றிப்பசந் | பாலை | ௧௫ | ௪௯ |
| சுணங்கணிவன | குறி | ௨௪ | ௧௭௯ | பாடுகம்வாவாழி | குறி | ௫ | ௧௨௩ |
| செருமிகுசின | பாலை | ௧௨ | ௪௦ | பான்மருண்மரு | பாலை | ௨௦ | ௬௧ |
| செவ்வியதீவிய | பாலை | ௧௮ | ௫௭ | புரிவுண்டபுணர் | நெய் | ௨௫ | ௪௪௩ |
| ஞால்மூன்றடி | நெய் | ௭ | ௩௯௩ | புள்ளிமிழகல்வ | மரு | ௧௪ | ௨௩௪ |
| ஞாலம்வறந்தீர | மரு | ௧௭ | ௨௪௪ | புனவளர்பூங் | மரு | ௨௭ | ௨௭௩ |
| தளிபெறுதண் | முல் | ௧ | ௩௧௧ | புனையிழைநோ | மரு | ௧௧ | ௨௨௬ |
| தளைநெகிழ்பிணி | குறி | ௨௩ | ௧௭௭ | பெருங்கடற் | நெய் | ௧௪ | ௪௧௦ |
| திருந்திழாய்கே | குறி | ௨௯ | ௧௯௫ | பெருந்திருநிலை | மரு | ௧௮ | ௨௪௭ |
| தீம்பால்கறந்த | முல் | ௧௧ | ௩௬௧ | பொதுமொழி | மரு | ௩ | ௨௦௩ |
| துணைபுணர்நதெ | நெய் | ௧௮ | ௪௨௩ | பொய்கைப்பூப் | மரு | ௯ | ௨௨௦ |
| துனையுநர்விழை | நெய் | ௨௮ | ௪௬௧ | பொன்மலைசுடர் | நெய் | ௯ | ௩௯௮ |
| தெரியிணர்ஞா | நெய் | ௧௦ | ௪௦௦ | போதவிழ்பணிப் | மரு | ௪ | ௨௦௬ |
| தொடங்கற்கட் | பாலை | ௧ | ௭ | மடியிலான்செல் | பாலை | ௩௪ | ௧௦௧ |
| தொல்லியன்ஞா | நெய் | ௩௧ | ௪௭௯ | மணிநிறமலர்ப் | மரு | ௫ | ௨௦௯ |
| தொல்லூழிதடு | நெய் | ௧௨ | ௪௦௫ | மரையாமரல் | பாலை | ௫ | ௨௧ |
| தொல்லெழில்வ | பாலை | ௨௮ | ௮௩ | மலிதிரையூர்ந்து | முல் | ௪ | ௩௨௭ |
| தோடுறந்தருளா | நெய் | ௧௧ | ௪௦௩ | மல்லைமறஞ் | நெய் | ௧௭ | ௪௨௦ |
| தோழிநாங்கா | முல் | ௧௫ | ௩௭௨ | மறங்கொளிரும் | குறி | ௬ | ௧௨௮ |
| நடுவிகந்தொரீஇ | பாலை | ௭ | ௨௬ | மன்னுயிரோமுற | பாலை | ௩௩ | ௯௮ |
| நயந்தலைமாறு | மரு | ௧௫ | ௨௩௭ | மாணவுருக்கிய | முல் | ௧௭ | ௩௭௬ |
| நயனும்வாய்மை | நெய் | ௧௩ | ௪௦௮ | மாமலர்முண்ட | நெய் | ௧௬ | ௪௧௮ |
| நலமிகநந்திய | முல் | ௧௩ | ௩௬௬ | மின்னொளிரவி | குறி | ௧௯ | ௧௬௫ |
| நறவினைவரைந் | மரு | ௩௪ | ௩௦௫ | முறஞ்செவிம | குறி | ௧௬ | ௧௫௭ |
| நன்னுதால்கா | நெய் | ௨௭ | ௪௫௫ | மெல்லிணர்க் | முல் | ௩ | ௩௨௦ |
| நிரைதிமில் | நெய் | ௩௨ | ௪௮௨ | மைபடுசென்னி | மரு | ௨௧ | ௨௫௭ |
| நில்லாங்குநில் | மரு | ௩௦ | ௨௯௦ | மையறவிளங்கி | மரு | ௧௬ | ௨௩௯ |
| நீரார்செறுவி | மரு | ௧௦ | ௨௨௨ | யாரிவனெங்கூ | மரு | ௨௪ | ௨௬௫ |
| நெஞ்சுநடுக்குற | பாலை | ௨௩ | ௬௮ | யாரிவனென்னை | முல் | ௧௨ | ௩௬௩ |
| நோக்குங்கால் | குறி | ௨௭ | ௧௮௯ | யாரைநீயெம் | மரு | ௩௩ | ௩௦௨ |
| படைபண்ணிப் | பாலை | ௧௬ | ௫௨ | வண்டூதுசாந்தம் | மரு | ௨௮ | ௨௮௦ |

| முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். | முதற்குறிப்பு. | கலி. | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| வயக்குறுமண்டி | பாலை | உச | எ0 | விரிகதிர்மண்டி | மரு | சா | உகஉ |
| வலிமுன்பின் | பாலை | ங | கரு | வீங்குநீர்வீழ் | மரு | க | ககூஅ |
| வறனுறலறியா | குறி | கஎ | கசா0 | வீயகம்புலம்ப | குறி | க0 | கசக |
| வறியவனிளமை | பாலை | கூ | ஙஉ | வீறுசான்ஞால | பாலை | ஙஉ | கூரு |
| வாங்குகோனெ | குறி | கச | கருங | வெல்புகழ்மன் | நெய் | க | ங.எஅ |
| வாரிநெறிப்பட் | முல் | கச | ஙசாகூ | வேங்கைதொலை | குறி | எ | கஙஉ |
| வாருறுவணர் | குறி | உஉ | கஎச | வேயெனத்திர | குறி | உக | கஎக |
| விடியல்வெங் | குறி | கூ | கஙகூ | வேனிலுழந்த | பாலை | சா | உரு |

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். | பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|---|---|---|
| ௧௧ | ௮ | ஒழவி | இளவி | ௧௪௩ | ௬ | ஆராயந் | ஆராய்ந் |
| ௨௩ | ௪.௮ | ஞுள்ள | லுள்ள | ௧௪௯ | ௧௬ | பரக்கும் | பலர்க்கும் |
| ௨௭ | ௧௨ | பெபர் | பெயர் | ௧௫௪ | ௧௩ | மலைக்குச் | மலைக்கட் |
| ௩௧ | ௨௪ | மனேயே | மணேயே | ,, | ௧௪ | வழை | வாழை |
| ௩.௨ | ௨௯ | வறியவள் | வறியவன் | ௧௬௮ | ௭ | ணல்லா | னல்லா |
| ௩௮ | ௩ | தொழில் | தோழி | ,, | ௧௭ | நிற்கண | நிற்கண் |
| ௪௭ | ௪ | த்தாயந்த | தாய்ந்த | ௧௭௯ | ௪ | நின்னை | நினனைப் |
| ௪௯ | ௨0 | பைதல் | பைதல | ௧௮௮ | ௨௫ | ன ன்றி | ணின்றி |
| ௫௧ | ௨௭ | ராகிய | வாகிய | ௨௧௪ | ௩0 | தத்தை | தத்தைத் |
| ௫௭ | ௨௬ | வாய் | வாய | ௨௬௨ | ௧௭ | உணர்வு | புணர்வு |
| ௭௨ | ௨ | தன் | தம் | ௩௧௬ | ௨௮ | பாட்டு | பட்டு |
| ,, | ௨௭ | விகா | விகார | ௩௨௪ | ௩௩ | வயிற்றிெல | வயிற்றிலே |
| ௭௪ | ௨௬ | சாய போ | சாய் பொ | ௩௪0 | ௪ | பட்ட, | பட்டு, அப் |
| ௭௬ | ௫ | சூடி | குடி | ௩௫௬ | ௨௬ | கொடேந் | கோடேந் |
| ௭௮ | ௨௪ | பொல | போல | ௩௫௮ | ௩ | யளே | யளோ |
| ௮௫ | ௧௮ | ைதத்தத் | தத்தைத் | ௩௭௨ | ௧௧ | மறை | இறை |
| ௮௮ | ௧ | அமைத் | அமைந் | ௩௮௪ | ௧௯ | மாலை | மாலையை |
| ௯0 | ௧௮ | தெனக் | தென்?அக் | ௩௮௫ | ௧௭ | ரின்று | நின்று |
| ௧0௧ | ௨௭ | றிரு | றிரி | ௪00 | ௧௮ | பூவின் | பூவின |
| ௧0௯ | ௨௪ | வீர்ஞு | வீர்ஞ் | ௪0௨ | ௫ | என்ப | என்பது |
| ௧௧௧ | ௧௪ | யுவம்ம | யுவமம் | ௪௧௫ | ௧௧ | அன்று | என்று |
| ௧௧௯ | ௧௧ | செமமற் | செம்மற் | ௪௨௫ | ௮ | வாய்மைம் | வாய்மையும் |
| ,, | ௧௨ | ஞேயந் | ஞேய்ந் | ௪௨௮ | ௨௨ | பொத்தரு | பேர்த்தரு |
| ௧௨௧ | ௧௮ | கிழியு | கழியு | ௪௩௮ | ௧௫ | உளிஞை | உழிஞை |
| ,, | ௩0 | தாழந்த | தாழ்ந்த | ௪௪௧ | ௧0 | ைககள் | ைக |
| ௧௨௮ | ௧௨ | தொல் | தொன் | ,, | ,, | பில்லாத | பில் |
| ௧௨௯ | ௬ | முறிஇ | முறீஇ | ௪௪௩ | ௧௫ | மலக | மல்க |
| ,, | ௧௩ | மாயர்த | மாய்ந்த | ௪௪௫ | ௨௮ | சிதைதல் | சிதைத்தல் |
| ௧௩௭ | ௯ | எரேதி | எதிரே | ௪௯௭ | ௧ | வெண்டும் | வேண்டும் |

உ

திருச்சிற்றம்பலம்.

# கலித்தொகை.

## கடவுள் வாழ்த்து.

க. ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி;

படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகல்குறிக்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ;

மண்டமர் பலகடந்து மதுகையா னீறணிந்து
பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரற்றுங் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ;

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்
தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால் [புரளத்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ;

எனவாங்கு,

பாணியுந் தூக்குஞ் சீரு மென்றிவை
மாணிழை யரிவை காப்ப
வாணமில் பொருளெமக் கமர்ந்தனை யாடி.

என்பது, * "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே"
என்றதன்கண் வகையென்றதனாற் கொண்ட அறுமுறைவாழ்த்தன்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௧0௯-ம் சூத்திரம்.

றித் தனக்குப் பயன்படும்படி முன்னிலையாகக் கடவுளை வாழ்த்துதலிற் கடவுள்வாழ்த்து எனப் பெயர் பெற்றது.

இதன்பொருள். ஆறறி * * * கேளினி—என்பது, ஆறு அங்கத்தையும் அறியும் அந்தணர்க்கு அரியவாகிய வேதங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, பகையென்று, தெளிகின்ற கங்கையின் வேகத்தைச் சடையில் ஒருகூற்றிலே அடக்கி, முப்புரத்திலே தீயைச் செலுத்தி, வாக்காற் கூறப்படாமல், மனத்தாற் குறித்த அப்பொருட்கும் எட்டாமல் நிற்குங், கடிதாகிய கூளியினது முதுகிடாத போரினையும் நீலமணிபோலுந் திருமிடற்றினையும் எட்டுக் கையினையும் உடையாய், இங்ஙனங் கட்புலனாய் நின்று இப்பொழுது யான் கூறுகின்றதொன்றைக் கேள்; என்றவாறு.

பகர்ந்து கரந்து மடுத்து என்னுஞ் செய்தெனெச்சங்கள் செல்லும் என்னும் பெயரொச்சத்தோடு முடிந்து, அது எண்கையாய் என்னுங் குறிப்புப் பெயரோடு முடிந்தது.

இது திருமேனிகொண்டு நின்றாயாயினும் வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாயென்றது.

அவ்வேதந்தன்னைக் கொண்டே ஆறங்கங்களை அறிய வல்லாரென்பது தோன்ற ஆறறியந்தணர் என்றார். அந்தத்தை அணவுவார் அந்தணர்: என்றது, வேதாந்தத்தையே பொருளென்று மேற்கொண்டு * பார்ப்பாரென்றவாறு.

ஆறு என்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினையுடைய † அங்கத்தை உணர்த்திநின்ற ஆகுபெயர். அது ‡ "கிளந்தவல்ல" என்பதனுட் கூறினும்.

ஆறங்கமாவன, உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராய்ந்த ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் பரமார்த்தம் பரமாத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வராகம் முதலிய கணிதமும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமுஞ், செய்யுளிலக்கணமாகிய சந்தமுமாம்.

---

* பார்ப்பார் என்றதன் காரணமும் இஃதாமாறுணர்க.

† வாதத்தை என்றும் பாடம்.

‡ தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல் கூச-ம் சூத்திரம்.

மறையாவன தைத்திரியமும் பௌடியமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி வேதவியாதர் வரையறைப்படுத்திய காலத்து ஓதுகின்ற நான்கு வேதமுமாம்.

இனியென்றது, இனி நினைந்து இரக்கமாகின்றேனென்றாற் போல இப்பொழுது என்னும் பொருள் தந்தது.

இது தரவு.

படுபறை * * * சீர்தருவாளோ—எ-து, நின்கையில் ஒலிக்கின்ற பறை பலவாச்சியங்களையும் ஒலியாநிற்கக், கட்புலனாய்ப் பல வடிவுகளையும் ஈண்டு நின்னிடத்தே ஒடுக்கிக்கொண்டு, கொடிதாகிய கொட்டியென்னுங் கூத்தை நீ ஆடுகின்றகாலத்துப், பக்கம் உயர்ந்த அகன்ற குறியினையுடைய கொடியையொத்த இடையினையுடையாளோ தான் முடிந்துவிடுங் காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீரைத் தருவாள்? ஆண்டுப் பிறர் இல்லையே; எ - று.

கொடுங்கொட்டி, கொடுகொட்டி என விகாரமாயிற்று. கொடுங்கொட்டியென்றார் எல்லாவற்றையும் அழித்துநின்று ஆடுதலின்.

“கொட்டி யாடற் கேற்ற மொட்டிய-வுமையவ ளொருபாலாக வொருபா-லிமையா நாட்டத் திறைவ னுசி-யமையா வுட்கும் வியப்பும் விழைவும் - பொலிவும் பொருந்த நோக்கிய தொக்க - வவுண ரின்னுயி ரிழப்ப வக்களம் - பொலிய வாடின னென்ப மற்றதன் - * விருத்தங் காத்தற் பொருளொடு கூடிப் - பொருத்த வருஉம் பொருந்திய பாட - றிருத்தகு மரபிற் றெய்வத் துதிப்பே.” இதனான் உணர்க.

மண்டமர் * * * தூக்குத்தருவாளோ—எ-து, மிக்குச்செல்கின்ற போர்களிற் பலவாகிய முப்புரங்களை வென்று, அந்த வலியாலே அவர்கள் வெந்து வீழ்ந்த நீற்றை அணிகையினாலே பாண்டரங்கமென்னும் பெயர் பெற்ற கூத்தை நீ ஆடுகின்ற காலத்து, மூங்கிலினது அழகையுடைத்தாகிய அணைபோன்ற மெல்லியவாகிய தோள்களையுடைய வண்டுகள் ஒலிக்குங் கூந்தலையுடையாளோ அதனிடை நிகழுங்காலத்து அதனையுடைய தூக்கைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே; எ - று.

---

* பிரதிகளனைத்தும் விருத்தகாத்தலென்றிருக்கின்றது.

பாண்டரங்கம், பண்டரங்கமென விகாரமாயிற்று.

"ஏறமர் கடவுண் மூவெயி லெய்வுழிக் - கூறுகூ ருகக் கொடியொடும் படையொடும் - வேறுவே றுருவின் விண்மிசைப் பரத்தன - ரவ்வழி யொளியொடு முருவொடுந் தோன்றித் - தேர்முனின்று திசைதலை பனிப்பச் - சுவையுங் குறிப்பு மொழிவில தோன்றி - யவையவை யவ்வழி யாடின ருட - மைந்தரு மகளிருந் தந்நிலை யழிய - மெய்ப்படு சுவையொடு கைப்படை மறப்பக் - கடிய காலக் காற்றென வேற்றவன் - படிநிலை திரியாப் பாண்டரங் கம்மே." இதனுன் உணர்க.

கொலையுழுவைத் * * * பாணிதருவாளோ—எ-து, கொலைத் தொழிலையுடைய புலியைக் கொன்று அதன் தோலை உடுத்துக், கொன்றைப்பூவாற் செய்த மாலை தோளிலே அசைய, அயன் தலையை அகங்கையிலே ஏந்துகையினுலே காபாலமென்று பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுங் காலத்து, முல்லையையொத்த எயிற்றினையுடையாளோ ஒரு தாளத்தின் முதல் எடுக்குங் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்? ஆண்டுப் பிறரில்லையே; எ - று.

முல்லை முலையென விகாரமாயிற்று. அணி, உவமவுருபு. ஓகாரம் மூன்றும் எதிர்மறை.

ஒருதாளத்திற்குப் பாணி தூக்குச் சீரொன்னும் மூன்றும் உளவேனும் ஒவ்வொன்று ஓராடன் மிகுதிவகையாற் சிறந்தமைபற்றி ஒரோவொன்றையே கூறினர். தாழிசைகளிற் சீர்தூக்குப்பாணியென நின்றனவேனும், அவை நிகழும் அடைவுபற்றிச் சுரிதகத்துப் பாணியுந் தூக்குஞ் சீருமென அடைவு கூறினர்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்று சொல்லும்படியாக; எ - று. ஆங்கு அசை; *அவர் கூத்தாடுகின்ற காலங்களையெனினுமாம்.

இது தனிச்சொல்.

பாணியுந் * * * யாடி—எ - து, அழித்தற்றொழிலை நிகழ்த்துகின்ற காலங்களிலே, பாணியுந் தூக்குஞ் சீருமென்று சொல்

* அவ்வாறு பொருள்கொள்ளிற் பகரத்தை இரட்டிக்க.

லப்பட்ட இவையிற்றை மாட்சிமைப்பட்ட அணியினையுடைய உமாதேவி காப்ப ஆடிச், காத்தற்றொழிலை நிகழ்த்துகின்ற இக்காலத்தே ஒருவடிவைக்கொண்டு நேயம் இல்லாத பொருளாகிய எமக்குப் பொருந்தினாய்; இதற்குக் காரணங் கூறுவாயாக; எ - று.

இது சுரிதகம்.

இப்பாட்டுப் பலமெய்ப்பாடுகளுந் தோற்றுவித்து நின்றதேனும், அவை உரைப்பிற் பெருகுமாதலின், முடிந்த பொருளாற் பிறந்த மெய்ப்பாடே கூறுதும்; அது தன்கட் டோன்றிய ஆக்கம்பற்றிய மருட்கையாம்.

இது நான்கு உறுப்பான் வந்ததேனுந், தேவபாணியான் வருதலின், முதனிலையொத்தாழிசையாகாது. * "ஏனையொன்றே, தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே" என்பதனாற் றேவர்ப் பரவிற் றேனும் வண்ணகமுமாகாது, எண்ணுஞ் சின்னமும் இழத்தலின். ஆகலின் இது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகவொருபோகாயிற்று.

சீர்வகைக் கலிக்கு † "விராய தளையு மொரூஉ நிலையின்றே." என்பதனாற் றளைவிரவிவரப்பெறும் என்றலிற் செல்லுமெனநேரீற்றியற்சீர் வந்தது; ‡ "கலித்தளை யடிவயி னேரீற் றியற்சீர் - நிலைக்குரித் தன்றே தெரியு மோர்க்கே." என்ற விதி கட்டளைக்கலிக்காதலின்.

§ "நடுவ ணைந்திணை நடுவண தொழியப் - படுதிரை வையம் பாத்திய பண்பே." என்றும், || "மாயோன் மேய காடுறை யுலகமுஞ் - சேயோன் மேய மைவரை யுலகமும் - வேந்தன் மேய தீம்புன லுலகமும் - வருணன் மேய பெருமண லுலகமு - முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச் - சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." என்றும், நிலம் நான்கேயாகக் கூறலிற் பாலைக்கு நிலம் இன்றெனின், அற்றன்று. ¶ "புணர்தல் பிரித லிருத்த லிரங்க-

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஅ-ம் சூத்திரம்.
† " " " கக-ம் "
‡ " " " உ௫-ம் "
§ " " அகத்திணையியல், உ-ம் "
|| " " " ௫-ம் "
¶ " " " க௪-ம் "

னூட லிவற்றி னிமித்த மென்றிவை - தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே." என நால்வகை நிலத்துங் கொண்ட உரிப்பொருட் கிடையே பிரிதலும் உரிப்பொருளாக ஆசிரியர் கொண்டார், அப் பிரிவு நான்கு நிலத்திடையும் பொதுவாய் மயங்கிவருமென்று க ருதி. ஆதலான் ஈண்டுப் பாலைத்திணையையுந் திணையாக ஆசிரியர் நல்லந்துவனுர் கோத்தாரொன்று கூறுக.

ஆயிற் * "கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய் - முற்படக் கிடந்த வெழுதிணை யென்ப." என்றலிற் கைக்கிளையும் பெ ருந்திணையுங் கோத்தல்வேண்டுமெனின், அஃது † "உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே" என்பதனுல் அவை உரிப்பொருளன் மையின் நால்வகை நிலத்தினும் மயங்கிவரப் பெறுமென்ருர். ஆக லின் இத்தொகைக்கண்ணும் அவை மயங்கிவரக் கோத்தாரொன்று கூறி விடுக்க. அவை வரவரப் பாட்டுக்கள் வந்துழி அவற்றுட் கா ட்டுதும்.

இனிச், "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே" என்றவழிச் சொல்லாத முறையாற் சொல்லவும்படுமென்று பொ ருள்கொண்டமைபற்றிப் பாலை குறிஞ்சி மருதம் முல்லை நெய்த லெனவுங் கோத்தார். ஐங்குறுநூற்றினும் பிறவற்றினும் வேறுபடக் கோத்தவாறுங் காண்க. (க)

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், க-ம் சூத்திரம்.
† " " " கரு-ம் "

கடவுள்வாழ்த்து முற்றும்.

# கலித்தொகை.

## முதலாவது பாலைக்கலி.

௨. தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
வடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலு
முடன்றக்கான் முகம்போல வொண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலி னவ்வெயி
லேறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந் தியங்குந
ராறுகெட விலங்கிய வழலவி ராரிடை
மறப்பருங் காத லிவளீண் டொழிய
விறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற் றைஇய;

தொலைவாகி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
நிலைஇய கற்பினா ணீநீப்பின் வாழாதாண்
முலையாகம் பிரியாமை பொருளாயி னல்லதை;

இல்லென விரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயி னல்லதை;

இடனின்றி யிரந்தோர்க்கொன் றீயாமை யிளிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொருளாகுமோ
வடமீன்போ றொழுதேத்த வயங்கிய கற்பினா
டடமென்றோள் பிரியாமை பொருளாயி னல்லதை;

எனவிவள்,

புன்கண்கொண் டினையவும் பொருள்வயி னகற
லன்பன் றென்றியான் கூற வன்புற்றுக்

காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
றொல்கவின் றொலைத லஞ்சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.

இஃது *"ஒன்றாத்தமரினும்" என்னுஞ் சூத்திரத்து "நாளது சின்மையு மிளமைய தருமையுந் - தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு - மின்மைய திளிவு முடைமைய துயர்ச்சியு - மளவின தகலமு மகற்சிய தருமையு - மொன்றாப் பொருள்வயி னூக்கிய பாலினும்" என்பதனுள் இன்மையது இளிவு கூறி இல்வாழ்க்கைநெறி ஆற்றுதற்குப் பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத், தலைமகளது இயல்பு கூறி, இப்பெற்றியாளைப் பிரியாமையே பொருளாவதெனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை தோழி தலைமகட்கு வந்து சொல்லியது.

(இ - ள்.) தொடங்கற்கட் * * * றைஇய—எ - து, இறைவன் உலகுகளைப் படைக்கக் கருதிய இடத்தே, அப்படைத்தற்றொழிலைச் செய்தற்கு உரியனாய்த்தோன்றிய முதியவனாகிய அயன் முதலாகத், தேவர் வந்து இரக்கையினாலே, தம்மெல்லைகொள்ளாத அவுணருண்டாய வலியைக் கெடுத்தற்குச், சினத்துக் கூற்றனைப்போலும் வஞ்சனையைச் செய்கின்ற அவுணரை, வஞ்சியாது எதிர்நின்று அடுகின்ற வலியுடனே, மூன்று கண்ணையுடைய இறைவன் மூன்றெயிலையுங் கோபிக்க, அவன்முகந் தெறுமாறு போல, ஒள்ளிய ஞாயிறு சுடுகையினாலே, வரை பிளந்து பிறராற் சேறுதற்கரிய மழுவையுடையோன் சினக்கையினாலே அந்த முப்புரம் அழித்தலைப்பெற்று உதிர்வனபோலப், போவார்க்கு வழியில்லையாக வீழ்ந்து குறுக்கிட்டுக் கிடந்த வெம்மை விளங்குந் தொலையாத வழியிடையே, நின்னை மறத்தலரிதாகிய வேட்கையையுடைய இவள் இவ்விடத்தே இறந்துபடும்படியாக, ஐயனே ! பொருள்வயிற் பிரியத் துணிந்தீர்; அங்ஙனந் துணிந்த நீர் யான் கூறுகின்றதனைக் கேட்பீராக; எ - று.

கண் காலத்தின்கண் வந்தது. கணிச்சியோன் சுட்டுப்பெயராய் நின்றது.

அமரர் இரக்கையினாலே முக்கணன் மூவெயிலை உடல அவன்முகந் தெறுமாறுபோலக் கதிர் தெறுகையினாலே வரைபிளந்து அவன் சினக்கையினாலே அவ் எயில் ஏறுபெற்று உதிர்வன போல உதிர்ந்து விலங்கிய ஆரிடையென்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சக-ம் சூத்.

கேண்மின் ஐய என்றது ஒருமைப்பன்மைமயக்கம்.

கதிர் தெறுதலின் மலைவெம்பிய சுரம் என்றதனுன் நடுவுநிலைத் திணைக்குரிய நண்பகலும் வேனிலுங் குறிஞ்சியைச் சார்ந்து தோன் றினமை கூறினர். *"சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே" என்பதனுல், வழியருமை கூறினர். இவ்விதிகள் மேல்வருவனவற் றிற்கும் கொள்க.

இது தரவு.

தொலைவாகி * * * னல்லதை—எ-து, முன்புண்டான பொருள்களெல்லாங் கொடுத்துத் தொலைந்து, பின்பு இல்லையாய், வந்து இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொடாதிருத்தல் இளிவாமென் று கூறி, மலையைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் நன்கு மதிக்கும் பொருளாயினும், யான் வருந்துணையும் ஆற்றியிரு வென்று ஆற்றுவித்த கூற்றிலே நிலைபெற்ற கற்பினையை முன்பு உடையவள் நீ நீப்பின் இளமைச்செவ்வி முதிர்வினுலே உயிர் வா ழாதாளாயினுள்; இனி அவளுடைய, நிரம்பிய முயக்கத்தை விரும் புகின்ற முலையினையுடைய மார்பைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற் குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொருளாவதல்லது பிரிகின் றது பொருளாகுமோ? எ - று.

தொலைவு முன்பு உண்டாய்ப் பின்பு இல்லையாதலாம்.

இல்லென * * * னல்லதை—எ - து, எக்காலமும், எமக்குப் பொருளில்லையென்று கூறி வந்து இரந்தவர்களுக்குச் சிறிதுங் கொ டாதிருத்தல் இளிவாமென்று கூறி, மலையைக் கடந்துபோய்த் தேடு தலைக் கருதின பொருள் நன்கு மதிக்கும் பொருளாயினும், நமக்குப் பழைய உழுவலன்பு வழுவாமை வருமென்ற கூற்றை உட்கொண்ட தனுலே நீ பிரியாயென்றே கூடினவளுடைய, தான் புல்லுதலையே விரும்பின இளமைச் செவ்வியையுடைய மார்பைப் பிரியாதிருத்தல் நின் மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின், அதுவே பொருளாவத ல்லது பிரிகின்றது பொருளாகுமோ? எ - று.

இடனின்றி * * * னல்லதை—எ-து, தம்முடைய இல்வா ழ்க்கைக்கு வேண்டும் பொருளில்லையென்று கூறி வந்து இரந்தவர்க் குச் சிறிதுங் கொடாதிருத்தல் இளிவாமென்று கூறிச், காட்டைக் கடந்துபோய்த் தேடுதலைக் கருதின பொருள் நன்கு மதிக்கும் பொ

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், உஉம். சூத்.

ருளாயினும், அருந்துதிபோலே எல்லாருந் தொழுது வாழ்த்தும்படி விளங்கிய சற்பனையை முன்புடையவளுடைய, காமச் செவ்வியாற் பெருமையையுடையவாய, மெல்லியவாகிய தோள்களைப் பிரியாதிருத்தல் நின்மனத்திற்குப் பொருளாயிருக்குமாயின்; அதுவே பொருளாவதல்லது பிரிகின்றது பொருளாகுமோ? எ - று.

பிரியாமையென்றது பின்பு பிரிகின்றதனைத் தோற்றுவித்து நின்றது. கற்புக் கற்பனையாதல் கற்பியலான் உணர்க.

பழியொடு வருவன செய்யலாகாதெனத் தோழி விலக்கலின் அசைவென்னும் மெய்ப்பாடு தோன்றிற்று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவிவள் * * * காதலோரே—எ-து, என்று யான் நினக்குச் கூறும்படியாக, இவள் பொலிவழிவினைத் தன்னிடத்தே கொண்டு வருந்தவும், நீ பொருள் தேடப்பிரிகின்றது உனக்கு அன்பு அல்லவென்று யான் சொல்ல, அச்சொல்வரைத் தங்காத காதலோர், பின்னர் நினது இயற்கைநலந் தொலைதலைக்கூற, அச்சொற்கு அஞ்சிப் பரிக்கோலாற் குத்தவுந் தன்னெறியில் நில்லாத செலவுகடளிற்றொருத்தல் மெல்லிய யாழோசையின் எல்லையிலே தங்கினாற்போல, அன்புற்றுத் தாழ்ந்து, குற்றேவன் மகளாகிய என் கூற்றின் எல்லையிலே தங்கிப் போகாதொழிந்தார்காண்; எ - று.

தோழி தான் செலவழுங்குவித்தமை கூறினாள். கூறவென்பதனைத் தொலைதலோடுங் கூட்டுக.

தங்கினர் என்பதனாற் தங்காமையும் வந்தது.

தங்கினாற் போலவென்னும் தொழிலுவமத்திற்கு அன்பன்றென்றதுந் தொல்கவின் றொலைதலென்றதும் பொருளாயினவாறு காண்க. யாழ் தோழியும் அவள் கூறியது யாழிசையுமாகக் கொள்க.

எனவிவள், தனிச்சொல், எஞ்சியது-சுரிதகம்.

இச்சுரிதகத்தாற் தலைவற்கு உண்டாகிய அருளென்னும் மெய்ப்பாட்டாற் தலைவிக்குப் புணர்வென்னும் உவகை பிறந்தது.

செலவழுங்கலின் முல்லையாமெனின், ஆகாது; *"செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே - வன்புறை குறித்த றவிர்ச்சி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௪௪-ம் சூத்.

யாகும்" என்றாராகலின். இவ்விதி மேற் செலவழுங்குவனவற்றிற்
கெல்லாங் கொள்க.

* "ஒத்தா ழிசைக்கலி கலிவெண் பாட்டே - கொச்சக முற
ழொடு கலிநால் வகைத்தே." "ஒத்தா ழிசைக்கலி யிருவகைத் தாகு
ம்." "இடைநிலைப் பாட்டுத் தரவுபோக் கடையென - நடைபயின்
றொழுகு மொன்றென மொழிப." "தரவே தானு நாலடி யிழிபா - யாறி
ரண் டுயர்பென் றறையவும் படுமே." "இடைநிலைப் பாட்டே, தர
வகப் பட்ட மரபின வென்ப." "அடைநிலைக்கிளவி தாழிசைப் பின்
னர் - நடைநவின் றொழுகு மாங்கென் கிளவி." "போக்கியல் வ
கையே வைப்பெனப் படுமே." "தரவிய லொத்து மதன கப்படும்-
புரைதீ ரிறுதி நிலையுரைத் தன்றே." என்று அகநிலையாகிய கட்டளை
யொத்தாழிசைக்குக் கூறிய இலக்கணஞ் சீர்வகையொத்தாழிசைக
ட்கும் ஒத்தலில் இவ்விலக்கணங்கொண்டு இத்தொகையில் ஒத்தாழி
சை செய்தாரென் றுணர்க.

அவற்றுள், இது மிகத்துள்ளிவந்த பத்தடித்தரவும், † "ஒத்
தாழிசையு மண்டில யாப்புங் - குட்டமு நேரடிக் கொட்டின வென்
ப." என்பதனால் ஒத்த தாழ்த்த ஓசைபெற்றுத், தரவகப்பட்ட மர
பினவாய் ‡ "ஒத்து மூன்றாகு மொத்தா ழிசையே." என்பதனான்
ஒத்து மூன்றாய்வந்த தாழிசையும், நடைநவின்றொழுகுமென்றத
னால் "எனவிவள்" என்று பொருள் பெற்றுவந்த அடைநிலைக்கிளவி
யும், இடைநிலைப்பாட்டின் பொருண்முடிவு காட்டித் தரவிற் சுருங்கி
வந்த சுரிதகமும் பெற்றுத், தரவினுந் தாழிசையினும் நேரீற்றியற்சீ
ரும் பெற்றுத், தரவின்கண் ஏறுபெற்றுதிரென நேர்புநேர்நிரையா
கிய வஞ்சியுரிச்சீரும் பெற்றுவந்த முதனிலையொத்தாழிசைக்கலிப்பா.

§"எழுசீ ரிறுதி யாசிரியங் கலியே." என்பதனால் ஈற்றடி நாற்
சீரும் அயலடி முச்சீருமாக எழுசீரான் இற்றது சுரிதகம். இவ்விதி
மேல்வருவனவற்றிற்குங் கொள்க. (க)

கூ. அறனின்றி யயறாற்று மம்பலை நாணியும்
வறனீந்தி நீசெல்லு நீளிடை நினைப்பவு
மிறைநில்லா வளையோட விதழ்சோர்பு பனிமல்கப்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், தரு0—கநஎ-ம் சூத்.
† " " " ககூ-ம் சூத்.
‡ " " " கசஉ-ம் "
§ " " " எசு-ம் "

பொறையில்லா நோயோடு புல்லென்ற நுதலிவள்
விறனல னிழப்பவும் வினைவேட்டாய் கேளினி;

உடையிவ ளுயிர்வாழா ணீநீப்பி னெனப்பல
விடைகொண்டியா மிரப்பவு மெமகொள்ளா யாயினை
கடைஇய வாற்றிடை நீர்நீத்த வறுஞ்சுனை
யடையொடு வாடிய வணிமலர் தகைப்பன;

வல்லைநீ துறப்பாயேல் வகைவாடு மிவளென
வொல்லாங்கியா மிரப்பவு முணர்ந்தியா யாயினை
செல்லுநீ ளாற்றிடைச் சேர்ந்தெழுந்த மரம்வாடப்
புல்லுவிட் டிறைஞ்சிய பூங்கொடி தகைப்பன;

பிணிபுநீ விடல்சூழிற் பிறழ்தரு மிவளெனப்
பணிபுவந் திரப்பவும் பலசூழ்வா யாயினை
துணிபுநீ செலக்கண்ட வாற்றிடை யம்மரத்
தணிசெல வாடிய வந்தளிர் தகைப்பன;

எனவாங்கு,

யாநிற் கூறவு மெமகொள்ளா யாயினை
யானு திவள்போ லருள்வந் தவைகாட்டி
மேனின்று மெய்கூறுங் கேளிர்போ னீசெல்லுங்
கானந் தகைப்ப செலவு.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, தலைமகட்கு அஃது உரைத்து, அவளது ஆற்றாமையின்வகை தலைமகற்கு உணர்த்தவும், பின்னும் பிரிவின் மேற் சென்ற உள்ளத்தனாயினானை, நீர் செல்லுங் கானமே நும்மை இடிக்குங் கேளிர் போல விலக்குமென, அவன் செலவழுங்கும்வகை அவள் கூறியது.

(இ - ள்.) அறனின்றி * * * கேளினி—எ - து, யான் நின் பிரிவை உணர்த்துகையினாலே முன்கையிற் கிடவாவாய வளை கழலக், கண்ணீர் இமையினின்று முன்னர்ப் பெருக வீழ்ந்து, பின்னர் இமை நிறையும்படி நிற்கப், பொறுக்கும் அளவில் நில்லாக் காம நோயாலே பொலிவழிந்த நுதலினையுடைய இவள் பின்பு அயலிலுள்ளார் தந் நெஞ்சில் அறமின்றாய் வெளியாகக்கூறும் அம்பலைக் கூசுதலானும், நீ அரிதாகக் கடந்து செல்லும் நீண்ட வழியில் வற்

கடமான காலத்தை நினைக்கையினாலும், தனது வெற்றியையுடைய நலத்தை இழவாநிற்கவும், வினைமேற் சேறலை விரும்பினவனே இப்பொழுது யான் கூறுகின்றதனைக்கேள்; எ - று.

இது தரவு.

உடையிவள் * * * தகைப்பன—எ - து, நின்போக்கைத் தடுத்தல் கொண்டு நின்னை உயிராகவுடைய இவள் நீ பிரிவையாயின் உயிர்கொண்டிராளென்று பலவற்றைக் கூறி யாங்கள் இரந்துகொள்ளவும், எம்முடைய வார்த்தைகளைக் காரியமென்று கருதாயாயினாய். இனி நின்னைப் போகாமற் தடுப்பன நின் நெஞ்சைச் செலுத்தின வழியிடத்து, நீர் நீக்கப்பட்ட வறுவிய சுனைகளிடத்து இலைகளோடே கூடி வாடிய அழகிய மலர்கள்; எ - று.

என்றதனான், இவளேயன்றிச் சுற்றத்தாருங் கெடுவரென்றாள்.

*"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்" என்பதனான் மருதத்துப்பூப் பாலைக்கண் வந்தது.

வல்லை நீ * * * தகைப்பன—எ - து, நீ கடுகத் துறப்பையாயின் இவள் வகுப்பையுடைய உறுப்புக்கள் கெடுமென்று நினக்குப் பொருந்தும் வழியாலே யாங்கள் இரந்துகொள்ளவும், இவள் வருத்தத்தை அறியாயாயினாய். இனி நின்னைப் போகாமற் தடுப்பன நீ போம் நீண்டவழியிடத்து, நமக்குப் பற்றுக் கோடென்று சேர்ந்து படரப்பட்ட மரம் வாட, அதனைச் சேருதலைக் கைவிட்டு வீழ்ந்து கிடந்த பூங்கொடிகள்; எ - று.

மரந் தலைவியுங் கொடி சுற்றமுமாகக் கூறினாள். மரத்தினது நிழலில் நிற்றலிற் கொடி மரம் வாடும் அளவும் நின்றது.

பிணிபுநீ * * * தகைப்பன—எ - து, நீ சில நாட் பிணித்துக்கொண்டு பின்னைக் கைவிடுதலைக் கருதுவாயாயின் இவள் இறந்துபடுவளென்று தாழ்ந்து வந்து இரந்துகொள்ளவும், வினைவயிற் செல்லுமாறு பலவற்றையுஞ் சூழ்வாயாயினாய். இனி நின்னைத் தடுப்பன, நீ போதற்கு நெஞ்சாற் துணிந்து கண்டு வைத்த வழியிடத்தின், முற் கூறிய மரத்தின் அழகு போக, வாடிக்கிடந்த அழகிய தளிர்; எ - று.

---

* தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல், சக - ம் சூத்திரம்.

2

முற்படக் கூறிய நீரும்மலரும் மரமுங்கொடியும் போலப் பற்றுக்கோடாதலன்றி இவளுஞ் சுற்றமும் முதலுஞ் சினையுமாய் இருப்பர் என்றதாயிற்று.

இவை மூன்றுந் தாழிசை.

இத்தாழிசைகளிற் கூறிய இறைச்சிப் பொருள்கள் திணைப் பொருட்கு உபகாரப்பட்டு நின்றவாறு காண்க.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

யாநிற் கூறவும் * * * செலவு—எ - து, யாம் நினக்குக் காரியஞ் சொல்லவும், எம்முடைய கூற்றுக்களை நெஞ்சாற் கொள்ளாயாயினாய். இனி இவளைப்போலே, கண்டார்க்கு அருள் வருதற்குக் காரணமானவையிற்றை மேன்மேலே காட்டி, உனக்கு மேலாய் நின்று உண்மை கூறிக் கழறுங் கேளிரைப் போல நின் போக்கைத் தடுப்பன நீ செல்லுங் காடு; எ - று.

இது சுரிதகம்.

எம கொள்ளாயாயினையெனத் தலைவற்கு நிகழ்ந்த விரைவு கண்டு தோழிக்கு அச்சம் பிறந்தது. இதனாற் தலைவற்கு இழிபு பிறந்தது.

தகைப்ப என்றது அன்சாரியை பெறாது நின்ற அகரவீற்றுப் பலவறிசொல்.

*" தோழியுள் ளுறுத்த வாயில் புகுப்பினு - மாவயி னிகழு மென்மனார் புலவர்" என்பதனாற் தலைவி செலவழுங்குவித்தற்குப் போகவிட்டமையாற் தன்னுடன் ஏனைவாயில்களுங் கூறினமை தோன்ற, யாம் நிற் கூறவுமென்றும் எமகொள்ளாயாயினையென்றுந், தாழிசைகளினும், யாம் இரப்பவும் எமகொள்ளாயாயினையென்றும் யாம் உரைப்பவுமென்றுங் கூறியவாறு காண்க.

யானிற் கூறவு மென்றும் பாடம்.

இது ஐந்தடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (௨)

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், அ-ம், ௬௬.

ச. வலிமுன்பின் வல்லென்ற யாக்கைப் புலிநோக்கிற்
சுற்றமை வில்லர் சுரிவளர் பித்தைய
ரற்றம்பார்த் தல்குங் கடுங்கண் மறவர்தாங்
கொள்ளும் பொருளில ராயினும் வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துயிர் வௌவலிற்
புள்ளும் வழங்காப் புலம்புகொ ளாரிடை
வெள்வேல் வலத்திற் பொருடரல் வேட்கையி
னுள்ளினி ரென்ப தறிந்தன ளென்றோழி;

காழ்விரி வகையார மீவரு மிளமுலை
போழ்திடைப் படாமன் முயங்கியு மமையாரொன்
றூழ்கதுப் பணிகுவர் காதலர் மற்றவர்
சூழ்வதை யெவன்கொ லறியே னென்னும்;

முள்ளுறழ் முளையெயிற் றமிழ்தூறுந் தீநீரைக்
கள்ளினு மகிழ்செயு மெனவுரைத்து மமையாரொன்
ஞெள்ளிழை திருத்துவர் காதலர் மற்றவ
ருள்ளுவ தெவன்கொ லறியே னென்னும்;

நுண்ணெழின் மாமைச் சுணங்கணி யாகந்தங்
கண்ணொடு தொடுத்தென நோக்கியு மமையாரொன்
ஞெண்ணுத னீவுவர் காதலர் மற்றவ
ரெண்ணுவ தெவன்கொ லறியே னென்னும்;

எனவாங்கு,

கழிபெரு நல்கலொன் றுடைத்தென வென்றோழி
யழிவொடு கலங்கிய வெவ்வத்த ளொருநாணீர்
பொழுதிடைப் படாீப்பின் வாழ்வாளோ
வொழிகினிப் பெருமநின் பொருட்பிணிச் செலவே.

இது பொருள்வயிற் பிரிவேனென்ற தலைமகற்குத், தோழி, தலைவி செலவுக் குறிப்பு அறிந்தவாறும், அவளது ஆற்றுமையும் உணர்த்திச், செலவு ஒழிவாயாகவெனக் கூறியது.

(இ - ள்.) வலிமுன்பின் * * * என்றோழி—எ - து, சுற்றுதல் அமைந்த வில்லினையும் உடையராய்க் கடைகுழன்ற வளர்ந்த

மயிரினையும் உடையராய்ப் பிறர்க்குக் குற்றஞ்செய்தலைப் பார்த்திருக்கும் மெய்வலியுடைத்தாகிய வலியினையும் வற்கென்ற உடம்பினையும் புலிபோலும் பார்வையினையும் உடைய தறுகண்மையையுடைய மறவர் தாம் வம்பலர் பக்கற் பெறுவதொரு பொருளினையுடையரல்லராயினுந் தங்கள் அம்புபட்டுப் பதைப்பாரைக்கண்டு மனம் மகிழ்வதற்குத் தொடர்ந்து சென்று உயிரைக்கொள்ளுகையினாலே பறவைகளும் பறத்தலைச் செய்யாத வருத்தத்தைக்கொண்ட தொலையாத வழியை வெள்ளிய வேலை வலக்கையிலே ஏந்திப் பொருளைத் தேடிக்கொண்டு வருதலின்மேலுள்ள விருப்பத்தினாலே நினைந்தீரென்று தனக்கு வெளியாகச் சொல்லுகின்ற நம்முடைய செயலை என் தோழி அறிந்தாள்; எ - று.

இது பாலைநிலத்திற்கு உரிய செய்தி கூறிற்று. ஆரிடையை உள்ளினீரென்க.

இது தரவு.

காழ்விரி * * * என்னும்—எ-து, காதலர், முத்துவடங்கள் விரிந்த கல்த்தை அகத்திட்டுக்கிடக்கின்ற ஆரம் மீதே கிடந்தசையும் இளைய முலையை ஒருபோதும் இடையீடுபடாமற் தழுவியும் அதனானும் வேட்கை தணியாராய், என்னுடைய கூட்டத்தாற் தாழ்ந்த மயிரைக் கோலஞ்செய்வர்; பின்னை, அவர் சூழ்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறுநிற்கும்; எ-று.

மேற் கலங்களுங் கீழ்ப் பல முத்துவடங்களுமாகிய ஆரம்.

முள்ளுறழ் * * * என்னும்—எ-து, காதலர், முள்ளை மாறுபடுகின்ற முனையினையுடைய நாணன் முளைபோலும் எயிற்றிடத்து விடாமல் ஊறும் அமிழ்துபோலும் இனிய நீரைக் கள்ளினுங்காட்டில் மகிழ்ச்சியைத் தருமென்று கூறியும் வேட்கை தணியாராகி என்னுடைய ஒள்ளிய பூண்கள் புணர்ச்சியால் நிலைகுலைந்தவற்றைப் பழைய நிலைகளிலே கிடக்கும்படி திருத்துவர்; பின்னை, அவர் நினைக்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறுநிற்கும்; எ - று.

அக்கள்ளென்று பாடமாயின், இங்ஙனம் மிகக்களிப்பிக்குங் கள்ளென்க. திருநீரையும் பாடம்.

நுண்ணெழின் * * * என்னும்—எ-து, காதலர், கூரிய அழகினையும் மாமை நிறத்தினையுமுடைய சுணங்குபரந்த மார்பந் தங்க

ணோடு எதிராக வைத்துக் கட்டினதென்று யாங் கூறும்படி இமையாமற் பார்த்தும் வேட்கை தணியாராய் என்னுடைய ஒள்ளிய நுதலைப் புணர்ச்சியால் அரும்பிய வியர்வைத் துடைப்பர். பின்னை, அவர் சூழ்கின்ற காரியம் எத்தன்மையதுகொல்? அதனை யான் அறியேனென்று கூறாநிற்கும்; எ - று.

தொடுத்தது தொடுத்தென விகாரமாயிற்று.

இவை மூன்றுந் தாழிசை.

இத்தாழிசைகளிற் தலைவிக்கு ஆராய்ச்சி பிறந்ததனைத் தோழி கூறினாள்.

*"பொழுதுதலைவைத்த" என்னுஞ் சூத்திரத்து நிகழுமென்றதனாற் பெருந்திணைக்கேயன்றி ஏனைத்திணைக்கண்ணும் வனப்புமிகுதி கூறப்பெறுமென்றலிற் தாழிசைகளிற் தலைவி வனப்புமிகுதி கூறினாள்.

எனவாங்கு—எ - து, என்று அவள் கூறும்படியாக; எ - று ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

கழிபெரு * * * செலவே—எ - து, புணர்ச்சிப்பின்னர் நிகழ்த்தின மிக்கபெரிய தலையளி ஒருபிரிவையுடைத்தென்று உட்கொண்டு என் தோழி நெஞ்சழிவாலே கலங்கிய வருத்தத்தையுடையள், இத்தன்மையாள் ஒருநாள் ஒருபொழுது கூட்டம் இடையீடுபட நீர் பிரிவீராயின் உயிர் கொண்டு இருப்பாளோ? இராள். ஆதலாற் பெருமா! நின்னுடைய பொருளிடத்து நெஞ்சு பிணித்தலாற் செல்லுஞ் செலவைத் தவிர்வாயாக; எ - று.

இதனாற் தலைவற்கு இழிவு பிறந்தது.

இது †"நிகழ்ந்தது நினைத்தற் கேதுவு மாகும்." என்றதனாற் தலைவன்கண் நிகழ்ந்த வஞ்சனர் தலைவி நினைந்து பிரிவனென்று கருதுதற்கு நிமித்தமாயிற்று.

‡"செய்பொரு ளச்சமும் வினைவயிற் பிரிவு - மெய்யுற வுணர்தலுங் கிழவி பாராட்டே" என்பதனாற் தலைவன் தலைவியைப்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சஉ-ம், சூத்.
† ,, ,, அகத்திணையியல், சக-ம், ,,
‡ ,, ,, பொருளியல், கஅ-ம் ,,

பாராட்டியது அவட்குச் செய்பொருள் அச்சமும் வினைவயிற்பிரிவும் உணர்த்தி நின்றவாறு காண்க.

இது சுரிதகம்.

இஃது எட்டடித்தாவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல் லுந் தரவின் பாகமாகிய சுரிதகமும் நேரீற்றியற்சீரும் பெற்ற ஒத்தாழிசைக்கலி.

ரு. பாஅ லஞ்செவிப் பணைத்தாண் மாநிரை
மாஅல் யானையொடு மறவர் மயங்கித்
தூறதர் பட்ட வாறுமயங் கருஞ்சுர
மிறந்து நீர்செய்யும் பொருளினும் யாமுமக்குச்
சிறந்தன மாத லறிந்தனி ராயி
னீளிரு முந்நீர் வளிகலன் வௌவலி
னுள்விளைக் கழிந்தோர் போற லல்லதைக்
கேள்பெருந் தகையோ டெவன்பல மொழிகுவ
நாளுங் கோண்மீன் றகைத்தலுந் தகைமே ;

கல்லெனக் கவின்பெற்ற விழவாற்றுப் படுத்தபிற்
புல்லென்றகளம்போலப்புலம்புகொண் டமைவாளோ;

ஆள்பவர் கலக்குற வலைபெற்ற நாடுபோற்
பாழ்பட்ட முகத்தோடு பைதல்கொண் டமைவாளோ;

ஓரிரா வைகலுட் டாமரைப் பொய்கையு
ணீர்நீத்த மலர்போல நீநீப்பின் வாழ்வாளோ ;

எனவாங்கு,

பொய்ந்நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்
டெந்நாளோ நெடுந்தகாய் நீசெல்வ
தந்நாள் கொண் டிறக்குமிவ ளரும்பெற லுயிரே.

இது தலைமகன் பொருள்வயிற்பிரிவலெனக் கேட்ட தோழி தான் ஆற்றுளாய் நீர் செய்யும் பொருளினும் யாம் உமக்குச் சிறந் தேமென்பது நும் உள்ளத்து உளதெனின் நும்மை நாளும் புள்ளும்

விலக்குமெனவும், இவள் பிரிந்திருப்பார் இருக்குமாறு இருப்பாளல்லள், பிரிந்த அன்றே இறந்து படுவளெனவுஞ் சொல்லிச் செலவழுங்குவித்தது.

(இ-ள்.) பாஅ * * * நகைமே—எ-து, தத்தம் பகுதிகளையும் அழகிய செவிகளையும் பெருமையையுடைத்தாகிய தாள்களையும் மதத்தாலுள்ள மயக்கத்தினையுமுடைய யானைத்திரள்களோடே ஒழிந்த விலங்கின் திரள்களும் மறவரும் மயங்குகையினாலே துறைகளெல்லாம் வழிப்பட்டுப் பழையவழிகள் மயங்கின அரியகாட்டைக் கடந்து நீர் தேடும் பொருளினுங்காட்டில் யாங்கள் உமக்குச் சிறந்தேமாதலை நீரோ அறிந்திராயின், இனி யாங்கள் நீண்ட பெரிதாகிய கடலிலே காற்றுக் கலத்தைச் சிதற அடித்து விடுகையினாலே தாம் எடுத்துக்கொண்ட முயற்சி நிமித்தமாக நெஞ்சழிந்தோரைப்போலே நெஞ்சழிந்திருக்குமதல்லது நின்னோடு எங்ஙனம் பலவார்த்தைகளைக் கூறுவோம்? யாம் அங்ஙனம் இருக்கவும் நின்னை நாண்மீனும் மனத்தாற் குறித்துக்கொள்ளப்படும் புள்ளும் நகைத்தலையுஞ்செய்யும். நெடுந்தகாய் இன்னும் யாங் கூறுகின்றதனைக்கேள்; எ-று.

மயங்கியென்னுஞ் செய்தெனெச்சம் *"அம்முக்கிளவி" என்னுஞ் சூத்திரத்தாற் பிறவினை கொள்ளுமெனக் கூறினும். அதனான் உணர்க. நகைம் என்றது ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டு நின்றது. குறித்துக் கொள்ளப்படுதலிற் கோளென்றது ஆகுபெயர்.

இதனுட் குறிஞ்சிக்குரிய இறைச்சியாற் காட்டின்கொடுமை கூறிச் செலவழுங்குவித்தலின் அது திணைப்பொருட்கு உபகாரப்பட்டு நின்றவாறு உணர்க.

இனி "நாளுங் கொண்மின் நகைத்தலுந் தகையேம்" என்ற பாடத்திற்கு நாளையும் இன்னநாளென்று குறியும், அப்பொழுதுந் தகைத்தலையுஞ் செய்யேமென்க.

போதலல்லதையெனவே தோழிக்கு இடுக்கண் பிறந்தது.

இது தரவு.

கல்லெனச் * * * டமைவாளோ—எ-து, கல்லென்னும் ஓசை உண்டாக அழகுபெற்ற திருநாளை வழிப்படுத்திவிட்ட பிற்றைநாட் பொலிவழிந்த இடம் போலத் தனிமைகொண்டு ஆற்றியிருப்பாளோ ருத்தியோ?

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், கச-ம் சூத்.

ஆள்பவர் * * * டமைவாளோ—எ-து, நாட்டை ஆளுகின்ற அரசர்தாம் பின்பு கலக்கமுறும்படி, அவரால் அலைத்தலைப்பெற்ற நாடு பாழ்பட்டாற்போலே அழகு கெட்ட முகத்தோடே வருத்தத்தைக்கொண்டு ஆற்றியிருப்பாளொருத்தியோ ?

ஓரிரா * * * வாழ்வாளோ—எ-து, ஓர் இராப்பொழுதிடத்துத் தாமரையையுடைய பொய்கையுள் நீரால் நீக்கப்பட்டமலர் அவ்விராக்கால முழுவதும் வாடாமற் கிடந்தாற்போல நீ பிரிவையாயின் ஓர் இராப்பொழுதும் உயிர்கொண்டுவாழ்வாளொருத்தியோ ? எ - று.

ஓகாரம் மூன்றும் எதிர்மறை.

களமும் நாடும் பூவும் பின்னும் விழவாலும் அரசனாலும் நீராலும் பழைய பொலிவு பெறும். அவைபோலன்றி இவள் நீ நீத்தபொழுதே இறந்துபடுவளென்றலின், இதனாற் தலைவிக்குக் கையாறு நிகழுமென்றாள்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ-து, என்றுயாம்நினக்குச்சொல்லாநிற்க; எ-று.

ஆங்கு அசை * அச்சுரத்தையெனினுமாம்.

இது தனிச்சொல்.

பொய்ந்நல்கல் * * * லுயிரோ—எ - து, நெடுந்தகாய் ! பொய்யே இவளுக்கு அருளுதலை விரும்பிப் பாதுகாத்தலைக் கைவிட்டு நீ நயந்த அச்சுரத்திலே செல்வது எந்நாளிலே, அந்நாள் இவளுடைய பெறுதற்கரிய உயிரைக் கொண்டுபோம் ; எ - று.

புறப்படல் கைவிட்டு என்ற பாடத்திற்குக் கைவிட்டுப் புறப்படலென்க.

இதனாற் தலைவற்கு இழிவு பிறந்தது.

தாழிசையிற் கூறிய வினையுவமங்கள் திணைப்பொருட்கு உவமையாய் நின்றன.

† "பிரியுங் காலை யெதிர்நின்று சாற்றிய - மரபுடை யெதிருமுளப்படப் பிறவும்" என்றதனாற் புரிந்தனையென இறப்பும் இறக்குமென எதிரும் மரபிற் பிறழாமல் வந்தவாறுணர்க.

---

*அதுபொருள் கொள்ளுங்காற் பகரத்தை இரட்டிக்க.

†தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், கூ-ம் சூத்.

இது சுரிதகம்.

இஃது ஒன்பதடித்தரவுஞ் சிறுமைக்கு எல்லை கூறிய ஈரடித் தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் ஆசிரியத்திற்கு உரித் தென்ற மூவடிச்சிறுமையான் வந்த சுரிதகமும் பெற்று வந்த ஒத் தாழிசைக்கலி. (ச)

சரு. மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங் கருஞ்சுரத் தாரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்த
முண்ணீர் வறப்பப் புலர்வாடு நாவிற்குத்
தண்ணீர் பெறூஅத் தடுமாற் றருந்துயரங்
கண்ணீர் நனைக்குங் கடுமைய காடென்று
லென்னீ ரறியாதீர் போல விவைகூறி
னின்னீர வல்ல நெடுந்தகா யெம்மையு
மன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடி னதுவல்ல
தின்பமு முண்டோ வெமக்கு.

இது தலைவன் செலவுக்குறிப்பறிந்து நீர் செல்லுங் கடுஞ்சுர த்துத் துன்பத்திற்குத் துணையாக எம்மையும் உடன்கொண்டு சென் மினெனத் தலைவி கூறியது.

(இ - ள்.) காடு, குற்றத்தையுடைய மறவர்தம்முடைய மூ ட்டுவாயையுடைய அம்புகள், மலைவளர்ந்து போதற்கரிய காட்டிட த்து அரிய வழியைப் போவார்மேலே அழுந்துகையினாலே, உடலஞ் சுருங்கி உள்ளுண்டாகிய நீர் வற்றுகையினாலே உலர்ச்சியாலே வாடு கின்ற நாவிற்கு, மரையா மரலைத் தின்னும்படியாக மாரி வறக்கை யினாலே தண்ணீர் பெறாத மனத்தடுமாற்றத்தையுடைய வருத்தத்தை அவருடைய கண்ணீர் வீழ்ந்து அந்நாவினை நனைத்துப் போக்குங் கடுமையையுடையவென்று நீர் உடன்சேறலை மறுத்துக் கூறினால், யான் உயிர்தாங்கியிருத்தலாற்றாது இறந்து படுதலை அறியாதிருந்தீர் போல உடன்சேறலை மறுத்த இம்மொழிகளைக் கூறுதலாற் பெ ற்றதென்? நெடுந்தகாய்! இக்கூற்று நினக்கு உரிய நன்றாகிய நீர் மைகளை உடைய அல்ல! இனி நீ எம்மிடத்து அன்பு நீங்கப் பிரி தலைக் கருதாதே அவ்வாற்றிடைத் துன்பத்திற்கு எம்மையுந் துணை

யாகக் கொண்டு நும்மொடு போதலை ஆராயின் அதுவல்லது எமக்கு வேறோர் இன்பமும் உண்டோ? எ - று.

இதனாற் றலைவிக்குக் கைம்மிகலுந் தலைவற்கு இடுக்கணும் பிறந்தன.

* "பெற்றமு மெருமையு மரையு மாவே" என்றதனான் மரையாவென்றார்.

இதன்கண்ணே, இவள் தன் பெண்டன்மையாற் கூறத்தகாதது கூறக்கேட்ட யாம், உலக ஒழுக்கத்தை அறிந்து, இவளை உடன்கொண்டு செல்வேமாயின், இவள் தண்ணீர் பெறாத அருந்துயரம் நமக்கு மிக்க வருத்தத்தைத் தருமாகலின், இவடன்னை உடன்கொண்டு சேறல் எவ்வாற்றானுந் தகாதென்றும், யாம் அன்பு பெருகுமாறு சூழ்ந்த காரியத்தினை இவள் அன்பு அறும்படி சூழ்ந்தேமாகக்கருதி இறக்குமாறுகூறினளென்றும் உட்கொண்டு, இனி இவளை ஆற்றுவித்துப் பிரிவேமெனச் செலவழுங்கினமை தோன்ற நிற்றலின் வேறுமொரு பொருள் தோன்றி நின்றது.

இஃது † "ஒருபொருணுதலிய வெள்ளடி யியலாற் - றிரிவின்றி வருவது கலிவெண் பாட்டே" என்பதனாற் பாட்டிற் பொருளோடே வேறும் ஒருபொருள் தோன்றி நின்று பதினோரடியான் வந்த கட்டளைக்கலி வெண்பாட்டு. வேறும் ஒரு பொருள் தோன்றி நிற்றல் ஏனைப் பாக்கட்குஞ் சிறிதுளவேனும் பொருளாற் செய்யுள் வேறுபட்டுவரும் விதியின்மையின் ஆண்டு அவை ஆராய்ச்சியின்றாயிற்று. இது வெண்பாவாய் வருதலிற் குறித்த பொருளை மறையாது செப்பிக் கூறவேண்டும். இது குறித்த பொருளை மறைத்து வந்தமையானுந் தனக்கு உரிய வெண்டளையான் வந்தமையானுங் கலிவெண்பாட்டாயிற்று. ‡ "நெடுவெண் பாட்டே முந்நா லடித்தே - குறுவெண் பாட்டி னளவெழு சீரே". எனவே, நெடுவெண்பாப் பன்னீரடியின் இகவாவென்றலின் இதற்குப் பன்னீரடி பெருமையென்று கொண்டார். இக்கலித்தொகையின் இவ்விலக்கணம் பெற்றுவரும் பாட்டு எட்டுள. அவை வந்தவழிக் கூறுதும். பன்னீரடியின் இகந்து வருங் கலிவெண்பாட்டுக்களுக்கும் அவை வந்துழி அவற்றவற்றிலக்கணங் கூறுதும்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல் கூ0-ம் சூத்.
† ,, ,, செய்யுளியல், கநிச௯ம் ,,
‡ ,, ,, ,, கடுகூ-ம் ,,

தலைவி உடன் கொண்டுபோவெனக் கூறுதல் *"மரபுநிலை திரியா மாட்சிய" என்னும் அகத்திணையியற் சூத்திரத்து அமைத்தாம்.

இதனைத் தோழி கூற்றுக்கிக் கூறிற் காடு கடுமையவென்று உடன்சேறலை மறுத்துக் கூறினாற் தலைவி இறந்துபடும், அவள் இறந்துபடுதலை அறியாதிருந்தீர்போல இவை கூறலென்னெனக. (௫)

எ. வேனி லுழந்த வறிதுயங் கோய்களிறு
வானீங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅங்
கானங் கடத்தி னெனக்கேட்பின் யானென்
றுசாவுகோ வைய சிறிது;
நீயே, செய்வினை மருங்கிற் செலவயர்ந் தியாழநின்
கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே
இவட்கே, செய்வுறு மண்டில மையாப் பதுபோன்
மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே;
நீயே, வினைமாண் காழகம் வீங்கக் கட்டிப்
புனைமான் மரீஇய வம்பு தெரிதியே
இவட்கே, சுனைமா ணீலங் காரெதிர் பவைபோ
லினைநோக் குண்கண் ணீர்நில் லாவே;
நீயே, புலம்பி னுள்ளமொடு பொருள்வயிற் செலீஇய
வலம்படு திகிரி வாய்நீ வுதியே
இவட்கே, அலங்கிதழ்க் கோடல் வீயுகு பவைபோ
லிலங்கே ரெல்வளை யிறையூ ரும்மே;
எனநின்,
சென்னவை யரவத்து மினையவ ணீப்பிற்
றன்னலங் கடைகொளப் படுதலின் மற்றிவ
ளின்னுயிர் தருதலு மாற்றுமோ
முன்னிய தேளத்து முயன்றுசெய் பொருளே.

இது, பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகற்கு நீர் பிரிகின்றீரென்று யான்கூறத் தலைவி கேட்பின் அவட்கு அக்காலத்து நிக

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சகூ-ம் சூத்.

ழ்வனவற்றை நும்மோடு ஆராய்வதுடையேன் நீர் செய்யும் பொருள் இவள் உயிரையுந் தருகிற்குமோ எனச் செலவழுங்கக் கூறியது.

இஃது *" உடன்சேறல் செய்கையொ டன்னவை பிறவு - மடம்பட வந்த தோழிக் கண்ணும்" என்பதனுட் செய்கை கூறு கின்றது.

(இ - ள்) வேனி லுழந்த * * * சிறிது—எ - து, முதுவேனிற் காலத்தாலே வருந்தின உடல் சிறிதாக வருந்தும் ஓய்ந்த களிறு கள் மழைநீங்குதற்குக் காரணமான கொடுமையையுடைய ஊர்களிலே தண்ணீருண்டற்கு ஊரப்படாத பேய்த்தேரைத் தண்ணீரென்று அவாவுங் காட்டை நீர் போவீரென்று யான் கூறுதலைக்கேட்பின் நீர் செல்லுங்காலத்து அவட்கு நிகழ்வதொன்றை யான் சிறிது நும் மொடு உசாவுவேனோ? எ - று.

இதனுற் தலைவற்குச் சூழ்ச்சிபிறந்தது.

இது தரவு.

நீயே, செய்வினை * * * தீயே—எ - து, ஐயனே, நீசெல்கி ன்ற காரியத்திடத்தே செல்லுதலை மனத்தான் நிகழ்த்துகையினலே நின்னுடைய கையாலே எழுதி வழித்த வலிதாகிய வில்லினணைத் தடவாநின்றாய் ; எ - று.

யாழ, அசை.

உளர்தியென்னும் முன்னிலைவினை விகாரத்தால் நீண்டது.

இவட்கே, செய்வுறு * * * பசப்பூ ரும்மே — எ - து, இக் காலத்திவளுக்கு மறுவறச் செய்தலுறுகின்றதொரு மதியிடத்தே மேகம் பரக்கின்ற தன்மைபோல மறுவில்லாத ஒளியையுடைய முக த்தே பசப்புப் பரவாநிற்கும் ; எ - று.

செய்வுறுமண்டிலம், இல்பொருளுவமை.

நீயே, வினைமாண் * * * தெரிதியே—எ - து, நீ தொழின் மாட்சிமைப்பட்ட கைச்சாட்டை இறுகக்கட்டி நீ மருவிப்போந்த புனைதன்மாட்சிமைப்பட்ட அம்புகளைத் தெரியாநின்றாய் ; எ - று.

இவட்கே, சுனைமாண் * * * நில்லாவே—எ - து, இக்காலத் திவளுக்குச் சுனையிடத்து மாட்சிமைப்பட்ட நீலம் மழையை எதிர்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௯ - ம் சூத்.

கொள்ளுமவை நீர்சொரியுமாறுபோல வருத்தும் பார்வையினையு டைய மையுண்கண்ணீர் நில்லாவாய் வீழாநிற்கும் ; எ - று.

கண்ணீர்விழுமென இடத்துநிகழ்பொருளின் தொழில் இடத் துமேல் நின்றது.

இணைநோக்கும் பாடம்.

நீயே, புலம்பில் * * * நீவுதியே—எ - து, நீ பிரிகின்றேமெ ன்கின்ற தனிமையில்லாத நெஞ்சத்தோடே பொருளைத் தேடற்குப் போக வெற்றியுண்டாகின்ற சக்கரத்தினது வாயைத் துகள்போகத் துடையாநின்றாய் ; எ - று.

இவட்கே, அலங்கிதழ்க் * * * இறையூரும்மே—எ - து, இக் காலத்திவளுக்கு அசைகின்ற இதழினையுடைய கோடற்பூ ஊழ்த்து விழுகின்றவைபோல விளங்கும் அழகினையுடைய ஒளிபொருந்தின வளை இறையினின்றுங் கழலாநிற்கும் ; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனநின்சென்னவை * * * பொருளே—எ - து, நீசெல்கின் றது எமக்குக் குற்றத்தைச் செய்ய நின்னுடைய ஆரவாரத்தும் இத் தன்மையளானவள் தன்னுடைய நலம் நீ நீங்குவையாயின் இறந்து படுங் காலத்தாலே கைக்கொள்ளப்படுகையினாலே நின்னை ஒன்று வினவுகின்றேன், நீ கருதின தேயத்துச்சென்று முயன்று தேடும் பொருள் இன்பந்தருதலேயன்றி இவள் இனிய உயிரைத் தருதலைச் செய்யுமோ? எ - று.

என அசை.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

எனநின், தனிச்சொல் ; எஞ்சியது, சுரிதகம்.

"*தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து - மைஞ்சீ ரடுக்கியு மாறுமெய் பெற்றும் - வெண்பா வியலான் வெளிப்படத் தோன்றும்" என்பதனானுகி, நீயே இவட்கே என்னுஞ் சொற்கள் இடைநிலைப்பா ட்டோடு கூடி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டாயினும் அத்தரவு வெண்பாவாய் ஒழிந்தன வெண்பா அன்மையிற் கொச்சகமாயிற்று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சுகிசு - ம். சூத்.

அ. நடுவிகந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல்போல ஞாயிறு
கடுகுபு கதிர்மூட்டிக் காய்சினந் தெறுதலி
னுறலூறு கமழ்கடாத் தொல்கிய வெழில்வேழம்
வறனுழு நாஞ்சில்போன் மருப்பூன்றி நிலஞ்சேர
விறன்மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரஞ்
சொல்லா திறப்பத் துணிந்தனிர்க் கொருபொருள்
சொல்லுவ துடையேன் கேண்மின்மற் றைஇய ;

வீழுநர்க் கிறைச்சியாய் விரல்கவர் பிசைக்குங்கோ
லேழுந்தம் பயன்கெட விடைநின்ற நரம்பறூஉம்
யாழினுந் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ ;

மரீஇத்தாங்கொண்டாளைக்கொண்டக்காற்போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந்
திருவினுந் நிலையிலாப் பொருளையு நச்சுபவோ ;

புரைதவப் பயனோக்கார் தம்மாக்க முயல்வாரை
வரைவின்றிச் செறும்பொழுதிற் கண்ணோடா துயிர்
மரைசினுநிலையிலாப்பொருளையுநச்சுபவோ ; [வௌவு

எனவாங்கு,

நச்சல் கூடாது பெரும விச்செல
வொழிதல் வேண்டுவல் சூழிற் பழியின்று
மன்னவன் புறந்தர வருவிருந் தோம்பித்
தன்னகர் விழையக் கூடி
னின்னுறல் வியன்மார்ப வதுமனும் பொருளே.

இது சொல்லாது பிரியலுற்ற தலைவன் குறிப்பறிந்து தோழி பொருளது நிலையாமை கூறி அவளோடுகூடிச் செல்கின்ற இல்வாழ்க்கைச்செலவே பொருளென அவன்செலவழுங்கக் கூறியது.

(இ - ள்) நடுவிகந்து * * * ஜய—எ - து. நடுவுநிலையைக் கைவிட்டு நீங்கி அருளில்லாத அமைச்சன் தன் மனதிற்கிடந்த காரியத்தை மனத்தினின்றுந் தோற்றுவித்த அது கேட்டுக் கொடுந்தொழிலைச் சூழ்ந்த அரசனது கொடுங்கோல் சுடுமாறுபோலப் பகலோன்

கடுகிக் காய்கின்ற கிரணங்களைச்செலுத்திச் சினத்தாற்சுடுகையினாலே முன்பு வண்டுகள் உறுதலையுடைத்தாய் ஊறுகின்ற கமழும் மதத்தினையுடைத்தாய் இப்பொழுது கெட்ட அழகையுடைய யானைகள் ஈரமற்ற நிலத்தை உழுகின்ற கலப்பைகள்போலக் கொம்புகளை ஊன்றிக் கையை நிமிர்த்து நிலத்தே கிடவாநிற்க வெற்றியையுடைய மலைகள் வெம்புதலைச்செய்த போதற்கரிய அரிய வெய்யகாட்டை எங்களுக்குச்சொல்லாதே போகத்துணிந்த நுமக்கு ஒரு காரியத்தினைக் கூறுந் தன்மையையுடையேன், அதனைக்கேட்பீராக; எ - று.

இதனாற் றோழிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

வாங்க என்றது "விருத்திவாங்க" என்றது போல் நின்றது; உறல், வாயிடத்தேவந்து உறுதலுமாம்.

பொருள், ஆகுபெயர்; மற்று அசை.

இது தரவு.

வீழுநர்க் * * * நச்சுபவோர்—எ - து, ஐயனே, விரும்புவார்க்கு நேயமாய் விரலாலே வாசிக்கப்பட்டு ஒலிக்கும் நரம்பு எழுந்தம்முடைய பயன் இன்றாம்படி தானக்கோலின் அகப்பட்டு இடைநின்ற நரம்பு அற்றுப்போம் யாழினுங்காட்டில் நிலைபேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ? நச்சார்காண்; எ-று.

மரீஇ * * * நச்சுபவோ—எ - து, தாம் மருவி மனத்தாற்கொண்டவர்களைத் தம்மனங்கொண்ட காலம்போலாகாமற் பிரியுமிடத்துப் பிறர்இகழும்படி அவர்க்கொரு வலியின்றாக அவர்கள் அப்புறமாக மனம் மாறுந் திருமகளினுங்காட்டில் நிலைபேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவர்களோ? நச்சார்காண்; எ - று.

தாம், பன்மையொருமைமயக்கம். தானும்பாடம்.

கொண்டக்காலென்னும் பெயரொச்சத்திற் கால் ஈண்டுக் காலங்காட்டிற்று. கொண்டக்காற்போலாதென்றது தான்வருதற்கு முன்பு அவர்நின்ற நிலைமையுங் கெடுத்துப்போமென்னும் நிலையிற்று.

புரைதவ * * * நச்சுபவோ—எ - து, தமக்கு உயர்ச்சிமிகும்படியாகத் தாம் பெறும் பயனைப் பாராதே அரசராக்கத்தை முயன்றும், அமைச்சரைக் கோபிக்கும்பொழுது நங்காரியத்தினை முயன்றவரொன்று ஒருவரைவின்றிப் பழமையையும் பாராதே பொரு

ண்முதலியனவன்றி உயிரைக்கொள்ளும் அரைசினுங்காட்டில் நிலை பேறில்லாத பொருளையும் அறிவுடையோர்கள் நச்சுவார்களோ? நச்சார்காண்; எ - று.

அத்தன்மையான அரசனும் உயிரை வெளவிய அன்றே கெடுவனென்றார்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்று யான்சொல்லாநிற்க; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

நச்சல் * * * பொருளே—எ - து, பெருமா, பொருளை நச்சுதல் நினக்குப் பொருந்தாதால் ஆராயிற் பழியின்றாக இச்செலவை நீ தவிர்தலை யான்விரும்புவேன், அரசன் காக்க வருகின்ற விருந்தினைப் பாதுகாத்துத் தன்மனைவி விரும்பும்படி அவருடன் கூடியிருக்கில் இனிய முயக்கத்தையுடைத்தாகிய அகற்சியையுடைய மார்பனே நிலைபெறும் பொருள் அதுகாண்; எ - று.

நகர், ஆகுபெயர்.

இதனாற் தலைவற்குக் கருதுதல்பிறந்தது; தோழிக்குச் சூழ்ச்சிபிறந்தது.

இது பழியின்றெனத் தாழிசைப் பொருள்களைக்கொண்டு பின்பு மன்னவன் புறந்தர வருவிருந்து பொருளேயெனப் போக்கியற் பொருளையுங்கொண்டு இற்ற சுரிதகமும் ஏனை உறுப்புக்களும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. *"தரவிய லொத்தும்" என்னுஞ் சூத்திரத்துப் புணரிர் என்பதனாற் போக்கியற் பொருளுங் கொண்டு புடைபடாது வந்தது. (எ)

அ. எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமு முரைசான்ற முக்கோலு
நெறிப்படச் சுவலசைஇ வேறோரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயன்மாலைக் கொளைநடை யந்தணிர்
வெவ்விடைச் செலன்மாலை யொழுக்கத்தி ரிவ்விடை
யென்மக ளொருத்தியும் பிறண்மக னொருவனுந்

* தொல்காப்பியம் பொருளதிகாரம் செய்யுளியல். கஉஎ-ம் சூத்.

தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சிய
ரன்னா ரிருவரைக் காணிரோ பெரும
காணே மல்லேங் கண்டனங் கடத்திடை
யாணெழி லண்ணலோ டருஞ்சுர முன்னிய
மாணிழை மடவர ருயிர்நீர் போறிர்;

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினு மலைக்கவைதா மென்செய்யு
நினையுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்த மணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினு நீர்க்கவைதா மென்செய்யுந்
தேருங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யுஞ்
சூழுங்கா னும்மக ளுமக்குமாங் கனையளே;

எனவாங்கு,

இறந்த கற்பினாட் கெவ்வம் படரன்மின்
சிறந்தானை வழிபடஇச் சென்றன
ளறந்தலை பிரியா வாறுமற் றதுவே.

இஃது உடன்போய தலைவிபின் சென்ற செவிலி இடை
சுரத்து முக்கோற்பகவரைக் கண்டு இவ்வகைப்பட்டாரை ஆண்டுக்
காணீரோவென வினவியாட்கு, அவரைக் கண்டு அஃதறமெனவே
கருதிப்போந்தேம், நீரும் அவர்திறத்து எவ்வம்பட வேண்டாவென
எடுத்துக்காட்டி, அவர் தெருட்டியது.

(இ - ள்.) எறித்தரு * * * போறிர்—எ - று, பெருமா!
அந்தணீர்! உறியிலே தங்கின கமண்டலத்தையும் அரி அயன் அர
னென்னும் மூவரும் ஒருவரொன்று சொல்லுதல் தன்னிடத்தே அ
மைந்த முக்கோலையும் முறைமைபடத் தோளிலே வைத்து எறித்
தலைச்செய்கின்ற ஞாயிற்றின் கதிர்களைத் தாங்குகையினாலே எடுக்கப்
பட்ட குடைநிழலிலே, வெவ்விய காட்டிடத்தே போதலை இயல்பா
கவுடைய ஒழுக்கத்தினையுடையீராதலான் உம்மை வினவுகின்றேன்;

இக்காட்டிடத்து என்னுடைய மகளொருத்தியும் வேறொருத்தி மக னொருவனும் பிறரறியாமற் தங்களிலே கூடின தாங்கள் இப்பொழுது பிறர் அறிந்த கூட்டத்தினையுடையராயினர் ; அத்தன்மையார் இருவ ரைக் காணாதிருந்தீரோ? இக்காட்டிடைக் காணாதிருந்தேம் அல்லேம், கண்டு அஃது அறமென்றே கருதிப்போந்தேம், ஆண்மக்கட்குக் கூறும் அழகினையுடைய தலைவனோடே இவ்வரிய சுரத்தைப் போகக்கருதிப் போந்த மாட்சிமைப்பட்ட அணியினையுடைய மடப்பத்தையுடையா ளுக்குத் தாயாந்தன்மையை உடையீர்போலே இருந்தீர் ; எ - று.

அரியயனரனென்னும் மூவரையும் ஒருவனாகவல்லது வே றாக நினையாத நெஞ்சத்தாலே ஐம்பொறியும் நமக்கு ஏவல் செய்தலை இயல்பாகவுடைய் கோட்பாட்டையும் உமக்குரிய ஒழுக்கத்தையு முடைய அந்தணீரொன்க. குறிப்பு, ஆகுபெயர்.

பெருமாவென்றாள் அவர்கள் ஆசிரியனாகிய பெரியோனை. அந்தணர் அவன்மாணாக்கர். அவர்களைப் பெருமா அந்தணீரொன விளித்தாள்; பெயர்கள் ஒருவனை ஒருவன் ஆற்றுப்படுத்த செய்யு ளின்மையின் முன்னிலை சுட்டிய ஒருமைக்கிளவி பன்மையொடு முடிந்ததல்லாமையுணர்க.

காணிரோ ? குறுகினின்றது. கண்டேமென்றமற் காணேமல் லேங் கண்டனமென்றதனால் அங்ஙனம் போகின்றவரை அறிந்து விலக்கல் அறமன்றென்று போந்தேமாகக் கொள்க. போறிரொன்றார், தேடிவருவாள் செவிலியென்பது உணர்ந்து.

இது தரவு.

பலவுறு * * * கனையளே—எ - து, நறியனபலவுங் கூடும் நறிய சந்தனமரங்கள் மெய்ப்படுப்பார்க்குப் பயன்கொடுப்பதல்லது மலையிடத்தே பிறந்தனவாயினும் அச்சந்தனங்கடாம் அம்மலைக்கு என்னபயனைக் கொடுக்கும் ? ஆராயுங்காலத்து நும்முடையமகள் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள் ; எ - று.

சீர்கெழு * * * கனையளே—எ - து, தலைமை பொருந்திய வெள்ளிய முத்துக்கள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது கடலிட த்தே பிறந்தனவாயினும் அம்முத்தங்கடாம் அக்கடலுக்கு என்ன பயனைக் கொடுக்கும் ? ஆராயுங்காலத்து நும்முடைய மகளும் பயன் படும் பருவத்து நுமக்கும் பயன்படாள் ; எ - று.

எழ்புணர் * * * கிளையவே—எ - து, எழுநரம்பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவார்க்குப் பயன்கொடுத்தலல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசைகடாம் அந்த யாழுக்கு என்னபயனைக் கொடுக்கும்? ஆராயுங் காலத்து நும்முடைய மகள் பயன்படும் பருவத்து நுமக்கும் பயன்படாள்; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச்சொல்.

இறந்த * * * மற்றதுவே—எ - து, ஆதலான் மிக்க கற்பினையுடையாளுக்கு வருத்தமுறுதே கொள்ளுமின். இருமுதுகுரவரிலுஞ் சிறந்த கணவனை வழிபட்டு அவன் பின்னே போனாள். இம்மையில் இங்ஙனங் கற்புப் பூண்டு நிகழ்த்தும் இவ்வில்லறமே அறங்களிற் றலையான அறம்; மறுமையில் இவ்விருவரும் நீங்காமற் சுவர்க்கத்திலே செல்லும் வழியும் அவ்வழிபாடே; எ - று.

இது சுரிதகம்.

படரன்மின் ஒருசொல், படர்மினென்பதன் மறையாதலின்.

அறத்திடத்து நின்று நீங்காதவாறென்று பொருள்கூறிற் தலைப்பிரியாவாறெனப் பகரவொற்றுப் பெறுதல்வேண்டும். *"ஐகார விறுதிப் பெயர்நிலை முன்னர் - வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே" என்றலின். மற்று வினைமாற்றாய் மறுமையை உணர்த்திற்று. ஆறுமென்ற உம்மை சிறப்பு.

இதனாற் செவிலிக்குத் தன்மையென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

† "நூலே கரக முக்கோல் மணையே - யாயுங் காலை யந்தணர்க் குரிய" என்பதனாற் கரகமும் முக்கோலுங் கூறினார்.

இது பதினோரடித்தரவும் மூன்றடித் தாழிசையும், அசைநிலையாகிய தனிச்சொல்லுஞ் சிறுமைக்கெல்லை கூறுமையின் ஆசிரியத்திற்குக் கூறிய மூன்றடிச் சிறுமையும் பெற்ற சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (௮)

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், ௭௮-ம், சூத்.
† ,, பொருளதிகாரம், மரபியல், ௭௦-ம், ,,

கo. வறியவ னிளமைபோல் வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற் சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய் திசைகெட்டா னிறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப விரிகதிர் தெறுதலி
னலவுற்றுக் குடிகூவ வாறின்றிப் பொருள் வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற் கோல்கோடி யவனிழ
லுலகுபோ லுலறிய வுயர்மர வெஞ்சுரம் ;

இடைகொண்டு பொருள்வயி னிறத்திநீ யெனக்கேட்பி
னுடைபுநெஞ்சுகவாங்கேயொளியோடற் பாண்மன்னோ
படையமை சேக்கையுட் பாயலி னறியாய்நீ
புடைபெயர்வா யாயினும் புலம்புகொண் டினைபவள்;

முனிவின்றி முயல்பொருட் கிறத்திநீ யெனக்கேட்பிற்
பனியகண் படலொல்லா படர்கூர்கிற் பாண்மன்னோ
நனிகொண்ட சாயலா ணயந்துநீ நகையாகத்
துனிசெய்து நீடினுந் துறப்பஞ்சிக் கலுழ்பவள் ;

பொருணோக்கிப் பிரிந்துநீ போகுதி யெனக்கேட்பின்
மருணோக்க மடிந்தாங்கே மயல்கூர்கிற் பாண்மன்னோ
விருணோக்க மிடையின்றி யீரத்தி னியன்றநின்
னருணோக்க மழியினு மவலங்கொண் டழிபவள் ;

எனவாங்கு,

வினைவெஃகி நீசெலின் விடுமிவ ளுயிரெனப்
புனையிழாய் நின்னிலை யான்கூறப் பையென
நிலவுவே ணெடுந்தகை நீளிடைச்
செலவொழிந் தனனாற் செறிகநின் வளையே.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி, இவ்வகைப் பட்ட சுரத்தைப் பொருள் காரணமாகப் பிரிகின்றீரெனக் கேட்பின் இவ்வகையாகற்பாலளெனச் சொல்லிச் செலவழுங்குவித்தமை, தலைமகட்குச் சொல்லியது.

(இ - ள்.) வறியவள் * * * வெஞ்சுரம்—எ - து, பிரமசரியங் காத்தலான் இளமைப் பயன்கொள்ளாது வறியனுனவன் இளமைச்

செவ்வியின்றி இருக்குமாறுபோலத் தளிர்கள் வாடின கொம்புகளை யுடையவாய்க், கொடுத்தற்கு மனஞ் சிறியனானவனுடைய செல்வந் தன்னைச் சேர்ந்தவர்தம்மைப் பாதுகாவாதவாறுபோலத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலின்றாய், யாவரிடத்தும் உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்குசெய்து பின்பு புகழில்லையானவனுடைய முடிவுகாலத்து அவன் கிளையேயன்றி அவனுங் கெடுமாறுபோல மரஞ் சினையேயன்றி வேரோடே நின்று வெம்பும்படியாக ஞாயிற்றினுடைய பரந்த கதிர்கள் சுடுகையினாலே வருத்தமுற்றுக், குடிமக்கள் கூப்பிடும்படி கொலைத்தொழிலுக்கு அஞ்சாத அமைச்சராலே நெறியன்றிப் பொருளை வாங்கிக்கொண்டு செங்கோல் வளைந்த அரசனுடைய குடைநிழலிற் றங்கிய உலகம்போலே உலறின உயர்ந்த மரங்களுடைய வெய்ய காட்டை; எ - று.

சினையவாய், நிழலின்றாய், வெம்பவென்க. தெறுகையினாலே உலறிய மரமென்க.

இது தரவு.

இடைகொண்டு *** டினைபவள்—எ - து, பதம்படுத்தல் பொருந்திய படுக்கையிடத்தே துயிலிடத்து நீ அவள் வருத்தம் அறியாயாய் அவள் முயங்கிய கையை விட்டு நீங்குவாயாயினுந் தனிமைகொண்டு வருந்தும் அவள் கூட்டத்திற்கு இடையே பிரிதலை மனத்தேகொண்டு வேற்றுநாட்டிடத்தே நிலைநில்லாத பொருளினிடத்தே நீ போவையென்று யான் கூறக்கேட்பின் நெஞ்சழிந்து கெட்டுப்போக மிகவும் ஒளிகெடுவாளோ? இறந்துபடுவாளே; எ - று.

இனையவள் ஒளியோட்பாலளோவென்க. படையாவன "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண - முறுதுவி தாமிவை யோ ரைந்து." என்பனவாம்.

ஒளியோடற்பாள் முற்றுவினைத்திரிசொல். அறியாய், வினையெச்சமுற்று. ஓகாரம், எதிர்மறை.

முனிவின்றி *** கலுழ்பவள்—எ - து, மிகுதியைக்கொண்ட மென்மையையுடையவள் நீ ஓர் விளையாட்டை விரும்பி விளையாட்டாக ஒரு நீக்கத்தைச்செய்து அதிலே சிறிது பொழுது நீட்டிப்பினும் அத்துணை நீக்கத்துக்கு அஞ்சிக் கலங்குகின்றவள் யாம் இவளைப் பிரிகின்றேமென்னும் வெறுப்பின்றி முயன்று தேடும் பொருள் காரணமாக நீ போவையென்று யான் கூறக்கேட்பின் நீனாயுடை

யனவாகிய கண்கள் மிகவும் உறக்கத்தைப் பொருந்தாவாய் நினைவு மிகுவாளோ? இறந்துபடுவாளே; எ - று.

பொருணோக்கி * * * டழிபவள்—எ - து, மனத்திற்கு இருளைத் தருகின்ற பார்வை இடையின்றி அருளிடத்துச் சென்றபார்வை நீங்கினும் வருத்தங்கொண்டு நெஞ்சழிபவள் நீ பொருளை நன்றென்று கருதித் தன்னைப்பிரிந்து அவ்விடத்தே போவையென்று யான் கூறக் கேட்பிற் கண்டார் மருளும் அழகுகெட்டு மிகவும் மயக்கம் மிகுவாளோ? இறந்துபடுவாளே; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச் சொல்.

வினைவெஃகி * * * வளையே—எ - து, புனைந்த பூணினையுடையாய், இவளுடைய உயிர் நீ பொருளைத்தேடுதலை விரும்பிப் போகிற் தானும் போமென்று நின் பிரிவாற்றாமையை யான் சொல்லப் புகழ்ச்சி நிலைபெறும் வேலினையுடைய நெடிய தகையினையுடையான் நீண்ட வழியிடத்துப் போக்கைப் பையெனத் தவிர்ந்தனன், இனி நின் வளை கழலாதிருப்பனவாக; எ - று.

ஆல், அசை.

இதனாற் தலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன:

இது சுரிதகம்.

இஃது எழுதரவும் நான்கடித்தாழிசையும் அசைநிலையான அடைநிலைக்கிளவியும் நான்கடிச்சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (க)

கக. அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினி;

அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுட்
டுடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண் ணுங் களிறெனவு முரைத்தனரே;

இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீந்த வுலவையாற்
றுன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலாற்
றுன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டு
ளின்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத் [ரோ
தன்னிழலைக்கொடுத்தளிக்குங்கலையெனவு முரைத்தன

எனவாங்கு,

இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே.

இது தலைவி மூன்றன்பகுதி தலைவன்கூறிப் பொருள்வயிற் பிரிகின்ற காலத்துக் காடு கடியவாயினும் இவ்வகைப்பட்டனவும் உளவென்று கூறினார், அவை காண்டலின் வருவரெனத் தோழிக்குக் கூறி அதற்கு நிமித்தமுங் கூறி ஆற்றுவித்தது.

மூன்றன்பகுதி கூறுதலாவது அறத்திற்றாற் பொருளாக்கி அப்பொருளாற் காமம் நுகர்வேனென்றலாம். உடைமையது உயர்ச்சி கூறிப் பிரிந்தானெனக் கிளவி கூறிற் பொருள்வயிற் பிரிதலின்றாம், அது பொருள்வயிற்பிரிவை விலக்குமென்றலின்.

(இ - ள்.) அரிதாய * * * களித்தலும்—எ - து, தம்மை அருள்பண்ணிவந்த அந்தணர் தாபதர் முதலியோருக்குப் பெறுதற்கரிதாய அறஞ்செய்தலைப் பொருந்தி வேண்டுவன கொடுத்தலும்; எ - று.

இஃது அருளென்னும் மெய்ப்பாடு.

பெரிதாய * * * தெறுதலும்—எ - து, பெரிதாய பகைகளை யெல்லாம் வென்று அச்செருக்கினாற் தம்மை வழிபடாதாரை அழித் தலும்; எ - று.

காதலிற் புரிவமர் புணர்ச்சியுந் தருமென—எ - து, முற்பிறப் பில் இருவர்க்கும் உண்டான காதலினாலே இப்பிறப்பில் மனம்பொ ருந்துதல் அமர்ந்தகூட்டத்தினையுந் தருமென்று நமக்கு கூறி; எ - று.

*"துன்புறு பொழுதினு மெல்லாங் கிழவன் - வன்புறுத் தல்லது சேற லில்லை" என்பதனாற் தலைவன் வற்புறுத்திச் செல்கின்றமை இதனாற் பெற்றாம்.

பிரிவெண்ணிப் * * * கேளினி—எ - து, பொருள்வயிற்பிரி வை நன்றென்றெண்ணிப் போன நம்முடைய காதலர் வருவர்போ லே இருந்தது; விளங்குகின்ற பூணினையுடையாய் யான் அவர் வர வினைத் துணிவல்; இப்பொழுது அதற்குக் காரணங் கேள்; எ - று.

பொருள் அளித்தலுந் தெறுதலும் புணர்ச்சியுந் தருமென எ ண்ணிச்சென்ற காதலரொன்க. இதனாற் போந்த பொருள் அருளியோ ர்க்கு அளித்த அறத்தாலே பேறுணை அழித்துப் பொருளைத்தேடி அப் பொருளாற் புணர்ச்சிபெறுவேனென மூன்றன்பகுதிகூறினாயிற்று.

இது தரவு.

அடிதாங்கும் * * * மூனாத்தனரோ—எ - து, பொன்னாற் செ ய்த கனவிய குழையினையுடையாய் காடுகள் நெருப்புப் போன்ற வெம்மையாலே அடிபொறுக்கும் அளவின்றிக் கடியவாயிருக்குமெ ன்று சொன்னார்; சொல்லிய காட்டகத்தே களிறு, துடிபோலும் அடியையுடைய யானைக்கன்றுகள் இழிந்து தாயுந் தந்தையும் உண் ணவேண்டுமென்று கருதாது கலக்கிய சிறிய நீரை, முதற் பிடியை யூட்டிப் பின்பு தானும் உண்ணுமென்றுஞ் சொன்னார்; எ - று.

இன்பத்தின் * * * மூனாத்தனரோ—எ - து, காடுகள் இலை பசுமை இகந்து திந்த கொம்புகளாலே இன்பத்தினின்று நீங்கிச் சென்றாரைத் துன்பமுறுத்துந் தகைமையையுடையவாயே இருக்கு மென்று சொன்னார்; சொல்லிய காட்டிடத்தே புறவுகள் தாம் அன் புகொண்ட மடப்பத்தையுடைய பெடைகள் வெம்மையால் இளைத்த

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சக-ம், சூத்.

வருத்தத்தைத் தஞ் சிறகை விரித்து அதன் நிழலாலே அவ்வெம்மை யைத் தீர்க்குமென்றுஞ் சொன்னார் ; எ - று.

சிறகர், அர் சுற்றுப்போலி.

கன்மிசை * * * முளைத்தனவோ—எ - து, காடுகள் ஞாயிற்றி னுடைய செறிந்தகதிர்கள் மலையின்மேனின்ற மூங்கில்கள் வாடும் படி சுடுதலாலே செல்வார்க்குச் சேருதலரிய தகைமையினையுடைய வாயே இருக்குமென்று சொன்னார்; சொல்லிய காட்டிடத்தே கலை மான் இனியநிழலில்லாதபடியாலே வருந்திய மடப்பத்தையுடைய தன் பிணைக்குத் தான் நின்று தன்நிழலைக் கொடுத்து உயிரை அளியா நிற்குமென்றுஞ் சொன்னார் ; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச்சொல்.

இனைநலம் * * * லிடனே—எ - து, இங்ஙனம் அவர்க்கு அரு ள்வந்தவை காட்டுதலின் அவர் வருந்துதற்குக் காரணமான நன் மைகளுடைய காட்டைப்போனவர் நமது புனைந்த நலத்தைக் கெடுக் குமவரல்லர்காண். அதற்குக் காரணம் என்னெனின் நம்மனையிடத் துப் பல்லியும் நன்றாகிய இடத்தே அவர்வரவுக்குப் பொருந்திக்கூறின. நல்ல அழகையுடைய மையுண்கண்ணும் இடந்துடியாநிற்கும்; எ - று.

பல்லி இசைத்தது பிறிதின்கட் தோன்றிய ஆக்கம் பற்றிய வி யப்பு. இடந்துடித்தது தன்கட் தோன்றிய ஆக்கம்பற்றிய வியப்பு.

பல்லியுங்கண்ணுமென்னும் உம்மைகள் எச்சவும்மை. இனைந லமென்பதற்கு இனையநலமென்பது விகாரப்பட்டதென்பாரும் உளர்.

இனையநலமென்றுபாடமாயின் இத்தன்மையவாய நலமென்க.

இப்பாட்டுப் * "புணர்ந்துடன் போகிய கிழவோண் மனையி ருந் - திடைச்சுரத் திறைச்சியும் வினையுஞ் சுட்டி - யன்புறு தக்க கிளத்த லானே - கிழவோன் செய்வினைக் கச்ச மாகும்" என்னுஞ் சூத்திரத்துப் புணர்ந்துடன் போகாத தலைவி மனைக்கணிருந்து தலை வன் அன்புறுத்தத்தக்கன கூறக் கேட்டுத் தலைவன் தன்மேல் அன் புறுதற்குத் தக்க கருப்பொருளைக் கூறித் தலைவன் செய்வினை முடி

* தொல்காப்பியம், பொருளதிகாரம் கற்பியல், எ - ம் சூத்.

யாது வருவனென்னும் அச்சம் பிறவாமல் மீண்டு வருவனெனத் துணிந்தே கூறுமென்றலிற் புனைநலம் வாட்டுநரல்லரென வரவு கருதிக் கூறினாள். ஆற்றுவிக்குந்தொழில் வருவர்கொல்லென ஐயுற்றுக் கூறலாகாமையிற் றோழிகூற்றன்மை உணர்க.

இது சுரிதகம்.

இஃது ஐந்தடித்தரவும் நாலடித்தாழிசையும் அசைநிலையாகிய இடைநிலைக்கிளவியும் நான்கடிச்சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (௧௦)

௧௨. இடுமு ணெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரந் தேய்த்தார் பதுக்கை நிரைத்த
கடுநவை யாராற் றறுசுனை முற்றி
யுடங்குநீர் வேட்ட வுடம்புயங் கியானை
கடுந்தாம் பதிபாங்குக் கைதெறப் பட்டு
வெறிநிரை வேறாகச் சாரச் சாரலோடி
நெறிமயக் குற்ற நிரம்பா நீடத்தஞ்
சிறுநனி நீதுஞ்சி யேற்பினு மஞ்சு
நறுநுத னீத்துப் பொருள்வயிற் செல்வோ
யுரனுடை யுள்ளத்தை செய்பொருண் முற்றிய
வளமையா னாகும் பொருளிது வென்பா
யிளமையுங் காமமு நின்பாணி நில்லா
விடைமுலைக் கோதை குழைய முயங்கு
முறைநாள் கழித லுறுமைக் காண்டை
கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லைப்
போற்றாய் பெருமநீ காமம் புகர்பட
வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற் போகுவாய்
கூற்றமு மூப்புமறந் தாரோ டொராஅங்கு
மாற்றுமைக் கொண்ட வழி.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி காட்டது கடுமையுந் தலைவியது மென்மையும் "நாளது சின்மையும் இளமையது அருமையுந் தாளாண்பக்கமுந் தகுதியதமைதியும் அன்பினதகலமும் அகற்சியதருமையும்" கூறிச் செலவழுங்குவித்தது.

(இ - ள்.) கட்டு முள்ளால் இடும் நெடிய வேலிபோலக் கொலைத்தொழிலையுடைய வேடர் வில்லாலே கொல்லப்பட்டவருடைய உடலம் மறையவிட்ட இலைக்குவை நிரைத்துக் கிடக்கின்ற கடியகுற்றம் நிறைந்த வழியில் நீர் அறுங் கடுஞ்சுனையைச் சூழ்ந்து தண்ணீருண்டலை விரும்பிய உடம்பு வருந்தின யானைகள் தாஞ் சேரப்பதிந்து அவ்விடத்துக் கைகள் சுட்டப்பட்டு ஒழுங்குபட்டதிரள்கள் வெவ்வேறும்படி மலைச்சாரல் தோறும் ஓடுகையினாலே பழையவழிகள் மயங்கப்பட்ட தொலையாத நீண்ட காட்டைப், பண்டு துயில் கொள்ளுங் காலத்தின் மிகச் சிறிது பொழுது தாழ்த்துத் துயில் கொண்டெழுந்திருப்பினும் இதுவும் ஒன்றுடைத்தென்று அஞ்சும் நறிய நுதலையுடையாளைக் கைவிட்டுப் பொருளிடத்தே வேட்கை நிகழ்ந்து போகின்றவனே, நீதான் வலியுடைத்தாகிய மனத்தையுடையை; தேடும்பொருளைத் தேடிமுடித்த செல்வத்தாலே உண்டாகும் பொருள்தான் இவ்வின்பமென்று கூறுகின்றவனே, நீ அப்பொருளைத் தேடிவரக் குறித்த காலத்தளவும் இளமையுங் காமமும் நின் கையிடத்து நில்லாவாய் நாடோறுங் கழியும்; அதுவேயன்றி இறக்கும் நாள் இதுவென்று உலகத்திலே அறிந்தவர்களும் இல்லை; காதலான் முலையிடையிற் கோதை குழையும்படி முயங்கும் முறைமையினையுடைய நாள்கள் இன்னும் அப்பயனின்றிப் போதலுறுமையை நெஞ்சாலே காண்பாய்; காமதன்மங் குற்றப்படும்படி அதனோடு வேறுபாடுகொண்டு பொருளிடத்தே வேட்கை நிகழ்ந்து போகின்றவனே, பெருமா, நீ தமக்கு வருகின்ற கூற்றத்தையும் மூப்பையும் மறந்திருக்கின்ற அறிவில்லாதாருடனே ஒருபடிப்பட்ட மாறுபாட்டினைக்கொண்ட நன்மக்கள் நிற்கின்ற வழியினை நினக்கு வழியாகப்பேணாய்; எ - று.

முதுவேனிற் காலங்களெல்லாம் நீர் அறுதலின் அறுசுனையென நிகழ்காலத்தாற் கூறினர். கடுமை ஈண்டு வெம்மை மேற்று. இனிக், கடுந்தாகமென வடமொழித் திரிபாக்கி விகாரமாய் நின்றதென்பாரும் உளர். தாகத்தாலே பதிபென்க.

ஓடியென்னுஞ் செய்தெனெச்சம் * "அம்முக் கிளவியும்" என்னுஞ் சூத்திர விதியாற் பிறவினை கொண்டது.

அஞ்சுமென்றது பிரியுமாறு நினைந்து முன்னர்த் துயிலின்றிப் பின்னர்த் தாழ்க்கத் துயின்றானென்று அஞ்சினளென்க.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், ௩௪-ம் சூத்.

காண் என்னும் முன்னிலைவினை காண்டையெனத் திரிந்தது.

மாற்றுமைக்கோடல் கூற்றமும் மூப்பும் உண்டென்றிருத்தல்.

'கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை' இது நாளது சின்மை; 'இளமையுங் காமமு நின்பாணி நில்லா' இஃது இளமையதருமை; 'உரனுடையுள்ளத்தை' இது தாளாண்பக்கம்; 'செய்பொருண் முற்றிய' இது தேடும் முறைமையிற் தேடவேண்டுமென்றலிற் தகுதியதமைதி; 'சிறுநணி நீது * * * செல்வோய்' இஃது அன்பினதகலம்; 'இடைமுலைக் * * * காண்டை' இஃது அகற்சியதருமை; 'செய்பொருண் முற்றி * * * என்பாய்' என்பது செல்வத்தாற் பிறந்த உவகை, வளமையானுகும் மனமகிழச்சி இதுவென்றலின்.

*"நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே." என்பதனுற் தலைவன் முன் ஒருகாற் கூறியவற்றினைத் தோழி தலைவற்குக் கூறிச் செலவழுங்குவித்தாள்.

† "சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே." என்பதனுல் வழியருமை கூறினுள்.

இவள் கூறுகின்ற காலத்துத் தலைவற்கு மூப்பென்னும் மெய்ப்பாடு தோன்றிப் பின்னர் அசைவுபிறந்தது, தோழிக்கு நடுக்கம் பிறந்தது.

இது பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலாது ஆசிரியத்தளை விரவிவந்த சீர்வகைக்கலிவெண்பா. (சச)

கரு. செருமிகு சினவேந்தன் சிவந்திறுத்த புலம்போல
வெரிவெந்த கரிவறல் வாய்புகுவ காணுவாய்ப்
பொரிமலர்ந் தன்ன பொறிய மடமான்
திரிமருப் பேறொடு தேரறேர்க் கோட
மரல்சாய மலைவெம்ப மந்தி யுயங்க
வுரல்போ லடிய வுடம்புயங் கியானை
யூறுநீ ரடங்கலி னுண்கயங் காணுது
சேறு சுவைத்துத்தஞ் செல்லுயிர் தாங்கும்
புயறுளி மாறிய போக்கரு வெஞ்சுரம்;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சச - ம் சூத.
† ,, ,, பொருளியல், உஉ-ம் ,,

எல்வளை யெம்மொடு நீவரின் யாழநின்
மெல்லியன் மேவந்த சீறடித் தாமரை
யல்லிசே ராயித ழரக்குத்தோய்ந் தவைபோலக்
கல்லுறி னவ்வடி கறுக்குந வல்லவோ;

நலம்பெறு சுடர்நுதா லெம்மொடு நீவரி
னிலங்குமா ணவிர்துவி யன்னமென் சேக்கையுட்
டுலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றண்டை
விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை யல்லையோ;

கிளிபுரை கிளவியா யெம்மொடு நீவரிற்
றளிபொழி தளிரன்ன வெழின்மேனி கவின்வாட
முளியரிற் பொத்திய முழங்கழ லிடைபோழ்ந்த
வளியுறி னவ்வெழில் வாடுவை யல்லையோ;

எனவாங்கு;

அணையவை காதலர் கூறலின் வினைவயிற்
பிரிகுவ ரெனப்பெரி தழியாதி திரிபுறீஇக்
கடுங்குரை யருமைய காடெனி னல்லது
கொடுங்குழாய் துறக்குந ரல்லர்
நடுங்குதல் காண்மார் நகைகுறித் தனரே.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாகிய தலைமகள், யான் நும்மோடு போதுவல் என்றாட்குத், தலைவன் அவளது மென்மையுங் காட்டின் கடுமையுங் கூறி உடம்படானாக, ஆற்றாளாய தலைவியைத், தோழி, அவர் நம்மோடு நகையாடிச் சொன்னார் பிரிவரல்லரென வற்புறுத்தியது.

(இ - ள்.) செருமிகு * * * வெஞ்சுரம்:—எ - து, போர்த்தொழிலிலே மிகுகின்ற சினத்தையுடைய அரசன் கோபித்துச் சென்று விட்ட பகைப்புலத்தை நெருப்புத் தின்றாற்போல நெருப்புத்தின்ற கரியினையுடைய வறந்த நிலத்திடத்தனவாகிய பொரிமலர்ந்தாற்போன்ற புள்ளிகளையுடையவாகிய மடப்பத்தையுடைய மான்கள் உணவுகளைக் காணாவாய்த் திரிந்த கொம்பினையுடைய ஏற்றோடே பேய்த்தேரை நீரென்று கருதி உண்டற்பொருட்டு ஓட, மரல் வாடும்படி மலைகள் கொதிக்க, ஊணின்றி மந்திகள் வருந்த, உரல்

போன்ற அடிகளையுடையவாகிய உடம்பு வருந்திய யானைகள் ஊறுகின்ற நீரூற்று அடங்கலின் நீர் உண்டற்கு வேறோர் நீர்நிலை காணுமற் சேற்றில் ஈரத்தை நுகர்ந்து தம்போகின்ற உயிரைச்காக்கும் மேகந் துளித்தலைத் தவிர்ந்த செலவரிய வெய்ய சுரத்தை; எ - று.

*"பன்றி புல்வா யுழையே கவரி - யென்றிவை நான்கு மேறெனற் குரிய." இதனுன் ஏறென்ருர். வெந்தகரி, உண்ட எச்சில் போல நின்றது. ஏற்ருேடு என்பது ஏருேடு என விகாரமாயிற்று. சுரத்தென்னும் அத்து விகாரத்தாற் றொக்கது.

இது தரவு.

எல்வளை * * * வல்லவோ—எ - து, ஒளியினையுடைத்தாகிய வளையினையுடையாய்! நீ எம்மோடு வருவையாயின் நின்னுடைய மெல்லிதாகிய இயல்பினையுடைய அனிச்சமுதலியவற்றிலே பொருந்துதல்வந்த சிறிய அடிகள் ஆண்டுள்ள கல்லைத்தீண்டும், அவ்வடிகள் கல்லைத்தீண்டுமாயிற் றாமரைப்பூவினது அல்லியைச்சேர்ந்த அழகிய இதழ்கள் இங்குலிகந் தோய்ந்தனபோலக் கறுப்பனவல்லவோ; எ-று.

நலம்பெறு * * * யல்லையோ—எ - து, நன்மையைப் பெறுகின்ற ஒளியினையுடைத்தாகிய நுதலினையுடையாய்! நீ எம்மோடு கூட வருவையாயிற் சிங்கக்கான்மேற் றைத்த தூங்குகட்டிலின் இலங்கும் மாட்சிமை விளங்கும் அன்னத்தூவியாற்செய்த மெல்லிய படுக்கையிடத்தே உறக்கத்தைப் பொருந்துகின்ற நீ பொய்யான சிங்கம் ஒழிய அக்காட்டிடத்தில் விலங்காகிய சிங்கத்தின் குரலைக் கேட்பின் அஞ்சுவையல்லையோ; எ - று.

மாட்சிமை விளங்குகின்ற தூவியையுடைய அன்னமென்பது முதற்கேற்ற அடையடுத்த ஆகுபெயர்.

துலங்கூர்தி, தூங்குகட்டில். மற்று, வினைமாற்று; வெருவரத்தக்க பொய்ம்மானல்லாத மெய்ம்மானின் குரல்கேட்பினெனப் பொருள் தந்துநின்றது.

கிளிபுரை * * * யல்லையோ—எ - து, கிளியையொக்கும் மொழியினையுடையாய்! நீ எம்மோடே வருவையாயின் முகில் துளியைச் சொரியப்பட்ட தளிரையொத்த அழகினையுடைய மேனி அழகு கெடும்படி உலந்த சிறுதூற்றை மறைத்த முழங்குகின்ற அழலி

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௩அ-ம் சூத்.

னது நடுவை ஊடறுத்து வந்த காற்றுத் தீண்டின் அந்த அழகு கெடுவையல்லையோ; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

அனையவை * * * குறித்தனரோ—எ - து, நினது அழகு கெடும் அச்சமாகிய அத்தன்மையவற்றை நின்னைக்காதலித்தவர் கூறுகையினாலே யாம் பிரியின் இவள் இறப்பளென்று பிரியார், ஆதலான் மனத்தைத் திரிவுறுத்தி வினையிடத்துப் பிரிகுவனென மிக நெஞ்சழியாதேகொள்; வளைந்த மகரக்குழையையுடையாய்! காடு கடிய அருமையவென்று சொல்லுவாராயின் நினது மெய்ந்நடுக்கத்தைக் காண்டற்கு ஒரு விளையாட்டைக் குறித்துக் கூறினரென்பதல்லது துறப்பரென்று நாஞ் சொல்லுமவரல்லர், எ - று.

காட்டின் கடுமை தாமே கூறினர், நாம் போதற்கு உடம்படேமென்பது தாமே உணர்வாராகலின்.

இது சுரிதகம்.

தாழிசைகள் தலைவன் உடன்போக்கு மறுத்துக்கூறியன. வினைவயிற் பிரிவரெனவே கற்பிற் கூறியதாயிற்று. காடுங் கடுங்குரை அருமையவெனத் தரவிற் பொருளையுஞ் சுரிதகத்து உடன் கொண்டு கூறினர், * "தரவிய லொத்து மதனகப் படுமே." என்னுஞ் சூத்திரத்து இயலென்றதனால்.

தலைவன் இளமை பொருளாகத் தலைவற்கு நகைபிறந்தது. தலைவிக்கு அசைவுபிறந்தது.

இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் ஐயடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கஉ)

கச. அணைமரு ளின்றுயி லம்பணைத் தடமென்றோட்
டுணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்
மணமௌவன் முகையன்னமாவீழ்வா ணிரைவெண்பன்
மணநாறு நறுநுதன் மாரிவீ ழிருங்கூந்த

லலர்முலை யாகத் தாரொழிற் றிதனிச்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி
யினிய சொல்லி யின்னுங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே ;

பொருளல்லாற் பொருளுமுண் டோவென யாழநின்
மருளிகொண் மடநோக்க மயக்கப்பட் டயர்த்தாயோ;

காதலா ரெவன்செய்ப பொருளில்லா தார்க்கென
வேதிலார் கூறுஞ்சொற் பொருளாக மதித்தாயோ;

செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க்கப்பொ
ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ; [ரு

அதனால்,

எம்மையும் பொருளாக மதித்தீத்தை நம்முணங்
கவவுக்கை விடப்பெறும் பொருட்டிறத்
தவவுக்கை விடுதே லதுமனும் பொருளே.

இது தலைமகனாற்பிரிவுணர்த்தப்பட்டதோழி, தலைமகற்கு, முன்னையிற் சிறப்ப எம்மை இற்பாராட்டியதெல்லாம் எம்வயிற்பிறந்த வெறுப்பென்பது இப்பொழுதறிந்தேன், இவ்வகைப்பட்ட போச்சு நினைச்கு எவ்வகையான் வந்ததென, அவன்செலவழுங்கச்சொல்லியது.

(இ - ள்) அணைமருள் * * * குதலே—எ - து, இனிய துயிலையுடைய அணையையொத்ததும், அழகிய மூங்கிலையொத்த பெருமையையுடையதுமான மெல்லிய தோளினையும் எழுச்சியையுடைய நீலத்தினுடைய உயர்ந்த அழகினையுடைய இரண்டாகிய மலர்போலும் அகன்ற மையுண் கண்ணினையும் மணத்தையுடைய மௌவன்முகையையொத்த வண்டுகள் விரும்பின நேரிதாகிய ஒழுங்கினையுடைய வெள்ளிய பல்லினையும் மணம் நாறுகின்ற நறியதாகிய நுதலினையும் மழை விரும்பின கரிதாகிய மயிரினையும் ஆகத்திடத்தே பெருத்த முலையினையும் நிறைந்த அழகினையுடைய தேமலையுஞ் சிலவாகிய நிரைத்த வாலிய வளையினையுமுடைய செய்யோளேயென்று பலபலவாகிய புனைந்துரைகளாற் பண்டையிற்காட்டிற் கொண்டாடி இங்ஙனம்

இனிய மொழிகளைக்கூறி என்னை வருத்தத்தே செலுத்துகின்ற தன்மை எம்மிடத்து வெறுப்பாகுதலை இப்பொழுதறிந்தேன்; எ - று.

மருள், உவமவுருபு.

*"நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற் - புகழ்தகை வரையார் கற்பினுள்ளே." என்பதனாற் போக்கின்கட் தலைவன் தலைவியைப் புகழ்ந்துகூறினான்.

இது தரவு.

பொருளல்லாற் * * * டயர்த்தாயோ—எ - து, மயக்கங்கொண்ட அறியாமையையுடைய நின்னறிவு பொருளல்லது நன்குமதிக்கும் பொருளும் வேறுண்டோவென்று நின்னை மயக்கப்பட்டு அன்பை மறந்தாயோ; எ - று.

மருள், மருளியெனப் பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது.

யாழ அசை.

காதலார் * * * மதித்தாயோ—எ - து, கையிற் பொருளில்லாதவர்கட்குத் தம்மாற் காதலிக்கப்பட்டார் என்ன காரியத்தைச் செய்வரொன்று உறவுபோல இருந்து உறுதியல்லன கூறுவார் கூறும் மொழிகளை நினக்குப் பொருளாக மதித்தாயோ; எ-று.

செம்மையி * * * தறியாயோ—எ - து; பொருள்தேடும் முறைமையினீங்கிப் பொருள்தேடுவார்க்கு அப்பொருள்தான் அவரை நீங்கி இம்மையிலும் மறுமையிலும் பகையாவதை அறியாயோ; எ - று.

இவளிறந்துபடப் பொருடேடலிற் செம்மையினிகந்தென்றாள்.

இவை மூன்றுந் தாழிசை.

அதனால் * * * பொருளே—எ - து, பொருளித்தன்மைத்தாகையினாலே அப்பொருளேயன்றி எம்மையும் பொருளாக மதிப்பாய் நம்முன் முயங்கின முயக்கத்தைக் கைவிட்டுப் போகையினாலே பெறுகின்ற பொருட்கூற்றிடத்து அவாவைக் கைவிடுவாயாக, அதுவே நிலைபெறும்பொருள்; எ - று.

மதித்திதை, மதியென்னும் முன்னிலையேவற் றிரிசொல்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கச-ம் சூத்.

அவவெனக் குறியதன் இறுதிச்சினை கெட்டு நின்றது. கை விடுதல், இற்றெனக்கிளத்தல் போல் நின்றது.

அதனால், தனிச்சொல்; எஞ்சியது, சுரிதகம்.

இதனாற் றலைவற்கிழிவுந் தோழிக்குச் சூழ்ச்சியும் பிறந்தன.

இஃது ஒன்பதடித்தரவுஞ் சிறுமைக்கு எல்லைகூறிய ஈரடித் தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் மூன்றடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கஙு)

கரு. அரிமா னிடித்தன்ன வஞ்சிலை வல்விற்
புரிநாண் புடையிற் புறங்காண்ட லல்லா
லிணைப்படைத் தானை யரசோ டுறினுங்
கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பி
னெருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா மறவர்
பொருள்கொண்டு புண்செயி னல்லதை யன்போ
டருள்புற மாறிய வாரிடை யத்தம்;

புரிபுநீ புறமாறிப் போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தாற் பெயர்த்தர லொல்வதோ
செயலையந் தளிரேய்க்கு மெழினல மந்நலம்
பசலையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்;

பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ
தீங்கதிர் மதியேய்க்குந் திருமுக மம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்;

பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னிய புணர்ச்சியான் மறுத்தர லொல்வதோ
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பானாத்
திரியுமிழ் நெய்யேபோற் றெண்பனி யுறைக்குங்கால்;

எனவாங்கு,

அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்
வளமையோ வைகலுஞ் செயலாகு மற்றிவண்
முளைநிரை முறுவலா ராயத்து ளெடுத்தாயந்த
விளைமையுந் தருவதோ விறந்த பின்னே.

இது பிரிவுணர்த்திய தலைமகற்குத், தோழி, தலைமகளது ஆற்றாமையும் இளமையதருமையுங் கூறி, நீர் பிரிந்து செய்யக்கருதியவை எக்காலத்துஞ் செய்யலாம் பொருளாற் கழிந்த இளமை மீட்கலாமோவெனக் கூறியது.

(இ-ள்.) அரிமா * * * யத்தம்—எ-து, வந்து கூடுதலையுடைத்தாகிய படையினையுடைய படையோடே அரசர்கள் வந்து போர் செய்யினும் அழகினையுடைய சிலைமரத்தாற் செய்த வலிய வில்லினது முறுக்குதலையுடைய நாணிலெழுந்த சிங்கம் இடித்தாற்போன்ற சிறுநாணொலியாலே அவ்வரசரை முதுகுகாண்டலன்றி அம்பை வில்லிலே தொடுத்தலை நாணுங், கடிய துடியினது ஆரவாரத்தினையும், வலியினையுடைத்தாகிய பார்வையினையுடைய கழுத்துவலிய கலையினது கொம்புபோலே நேர்போகாமற் திருகி முறுக்குண்டு தாழ்ந்த தாடியினையும், வெவ்விதான கடிய சினத்தினையுமுடைய கெடாத மறவர் வழிபோவாருடைய பொருளைப் பறித்துக்கொண்டு அவர்க்குப் புண்ணைக் கொடுத்துவிடுதலன்றி, அன்போடே அருளும் அவ்விடத்தினின்றுங் கைவிட்டுப்போன அரிய இடத்தையுடைய காட்டிடத்தே ; எ - று.

நாணும் மறவரென்க.

இது தரவு.

அன்றியென்னும் வினையெச்ச வினைக்குறிப்பு அல்லதையென வினைக்குறிப்பு முற்றாய்த் திரிந்தது. அருள் அன்பிற்குக் காரணமாய் மனத்து நிகழ்வது.

புரிபுநீ * * * ஒழிந்தக்கால்—எ - து, நீ புறப்பொருளை விரும்பி அகப்பொருளைக் கைவிட்டதிலே போனதெண்ணி இவளுடைய அழகையுடைய நிறம் அசோகினது அழகையுடைய தளிரையொக்கும் அத்தன்மைத்தாகிய நிறம் பசலைநிறத்தாலே கைக்கொள்ளப்பட்டுப் பண்டை நீர்மைபோனக்கால் நீ போக்கென்னுகையினாலே மு

ன்பு உள்ளதன்றிப் புதிதாகத் திரண்டு பெருத்த செல்வத்தினாலே மீட்டல் பொருந்துமோ ; எ - று.

நீ புறம் புரிபு மாறியென்க.

செல்வமென்றது துறவறத்திற் சேறற்குக் கற்ற கல்வியை. அது வானப்பிரத்தம்.

*"உண்டற் குரிய வல்லாப் பொருளை - யுண்டன போலக் கூறலு மரபே." என்பதனான் உண்ணப்பட்டென்றார். இதனுட் சொல் வழுவன்றிச் "செய்யா மரபிற் றொழிற்படுத் தடக்கலும்" அமைத்தார்.

பொய்யற்ற * * * தொலைந்தக்கால்—எ - து, இவளுடைய திருமுகம் இனிய கிரணங்களுடைய திங்களையொக்கும் அந்த முகம் பாம்பு சேர்ந்த திங்களைப்போலப் பசப்புப் பரந்து கெட்டக்கால் மெய்ப்பொருளுணர்ந்தோரை நினைந்து நீ சென்று அவரிடத்துச் கற்ற பொய்யற்ற நூற்கேள்விகளாலே முன்பு மனத்திற் தங்கிய மாசற்ற விரதங்களாலே மீட்டல்பொருந்துமோ ; எ - று.

இல்லறத்தே நின்று முன்னுள்ள மாசறுத்து வானப்பிரத்தனு மென்றது. இஃது " அந்தரத் தெழுதிய வெழுத்தின் மான - வந்த குற்றம் வழிகெட வொழுக " லாம்.

பாம்பு சேர்விடமும் பாடம்.

பின்னிய * * * உறைக்குங்கால்—எ - து, இவளுடைய முறுக்கு அவிழ்ந்த நறிய நீலத்தையொக்கும் மையுண்கண்கள் அமையாவாய் அழுது எரிகின்ற திரிகான்ற நெய்போலச் சுடும்படி தெள்ளிதாகிய நீரைத்துளிக்குங்கால் வேற்று நாட்டிடத்தே போய் நின்னைப் பிணித்த ஆசையாகிய சங்கிலியை அறுத்து நிலைபெற்ற தத்துவப்பொருள்களைக் கூடிய கூட்டத்தாலே மீட்டல் பொருந்துமோ ; எ - று.

இது சன்னியாசம் வேண்டுமெனக் கொண்டமை கூறிற்று.

இது தலைவன் ஓதற்பிரிவாற் பெறும்பயன் கூறியவற்றை உணர்ந்த தோழி, அவற்றைக்கூறி அவை எக்காலத்துஞ் செய்யலாம் இளமைமீட்டல் இவற்றால் ஒல்லாதென்றாள்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கூ-ம் சூத்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு அசை.

இது தனிச்சொல்.

அனையவை * * * பின்னே—எ - து, அனையவை செய்த நன்மைகளை நினைத்து அவை கெடாமற் பாதுகாத்துப் பின்னர் நீ ஆராய்ந்து தேடுகின்றவற்றை ஆராய்ந்துபார். அக்கல்வியாலுண்டாம் வளப்பமோ இவ்விடத்தேயிருந்து நாடோறுஞ் செய்துகொள்ளுஞ் செயலாயிருக்கும். அக்கல்வி முளையையொத்த நிரையினையுடைய முறுவலையுடையாளுடைய திரளுள்ளே உயர்த்தாராய்ந்த இவளுடைய இளமை போனபின்பு அவ்விளமையுந் தருவதொன்றோ? எ - று.

அனையவையென்றது நிறத்தையும் முகத்தையுங் கண்ணையும்.

வளமையோவென்னும் ஓகாரம் இழிவுசிறப்பு, இளமையுமென்னும் உம்மை சிறப்பு, தருவதோவென்னும் ஓகாரம் எதிர்மறை.

*"ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன" இதனானுணர்க.

இது சுரிதகம்.

இதனாற் றோழிக்கு இழிவுதோன்றிற்று; தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல் லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கச)

கரு. பாடின்றிப் பசந்தகண் பைதல் பனிமல்க
வாடுபு வனப்போடி வணங்கிறை வளையூர
வாடெழி லழிவஞ்சா தகன்றவர் திறத்தினி
நாடுங்கானினைப்பதொன்றுடையேன்மன்னதுவுந்தான்;

தொன்னலந் தொலைபீங்கியாந்துயருழப்பத்துறந்துள்ளா
துன்னிநங் காதலர் துறந்தேகு மாரிடைக் [ர்
கன்மிசை யுருப்பிறக் கனைதுளி சிதறென
வின்னிசை யெழிலியை யிரப்பவு [illegible];

* [illegible] பொருளதிகாரம், அகத்திணையியல், உ௯ம் [illegible]

புனையிழா யீங்குநாம் புலம்புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர் முன்னிய வாற்றிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்
கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ;

ஒளியிழா யீங்குநாந் துயர்கூரப் பொருள்வயி
னளியொரீஇக் காதல ரகன்றேகு மாரிடை
முளிமுதன் மூழ்கிய வெம்மைதீர்ந் துறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்தவு மியைவதோ;

எனவாங்கு,

செய்பொருட் சிறப்பெண்ணிச் செல்வர்மாட் டினையன
தெய்வத்துத் திறனோக்கித் தெருமர றேமொழி
வறனோடின் வையகத்து வான்றருங் கற்பினா
ணிறனோடிப் பசப்பூர்த லுண்டென
வறனோடி விலங்கின்றவ ராள்வினைத் திறத்தே.

இது தலைமகன் பொருள்வயிற்பிரிந்த இடத்து அவன் போகிய காட்டது கடுமை நினைந்து ஆற்றாளாகிய தலைமகள் அவர்பொருட்டாக நாம் இவ்வகைப்பட்ட தெய்வங்களைப் பரவுதல் நங்கற்புக்கு இயைவதோவெனக் கேட்ட தோழி அவ்வாற்றானே மீண்டனர் நீ கவலவேண்டாவெனக் கூறியது.

(இ - ள்.) பாடின்றி * * * னதுவுந்தான்—எ - து, துயிலின்றிப் பசந்த கண்கள் வருத்தத்தையுடையவாய் நீர்மல்க நிறம்வாடி அழகு கெடுகையினாலே வளைகள் வணங்கின முன்கையினின்றும் கழல வெற்றியையுடைய அழகு அழிவுக்கு அஞ்சாதே பிரிந்தவர் கூற்றில் இப்பொழுது செய்வதாக நினைப்பதொரு காரியமுடையேன் அத்தாற் பெற்றதென்? அக்காரியந்தானும் ஆராயுங்கால் நங் கற்பிற்குப் பொருந்துவதன்றாய் இராநின்றது.

இது தரவு.

தொன்னலந் * * * மியைவதோ—எ - து, நங்காதலர் யாம் இயற்கை நலமுங் கெட்டு இவ்விடத்தேயிருந்து வருத்தத்திலே அழுந்தும்படி நம்மைக் கைவிட்டுப் பின்னர் நினையாராய்ப் பொருள்மேல் அன்பு நெருங்கி நம்மேல் அன்பைத்துறந்து போம் அரியவ

ழியிடத்திற் கல்லின்மேல் உண்டான வெப்பம் நீங்கும்படி செறிந்த துளியைச் சிதறுவாயாகவென்று பராய் இனிய ஓசையையுடைய மேகத்திற்கு உரிய ஞாயிற்றை இரத்தல்செய்யவுங் கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே; எ - று.

புனையிழாய் * * * லியைவதோ்—எ - து, புனைந்த பூணினையுடையாய்! காதலர் இவ்விடத்தேயிருந்து நாந் தனிமையுறும்படி பொருளை விரும்பிப் பகைப்புலமென்று கருதாராய்ப் போதற்கு நினைந்த வழியிடத்தில் மரக்கொம்புகள் வாடும்படியாகச் சிறக்கும் நின் சினந் தணிவதாகவென்று பரவிச் செறிந்த கதிரையுடைய ஞாயிற்றை நாம் வேண்டிக்கோடலும் நங் கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே; எ - று.

நாமென்னும் படர்க்கையுளப்பாடு இடவழுவமைதி; தணிந்தீக, வியங்கோட் திரிசொல் விகாரமாய்நின்றது.

ஒளியிழா * * * மியைவதோ—எ - து, ஒளியினையுடைத்தாகிய பூணினையுடையாய்! காதலர் இவ்விடத்தேயிருந்து நாம் வருத்தமிகும்படி நம்மிடத்து அளித்தலை நீங்கிப் பொருளிடத்தே வேட்கைசென்று நம்மை அகன்றுபோம் அரிய வழியிடத்து உலர்ந்த சிறுதூறுகளிலே தங்கி வந்த வெப்பமாறி அவன்மேலே சேர்வாயாகவென்று பரவிக் காற்றைத் தருகின்ற ஞாயிற்றினை வாழ்த்துதலைச்செய்யவும் நங் கற்பிற்கு இயைவதொரு காரியமோ? அல்லவே; எ - று.

மழையையுங் காற்றையுந் தருகின்ற ஞாயிறு பாலைக்குத் தெய்வமாயினமை *"மாயோன் மேய" என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்றுசொல்லி; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

செய்பொருட் * * * திறந்தே—எ - து, தேமொழி! இத்தன்மையாகிய மற்றத் தெய்வங்களினுடைய கூறுபாடுகளையும் மனத்தான் வேண்டிக்கொள்ளக் கருதித் தேடுகின்ற பொருளான் உண்டாஞ் சிறப்புக்களை நினைத்துப் போகின்றவரிடத்து மனஞ் சுழலாதேகொள்; வற்கடமான காலத்தாலே வையங் கெட்டதாகில் அவ்வையத்திடத்தே மழையைப் பெய்விக்குங் கற்பினையுடையாளுடைய நிறங்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ரு-ம். சூத்.

கெட்டுப் பசப்புப் பரத்தலுண்டாமென்று கருதி அவருடைய முயற்சியிடத்தே அறக்கடவுள் விரைந்து சென்று விலக்கிற்று; இனி வருந்தல்; எ - று.

இது தங் குலதெய்வமன்றி எல்லார்க்கும் பொதுவாதலிற் கற்பிற்கு இயைவதோவென்றாள். அது *"தெய்வமஞ்சல்" என்பதனான் உணர்க. இது †"செலவிடை யழுங்கல் செல்லாமை யன்றே-வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்" என்பதனாற் றலைவன் செலவழுங்கினமை கூறிற்று.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது ‡"தரவே தானு நாலடி யிழிபாய்" எனச் சிறுமைக்கு எல்லை கூறிய நான்கடித்தரவிற்கு §"இடைநிலைப்பாட்டே, தரவகப் பட்ட மரபின தென்ப" என்றதன்கண் மரபினென்ற இலேசால் நான்கடியாகிய இடைநிலைப்பாட்டும் பெற்றுத் தனிச்சொல்லும் பெற்றுத் ||"தரவியலொத்தும்" என்ற உம்மையான் எறியும் வருமென்றலிற் தரவின் மிக்க சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலி. (கரு)

கள. படைபண்ணிப் புனையவும் பாமாண்ட பயிலணைப்
புடைபெயர்ந் தொடுங்கவும் புறஞ்சேர வுயிர்ப்பவு
முடையதை யெவன்கொலென் றாறளந் தவர்வயி
னடைசெல்லா நனியேங்கி நடுங்கற்கா ணறுநுதால்;

தொல்லெழி றொலைபிவ டுயருழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன் வலிப்பளவை
நீள்கதி ரவிர்மதி நிறைவுபோ னிலையாது
நாளினு நெகிழ்போடு நலனுட னிலையுமோ;

ஆற்றனோ யடவிவ ளணிவாட வகன்றுநீ
தோற்றஞ்சா றெருகுபொருண் முயறிமன்முயல்வளவை

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், உச-ம் சூத்.
† ,, ,, கற்பியல், சச-ம் ,,
‡ ,, ,, செய்யுளியல், கஙங-ம் ,,
§ ,, ,, ,, கஙச-ம் ,,
|| ,, ,, ,, கஙஎ-ம் ,,

நாற்றஞ்சா னளிபொய்கை யடைமுதிர் முகையிற்குக்
கூற்றம்போற் குறைபடூஉம் வாழ்நாளு நிலையுமோ;

வகையெழில் வனப்பெஞ்ச வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன் முயல்வளவைத்
தகைவண்டு புதிதுண்ணத் தாதவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலு மிளமையு நிலையுமோ;

எனவாங்கு,

பொருந்தியான்றான்வேட்ட பொருள்வயினினைந்தசொற்
றிருந்திய யாக்கையுண் மருத்துவ னூட்டிய
மருந்துபோன் மருந்தாகி மனனுவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே.

இது பகைவர் திறைதந்த நாடு காத்தற்குப் பிரிகின்றமையுணர்ந்து தலைவி வேறுபட்டமை கண்டு தோழி அவனை எதிர்ப்பட்டு அவளது ஆற்றாமையும் இளமையதருமையுங் கூறிச் செலவழுங்குவித்தமை தலைமகட்குக் கூறியது.

(இ - ள்.) படைபண்ணி * * * ணறுநுதால்—எ - து, நறுநுதால், படைக்கலங்களைப் புதியவாகப் பண்ணிக் கைசெய்யவுங் காரியத்தின் நினைவாலே முயங்குதலைத் தவிர்ந்து பாத்தன் மாட்சிமைப்பட்ட பலவாகிய அணையிடத்தே கிடக்கவும் அதுபெறாது அவன் புறத்தே புல்லுதலாலே யாம் பிரிந்தால் இவள் எங்ஙனம் ஆற்றுவளென்று நெட்டுயிர்ப்புக்கொள்ளவும் இவன் மனத்திலுடைய காரியம் எத்தன்மையதுகொலென்று கருதிக் கூட்டத்திற்கு இடையூறு வருமென்று கருதியவர் நினைவிடத்தே நீ ஒழுகுதலைச் செய்யாயாய் மிகவும் ஏங்கி நடுங்காதேகொள்.

இது நிகழ்ந்தது நினைத்து வருந்தினள்.

இது தரவு.

தொல்லெழில் * * * னிலையுமோ—எ - து, இவள் இயற்கை நலங் கெட்டு வருத்தத்தே அழுந்த நீ பிரிந்து வலிதாகிய காவலாலே பகைவர் தந்த நாட்டை விளக்குதலை மிகவுந் துணிவை, அங்ஙனந் துணியுமளவில் நீண்ட கதிரினையுடைய விளங்குகின்ற திங்களின்

நிறைவு பின்னர் ஒழுகத் தேயுமாறுபோல நிலைநில்லாமல் நாடோறுந் தன்னிலைகுலைந்து கெடும் அழகு இவளுடன் நிலைபெறுமோ; எ - று.

நாளினின் இன்அசை; ஓகாரம் எதிர்மறை.

ஆற்றனோய் * * * நிலையுமோ—எ - து, இவள் வலியையுடைய காமநோய் அடுகையினாலே அழகுகெடும்படி நீ பிரிந்து பகைவர் தந்த நாட்டைக் காத்துப் பெறும் விளக்கம் அமைந்த திரளும் பொருள்களைத் தேடுதற்கு மிகவும் முயல்வை; அங்ஙனம் முயலுமளவில் நாற்றம் அமைந்த பெருமையையுடைய பொய்கை இலையைவிட்டு முற்றின தாமரைமுகைக்குக் கூற்றமாகிய அலர்ச்சி அதன் குறைவிற்குக் காரணமாயினாற்போல இத்துணைக்காலம் இருவென விதித்த காலங் குறைபட்டு வருவதற்குக் காரணமான வாழுகின்ற நாள்களும் இவளுடன் நிலைபெறுமோ; எ - று.

தொகுபொருளாவன, அறமும் பொருளும் இன்பமுமாம்.

வகையெழில் * * * நிலையுமோ—எ - து, இவள் கூறுபாட்டையுடைய உறுப்பழகுந் தோற்றப்பொலிவுங் கெடும்படி மலையைப் போக நீ துணிந்து பகையறுதற்குக் காரணமான நாடாகிய பயனைத் தருங் காவற்பிரிவை மிகவும் முயல்வை; அங்ஙனம் முயலுமளவில் அழகையுடைய வண்டுகள் தன் புதுமையை நுகரும்படியாகத் தாதை அலர்ந்த குளிர்ந்த பூ இனிய முகையென்கின்றவை வாய்த்தற்குக் காரணமான நீர்நிறைந்த தடம் அந்நீர் நாடோறுங் குறையுமாறுபோல நாடோறுங் குறையும் இளமையும் இவளுடன் நிலைபெறுமோ? எ - று.

அளவு அளவையெனப் பெயர்த் திரிசொல்லாய் நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, அசை.

இது தனிச்சொல்.

பொருந்தியான் * * * செலவே—எ - து, பெரிய புகழையுடைய மீளியான் தன்னைப் பொருந்தித் தான் விரும்பிய அறம்பொருளின்பமாகிய பொருளிடத்தே யான் அறன் உண்டாக நினைத்ததனாற் பிறந்த சொல் நல்வினையாற் திருந்திய யாக்கையின்கண்ணே மருத்துவன் நுகர்வித்த மருந்துபோலே நல்ல மருந்தாகித் தன் மனமகிழுகையினாலே போக்கைத் தவிர்ந்தான் ; எ - று.

இதனாற் றலைவிக்குப் புணர்வென்னும் உவகையுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது முன்னர்ப் பாட்டிற் கூறியவாறே வந்து சுரிதகந் தரவோ டொத்து வந்த ஒத்தாழிசைக்கலி. (கசு)

கஅ. அரும்பொருள் வேட்கையி னுள்ளந் துரப்பப்
பிரிந்துறை சூழாதி யைய விரும்பிநீ
யென்றோ ளெழுதிய தொய்யிலும் யாழநின்
மைந்துடை மார்பிற் சுணங்கு நினைத்துக்காண்
சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவா
தொழிந்தவ ரெல்லாரு முண்ணாதுஞ் செல்லா
ரிளமையுங் காமமு மோராங்கு பெற்றார்
வளமை விழைதக்க துண்டோ வுளநா
ளொரோகை தம்முட் டழீஇ யொரோகை
யொன்றன்கூ றுடை யுடுப்பவரே யாயினு
மொன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை யரிதரோ
சென்ற விளமை தரற்கு.

இஃது *"ஒன்றாத் தமரினும்" என்னுஞ் சூத்திரத்தில் "நாளது சின்மையு மிளமைய தருமையுந் - தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு - மின்மைய திளிவு முடைமைய துயர்ச்சியு - மன்பின தகலமு மகற்சிய தருமையும்" எனக்கூறிய எட்டினையுந் தலைவன் கூறக் கேட்ட தோழி அவற்றை † "நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே" என்னும் விதியாற் றலைவற்குக் கூறிச் செலவழுங்குவித்தது.

(இ - ள்.) ஐய! அரிய பொருளிடத்துச் செல்கின்ற ஆசையினால் உள்ளம் உளைற்றுகையினாலே பிரிந்துபோயிருத்தலை நினையாதேகொள், நீ விரும்பித் தலைவி தோளில் எழுதிய தொய்யில் தருகின்ற அழகினையும் இவள் மார்பில் நின்னை வலியாகவுடைய சுணங்கின் அழகையுங் கைவிடல் ஒல்லுமாயின் நினைத்துப்பார், நீ நன்கு மதித்த பொருளுஞ் சென்றவர்கள் தத்தம் நிலைமைக்கேற்பக் காலம் நீட்டிப்ப நின்று தேடுவதன்றி இப்பொழுதே முகந்துகொள்ள ஓரிடத்தே கிடவாது, பொருள் தேடப் போகாதிருந்தவர்கள் எல்லா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சக ம், சூத்.
† ,, ,, ,, சச-ம், ,,

ரும் ஒருவாற்றுன் உண்ணுமையும் ஒழுகார், இளமையையும் இருத லயும் ஒத்த காமத்தையுஞ் சேரப் பெற்றவர்கள் செல்வத்தை விரும் பத்தக்கதொரு நன்மை அச்செல்வத்திற்கில்லை, இல்வாழ்க்கையா வது தமக்குக் கற்பித்த நாளெல்லாம் உள்ளில் ஒரோவொரு கைகளா லே தம்முள்ளே தழுவிக்கொண்டு புறத்தில் ஒரோவொரு கைகளா லே ஒன்றன்கூற்றுகிய ஆடையை உடுத்திருப்பவரோயாயினும் பிரி யாதிருப்பவர்களுடைய வாழ்க்கையே, வாழ்க்கை கழிந்த இளமை மீண்டு தருதற்கு அரிது ;- எ - று.

பிரிந்திறை சூழாதியைய என்று பாடமாயின் பிரிந்து போவ தனுல் இவள் இறந்துபடுஞ் செய்கையை நினையாதேகொள்ளென்க.

* "தாயத்தி னடையா வீயச் செல்லா - வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா - வெம்மென வருஉங் கிழமைத் தோற்ற - மல்லா வாயினும் புல்லுவ வுளவே." இதனுற் தோழி தலைவிதோளை என் தோளென்றுள். மென்றேளும் பாடம். இவன்முயக்கத்தாற் சுண ங்கு பரத்தலின் நின்னை வலியாக உடைய சுணங்கென்றுள்.

பொருளுமென்ற உம்மை சிறப்பு ; உண்ணுதுமென்னும் உம்மை ஐயம் ; உண்டோவென்னும் ஓகாரம் எதிர்மறை ; யாழவும் அரோவும் அசை.

இதனுள் 'உளநாள்' என்றது நாளது சின்மை; சென்ற இளமை தரற்கு அரிதென்றது இளமையதருமை ; 'உள்ளந்துரப்ப' என்றது உள்ளம் உளுற்றுதலாற் தாளாண்பக்கம்; 'சென்றேர் முகப்பப் பொ ருளுங் கிடவாது, என்றது தத்தம் நிலைமைக்கு ஏற்பப் பொருள் தேட வேண்டுதலின் அது பாணிக்குமென்றலிற் தகுதியதமைதி. 'ஒரோ கை தம்முட் தழீஇ ஒரோகை ஒன்றன் கூறுடை உடுப்பவரோயாயினும்' என்றது இன்மையதிளிவு ; 'இளமையுங் காமமும் ஓராங்கு பெற் றுர் வளமை விழைதக்கது உண்டோ' என்றது உடைமையதுயர்ச்சி; 'பிரிந்துறை சூழாதி ஐய' என்றது அன்பினதகலம், பிரிந்துறைந்து அன்பு பெருக்கவேண்டா ஒன்றினுர் வாழ்க்கையே வாழ்க்கையென் றலின் ; 'தொய்யிலும் யாழ நின் மைந்துடை மார்பிற் சுணங்கும் நினை த்துக்காண்' என்பது அகற்சியதருமை.

இதனுற் தோழிக்குநலிதலுந் தலைவற்குக்கருதுதலும் பிறந்தன.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௨௪-ம் சூத்.

இது பன்னீரடியான் வந்து ஒருபொருணுதலிய கட்டளைக் கலிவெண்பா.

இது பெண்டன்மைக்கேலா நுண்பொருளினைத் தலைவனெதிர் நின்று உணர்த்துவாள் செவ்வன கூறாது, தலைவன் பண்டு கூறியன சிலவற்றை வாங்கிக்கொண்டு கூறுங் கூற்று. நீ மறந்தாயென்பது யாம் உணரக் கூறுகின்றாள் இவளென்பது பட நின்றமையின் ஒருபொருணுதலிற்றாயிற்று. * "மரையா மரல்கவர" என்பதனுட் கூறிய உரையில் வேண்டுவன இதற்குங் கூறிக்கொள்க. (௧௭)

௧௮. செவ்விய தீவிய சொல்லி யவற்றொடு
பைய முயங்கிய வஞ்ஞான் றவையெல்லாம்
பொய்யாதல் யான்யாங் கறிகோமற் றைய
வகனகர் கொள்ளா வலர்தலைத் தந்து
பகன்முனி வெஞ்சுர முள்ள லறிந்தேன்
மகனல்லை மன்ற வினி.

செல்லினிச் சென்றுநீ செய்யும் வினைமுற்றி
யன்பற மாறியா முள்ளத் துறந்தவள்
பண்பு மறிதிரோ வென்று வருவாரை
யென்றிறம் யாதும் வினவல் வினவிற்
பகலின் விளங்குநின் செம்மல் சிதையத்
தவலருஞ் செய்வினை முற்றும லாண்டோ
ரவலம் படுதலு முண்டு.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி செலவு விலக்கவும் பிரிவின்மேற் சென்ற உள்ளத்தனையினானை நீ பிரியின் இவள் இறந்துபடுமெனச் சொல்லிய வாய்பாட்டான் மறுத்தது.

(இ - ள்.) செவ்விய * * * வினி—எ - து, ஐய! வஞ்சனையில்லவாய் இனியவாகிய சொற்களைப் பையச்சொல்லி அச்சொற்களாலே தழுவின அக்களவொழுக்கம் நிகழ்ந்த நாளிற் கூறியவையெல்லாம் பொய்யாயிருத்தலை அறிவில்லாத யான் எங்ஙனம் அறிவேன்? அகன்ற மனையிலுள்ளாரால் அடக்கவொண்ணாத அலரை எம்மிடத்தே தந்து ஞாயிறு முனிந்த வெய்தாகிய காட்டைப் போக நினைத்தலை இப்

பொழுது அறிந்தேன். நீ அறுதியாக நல்லமகனான தன்மையையு டையையல்லை ; எ - று.

*"சினனே பேதைமை நிம்பிரி நல்குர - வனைநால் வகையுஞ் சிறப்பொடு பெறுமே." என்பதனாற் தன் காதலான் நின்னை உள்ள வாறு அறிந்திலேனெனத் தன் பேதைமையைக் காதலாற் சிறப்பித்த லின் அமைந்தது.

மற்றும் ஓவும் அசை.

செல்லினிச் * * * மூண்டு—எ - து. இனி, நீ நினைத்த காரி யத்தே போய் ஆண்டுச் செய்யுங் காரியத்தை முடித்தபின்னர் இவ் விடத்துநின்று வருவாரை எம்மை நினைத்து வருந்தும்படியாக அன்பு நீங்கும்படி மனம் வேறுபட்டு யாந் துறக்கப்பட்டவளுடைய செய்தி யும் அறிவீரோவென்று என் திறத்துச் சிறிதும் வினவாதேகொள். வினவுவையாயின் அவள் இறந்துபாடு கூறவுங் கூடும். அது கேட் டால் ஞாயிறுபோல விளங்குகின்ற நின் தலைமை கெடும்படியாகக் கெடுதற்கு அரிய நீ செய்யுங் காரியம் முடியாமல் அவ்விடத்தே ஓர் அவலம் பிறத்தலும் உண்டு ; எ - று.

† வருத்த மிகுதி சுட்டுங் காலையு - முரித்தென மொழிப வாழ் க்கையு ளிரக்கம்." என்பதற்கு உய்த்துக்கொண்டுணர்தலென்னுந் தந்திரவுத்தியால் ஏனைப் பிரிவான் நிகழும் வருத்த மிகுதியைக் குறி த்த இடத்தும் உயிர்வாழ்க்கையுள் இரக்கம் உரித்தென்றதனான் உ யிர்வாழ்க்கையுள் இரக்கங்கூறினாள்.

உம்மை, ஐயம்.

இதனாற் தோழிக்கு அச்சமுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

கொச்சகம் வெண்பாவாயும் வருதலானுந் தாழிசையோடு தொடராது வருதலானும் இவை தரவிணைக் கொச்சகம். இரண்டும் ஒருபொருணுதலி இவ்வாறு வரினுங் கொச்சகமேயாம். இது ‡"பாநி லை வகையே" என்னுஞ் சூத்திரவிதியாம். (க.அ)

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ருக-ம் சூத்.
† ,, ,, ,, ஙஉ-ம் ,,
‡ ,, ,, செய்யுளியல், கருசு-ம் ,,

உ0. பல்வளம் பகர்பூட்டும் பயனிலம் பைதறச்
செல்கதிர் ஞாயிறு செயிர்சினஞ் சொரிதலிற்
றணிவில்வெங்கோடைக்குத் தண்ணயந்தணிகொள்ளும்
பிணிதெற லுயக்கத்த பெருங்களிற் றினந்தாங்கு
மணிதிகழ் விறன்மலை வெம்ப மண்பகத்
துணிகயந் துகள்பட்ட தூங்கழல் வெஞ்சுரம்;

கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநா ளும்மாகத்
தளியென வுடையேன்யா னவலங்கொண் டழிவலோ,

ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்நீ யுணல்வேட்பி
னாறுநீ ரிலவென வறனோக்கிக் கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன விளமைநு நெஞ்சென்னுந்
தேறுநீ ருடையேன்யான் றெருமந்தீங் கொழிவலோ;

மாணெழில் வேய்வென்ற தோளாய்நீ வரிற்றாங்கு
மாணிழ லிலவாண்டை மரமெனக் கூறுவீர்
நீணிழற் றளிர்போல நிறனூழ்த்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டியான் றவிர்தலைச் சூழ்வலோ;

எனவாங்கு,
அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி.கல்லாத கல்பிறங் காரிடைப்
பணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ வவையே.

இது பிரிவுணர்த்திய தலைவற்குத் தலைவி எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றாட்கு அவன் காணின்கடுமையுந் தலைவிமென்மையுங் கூறுவது கேட்ட தலைவி நாளது சின்மையும் இளமையதருமையுங் கூறி எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றது.

(இ - ள்.) பல்வளம் * * * வெஞ்சுரம்—எ - து, பல உணவுகளையும் விளைந்து கொடுத்து எல்லாரையும் நுகர்விக்கும் பயனையுடைய நிலம் ஈரம் அறும்படி ஞாயிறு குற்றத்தைச்செய்யுஞ் சின

த்தோடே தன்னிடத்தினின்றுஞ் செல்கின்ற கதிர்களைச் சொரிகை யினாலே, மாறுதலில்லாத வெய்ய கோடைக்காலத்திற்கு அதனிடத் துள்ள குளிர்ச்சியை விரும்பித் திரட்சிகொள்ளும் பசிப்பிணியாற் சுடுதலையுடைய வருத்தத்தினையுடையவாகிய பெரிய களிற்றினுடைய திரளைத் தாங்கும் மணிகள் விளங்கும் வெற்றியையுடைய மலை வெம்ப மண்பிளக்கத் தெளிந்த நீர்நிலைகளுந் தகளுண்டான செறிந்த அழலையுடைய வெய்ய காடு ; எ - று.

தாங்கும் விளங்கும் மலை ; அணிகொள்ளுங் களிற்றினம்.

அயத்தணிகொள்ளுமென்று பாடமாயின் நீர்நிலைகளிலே திர ட்சிகொள்ளுமென்க.

இது தரவு.

கிளிபுரை * * * டழிவலோ—எ - து, கிளியினது மொழி யையொக்கும் மொழியினையுடையாய் ! தூங்கழல் வெஞ்சுரம் மழை பெய்தலைக் கண்டறியாவாதலால் அக்காடு நின் அடிக்குப் போதற்கு எளியவாயிருக்குமோவென்று கூறுகின்றவரோ ! யான், நம்முடைய ஆகத்திடத்து முயக்கத்தைக் கண்டார், காற்றினுங்காட்டில் ஓர் எல்லையில் அகப்பட்டு நில்லாதவளுடைய வாழ்நாளென்று கூறும் படியாக, அதனை வாழ்நாளாக உடையேனாதலால் அவலத்தைக்கொ ண்டு நெஞ்சழிவேனோ ? இறந்துபடுவேனே; எ - று.

ஊறுநீர் * * * கொழிவலோ—எ - து, தன்னிடத்து ஊறுகி ன்ற நீர் அமிழ்தத்தை ஒத்தற்குக் காரணமாகின்ற எயிற்றையுடை யாய் ! வெஞ்சுரத்துவழித் தண்ணீருண்டலை விரும்பின் நீர்களிலவெ ன்று அறத்தைக்கருதிக் கூறுகின்றவரோ ! யான் உம் நெஞ்சென்று சொல்லப்படுந் தெளிவுநீர்மையை யாறு நீர்கழிந்தாற்போன்ற இள மையாக உடையேனாதலால் இவ்விடத்தே சுழன்று நெஞ்சழிவே னோ ? இறந்துபடுவேனே; எ - று.

கழிந்த நீர்போல இளமையும் மீளாதென்பதுபொருள்.

மாணெழில் * * * சூழ்வலோ—எ - து, மாட்சிமைப்பட்ட அழகினையுடைய மூங்கிலைவென்ற தோளினையுடையாய் ! நீ வெஞ்சு ரத்தே வரில் அவ்விடத்தில் மரங்கள் நின் இளைப்பை ஆற்றும் மாட் சிமைப்பட்ட நிழலையுடையவல்லவென்று கூறுகின்றவரோ ! நீர் நீங்கி னால் என் நலம் நீண்ட நிழலினின்ற தளிர்போலே வெளுத்தலை அறிந்

திருப்பேறாதல்லால் யான் உம்முடைய திருவடியில் அருளைக்கைவிட்டு இங்கே இருத்தலைச் சூழ்வேனோ? இறந்துபடுவேனே; எ - று.

வென்ற, உவமவுருபு.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்றுயான் கூறவும்; எ - று.

ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

அணையரும் * * * வவையே—எ - து, அவ்விடத்துக் காடு நீ அணைய அரிய வெம்மையையுடையவென்று பின்னுங் கூறுகின்றவரே! பெருக்குங் கல்லின் நெருக்கத்தால் எய்த அம்பு ஓடாத அரிய வழியிடத்துப் பெருமையையுடைய கழுத்தினையும் அழகையுமுடைய ஏற்றின்பின் நீங்காமற் திரியும் பிணையையுங் காணாதிருக்கின்றீரோ? அவை நீர் அறியப் பிரியாவே; ஆதலால், எம்மையும் உடன்கொண்டே சென்மின்; எ - று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இங்ஙனந் தலைவி கூறுதல் *"மரபுநிலைதிரியா" என்னுஞ் சூத்திரத்து அமைத்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (கக)

உக. பான்மருண் மருப்பி னுரல்புரை பாவடி
யீர்நறுங் கமழ்கடா அத் தினம்பிரி யொருத்த
லாறுகடி கொள்ளும் வேறுபுலம் படர்ந்து
பொருள்வயிற் பிரிதல் வேண்டு மென்னு
மருளில் சொல்லு நீசொல் லினையே
நன்னர் நறுநுத லயந்தனை நீவி
நின்னிற் பிரியலெ னஞ்சலோம் பென்னு
நன்னர் மொழியு நீமொழிந் தனையே
அவற்றுள், யாவோ வாயின மாஅன் மகனே

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சக-ம் சூத்.

கிழவ ரின்னே சொன்னது பொருடான்
பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையு
மன்ன பொருள்வயிற் பிரிவோய் நின்னின்
றிமைப்புவரை வாழாண் மடவோ
ளமைக்கவின் கொண்ட தோளிணை மறந்தே.

இது தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி அவனை நெருங்கிக், களவுகாலத்தொழுக்கம் எடுத்துக்காட்டலாற் றெளிவுபட மொழிந்ததுஉம் பொருளதுநிலையின்மையும் அவளது ஆற்றாமையுங் கூறிச் செலவுமறுத்தது.

(இ - ள்.) பால்தான் மருளும் மருப்பினையும் உரலின் அடியையொக்கும் நிலத்தே பாவும் அடியினையும் ஈரத்தினையுடைய நறியவாகக் கமழும் மதத்தினையுமுடைய இனத்தைப் பிரிந்த யானை வழியைக் காவல்கொண்டு நிற்கும் வேறுபட்ட நிலத்தைப் போய்ப் பொருள் தேடுகின்ற இடத்தே இவளைப்பிரிந்திருத்தலை நெஞ்சு விரும்புமென்று சொல்லும் அருளில்லாத சொல்லையும் நீ சொன்னாய்; எம்மை விரும்பி நன்மையையுடைய நறிய நுதலை நீவி நின்னிடத்தினின்றும் பிரியேன் நீ அஞ்சுதலைத் தவிர்வாயென்று சொல்லும் நன்மையையுடைய சொல்லையும் நீ சொன்னாய்; அவ்விரண்டினுள் மயக்கத்தினையுடைய மகனே! உண்மையிடத்தன யாவைதான் அறிகின்றிலேன்; நீ தேடுகின்ற பொருடான் இத்தன்மையோர் நமக்கு உரியவொன்று கருதாதே பிறரிடத்து நின்ற நல்வினையாலே மீண்டு மீண்டு சென்று தங்கும்; நின்னையின்றிக் கண்ணிமைத்தொழில் நிகழுங் காலத்தின் எல்லையும் உயிர் வாழாத மடவோளுடைய அமையினுடைய அழகைத் தன்னிடத்தேகொண்ட தோளிரண்டினையும் மறந்து அத்தன்மைத்தாகிய பொருள் தேடுகின்ற இடத்தே இவளை விட்டுப் பிரிந்திருப்பாய்; எ - று.

அவற்றுளென இரண்டனுள் ஒன்றை வருத்தலின் யாது வாயதென ஒருமையாற் கூறற்பாலதுவும் "அவ்விரண்டனுட் கூர்ங் கோட்ட சுடர்வேல்" என்றதுபோலப் பன்மையொருமை மயங்கிற்று. பிரிவாயென்னும் முன்னிலையேவலொருமைமுற்று *"ஆயென் கிளவியு மவற்றொடு கொள்ளும்" என்றதனால் ஓவாய்நின்றது.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், கஉ-ம் சூத்.

* "உறுகணோம்ப றன்னியல் பாகலி - னுரிய தாகுந் தோழிகண் ணுரனே." என்பதனாற் குற்றேவற்றோழி 'பொருடான் பழவினை * * * பிரிவோய்' என அறிவுடையாளாகக் கூறினாள்.

இதனாற் றோழிக்கு அச்சமுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது அவற்றுளொன ஐஞ்சீரடி வந்து தனிச்சொல்லும் மடக்கியலுமின்றிச் சுரிதகம்பெற்று அடிநிமிர்ந்தோடிய கொச்சகம். (௨0)

௨௨. உண்கடன்வழிமொழிந் திரக்குங்கான் முகனுந்தாங்
கொண்டது கொடுக்குங்கான் முகனும்வே றாகுதல்
பண்டுமிவ் வுலகத் தியற்கை யஃதின்றும்
புதுவ தன்றே புலனுடை மாந்திர்
தாயுயிர் பெய்த பாவை போல
நலனுடை யார்மொழிக்கட் டாவார்தாந் தந்நலந்
தாதுதேர் பறவையி னருந்திறல் கொடுக்குங்கா
லேதிலார் கூறுவ தெவனோநின் பொருள்வேட்கை ;

நறுமுல்லை நேர்முகை யொப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டி னாய்மற்றெம் பல்லின்
பறிமுறை பாராட் டினையோ வைய;

நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
வைவகை பாராட்டி னாய்மற்றெங் கூந்தற்
செய்வினை பாராட் டினையோ வைய ;

குளனணி தாமரைப் பாசரும் பேய்க்கு
மிளமுலை பாராட்டி னாய்மற்றெம் மார்பிற்
றளர்முலை பாராட் டினையோ வைய;

எனவாங்கு,

அடர்பொ னவிரேய்க்கு மவ்வரி வாடச்
சுடர்காய் சுரம்போகு நும்மையா மெங்கட்
படர்கூற நின்றது முண்டோ தொடர்கூரத்
துவ்வாமை வந்தக் கடை.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௪௯.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி அதற்கு உடம்படாது தலைமகனை நெருங்கிக் களவுகாலத்தொழுக்கம் எடுத்துக்காட்டி ஆற்றுவித்து உடம்பட்ட வாய்பாட்டான் மறுத்தது.

(இ - ள்.) உண்கடன் * * * வேட்கை— எ - து, அறிவுடைய மாந்தீர் தாம் வாங்கியுண்ணுந் தனிசை வழிபாடாகச்சொல்லி இரந்துவாங்கும்பொழுது முகமலர்ந்திருத்தலும் அங்ஙனம் வாங்கின தனிசை மீண்டு கொடுக்கும்பொழுது முகங் கெட்டிருத்தலும் முன்பும் இவ்வுலகத்துள்ளார் இயல்பு; அஃது இன்றும் புதியதொன்றன்று; அஃது இயல்பாயவாறு என்னெனில், மகளிர்தம்முடைய நலத்தை அவர்களை இரந்துகொண்டு தாதைத் தேடி உண்ணும் வண்டுபோல நுகர்ந்து அதனை அவர் வேண்டின காலத்து அவர்க்குக் கொடாது சேட்டினைக் கொடாநின்றீர், அங்ஙனஞ் சேட்டினைக் கொடுக்குமிடத்து ஏதிலார்கூறுவதெவனோ? அதுவன்றியும் நன்மைக்குணமுடையார், சித்திரமெழுதுகின்றவன் உயிர்ப்புக் கொடுத்த பாவைதான் அழியுமளவும் அக்குறிப்பு நிற்குமாறுபோலத், தாங் கூறிய மொழியிடத்து உயிராகிய உண்மைகெடார், நீ அம்மொழியிடத்து நலந்தாவி நினக்கு நிகழ்கின்ற நின் பொருள்வேட்கையிடத்து நினக்கு ஏதிலாராகிய யான் கூறுகின்ற காரியம் எத்தன்மைத்து? பயன்படாதே; எ - று.

* "முன்னிலைப் புறமொழி யெல்லா வாயிற்கும் - பின்னிலைத் தோன்று மென்மனார் புலவர்." என்பதனான் இது முன்னிலைப்புறமொழியாகக் கூறினாள்.

முகனும் முகனுமென்னும் உம்மைகளை வேறுகுதலென்பதன் பின்னே கூட்டி எண்ணும்மையாக்குக. பண்டுமென்ற உம்மை எதிரதும் இன்றுமென்னும் உம்மை இறந்ததுந்தழீஇயின. மாந்திர் அண்மைவிளி. ஆர்ந்து அருந்தென விகாரமாயிற்று. இறல்கொடுக்குமிடத்து பொருள்வேட்கையிடத்து என்பன கூறுவதெவனென்பதனோடு முடிந்தன.

இது தரவு.

நறுமுல்லை * * * வைய—எ - து, ஐய எம் பல்லினுடைய விழுந்தெழுந்த முறைமையினையுடைய இளமைப்பருவத்தை இத

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், உகூ-ம் சூத்.

ற்குமுன்பு பாராட்டிவிட்டாய் அப்பருவம் ஒழிந்து நறிய முல்லையி னது தன்னிலொத்த முகையையொக்கும்படி நிரைத்த செறிந்த முறைமையாகிய நுகர்ச்சிக்குரிய இளமைப்பருவமெல்லாம் முற்பா ராட்டிவிட்டாயோ? அது செய்திலையே; எ - று.

மற்று, வினைமாற்று; ஓகாரம் எதிர்மறை.

பறிமுறை பாராட்டினாய் செறிமுறை பாராட்டினையோவெ னப் பாடத்தை மாறிப் பொருள்கூறுக. அன்றி அங்ஙனம் பாட மோதலும் ஒன்று.

நெய்யிடை * * * வைய—எ - து, ஐய, நீலமணி ஒளிவிட் டாற்போன்ற எங்கூந்தலிற் புழுகு பூசித் தாயர் ஐந்து வகையாக முடித்த இளமைப்பருவத்தை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய் அப்பருவம் ஒழிந்து நீதான் அதனிடத்துச் செய்யுந் தொழில்களை முற்றச்செய்து பாராட்டிவிட்டாயோ? அதுசெய்திலையே; எ - று.

தலைவன் செய்யுந் தொழிலாவன ஐவகையாக முடியாமற் தான் வேண்டியவாறே கோலங்கள் செய்துமுடித்தலும் அக்கூந்தல் அணையிற் துயிலுதல் முதலியனவுமாம்.

குளனணி * * * வைய—எ - து, ஐய, குளம் அழகுபெறுதற் குக் காரணமான தாமரையினது பசிய அரும்பையொக்கும் எம் முடைய ஊற்றின்பம் மிகவுமில்லாத இளமுலையை இதற்குமுன்பு பாராட்டிவிட்டாய் அப்பருவம் ஒழிந்து ஊற்றின்பத்தை மிகவுமு டைய நீக்கம் அறியாத ஏந்தின நிலைமை சிறிதுசாய்ந்த முலையினை யுடைய மிக்க இளமைப்பருவமெல்லாம் முற்றப் பாராட்டிவிட்டா யோ? அது செய்திலையே; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

இத்தாழிசையின் கருத்தான் முற்பட்டவற்றிற்கும் யாங் கூறியதே பொருளென்றுணர்க.

எனவாங்கு அசை.

இது தனிச்சொல்.

அடர் பொன் * * * கடை—எ - து, நும்முடன் இவட்குப் பிணிப்புமிகும்படி நல்வினை நெகிழ்கின்ற காலத்தே நும்மை நுகர ாமையாகிய தீவினை வந்து புகுந்த இடத்துத், தகடாகிய பொன்

னினது விளக்கத்தையொக்கும் அழகிய சுணங்கு கெடும்படி ஞாயி றுகாய்ந்த சுரத்தைப் போகும் நும்மை யாங்கள் எம்மிடத்து வருத் தத்தைச் சொல்லி விலக்க எம்மிடத்து ஒரு நல்வினை நின்றதும் உண்டோ? இல்லையே, யாங் கூறுவதென்? எ - று.

ஓகாரம் எதிர்மறை.

* "காமஞ் சான்ற கடைக்கோட் காலை - யேமஞ்சான்ற மக்க ளொடு துவன்றி - யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியுஞ் - சிறந் தது பயிற்ற லிறந்ததன் பயனே." என்னுஞ் சூத்திரத்திற் றலைவனுந் தலைவியும் மூப்புவருவதன்முன் துறப்பாரொன்றலிற் பல்லு விழும் பருவத்தும் நரைவரும்பருவத்தும் இல்லறஞ் செய்திருப்பாரொன்றல் பொருந்தாமையுணர்க.

இது சுரிதகம்.

இதனாற் றோழிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இஃது எட்டடித்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல் லும் வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. †"வெண் பா வியலினும் பண்புற முடியும்" என்பது விதி. இது மேல்வருவன வற்றிற்குங்கொள்க. (உக)

உஉ. இலங்கொளி மருப்பிற் கைம்மா வுளம்புநர்
புலங்கடி கவணையிற் பூஞ்சினை யுதிர்க்கு
மிலங்குமலை வெம்பிய போக்கருவெஞ்சுரந்
தனியே யிறப்ப யாணெழிந் திருத்த
னருதற் கொன்றிவ் வழுங்க லூர்க்கே;

இனியான்,

உண்ணலு முண்ணேன் வாழலும் வாழேன்;

தோணல முண்டு துறக்கப் பட்டோர்
வேணீ ருண்ட குடையோ ரன்னர்;

நல்குநர் புரிந்து நலனுணப் பட்டோ
ரல்குநர் போகிய வூரோ ரன்னர்;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் ருக-ம், சூத்.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், எஎம் ,,

கூடினர் புரிந்து குணனுணப் பட்டோர்
சூடின ரிட்ட பூவோ ரன்னர்;

எனவாங்கு,

யானு நின்னகத் தனையே னாது
கொலைவெங் கொள்கையொடு நாயகப் படுப்ப
வலைவர்க் கமர்ந்த மடமான் போல
நின்னுங்கு வரூஉமென் னெஞ்சினை
யென்னுங்கு வாரா தோம்பினை கொண்மே.

இது பிரிவுணர்த்தப்பட்டு ஆற்றாளாய தலைவி எம்மையும் உடன்கொண்டு சென்மினென்றாட்கு உடன்படாது அவன் பிரியலுறத் தனது இறந்துபாடுதோன்றக் கூறியது.

(இ - ள்) இலங்கொளி * * * வாழேன்—எ - து, விளங்குகின்ற ஒளியினையுடையவாகிய கொம்பினையுடைய யானையை அலைப்பார் அந்நிலத்தினின்றும் அவ்வியானையை ஓட்டுங் கவணையாலே பூக்களையுடைய கொம்பிற் பூக்களை உதிர்க்கும் விளங்குகின்ற மலைகள் வெம்பிய போதலரிய வெய்ய சுரத்தைத் தனித்து நீ போக யான் நின்னைக் கைவிட்டிருத்தல் இந்த இரக்கத்தையுடைய ஊர்க்குச் சிரித்தற்குத்தக்க காரியம்; நீ இங்ஙனம் பிரியுமளவில் யான் உண்டற்கு உரியனவற்றை உண்ணுதலுஞ்செய்யேன், உயிரை வாழ்தலுஞ்செய்யேன்; எ - று.

உண்ணேன், வாழேனென்பன முழுவதுங் காரியவாசகமாயே நிற்குமென்பது, *“ வினையேசெய்வது” என்னுஞ் சூத்திரத்தாற் கூறினும். உம்மைகள் எண்ணும்மை. உண்ணாவும் உண்ணேனென்பது பசியடநிற்றல்.

இது தரவு.

தோணல * * * ரன்னர்—எ - து, தோளின் நலத்தை நுகர்ந்து கணவராற் துறக்கப்பட்ட மகளிர் தண்ணீர்வேட்கையாலே கோலித் தண்ணீர்குடிக்கப்பட்ட எச்சிலாற் பயன்படாத குடையோலையை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ-று.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல்; ௨௯-ம், சூத்.

நல்குநர் * * * ரன்னர்—எ - து, மனம் விரும்பியருளின கணவர் நலத்தை நுகர்ந்து விடப்பட்ட மகளிர் குடியிருப்பார் போகிய பாழுரை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ-று.

கூடினர் * * * ரன்னர்—எ - து, மனம் விரும்பிக் கூடின கணவராற் தங் குணத்தை நுகர்ந்துவிடப்பட்ட மகளிர் முடிப்பார் முடித்துப்போகட்ட பூவை ஒப்பர், அந்நிலையை ஓர்ந்துபார்; எ-று.

இவை *"உண்டற் குரிய வல்லாப் பொருளை" என்னுஞ் சூத்திரத்தில் உய்த்துக்கொண்டுணர்தலென்பதனாற் கொண்டாம்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச் சொல்.

யானுநின் * * * கொண்மே—எ - து, நின்னிடத்துயானும் பயன்படாத தன்மையையுடையேன், இனிக் கொலைத்தொழிலிடத்துக் கடிய கோட்பாட்டோடே நாய் அமையாமற் சென்று தனக்கு உரித்தென்று அகப்படுத்திக்கொள்ள அதற்கு உரித்தாகாது வலைவர்க்கு அமர்ந்துவிட்ட மடமான்போலே எனக்கு உரித்தாக யான் அகப்படுப்பவும் என்னுங்கு வாராமல் நின்னுங்குவரும் என் நெஞ்சினைப் பாதுகாத்துக்கொள்; எ - று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

நின்னுங்கு என்னுங்கு என்பன நின்னுடைய கையிடத்து என்னுடைய கையிடத்து எனச் சுட்டுப்பொருள் தந்தவாறுணர்க.

இஃது இனியான் எனத் தனிச்சொல்லும் ஓரடியான் ஒன்றும் பெற்றுவந்த கொச்சகம். இது †"பாநிலைவகை" என்னுஞ் சூத்திரவிதி. (உஉ)

உச. நெஞ்சு நடுக்குறக் கேட்டுங் கடுத்துந்தா
மஞ்சிய தாங்கே யணங்காகு மென்னுஞ்சொ
லின்றீங் கிளவியாய் வாய்மன்ற நின்கேள்
புதுவது பன்னாளும் பாராட்ட யானு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கக-ம். சூத்.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கசுஅ ,,

மிதுவொன் றுடைத்தென வெண்ணி யதுதேர
மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட்
பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற்
றொடிநிறை முன்கையாள் கையாறு கொள்ளாள்
கடிமனை காத்தோம்ப வல்லுவள் கொல்லோ
விடுமருப் பியானை யிலங்குதேர்க் கோடு
நெடுமலை வெஞ்சுரம் போகி நடுநின்று
செய்பொருண் முற்றுமள வென்று ராயிழாய்
தாமிடை கொண்ட ததுவாயிற் றம்மின்றி
யாமுயிர் வாழு மதுகை யிலேமாயிற்
றொய்யி றுறந்தா ரவரெனத் தம்வயி
னொய்யார் நுவலும் பழிநிற்பத் தம்மொடு
போயின்று சொல்லென் னுயிர்.

இது தலைமகன் குறிப்புக் கண்டு பிரிவனென ஐயுற்றுச்செல்கின்ற தலைவி அக்காலத்துத் தலைவன் கனவின் அரற்றினமை கேட்டுப் பொருள்வயிற்பிரிகின்றானெனத் துணிந்து ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது. இது *"மேலோர் முறைமை நால்வர்க்கு முரித்தே" என்பதனால் அந்தணன் அறங் கருதித் தூதிற்பிரிந்து அவ்வரசர் செய்த பூசனை வாங்கிக்கொண்டு வருதற்குப் பிரிகின்றதென்று கொள்க. இது "வேற்றுநாட்டகல்வயின் விழுமங்" கூறுகின்றது.

(இ - ள்.) இன்றீங்கிளவியையுடையாய்! நெஞ்சு நடுக்கமுறும்படி பலகாலுங் கேட்டுங் கேட்ட அதனை உண்டோ இல்லையோவென்று ஐயுற்றுந் தாம் அஞ்சியிருந்த பொருள் தாங் கேட்டபடியிலே மெய்யாய் வருத்தமாமெனும் பழமொழி அறுதியாக, உண்மையது எங்ஙனேயென்னில், நின்னுடைய உறவானவர், பலகாலும் புதியதொன்றாக என்னைப் பாராட்டுகையினாலே யானும் இப்பாராட்டுதல் ஒரு பிரிவையுடைத்தென்று கருதி அப்பிரிவை ஆராயாநிற்க, ஐந்துவகையாகக் கூட்டின மாசில்லாத வண்மையையுடைய படுக்கையிற் புணர்ந்த புணர்ச்சியிடத்தே என்தோளிலே துயில்கொண்டு கனாக்காண்கின்றவர், ஆராய்ந்த கோற்றொழிலையுடைய செறிந்த தொடியணிந்த முன்கையினையுடையாள் கையாறுகொள்ளாளாய்க், குத்துங் கொம்பினையுடைய யானை நீர் வேட்கையினாலே விளங்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உகூ-ம், சூத்.

குகின்ற பேய்த்தேரின் பொருட்டு ஓடும் நெடுமேலையில் வெய்யசுரத்தைப் போய் இருபெருவேந்தரையுஞ் சந்துசெய்வித்தற்கு நடுவாகநின்று சந்துசெய்வித்தபின்னர் யாம் பெறுதற்கு உரியவாய் அவர் எமக்குச்செய்யும் பூசனையாகிய பொருள் அவர் தந்து முடியுமளவும், தனக்கு வளைவினையுடைய இல்லறத்தையுங் காத்துச் செந்தீயையும் பாதுகாக்க வல்லளோவென்று கூறினர்; ஆய்ந்த இழையினையுடையாய்! நங் காதலர் கூட்டத்திற்கு இடையீடாகக் கொண்ட காரியம் பொருள்வயிற்பிரிவாயின், யாந் தம்மைப் பிரிந்து உயிர்வாழும் வலியிலேமாயில், இனி, அவள் மார்பிற் தொய்யிலை நீங்காதவர் இப்பொழுது துறந்தாரென்று நொய்ய மகளிர் கூறும் பழி தம்மிடத்தே நிற்ப, என்னுயிர் தம்மோடேகூடப் போயிற்றென்று சொல்; எ - று.

நெஞ்சுநடுக்குறக் கேட்டது இவ் ஆலிலே பேயுண்டென்று கேட்டாற்போல்வன. இன்கிளவி, பின்பு காரியத்தில் இனிய கிளவி; தீங்கிளவி, கேட்டகாலத்தில் இனிய கிளவி.

கனவுவாரொன்றது தொடங்கி என்றுரொன்ற துணையுங் கனவென்னும் மெய்ப்பாடு. கையாறு, உயிர்ப்பின்றி வினையொழிந்தயர்தல். தொய்யில் அவரொனக் கூட்டுகெ.

போயின்றென்ற குற்றுகரம் இன்பெற்று னகரந் திரியாமல் நின்றது. தெளிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினள்.

இதனாற் தலைவிக்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இது சீருந் தளையுஞ் சிதையாமற் பன்னீரடியின் இகந்து ஒரு பொருணுதலாத சீர்வகைக் கலிவெண்பா. (உ௲)

உரு. வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினா
லைவரொன் றுலகேத்து மரசர்க ளகத்தராக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக்
களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா
முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ
லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன்
னுள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல
வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ

மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத்தங்
குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுர
மிறத்திரா லையமற் றிவணிலைமை கேட்டிமின் ;

மணக்குங்கான் மலரன்ன தகையவாய்ச் சிறிதுநீ
தணக்குங்காற் கலுழ்பாலுக் கண்ணெனவு முளவன்றே
சிறப்புச்செய் துழையராப் புகழ்பேற்றி மற்றவர் [ல்;
புறக்கொடையே பழிதூற்றும் புல்லியார் தொடர்புபோ

ஈங்குநீ ரளிக்குங்கா லிறைசிறந் தொருநாணீர்
நீங்குங்கா னெகிழ்போகும் வளையெனவு முளவன்றே
செல்வத்துட் சேர்ந்தவர் வளனுண்டு மற்றவ
ரொல்கிடத் துலப்பிலா வுணர்விலார் தொடர்புபோல்;

ஒருநாணீ ரளிக்குங்கா லொளிசிறந் தொருநாணீர்
பாராட்டாக் காற்பசக்கு நுதலெனவு முளவன்றே
பொருந்திய கேண்மையின் மறையுணர்ந் தம்மறை
பிரிந்தக்காற்பிறர்க்குரைக்கும்பீடிலார்தொடர்புபோல்;

எனவாங்கு,

யாநிற் கூறுவ தெவனுண் டெம்மினு
நீநற் கறிந்தனை நெடுந்தகை வானந்
துளிமாறு பொழுதினிவ் வுலகம் போலுநின்
னளிமாறு பொழுதினிவ் வாயிழை கவினே.

இது பிரிவுணர்த்தப்பட்ட தோழி நீ பிரிந்தாற் பீடிலார் தொடர்புபோல நும்மை அலர்தூற்றுவன இவ்வகைப்பட்டன சிலவுளவெனத் தலைவி ஆற்றாமை கூறிச் செலவழுங்குவித்தது.

(இ - ள்.) வயக்குறு * * * கேட்டிமின்—எ - து, வடமொழிப் பெயர்பெற்ற வயக்குறு மண்டிலம்போலும் முகத்தவனுடைய மக்களுள் மூத்த துரியோதனன் சூட்சியாலே, ஐவரொன்று உலகத்தார் புகழுந் தன்மபுத்திரர் முதலியோர் உள்ளேயாகக், கையாலே புனையப்பட்ட அரக்குமாளிகையை விரைந்து நெருப்புச்சூழ்ந்தாற்போலக், களிப்பு விளங்குகின்ற மதத்தவாகிய கடிய களிறுகள் உள்ளேயாக, உலர்ந்த மூங்கிலையுடைய உயர்ந்த மலையைச் சூழ்ந்த முழங்

குகின்ற அழலைக், கணையத்தை மாறுபடுக்கின்ற தடக்கையினையுடைய தன் இனத்தைக் காக்கும் அழகினையுடைய வேழம், புகையழலையுடைத்தாகிய ஒள்ளிய உருவத்தினையுடைய அவ்வரக்கில்லை அந்த வீமசேனன் அழித்துத் தன் உளத்திற்குப் பொருந்தின சுற்றத்தோடே பிழைக்கப் போகின்றவனைப்போல, அதர்படும்படி மிதித்துத் தம்முடைய திரளோடே கூடிப் போதுங் காட்டுப் பரப்புச் சூழ்ந்த குன்று அழலும் வெய்தாகிய சுரத்தை இறப்பீராயின், ஐயனே! பின்னை இவளுடைய நிலைமையைக் கேட்பீராக; எ - று.

வடமொழிப்பெயர் பெற்ற வயக்குறு மண்டிலம் போலும் முகத்தவனென்றது, ஆதித்தரிற் பகனென்னும் வடமொழிப்பெயரைப் பெற்ற விளங்குதலுறும் ஆதித்தனைப் போலும் முகத்தையுடையவனென்பது. அவன் தான் குருடாயினமையிற் பிறரைக்காணாதவாறுபோல இவனும் பிறரைக் காணாத முகத்தையுடையவனென்றவாறு. திரிதராஷ்டிரனை. இனி, விளக்கமுற்ற கண்ணாடியின்பெயரை வடசொல்லாகிய பெயராற் பெற்ற முகத்தவன் என்றலுமாம். அது தர்ப்பணானனனென்னும்பெயரை. அது பிறரைத் தான் காணாதவாறுபோல இவனும் பிறரைக்காணானென்றதாம். இனி, விளக்கமுற்ற நாமடைநின்ற அச்சொல்லினைத் திரிதராஷ்ட்ரனென்னும் வடமொழிப்பெயராலே தமிழ்ச்சொலீறாகத் திரித்த * ததராயனென்னும் பெயர் பெற்ற பாண்டுவுக்கு மூத்தவனென்றும் உரைப்ப.

முற்றிய முழங்கழலை, இனங்காக்கும் வேழம், புகையழலையுடைய அவ்வரக்கில்லை அவ்வலிமகன் உடைத்துக் கிளைகளோடே போவான்போல, அதர்பட மிதித்துக் குழுவொடுபுணர்ந்து போஞ் சுரமென்க. அழலைமிதித்துப் போமென முடிந்தது. அழுவஞ் சூழ் குன்று அழல்சுரமென்க. இது சுரத்திற்கு அடை.

ஐய? கேண்மினென்பது ஒருமைப்பன்மைமயக்கம். ஆயில், ஆலென விகாரமாயிற்று.

இது தரவு.

மணக்குங்கால் * * * தொடர்புபோல்—எ - து, தம்மிடத்தே இருந்தாராக அவர்களுக்குச் சிறப்புக்களைச்செய்து புகழ்ந்து வாழ்த்தி அவர் எழுந்த அளவிலே அவர்க்குள்ள பழிகளைப் பலர்க்குங் கூறும் புறங்கூறுவாருடைய உறவுபோல நீ கூடியிருக்குங் காலத்துச் செவ்

* சிரிததராயனென்றும் பாடம். எவ்வாறுகொளினும் பொருத்தமில்லை.

வியைத் தோற்றுவித்து மலரையொத்த தகைமையினையுடையவாய்ச் சிறிதுபொழுது நீர் பிரியுங்காலத்து நம் பழியைத் தூற்றி அழுதலமையாத கண்ணெனவுஞ் சில பகை உளவன்றோ? எ - று.

அப்பகையைப்பேணுங் கண்ணெனவுமென்றது "கண்ணிற் சிறந்தவுறுப்பில்லை" எனப்பட்டும் பகையாமென்னுங் குறிப்பிற்று.

ஈங்குநீ * * * தொடர்புபோல்—எ - து, ஒருவர்க்குச் செல்வமுண்டான இடத்து நீங்காதிருந்து அவருடைய செல்வத்தை நுகர்ந்து பின்னை அவர் மிடித்தகாலத்து அவர்க்கு ஒன்றை உதவுதலில்லாத அறிவில்லாதாருடைய உறவுபோலே நீர் இவ்விடத்தே கூடியிருந்து அருள்செய்யுங்காலத்து இவட்கு உண்டாகிய அழகைத் தானும் பெற்று இறையிலே சிறந்துகாட்டி ஒருநாள் நீர் பிரியுங்காலத்துத் தோள் மெலிகையினாலே தான் உதவிசெய்யாது கழன்றுபோம் வளையெனவுஞ் சில பகை உளவன்றோ; எ - று.

அப்பகையைப் பேணும் வளையெனவுமென்றது சிறந்து அழகுதருமாயினும் பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று.

ஒருநாணீ * * * தொடர்புபோல்—எ - து, இருவர் மனமும் பொருந்திய நட்பாலே அவன்கூறிய மறைப்பொருளை அறிந்து அம்மறைப்பொருளை அவன் நீங்கினாற் பிறர்க்கு இருந்துசொல்லும் பெருமையில்லாதார் உறவுபோலே ஒரு நாள் நீர் அளிசெய்யுங் காலத்து நும் அளிக்குத் தானுங் கூடினாற்போன்று ஒளி மிக்கு ஒரு நாள் நீர் அளியாக்காலத்து நும்முடைய குணத்தைப் பிறர்க்கு அறிவித்துப் பசந்துகாட்டும் நுதலெனவும் ஒருபகை உண்டன்றோ? எ - று.

அப்பகையைப் பேணும் நுதலெனவுமென்றது, சிறப்புறுப்பாய் அழகு கொடுத்தற்கு உரியது பகையாயிற்றென்னுங் குறிப்பிற்று. மெய்யெல்லாங் கோலஞ்செய்தாலும் நுதற்குத் திலகம் முதலியன இட்டாக்கால் அவைகோலமாய்த் தோன்றாத தன்மை நுதற்கு உளதாகலிற் சிறப்புறுப்பாயிற்று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ-து, என்று; எ-று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

யாநிற் * * * கிளவி—எ - து, யாம் நினக்குக் கூறுகின்ற வார்த்தையால் என்னபயன் உண்டு? எம்மினுங்காட்டில் அப்

பகையுண்மையை நீ நன்றாக அறிந்தாய்; அதுவுமன்றி, நெடுந்தகாய்! இந்த ஆராய்ந்த இழையினையுடையாள் அழகு நீ அளித்தலை நீங்குங் காலத்து இவ்விடத்து வானந் துளிமாறுபொழுது இவ்வுலகங் கெடுமாறுபோலக் கெடுங்காண்; அதனை உட்கொள்ளாய்; எ - று.

இது சுரிதகம்.

இதனாற் றோழிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது பெருமைக்கெல்லை கூறிய பன்னீரடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உச)

உரு. ஒருகுழையொருவன்போலிணர்சேர்ந்தமராஅமும்
பருதியஞ் செல்வன்போ னனையூழ்த்த செருந்தியு
மீனேற்றுக் கொடியோன்போன்மிஞிறார்க்குங் காஞ்சியு
மேனோன்போ னிறங்கிளர்பு கஞலிய ஞாழலு
மானேற்றுக் கொடியோன்போ லெதிரிய விலவமு மாங்
கித்தீர் சிறப்பி னைவர்க ணிலைபோலப் [கத்
போதவிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற
நோதக வந்தன்றா லிளவேனின் மேதக;

பல்வரி யினவண்டு புதிதுண்ணும் பருவத்துத்
தொல்கவின் றொலைந்தவென் றடமென்றோ ளுள்ளுவா
ரொல்குப நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
வெல்புக ழுலகேத்த விருந்துநாட் டுறைபவர்;

திசைதிசை தேனார்க்குந் திருமருத முன்றுறை
வசைதீர்ந்த வென்னலம் வாடுவதருளுவார்
நசைகொண்டு தந்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
மிசைபரந் துலகேத்த வேதினாட் டுறைபவர்;

அறல்சாய பொழுதோடெம் மணிநுதல் வேறாகித்
திறல்சான்ற பெருவனப் பிழப்பதை யருளுவா
ரூறஞ்சி நிழல்சேர்ந்தார்க் குலையாது காத்தோம்பி
யாறின்றிப் பொருள்வெஃகி யகன்றநாட் டுறைபவர்;

எனநீ,

தெருமரல் வாழி தோழிநங் காதலர்
பொருமுரண் யானையர் போர்மலைந் தெழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்
வருமென வந்தன்றவர் வாய்மொழித் தூதே.

இது *"மேவிய சிறப்பி னேனோர்" என்னுஞ் சூத்திரத்திற் பகைமேற்சென்ற அரசன் திறைபெற்ற நாடு காத்து அதன்கட் தன் நெறிமுறைமை அடிப்படுத்துவதற்குப் பிரிவனென்றலின், பிரிவின்கட் தலைவன் இளவேனிற்காலத்துப் பிரிய, அக்காலவரவின்கட் தலைவி ஆற்றாளாய் அவர் நமக்கு அருளுங் காலையில் அருளார்சாணென்றாட்குத், தோழி, அவர் வரவிற்கு இக்காலந் தூதாயன்றே வந்தது? நீ ஆற்றுவாயாகவென வற்புறுத்தியது.

(இ - ள்.) ஒருகுழை * * * மேதக—எ - து, நீர்பொருகின்ற கரையினிற்கும் ஒரு பூங்குழையையுடைய நம்பி மூத்தபிரானைப்போலப் பூங்கொத்துக்கள் பொருந்தின வெண்கடம்பும் பருதியாகிய அழகிய செல்வனைப்போல அரும்புகள் அலர்ந்த செருந்தியுஞ் சுறவையுடைத்தாகிய கொடியினையுடைய காமனைப்போல மிஞிறுகள் ஆரவாரித்தற்கிடமாகிய காஞ்சியும் அவன் தம்பி சாமனைப்போல நிறம் விளங்கிய பூக்கள்நெருங்கின ஞாழலும் இடபத்தினையுடைய கொடியினையுடைய இறைவனைப்போலப் பூக்கள் காலத்தை எதிர்கொண்ட இலவமுந், தமக்குக் குற்றந் தீர்ந்த தலைமையினையுடைய ஐவர்களுடைய நிறத்தின்றன்மைபோல, அக்கரையிடத்துப் பூக்கள் விரிந்த பிற மரங்களோடே அழகுபெறப், பிரிந்தார்க்கு நோவு பொருந்தக் கூடியிருந்தார்க்குப் பெருமைபொருந்த இளவேனில் வந்துற்றது; எ - று.

மீனிலேறு, ஆனிலேறு, மிஞிறார்க்குங்காஞ்சி, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேலே நின்றது. எனோன், ஏனை யோனின் விகாரம். ஆங்கென்றது அக்கரையை. கரை மராமுஞ் செருந்தியுங் காஞ்சியும் ஞாழலும் இலவமும் பிறமரங்களோடே கவின்பெறவென இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏற்றலுமொன்று.

இது தரவு.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உகூ-ம் சூத்.

பல்வரி * * * டுறைபவர்—எ - து, இயற்கை நலங்கெட்ட என்னுடைய பெருமையையுடைய மெல்லிய தோளைப் பலவரியி னையுடைய இனமாகிய வண்டுகள் புதிதாகிய தேனை நுகரும் இள வேனிற்காலத்தே கூட நினைப்பார், முன்னர் அந்நாடு ஆள்பவர் சல க்கமுறுத்த அலைபெற்றுப், பின் தன்னை நிழலாக அடைந்த குடிம க்களுக்கு நெஞ்சுவருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து, முன் பு நாடு ஆட்சிபெற்ற பகைவரை வென்ற புகழை உலகத்தார் புக ழப் புதுமையையுடைய நாட்டிலே இருக்கின்றவர்; எ - று.

என்றதனுற் றிறைபெற்ற நாட்டைத் திருத்தித் தன் நாடு போல் நெறிமுறைமை நடத்துவித்தலே பொருளென்று இருக்கின் றவர் நம்மை நினையார்காணென்று நிகழ்ந்தது கூறினாள். விருந்து நாடெனவே பகைவர் தோற்றுத் திறைகொடுத்தமை தோன்றிற்று.

உள்ளுவாரென முற்றுவினைப்பெயர்கொண்டுகின்றது காத்து உறைபவரென்க.

திசைதிசை * * * டுறைபவர்—எ - து, குற்றமற்ற என் நலங் கெடுவதற்குத் திசைதோறுந் திசைதோறுந் தேனினம் ஆரவாரிக் குந் திருமருதந்துறைமுன்னே அருளுதலைச் செய்வார், நம்மைக் காத்தற்குரியான் இவனென்று நச்சுதல் கொண்டு தம்மை நிழலாக வந்தடைந்த குடிமக்களைத் தமக்குப் பாரமென்று பொறுத்துத் தம் புகழ் உலகெங்கும் பரக்கையினாலே அவ்வுலகத்தார் புகழத் தமக் கயலாகிய நாட்டிலே இருக்கின்றவர்; எ - று.

* "யாறுங் குளனுங் காவு மாடிப் - பதியிகந்து நுகர்தலு மு ரிய வென்ப" என்பதனாற் றிருமருதந்துறையில் அருளுவாரென்றாள்.

அறல்சாய * * * டுறைபவர்—எ - து, எம்முடைய அழகி னையுடைய நுதலும் பசந்து நாமும் வலியமைந்த பெரிய அழகை இழப்பதற்கு நீரற்று ஓடுதல்சுருங்கின இளவேனிற் காலத்தே அரு ளுதலைச் செய்வார், முன்பு நாடு ஆட்சிபெற்ற அரசர்செய்த வருத்த த்திற்கு அஞ்சி நிழலாக வந்தடைந்தார்க்கு நெஞ்சுவருந்தாதபடி பகைவரைப் பேணிக் காத்து நெறியன்றி அவ்வரசர் பொருளை வி ரும்புகையினாலே அவரை நீங்கின நாட்டிலே இருக்கின்றவர்; எ - று.

இவ்வ மூன்றுந் தாழிசை.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௩௰-ம் சூத்.

எனநீ * * * தூதே—எ - து, என்றுகூறி மனஞ்சுழலாதே கொள்; அதற்குக் காரணம் யாதெனில், நங் காதலர் பொருகின்ற மாறுபாட்டையுடைய யானையையுடையராய்ப் போர்செய்தற்கு மாறுபட்டு எதிர்வந்தவருடைய போரிடத்தே நீ கூறியவாறே மேலான நாடுகளைப் பெற்ற வெற்றியையுடையராகையினாலே அவருடைய மெய்ம்மொழியாகிய தூது வருவதொன்றுசொல்லி வந்ததுகாண்; இனித் தோழி நீ இனிதுவாழ்வாயாக; எ - று.

மேம்பட்ட, ஈண்டுப் பெயராய் நின்றது. வரவெனவந்தன்று என்று பாடமாயின், வெற்றியையுடையராகையினாலே அவர் மெய்ம்மொழியாகிய தூது வந்ததென்று சொல்லி வந்ததென்க.

எனநீ, தனிச்சொல்; எஞ்சியது சுரிதகம்.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இது தரவின்கண் ஐஞ்சீரடிவருதலிற் கொச்சகமாய்க் கலிவெண்பாட்டின் வேறுபட்டது. (உரு)

உஎ. ஈதலிற் குறைகாட்டா தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போற் றீங்கனி மரநந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழின் மானோக்கின்
மாதரார் முறுவல்போன் மணமௌவன் முகையூழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போற் கழல்குபு
தாதொடுந் தளிரொடுந் தண்ணற நகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடிலா வரசனுட்
டேதிலான் படைபோல விறுத்தந்த திளவேனில்;

நிலம்பூத்த மரமிசை நிமிர்பாலுங் குயிலெள்ள
நலம்பூத்த நிறஞ்சாய நம்மையோ மறந்தைக்க
கலம்பூத்த வணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்பானுக் கூடலு முள்ளார்கொல்;

கன்மிசை மயிலாலக் கறங்கியூ ரலர்தூற்றத்
தொன்னல நனிசாய நம்மையோ மறந்தைக்க
வொன்னுதார்க்கடந்தடூஉ முரவுநீர்மாகொன்ற[கொல்;
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்

மையெழின் மலருண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினாற் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க
தைஇய மகளிர்தம் மாயமோ டமர்ந்தாடும்
வையைவா ருயரொக்கர் நுகர்ச்சியு முள்ளார்கொல்;

எனவாங்கு,

நோய்மலி நெஞ்சமொ டினைய றோழி
நாமில்லாப் புலம்பாயி னடுக்கஞ்செய் பொழுதாயிற்
காமவேள் விழவாயிற் கலங்குவள் பெரிதெனா
வேமுறு கடுந்திண்டேர் கடவி
நாமமர் காதலர் துணைதந்தார் விரைந்தே.

இது தலைவன் குறித்துப் பிரிந்த இளவேனில் வரவின்கண் எம்மையோமறக்க, இக்காலத்து இவ்வூரின்கட் தாம் விளையாடும் விளையாட்டும் மறந்தாரோவெனச் சொல்லி ஆற்றுளாய தலைவிக்குத் தோழி, தலைவன் வரவுணர்ந்து கழி உவகையாற் கூறியது.

(இ-ள்.) ஈதலிற் * * * இளவேனில்—எ-து, கொடுத்தற்றொழிலிடத்துப் பொருட்குறை காட்டாமற் கொடுத்து இல்லறம் நிகழ்த்தும் முறைமையை அறிந்து நிகழ்த்திய தீவினையில்லாதவனுடைய செல்வம் மிகுமாறுபோல இனிதாகிய நீரையுடைய ஆற்றங்கரையில் மரங்கள் தழைக்கக், கேட்டோர் மயக்கம் உறுதற்குக் காரணமான மடமொழியினையும் மான்பிணையினது அழகையுடைய நோக்குப்போல நோக்கினையுமுடைய காதலையுடைய மகளிருடைய எயிறுபோல் மணத்தையுடைய மௌவலின் முகை அலரத், தண்ணிதாகிய அறுதியையுடைய மணல் சுழன்று வீழ்ந்த தாதாலுந் தளிராலுங் காதலரைக் கூடினவருடைய மயிர்போல அழகுபெற, இளவேனிற்காலம் அறிவில்லாத அமைச்சன் காரியத்தைப் புலப்படுத்தப் படைவலி இல்லாத அரசனது நாட்டிலே பகையரசன் படை வந்துவிடுமாறுபோலத் தங்குதலைச் செய்தது.

ஊழ்ப்பத் தகைபெற இளவேனில் இறுத்தந்ததென்க. காட்டாதென்பதற்குக் கொடுத்தென்றுங் * கழல்குபுவென்பதற்கு வீழ்ந்தவென்றும் வினை வருவிக்க.

இது தரவு.

---

* கழல்புகு என்றுபாடமாயின் அதற்கோர் வினை வேண்டிலது.

நிலம் பூத்த * * * முள்ளார்கொல்—எ - து, நிலம் பொலிவுபெறுதற்கு ஏதுவாகிய மரத்தின்மேலேயிருந்து காலங்கண்டு எக்கழுத்தஞ்செய்து ஆரவாரிக்குங் குயில்கள் நம்மை இகழும்படியாக நன்மைபொலிவுபெற்ற நமது நிறங்கெடும்படியாகத் தாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக, தாம் அணிந்த கலங்கள் பொலிவுபெறுதற்குக் காரணமான அழகினையுடைய பரத்தையருடைய அழகு தம் மனத்தை மகிழ்ச்சியைச் செய்கையினாலே தம் அறிவு பொலிவு பெற்றவளைப் புகழ்தல் அமையாத கூடலை நினையாரோ ? நினைக்கில் வருவரன்றோ ? எ - று.

பெயரெச்சத்திற்குக் காரணம்வருதல் கருவிக்கண் அடங்கும். மறந்தைக்க, வியங்கோட் திரிசொல்.

நன்மிசை * * * விரும்பார்கொல்—எ - து, நஞ்சாயல் கெட்டமைகண்டு மலைமேலே மயில் ஆரவாரித்து ஆடும்படியாக, ஊரிலுள்ளார் ஆரவாரித்து அலர் தூற்றும்படியாக, நம்முடைய இயற்கைநலமும் மிகக்கெடும்படியாகத், தாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக, பகைவரை மாயஞ்செய்துகொல்லாது வென்றுகொல்லும் பரக்குங் கடலிடத்து எய்தாநின்ற மாமரத்தைத் தடிந்த வெண்வேலையுடைய முருகன் திருப்பரங்குன்றின்மேற் பரத்தையருடன் விளையாடும் விளையாட்டையும் விரும்பாரோ ? விரும்பில் வருவரன்றோ ? எ - று.

*"எந்நில மருங்கிற் பூவும் புள்ளு - மந்நிலம் பொழுதொடு வாரா வாயினும் - வந்த நிலத்தின் பயத்த வாகும்." என்ற விதிபற்றிக் குறிஞ்சிக்குப் பயின்ற மயில் பாலைக்கண் இளவேனிற்காலத்து வருதலிற் பொழுதொடு புள்ளும் மயங்கிற்று.

மையெழின் * * * முள்ளார்கொல்—எ - து, எம்மை மயலாக்கிக் கருமையுடைத்தாகிய அழகினையுடைய நீலமலர்போலும் மையுண்கண்ணை மகிழ்ச்சிகொள்ளும்படி தன்னோடே மருவுதலூட்டித் தான் செய்த பொய்யாலே மனந் தன்னிடத்திலே புரிதலைச்செய்த தாம் விரும்பாத நம்மையோ மறப்பாராக, கோலஞ்செய்தலையுடைய பரத்தையர் தம்முடைய திரளோடே மனம் பொருந்தி விளையாடும் வையையாற்றிடத்து நீண்ட உயர்ந்த இடுமணலிடத்து நுகர்ச்சியையும் நினையாரோ ? நினைக்கில் வருவரன்றோ ? எ - று.

மருவுதலூட்டியென்றார் அக்கண்ணிடத்து நாவாற் செய்யுந் தொழிலை. மருவூட்டிச்செய்தவென ஒருசொல் வருவிக்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கக-ம் சூத்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்றுகூறி; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

நோய்மலி * * * விரைந்தே—எ - து, நோய்மிக்க நெஞ்சோடேவருந்தாதேகொள்; தோழி! நாம் அமர்ந்தகாதலர் தனிமையாயின் நாமில்லாத தனிமையாயிருந்தது, காலமாயிற் பிரிந்தார்க்கு நடுக்கஞ் செய்யும் இளவேனிற்காலமாயிருந்தது, ஊரிலுள்ளார் கொண்டாடும் விழவாயிற் காமவேளுக்குச் செய்யும் விழவாயிருந்தது, ஆதலாற் பெரிதுங் கலங்குவளென்று கருதிப் பகைவர் மயக்கம் உறுதற்குக் காரணமான கடிய திண்ணிய தேரை விரைந்து செலுத்தித் தாந் துணையாந்தன்மையை நமக்குத் தந்தார்காண்! எ - று.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இஃது எட்டடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் ஐயடிச்சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உசு)

உஅ. பாடல்சால் சிறப்பிற் சினையவுஞ் சுனையவு
நாடினர் கொயல்வேண்டா நயந்துதாங் கொடுப்பபோற்
றோடவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கட்
டோடுறத் தாழ்ந்து துறைதுறை கவின்பெறச்
செய்யவ ளணியகலத் தாரமொ டணிகொள்பு
தொய்யகந் தாழ்ந்த கதுப்புப்போற் றுவர்மணல்
வையைவா ரவிரற லிடைபோழும் பொழுதினான்;

விரிந்தானா மலராயின் விளித்தாலுங் குயிலாயிற்
பிரிந்துள்ளா ரவராயிற் பேதுறூஉம் பொழுதாயி
னரும்பட ரவலநோ யாற்றுவ ளென்னாது
வருந்தநோய் மிகுமாயின் வணங்கிறை யளியென்னோ;

புதலவை மலராயிற் பொங்கரின வண்டாயி
னயலதை யலராயி னகன்றுள்ளா ரவராயின்
மதலையி னெஞ்சொடு மதனில ளென்னாது
நுதலூரும் பசப்பாயி னுணங்கிறையளியென்னோ;

தோயின வறலாயிற் சுரும்பார்க்குஞ் சினையாயின்
மாவின தளிராயின் மறந்துள்ளா ரவராயிற்
பூவெழி லிழந்தகண் புலம்புகொண் டமையாது
பாயனோய் மிகுமாயிற் பைந்தொடி யளியென்னோ;

எனவாங்கு,

ஆயிழா யாங்கன முனையாதி சேயார்க்கு
நாந்தூது மொழிந்தனம் விடல்வேண்டா நம்மினுந்
தாம்பிரிந் துறைத லாற்றலர்
பரிந்தெவன் செய்தி வருகுவர் விரைந்தே.

இஃது இளவேனில்வரவின்கண் ஆற்றாத தலைவி தூதுவிடக் கருதத், தோழி, அவர் பிரிந்திருத்தலை நம்மினுந்தாம் வல்லரல்லரெனச் சொல்லி வற்புறுத்தியது.

(இ - ள்.) பாடல்சால் * * * பொழுதினுன்— எ - து, சுனையிடத்துப் பூக்களை ஆராய்ந்து பறித்தலும் வேண்டாவாகிப் பாடுதல் அமைந்த தலைமையினையுடைய பூக்களைக் கொம்புகள் தாங் கொடுக்க வேண்டுமென்று விரும்பியுங் கொடுப்பனபோல இதழ்விரிகின்ற கமழுங் கண்ணியைக் கட்டிச் சூடும் அம்மகளிரிடத்தே திரட்சியுறத் தாழ்ந்து கொடுத்துத் துறைதொறுந் துறைதொறும் மரங்கள் அழகுபெறும்படி சிவந்த தலைக்கோலந் தங்கின மயிர்போற் சிலவிடங்கள் சிவப்பையுடைத்தாகிய மணலையுடைய வையையாற்றில் ஒழுகுகின்ற விளக்கத்தையுடைய அறல்மணல் திருமகளுடைய அழகினையுடைய மார்பிடத்து முத்தாரத்தோடே ஒப்புக்கொண்டு நடுவே பிளந்தோடும் பொழுதின்கண்; எ - று.

கவின்பெற அறல் இடைபோழுமென்றது காரணகாரியமாம். அஃதெங்ஙனமெனிற் பெருகியநீர் வற்றினகாலத்து அவைபூத்தலின்.

குறிஞ்சிநிலத்திற் சுனைப் பூக்களைத் தேடிப் பறியாதபடி இக்கரையில் மரங்கள் வேண்டும் பூக்களைக் கொடுத்தனவென்றார்.

சுனையவுமென்னும் உம்மையைக் கொய்யலுமென மாறுக. உம்மை, எதிர்மறை. சினையவுமென்னும் உம்மையை நயந்துமென மாறுக. உம்மை, சிறப்பு.

கல்லிடத்துநீர்நிலைக்குச் சுனையென்னும் பெயரோ ஆண்டுக்கூறுதலானும் யாற்றங்கரைக்கண் இன்மையானுஞ் சினை தாழ்ந்து கொடுத்தலன்றிச் சுனை தாழ்ந்து கொடுத்தல் இன்மையானும் இதுவே பொருளாம். தோடுறத் தாழ்ந்தென்றதற்குத் திரட்சியுறத் தங்கியென்றுங் கவின்பெறவென்றதற்குக் கவின்பெருநிற்கவென்றும் பொருள்கூறிற் பெருநிற்க இடைபோழுமென்றது பிறவினையாதலின் ஆற்றிற்குச் சிறப்புக் கூறிற்றன்றாய் வேறோர் வினையாமாறுமுணர்க.

இது தரவு.

விரிந்தாறு * * * யளியென்னோ—எ - து, மலர்கள் அலர்ந்து, அமையாவாயிற், குயில்கள் தம் பெடையை அழைத்துக் கூவுமாயின் நந்தலைவர் நம்மைப் பிரிந்து நினையாராயின், இளவேனிற்காலம் மயக்கம் உறுத்துமாயின், அரிய நினைவையுடைய அவலத்தைச் செய்யுங் காமநோய்க்கு இவள் ஆற்றுவளென்று கருதாது இவள் இறந்துபடுவளென்று நீ வருந்தும்படி எனக்குக் காமநோய் மிகுமாயின், வணங்கின இறையையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்னபயன் தரும்? எ - று.

புதலவை * * * யளியென்னோ—எ - து, மலர்கள் சிறுதூற்றிலவையாயின், வண்டுகள் சோலையிடத்தனவாயின், அலர் அயலாரிடத்ததாயின், நந்தலைவர் நம்மைப் பிரிந்து நினையாராயிற், பசப்பு ஒரு பற்றிலாத நெஞ்சுடனே தானும் வலியளல்லளென்று கருதாதே நுதலிடத்தே பரக்குமாயின், அசைகின்ற இறையினையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்னபயன் தரும்?.

தோயின * * * யளியென்னோ—எ - து, அற்றுவருதலையுடைய நீர் மணலிடத்தே செறிந்தனவாயிற், கொம்பிற் பூக்களிலே சுரும்பு ஆரவாரிக்குமாயிற், தளிர் மாவிடத்தனவாயின், நந்தலைவர் நம்மை மறந்து நினையாராயிற், பூவினது அழகை இழந்த கண்கள் உறக்கத்தைக்கொண்டு ஆற்றியிராமற் தனிமையால் உண்டான நோய் மிகுமாயிற், பசிய தொடியினையுடையாய்! நம்மாட்டு அவர்செய்யும் அளி என்னபயன் தரும்? எ - று.

ஓகாரங்கள் எதிர்மறையாதலிற் பயன் தாராதென நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

ஆயிழாய் * * * விரைந்தே—எ - து, ஆராய்ந்த இழையினை யுடையாய், அங்ஙனம் பயனின்றாக உனையாதேகொள்; சேய்நாட்டில் உறைகின்றவர்க்கு நம் வருத்தத்தைக் கூறினமாய் நாம் தூது போக விடவேண்டா; நம்மினுந் தாம் இக்காலத்துப் பிரிந்திருத்தலை ஆற்றாராய் விரைந்து வருகுவராதலால் வருந்தி என்னகாரியஞ் செய்கின்றாய்? எ - று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்கு இழிவுந் தோழிக்கு அச்சமும் பிறந்தன.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையும் பொருள்பெற்ற தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக் கலிப்பா. (உஎ)

உஅ. தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலி
னல்லாந்தா ரலவுற வீன்றவள் கிடக்கைபோற்
பல்பய முதவிய பசுமைதீ ரகன்ஞாலம்
புல்லிய புனிறோரீஇப் புதுநல மேர்தர
வளையவர் வண்டல்போல் வார்மணல் வடுக்கொள
விளையவ ளைம்பால்போ லெக்கர்போழ்ந் தறல்வார
மாவீன்ற தளிர்மிசை மாயவ டிதலைபோ
லாயிதழ்ப் பன்மல ரையகோங் குறைத்தர
மேதக விளவேனி லிறுத்தந்த பொழுதின்கண்;

சேயார்கட் சென்றவென் னெஞ்சினைச் சின்மொழி
நீகூறும் வரைத்தன்றி நிறுப்பென்மன் னிறைநீவி
வாய்விரிபு பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி
நோய்சேர்ந்த வைகலான் வாடைவந் தலைத்தரூஉம்;

போழ்துள்ளார் துறந்தார்கட் புரிவாடுங்கொள்கையைச்
சூழ்பாங்கே சுடரிழாய் கரப்பென்மற் கைநீவி
வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணு மிருந்தும்பி
யாழ்கொண்ட விமிழிசை யியன்மாலை யலைத்தரூஉம்;

தொடிநிலை நெகிழ்த்தார்கட் டோயுமென் னாருயிர்
வடுநீங்கு கிளவியாய் வலிப்பென்மன் வலிப்பவு
நெடுநிலாத் துறந்துண்ண நிரையிதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றங் கங்குல்வந் தலைத்தரூஉம்;

எனவாங்கு,

வருந்தினை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்னோக்கா தேகிநம்
மருந்துயர் களைஞர் வந்தனர்
திருந்தெயி றிலங்குநின் றேமொழி படர்ந்தே.

இது பருவவரவின்கண் ஆற்றாத தலைவியைத் தோழி வற்புறுப்ப, வன்புறையெதிரழிந்தாட்குத், தோழி, அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

(இ - ள்.) தொல்லெழில் * * * பொழுதின்கண்—எ - து, கருப்பந் தங்கிய காலத்துப் பிறக்கும் வேட்கையாகிய நோய் இளமைக் காலத்து அழகைக் கெடுக்குமளவன்றி மிகவருத்துகையினாலே அதற்கு அலமந்த சுற்றத்தார், பின்னர் அவள் மெய்ந்நோக்காடு கண்டு வருத்தமுறும்படி புதல்வனையீன்றவள், புதல்வனைக்கொண்டு அக்குடியையெல்லாம் பாதுகாத்துக்கிடந்த கிடக்கைபோலத், தன்னிடத்துப் பயிரையுண்டாக்கின உழவர், தனக்கு இடையில் வந்த நோய்க்கு வருந்திய வருத்தம் நீங்கும்படி, தான் ஈன்ற உணவுகளைக்கொண்டு குடிமக்களையெல்லாம் பாதுகாத்த உலகம், அவள் தன்னைப்புல்லிய ஈன்றணுமை தீர்ந்து புதுநலம் பெற்றாற்போலத், தான் ஈன்ற பசுமை தீர்ந்த புதிய அழகு தோன்ற, வளையினையுடைய இளையோர் இழைத்த வண்டற்பாவையும் பூவுங் கலந்துகிடந்தாற்போல வார்ந்த மணல் பூக்கள் உதிர்ந்து கிடந்த வடுவைத் தன்னிடத்தே கொள்ள, இளையமகளிருடைய மயிர்போல இடுமணலை ஊடறுத்த லையுடைய நீர் ஒழுக, மாமைநிறத்தையுடையவள் திதலைபோல மாவீன்ற சிறிது முற்றின தளிர்மேலே அழகிய இதழையுடைய பலமலர்களினுடைய வியக்கத்தக்க தாதுகள் உதிர்தலைச்செய்யப், பெருமைபொருந்த இளவேனிற்காலம் வந்துவிட்ட பொழுதின்கண்ணே; எ-று.

ஏர்தர, எழுச்சிதர. ஐயென்னும் உரிச்சொல் ஐயவெனப் பெயரொச்சக்குறிப்பாய் நின்றது.

இது தரவு.

சேயார்கட் * * * தலைத்தரூஉம்—எ - து, சிலவான சொல்லினையுடையாய்! சேணிடைப் பிரிந்தோரிடத்தே சென்ற என் நெஞ்சினை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல்வேண்டுமென்று நீ சொல்லும் எல்லைத்தன்றாக மிகவும் ஆற்றி நிறுப்பேன், அதனாற் பெற்றதென்? யான் ஆற்றிநிறுத்தலைக் கைகடக்கும்படியாக வாடைக்காற்று வாய் விரிந்து பனியையேற்றுநின்ற விரவுதலையுடைய பல மலர்களை அளைந்துவந்து பிரிந்தோர்க்கு நோய்செய்தற்குக் காரணமான இளவேனில் நாளின்கண்ணே வருத்தத்தைத் தரும்; எ - று.

நீவவெனத் திரிக்க.

போழ்துள்ளார் * * * யலைத்தரூஉம்—எ - து, விளங்குகின்ற இழையினையுடையாய்! இளவேனிற்காலத்தை நினையாராய் நம்மை மறந்தாரிடத்தே மனம்புரிதலால் என்மேனிவாடுங் கோட்பாட்டினைப் பிறர் அறியலாகாதென்று சூழ்ந்து அப்பொழுதே மறைப்பேன், அதனாற் பெற்றதென்? யான் மறைத்ததனைக் கைகடக்கும் படியாக வீழ்கின்ற ஞாயிற்றின் கதிர் அலர்த்தின பூவினது தேனை உண்ணுங் கரிய தும்பியினது யாழோசையையொத்த முழங்குகின்ற ஓசை நடக்கும் மாலைக்காலம் வந்து வருத்தைத்தத்தரும்; எ - று.

கொண்ட உவமவுருபு.

தொடிநிலை * * * தலைத்தரூஉம்—எ - து, குற்றம் நீங்குகின்ற வார்த்தையினையுடையாய்! தொடியை நிற்கின்ற நிலையினின்று நெகிழப்பண்ணினாரிடத்தே நின்று தோயும் என்னுடைய அரிய உயிரை அவரிடத்துச்சென்று செறியாமற் காக்கத்துணிவேன், அதனாற் பெற்றதென்? யான் அங்ஙனம் துணியவும் வண்டுகள் துறந்து உண்ணும்படியாக நிரைத்த இதழ்கள் அலர்ந்த மணத்தினையுடைய மலர்கள் கமழும் நாற்றம் நெடிய நிலாவையுடைய இராக்காலத்தே வந்து வருத்தத்தைத்தரும்; எ - று.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, எனச்சொல்லி; எ - று.

ஆங்கு அசை.

இது தனிச்சொல்.

வருந்தினை * * * படர்ந்தே—எ - து, வருந்தித் தங்கின நின்வளை கழலும்படியாகத் தலைவன்பின் பாராதே தூரிய நாட்டிலே பிரிந்திருந்து தேடும் பொருட்பிணியாலே போய்த் திருந்தின எயிறுகள் விளங்குதற்குக் காரணமான நின் தேன்போலும் மொழியை நினைத்து நம் அரிய துயரைக் களைவாராய் வந்தார்; இனி, நீ வருந்தாதே கொள்; எ - று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது *“நிலமொருங்கு மயங்குதலின்று” எனவே காலம் மயங்குதலின் வேனிலும் வாடையும் மாலையுங் கங்குலும் வந்தன.

இஃது ஒன்பதடித்தரவும், நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உஅ)

ஙo. அருந்தவ மாற்றியார் நுகர்ச்சிபோ லணிகொள
விரிந்தானாச் சினைதொறூஉம் வேண்டுந்தாதமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டொடு புலம்புதீர்ந் தெவ்வாயு
மிருந்தும்பி யிறைகொள வெதிரிய வேனிலான்;

துயிலின்றி யாநீந்தத் தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதெனக் கூறுந ருளராயின்;

பானாள்யாம் படர்கூரப் பணையெழி லணைமென்றோண்
மானோக்கி னவரோடு மறந்தமைகு வான்மன்னோ
வானூச்சீர்க் கூடலு ளரும்பவிழ் நறுமுல்லைத்
தேனார்க்கும் பொழுதெனத் தெளிக்குந ருளராயின்;

உறலியா மொளிவாட வுயர்ந்தவன் விழவினுள்
விறலிழை யவரோடு விளையாடு வான்மன்னோ
பெறலரும் பொழுதோடு பிறங்கிணர்த் துருத்திசூழ்ந்
தறல்வாரும் வையையென் றறையுந ருளராயின்;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கஉ-ம் சூத்.

எனவாங்கு,

தணியாநோ யுழந்தானுத் தகையவ டகைபெற
வணிகிளர் நெடுந்திண்டே ரயர்மதி பணிபுகின்
காமர் கழலடி சேரா
நாமஞ்சா றெவ்வரி னடுங்கினள் பெரிதே.

இது பருவவரவின்கண் ஆற்றாத தலைமகள் இறந்தது சிந்தித்து நம் மாட்டு அன்பிலராயினும் இக்காலத்து இவ்வூரின்கட் பண்டு தாம் விளையாடியவாறு நினைந்துவருவர் இக்காலவரவு சொல்லுவார் உளராயினெனக் கேட்ட பாணன் பாசறைக்கட் சென்று தலைவனைக் கண்டு கூறியது.

(இ - ள்.) அருந்தவ * * * வேனிலான்—எ - து, செய்தற்கரிய தவங்களைச் செய்தவர்கள் குறைவற நுகரும் நுகர்ச்சிபோல அழகுகொள்ள அரும்புகள் விரிந்தமையாத கொம்புகடோறுந் தான் விரும்புந் தாதைப் பொருந்தியுண்டு விரும்பி ஆர்க்கும் வண்டோடே கருந்தும்பிகளும் வருத்தந் தீர்ந்து எவ்விடமுந் தங்குதல் கொள்ளும்படி மரங்கள் அவற்றை எதிர்கொண்ட இளவேனிற் கண்ணே ; எ - று.

இது தரவு.

துயிலின்றி * * * ருளராயின்—எ - து, இக்காலம் வெயிலினது ஒளியைக்கண்டறியாத விரிந்த மலரையுடைய குளிர்ந்த பொழிலிலே குயில் கூவுங் காலமென்று அவற்குக் கூறுவார் சிலருளராயின் யாந் துயிலின்றி யாமக்கடலை நீந்தத் தான் மயில்போலும் இயலினையுடைய பரத்தையர் மருவுதலை நுகர்ந்து அவருடனே அழகிய புனலையுடைய மடுக்களையாடி நம்மை மறந்து அவரிடத்தே அமைந்திருப்பன் அதனாற் பெற்றதென் ? கூறுவார் இன்றே; எ - று.

பாணுள்யாம் * * * ருளராயின்—எ - து, இக்காலம் அமையாத புகழையுடைய மதுரையிடத்து அரும்புகள் அவிழ்ந்த நறிய முல்லையிலே தேனினம் ஆரவாரிக்குங் காலமென்று அவர்க்குத் தெளிவிப்பார் சிலருளராயின் நடுயாமத்தே யாம் வருத்தமிகத் தான் மூங்கிலின் அழகையுடைய அணைபோலும் மெல்லிய தோளையும் மானினது நோக்கம்போலும் நோக்கினையுமுடைய பரத்தை

யருடனே கூடி நம்மை மறந்து அவரிடத்தே அமைத்திருப்பன் அதனாற் பெற்றதென் ? கூறுவார் இன்றே ; எ - று.

உறலியா * * * ருளராயின்—எ - து, இக்காலம் பெறுதற் கரிய இளவேனிற்காலத்துடனே பெருமையினையுடைய பூங்கொத்துக்களையுடைத்தாகிய யாற்றிடைக்குறைணயப் புடைசூழ்ந்து வையை அறனுண்டாம்படி ஒழுகுமென்று அவற்குச் சொல்லுவார் உளராயிற் தம்மை உறுதற்குரிய யாம் ஒளிகெடும்படியாகக் காமனுக்கு எடுத்த திருநாள் இக்காலத்து வெற்றியையுடைய இழையினையுடைய பரத்தையருடனே விளையாடுவென் அதனாற் பெற்றதென் ? கூறுவார் இன்றே; எ - று.

*" சினனே பேதைமை நிம்பிரி நல்குரவனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே." என்பதனாற் பரத்தையரோடு விளையாடுவானெனப் பொருமைகூறியும் அவன் ஈண்டு அடையானாகவெனக் காதலைச் சிறப்பித்தலின் அமைந்தது. இவை விளையாட்டிற் பிறந்த உவகையென்னும் மெய்ப்பாடு; இவை தன்கட் தோன்றிய பெயர்பற்றி வரும்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, எனச்சொல்லி; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

தணியாநோ * * * பெரிதே—எ - து, மீளாத காமநோயிலே வருந்தியமையாத தகைமையையுடையவள் நின்னுடைய விருப்பத்தையுடைய கழல் அணிந்த அடியைப் பணிந்து சேராத அச்சம் அமைந்த பகைவரைப்போலே பெரிதுநடுங்கினள், அவள் அழகைப் பெறும்படி அழகுவிளங்கின கொடிய திண்ணிய தேரைச் செலுத்துவாயாக; எ - று.

இது சுரிதகம்.

†"பாசறைப் புலம்பலும்" என்புழித் தூதுகண்டு தலைவன் புலம்புவனாதலிற் தூதாய்ச்சென்ற பாணன் கூறினன்.

இது ‡" திணைமயங் குறுதலும் " என்பதனாற் பாலைக்கண் மருதம் நிகழ்ந்தது.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ருகூ - ம் சூத்.
† " " அகத்திணையியல், சக-ம் "
‡ " " " கஉ-ம் "

இதனாற் தலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தன.

இது * "மரபின" என்றதனான் நான்கடித்தரவிற்கு நான்கடித்தாழிசை வந்து தனிச்சொற்பெற்று நான்கடிச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உகூ)

௩௧. கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற
நெடுங்கயத் தயலய லயிர்தோன்ற வம்மணல்
வடுத்தூர வரிப்பபோ லீங்கைவா டுதிர்புகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதீன
மெய்கூர்ந்த பனியொடு மேனின்ற வாடையாற்
கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுதுமற்
பொய்யேமென் றுயிழாய் புணர்ந்தவ ருரைத்ததை;

மயங்கமர் மாறட்டு மண்வெளவி வருபவர்
தயங்கிய களிற்றின்மேற் றகைகாண விடுவதோ
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு
வயங்கிழை தண்ணென வந்தவிவ் வசைவாடை;

தாள்வலம் படவென்று தகைநன்மா மேல்கொண்டு
வாள்வென்று வருபவர் வனப்பார விடுவதோ
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு
தோளதிர் பகஞ்சேரத் துவற்றுமிச் சின்மழை;

பகைவென்று திறைகொண்ட பாய்திண்டேர் மிசையவர்
வகைகொண்ட செம்மனும் வனப்பார விடுவதோ
புகையெனப் புதல்சூழ்ந்து பூவங்கட் பொதிசெய்யா
முகைவெண்ப னுதிபொர முற்றிய கடும்பனி;

எனவாங்கு,

வாளாதி வயங்கிழாய் வருந்துவ ளிவளென
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மீளிவேற் றானையர் புகுதந்தார்
நீளுயர் கூட னெடுங்கொடி யெழவே.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சகூச-ம் சூத்.

இஃது இளவேனிற்காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிருவென்று மண் நசையால் வேந்தன் சென்றவழி முன்பனிக்காலமும் பின்பனிக்காலமும் வந்து வருத்தலின் ஆற்ருத தலைவியைத் தோழி வருவரொன வற்புறுப்பவும், வன்புறை எதிரழிந்தவழித், தலைவன் யாங்குறித்த பருவம் வருந்துணையும் ஆற்றியிராளெனப் பின்பனிக்காலத்து வருகின்ற வரவுணர்ந்து தோழி கழியுவகையாற் கூறியது.

(இ - ள்.) கடும்புனல் * * * ருளாத்ததை—எ - து, யாறு கூதிர்காலத்துப் பெருகுதலிற் கடிதாகிய நீர் வற்றிக் கால்களாக ஓடுதலுண்டாய்க் கலக்கந் தெளிந்து அழகுபெற, நெடிய குளங்களின் அயலே அயலே நுண்மணல் தோன்ற, அம்மணலின் அறல் மறையும்படி கோலஞ்செய்தவன்போல ஈங்கையினது வாட்பூக் காம்பு கழன்று அம்மணலிலே வீழக், கணவரைப் பிரிந்த மகளிர் நுதல் போல முன்பூத்த பீர்க்கம்பூ இப்பொழுது பூவின்ருகத், தாங் காதலித்த தலைவரைக்கூடின மகளிர்முகம்போலப் பொய்கையிற் பூக்குந் தாமரையைப் பொய்கை புதிதாகப் பூக்க, முன்பனிக்காலத்திற்கும் பின்பனிக்காலத்திற்கும் மேலாய்நின்ற இளவேனிற்காலம் ஆயிழாய்! நம்மைக் கூடினவர் தப்பாமல் வருவேமென்று கூறின காலம் அதனைப்பெற்றதெனக் காலம் வருந்துணையும் ஆற்றியிராதபடி முன்பனிக்காலத்து வாடையாலும் மெய் வளைதற்குக் காரணமான பின்பனியாலும் உண்டாகிய வினை ஒழிந்து அயர்தல் இறந்துபாட்டை நமக்குக் கூட்டுகையினலே நெஞ்சு கலக்கமுறுகின்றது ; யான் எங்ஙனம் ஆற்றுவேன் ; எ - று.

முன்னர்நின்ற செயவெனெச்சங்கள் மேனின்றவென்னும் பெயரொச்சத்தோடுமுடிந்து, அது பொழுதென்னும்பெயரோடுமுடிந்தது.

கையாறும் ஒரு மெய்ப்பாடென்றுணர்க.

இது தரவு.

மயங்கமர் * * * வசைவாடை—எ - து, உலகிற்கு உணவுகளை விளைத்தற்குக் காரணமாகிய மதியின்கதிர்கள் பாலையொத்து விளங்கும் இராப்பொழுதோடே விளங்குகின்ற அணிகள் குளிரும்படியாக வந்த இந்த அசைதலையுடைய வாடைக்காற்று இரண்டுபடையுந் தம்முள் மயங்கினபோரிலே மாருகிய அரசனைக்கொன்று அவன் நாட்டைக்கைக்கொண்டு களிற்றின்மேலே வருமவருடைய வீரத்தாற்

பிறந்த அழகை நாங்கண்டுநுகரும்படியாக நம் உயிரைக்கொள்ளாது விடுவதொன்றாய் இருந்ததோ? அது கொண்டேவிடும்; எ - று.

துயங்குதல், அசைவு.

பால்போழுமென்று பாடமாயிற் பாலை வருத்துமென்க.

இதனுள் வென்ற வீரத்தாற் பிறந்த அழகை நுகர விரும்புதலிற் தலைவியும் அரசவருணமேயாயிற்று. இது மேல்வருவனவற்றிற்கும் ஒக்கும். இது *"ஏவன்மரபின்" என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

தாள்வலம் * * * சின்மழை—எ - து, நீண்ட கரும்பில் ஓங்கின பூவை நிறங்கெடும்படி காற்றாற் தூற்றித் தோள்கள் குளிரால் நடுங்கி நம் ஆகத்தைச் சேரும்படி துவற்றுகின்ற இச்சிலவாகிய மழை தமது தாள்களாலே வெற்றியுண்டாம்படி வென்று அழகினையுடைத்தாகிய நல்ல குதிரையை ஏறி வாளாலே வென்று வருமவருடைய வீரத்தாற்பிறந்த அழகை நாங் கண்டு நுகரும்படியாக நம் உயிரைக்கொள்ளாது விடுவதொன்றாய் இருந்ததோ? அது கொண்டேவிடும்; எ-று.

இத்தாழிசைகள் இரண்டும் முன்பனிப்பருவங் கழிகின்றன கூறினவாகக் கொள்க.

பகைவென்று * * * கடும்பனி—எ - து, புகையென்னும்படி சிறுதுறுகளைச் சூழ்ந்து பூவாய் அழகிய கள்ளைப் பொதிதலைச் செய்யாத முகைபோலும் வெள்ளிய பல்லின் நுனைகள் தம்மிற் பொரும்படி முதிர்ந்த கடிய பனி பகையைவென்று திறையைவாங்கின பாய்ந்துசெல்கின்ற திண்ணிய தேர்மிசை வருமவருடைய கூறுபாடு கொண்ட தலைமையினையுடைய வீரத்தாற் பிறந்த அழகை நாங் கண்டு நுகரும்படியாக நம் உயிரைக் கொள்ளாது விடுவதொன்றாய் இருந்ததோ? அது கொண்டேவிடும்; எ - று.

இது †"பின்பனி தானு முரித்தென மொழிப" என்றதனாற் பின்பனி வந்தது.

பரித்திண்டேர் எனவும் பாடம்.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உச - ம் சூத்.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், க0-ம். சூத்.

வாளாதி * * * யெழவே—எ - து, பயணிலகூருதேகொள் விளங்கின இழையினையுடையாய்! பொய்யன்றித் தாஞ் சொல்லிய நாளெல்லை வருதற்கு இன்னுஞ் சிறிதுநாட் செல்லுமென்று தூக்கி அத்துணையும் ஆற்ருது இவள் வருந்துவளென்று கருதிக் கூற்றுவனையொத்த வேற்படையினையுடையவர் புகழ் வளர்கின்ற உயர்ந்த கூடலிலே நெடிய வெற்றிக்கொடிகளைக் கட்டும்படியாகப் புகுந்தார்காண்; எ - று.

நிறுத்தென்றது, தூக்கியென்னும்பொருட்டு.

* "கிழவி நிலையே வினையிடத் துரையார் - வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" என்பதனால் உருவுவெளிப்படுதலின் இவளென்றான்.

† "நிலனொருங்கு மயங்குத லின்று" எனவே காலம் இரண்டும் மயங்குமென்றலின் முன்பனியும் பின்பனியும் மயங்கிற்று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது எட்டடித் தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (௩0)

௩உ. எஃகிடை தொட்டகார்க் கவின்பெற்ற வைம்பால்
மையற விளங்கிய துவர்மண லதுவது [போன்
வைதாக நெறித்தன்ன வறலவிர் நீளம்பா
லணிநகை யிடையிட்ட வீகையங் கண்ணிபோற்
பிணிநெகி ழலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்
துணிநீராற் றூய்மதி நாளா லணிபெற
வீன்றவ டிதலைபோ லீர்பெய்யுந் தளிரொடு
மான்றவ ரடக்கம்போ லலர்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும் புதலொடு
நல்லவர் நுடக்கம்போ னயம்வந்த கொம்பொடு
முணர்ந்தவ ரீகைபோ லிணருழ்த்த மரத்தொடும்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சஉ-ம் சூத்.
† " " அகத்திணையியல், கஉ-ம். "

புணர்ந்தவர் முயக்கம்போற் புரிவுற்ற கொடியோடு
நயந்தார்க்கோர் நல்லமை னிளவேனி லெம்போலப்
பசந்தவர் பைதனேய் பகையெனத் தணித்துநம்
மின்னுயிர் செய்யு மருந்தாகிப் பின்னிய
காதல ரெயிறேய்க்குந் தண்ணருவி நறுமுல்லைப்
போதாரக் கொள்ளுங் கமழ்குரற் கென்னுந்
தூதுவந் தன்றே தோழி
துயரறு கிளவியோ டயர்ந்திகம் விருந்தே.

இது காலவரவு கண்டு ஆற்றாளாயின்விடத்துத் தோழி காலத்தை நோக்கி அழகிதாகச் செய்தாய் வந்தெனச் சொல்லித், தலைவிக்கு நங் காதலர் வருகின்றானெனச் சொல்லிவந்த தூதுகாண் இது, நாம் விருந்தயர்கமெனச் சொல்லியது.

(இ - ள்.) எஃகிடை * * * நெறிகொள—எ - து, கத்திரிகை இடையிலே தீண்டிய மேகத்தின் கவினைப்பெற்ற ஐந்துபகுதியையுடைய மயிர்போலப் புலர்ந்த மணல் மேகம் மழைபெய்யாமற் போகையினாலே விளங்கினவென முற்றாக அறுத்து நொய்தாகப் பிடித்துவிட்டாற்போன்ற அறுதிவிளங்கின நீண்ட ஐம்பாலிற் பல ஒளிகளையுடைய அணிகளுக்கிடையே இட்டுவைத்த பொன்னாற்செய்த அழகிய கண்ணிபோலே அந்தமணலிலே பிணிநெகிழ்ந்த பல பூக்களும் வேங்கையினது விரிந்த பூக்களும் ஒழுங்குகொள்ள; எ-று.

பிற்கூறிய நீளம்பாலென்றதனை முற்கூறிய ஐம்பாலைச்சுட்டின சுட்டுப்பெயராகக்கொள்க.

மணல் ஐம்பால் போல விளங்கின ; அவ் ஐம்பாலிற் கிடந்த அணியும் பொன்மாலையும்போலே அந்த மணலிலே பல நிறத்தையுடைய பூக்களும் வேங்கைப்பூக்களும் ஒழுங்குகொண்டனவென உணர்க.

திணிநீராற் * * * லெம்போல—எ-து, தெளிந்த நீராலுந் தூய மதியையுடைய நாளாலும், புதல்வனை ஈன்றவளுடைய துத்திபோலே நெய்ப்பினையுண்டாக்கும் மாந்தளிராலும் அறிவான் அமைந்தவர் தங் காரியத்தை முடித்தற்கு அக்காலம் வருந்துணையும் அடங்கியிருக்குமாறுபோலக் காலம்வருந்துணையும் மலர்தலிற் செல்லாத அரு

ம்புகளையுடைய கொம்புகளாலும் வாசிக்க வல்லவரது யாழோசை போல வண்டுகள் ஆரவாரிக்குஞ் சிறுதூறுகளாலும் நல்ல மகளிருடைய கூத்துக் கண்டார்க்கு விருப்பஞ்செய்யுமாறுபோல விருப்பம் வந்தகொம்பாலும் நிலையாமையை உணர்ந்தவருடைய கொடைபோலக் கொத்துக்கள் அலர்ந்து எல்லார்க்கும் பயன்படும் மரத்தாலும் அன்பாற் கூடினவருடைய புல்லுதலைப்போலப் பின்னுதலுற்ற கொடியாலும், பொழில்கள் அழகைப்பெற, இளவேனிலே யாங்கள் எம்மை நயந்தார்க்கு நல்லேமாயினாற்போல, நீயும் அணிபெற எப்பொழுதும் வருவை யென்று விரும்பியிருந்தார்க்கு மிகவும் நல்லையோ ; எ - று.

நெறிகொளக் கொடியொடும் அணிபெறவெனக்கூட்டுக.

ஈர், ஈர்க்குமரம்.

இளவேனில் எம்போல நயந்தார்க்கு நல்லையோவென மாறுக.

நீதான் வந்து அழகிதாகச் செய்தாயென இளவேனிலைநோக்கித் தோழி கூறினாள். அதனை நோக்கிக் கூறியபின்னர்த் தலைவியைநோக்கிக் கூறுகின்றாள்.

பசந்தவர் * * * விருந்தே—எ - து, இவ்விளவேனில் குளிர்ந்த அருவியின் அருகேநின்ற நறிய முல்லையினது மகளிரெயிற்றையொக்கும் பூக்களை நம்முடைய கமழ்கின்ற கொத்தாகிய மயிருக்கு நிறையக் கொய்துகொண்மினென்று கூறாநிற்கும் ; அதுவேயுமன்றி உலகத்திற் பசந்தவருடைய வருத்தத்தையுடைய காமநோயையுந் தனக்குப் பகையென்று கருதிப் போக்கி விசேடித்து நம்முடைய இனிய உயிரை உண்டாக்கும் மருந்துமாய் நந்துயர் அறுதற்குக் காரணமான வார்த்தையோடே நாம் முயங்கிய காதலருடைய தூதாய் வந்தது ; ஆதலால் இனி அக்காலத்திற்கு விருந்தானவற்றை நாஞ் செய்வேம் ; எ - று.

பின்னிய காதலர் தூதெனமாறுக. பசந்தவர் நோயைத் தணித்து என்பதனாலும் நம் இன்னுயிரைச்செய்யும் மருந்தாகி என்பதனாலுந் தலைவி காலங்கண்டு வருந்தினமை பெற்றாம். இளவேனிற் கண் வருவலெனக் கூறிப்பிரிந்தவர் தப்பாரென்பதுபற்றி அவர் வார்த்தையோடே தூதாய் வந்ததென்றாள்.

கொள்ளுமென்னும் உம்மீறு பன்மையுணர்த்தி முன்னிலையாய்நிற்றல் * "இர்ஈர் மின்" என்பதனுட்கூறினாம்.

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வினையியல், உஎ - ம் சூத்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இது தனிச்சொல்லும் மடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடிநிமிர்ந்தோடிய கொச்சகக்கலிப்பா. (ரு-க)

ருரு. வீறுசா னுாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயநந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கித ழணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிழனோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல வரும்பூழ்த்து மரமெல்லா மலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று வாரார்நம்
போதெழி லுண்கண் புலம்ப நீத்தவர்;

எரியுரு வுறழ விலவ மலரப்
பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முனியவந்
தார்ப்பது போலும் பொழுதெண்ணி யந்நலம்
போர்ப்பது போலும் பசப்பு;

நொந்து, நகுவனபோ னந்தின கொம்பு; நைந்துள்ளி
யுகுவது போலுமென் னெஞ்சு; எள்ளித்
தொகுபுட னாடுவ போலுமயில்; கையி
லுகுவன போலும் வளை; என்கண்போ
லிகுபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்;

நரம்பின் றீங்குர னிறுக்குங் குழல்போ
லிரங்கிசை மிஞிறொடு தும்பிதா தூதத்
தூதவர் விடாராய்த் துறப்பார்கொ னோதக
விருங்குயி லாலு மரோ;

எனவாங்கு,

புரிந்துநீ எள்ளுங் குயிலையு மவனையும் புலவாதி
நீவிய மூண்கணுய் நெறிகூந்தல் பிணிவிட
நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன்மார்பர் துணைதந்தார்
காலுறழ் கடுந்திண்டேர் கடவினர் விரைந்தே;

இது பருவவரவின்கண் வன்புறையெதிரழிந்து ஆற்ருளாயி ஞளைத் தோழி தலைவனது வரவுணர்ந்து கூறி ஆற்றுவித்தது.

(இ - ள்.) வீறுசான் * * * நீத்தவர்—எ - து, தான் விளைவித்தலின் வேற்றுநாட்டிற்கு இல்லாத வீறமைந்த உலகிடத்து அகற்சியையுடைய அழகைத் தான் காணவேண்டி யாறு கண்களை விழித்துப் பார்த்தனபோலப் பக்கத்தினின்ற குளங்கள் நீர் நிறைந்து பூக்களால் அழகுபெறப், பளிங்குமணியையொக்கும் கண்ணுடிக்குள்ளே பவழம் அழுந்தப்பட்டவை தோன்றினுற்போல அரும்பவிழ்கின்ற முருக்கினுடைய இதழ்கள் அழகையுடைய குளங்களிலே காம்பினின்றுங் கழன்றுவீழத், தெளிந்த குளங்களின் நிழலிலே தம்மையுந் தாம் ஊதும் பூவையுங் கண்டு அவ்விடத்தே நெருங்கி வண்டுகள் சேர ஆரவாரிக்கும்படியாகக் கரையினின்ற மரங்களெல்லாம் அரும்புகள் அலர்ந்து பலமணிகளைச் சூடினுற்போலப் பூக்களைச் சூட, எம்மைப்போலாது காதலையுடைய கணவரைக்கூடினவருடைய அகத்திடுதலையுடைய கையை நெகிழாதே தாதை வீழ்க்கும் இளவேனிலோ வந்தது. பூவினது அழகையுடைய மையுண்கண் வருந்த நம்மைக் கைவிட்டவர் வாராராயினுர் ; எ - று.

ஓகாரம் பிரிநிலை.

இது தரவு.

எரியுரு * * * பசப்பு—எ - து, இவ்விளவேனிற்பொழுது நெருப்பின் உருவையொப்ப இலவம் பூப்பப், பொரியின் உருவையொப்பப் புன்குகள் பூ உதிரப், புதிய மலர்களையுடைய கோங்கம் பொன்னென்னும்படி தாதை அலர, நாம் வெறுக்கும்படி வந்து தனித்திருப்பாரை அகத்திடாது புறத்தே தள்ளி இகழ்ந்து இவ்வூர் அலர் தூற்றுங் கொடுமையையொக்கும்; அது கண்டு பசப்பு எனது அழகையுடைய நலத்தை மறைப்பதுபோல இராநின்றது ; எ - று.

நொந்து * * * நோய்—எ-து, பிரிந்த மகளிரை நகுதற்கு நங் காலம் வருகின்றதில்லையேயென்று நொந்திருந்து அது வந்தபி ன்னர் நம் வருத்தங் கண்டு சிரிப்பனபோலக் கொம்புகள் பூ மிக் கன; அதனைக் கண்டு என் நெஞ்சம் வருந்தித் தலைவனை நினைந்து அழிவதுபோலே இராநிற்கும்; மயில்கள் நம்மை இகழ்ந்து காலமன் றியுஞ் சேரத் திரண்டு ஆடுவனபோலே இராநிற்கும்; நங் கையில் வளைகள் நாங் காப்பவுங் கழல்வனபோலே இராநிற்கும்; என் கண் போலே அறுதியையுடைய நீர் இற்று ஒழுகும் இளவேனிற்காலத் துந் தலைவர் வாரார்; ஆதலால் இந்நோய் இனி இந்நிலையினும் மிகு வதுபோல இராநிற்கும்; எ - று.

நரம்பின் * * * மரோ—எ-து, நரம்பின் இனிய இசை யைத் தானத்திலே நிறுத்தும் வங்கியம்போல ஒலிக்கும் ஓசையையு டைய மிஞிறோடே தும்பி தாதை ஊதாநிற்க, நமக்கு நோவுதரும்படி யாகக் கரிய குயில்கள் கூவாநிற்கும்; இவ்வளவிலுந் தலைவர் ஒருதூதா யினும் வரவிடாராய் நம்மைத் துறப்பாரோ துறவாரோ கூறாய்; எ-று.

நம்மை இம்மைப்பிறப்பினுட் துறப்பார்கொல்லென வாளா தே ஐயஞ்செய்தலின் இஃது ஐயஞ்செய்தல்.

அரோ, அசை.

இவை தரவின் விகற்பமாகிய தாழிசை.

எனவாங்கு, அசை.

இது தனிச்சொல்.

புரிந்துநீ * * * விரைந்தே—எ-து, அதுகேட்ட தோழி, எ னது மனம் வேறுபட்டு நீலப்பூப்போலும் மையுண்கண்ணினையுடை யாய்! நீ நம்மை இகழுங் குயிலையுந் தலைவனையும் புலவாதேகொள்; தாம் வரும் நாளெல்லையை நம் நெஞ்சிலே நிறுத்திச்சொல்லிய கூற் றுக்கள் பொய்யல்லவாக மாலை தங்கின அகற்சியையுடைய மார்பி னையுடையார் காற்றையொக்குங் கடிய திண்ணிய தேரை விரைந்து செலுத்தி நமது நெறித்த கூந்தலைப் பின்னின பின்னல் விடும்படி தாம் விரைதலை நமக்குத் தந்தார்காண் என்றாள்; எ - று.

நீலங், கடைக்குறைந்தது.

இது சுரிதகம்.

இதனாற் றலைவிக்குப் புணர்வாகிய உவகை தோன்றிற்று.

இதனுள், மூச்சீரடியும் நாற்சீரடியுமாய் நின்றவாறுணர்தற்கு நகுவன புகுவது தொகுபுடன் உகுவன இருபறலெனத் தொடைச்சுவை கொடுத்துக் கூறவே, அவற்றிற்கு முன் நின்றன நொந்து என ஒழியசையாகியும் நைந்துள்ளி எள்ளி கையில் என்கண்போல் என வழியசை புணர்ந்தும் வந்த சொற்சீரடிகளுந் 'தொகுபுட னுடுவ போலு மயில்' என நாற்சீரடியுமாய் வந்தன.

இது தரவுந் தரவின்விகற்பமாகிய தாழிசையும் ஏனையுறுப்புக்களும் பெற்று வந்த கொச்சகக்கலிப்பா. தரவின் விகற்பமாகிய தாழிசையையுந் தரவின்பாற் படுத்து இதனை இடைநிலைப்பாட்டின்றி வந்த தரவிணைக்கொச்சகக்கலிப்பா என்பாரும் உளர்.

* "இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி-னிலைக்குரி மரபினிற்கவும் பெறுமே" என்னுஞ் சூத்திரத்துள் இங்ஙனம் வரும் வெள்ளைக் கொச்சகத்துள் ஆசிரியவடி சிறிதுவருமென்றலிற் 'பொரியுரு வுறழப் புன்குபூ வுதிர' என ஆசிரியவடி வந்தது. (௩௨)

௩௪. மன்னுயி ரேமுற மலர்ஞாலம் புரவீன்று
பன்னீராற் கால்புனல் பரந்தூட்டி யிறந்தபிற்
சின்னீரா னறல்வார †வகல்யாறு கவின்பெற
முன்னொன்று தமக்காற்றி முயன்றவ ரிறுதிக்கட்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடை யாளர்போற்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
வின்னம ரிளவேனி லிறுத்தந்த பொழுதினான்;

விரிகாஞ்சித் தாதாடி யிருங்குயில் விளிப்பவும்
பிரிவஞ்சா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவுங்
கரிபொய்த்தான்கீழிருந்தமரம்போலக்கவின்வாடி[கோ
யெரிபொத்தி யென்னெஞ்சஞ் சுடுமாயி னெவன்செய்

பொறைதளர் கொம்பின்மேற் சிதரின மிறைகொள
நிறைதளரா தவர்தீமை மறைப்பென்மன் மறைப்பவு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௬௨-ம் சூத்.
† அகன்யாறு என்றும் பாடம்.

முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்புபனிவாருங்கண்ணுயினெவன்செய்கோ;

தளையவிழ்பூஞ் சினைச்சுரும் பியாழ்போல விசைப்பவுங்
கோளைதளராதவர்தீமை மறைப்பென்மன்மறைப்பவுங்
கிளையழிய வாழ்பவ னுக்கம்போற் புல்லென்று
வளையானு நெகிழ்போடுந் தோளாயினெவன்செய்கோ;

என்வாங்கு,

நின்னுண்ணோய் நீயுரைத் தலமர லெல்லாஅ
மெண்ணிய நாள்வரை யிறவாது காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

இது பருவங் கண்டு வன்புறையெதிரழிந்து ஆற்ருளாய தலைவிக்குத் தோழி அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

(இ-ள்.) மன்னுயிர் * * * பொழுதினுன்—எ-து, அகன்ற யாறுகள் அகன்ற உலகிடத்துப் பெருமையையுடைய உயிர்களெல்லாம் உயிர்வாழும்படி பலவாகிய நீரோடு கால்களாலே தம்மிடத்தே வந்து பரக்கும் நீரைத் தாம் எங்கும் பரந்து ஊட்டிப் பாதுகாத்தலையுண்டாக்கி அந்நீர் வற்றியபின்பு சிலவாகிய நீரோடு கால்களாலே அறல் ஒழுக, அவ்வாறுகள் அழகுபெறும்படியாகத், தமக்குமுன்னே ஓர் உதவியைச்செய்து அவ்வுதவியிலே முழுக்க முயன்றவருடைய கேட்டிடத்தே பின்பு ஓர் உதவியை மீண்டு செய்யும் பெருமையையுடைய தொழிலை ஆளுவாரைப்போலே, சுரும்புகளும் ஒலிக்கப்பட்டு வண்டுகளும் ஆர்க்கும்படியாக, அந்நீரை உண்ட கொம்புகளினின்றும் பலமலர்கள் ஆற்றிலே உகும்படி இனிமை பொருந்தின இளவேனில் வந்துவிட்ட பொழுதின்கண்ணே; எ-று.

பன்னீர் சின்னீர் ஆகுபெயர். இது * "தகுதியும் வழக்கும்" என்னுஞ் சூத்திரத்திற் கூறிய மரூஉ. † "வல்லெழுத்தியற்கை யுறழத் தோன்றும்" என்றதனிற் தோன்றுமென்றதனல் அகரங் கெட லகரம் னகரமாய் வருமொழியில் நகரம்

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், எளவியாக்கம், கஎ-ம், சூத்.
† ,, எழுத்ததிகாரம், உயிர்மயங்கியல், கஉ-ம். ,,

* "ல ன வெனவருஉம் புள்ளி முன்னர்த் - த ந வெனவரிற் றனவா கும்மே" என்பதனுன் னகரமாய்முடிந்தது.

இது தரவு.

விரிகாஞ்சித் * * * னெவன்செய்கோ—எ-து, அலர்ந்த காஞ்சிப்பூவிற் தாதை அளைந்து கரிய குயில்கள் கூவாநிற்கவும் இக்காலத்தே பிரிந்துறைதற்கு அஞ்சாதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன், அதனுற் பெற்றதென்? மறைப்பினுஞ் சான்றுபொய்த்தவன் வந்து தன்கீழே இருக்கப்பட்ட மரம்போல யான் அழகு கெடும்படி என் நெஞ்சு காமத்தீக்கொளுந்தி என்னைச் சுடுமாயின் யான் அதற்கு என்செய்வேன்? எ - று.

†"புல்லு மரனு மோரறி வினவே - பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே." இதனுட் ‡ பிற அறிவும் உளவென்று கூறினுர், அதனுற் பாவத்திற்கு அஞ்சி மரங் கவின்வாடிற்றென்ருர்.

பொறைதளர் * * * னெவன்செய்கோ—எ-து, பூவின் பாரத்தாற் தளர்ந்த கொம்பின்மேலே வண்டினுடைய திரள் தங்குதல்கொள்ளாநிற்கவும் நிறையென்னுங் குணந் தளராதவருடைய கொடுமையை யான் மறையாநிற்பேன், அதனுற் பெற்றதென் ? மறைப்பினும் நாட்டாளும் முறைமை தளர்ந்த அரசன்கீழ் இருந்த குடிமக்களைப்போலக் கலங்காநின்று கண்கள் பொறுத்தலாற்ருமல் நீர் ஒழுகுமாயின் யான் அதற்கு என்செய்வேன் ? எ - று.

தளையவிழ்பூஞ் * * * னெவன்செய்கோ—எ-து, முறுக்கு அவிழ்ந்த பூக்களையுடைய சினையிடத்தே சுரும்பினம் யாழ்போலே ஒலியாநிற்கவுங் கொண்ட கோட்பாட்டினைக் குலையாதவருடைய திமையை மறையாநிற்பேன், அதனுற் பெற்றதென் ? மறைப்பினுஞ் சுற்றங் கெட வாழ்பவன் ஆக்கம் பொலிவழியுமாறுபோலப் பொலிவழிந்து தோள்கள் வளைகிடத்தலமையாவாய் நெகிழ்ந்து கழலுமாயின் யான் அதற்கு என்செய்வேன்? எ - று.

கண்பனிவாருந் தோள்வளையோடுமெனச் சினைவினை முதன்மேல் நின்றது.

இவை மூன்றுந் தாழிசை.

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, . எ-ம், சூத்.
† ,, பொருளதிகாரம், மரபியல், உஅ-ம். ,,
‡ பிற அறிவும் உளவெனின் ஓரறிவினவாகா, இஃதாசிரியர் கருத்தன்று.

எனவாங்கு—எ - து, என்றுசொல்லி; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

நின்னுண்ணோய் * * * தாங்கே—எ-து, நின் நெஞ்சினோய் கூறி நீ சுழலாதேசொள். ஏடீ ! நாம் வருவமெனா எண்ணி இருந்த நாளெல்லை கடவாமற் கண் உறுகின்ற வருத்தத்தைக் கை நீக்கினாற் போலக் காதலர் சமைத்தமாவினையுடையராய் வந்தார்காண்; எ - று.

இது சுரிதகம்.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (௩௩)

௩௫. மடியிலான் செல்வம்போன் மரனந்த வச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோற் பல்சினை மிஞிறார்ப்ப
மாயவண் மேனிபோற் றளிரீன வம்மேனித்
தாய சுணங்குபோற் றளிர்மிசைத் தாதுக
மலர்தாய பொழினண்ணி மணிநீர்க் கயநிறப
வலர்தாய துறைநண்ணி யயிர்வரித் தறல்வார
நனியெள்ளுங் குயினோக்கி யினைபுகு நெஞ்சத்தாற்
றுறந்துள்ளா ரவரெனத் துனிகொள்ள லெல்லாநீ;

வண்ணவண் டிமிர்ந்தானா வையைவா ருயரெக்கர்த்
தண்ணருவி நறுமுல்லைத் தாதுண்ணும் பொழுதன்றோ
கண்ணிலா நீர்மல்கக் கவவிநாம் விடுத்தக்கா
லொண்ணுதா னமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

மல்கிய துருத்தியுண் மகிழ்துணைப் புணர்ந்தவர்
வில்லவன் விழவினுள் விளையாடும் பொழுதன்றோ
வலனாக வினையென்று வணங்கிநாம் விடுத்தக்கா
லொளியிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

நிலனாவிற் றிருதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ

பலநாடு நெஞ்சினேம் பரிந்துநாம் விடுத்தக்காற்
சுடரிழாய் நமக்கவர் வருதுமென் றுரைத்ததை;

எனவாங்கு,

உள்ளுதொ றுடையுநின் னுயவுநோய்க் குயிர்ப்பாகி
யெள்ளுறு காதல ரியைதந்தார் புள்ளியற்
காமர் கடுந்திண்டேர்ப் பொருப்பன்
வாய்மை யன்ன வைகலொடு புணர்ந்தே.

இது வற்புறுத்துந் தோழிக்குத் தலைவி இக்காலம் அல்லவோ அவர் வருதுமெனச் சொன்ன காலமென வன்புறையெதிரழிந்தாளை நீ துனிகொள்ளல் அவர் வந்தாரெனத் தலைவன் வரவுணர்ந்து தோழி ஆற்றுவித்தது.

(இ - ள்.) மடியிலான் * * * லெல்லாநீ—எ-து, எடீ; நீ உள்ளம் மடித்திருத்தலில்லாதவன் செல்வம் பெருகுமாறுபோல மரங்கள் பூப் பெருக்க, அங்ஙனம் முயன்றுபெற்ற செல்வத்தைத் தான் வருந்தாமற் படிபெற்று உண்பாரது நுகர்ச்சிபோல அம்மரங்களிற் பலகொம்புகளிலே தேனையுண்டு மிஞிறுகள் ஆரவாரிப்பக், கரியநிறத்தையுடையவள் மேனிபோலத் தளிரா ஈன, அந்நிறத்திற் பரந்த சுணங்குபோல அந்தத் தளிரின்மேலே தாது விழ, அந்த மலர்பரந்த சோலையை அணுகிப் பளிங்குபோலும் நீர்களையுடையவாகிய குளங்கள் வற்றுது நிற்பப், பூப்பரந்த துறைகளையணுகி நுண்மணலைக் கோலஞ்செய்து அறுதியையுடைய நீர் ஒழுக, இவற்றின்மேலே தான் மொழிக்குத் தோற்றிருந்த பகையாற் பிரிந்திருந்தாரை மிக இகழுங் குயிலைப் பார்த்து வருந்திக் கெடுகின்ற நெஞ்சத்தோடே அவர் நம்மைத் துறந்து இனி நினையாரென்று கருதி வெறுப்புக்கொள்ளாதேகொள்; எ - று.

இது தரவு.

**வண்ணவண்** * * * றுரைத்ததை—எ - து, ஒள்ளிய நுதலினையுடையாய்! நாம் நிறுத்தினவளவில் நில்லாவாய்க் கண் நீர்மல்க முயங்கி விடுக்க அவர் நமக்கு வருவேமென்று உரைத்தகாலம் நிறத்தையுடைய வண்டுகள் ஆரவாரித்து, இன்பம் அமையாத வையையாற்றில் ஒழுங்குபட்ட உயர்ந்த இடுமணலிடத்துக் குளிர்ந்த அரு

விரீராலே வளர்ந்த நறிய முல்லைப்பூவிற் தாதையுண்ணும் இவ்வி ளவேனிற்காலமல்லவோ? எ - று.

விடுத்தக்கால், காலீற்றுவினையெச்சம்.

மல்கிய * * * றுரைத்ததை—எ-து, ஒளியிழாய்! நீர் எடுத் துக்கொண்ட காரியம் வெற்றியுண்டாவதாகவென்று கூறித் தொழு து நாம் விடுக்க அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம் பெருகியகாலத்து நீர் நிறைந்த ஆற்றிடைக்குறையிலே அவர் தம்மை மகிழும் பரத்தையரைக்கூடிக் காமனுக்குநிகழ்த்துகின்ற விழாவிடத் தே அவருடனேவிளையாடும் இவ்விளவேனிற்காலமல்லவோ? எ-று.

நிலனாவிற் * * * றுரைத்ததை—எ-து, விளங்குகின்ற இ ழையினையுடையாய்! இறந்துபடுவேமோ ஆற்றியிருப்பேமோவென்று பலவற்றையும் ஆராயும் நெஞ்சினையுடையேமாய் நாம் வருந்தி விடு க்க அவர் நமக்கு வருவேமென்று உரைத்த காலம் நிலத்திலுள்ளார் நாவிலே வழங்கும் நீண்ட மாடங்களையுடைய மதுரையிலுள்ளார் அறிவினையுடைய சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இவ்விளவேனிற்காலமல்லவோ? எ - று.

*"வேந்துறு தொழிலே யாண்டின தகமே" என்பதனான் இது பின்பனியிற் பிரிந்து இளவேனிலுள் வருதல்குறித்தலின் இரு திங்களிடையிட்டது.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு—எ-து, எனச்சொல்லி; எ - று. ஆங்கு, அசை.

இது தனிச்சொல்.

உள்ளுதொ * * * புணர்ந்தே—எ-து, தம்மை நினைக்கும் பொழுதெல்லாம் நெஞ்சழியும் நினது வருத்தத்தையுடைய காமநோ ய்க்கு இளைப்பாறுதலாகிப் பறவையினது பறத்தற்றன்மையையுடை த்தாகிய விருப்பத்தையுடைய கடிய திண்ணிய தேரையுடைய பொதி யின்மலையினையுடைய பாண்டியனுடைய தப்பாத மொழியையொத்த குறித்த எல்லைதப்பாத நாளோடே கூடி நம்மை இகழ்ந்திருக்க நீங் கின காதலர் நம்மைக்கூடுதலைத் தந்தார்; எ - று.

இது சுரிதகம்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சஅ-ம் சூத்.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது எட்டடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (நூச)

நூரு. கொடுமிட னுஞ்சிலான் றூர்போன் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர
வடிநரம் பிசைப்பபோல் வண்டொடு சுரும்பார்ப்பத்
தொடிமகண் முரற்சிபோற் றும்பிவந் திமிர்தர
வியனெழீஇ யவைபோல வெவ்வாயு மிம்மெனக்
கயனணி பொதும்பருட் கடிமலர்த் தேனூத
மலராய்ந்து வயின்வயின் விளிப்பபோன் மரனூழ்ப்ப
விருங்குயி லாலப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
சீரார் செவ்வியும் வந்தன்று
வாரார் தோழிநங் காத லோரே;

பாஅய்ப்பாஅய்ப் பசந்தன்று நுதல்
சாஅய்ச்சாஅய் நெகிழ்ந்தன தோள்;

நனியறல் வாரும் பொழுதென வெய்ய
பனியறல் வாருமென் கண்;

மலையிடைப் போயினர் வாய்நசைஇ நோயொடு
முலையிடைக் கனலுமென் னெஞ்சு;

காதலிற் பிரிந்தார் கொல்லோ வறிதோர்
தூதொடு மறந்தார் கொல்லோ நோதகக்
காதலர் காதலுங் காண்பாங் கொல்லோ
துறந்தவ ராண்டாண் டுறைகுவர் கொல்லோ
யாவது, நீளிடைப் படுதலு மொல்லும் யாழநின்
வாளிடைப் படுத்த வயங்கீ ரோதி
நாளணி சிதைத்தலு முண்டென நயவந்து
கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாவியி னுயிர்க்குமென் னெஞ்சே.

இது காலங்கண்டு ஆற்றாத தலைவியது நிலைமைகண்டு, ஆற்றாத தோழி, தான் ஆற்றாளாய் அவட்குக் கூறியது.

(இ - ள்.) கொடுமிட * * * லோரே—எ-து, தோழீ! காமனுக்கு நிகழ்த்தும் விழவை எதிர்கொள்ளும் இளவேனிற் செவ்வியுங், கொடிய வலியினையுடைய கலப்பைப்படையினையுடைய நம்பி மூத்தபிரானுடைய துழாய்மாலைபோல வெண்கடம்பின் உயர்ந்த இடத்தே ஆரவாரிக்கும் மயில்களனைத்துந் தங்குஞ் சீர்மையுடையவாய், அதிலே வண்டோடே சுரும்புகளும் வடித்த நரம்புகள் ஒலிப்பனபோல ஆரவாரிப்பத், தொடியினையுடைய விறலியர் கானத்திற்போலே தும்பிகள் வந்து ஒலித்தலையுண்டாக்கத், தேனினங் கயங்கள் சூழ்ந்த இளமரக்காவில் மணத்தையுடைய மலர்களை வாச்சியங்களை எழுப்பின ஓசைபோல எவ்விடமும் திம்மென்னும் ஓசை பிறக்கும்படியாகச் சத்திக்க, மரங்கள் சூட உரியானை ஆராய்ந்து நாற்றத்தாலே தம்மிடத்தே தம்மிடத்தே அழைப்பனபோல மலர்கள் அலரச், சரிய குயில்கள் கூவப், பெரிய நீர்த்துறைகள் பூவால் அழகுபெற வந்தது; இக்காலம் இங்ஙனம் முதிர்ந்த அளவிலும் நங்காதலரோ வாரார்; எ-று.

பாஅய்ப்பாஅய்ப் * * * தோள்—எ - து, ஆதலால் எனது நுதல் பசப்பொழுகப் பரந்துபரந்து வந்து பின்னர் முழுக்கப்பசந்தேவிட்டது ; என் தோள்கள் ஒழுக மெலிந்து மெலிந்து வந்து பின்னர் மிகவும் மெலிந்தேவிட்டன; எ - று.

நனியறல் * * * கண்—எ - து, என் கண்கள் இக்காலம் மிகவும் அறலொழுகுமென்று கருதி அதற்கெதிரே வெய்ய நீர் அறுதியுடைத்தாய் ஒழுகாநிற்கும் ; எ - று.

மலையிடைப் * * * நெஞ்சு—எ - து, என் நெஞ்சு மலையிடத்தே போனவருடைய வார்த்தை நச்சுகையினாலே தோன்றிய காமத்தீயாலே என்னுடைய முலையெல்லாங் காந்தாநிற்கும்; எ - று.

நசைஇயென்னுஞ் செய்தெனெச்சங் காரணகாரியப் பொருட்டாய்நின்றது. தோன்றியவென வருவிக்க. அது நச்சின நோயெனப் பெயரொச்சமாகாது.

காதலிற் * * * னெஞ்சே—எ - து, காதலர் நம்மிடத்து நிகழ்த்துங் காதலையும் நாம் இறந்துபடாதிருந்து காண்பேமோ? நம்மை இங்ஙனந் துறந்தவர் அவ்விடங்களிலே அவ்விடங்களிலே இருந்து

விடுவரோ? நம்மேற்கொண்ட காதலினின்றும் நீங்கிவிட்டனரோ? வறிதே ஒரு தூதுடனே நம்மையும் மறந்துபோயினரோ? இவற்றுண் முடியுங் காரியம் எதுதானென்று தலைவி கூற, அதுகேட்ட தோழி, புணர்ந்தவர் சேயிடத்தே பிரிந்திருத்தலும் உலகத்துக்குப் பொருந்தும், அவர் வருவதற்கு முன்பே கத்திரிகை இடையிட்ட விளங்குகின்ற நெய்த்த ஓதியினையுடையாய்! என் நெஞ்சு அவர் குறித்தநாள் வந்து நின் அழகைக் கெடுத்தலுமுண்டென்று கருதி நூற்கேள்வியினையுடைய அந்தணர் விருப்பம் வந்து செலுத்தும் யாகத்திடத்துப் புகைபோல நெட்டுயிர்ப்புக்கொள்ளாநிற்கும்; இதுகாண் யானுறுகின்ற வருத்தமெனத் தானும் ஆற்றாளாய்க்கூறி ஆற்றுவித்தாள்; எ - று.

இது தோழி கூற்றிற் *"பிறவும்" என்பதனாற் கொள்க.

இதனாற் தோழிக்குந் தலைவிக்குஞ் சூழ்ச்சி தோன்றிற்று.

இது தரவின்கண்ணே "செவ்வியும்வாநதன்று" என வழியசை புணர்த்த சொற்சீரடியும் 'பாஅய்ப்பாஅய்ப் பசந்தன்று நுதல் - சாஅய்ச்சாஅய் நெகிழ்ந்தன தோள்' என முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்து கலிவெண்பாவின் வேறுபட்ட கொச்சகம். (௩௫)

* தொல்காப்பியம், பொருளதிகாரம் கற்பியல், ௯-ம் சூத்

பாலைக்கலி முற்றும்.

# இரண்டாவது குறிஞ்சிக்கலி.

௧௭. கயமல ருண்கண்ணாய் காணா யொருவன்
வயமா னடித்தேர்வான் போலத் தொடைமாண்ட
கண்ணியன் வில்லன் வருமென்னை நோக்குபு
முன்னத்திற் காட்டுத லல்லது தானுற்ற
நோயுரைக் கல்லான் பெயருமற் பன்னாளும்
பாயல் பெறேஎன் படர்கூர்ந் தவன்வயிற்
சேயேன்மன் யானுந் துயருழப்பே னாயிடைக்
கண்ணின்று கூறுத லாற்றா னவனாயிற்
பெண்ணன் றுரைத்த னமக்காயி னின்னாதூஉங்
காணான் கழிதலு முண்டென் றொருநாளென்
றோணெகிழ் புற்ற துயராற் றுணிதந்தோர்
நாணின்மை செய்தே னறுநுதா லேனல்
இனக்கிளி யாங்கடிந் தோம்பும் புனத்தய
லூசலூர்ந் தாட வொருஞான்று வந்தானை
யைய சிறிதென்னை யூக்கி யெனக்கூறத்
தையா னன்றென் றவனூக்கக் கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தே னவன்மார்பின் வாயாச்செத்
தொய்யென வாங்கே யெடுத்தனன் கொண்டான்மேன்
மெய்யறியா தேன்போற் கிடந்தேன்மன் னாயிடை
மெய்யறிந் தேற்றெழுவே னாயின்மற் றொய்யென
வொண்குழாய் செல்கெனக் கூறி விடும்பண்பி
னின்க ணுடைய னவன்.

இது * "நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்-செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும் - புணர்ச்சி யெதிர்ப்பாடுள் ளுறுத்து வருஉ - முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை" த் தன்னை அவன் மறையாமை காரணமாக "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது - பல்வேறு கவர்பொரு ணாட்டத்தாற்" றலைமகட்குத் தோழிகூறியது.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௩-ம் சூத்.

(இ - ள்.) கயத்திடத்தின் நீலமலர்போலும் மையுண்கண்ணினையுடையாய்! யான் கூறுகின்றதனை நின் மனத்தான் ஆராய்ந்துபாராய், தனக்கு ஒப்பில்லாதான் வலியையுடைய யானைமுதலியவற்றின் அடியைத் தேடுவோன்போலே கட்டுதேன் மாட்சிமைப்பட்ட கண்ணியையுடையனாய் வில்லையுடையனாய் வரும்; அங்ஙனம் வந்து என்னைப் பார்த்துத் தான் உற்ற நோயை மிகவுங் குறிப்பாலே யான் உணரக் காட்டுவதன்றிக் கூற்றுற் கூறுனாய்ப் பலநாளும் மீண்டும் போம்; அதுகண்டு அவனேயன்றி அவனிடத்து மிகவும் உறவில்லாத யானும் அவன் என்செய்கின்றானென்னும் நினைவுமிக்குத் துயில்பெறேனாய் வருத்தத்திலே விழுந்து அழுந்துவேன்; அவ்விடத்து அவனுயிற் தன் குறையை நம்மெதிர்நின்று கூறுதலைச் செலுத்தான்; நமக்காயின் நின்வருத்தத்திற்கு யாமும் வருந்தினேமென்று கூறுதல் பெண்டன்மையன்று; இங்ஙனம் நின்ற இதனைச் சிறிது நெஞ்சால் ஆராயானாய் இறந்துபடுதலுமுண்டாமென்று கருதி, இடையிலே ஒருநாளிலே என் தோள்கள் மெலிந்து யான் உற்ற வருத்தத்தாலே துணியாததொன்றைத் துணிதலைச்செய்து ஒரு நாணமில்லாமையைச் செய்தேன்; அஃதியாதெனின், நறிய நுதலினையுடையாய்! தினைப்புனங்களின் இனமாகிய கிளியை விழாமல் ஓட்டி யாம் பாதுகாக்கும் புனத்துக்கு அயலிலிட்ட ஊசலை ஏறி ஆடாநிற்க, ஒருநாள் வந்தவனை ஐயனே! சிறிதுபொழுது என்னை ஊசலாட்டுவாயாகவெனச்சொல்ல, அவனும் அதற்குடம்பட்டுத் தையால்! நீ கூறியது நன்றென்று ஊசலாட்டாநிற்க, அவன்மார்பின்கண்ணே கைநெகிழ்ந்து வீழ்ந்தேனாக அவன் கருதும்படி பொய்யுண்டாக வீழ்ந்தேன்; அதனை அவன் உண்மையாகக்கருதி, அப்பொழுதே விரைய என்னையெடுத்து அணைத்துக்கொண்டான்; அவ்விடத்தே என் மெய்வருத்தத்தை யான் அறிந்து மயக்கம் நீங்கி எழுந்திருப்பேனாயிற், பின்னைப் பிறர் அறிவரென்று கருதி விரைய ஒண்குழாய்! நீபோவென்று கூறிவிடுங் குணத்தாலே நம்மேலே ஒரு கண்ணோட்டமுடையனாயிருந்தான்; அதனாலே மெய்ம்மறந்தேன்போலே கிடந்தேன்; இதுகாண்; எ - று.

மேலென்றது அவன்மார்பிலென்னும் பொருட்டு. 'தானுற்ற நோயுரைக்கல்லான் பெயருமற் பன்னாளும்' என்றது தலைவன் இளிவந்தொழுகுதல் காரணத்தான் யானுந் துயருழப்பேனுதலிற் பிறன்கட் தோன்றிய இளிவரல். அப்பொருளாக அவலச்சுவை பிறந்தது.

முன்னத்திற் காட்டுதலல்லது' என்றது நிறைவுடைமையென்னும் ஒப்புமை. 'பெண்ணன்றுரைத்தல் நமக்காயின்' என்பதும் அது.

இஃது *"இயல்" என்றதனாற் பன்னீரடியினிகந்துந் தையானன்றெனத் தனிச்சொல்லின்றி வந்த கலிவெண்பா.

இதுவும், வேறுபொருள் நுதலுமென்றலின், வேறொரு பொருள் நுதலுமாறு கூறுதும். †"அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின் - வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப" என்னும் பொருளியற் சூத்திரத்தால் அறக்கழிவுடையனவாக அவன்மார்பில் வீழ்ந்து மெய்யறியாதேன்போற் கிடந்தேனெனக் கூறினாள். இது பொருட்பயன் தந்தவாறென்னையெனின், தலைவன் குறையுற்றுநின்றமையை முன்னர் மெய்யாக வழிநிலைபிழையாமற் கூறிப், பின்னர்ப் படைத்துமொழிந்து பொய்யேகூறுகின்றாள், வழிநிலைபிழைப்பக் கூறினாள். அது பொருட்பயன் தருதற்கென்க. அஃதென்னை? தலைவன் குறை புலப்படுத்தாது வருந்துகின்ற காலத்து அதனைத் தனக்குப் புலப்படுவித்துக்கொண்டே அவனை ஆற்றுவித்தற்பொருட்டு அறக்கழிவுடையன கூறித், தானுந் தலைவனும் இவ்வாறே செறிந்தமை உணர்த்தலின், மறைபுலப்படுத்துங் கருத்தினளாந் தலைவியென்னும் பொருட்பயன் தந்தே நின்றதாயிற்று. இதனான் இதுவும் "வழக்கென வழங்கலும் பழித்தன்று" என ஆசிரியரும் அமைத்தார். இங்ஙனம் பொருட்பயன் தருதல் ‡"நெருந லெல்லை யேனற் றோன்றித் - திருமணி யொளிர்வரும்" என்னும் அகப்பாட்டிற் "சிறுபுறங் கவையின னாக்கைப் பிணிவிடா" என்ற பொருளானும் உணர்க.

இதனாற் றலைவிக்கு நாணம் பிறந்தது. (௧)

௩௮. இமயவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தண
னுமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
வையிரு தலையி னரக்கர் கோமான்
றொடிபொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
யெடுக்கல் செல்லா துழப்பவன் போல
வுறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௧௫௪-ம் சூத்.
† ,, ,, பொருளியல், ௨௪-ம் ,,
‡ அகநானூறு, களிற்றியானைநிரை, ௩௨-ம் செய்

நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்கு நாடகேள்;
ஆரிடை யென்னாய்நீ யரவஞ்சாய் வந்தக்கா
னீரற்ற புலமேபோற் புல்லென்றாள் வைகறை
கார்பெற்ற புலமேபோற் கவின்பெறு மக்கவின்
றீராமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண்;
இருளிடை யென்னாய்நீ யிரவஞ்சாய் வந்தக்காற்
பொருளில்லா னிளமைபோற் புல்லென்றாள் வைகறை
யருள்வல்லா னாக்கம்போ லணிபெறு மவ்வணி [ண்;
தெருளாமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்கா
மறந்திருந்தா ரென்னாய்நீ மலையிடை வந்தக்கா
லறஞ்சாரான் மூப்பேபோ லழிதக்காள் வைகறை
திறஞ்சேர்ந்தானாக்கம்போற் றிருத்தகுமத்திருப்[காண்;
புறங்கூற்றுத்தீர்ப்பதோர் பொருளுண்டே லுரைத்தைக்
எனவாங்கு,
நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலை நாடன்
வேங்கை விரிவிட நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

இஃது இரவுக்குறிவந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி தலைவியது நிலைமைகூறி அவனை வரைவுகடாவ, அவன் வரையவருகின்றமை தோழி தலைவிக்கு வரைவுமலிந்துகூறியது.

(இ - ள்.) இமயவில் * * * நாடகேள்—எ-து, இமயமலையிடத்துப் பிறந்த மூங்கிலாகிய வில்லை வளைத்த, கங்கையான் ஈரத்தையுடைத்தாகிய சடையினையுடைய இறைவன், இறைவியோடே பொருந்தி, உயர்ந்த கயிலைமலையிலே இருந்தானாக, அரக்கர்க்கரசனாகிய பத்துத்தலையையுடைய இராவணன் வரையெடுத்தற்குக் கையைக் கீழேசெருகித், தொடிபொலிவுபெற்ற அத்தடக்கையினாலே அம்மலையை எடுத்தலாற்றாது வருந்துகின்றவனைப்போல, மிகுதியையுடைய புலியினது வடிவையொப்பப் பூத்த வேங்கைமரத்தைப் புலியெனக் கறுவுதல்கொண்டு, அதன் அடியிலே குத்திய மதத்தையுடைய யானை, நீண்ட பெரிய முழைஞ்சிடமெல்லாம் ஒலிக்கும்படி

கூப்பிட்டுத் தன் கொம்பை வாங்கமாட்டாதே வருந்தும் நாடனே, யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

கொடிதாகிய புலியின் உருவையொப்ப வேங்கை பூத்தவெ ன்றதனைக் களவின்கட் பெறுகின்ற இன்பத்தை நீக்குதலிற் கொடி யதுபோற் தோன்றிக் கற்பின்கண் இல்லறப் பயனோடுகூடிப் பேரின் பத்தைத் தருகின்ற வரைவுகடாய கூற்றாகவும், வேங்கையைப் பகை யாகக் கருதி அதனோடே பொருத யானையை அக்கூற்றைத் தான் நுகர்கின்ற இன்பத்திற்கு மாறாகக் கருதி அக்கூற்றுடனே மாறு பட்டு வருகின்ற தலைவனாகவும், விடரகஞ் சிலம்பக் கூவுதலை அத்தலை வன் அவ்வொழுக்கத்திற்கு இடையீடுபட்டு வருந்திச் கூறுகின்ற கூற்றாகவும், கோடு புய்க்கல்லாது உழத்தலை அக்கூற்றைப் பகையெ ன்று கொண்ட மனத்தை அவள் கூற்றை நன்றென்று கருதி நீக் கமாட்டாது வருந்துதலாகவும் உள்ளுறையுவமங் கொள்க. உழப் பவன்போலவென்ற வினையுவமம் பின்வருகின்ற வேங்கையைக் குத் திய யானை கோடு புய்க்கல்லாதுழக்குமென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து அதுவும் உள்ளுறை யுவமம்போலத் திணையுணர்த்தலைத் தள்ளாதுநின்றது. இது வினையுவ மப்போலி. இஃது * "உள்ளுறை யுவம மேனை யுவமமெனத் - தள் ளா தாகுந் திணையுணர் வகையே" என்னும் அகத்திணையியற் சூத்தி ரத்தானும் † "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக் - கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்னும் பொருளியற் சூத்திரத்தானும் யாங் கூறிய உரையான் உணர்ந்துகொள்க. மேலும் இத்தொகையுள், வினையுவமமும் வந்தும் வினையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்பு க்கொடுத்துத் திணையுணர்தலைத் தள்ளாது நிற்கும் பாட்டுக்கட்கெல் லாம் இச்சூத்திரங்களே விதியாகக்கொள்க. "நன்றே" என்னுங் குறுந்தொகையும் அது.

ஆரிடை * * * லுரைத்தைக்காண்—எ-து, நீரற்ற நிலத் திற் பயிர்போல நின் அளிபெறாமற் பொலிவழிந்தவள் நீ வருதற் கரிய இடமென்று கருதாயாய் ஆண்டுள்ள பாம்பை அஞ்சாயாய் வர விடியற்காலத்தே மழையைப் பெற்ற நிலத்திற் பயிர்போல அழகு பெறும்; இனி அங்ஙனம் பெற்ற அழகு இவளைவிட்டு நீங்காமல் நிலைபெற்று நிற்கும்படி காப்பதொரு கூறுபாடு உண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், சுஅ-ம் சூத்.
† " " பொருளியல், சஆ-ம் "

வந்தக்கால், காலீற்று வினையெச்சம்; உரைத்துக்காணென்பது உரைத்தைக்காணென வினைத்திரிசொல்லாயிற்று.

இருளிடை * * * லுரைத்தைக்காண்—எ-து, கைப்பொருள் இல்லாதான் இளமைபோல நின் அளிபெறுமற் பொலிவழிந்தவள் நீ இருளிடத்தில் இராவென்று கருதாயாய் ஆண்டுவரும் ஏதத்திற்கு அஞ்சாயாய் வர விடியற்காலத்தே அருளுதலை வல்லவனுக்கு உண்டாய ஆக்கம்போல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற அழகு பிறரான் வந்த அழகென்று புறஞ்சொல்லுதலைப் போக்குவதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

மறந்திருந்தா * * * லுரைத்தைக்காண்—எ-து, தருமநெறியைப் பொருந்தாமல் வறிதே மூப்பினை எய்தியவன் மறுமைச்செல்வத்திற் பொலிவிழந்தாற்போல நின் அளிபெறுமற் பொலிவிழந்தவள் கொலைத்தொழிலிற் குறைவின்றித் திருந்திய கானவரொன்று கருதாயாய் அம்மலைச்சாரலிலுண்டாகிய வழிக்கண் வந்த இடத்து அவ்வரவினுற் பெற்ற முயக்கின்பத்தாலே விடியற்காலங் கூறுபாடுடையவனுடைய செல்வப்பொலிவுபோல அழகுபெறும்; அங்ஙனம் பெற்ற அழகால் அயலவர்கூறத்தக்க புறங்கூற்றுரையை மாற்றத்தக்கதொரு பொருளுண்டாகில் அதனை எங்களுக்குக் கூறிக்காண்; எ - று.

பொருளென்றது ஆகுபெயர்.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு அசை.

நின்னுறு * * * கொளற்கே—எ-து, நின்னுடைய மிகுதலையுடைய வருத்தத்தை யான் கூறக்கேட்டு நல்ல மலைநாடன், தோழீ! வேங்கை அலர்கின்ற காலத்தைப் பார்த்துப் பெருத்த இறையினையுடைய பணைத்தோளை வரைந்துகோடற்கு வரும்; எ - று.

இதனற் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது 'ஐயிரு தலையி னரக்கர் கோமா' னென ஆசிரியத்தளையும் வந்து பதினேரெழுத்தான் வந்த அடிபெற்ற ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் * இயலென்ற இலேசாற் றரவின் உள்ளுறைப்பொருளையுங் கொண்டு நின்ற நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (உ)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஙஎ - ம் சூத்.

நகூ. காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவா [லா
டாமரைக்கண் புதைத்தஞ்சித் தளர்ந்ததனோ டொழுக
னீனாக நறுந்தண்டார் தயங்கப்பாய்ந் தருளினாற்
பூணாக முறத்தழீஇப் போதந்தா னகனகலம்
வருமுலை புணர்ந்தன வென்பதனா லென்றோழி
அருமழை தரல்வேண்டிற் றருகிற்கும் பெருமையளே;

அவனுந்தான், ஏன லிதணத் தகிற்புகை யுண்டியங்கும்
வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத்
தேனி னிறாலென வேணி யிழைத்திருக்குங்
கானக நாடன் மகன்;

சிறுகுடி யீரே சிறுகுடி யீரே
வள்ளி கீழ்வீழா வரைமிசைத் தேன்றொடா
கொல்லை குரல்வாங்கி யீனா மலைவாழ்ந
ரல்ல புரிந்தொழுக லான்;

காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ்சிலம்பின்
வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்
தாம்பிழையார்கேள்வர்த் தொழுதெழலாற்றம்மையருந்
தாம்பிழையார் தாந்தொடுத்த கோல்;

எனவாங்கு,

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
வென்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்;

அவருந், தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லா முருத்தெழுந் தாறி
யிருவர்கட் குற்றமு மில்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை;

தெரியிழாய் நீயுநின் கேளும் புணர
வரையுறை தெய்வ முவப்ப வுவந்து
குரவை தழீஇயா மாடக் குரவையுட்
கொண்டு நிலைபாடிக் காண்;

நல்லாய், நன்னு டலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்டாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்;
புனவேங்கைத் தாதுறைக்கும் பொன்னறை முன்றி
னனவிற் புணர்ச்சி நடக்குமா மன்றோ
நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே
கனவிற் புணர்ச்சி கடிதுமா மன்றோ;
விண்டோய்கன் னாடனு நீயும் வதுவையுட்
பண்டறியா தீர்போற் படர்கிற்பீர் மற்கொலோ
பண்டறியா தீர்போற் படர்ந்திர் பழங்கேண்மை
கண்டறியா தேன்போற் கரக்கிற்பென் மற்கொலோ;
மைதவழ் வெற்பன் மணவணி காணமற்
கையாற் புதைபெறூஉங் கண்களுங் கண்களோ;
என்னைமன், நின்கண்ணாற் காண்பென்மன் யான்;
நெய்த லிதழுண்கண், நின்கண்ணா தென்கண் மன;
எனவாங்கு,
நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவனை முந்துறீஇத்
தகைமிகு தொகைவகை யறியுஞ் சான்றவ ரினமாக
வேய்புரை மென்றோட் பசலையு மம்பலு
மாயப் புணர்ச்சியு மெல்லா முடனீங்கச்
சேயுயர் வெற்பனும் வந்தனன்
பூவெழி லுண்கணும் பொலிகமா வினியே.

இது * "முன்னிலை யறனெனப் படுதலென் றிருவகைப் - புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்" என்னும் விதிபற்றித் தமர் வரைவுமறுத்துழித் தோழி தாய்க்கு அறத்தொடுநிற்ப, அவள் தன்னையர்முதலியோர்க்கு அறத்தொடுநிற்ப, அவரும் ஒருவாற்றான் உடன்பட்டமை தோழி தலைவிக்குக் கூறித், தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற்பொருட்டு வரையுறைதெய்வத்திற்குக் குரவையாட அவன் வரையவருகின்றமை தோழி தலைவிக்கு உரைத்தது.

(இ - ள்.) காமர் * * * பெருமையளே—எ - து, எம்மோடே கூடி விருப்பத்தையுடைய கடிய நீரையாடுகின்றவள் கால்தளர்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௩-ம் சூத்.

ந்து அஞ்சித் தாமரைபோலுங் கண்ணைப் புதைத்து அந்நீரோடே போகையினாலே தனக்குச்சென்ற அருளினாலே நீண்ட சுரபுன்னைப்பூவாற் கட்டின நறிய குளிர்ந்த மாலை அசையும்படி அந்நீரிலே குதித்துப் பூணினையுடைய இவள் மார்பைத் தன்மார்போடே உறும்படி அணைத்துக்கொண்டு கரையிலே போதவிட்டவனுடைய அகன்ற மார்பை இவளுடைய எழுகின்ற முலைகள் கூடினவென்று பிறர் கூறுகின்ற கூற்றாலே என்னுடைய தோழி நமக்கு அரியமழையைப் பெய்விக்க நாம் விரும்பில் அதனை நமக்குத் தர வல்ல கற்பின்பெருமையளாயினாள் ; எ - று.

அவனுந்தான் * * * மகன்—எ-து, இவளேயன்றி அவன்றானுந் தினைப்புனத்திலிட்ட பரணிடத்து எரிந்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளிமழுங்கித் திரியும் மதியம் வானிடத்தேசென்று அம்மலைத்தலையிலே தங்கிற்றாயின் அதனை அந்த மலையில் வைத்த தேனினது இறாலென்றுகருதி அதனை அழித்தற்குக் கண்ணேணிமுதலியன சமைத்திருக்குங் காடு அகன்ற நாட்டையுடையவன்மகன் ; எ-று.

மிக்க ஒளியினையுடைய மதி புகையால் மாசுண்ட தன்மை பற்றித் தங் கையகப்படுத்திப் பயன்கொள்ளக்கருதும் நாடனெனப் புகழ்மிக்க தலைவனும் புனலிடைத் தழுவிப் போதந்ததனாற் சிறிது புகழ்குறைந்தமை பற்றி யாமும் அவன் வரைந்துகொள்ளக் கருதுகின்றேமென உள்ளுறையுவமங் கொள்க.

இதனாற் தலைவன் தங்குலத்தினும் உயர்ந்தானென்பது தோன்றக்கூறினாள். இது புறம்பொப்புமை கூறிற்று.

சிறு குடி * * * லான்—எ-து, சிறுகுடியிலுள்ளீர் ! சிறுகுடியிலுள்ளீர் ! இம்மலையில் வாழ்வார் இங்ஙனம் உதவியார்க்குக் கொடுக்க நினையாது நொதுமலர்க்குக் கொடுக்க நினைந்து அறமல்லாதனவற்றை விரும்பி ஒழுகுகையினாலே இனி இவ்விடத்து வள்ளியுங் கிழங்கு கீழ்விழா; மலைமிசையிற் தேனுந் தொடா; கொல்லையிற் தினைகளுங் கதிர்பறிந்து ஈனவாம் ; எ - று.

காந்தள் * * * கோல்—எ-து, கார்தட்பூ மணநாறும் பார்த்தவர்கள் கண்ணைத் தன்னிடத்தே வாங்கிக்கொள்ளுங் கரிய மலையிடத்து வளர்ந்த மூங்கில்போலும் மெல்லிய தோளையுடைய குறவருடைய மடப்பத்தையுடையமகளிர் தாங் தத்தங் கணவரைத் தப்பாராய்

அவரோ தெய்வமென்று வணங்கி எழுந்திருத்தலாலே அவர்தம் ஐயன் மார்தாமுந் தாந்தொடுத்த அம்புகள் இலக்குத்தப்பாராயினர் ; எ-று.

என்றது, விளைவின்றேல் வேட்டையாடியும் உணவுண்டாக்குதுமென்று கருதில் அதுவுந் தப்புமென்றாளென்றவாறு.

எனவாங்கு—எ - து, என்று; எ - று. ஆங்கு, அசை.

அறத்தொடு * * * யாய்—எ-து, தமர்வரைவுமறுத்தவழி அறத்தொடுநின்ற என் கூற்றைத் தாய் நெஞ்சாற் கண்டு நற்றாய்க்குத் தான் அறத்தொடுநிற்குங் கூற்றிலேபடக் கூற அதுகேட்டு அவளும் என்னையன்மார்க்கு வெட்சியிற்பிறவாமற் செலுத்திக்கூறினள் ; எ-று.

அவருந் * * * தலை—எ-து, அதுகேட்டு அவரும் ஒரு முகூர்த்தமெல்லாம் நெஞ்சழன்று கண்சிவந்து தெரிந்த அம்புகளையும் பார்த்து வில்லையும் பார்த்து எழுந்து அலமந்து இருவரிடத்துங் குற்றமில்லையாயிருந்ததென்று சினம் ஆறித் தலைசாய்த்திருந்தார்; எ-று.

இஃது அறத்தொடுநிலை வாய்த்தவாறு கூறியது.

தெரியிழாய் * * * காண்—எ-து, தெரிந்த இழையினையுடையாய் ! நீயும் நின்கணவனுங் கூடும்படியாக இவ்வரையுறைதெய்வம் மனமகிழும்படி யாம் மகிழ்ந்து குரவையைக் கைகோத்தாடுதற்கு அக்குரவைக்கூத்திற் கொண்டுநிலைச்செய்யுளை நீபாடிக்காண் ; எ - று.

யாமென்னும் படர்க்கையுளப்பாடு ஆயத்தை உளப்படுத்திற்று.

இது "நாமக் காலத் துண்டெனத் தோழி - யேமுறு கடவுளேத்" தியது. ஒருவர்கூற்றினை ஒருவர் கொண்டுகூறுதலிற் கொண்டுநிலையாயிற்று.

நல்லாய் * * * றனர்கொல்—எ-து, அது கேட்ட தலைவி நல்லாய்! நம்மை வரைந்துகொள்ளும் நல்லநாள் நம்மிடத்தே வருமளவில் நஞ் சுற்றத்தார் தம்மலையிடத்து நாணைத்தாங்குவார் தாம் என்ன நல்வினையைச் செய்தார்கொலென்றாள்; எ - று.

சுற்றத்தார் இடைவரைவாற்பிறந்த நாண் தாங்கலரிதென்றாள்.

புனவேங்கைத் * * * மன்றே—எ-து, புனத்தினின்ற வேங்கைப்பூவிற் பொன்போன்ற தாது உதிரும் பாறையையுடைய முற்

றத்தே வெளியிலே உண்டாங் கூட்டமும் ஒப்பில் நடக்குமல்லவோ; அந்நனவிற் புணர்ச்சி நடந்ததாக அப்பொழுதே கனவிடத்தே உண்டாய்ப் போதுங் கூட்டத்தைப் போக்கிவிடுவேமல்லவோ? எ-று.

நனவினும் புணர்ச்சி கனவினும் புணர்ச்சியென ஆமென்பன வற்றைக் கூட்டுக. நடக்கலுமென்றது உம்மீற்றுவினையெச்சம், விளைவுதோன்ற நின்றது.

* "வரைவுதலைவரினும்" என்பதனாற் தலைவி தன்வயினுரிமையும் அவன் வயிற்பரத்தைமையுந் தோன்றக் கூறினாள்.

விண்டோய்கன் * * * மற்கொலோ—எ-து, அதுகேட்ட தோழி விசும்பைத் தீண்டுகின்ற மலைநாடனும் நீயும் அக்கலியாணத்தே பண்டு கண்டறியாதீர்போல மிகவும் நடப்பீரோ? பண்டு கண்டறியாதீர்போல நடந்திருடைய பழைய உறவை யான் கண்டறியாதேன்போல மிகவும் மறைப்பேனோ? என்றாள்; எ-று.

ஓகாரங்கள் ஐயம்.

மைதவழ் * * * கண்களோ—எ-து, மேகந் தவழும் மலையையுடையவனுடைய மணக்கோலஞ் சாணாமற் கையாலே புதைத்தலைப் பெறுகின்ற கண்களுங் கண்களென்று கூறப்படுமோ? எ-று.

என்னைமன் * * * யான்—எ-து, அதுசேட்ட தலைவி யான் நின்கண்ணாலே மிகவுங் காண்பேனென்றாள்; எ-று.

நெய்த * * * மன—எ-து, அதுகேட்ட தோழி நெய்தலிதழ்போலும் மையுண்கண்ணாகிய நின்கண் மிக என்கண்ணாவதாகவென்றாள்; எ-று.

இதுவுந் †"தாயத்தி னடையா" என்னுஞ் சூத்திரத்தடக்கினும்.

எனவாங்கு—எ-து, என்று நாஞ்சொன்ன அக்காலத்தே; எ-று.

நெறியறி * * * வினியே—எ-து, நூனெறியாலே அறிந்த இருவருங் கூடுதற்கேதுவாகிய முகூர்த்தம் வேறுபட்டுத் தப்புதலை ஒருகாலத்தும் அறியாத கணியை முன்னிட்டு, அழகுமிகுகின்ற தொகுத்துக்கூறுதலையும் வகுத்துக்கூறுதலையும் அறியுஞ் சான்றவர் தன

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ0-ம் சூத்.

† ,, ,, பொருளியல், உஎ-ம் ,,

க்குச் சுற்றமாக, மூங்கிலையொக்கும் நம்முடைய மெத்தென்ற தோளிற் பசலையும் ஊரிற் கூறும் அம்பலும் பொய்யாகிய கனவிற் கூட்டமுமெல்லாஞ் சேர நீங்கும்படி நீளிதாய் உயர்ந்த மலையினையுடையவனும் வந்தான், நின்னுடைய பூவினது அழகையுடைய கண்ணும் பொலிவதாக என்றாள் ; எ - று.

'கானகநாடன்மகன்' எனவாங்கறத் * * * யாய், எனத் தோழி கூறியவிருப்பாற் குடிப்பொருளைச் செவிலி கூறி அறத்தொடு நின்றாளெனத் தோழி கொண்டெடுத்துமொழிந்தவாறு காண்க.

இதனாற் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

தெய்வமஞ்சலென்பது களவிற்கும் உரித்தாகலிற் தங்குல தெய்வமாகிய வரையுறைதெய்வத்திற்குக் குரவையாடுதல் தலைவிக்கும் உரித்தாகலிற் கொண்டுநிலைபாடினாள். இஃது அறத்தொடுநிலை எழுவகையினுள் ஏத்தலும் எடுத்தலும் வந்தது.

இது தரவின்பின் அவனுந்தான் ஏனலிதணத்து என்பது முதலிய கொச்சகங்கள் வெண்பாவாய்ப் புனவேங்கை முதலியன துள்ளலோசை விராய்த் தனிவகை ஒன்றிக் கொச்சகமாய் ஒழிந்தபாவும் மயங்கிச் சுரிதகம் முடிகிவருதலிற் கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்ட கொச்சகம். * "ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு- மூவகை யடியு முன்னுத லிலவே" என்பதனுள் முன்னுதலில என்றதனால் நாற்சீரும் ஐஞ்சீரும் அறுசீருமாகிய மூன்றடியானும் வரும் முடுகியலோடு விராய்த் தொடர்ந்து ஒன்றாய்க் கலிக்குறுப்பாய் வரும் ஆசிரியமும் வெண்பாவும் உளவென்றுகொள்க. என்றலின், 'நெறியறி * * * முந்துறீஇ' என அறுசீரடி முடுகியலுந் 'தகைமிகு * * * ரினமாக' என ஐஞ்சீரடி முடுகியலும் விராய் ஆசிரியச்சுரிதகம் வந்தது. † "முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்" என்பதனான் 'நின்கண்ணாற் காண்பென்மன் யான்' என முச்சீரடியும் வந்தது.(ரு)

சO. அகவினம் பாடுவாந் தோழி யமர்க்க
ணகைமொழி நல்லவர் நாணு நிலைபோற்
றகைகொண்ட வேனலுட் டாழ்குர லுரீஇ
முகைவளர் சாந்துரன் முத்தார் மருப்பின்
வகைசா லுலக்கை வயின்வயி னோச்சிப்

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஎ-ம் சூத்.
† " " " எO-ம் "

பகையினேய் செய்தான் பயமலே யேத்தி
யகவினம் பாடுவா நாம் ;

ஆய்நுத லணிகூந்த லம்பணைத் தடமென்றோட்
டேறு கதுப்பினுய் யானுமொன் றேத்துகு
வேய்நரல் விடரக நீயொன்று பாடித்தை ;

கொடிச்சியர் கூப்பி வரைதொழு கைபோ
லெடுத்த நறவின் குலேயலங்கு காந்தட்
டொடுத்ததேன் சோரத் தயங்குந்தன் னுற்று
ரிடுக்கண் டவிர்ப்பான் மலே;

கல்லாக் கடுவன் கணமலி சுற்றத்து
மெல்விரன் மந்தி குறைகூறுஞ் செமமற்றே
தொல்லெழி றோயந்தார் தொலேயி னவரினு
மல்லற் படுவான் மலே ;

புரிவிரி புதைதுதை பூத்ததைந்த தாழ்சினேத்
தளிரன்ன வெழின்மேனி தகைவாட நோய்செய்தா
னருவரை யடுக்கறு மழித்தொன்று பாடுவாம்;

விண்டோய் வரைப்பந் தெறிந்த வியர்விடத்
தண்டா ழருவி யரமகளி ராடுபவே
பெண்டிர் நலம்வெளவித் தண்சாரற் றுதுண்ணும்
வண்டிற் றுறப்பான் மலே;

ஒடுங்கா வெழில்வேழம் வீழ்பிடிக் குற்ற
கடுஞ்சூல் வயாவிற் கமர்ந்து நெடுஞ்சினேத்
தீங்கட் கரும்பின் கழைவாங்கு முற்றூரி
னீங்கல மென்பான் மலே;

எனநாம்,

தன்மலே பாட நயவந்து கேட்டருளி
மெய்ம்மலி யுவகையன் புகுதந்தான் புணர்ந்தரா
மென்முலே யாகங் கவின்பெறச்
செம்மலே யாகிய மலேகிழ வோனே.

இது தோழியுந் தலைமகளுந் தலைமகனது மலையை வாழ்த்திப் பாடுகின்ற வள்ளைப்பாட்டிற், தோழி இயற்படமொழியத் தலைமகள் இயற்பழித்தமை, தலைமகன் சிறைப்புறமாகக் கேட்டு வரைய வருகின்றமை, தோழி தலைமகட்கு உரைத்தது.

(இ - ள்.) அகவினம் * * * நாம்—எ-து, தோழீ! நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்தேமாய்ப் பாடக்கடவேமெனத் தோழிகூற, அதுகேட்ட தலைவி அழகுகொண்ட தினைப்புனத்தில் முகத்திற்குப் பொருந்தின கண்ணினையும் மகிழ்ச்சியைத் தரும் மொழியினையுமுடைய நல்ல மகளிர் நாணி இறைஞ்சும் நிலைபோல முற்றித் தாழ்ந்த கதிரையுநவி அரும்பு வளர்ந்த சந்தனமரத்தாற் செய்த உரலிலேபெய்து, முத்துநிறைந்த யானைக்கொம்பால் வகுத்த நிறைந்த உலக்கையை என்னிடத்தும் நின்னிடத்தும் உயர்த்திக் குறுகின்று மருந்தில்லாத நோயைச் செய்தவனுடைய பயன்றருகின்ற மலையை வாழ்த்தி நாம் நங் கருத்திற்கு வேண்டியவாறெல்லாம் அழைத்துப் பாடக்கடவேமென்று உடம்பட்டாள்; எ - று.

அகவு, அகவுதல் அகவல்போல்; நின்றது. தோழிகூற்றினைத் தலைவி விசேடித்துக்கூறினாள், இரட்டிப்பன்று.

மணம் நாறுகின்ற சந்தனத்தாற் செய்த உரலென்றதனாற் பயன் வரைந்து கோடற்பொருட்டுத் தலைவி இயற்பழித்ததாகவும், புலானாற்றத்தையும் முத்தையுமுடைய மருப்பாற் செய்த உலக்கையென்றதனாற் பயன் வரைந்துகோடற்பயனின்றிப் புகழ்ச்சிமாத்திரையேயாகத் தோழி இயற்பட்டு மொழிந்ததாகவும், இறைச்சியிடத்தே பொருள்பிறந்தவாறு காண்க. இஃது * "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே - திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்னும் பொருளியற் சூத்திரத்தானுணர்க. புலால் நாறும் மருப்பென்றதனால் வரைந்துகோடல் பயவாமையின் இறைச்சியாயிற்று. நோய் செய்தான் மலையாயிருக்கவுந் தினைவிளைத்துப் பயன் தருகின்ற அதிசயத்தை எத்தியெனவே தலைவி இயற்பழித்தாளாயிற்று.

ஆய்நுதல் * * * பாடித்தை—எ-து, அழகிய நுதலினையும், அழகுபெறுத்துகின்ற சுழலினையும், அழகிய மூங்கில்போலும் பெருமையினையுடைய மெல்லிய தோளினையுமுடைய பூமணம் நாறுங் கதுப்பினையுடையாய்! மூங்கில் ஒலிக்கின்ற முழைஞ்சையுடைய

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கூஉ-ம் சூத்.

லையை முன்புபோலன்றி நீ இயற்பட ஒன்று பாடு, பின்னர் யானும் இயற்பட ஒன்று பாடுவேனெனத் தோழி கூறினாள்; எ - று.

பாடித்தை, முன்னிலைவினைத்திரிசொல்; எத்துகு, தனித்த ன்மை முற்று.

தலைவி இயற்படப் பாடாமையின் மேற் தோழி பாடுகின்றாள்.

கொடிச்சியர் * * * மலை—எ-து, தன்னைச் சேர்ந்தாருடைய வருத்தத்தைப் போக்குவானுடைய மலை கையிரண்டையுங் குவித்துக் கொடிச்சியர் தங் குறைதீர முருகன் உறையும் மலையைத் தொழுகின்ற கைகள்போல உயர்ந்த, நறவினையுடைய கொத்துக்கள் அசையுங், காந்தளிடத்து வைத்த தேன் ஒழுகும்படியாக, அக்காந்தள் அசையாநிற்கும்; எ - று.

காந்தள் அசையுமென இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்திற்கு ஏறிநின்றது.

இதனாற் தெய்வத்தைத் தொழுங் கருத்தில்லாத காந்தளுந் தெய்வத்தைத் தொழுவதுபோல நில்லாநின்றது நீயும் வரைந்துகோடற்குக் குலதெய்வமாகிய முருகனைத் தொழுவாயாகவென இயற்பட மொழிந்தாள். காந்தளிற் தேன் பயன்படாமற் சொரிகின்றாற்போல நீயுந் தெய்வத்தைத் தொழாவிடின் நின் நலனும் பயன்படாமற் கழியு மென இஃது உள்ளுறையுவமமாயிற்று.

கல்லாக் * * * மலை—எ-து, தான்கூடின மகளிருடைய இயற்கைநலங் கெடின் அவரினும் வருத்தமுறுகின்றவனது மலை களவொழுக்கம் ஒழிந்து வரைந்துகொள்ளும் நிலைமையைக் கற்றுத் திரட்சிமிக்க சுற்றத்திடத்தே சென்று மகட்பேசுவார்போல மெல்லிய விரலையுடைய மந்தியை எனக்குத் தரவேண்டுமென்று தன்குறையைச் சொல்லுந் தலைமையினையுடைத்து; எ - று.

நந் தெய்வவழிபாட்டாற் களவொழுக்கம் ஒழிந்து நம்மை வரைந்துகொள்ளத் துணிந்து நஞ்சுற்றத்தாரிடத்தே சென்று தன் குறைகூறுவனென்று உள்ளுறையுவமங்கொள்க.

புரிவிரி * * * பாடுவாம்—எ-து, முறுக்குவிரிந்த கொம்பு மறைந்த நெருங்கின பூத் தாழ்ந்த சினையிற் தழைந்த தளிரையொத்த அழகையுடைய மேனி அழகுகெடும்படி நமக்கு நோயைச்செய்தவனுடைய பெறுதற்கரிய உச்சிமலைகளையுடைய பக்கமலைகளை

நாம் இனிப் பாடுங்கால் இயற்படமொழிதலை அழித்து இயற்பழித்தலாகிய ஒன்றைப் பாடுவேம்; எ-று.

பூத்தாழ்ந்ததளிரெனவே சுணங்கும் மாமைநிறமுங் கூறிற்று.

விண்டோய் * * * மலை—எ-து, பெண்டிருடைய நலத்தை நுகர்ந்து, தண்ணிய மலைச்சாரலிடத்துத் தாதை உண்ணும் வண்டு அப்பூவைத் துறக்குமாறுபோல, அவரைத் துறக்கின்றவன் மலையாயிருந்தேயும், விண்ணைத் தீண்டும் மலையிடத்தே தெய்வமகளிர் பந்தடித்த இளைப்புப் போகத் தண்ணிய தாழ்ந்த அருவியிலே ஆடுவர்; எ-று.

இது தகாததொன்றெனத் தலைவி இயற்பழித்தாள்.

ஒடுங்கா * * * மலை—எ-து, தன்னைச் சேர்ந்தாரிடத்துநின்று நீங்கேமென்றிருப்பானுடைய மலை மடிந்திராத அழகையுடைய யானை தான்விரும்பின பிடிக்கு உண்டான முற்பட்ட சூலான் உண்டான வயாநோய்க்கு மனம்பொருந்தி இனிய கண்ணிடத்தே தோன்றின நெடிய கிளைகளையுடைய கருப்பங்கோலை முறியாநிற்கும்; எ-று.

இது தோழி இயற்படமொழிந்தது. நம்மை முயன்று வரைந்துகொண்டு நம் வயாவிற்குத் தன்மனம் பொருந்தி நாம் விரும்புவனவற்றைத் தந்து மனக்குறைதீர்ப்பானென உள்ளுறையுவமங் கொள்க.

எனநாம் * * * வோனே—எ-து, என்று நாந் தன்னுடைய மலையைப்பாட மலைகிழவோன் விருப்பம்வந்து கேட்டு மெய்நிறைந்த உவகையனாய் அருளிக் கனவிற்புணர்ச்சியாதலின் முயங்கியமையாத மெல்லிய முலையினையுடைய ஆகம் அழகுபெறும்படி நீ தலைமையையுடையையாகவேண்டி வரைவொடு புகுந்தான்; எ-று.

நமக்குப் பேரின்பத்தைத் தருகின்ற இக்களவொழுக்கம் இவட்குத் துன்பத்தைச் செய்தலின் இங்ஙனம் இயற்பழித்தாளென உட்கொண்டு வரைவொடு புகுந்தானாதலிற் தலைவி இயற்பழித்தலே வரைவிற்குக் காரணமாயிற்று.

*"உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி - யையக் கிளவி யாடூஉவிற் குரித்தே" என்பதனாற் தோழி உறழ்ந்துகூறினாள்.

இதனாற் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சச-ம் சூத்.

இது தரவுங் கொச்சகங்களுங் கொச்சகவெண்பாக்களுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (ச)

சக. பாடுகம் வாவாழி தோழி வயக்களிற்றுக்
கோடுலக்கை யாகநற் சேம்பி னிலைசுளகா
வாடுகழை நெல்லை யறையுரலுட் பெய்திருவாம்
பாடுகம் வாவாழி தோழிநற் றோழிபா டுற்று;

இடியுமிழ் பிரங்கிய விரவுப்பெய னடுநாட்
கொடிவிடு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்
பிடியொடு மேயுஞ் செய்புன் யானை
யடியொதுங் கியக்கங் கேட்ட கானவ
னெடுவரை யாசினிப் பணவை யேறிக்
கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலி
னிறுவரை வேங்கையி னொள்வீ சிதறி
யாசினி மென்பழ மழிந்தவை யுதிராத்
தேன்செ யிறாஅ றுளைபடப் போகி
நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக்
குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் பழத்திற் றங்கு மலைகெழு வெற்பனைப்
பாடுகம் வாவாழி தோழிநற் றோழிபா டுற்று;

இலங்கு மருவித் திலங்கு மருவித்தே
வானி னிலங்கு மருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை;

பொய்த்தற் குரியனோ பொய்த்தற் குரியனோ
வஞ்சலோம் பென்றாரைப் பொய்த்தற் குரியனோ
குன்றக னன்னுடன் வாய்மையிற் பொய்தோன்றிற்
றிங்களுட் டீதோன்றி யற்று;

இளமழை யாடு மிளமழை யாடு
மிளமழை வைகலு மாடுமென் முன்கை
வளைநெகிழ வாராதோன் குன்று;

வாரா தமைவானோ வரா தமைவானோ
வாரா தமைகுவா னல்லன் மலைநாட
னீரத்து ளின்னவை தோன்றி னிழற்கயத்து
ணீருட் குவளைவெந் தற்று;

மணிபோலத் தோன்று மணிபோலத் தோன்று
மண்ணா மணிபோலத் தோன்றுமென் மேனியைத்
துன்னான் றுறந்தான் மலை;

துறக்குவ னல்லன் றுறக்குவ னல்லன்
றொடர்வரை வெற்பன் றுறக்குவ னல்லன்
றொடர்பு ளினையவை தோன்றின் விசும்பிற்
சுடரு ளிருடோன்றி யற்று;

எனவாங்கு,

நன்று நின்றேற் றோழிநம் வள்ளையு
ளொன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி
மென்றோட் கிழவனும் வந்தன னுந்தையு
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனனம் மலைகிழ வோற்கே.

இஃது இருவரும் இவ்வகையாற் பாடிய வள்ளைப்பாட்டைத் தலைவன் சிறைப்புறமாகக் கேட்டு, வரைவுவேண்டி விடத், தந்தையர் வரைவுடம்பட்டமை தோழி தலைவிக்கு உரைத்தது.

(இ-ள்.) பாடுகம் * * * பாடுற்று—எ-து, தோழி வாழ்வா யாக! நாம் பாடுவேமாக வா; எங்ஙனம் பாடுவேமென்னில், வாழ்வா யாக தோழி! இருவரும் அசைகின்ற மூங்கிலினது நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, வலியினையுடைய யானைக்கொம்பு உலக்கையாகக் குற்று, நல்ல சேம்பினது இலை சுளகாகப் புடைத்துப் பாடுவேமாக; எ-று.

வாவென முன்கூறியதனைப் பின்னர் விசேடித்துக் கூறினாள். இதில், நற்றோழியென நின்ற சொல்லை மலைகெழு வெற்பனைப் பாடுகம் வாவென மேல்வருகின்ற உறுப்போடுங் கூட்டுக.

செய்தெனெச்சங்கள் எதிர்காலத்துப்பிறந்த செயவெனெச்சங்களாம்.

உயர்ந்த மூங்கிலின் நெல்லுத் தானே உதிர்ந்ததனை எடுத்துக்கொண்டு உரலிற்பெய்தென்றதனால் உயர்ந்த தலைவனைத் தெய்வந் தானே கொண்டுவருதலின் அவனை நம்வயத்தனுக்கினேமென்றும், வள்ளைப்பாட்டிற்கு ஏதுவாகிய கோடு உலக்கையாக என்றதனாற் கோடு நெல்லைப் பயன்படுத்தினாற்போல நம் வரைவுகடாவலால் இத் தலைவனை இல்லறப்பயனை எய்துவிக்கின்றேமென்றுஞ், சேம்பிலை புடைத்தற் தொழிலை முற்றமுடித்து அரிசியை ஆக்காததன்மைபோல இக்களவொழுக்கத்தால் அவன் வரைந்துகோடலை முற்றமுடியாதிருக்கின்றேமென்றும் இறைச்சிப்பொருட்புறத்தாய் நின்றவாறு காண்க.

இடியுமிழ் * * * டுற்று—எ-து, நற்றோழி! இடிபடுதலுற்று நெருப்பையுமிழ்ந்து ஒலிக்கும் எங்குங்கலந்த பெயலாலே இருண்ட நடுநாளிலே ஒழுங்குவிட்டு மின்னுண்டாக்கின ஒளியிலே பிடியுடனே வந்து புன்செய்யிலே மேயும் யானைகளினுடைய அடிகள் நடக்கின்ற நடையின் ஓசையைக் கேட்ட கானவன் உயர்ந்த மலையில் ஆசினிப்பலாவின்மேல் இட்ட பரணிலே ஏறிக் கடிய விசையினையுடைய கவணையிற் கல்லை எறிகையினாலே அக்கல்லு முறிந்த வரையிடத்துநின்ற வேங்கையினது ஒள்ளிய பூக்களைச் சிதறி ஆசினிப்பலாவினது மெத்தென்ற பழம் நெகிழ்ந்தவற்றை உதிர்த்துத் தேனினம் வைத்த இறாலைத் துளையுண்டாம்படி உருவி நறிய வடுவையுடைய மாவினது பசிய கொத்துக்களை உழக்கிக் குலையுடைத்தாகிய வாழையினுடைய கொழுவிய மடலைக் கிழித்துப் பலாவினது பழத்துக்குள்ளே தங்குஞ் சிறிய மலைகள் பொருந்தின பெரிய மலையினையுடையவனைப் பாடுவேமாக வா; எ-று.

'பலவின் பழத்திற் * * * தோழி' என்றது உறுபெயர் கேட்டலென்னும் மெய்ப்பாடு முன்புபிறந்தது.

இயக்கங்கேட்ட கானவன் கல்கைவிடுதலைத் தலைவன் மின் வழிகாட்ட வந்து தலைவியோடு புணர்ந்த நிலைமை அலர் கூறக் கேட்ட செவிலி தன்மனையிடத்தே வெளியாக இருந்து கடுஞ் சொற் சொல்லி இற்செறித்தலாகவும், அக்கல்லு வேங்கையினது செவ்விப்பூவைச் சிதறினதன்மை தலைவன் இன்பம் நுகர்கின்ற மனவெழுச்சியைக் கெடுத்ததாகவும், ஆசினிப்பழத்தைப் பயன்படா

மல் உதிர்த்ததன்மை அவன் நுகர்கின்ற இன்பத்தைக் கெடுத்த தாகவும், அஃது இருளிற் தேனைப் பயன்படாமை உகுத்ததன்மை தலைவி நலந் தலைவற்குப் பயன்படாமற் கெட்டதாகவும், அது மா வின் குலையைச் சிதறுவித்ததன்மை ஆயவெள்ளந் தலைவியோடு கூடி விளையாடாமல் நீங்கினதாகவும், அது வாழைமடலைக் கிழித் ததன்மை தோழியை வருத்தினதாகவும், அது பலவின்பழத்துட் தங்கினதன்மை அக்கடுஞ்சொற் தலைவி நெஞ்சத்தே தங்கினதாக வும் உள்ளுறையுவமங்கொள்க.

இலங்கு * * * மலை—எ-து, நற்றோழி! நீ வாழ்வாயாக; தோழி! தான் சூளுற்ற சூளுறவினைப் பாதுகாவாறுய்ப் பொய்த்த வனுடைய மலையாயிருந்தும் வீழ்தலுற்று விளங்கும் அருவியையு டைத்து, விளங்கும் அருவியையுடைத்து, மழைபெய்தலால் விளங் கும் அருவியையுடைத்து; எ - று.

இஃது என்னவியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று.

இஃது * "இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்பத னுற் கொள்க. இருகால் அருவித்தென்றது அருவிப்பன்மைநோக்கி.

இது மெய்யைப் பொய்யாகக் கோடலிற் பொய்யாகக்கோட லென்னும் மெய்ப்பாடு. அவைதாம் மழைபெய்து வந்த அருவியென் று அதனைப் பின்னர் விசேடித்தாள். அதுகேட்ட தோழி,

பொய்த்தற் * * * யற்று—எ-து, தன் சூளுறவினைப் பொ ய்யாக்குதற்கு உரியனோ? பொய்யாக்குதற்கு உரியனோ? நீ அஞ் சுதலைப் பரிகரியென்று தான் சொல்லப்பட்ட மகளிரைப் பாது காவாது விடுதற்கு உரியனோ? மலை அகன்ற நன்னாட்டையுடைய வன் கூறிய மெய்யிலே பொய்தோன்றுமாயிற் திங்களிடத்தே தீ தோன்றின தன்மைத்து; அங்ஙனங் கூறுதேகொள்; எ - று.

தேற்றுதற்கு இருகாற் கூறிப் பின்விசேடித்துக் கூறினாள்.

இளமழை * * * குன்று—எ-து, என் முன்கையில் வளை க ழலும்படியாக என்னிடத்து வாராதவன் மலையாயிருந்தும் இளமழை உலாவாநிற்கும்; இளமழை உலாவாநிற்கும்; அது தான் ஒருகாலத்து உலாவுதலன்றி நாடோறும் உலாவாநிற்கும்; எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சஉ-ம். சூத்.

கருத்தங்கி வந்து குன்முதிர்தற்கு மலையிற் பெய்கின்ற மழையென்பது தோன்ற இளமழையென்றாள்.

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. இது தலைவிகூற்றியது. மேல், தோழி கூறுகின்றாள்;

**வா**ரா * * * தற்று—எ-து, நின்னிடத்து வாராதே ஆற்றியிருப்பானோ? வாராதே ஆற்றியிருப்பானோ? இருக்குமதுவுமன்றி அம்மலைநாடனுடைய அருளிடத்தே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் நிழலையுடைய குளத்துள் நீரினின்ற குவளை வெந்த தன்மைத்து; நீ அங்ஙனங் கூறாதேகொள்; எ - று.

நீருட் குவளை வெந்தற்றென்றது மருட்கையுவமம். கிழற்கயத்துள் வேவன இன்மையின் அற்புதமாயிற்று. இது உலகநடையிறந்ததோர் உவமை கூறி அதனோடு தலைவன் ஈரத்தினை ஒப்பித்தலிற் பெருமைபற்றி வந்தது. இனி அதுகேட்டதலைவி கூறுகின்றாள்.

**ம**ணிபோலத் * * * மலை—எ-து, என்மேனியைச் சேராதே துறந்தவனுடைய மலையாயிருந்தும் நீலமணிபோலத் தோன்றும்; நீலமணிபோலத் தோன்றுங்; கழுவாத நீலமணிபோலத் தோன்றும்; எ-று.

இஃதென்ன வியப்போவெனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றிற்று. கொண்டவெப்பந்தான் உலராது மழைபெய்து நிறம்பெறுதலின் மணிபோலத்தோன்றுமென்றாள்.

**து**றக்குவ * * * யற்று—எ-து, நம்மைக் கைவிடுவான் அல்லன்; கைவிடுவான் அல்லன்; ஒன்றோடொன்று தொடர்ந்த சிறுமலைகளையுடைய வெற்பையுடையான் கைவிடுவான்அல்லன்; அவனோடு கொண்ட உறவின்கண்ணே இத்தன்மையவாகிய கொடியவை தோன்றுமாயின் ஆகாயத்திற் றிரியும் ஞாயிற்றுள்ளே இருள் தோன்றிய தன்மைத்து; நீ அங்ஙனங் கூறாதேகொள்ளெனத் தோழி கூறினாள்; எ - று.

இது மருட்கையுவமம்.

**எ**னவாங்கு, அசை.

**ந**ன்றா * * * வோற்கே—எ-து, தோழி! நம் வள்ளைப்பாட்டிடத்தே நாம் பொருந்திப்பாட நம்மொன்றோட்கு உரிமையையுடையவ

னும் மறைந்துநின்று கேட்டு அருள்பண்ணிவரைவுவேண்டி வந்தனன்; உன்னுடைய தந்தை மணத்தையுடைய வேங்கைக்கீழே இருந்து அம்மலைகிழவோனுக்கு மணஞ்செய்தலைவிரும்பிக் கூறினன்; ஆதலால் நமக்கு நன்மையுண்டாகாநின்றது; இனி நீ வருந்தாதேகொள்; எ-று.

இதனாற் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது. இதன் இடைப்பாட்டுக்கள் *"வரைதல் வேண்டித் தோழி செப்பிய - புணர்ந்கிளவி புல்லிய வெதிரும்" என்பதனுன் இயற்பழிக்க இயற்பட மொழிந்தனள்.

இது தரவும் ஐஞ்சீரடிவந்த கொச்சகமும் கொச்சகவெண்பாக் களுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்து கலிவெண்பாவின் வேறுபட்ட கொச்சகக்கலி. (ங)

சஉ. மறங்கொ ளிரும்புலித் தொல்முரண் டொலைத்த
முறஞ்செவி வாரண முன்குள கருந்திக்
கறங்கும்வெள் ளருவி யொலியிற் றுஞ்சும்
பிறங்கிருஞ் சோலை நன்மலை நாடன்
மறந்தான் மறக்கினி யெல்லா நமக்குச்
சிறந்தன நாநற் கறிந்தன மாயி னவன்றிறங்
கொல்யானைக் கோட்டால் வெதிர்நெற் குறுவாநாம்
வள்ளை யகவுவம் வா, இகுளைநாம்
வள்ளை யகவுவம் வா;

காணிய வாவாழி தோழி வரைத்தாழ்பு
வாணிறங் கொண்ட வருவித்தே நம்மருளா
நாணிலி நாட்டு மலை;

ஆர்வுற்றுர் நெஞ்ச மழிய விடுவானே
வோர்வுற் றொருதிற மொல்காத நேர்கோ
லறம்புரி நெஞ்சத் தவன்;

தண்ணறுங் கோங்க மலர்ந்த வரையெல்லாம்
பொன்னணி யானைபோற் றோன்றுமே நம்மருளாக்
கொன்னுள் ளுட்டு மலை;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், கசு-ம் சூத்.

கூருநோ யேய்ப்ப விடுவானே தன்மலை
நீரினுஞ் சாய லுடைய னயந்தோர்க்குத்
தேரீயும் வண்மை யவன்;

வரைமிசை மேற்றொடுத்த நெய்க்க ணிறூஅன்
மழைநுழை திங்கள்போற் றோன்று மிழைநெகிழ
வெவ்வ முறிஇயினான் குன்று;

எஞ்சா தெல்லா கொடுமை நுவலாதி
யஞ்சுவ தஞ்சா வறனிலி யல்லனென்
னெஞ்சம் பிணிக்கொண் டவன்;

என்றியாம் பாட மறைநின்று கேட்டனன்
றாழிருங் கூந்தலென் றோழியைக் கைகவியாச்
சாயலின் மார்பன் சிறுபுறஞ் சார்தர
ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென்
னாயிழை மேனிப் பசப்பு.

இது முன்பு பெற்றவழிமலிந்ததனைப் பின்பு பிரிந்தவழிக் கலங்கிக் கூறியது. என்னை ? தலைவன் அருமைசெய்தயர்த்தவழித் தோழி தலைவியை ஆற்றுவித்தற்பொருட்டுத் தலைவனை இயற்பழிப்பத் தலைவி இயற்படமொழிந்ததனைச் சிறைப்புறமாகக் கேட்டுத் தலைவன் முன்னொருகால் வந்து சிறுபுறஞ் சாரத் தான் ஆற்றினமை குறித்துப் பின்னொருகால் அவ்வாறு பாட அவன் சிறுபுறஞ் சாராமையிற் கலங்கி நெஞ்சொடு கூறியதாகலின்.

(இ - ள்.) மறங்கொ * * * வா—எ-து, மறத்தைத் தன்னிடத்தேகொண்ட பெரிதாகிய புலியினது பழையமாறுபாட்டைக் கெடுத்த முறம்போலுஞ் செவியையுடைய யானை தனக்குமுன் நின்ற குளகைத் தின்று ஒலிக்கின்ற வெள்ளிய அருவிநீரைப் பருகி அது ஒலுறுத்துதலாற் துயில்கொள்ளும் பெருக்கின்ற கரிய சோலையினையுடைய நல்ல மலைநாட்டையுடையவன் நாம் வருந்த நம்மை மறந்தான், இனி அவன் மறப்பானாக; இகுளையே! ஆராய்ந்து பார்க்கின் நாம் நமக்கு அவன்சிறந்தபடியை மீளவும் அறிந்தேம், இனிக் கொன்ற யானையின் கொம்பாலே மூங்கினெல்லைக் குறுதற்கு நாம் அவன் செய்த கொடுமையின் கூற்றை வள்ளைப்பாட்டாகப் பாடுவேமாக வா

வெனத் தோழி இயற்பழிக்க அதுகேட்ட தலைவி தான் இயற்பட மொழிவாளாகக் கருதி எடீ நீ கூறியவாறன்றி அவன் திறத்தை நாம் வள்ளைப்பாட்டாகப் பாடுவேமாக வாவென்றாள்; எ - று.

மறக்கு, வியங்கோள். மறந்தான் மறக்கவென்றது அருமை செய்தயர்த்தலை. இருளை ஆயின் என்பனவற்றை முன்னேமாறிக் கூட்டுக. எல்லாவென்பதனைப் பின்னேகூட்டுக.

*"முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ - னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே" என்பதனான் எல்லாவென்றாள். குறுவாம், வினையெச்சமுற்று.

நாடனென்றதனால் நாமும் அயலார் கூறும் பழைய அலரைக் கெடுத்துத் தன் மனத்து உளவாகிய நுகரும்பொருள்களை நுகர்ந்து தானுஞ் சுற்றமும் புகழ்ந்துகூறத் தன் இல்லின்கண் நாம் இருக்கும் நிலைமையை நிகழ்த்தாது நாம்வருந்த நம்மை மறந்தானென்று உள்ளுறையுவமங்கொள்க. † "கிழவோட் குவம மீரிடத் துரித்தே" என்னும் உவமவியற் சூத்திரத்துச் சிறுபான்மை குறிஞ்சிமுதலியவற்றிற்கும் உவமப்போலிகொள்க என்றலிற் குறிஞ்சியில் உவமப்போலிகொண்டார். ‡ "தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக் - கூறுதற் குரியர் கொள்வழி யான" என்பதனாற் தோழி உவமப்பொலிவு கூறினாள். இது பயவுவமப்போலி. இந்நிலத்து முன் உள்ளுறைகூறியவற்றிற்கும் பின்னர் உள்ளுறை கூறுகின்றவற்றிற்கும் இதுவே விதியாகக் கொள்க.

காணிய * * * மலை—எ-து, வாழ்வாயாக தோழி! நம்மை அருளாத கொடுமைக்கு நாணுதிருக்கின்றவனுடைய நாட்டின் மலையாயிருந்தும் பக்கமலையிலே தாழ்ந்து ஒளியையுடைய நிறத்தைக்கொண்ட அருவியையுடைத்தாயிராநின்றது, இதற்குக் காரணத்தை நம் மனத்தான் ஆராய்தற்கு வாவெனத் தோழி இயற்பழித்தாள்; எ - று.

ஆர்வுற்றார் * * * தவன்—எ-து, ஒருகூற்றிற் சாயாத நாநிற்குந் துலாக்கோல்போல ஓர்தலுற்று அறத்தையே விரும்பின நெஞ்சத்தையுடையவன் தன்னான் நுகரப்பட்டார் நெஞ்சத்தை அழியும்படி விடுவேனோ? விடான்காணெனத் தலைவி இயற்படமொழிந்தாள். எ-று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், உ௬ - ம் சூத்.
† ,, ,, உவமவியல் உ௬-ம் ,,
‡ ,, ,, ,, ௧௧-ம் ,,

தண்ணறுங் * * * மலை—எ-து, நம்மை அருளி இல்லறப்ப யனை ஆளாமற் பயனின்மையை ஆளுகின்றவன் நாட்டு மலையாயிருந் துந் தண்ணிய நறிய கோங்கு பூத்த பக்கமலையெல்லாம் பொன்னாற் செய்த பல ஆரம் அணிந்த யானைகள்போலச் சிறந்து தோன்றும், இ தற்குக் காரணமென்னெனத் தோழி இயற்பழித்தாள் ; எ - று.

அருளாவென்பது செய்யாவென்னு மெச்சம்.

கூருநோய் * * * யவன்—எ-து, தன்கொடையை விரு ம்பி வந்தோர்க்குத் தேனைக் கொடுக்கும் வளவிய கையையுடைய வன் நம்மாட்டுத் தன்மலையின் நீரினும் மென்மையுடையனாதலால் வரையாமல் நமக்கு மிகுகின்ற நோய் நம்மைப் பொருந்த விடுவனோ? விடான்; வரைவனெனத் தலைவி இயற்படமொழிந்தாள் ; எ - று.

வரைமிசை * * * குன்று—எ-து, பூணெகிழ்ந்து விழும் படி நம்மை வருத்தமுறுத்தினோன் குன்றாயிருந்தும் பக்கமலைகளி ன்மேலே வைத்த தேனை இடத்தேயுடைய இருள் மழையிலே நு ழைகின்ற மதியைப்போலத் தோன்றாநிற்கும், இதற்குக் காரணம் என்னெனத் தோழி இயற்பழித்தாள் ; எ - று.

இது தேன் பயன்படுதல்கூறினாள். இதன்கட் தோழி இயற் பழித்தன எல்லாம் பொருட்புறத்திறைச்சி தோன்றியவாறு காண்க.

எஞ்சா * * * டவன்—எ-து, இங்ஙனந் தோழி இயற்பழி த்ததற்குப் பொருளாய், ஏடீ! ஒழியாமல் அவன் கொடுமையைக் கூறா தேகொள், என் நெஞ்சைத் தன் அன்பாற் பிணித்தல்கொண்டவன் பிறர் அஞ்சுங் கொடுந்தொழிற்கு அஞ்சாத அறன் இல்லாதவன் அல் லனெனத் தலைவி இயற்படமொழிந்தாள் ; எ - று.

என்றியாம் * * * பசப்பு—எ-து, என்று முன் மொழிந்து தன் நெஞ்சுடனே முன்பு யாங்கள் பாட மறைந்துநின்று கேட்ட னாய் மென்மையால் இனிய மார்பினையுடையான் தாழ்ந்த கரிய கூந்தலையுடைய என்றோழியை எனக்கு அவள் வரவுகூறாமற் கை யைக் கவித்து இவன் சிறியபுறத்தைச் சேர என்னுடைய ஆராய்ந்த இழையினையுடைய மேனியிற் பசப்பு ஞாயிற்றுமுன்னர் நின்ற இ ருள்போலக் கெட்டதென்று யாம் அவ்வாறு பாடவும், அவன் சிறு புறஞ் சாராமையின் நம் மேனியிற் பசப்பு மாயாமல் நின்றதெனப் பிரிந்தவழிக் கலங்கினாள் ; எ - று.

இது *"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை - புல்லிய கிளவி யெச்ச மாகும்" என்பதனாற் கூற்றெச்சம். இதனால் உயிர்ப்பென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது ஐஞ்சீரடியுஞ் சொற்சீரடியும் வந்த தரவுவந்து ஏனைய வெண்பாவாய் வந்த கலிவெண்பா. (சு)

சஙு. வேங்கை தொலைத்த வெறிபொறி வாரணத்
தேந்து மருப்பி னினவண் டிமிர்பூதுஞ்
சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா
லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா
மையனை யேத்துவாம் போல வணிபெற்ற
மைபடு சென்னிப் பயமலை நாடனைத்
தையலாய் பாடுவா நாம்;

தகையவர் கைச்செறித்த தாள்போலக் காந்தண்
முகையின்மேற் றும்பி யிருக்கும் பகையெனிற்
கூற்றம் வரினுந் தொலையான்றன் னட்டார்க்குத்
தோற்றலை நாணாதோன் குன்று;

வெருள்புட னோக்கி வியலறை யூக
மிருளேங் கிறுவரை யூர்பிழி பாடும்
வருடைமான் குழவிய வளமலை நாடனைத்
தெருளத் தெரியிழாய் நீயொன்று பாடித்தை;

நுண்பொறி மான்செவி போல வெதிர்முளைக்
கண்பொதி பாளை கழன்றுகும் பண்பிற்றே
மாறுகொண் டாற்றா னெனினும் பிறர்குற்றங்
கூறுத றேற்றாதோன் குன்று;

புணர்நிலை வளகின் குளகமர்ந் துண்ட
புணர்மருப் பெழில்கொண்ட வனைபுனை செலவின்
வயங்கெழில் யானைப் பயமலை நாடனை
மணநாறு கதுப்பினாய் மறுத்தொன்று பாடித்தை;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உ0எ-ம் சூத்.

கடுங்க ணுழுவை யடிபோல வாழைக்
கொடுங்காய் குலைதொறூஉந் தூங்கு மிடும்பையா
லின்மை யுரைத்தாற் கதுநிறைக்க லாற்றாக்காற்
றன்மெய் துறப்பான் மலை;

என்வாங்கு,

கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு
வாடிய மென்றோளும் வீங்கின
வாடமை வெற்ப னளித்தக்காற் போன்றே.

இது வரைவுநீட ஆற்றாளாயினவிடத்துத் தோழி தானுந் தலைவியும் வள்ளைப்பாடலுள் முருகனைப் பாடுவார்போல இருவர்க்கும் ஏற்பத் தலைவனைப்பாடத் தலைவி ஆற்றினமை தோழி தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறியது.

(இ - ள்.) வேங்கை * * * நாம்—எ-து, தையலாய்! நாம் இருவேமும் ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற மதத்தான் மயங்கின புகரையுடைய யானையினது தலை ஏந்தின கொம்பாலும் இனமானவண்டுகள் ஒலித்துத் தாதை ஊதுஞ் சந்தனமரத்தினாலும் பண்ணின உலக்கைகளாலே குற்று, முருகனைப் புகழ்வேம்போலே அழகுபெற்ற மேகம் உண்டாகின்ற தலைமையினையுடைய பயனையுடைத்தாகிய மலைநாட்டையுடையானைப் பாடுவேம்; எ - று.

பாடுவாமென்னும் பொருளே பயப்பச் செய்தலின் இறைச்சியிற் பிறந்த பொருள்காண்க. இஃது * "இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே - திறத்தியன் மருங்கிற் றெரியு மோர்க்கே" என்பதனாற் கொள்க. இஃது இரண்டு உலக்கையாலும் பயன்கொண்டாற்போல அவன் பெயர்பாடுதலாற் பயன்கொள்ளாமையில் உள்ளுறையுவமமன்மை உணர்க.

தகையவர் * * * குன்று—எ-து, பகையென்றுகூறிற் கூற்றுவன் எதிர்வரினுங் கெடானாய்த் தன்னை உறவுகொண்டார்க்குத் தோற்றலை நாணுதவனுடைய மலை தும்பி அழகினையுடைய மகளிர் கையிலிட்ட தாட்கூட்டாகிய நீலக்கடைச்செறிபோலக் காந்தளினது முகையின்மேலே அஃது அலருங் காலம் பார்த்திருக்கும்; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ங௬-ம் சூத்.

என்பதனான் நஞ்சுற்றத்தார் மனநெகிழ்ந்து வரைவிற்கு உடம்படுங் காலம் பார்த்திருக்கின்றானென்றாளாக உள்ளுறையுவமங்கொள்க. இது பயவுவமப்போலி. போலவென்னும் ஏனையுவமம் இதற்குச் சிறப்புக்கொடுத்துநின்றது. தொலையாமையுந் தோற்றலை நாணுமையும் முருகனுக்கு உளவாகல் புராணங்களான் உணர்க.

வெருள்புட * * * பாடித்தை—எ-து, தெரிந்த இழையினையுடையாய் அகற்சியையுடைய பாறையிலிருந்த கருங்குரங்கைச் சேர வெருண்டு பார்த்து இருள் செறிந்த பக்கமலையிலே ஏறி இறங்கி ஆடும் வருடைமானின் குழவிகளையுடையனவாகிய வளப்பத்தையுடைய மலைநாடனை விளங்க நீ ஒன்று பாடுவாயென்றாள் ; எ - று.

பாடித்தை, முன்னிலைவினைத்திரிசொல். வருடைமான்குழவி தன் இளமையான் வெருளத்தகாத யூகத்தை வெருண்டாற் போல நீயும் நஞ் சுற்றத்தார் வரைவிற்கு உடம்படாரோவெனக் கருதிச் சுற்றத்தாரை வெருளாநின்றாய், அது தகாதெனக் கூறினாளென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி. * " தவலருஞ் சிறப்பினத் தன்மை நாடின் - வினையினும் பயத்ினு முறுப்பினு முருவினும் - பிறப்பினும் வரூஉந் திறத்த வென்ப" என்னும் உவமவியற் சூத்திரத்திற் திறத்தவென்றதனாற் தலைவன் நாட்டிலுள்ளன கூறித் தலைவிக்கேற்ற உவமைதோன்றச் செய்தலுங் கொள்க.

நுண்பொறி * * * குன்று—எ-து, செல்வமுதலியவற்றோடு மாறுகொண்டு அவற்றைப் பொறாதிருப்பரொன்று பலருங் கூறினும் பிறர் குற்றத்தைக் கூறுதலை அறியாதவன் குன்று நுண்ணிய பொறியையுடைய மானினுடைய செவியைப்போல மூங்கின் முளையினது கண்ணைப் பொதிந்த பாளை கழன்று விழும் பண்பினையுடைத்தெனத் தலைவிகூறினாள் ; எ - று.

இதனால் அவன் வரையாமையின் நம்மேனியிற் தோன்றிய வருத்தமும் நீங்கி நம் மேனியும் இனிப் பொலிவுபெறுமெனக் கூறினாளாக உள்ளுறையுவமங்கொள்க. இஃது உருவுவமப்போலி. குற்றங்கூறுதல் தேற்றாதானெனவே நாஞ் செய்த தீங்குகளையுங் காணானென்றாள். முருகனுந் திருமேனிகொண்டு திரிதலின் அவற்குங் குற்றங் கூறாமை ஏற்றினாள். மேற் தோழி கூறுகின்றாள்.

புணர்நிலை * * * பாடித்தை—எ-து, பிடியோடு கூடிய நிலைமையினையுடைய, வளகென்னும் புதலினது தழையை மனம்பொரு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், உ௯-ம் சூத்.

ந்திந் தின்ற, இணைந்த கொம்புகள் அழகுகொண்ட வரை நடந்தத னையொக்குஞ் செலவினால் விளங்குகின்ற அழகினையுடைத்தாகிய யானைகளையுடைய பயனையுடைய மலைநாடனை மணம் நாறும் மயிரி னையுடையாய்! முன் இயற்படமொழிந்ததனை மறுத்து இனி இயற்ப ழித்து ஒன்று பாடுவாயாக; எ - று.

நிலைமையையுடைய யானை, தின்ற யானை, அழகினையுடைத் தாகிய யானை, என்க.

மருப்பெழில்கொண்டவரை இல்பொருளுவமை.

இதனால் விலங்குகளுந் தமக்கு வேண்டுவனவற்றை நுகர்ந்து வருத்தமின்றி ஒழுகினாற்போல நாமும் நமக்கு வேண்டுவனவற்றை நுகர்ந்து இல்லறத்தையும் நிகழ்த்தி வருத்தமின்றி ஒழுகுமாறு வரை ந்து கொள்வனென்றாளாக உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவ மப்போலி. மறுத்தொன்று பாடித்தை என்றதன் பயன் இவள் கள வொழுக்கங் கருதாமல் வரைந்துகோடலே கருதினாளெனத் தலைவன் உட்கொண்டு கடிதின்வரைதலாம். அதுகேட்ட தலைவி கூறுகின்றாள்.

கடுங்க * * * மலை—எ-து, மிடியாலே பொருளின்மையைச் சொன்னாற்கு அப்பொருளை அவற்கு நிறைத்தலாற்றாதபொழுது தன் மெய்யைத்துறக்குமவன்மலைதறுகண்மையையுடையபுலியின்அடியை ப்போல வாழையினது வளைந்தகாய் குலைகடோறுந் தூங்கும்; எ-று.

புலியடிபோல வாழைக்குலை தூங்குமென்றதனான் நம்மை வ ரையாமையிற் கொடியன்போற் தோன்றினான், அவன் இனி வரைந் துகொண்டு நமக்கு இனியனாவனென உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

இனி முருகற்கு ஏற்றுங்காற் பிறவித் தடுமாற்றத்தான் வீடு பெறுதலின்மையைஉரைத்தாற்கு அவ்வீடுபெறுந்தன்மையைத் தான் நிறைவித்தலை அவர்கள் கொள்ளமாட்டாதகாலத்துத் தன் திரு மேனியைக் கைவிட்டு அவர்கள் மனத்தே தங்குகின்றவனெனக் கூறுக. "ஒருநீ யாகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசினல்கும்" என்றார் முருகாற்றுப்படையில். "தன்னை யுன்னி யென்னை யாக் கிய போழ்தே யானவ னாயினேன்" என்பதனானும் உணர்க.

எனவாங்கு—எ-து, என்று; எ - று. ஆங்கு, அசை.

கூடி * * * போன்றே—எ-து, யானுந் தலைவியுங் கூடித் தலைவன் திறத்தையும் முருகன் திறத்தையும் பாடினேமாக, என்னுடைய தோழிக்கு அசைகின்ற மூங்கிலையுடைத்தாகிய வெற்பையுடையவன் அளித்தபொழுதுபோன்று முன் அளியாமையான் மெலிந்த மெல்லிய தோள்களுஞ் சிறந்தன; எ - று.

எனத் தன்னுள்ளே கூறுவாளாய்த் தலைவன் சிறைப்புறமாகக் கூறினாள் அவன் கடிதாக வரைதற்கு.

இதனாற் தலைவற்குச் சூழ்ச்சிபிறந்தது.

இப்பாட்டு முழுதும் முருகற்குப் பயன்படாது தலைவற்குப் பயன்பட்டுநின்றவாறு உணர்க.

இது கொச்சகங்களும் விரவி வந்தமையிற் கலிவெண்பாவின் வேறுபட்டுவந்த கொச்சகம். (எ)

சச. கதிர்விரி கனைசுடர்க் கவின்கொண்ட நனஞ்சார
லெதிரெதி ரோங்கிய மால்வரை யடுக்கத்
ததிரிசை யருவித னஞ்சினை மிசைவீழ
முதிரிண ரூழ்கொண்ட முழவுத்தா ளெரிவேங்கை
வரிநுத லெழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப;

தன்னெவ்வங் கூரினு நீசெய்த வருளின்மை
யென்னையு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
நின்னையான் பிறர்முன்னர்ப் பழிகூற றோணி;

கூருநோய் சிறப்பவு நீசெய்த வருளின்மை
சேரியு மறைத்தாளென் றோழி யதுகேட்டாங்
கோருநீ நிலையிலை யெனக்கூற றோணி;

நோயட வருந்தியு நீசெய்த வருளின்மை
யாயமு மறைத்தாளென் றோழி யதுகேட்டு
மாயநின் பண்பின்மை பிறர்கூற றோணி;

எனவாங்கு,

இனையன தீமை நினைவனள் காத்தாங்
கனையரும் பண்பினு னின்றீமை காத்தவ
ளருந்துய ராரஞர் தீர்க்கு
மருந்தாகிச் செல்கம் பெருமநாம் விரைந்தே.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவனைத், தோழி, தலைவியது கற்புமிகுதியும் இவ்வொழுக்கம் அலராகின்றமையும் அவளது ஆற்றுமையுங் கூறி, வரைவுகடாயது.

(இ - ள்.) கதிர்விரி * * * விறல்வெற்ப—எ-து, எதி ரெதிரோங்கிய பெருமையையுடைய மலையினது அகற்சியையுடைய சாரலில் இளஞாயிற்றினுடைய விரிகின்ற செறிந்த கிரணங்களினுடைய அழகைத் தன்னிடத்தேகொண்ட மாணிக்கப் பாறையிலே நிறக்கப்பட்டு முழங்குகின்ற ஓசையையுடையவாய் இரண்டு மலையினின்றும் வீழ்கின்ற அருவி தனது அழகிய கொம்புகளின்மேலே வீழ்தலாலே முதிர்ந்த கொத்துக்கள் அலர்தல்கொண்ட முழவுபோலுந் தாளினையுடைய நெருப்புப்போலும் வேங்கை புகரினையுடைய மத்தகத்தினையும் அழகினையுமுடைய யானைகள் பூவொடு கூடிய நீரைமேலே சொரியாநிற்க எக்காலமும் முறுக்கு நெகிழ்ந்த தாமரைமலரினது அழகையுடைய அல்லியிலே வீறுபெற்றுத் திருமகள் விரும்பியிருந்தாலொத்த தேனும் வெற்றியினையுடைய வெற்பனே; எ - று.

சுடரின் கவினைக்கொண்ட அடுக்கமெனவே மாணிக்கப்பாறையென்னும் பொருள் தந்தது. எதிர் எதிர் ஓங்கிய வரைகளைத் தலைவன் சுற்றத்தாருந் தலைவி சுற்றத்தாருமாகவும் அவற்றிடையடுக்கத்தைத் தலைவன் மனையாகவும் இரண்டருவியும் வீழ்கின்றது இருவகைச் சுற்றத்தாருஞ் செய்கின்ற சிறப்புக்களாகவும் இணர் ஊழ்கொண்டதனைப் புதல்வர்ப் பயந்தலாகவும் வேங்கையைத் தலைவியாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது பயவுவமப்போலி. இதனாற் கூறியது நின் நாட்டில் உறைகின்ற வேங்கை சிறப்பெய்தினாற்போலத் தலைவியும் நின் இல்லின்கண் வந்து சிறப்பெய்துமாறு கடிதின் வரைந்துகொள்கவென்றதாயிற்று. வரிநுதலெழின்முதலாகத் திருநயந்திருந்தவென்ற ஏனையுவமம் முற்கூறிய உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்தாலும் உள்ளுறையுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாது நின்றது. இதற்கு விதி முற்கூறினும்.

தின்னெவ்வங் * * * ஞணி—எ-து, என்னுடைய தோழி தன்னுடைய வருத்தமுறுநிற்கவும் நீ செய்த அருளில்லாமையை என்னையும் உட்பட மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு யான் நின்னைப் பிறர்முன்னே பழிகூறுதலைத் தான் நாணிக்காண்; எ - று.

யான் பழிகூறுவேனென்று தான் நாணியெனத் தலைவி குறியாதவொன்றைக் கூறினமையின் அது குறியாதுகூறலாம்.

உம்மை, சிறப்பு.

கூருநோய் * * * ஞணி—எ-து, என்னுடைய தோழி மிகுகின்ற காமநோய் சிறவாநிற்கவும் நீ செய்த அருளில்லாமையைச் சேரியிலுள்ளாரும் அறியாதபடி மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு அப்பொழுதே நீ நிலைபேறுடையையல்லையென்று யான் பிறர்க்குக் கூறுதலைத் தான் நாணிக்காண்; எ-று.

உம்மை, சிறப்பு. ஓரும், அசை.

நோயட * * * ஞணி—எ-து, என்னுடைய தோழி காமநோய் வருத்துகையினலே வருந்தியும் நீசெய்த அருளில்லாமையை ஆயத்தையும் மறைத்தாள்; அவள் இங்ஙனம் மறைத்தது அவ்வருளின்மையைக் கேட்டு மாயத்தை வல்ல நினது பண்பில்லாமையைப் பிறர்கூறுதலைத் தான் நாணிக்காண்; எ - று.

ஆயத்திற்கும் வருத்தம்புலப்படாமை மறைத்தாளென்ற உம்மை சிறப்பும்மை.

எனவாங்கு, அசை.

இனையன * * * விரைந்தே—எ-து, நினது தீமையான் உண்டாகிய அருந்துயரத்தை அத்தன்மைத்தாகிய அரிய நற்குணத்தினே நீ பின்னர்க் காத்தாற்போல இத்தன்மையனவாகிய தீமைகளைப் பிறரறியாதபடி நினைத்தாளாய்க் காத்தவளுடைய ஆரஞரைத் தீர்க்கும் மருந்தாகிப் பெருமா நாம்விரைந்துசெல்வேம்; எ-று.

தீமையாமின விட்டுப்பிரிவும் அருமைசெய்தயர்த்தலுமாம்.

இதனுற் தலைவற்கு வரைவுபிறந்தது.

இஃது எழடித்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (அ)

சுடு. விடியல்வெங் கதிர்காயும் வேயம லகலறைக்
கடிசுனைக் கவினிய காந்தளங் குலையினை
யருமணி யவிருத்தி யரவுநீ ருணல்செத்துப்
பெருமலை மிளிர்ப்பன்ன காற்றுடைக் கனைபெய
லுருமுக்கண் ணுறுதலி னுயர்குர லொலியோடி
நறுவிய நனஞ்சாரற் சிலம்பலிற் கதுமெனச்
சிறுகுடி துயிலெழூஉஞ் சேணுயர் விறல்வெற்ப;

கால்பொர நுடங்கலிற் கறங்கிசை யருவிநின்
மால்வரை மலிசுனை மலரேய்க்கு மென்பதோ
புல்லாராப் புணர்ச்சியாற் புலம்பிய வென்றோழி
பல்லிதழ் மலருண்கண் பசப்பநீ சிதைத்ததை;

புகர்முகக் களிறொடு புலிபொரு துழக்குநின்
னகன்மலை யடுக்கத்த வமையேய்க்கு மென்பதோ
கடையெனக் கலுழுநோய் கைம்மிக வென்றோழி
தடையின திரண்டதோள் தகைவாடச் சிதைத்ததை;

சுடருற வுறநீண்ட சுரும்பிமி ரடுக்கத்த
விடர்வரை யெரிவேங்கை யிணரேய்க்கு மென்பதோ
யாமத்துந் துயிலல ளலமரு மென்றோழி
காமரு நல்லெழில் கவின்வாடச் சிதைத்ததை;

எனவாங்கு,

தன்றீமை பலகூறிக் கழறலி னென்றோழி
மறையிற்றன் மருவுற மணந்தநட் பருகலாற்
பிறைபுரை நுதலவர்ப் பேணிநம்
முறைவரைந் தனரவ ருவக்கு நாளே.

இது வரைவிடையாற்றாத தலைவிக்குத் தோழி தான் தலைவனை நெருங்கி வரைவுகடாவ அதுகேட்ட தலைவன் வரைவுமுயற்சி யான் வருதல் இடையிட்டதூஉந் தமர்வரைவெதிர்ந்ததூஉங் கூறி அவளை ஆற்றுவித்தது.

(இ-ள்.) விடியல்வெங் * * * விறல்வெற்ப—எ-து, விடியற்காலத்து விரும்பிய ஞாயிற்றைச் செகெக்கும் மூங்கில் நெருங்கின

அகன்ற மாணிக்கப்பாறையிடத்து, மணத்தையுடைய சுனையிடத்தே அழகுபெற்று வளர்ந்த காந்தளினது அழகிய குலையினைப், பெறுதற்கு அரிய மணி விளங்குகின்ற பொறியினையுடைய பாம்பு நீளா உண்டலாகக் கருதிப், பெரிய மலைகளைக் கீழ்மேலாக்குமாறுபோலே இருக்கின்ற காற்றினையுடைத்தாகிய செறிந்த மழையில் உருமேறு இடித்தலால் எழுந்த உயர்ந்த ஓசையாகிய ஓசை பரந்து நறிய பூக்களையுடைய சாரலிலே ஒலிக்கையினாலே விளாயச் சிறுகுடியினுள்ளார் உறக்கமுணரும் மிக உயர்ந்த வெற்றியினையுடைய வெற்பனே; எ-று.

மாணிக்கப்பாறை தலைவி உறைகின்ற மனையாகவுஞ், சுனையிடத்துக் காந்தள் சுற்றத்தார் பேண அழகுபெற்ற தலைவியாகவும், மணத்தைத்தரும் அச்காந்தள் பாம்புபோற் தோன்றியது மேல் இல்லறத்தைத் தருகின்ற களவொழுக்கம் பிறர்க்குத் தீங்குபோற் தோன்றியதாகவும், உருமேறு இடித்தலால் எழுந்த ஓசை குறவர் சாரலெல்லாஞ் சிலம்பியது அங்ஙனந் தீதாகக் கருதின அயலார்கூற்றைக் கேட்ட தாய் கழறிய கூற்றுப் பரந்ததாகவுஞ், சிறுகுடி துயிலெழுந்தது காவன் மிகுதியாற் தலைவியுந் தானுங் களவு இடையீடுபட்டு வருந்தித் துயிலின்றியிருந்த தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

கால்பொர * * * சிதைத்ததை—எ-து, முயங்குதலமையாத கூட்டம்பெறாமையால் வருந்தின என் தோழியுடைய பல இதழையுடைய மலர்போலும் உண்கண்கள் பசக்கும்படி நீ கெடுத்தது சாற்றடிக்கவுந் தன் பெருமையால் அசையாவாய் நின்று ஒலிக்கின்ற ஓசையினையுடைய அருவிகளையுடைய நினது பெருமையையுடைய வரையில் நீர்நிறைந்த சுனையின் மலரையொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றே அருளின்மையன்றோ? எ-று.

புகர்முகக் * * * சிதைத்ததை—எ-து, உயிர்போம் பருவமென்று கூறும்படியாகக் கலங்குதற்கு ஏதுவாகிய காமநோயைக் கடக்கும்படியாக என் தோழியுடைய பெருத்தனவாகிய திரண்ட தோள்களை அழகுவாடும்படி நீ கெடுத்தது புகரையுடைத்தாகிய முகத்தையுடைய களிற்றோடே புலி பொருது பகைத்துத் திரியும் நின்னுடைய அகன்ற மலையில் அடுக்கத்தனவாகிய மூங்கிலையொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றே அருளின்மையன்றோ? எ-று.

சுடருற * * * சிதைத்ததை—எ-து, நடுயாமத்துந் துயில் கொள்ளுதலிலளாய் மனந்தடுமாறும் என் தோழியுடைய விருப்ப

மருவிய நல்ல எழுச்சியழகு வாடும்படியாக நீ கெடுத்தது ஞாயிற்றைத் தீண்டும்படியாக மிகநீண்ட சுரும்புகள் ஒலிக்கின்ற முழைஞ்சுகளையுடைய மலையினது பக்கமலையிடத்தனவாகிய எரி போலும் வேங்கையினது பூங்கொத்தையொக்குமென்னும் பொருமையோ? அதுவன்றே அருளின்மையன்றோ? எ - று.

காமரு, விகாரம்; மருவும் ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங் கெட்டு மகரஞ் சந்தியாற் கெட்டது.

எனவாங்கு—எ-து, என்று; எ-று. ஆங்கு, அசை.

தன்றீமை * * * நாளே—எ-து, தன் பொல்லாங்குகள் பலவற்றையுஞ் சொல்லி யான் கழறுகையினாலே அவர் என்கூற்றினை இஃதுண்மையென்று தெளிந்து களவொழுக்கத்திலே தான் நம்மோடு மருவுதலுறுகையினாலே கூடின் உறவு பின்னர் வரைவுமுயற்சியான் அருகுகையினாலே, பிறையொத்த நுதலினையுடையாய்! இக்களவொழுக்கத்தில் வேட்கை நீங்கி நாம் அவரைப் பேணி அவரிடத்தே தங்குதலை அவர் விரும்பின நாளிலே நஞ் சுற்றத்தாரும் அவர்க்கே கொடுப்பதாக அறுதியிட்டுவிட்டார்; இதுகாண் நமக்குண்டாகிய நன்மை; எ - று.

தன், தான், அவனென்பது ஒருமைப்பன்மைமயக்கம், உறைதல் உறையென விகாரமாயிற்று.

இதனாற் தலைவிக்குச் செல்வமாகிய உவகை பிறந்தது.

இஃது எழடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்றுவந்த ஒத்தாழிசைக்கலி. (கூ)

சசு. வீயகம் புலம்ப வேட்டம் போகிய
மாஅ லஞ்சிறை மணிநிறத் தும்பி
வாயழி கடாத்த வான்மருப் பொருத்தலோ
டாய்பொறி யுழுவை தாக்கிய பொழுதின்
வேங்கையஞ் சினையென விறற்புலி முற்றியும்
பூம்பொறி யானைப் புகர்முகங் குறுகியும்
வலிமிகு வெகுளியான் வாளுற்ற மன்னரை
நயனுடி நட்பாக்கும் வினைவர்போல் மறிதரு
மயமிழி யருவிய வணிமலை நன்னாட;

ஏறிரங் கிருளிடை யிரவினிற் பதம்பெறூஅன்
மாறினெ னெனக்கூறி மனங்கொள்ளுந் தானென்ப
கூடுதல் வேட்கையாற் குறிப்பார்த்துக் குரனெச்சிப்
பாடோர்க்குஞ் செவியோடு பைதலேன் யானுக;

அருஞ்செல லாரிடை யருளிவந் தளிபெறூஅன்
வருந்தினெ னெனப்பல வாய்விடூஉந் தானென்ப
நிலையுயர் கடவுட்குக் கடம்பூண்டு தன்மாட்டுப்
பலசூழு மனத்தோடு பைதலேன் யானுக;

கனைபெய னடுநாள்யான் கண்மாறக் குறிபெறூஅன்
புனையிழா யென்பழி நினக்ுரைக்குந் தானென்ப
துளிநசைஇ வேட்கையான் மிசைபாடும் புள்ளிற்றன்
னளிநசை யார்வுற்ற வன்பினேன் யானுக;

எனவாங்கு,

கலந்தநோய் கைம்மிகக் கண்படா வென்வயிற்
புலந்தாயு நீயாயிற் பொய்யானே வெல்குவை
யிலங்குதா ழருவியோ டணிகொண்ட நின்மலைச்
சிலம்புபோற் கூறுவ கூறு
மிலங்கே ழொல்வளை யிவளுடை நோயே.

இஃது அல்லகுறிப்பட்டுத் தலைவன் மீள அதனை என்பிழைப்பாகக் கருதுவனெனக் கவன்று ஆற்றாளாகித் " தன்குறி தள்ளிய தெருளாக் காலை - வந்தனன் பெயர்ந்த வறுங்கள நோக்கித் - தன் பிழைப் பாகத் தழீஇத் தேறிய" தலைவியது நிலைமை தோழி தலைவற்குக்கூறி இவ்விடையீடு நின் தோழியினாயிற்றென எனதுபிழைப்பாக்கி அவனை ஆற்றுவிப்பாய், நீ உரைத்ததே உரையாம் அவட்கென அவளது ஆற்றாமை கூறி வரைவுகடாயது.

(இ - ள்.) வீயகம் * * * நன்னுடை—எ-து, தான் நுகர்கின்ற பூத் தன்னையின்றித் தனித்து உறையத், தான் விரும்பிய பூவின் மேலே போன பெருமையினையும் அழகினையுமுடைத்தாகிய சிறகினையும் நீலமணிபோலும் நிறத்தினையுமுடைய தும்பி, வாயிடத்தே பெருகி வீழ்கின்ற மதத்தையும் வெள்ளிய மருப்பினையுமுடைய யானைத்தலைவனோடே அழகினையுடைத்தாகிய வரியினையுடைய புலி

வந்து போர்செய்த காலத்தே, வேங்கையினது அழகையுடைய பூங்கொம்பென்று கருதி விறலையுடைய புலியைச் சூழ்ந்தும் வேங்கைச்சினையென்று பொலிவுபெற்ற புள்ளிகளையுடைய யானையினது புகரினையுடைய முகத்தை அணுகியும், வலிமிகுகின்ற கோபத்தாலே வாட்போரைச் செய்யத் தொடங்கின மன்னரை நட்பாக்கும் உபாயத்தை ஆராய்ந்து நட்பாக்குஞ் சந்துசெய்வாரைப்போலப் பலகாலுந் திரியும், பள்ளத்தே குதிக்கின்ற அருவிகளையுடைய திரண்ட மலைகளையுடைய நன்னாடனே; எ-று.

மறித்தரும் பயமிழி என்றும் பாடம்.

தும்பி வினைவர்போல முற்றியுங் குறுகியும் மறிதருமென்க. பூப்புலம்ப வேட்டம் போகிய தும்பி தலைவி தனித்திருக்க, முன்வரைந்துகொண்ட மனையிடத்தே வேட்கைசென்று போன தலைவனாகவும், அத்தும்பி வருத்தத்தை நிகழ்த்துவனவாய்த் தம்மிற் பகைத்த புலியையும் யானையையுந் தனக்குத் தேனைத் தரும் வேங்கைப்பூவாகக் கருதிச் சுழல்கின்றதன்மை தம்மேல் அன்பின்றி இருக்கவுந் தனக்கு இன்பமுளதாகக் கருதிப் பகற்குறியும் இரவிற்குறியும் பெறுதற்கு மறுகுகின்றதன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

*"பின்முறை யாக்கிய" என்ற சூத்திரத்துத் "தொன்முறை மனைவி" என்றதனுற் தொன்முறைமனைவியுண்மையும் உணர்க.

'நயனுடை நட்பாக்கும் வினைவர்போல்' என்ற ஏனையுவமம் உள்ளுறையுவமத்தைத்தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துத் தானும் உள்ளுறையுவமம்போற் றிணையுணர்தலைத் தள்ளாதுநின்றது.

ஏறிரங் * * * யானுக—எ-து, யான் தன்னைக் கூடுதற்கணுளதாகிய வேட்கையினுலே யான் பகற்குறியைத் தள்ளின நிலைமையை என்பிழைப்பாக மனத்தான் நோக்கி இரவிற்குறியேற்றுக் கோடற்கு யான் கொத்தினையுடைய நொச்சிப்பூ விழுகின்ற ஓசையை அவன் குறியோவென்று கருதுஞ் செவியோடே வருத்தத்தையுடையேனுகாநிற்கத் தான் உருமேறு இடிக்கின்ற இருளையுடைய நடுவாகிய இராப்பொழுதினது செவ்வியைப் பெருனுய்ப் பகற்குறியையும் யான் மாறினேனென்று கூறி இனி மனத்தே கொள்ளாநிற்கும்; எ-று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ருக-ம் சூத்.

மனத்தின் வினையைச் செவிமேல் ஏற்றினார் அதுகருவியா க உணர்தல் நோக்கி.

அருஞ்செல * * * யானுக—எ-து, யான் நிற்கின்ற நிலைமை உயர்தற்குக் காரணமான கடவுளுக்கு வரைவு முடிந்தாற் செய்யுங் கடன்களை மேற்கொண்டு தான் குறிபெறாமையிற் தன் மாட்டு நிகழும் வருத்தம் பலவற்றையுஞ் சூழும் மனத்தோடே வருத்தத்தையுடையேனாகாநிற்கத் தான் அரியசெலவினையுடைய வழியிடத்தே நம்மை அருள் செய்து வந்து நம்முடைய அளியைப் பெறானாய்ப் பகற்குறியும் பெறாமல் வருந்தினனென இனிப் பலவார்த்தையுங் கூறாநிற்கும்; எ - று.

நிலையுயர்தல், வரைந்துகொண்டாலுயர்தல்.

கனைபெய * * * யானுக—எ-து, மழை தன்னைப் புரக்க நச்சுதன்மேலுள்ள வேட்கையினாலே வானத்தைப் பாடும் வானம்பாடிபோல இருவகைக் குறியிலுந் தான் அளிக்கின்ற அளியை நச்சுதலாலே தன்மேல் நிறைவுற்ற அன்பினையுடையேனாகாநிற்கத் தான் நெருங்கின மழையையுடைத்தாகிய பாதிநாளிலே யான் இடமாறப் பகற்குறியையும் பெறானாய்ப் பூணப்பட்ட இழையினையுடையாய் என்னிடத்துண்டாகிய பழியை நினக்குச் சொல்லாநிற்கும் எ-று.

தான் யான் ஆக * அருளாக்குமென்பன எதிர்காலத்து நிகழ்கின்ற நிகழ்வு. என்பவென மூன்றுதாழிசையிலும் வந்தன இசைநிறையாய் நின்றன.

எனவாங்கு—எ-து, என்றிவள்கூறும்படியாக; எ - று.

கலந்தநோய் * * * நோயே—எ-து, இவளைக் கலந்த நோய் இவள் ஒழுக்கத்தை மிகுகையினாலே அதுகண்டு கண் துயிலாத என்னிடத்தே நீ வெறுத்தாயுமாய் விளங்குகின்ற தாழ்ந்த அருவியாலே அழகுகொண்ட நின்மலையின் பக்கமலை கூறுவனவே கூறுமாறுபோல நீ கூறுவனவற்றையே கூறும் இலங்குகின்ற அழகினையுடைய எல்வளையையுடைய இவளுடைய நோயை இவள் ஆற்றும்படியாக ஒரு பொய்மொழி கூறியாயினும் வெல்வாய் நீ உரைத்ததே இவட்கு உரையாம்; எ - று.

எல், ஒளி.

* இது மனங்கொள்ளும் வாய்விடும் உரைக்குமென்றவற்றைத் தொகுத்ததுபோலும்,

அல்லகுறிப்பட்டு மீண்டதனை என்பிழைப்பாகக் கருதும் அவ னெனக்கவன்று ஆற்றுளாமென்றதனானுந் *"தன்குறிதள்ளிய * * * தழீஇத்தேறலும்" என்னுஞ்சூத்திரத்திற்குப் பகற்குறியென்றே பொ ருளாதலானும் இவ்வாறே பொருள்கூறவேண்டுமென்றுணர்க.

தாழிசைகளிற் றோழி சொல்லெடுப்புதற்குத் தலைவி சிறுபா ன்மை கூறுதலைப் †"புலத்தலு மூடலு மாகிய விடத்துஞ் - சொல த்தகு கிளவி தோழிக் குரிய" என்பதனாற் கொண்டவாறுணர்க.

இதனாற் றலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஒன்பதடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல் லும் ஐயடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கO)

சஎ. ஒன்று, இரப்பான்போ லெளிவந்துஞ் சொல்லு முலகம்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார்கட் டோன்று மடக்கமு முடைய
னில்லோர் புன்க ணீகையிற் றணிக்க
வல்லான் போல்வதோர் வண்மையு முடைய
னன்ன ஞெருவன்றன் னாண்டகை விட்டென்னைச்
சொல்லுஞ்சொற் கேட்டீ சுடரிழாய் பன்மாணும்;

நின்னின்றி யமையலேன் யானென்னு மவனாயி
னன்னன்சொ னம்புண்டல் யார்க்குமிங் கரிதாயி
னென்னுற்ற பிறர்க்குமாங் குளகொல்லோ நறுநுதால்;

அறியாய்நீ வருந்துவல் யானென்னு மவனாயிற்
றமியரோ துணிகிற்றல் பெண்டிர்க்கு மரிதாயி
னளியரோ வெம்போல வீங்கிவன் வலைப்பட்டார்;

வாழலேன் யானென்னு நீநீப்பி னவனாயி
னேழைய ரெனப்பலர் கூறுஞ்சொற் பழியாயிற்
சூழுங்கா னினைப்பதொன் றறிகிலன் வருந்துவல்
சூழுங்கா னறுநுதா னம்முளே சூழ்குவம்;

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உO-ம் சூத்.
† ,, ,, கற்பியல், கசு-ம் ,,

அவனை,

நாணடப் பெயர்த்த னமக்குமாங் கொல்லாது
பேணின ரெனப்படுதல் பெண்மையு மன்றவன்
வெளவினன் முயங்கு மாத்திரம் வாவெனக்
கூறுவென் போலக் காட்டி
மற்றவன் மேஎவழி மேவாய் நெஞ்சே.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவன் தன்மையும் அவன் தனக்குக் கூறுவனவும் அக்கூற்றுத் தன்னாற் பொறுக்க வொண்ணாதவாறும் அவன் கருத்துந் தலைவிக்குக் கூறி அவன் குறை நயப்பத் தன்னுள்ளே சொல்லியது.

(இ - ள்.) ஒன்றிரப்பான் * * * பன்மாணும்—எ-து, விளங்குகின்ற இழையினையுடையாய்! என்னிடத்து ஒருகாரியத்தை இரந்துநிற்பான்போலே தன்னைப் பிறரால் இகழப்பட்டு எளியராந்தன்மை தோன்றவுஞ் சிலமொழி கூறும் அங்ஙனங் குறையிரந்துநிற்பினும் உலகத்தையெல்லாம் பாதுகாப்பான்போலே இருப்பதொரு வலியுமுடையன், மெய்ப்பொருள் கூறும் நூல்களைக்கூற வல்லவர்களை வழிபட்டு நின்று அப்பொருளை அறிந்தான்போலே நன்மக்களைக் கண்டாற் தோன்றும் மன அடக்கமுமுடையன், வறியோர் வறுமையைக் கொடையினாலே போக்கவல்லான்போலே இருப்பதொரு வலியுமுடையன், அத்தன்மையையுடையான் ஒருதலைவன் தனக்குரிய ஆளுந் தசைமையைக் கைவிட்டு என்னைநோக்கிக் கூறும் பலகாரியங்களும் மாட்சிமைப்படுஞ் சொல்லைக் கேட்பாயாக ; எ - று.

* "மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு - நினையுங் காலைப் புலவியு ளுரிய." என்பதனுள், நினையுங்காலை என்பதனாற் தோழியுயர்வுங் கிழவோன்பணிவுங் கொள்ளப்படுதலாற், தோழி இங்ஙனங் கூறினாள். †"உயர்மொழிக் கிளவியு முரியவா லவட்கே" என்பதனால் 'உலகம் - புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்' என்றாள்.

உம்மைகளெல்லாம் ஐயவும்மை.

சொல்லுமென்றது பிறன்கட்டோன்றிய வருத்தம்பற்றி இளிவரல் பிறந்தது, அவன் இவ்வாறு ஒழுகல் நமக்கு இளிவரலெனக் குறிப்பாற் கூறிக் குறைநயப்பித்தலின்.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ருரு-ம் சூத்.
† „ „ „ சக-ம் „

நின்னின்றி * * * நறுநுதால்—எ-து, நறிய நுதலினையுடையாய்! அவன் நின்னையன்றி யான் உயிர்வாழலேனென்று கூறுகிற்குமாயின், இங்ஙனம் இறந்துபடுந்தன்மையையுடையவன் கூற்றை நம்புதலைச்செய்தல் இவ்விடத்து யாவர்க்கும் அரிதாயிருக்குமாயின், *இந்நிலைமைக்கண் என்னைச்சேர்ந்த வருத்தங்கள் பிறர்க்கும் உளவோ? இல்லையன்றே! எ - று.

அறியாய்நீ * * * வலைப்பட்டார்—எ-து, அவன் யான் வருந்துவல் நீ அதனை அறியாயோவென்று கூறிநிற்குமாயிற், தமக்கு உயிர்போலச் சிறந்த தோழியரோடு உசாவித் துணியாமற் தமியராயிருந்தே துணிதல் மகளிர்க்கும் அரிதாயிருக்குமாயின், *இந்நிலைமைக்கண் அவன் வலையிலே அகப்பட்டார் சிலர் எம்மைப்போல அளிக்கத்தக்காராயிருப்பாரோ? அளியாதிருப்பரன்றோ! எ - று.

வாழலேன் * * * சூழ்குவன்—எ-து, அவன் நீ அருளாதொழியில் யான் உயிர்வாழேனென்னுமாயிற், குடிப்பிறந்தார் பேதையராயிருப்பரென்று நன்மக்கள் அவரைச் சிறப்பித்துச் சொல்லுஞ்சொல் நீ முதுக்குறைமை பூண்டிருத்தலின் நினக்குப் பழியாயிருக்குமாயின், * இந்நிலைமைக்குச் செய்யலாவதோர் காரியத்தை ஆராயுங்கால் நினைப்பதொரு காரியத்தை அறியேனாய் வருந்தாநின்றேன்; * இந்நிலைமை ஆராய்ந்துபார்க்குங்கால் நறிய நுதலினையுடையாய்! நம்முள்ளே ஆராய்ந்துபார்ப்பேம்; எ - று.

அவனைப் * * * நெஞ்சே—எ-து, நம்மை நாண் வருத்துகையினாலே அவனைப் போக்குதல் நமக்கும் அவன் இறந்துபடுகின்ற நிலைமைக்கட் பொருந்தாது, அவன் இறந்துபடுகின்றவனைப் பேணினனென்று நன்மக்கள் புகழ்ந்துகூறப்படுதல் நின் கருத்தாற் பெண்மையுமன்றாயிராநின்றது; இங்ஙனமாகவும், அவன் நின்னை முயங்குமளவைத் தன் நெஞ்சாலே கைக்கொண்டுவிட்டான்; அதற்கு நீ மேவுகின்றலை, இதற்கு யான் இனிக் கூறுவதொன்றின்றெனத் தலைவிக்குக் கூறிப், பின்னைத் தோழி தன் நெஞ்சோடு முன்னிலைப்புறமொழியாகக் கூறுவாளாய்க், குறியிடத்தே வாவென்று கூறுவாள்போலே அவனுக்கு ஒரு பொய்க்குறியைக் காட்டி அவன் மேவின வழியிலே நெஞ்சே மேவுவாயாக என்றாள்; எ - று.

இதனாற் தலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

---

* இந் நிலைமை யெனினும் அமையும்.

இஃது ஒன்றெனச்சொற்சீரும் அவனையெனத் தனிச்சொல் லும் பெற்றுத் தாழிசையுள் ஏனைமூன்றடியாக ஒன்று நான்கடியாய் வந்தமையிற் கொச்சகக்கலியாயிற்று. (கக)

சஅ. ஆமிழி யணிமலை யலர்வேங்கைத் தகைபோலத்
தேமூசு நனைகவுட் டிசைகாவல் கொளற்கொத்த
வாய்நில்லா வலிமுன்பின் வண்டூது புகர்முகப்
படுமழை யடுக்கத்த மாவிசும் போங்கிய
கடிமரத் துருத்திய கமழ்கடாந் திகழ்தரும்
பெருங்களிற் றினத்தொடு வீங்கெருத் தெறுழ்முன்பி
னிரும்புலி மயக்குற்ற விகன்மலை நன்னாட;

வீழ்பெயற் கங்குலின் விரியோர்த்த வொடுக்கத்தால்
வாழுநாட் சிறந்தவள் வருந்துதோட் டவறுண்டோ
தாழ்செறி கடுங்காப்பிற் றாய்முன்னர் நின்சார
லூழுறு கோடல்போ லெல்வளை யுகுபவால்;

இனையிரு ளிதுவென வேங்கிநின் வரனசைஇ
நினைதுய ருழப்பவள் பாடில்கட் பழியுண்டோ
வினையளென் றெடுத்தரற்று மயன்முன்னர் நின்சுனைக்
கனைபெய னீலம்போற் கண்பனி கலுழ்பவால்;

பன்னாளும் படரடப் பசலையா லுணப்பட்டாள்
பொன்னுறா மணியன்ன மாமைக்கட் பழியுண்டோ
வின்னுறாச் செதும்பரற்றுஞ் செவ்வியு ணின்சோலை
மின்னுகு தளிரன்ன மெலிவுவந் துறைப்பதால்;

எனவாங்கு,

பின்னீதல் வேண்டுநீ பிரிந்தோணட் பெனநீவிப்
பூங்கண் படுத்தலு மஞ்சுவ றாங்கிய
வருந்துய ரவலந் தூக்கின்
மருங்கறி வாரா மலையினும் பெரிதே.

இது வரையாது வந்து ஒழுகுந் தலைவற்குத் தோழி தலைவியா ற்றாமையும் இவ்வொழுக்கம் புறத்தார் அறியப்படுகின்றமையுங் கூறி வரைவுகடாயது.

(இ - ள்.) ஆமிழி * * * நன்றாட்—எ-து, எட்டுத்திசை யுங் காத்தற்றொழிலே மேற்கோடற்குப் பொருந்தினவாய்ப் பகைத் தவை எதிர்நில்லாத மிக்க வலியினையும் விளக்கத்தைத் தருகின்ற கமழ்கின்ற மதத்தான் நனைந்த கவுளினையும் நீர் வீழ்கின்ற அழகினை யுடைய மலையிடத்துத் தேனினம் மொய்க்கும் பூக்களையுடைய வே ங்கையினது அழகுபோல வண்டுகள் ஊதுகின்ற புகரினையுடைத்தா கிய முகத்தினையுமுடைய, சொரியும் மழையையுடைத்தாகிய பக்கம லையிடத்தனவும் பெருமையையுடைய விசும்பிலே வளர்ந்த மிகுதி யையுடைத்தாகிய மரங்களையுடைய ஆற்றிடைக்குறையிடத்தனவு மாகிய, பெரிய யானைத்திரள்களோடே வீங்கின கழுத்தினையும் மிக்க வலியினையுமுடைய பெரிய புலி மாறுபாட்டாலே போர்செய்தலுற்ற மலையினையுடைய நல்ல நாடனே ; எ - று.

திசைகாவல்கொளற்கொத்த என்றதனால் உலகைத் தாங்குதற் கு உரியனென்றும் வலிமுன்பின் என்றதனான் மிக்கவலியினையுடை யனென்றும் நனைகவுள் என்றதனாற் செல்வச்செருக்குடையனென் றும் வண்டூதுபுகர்முகம் என்றதனாற் பரக்கும் பயன்படுகின்றானெ ன்றும் இருவகைச் சுற்றத்திற்கும் ஏற்றுக. இருவகைச்சுற்றமாவன தலைவியுடைய தந்தைசுற்றமுந் தாய்சுற்றமுமாம். இவ்வகையவா கிய களிற்றோடே புலிமயக்குற்ற என்றதனான் இருவகைச்சுற்றத்தா ருடனே ஊரிலுள்ளார் தலைவியை அலர்கூறிப் பகைக்கின்றாரெனவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

வீழ்பெயற் * * * யுகுபவால்—எ-து, தாழிட்டு அடைத்தாற் போலுங் கடிய காவலையுடைய தாய்முன்னே நின்னுடைய மலைச் சாரலிலே முறைமையையுற்ற கோடல் உகுமாறுபோலே ஒளியினை யுடைய வளைகள் உகுவனவாய் இராநின்றன; இங்ஙனமாதற்கு, இ டைவிடாது வீழ்கின்ற மழையையுடைய இராக்காலத்து நின்னு டைய குறியால் அழைக்கின்ற அழைப்பினைச் செவிசுருவியாக ஓர் த்ததனாலுண்டான மனவொடுக்கத்தாலே உயிர்வாழ்கின்ற நாள் மிக் கவளுடைய வருந்துகின்ற தோளிடத்து அவை நினக்குச்செய்த த ப்பு உண்டோ? இல்லையே; எ-று.

உ-குப, அகரவீற்றுப்பலவறிசொல், படுத்தலோசையாற் பெய ராய்நின்றது.

இனையிரு * * * கலுழ்பவால்—எ-து, இவ்வாறே ஒரு கள வொழுக்கமுடையளென்று உயர்த்துக் கூப்பிடுகின்ற அயலார்முன்

னே நின்னுடைய சுனையிடத்துச் செறிந்த மழையையேற்ற நீலம் போலே கண்கள் நீர் சொரிவனவாயிராநின்றன; இங்ஙனமாதற்கு, இஃது யாம் வருந்துதற்கு ஏதுவாகிய இருளென்றேங்கி நின் வருதற்றொழிலை நச்சி நினைத்தலாலுண்டான வருத்தத்திலே வருந்துகின்றவளுடைய துயிலில்லாத கண்ணிடத்து அவை நினக்குச்செய்த பழிகளுண்டோ? இல்லையே; எ-று.

பன்னாளும் * * * துறைப்பதால்—எ-து, நுரைகளையுடைய இனிய சின்னீர் வந்து ஆரவாரிக்கும் இளவேனிற்காலத்தே நின்னுடைய சோலையில் ஒளிகெட்ட தளிரையொத்த நிறக்கேடு வந்து பலர்க்குங் கூறுவதாயிராநின்றது; இங்ஙனமாதற்குப் பலநாளும் நினைவு வருத்துகையினாலே பசலையாலே நுகரப்பட்டவளுடைய பொன்னையுரைத்ததொரு மணியுண்டாயின் அதனையொத்த பசலை பரந்த மாமைநிறத்தின்கண் அது செய்த பழிகளுண்டோ? இல்லையே; எ-று.

எனவாங்கு, அசை.

பின்னீதல் * * * பெரிதே—எ-து, அவள் அங்ஙனமான இடத்து அவள் பூப்போலுங் கண் பாடின்மையை நீவிப் படுத்தற்கும் யான் அஞ்சுவேன்; அதற்குக் காரணமென்னெனில், அத்துயிலிடை நினைத்து வருந்தத்தக்க கனவாற் பின்னர்த் தாங்கிய அரிய வருத்தத்தால் உற்ற கேட்டைத் தூக்கிப்பார்ச்கில் அது எல்லையறியவொண்ணாத மலையினும் பெரிதாயிராநின்றது; இனி இவ்வருத்தம் உறாதபடி நீ வரையாமற் பிரியப்பட்டாளோடு கொண்ட உறவுபின்னுதலை நீ கொடுத்தல்வேண்டும்; எ-று.

பின்னுதல் பின்னெனநின்றது. "பின்னிதொடர்நிலை" என்றார் பிறரும். துயில்கொள்ளாமையைத் துடைத்து என்க.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (சஉ)

சக. கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கிற் றுஞ்சும் யானை
நனவிற்றான் செய்தது மனத்த தாகலிற்
கனவிற் கண்டு கதுமென வெரீஇப்

புதுவ தாக மலர்ந்த வேங்கையை
யதுவென வுணர்ந்தத னணிநல முருக்கிப்
பேணு முன்பிற்றன் சினந்தணிந் தம்மரங்
காணும் பொழுதி னேக்கல் செல்லாது
நாணி யிறைஞ்சு நன்மலை நன்னுட;

போதெழின் மலருண்க ணிவண்மாட்டு நீயின்ன
காதலை யென்பதோ வினிதுமற் றின்னுதே
மின்னேருங் கண்ணுக விடியென்னுய் பெயலென்னு
யின்னதோ ராரிடை யீங்குநீ வருவதை;

இன்புற வளித்தனை யிவண்மாட்டு நீயின்ன
வன்பினை யென்பதோ வினிதுமற் றின்னுதே
மணங்கமழ் மார்பினை மஞ்சிவ ரடுக்கம்போழ்ந்
தணங்குடை யாரிடை யீங்குநீ வருவதை;

இருளுற ழிருங்கூந்த லிவண்மாட்டு நீயின்ன
வருளினை யென்பதோ வினிதுமற் றின்னுதே
ஒளிறுவேல் வலனேந்தி யொருவன்யா னென்னுது
களிறியங் காரிடை யீங்குநீ வருவதை;

அதனுல்,

இரவின் வார லைய விரவுநீ
யகலறை வரிக்குஞ் சாரற்
பகலும் பெறுவையிவ டடமென் றேளே.

இது நீ இவ்வாறு வருகின்ற வரவு எமக்குத் துன்பத்திற்குக் காரணமாகாநின்றதெனக் கூறி இரவுவருவானைத் தோழி பகல்வருகவென்றது.

(இ - ள்.) கொடுவரி * * * நன்னுட—எ-து, வளைந்தவரியினையுடைய புலி வந்து போர்செய்கையினுலே அதனை வென்ற வருத்தத்தோடே நெடிய மலையிடத்தே துயில்கொள்ளும் யானை மெய்யான காலத்தே தான் பொருதுவென்றது மனத்திடத்தே கிடக்கையாலே அதனைப் பொய்யான காலத்தே கண்டு கடுக வெருவி யெழுந்திருந்து புதிதாக மலர்ந்துநின்ற வேங்கைமரத்தைப் புலியெ

ன்றுணர்ந்து அம்மரத்தினுடைய அழகிய நலத்தைக் கெடுத்துத் தன் வலியினாற் பேணாத சினம் மாறி அவ்வேங்கையைக் காணுங்காலத்து அதனைப்பார்த்தலைச் செய்யாமல் நாணிக் கவிழ்ந்துபோன நன்று கிய மலைநாடனே! எ-று.

புலியினைவென்று துயிலும் யானை அயலார்கூறிய அலரைச் சுற்றத்தார்க்குப் பொய்யெனத் தேற்றி மனைக்கட் துயில்கின்ற தலைவியாகவும், கனவிற்கண்டு வெருவினதன்மை அத்தலைவி நனவிற் றான் அங்ஙனஞ் செய்ததெல்லாந் தன் மனத்ததாகலின் அச்செயலைக் கனவினுங்கண்டு அவள் வெருவினதன்மையாகவும், வேங்கையை நலங்கெடுத்தமை தோழி அவனது களவொழுக்கத்திற்கு உடம்பட்டுக் கொடுமைசெய்து ஒழுகுகின்றாளென்று தலைவி தோழியை வருத்தியதாகவும், அது சினந்தணிந்ததன்மை தோழிக்குத் தெரியாமல் அவளைக் கொடுமைகூறினேமென்று தலைவி உட்கொண்டதன்மையாகவும், அது அதனைநோக்காது இறைஞ்சுகின்ற தன்மையானும் இவள் வருந்த இங்ஙனங் கூறினேமென்று எதிர்முகமாகவும் இறைஞ்சுநோக்காது தலைவி நாணி இறைஞ்சியிருக்கின்றதன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க. இது வினையுவமப்போலி.

போதெழின் * * * வருவதை—எ-து, அலரும் பருவத்ததாய் அழகினையுடைத்தாகிய மலர்போலும் மையுண்கண்ணினையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத காதலையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது, இஃதொழிய வழியை ஆராய்ந்து பார்க்குங் கண் மின்னாக இடியென்று கருதாயாய் மழையென்று கருதாயாய் இப்பெற்றித்தானதோர் அரிய வழியிலே இவ்விடத் தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது; எ-று.

இன்புற * * * வருவதை—எ-து, இவள் இன்புறும்படி அளித்தாயாகையினாலே இவளிடத்து நீ இன்றியமையாத அன்பினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது, அஃதொழிய மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய் மஞ்சு பரக்கின்ற பக்கமலையை ஊடறுத்துச் சூரரமகளிரையுடைய அரிய வழியிலே இவ்விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது; எ-று.

இருளுற * * * வருவதை—எ-து, இருளோடே மாறுபடுகின்ற சரிய கூந்தலையுடைய இவளிடத்து நீ இன்றியமையாத அருளினையுடையையென்று கூறுகின்ற வார்த்தையோ இனிது; அஃதொ

ழிய விளங்குகின்ற வேலை வலக்கையிலே எடுத்து யான் ஒருவ னென்று கருதாதே யானை உலாவுகின்ற அரிய வழியிலே இவ் விடத்தேற நீ வருகின்ற நிலைமை எமக்கு இன்னாது; எ-று.

ஒருவனென்றது இவ்வுலகத்துக்குத் தலைவனென்றது.

அதனால், அசை.

இரவின் * * * ரேளே—எ-து, அவ்வின்னாமையால் எமக்குத் துன்பம் வருதலின், ஐய! இனி இராக்காலத்து வாராதே சொள்; இவளுடைய பெருமையையுடைய மெல்லிய தோள்களை விரவிய பூக்கள் அகன்ற பாறையிலே கோலஞ்செய்யும் மலைச்சாரலிடத்தே பகற்காலத்தும் பெறுவை; எ - று.

இதனாற் தலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இது தரவிற் குறைந்த சுரிதகம்பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கரு

௫௦. வாங்குகோ னெல்லொடு வாங்கி வருவைகன்
மூங்கின் மிசைந்த முழந்தா ளிரும்பிடி
தூங்கிலை வாழை நனிபுக்கு ஞாங்கர்
வருடை மடமறி யூர்விடைத் துஞ்சு
மிருடேங்கு சோலை யிலங்குநீர் வெற்ப;

அரவின் பொறியு மணங்கும் புணர்ந்த
வுரவுவின் மேலசைத்த கையை யொராங்கு
நிரைவளை முன்கையென் றோழியை நோக்கிப்
படிகிளி பாயும் பைங்குர லேனல்
கடிதன் மறப்பித்தா யாயி னினிநீ
நெடிதுள்ள லோம்புதல் வேண்டு மிவளே
பல்கோட் பலவின் பயிர்ப்புறு தீங்கனி
யல்கறைக் கொண்டீ ணமலைச் சிறுகுடி
நல்கூர்ந்தார் செல்வ மகள்;

நீயே, வளியி னிகன்மிகுந் தேருங் களிறுந்
தளியிற் சிறந்தனை வந்த புலவற்
களியொடு கைது வலை;

அதனாற்,

கடுமா கடவுறூஉங் கோல்போ லெனைத்துங்
கொடுமை யிலையாவ தறிந்து மடுப்பல்
வழைவளர் சாரல் வரிவனை தன்மான்
குழவி வளர்ப்பவர் போலப் பாராட்டி
யுழையிற் பிரியிற் பிரியு
மிழையணி யாகத்தென் றோழியது கவினே.

இது "புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற்கட்" தோழி கூறியது. அது தோழியிற்கூட்டம் நிகழ்ந்தபின் முற்காலத்துப் பணிந்து பின்னின்றோனைத் தோழி தானே பணிந்தொழுகுதலாம்.

(இ - ள்.) வாங்குகோ * * * வெற்ப—எ-து, தானே வளைகின்ற மூங்கிலின்கோலை நெல்லுடனே வளைத்துத் தின்கின்ற முழந்தாளையுடைய கரிய பிடி அம்மலைச்குச் செறிந்த இலையினையுடைய வழைசெறிந்த இடத்தே புகுந்து, ஆங்கண் வருடைமானினது மடப்பத்தையுடைய மறி பரந்துதிரிகின்ற இடத்தே, ஞாயிறு தோன்றுகின்ற விடியற்காலத்தே, துயில்கொள்ளும் இருள்செறியுஞ் சோலையினையும் விளங்குகின்ற நீரினையுமுடைய வெற்பனே;—எ - று.

மூங்கில் மிசைந்த பிடி தம்மிடத்துத் தாழ்ந்த அரிய தலைவனை அன்புடனே பெற்று நுகர்ந்த தலைவியாகவும், பின்னர் அது வாழைச்செறிவிலே புகுந்து பழத்தை நுகர்ந்ததன்மை அவன் வரைந்து கொண்டுழி அவள் மனைக்கண் நலிவற இருந்து அவனை நுகர்ந்ததாகவும், புலிமுதலியனவின்றி மறி ஊரிடத்துத் துயிலுதல் கூறுவாரின்றி அவன் சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இஃது வினையுவமப்போலி.

அரவின் * * * மகள்—எ-து, பாம்பின்பொறிபோலும் பொறிகளும் பகைவரை வருத்துதலுங் கூடின வலியினையுடைய வில்லின்மேலே வைத்த கையினையுடையையாய் நின்று நிரைத்த வளையணிந்த முன்கையையுடைய என் தோழியைக் காமக்குறிப்பு அவட்கு நிகழும்படி நோக்கிப், படிகின்ற கிளிகள் பரக்கும் பசிய கதிரையுடைய புனத்திற் கிளியைக் கடிதலை ஒருபடிப்பட மறப்பித்து, நின் வயத்தாளாக்கியே விட்டாயாயின், இனி நீ இடையிடாது நினைத்தலைப் பாதுகாத்தலை இவள் விரும்பும்; இவள் பல குலைகளை

டைய பலாவினது பிசினையுடைத்தாகிய இடத்தையுடைய இனிய பழம் வீழ்ந்து கிடந்த பாறையிடத்தே எடுத்துக்கொண்டு உண்ணும் ஊணினையும் பெருஞ்சோற்றுத்திரளையுமுடைய சிறிய குடிலிலிருக்கும் பிள்ளையான் மிடிபட்டாருடைய செல்வத்தையுடைய மகளாதலான் நின்னைப் பிரிந்து வருந்துதலாற்றுள்; எ - று.

இவளென்றது, படர்க்கையை முன்னிலையாகக் கூறியது. "ஊண்சோற் றமலை பாண்கடும் பருத்தும்" என்றார் பிறரும்.

நீயே * * * கவினே—எ-து, நீ காற்றினுங்காட்டிற் போதற் றொழிலிலே மிக்குச்செல்லுந் தேரையுங் களிற்றையும் நின்பால் வந்த புலவர்க்குக் கொடுத்தலாற் கையொழிந்திருத்தலிலையாய் மழையினும் அருள்சிறந்தாய்; ஆகையினாலே யானுஞ் சுரபுன்னை வளர்ந்த மலைச்சாரலிற் றிரியும் வருடையாகிய நல்ல மானின் மறியை வளர்ப்பாரைப்போலே முன்னர் நீங்காமற் *பாராட்டி, அவளிடத்துநின்றும் பிரிவையாயின் இழையணிந்த ஆகத்தையுடைய என்றோழியது கவினும் நீங்குமதற்காகச், கடிதாகிய மாவைப் பின்னுங்கடிதாகச் செலுத்துந் தாறுகோல்போலே சிறிதுங் கொடுமையையுடையையல்லையாந் தன்மை அறிந்திருந்தும் அவளை நின்னிடத்தே சேர்த்துவேன்; எ - று.

இதனாற் றலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவும் வெண்பாட்டொன்றும் அதன்பின்னர் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டொன்றுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற கலிவெண்பாட்டு. (கச)

ருக. சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடு
மணற்சிற்றில் காலிற் சிதையா வடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நா
ளன்னையும் யானு மிருந்தேமா வில்லிரோ
யுண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
யடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழா
யுண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானுந்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை

* பாராட்டியவளிடத்து எனின, நீங்கும்; அதற்காகவெனப் பிரிக்க.

வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
வன்னை யலறிப் படர்தரத் தன்னையா
னுண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையுந்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.

இது "புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப் - பகாஅ விரு
ந்தின் பகுதிக்கட்" தலைவி தோழிக்குக் கூறியது.

(இ - ள்.) ஒளிபொருந்தின வளையினையுடையாய்! ஈதொன்
றைக் கேளாய், தெருவிடத்து நாம் உண்டிகளையாடும் மணலாற் செய்
த சிற்றிலைக் காலால் அழித்துக் கூந்தலிலே அடைவித்த கோதையை
அறுத்து வரியினையுடைய பந்தை எடுத்துக்கொண்டு ஓடி நாம் நோ
வத்தக்க தொழில்களைச் செய்யுஞ் சிறியனாகிய காவலில்லாதவன்,
முன்னொரு நாளிலே, அன்னையும் யானுஞ் சேர இருந்த அளவிலே,
இல்லில் உறைகின்றவர்களே! உண்ணப்படுந் தண்ணீரை வேட்டே
னெனச் சொல்லி வந்தவனுக்கு, அன்னை விளங்குகின்ற பூணினையு
டையாய்! உண்ணுநீரைத் தகட்டுப்பொன்னாற்செய்த கரகத்தாலே வா
ர்த்து உண்ணப்பண்ணுவித்து வாவென்று சொன்னாள்; என்று சொல்
லுகையினாலே யானுஞ் சிறுபட்டியாயிருக்கின்ற தன்னை அறியாதே
சென்றேன்; சென்றபின்னை அவன் என்னுடைய வளையணிந்த மு
ன்கையைப் பிடித்து என்னை நலிகையினாலே அலமந்து தாயே! இ
வனொருவன் செய்ததோர் செயலைப் பாராயென்றேனாகத், தாய் கூப்
பிட்டு ஓடிவருதலைச் செய்ய, அதனை மறைத்து அங்ஙனஞ் செய்த
தனை யான் உண்ணுநீர் விக்கி வருந்தினான்காணென்று ஓர்பொய்
யைக் கூறினேனாகத், தாயுந் தன்னை முதுகைப் பலகால் அழித்த
ழித்துத் தடவப், பின்னை என்னைத் தன் கடைக்கண்ணாலே கொல்
வான்போலே பார்த்துத், தன் மனமகிழ்ச்சியைத் தருங் கூட்டத்தை
அக்கள்வனாகியமகன் செய்தான்! இதுகாண் நிகழ்ந்தது; எ - று.

இதனைக் கேட்டுழித் தலைவி இருவகைக் குறியும் பிழைத்த
விற் "காணா வகையிற் பொழுதுநனி யிகப்பினுந் - தானகம் புகாஅன்
பெயர்த லின்மையிற் - காட்சி யாசையிற் களம்புக்குக் கலங்கிக்"
கையற்றாற்போலத் தலைவனும் இருவகைக்குறியும் பிழைத்தலிற்

தலைவியைக் காணாய்க் காட்சியாசையிற் கலங்கி வேட்கையின் மயங்கினானாதலின் நம் மனைச்கண்ணே உண்டிக்காலத்தைக் கருதி வந்து தன் ஆற்றாமை மிகுதியான் இவளை முன்கைபற்றி நலித்தான், இவளும் அதனை மறைத்துவிட்டாள், இனி இவட்கும் அவனைக்கூடுதல் கருத்தாயிருந்தது. இனி அவனைக் கூடுவேளெனத் தோழி கருதுவளாதலின் வேறுமொருபொருள் நுதலிவந்ததாயிற்று.

நோதக்க செய்யும் சிறுபட்டியென்றதனான் ஒருநிலமாயிற்று. கடைக்கண்ணாற் கொல்வான்போனோக்கியென்றதன்கட் கண்ணிற்குக் கொலைத்தொழில் கூறிற்று. இது வினையுவமத்தின்வகை.

இதனாற் தோழிக்கு நினைத்தல் பிறந்தது.

*" ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலால் " என்பதனுள் இயலென்றதனாற் பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலிவரும் கலிவெண்பாட்டும் உளவென்று கோடலின் இது பன்னீரடியின் இகந்து ஒருபொருணுதலிவந்த கலிவெண்பாட்டு. (கரு)

ருஉ. முறஞ்செவி மறைப்பாய்பு முரண்செய்த புலிசெற்று
மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்ததன்
நிறஞ்சாடி முரண்டீர்ந்த நீண்மருப் பெழில்யானை
மல்லரை மறஞ்சாய்த்த மால்போற்றன் கிளைநாப்பட்
கல்லுயர் நனஞ்சாரற் கலந்தியலு நாடகேள் ;

தாமரைக் கண்ணியை தண்ணறுஞ் சாந்தினை
நேரிதழ்க் கோதையாள் செய்குறி நீவரின்
மணங்கமழ் நாற்றத்த மலைநின்று பலிபெறூஉ
மணங்கென வஞ்சுவர் சிறுகுடி யோரே ;

ஈர்ந்த ணுடையை யெல்லி மாலையை
சோர்ந்துவீழ் கதுப்பினாள் செய்குறி நீவரி
னொளிதிகழ் ஞெகிழியர் கவணையர் வில்லர்
களிறென வார்ப்பவ ரேனல் காவலரே;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கசிச-ம், சூத்.

ஆர மார்பினை யண்ணலை யளியை
யைதமர் நுசுப்பினுள் செய்குறி நீவரிற்
கறிவளர் சிலம்பிற் செறிதலானுப்
புலியென் றோர்க்குமிக் கலிகெ ழூரோ ;
எனவாங்கு,
விலங்கோரார்மெய்யோர்ப்பி னிவள்வாழாளிவளன்றிப்
புலம்புக ழொருவ யானும் வாழேன்
அதனாற், போதவிழ் வைகறை வந்துநீ குறைகூறி
வதுவை யயர்தல் வேண்டுவெ லாங்குப்
புதுவை போலுநின் வரவுமிவள்
வதுவைநாணொடுக்கமுங் காண்குவல் யானே.

இஃது இரவுக்குறிவந்த தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி இரவுக்குறியது ஏதமும் ஏதத்தால் வருந் துன்பமுந் தன் உள்ளத்து விழைவுங் கூறி வரைவுகடாயது.

(இ - ள்.) முறஞ்செவி * * * நாடகேள்—எ-து, முறம் போலுஞ் செவியாகிய மறைப்பிடமாக வந்து பாய்ந்து மாறுபாடுசெய்த புலியைக் கோபித்து, மறத்தைத் தம்மிடத்தே கொண்ட நூற்றுவர்க்குத் தலைவனாகிய துரியோதனனைக் குறங்கில் உயிரைப் போக்குகின்ற பீமசேனனைப்போலே தன்னுடைய நீண்ட கோட்டினையுடைய கூரிய முனையாலே குத்திப், புலியினது மருமத்தைத் திறந்து மாறுபாடு தீர்ந்த அழகினையுடைய யானை, மல்லரை மறத்தைக் கெடுத்த திருமால்போலே கல்லுயர்ந்த அகற்சியையுடைய சாரலிற் தன் சுற்றத்திற்கு நடுவே கூடித்திரியும் நாடனே! யான் கூறுகின்றதனைக் கேட்பாயாக ; எ - று.

முறஞ்செவி * * * செற்றென்பது உறுப்பறைபற்றிய வெகுளி. மால்போலென்பது பெருமிதம்பற்றிய உவமம். செவிமறைப்பப் பாய்ந்த புலியைச் செற்றதன்மை தமது களவொழுக்கமிடமாக அலர்கூறிய அயலாரைக் கோபித்ததாகவும், அதனைக் குத்தி மாறுபாடு தீர்ந்த யானை தலைவன் வரைந்துகொண்டால் அயலாரைத் தாம்வென்றதன்மையாகவும், யானை கிளைநாப்பட் கலந்தியலுதல் தலைவன் சுற்றத்தாரிடைப் பொருந்தியிருந்து இல்லறம் நிகழ்த்துந் தன்மையாகவும் உள்ளுறையுவமங் கொள்க. இது வினையுவமப்போலி.

குறங்கறுத்திடுவான்போல் மால்போலென்பன ஏனையுவமம். அவையும் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறை யுவமம்போலத் திணையுணர்தலைத் தள்ளாவாய் நின்றன.

தாமரைக் * * * யோரே—எ-து, தாமரைப்பூவாற் செய்த கண்ணியையுடையையாய்த் தண்ணிய நறிய சந்தனத்தையுடையை யாய் ஒத்த இதழாற் கட்டின கோதையையுடையாள் செய்த குறி யிடத்தே நீ வருவையாயின் மணம் நாறுகின்ற நாற்றத்தையுடைய மலைக்கண்ணே நின்று பலியைக் கொள்ளும் அணங்குகளிலே ஓர் அணங்கென்று கருதிச் சிறுகுடியிலுள்ளோர் அஞ்சுவர்; எ - று.

தாமரைப்பூக் குறிஞ்சிக்கண் வந்தது.

ஈர்ந்த * * * காவலரோ—எ-து, பகற்காலத்துத் தீர்த்தமாடு கின்ற நின் ஒழுக்கத்திற்கேற்ற ஈரத்தினாற் தண்ணிதாகிய ஆடையை யுடையையாய் இராக்காலத்துப் புணர்ச்சிக்கு உரியனவற்றை அணி கின்ற இயல்பினையுடையையாய் நீ வளைந்துகோடலைக் குலைந்து ஆயத் தார் விரும்புகின்ற மயிரினையுடையாள் செய்த குறியிலே வருவை யாயின் இக்கோடுமுதலியவற்றைக் குறித்துச் செய்யுங் குறிகளாலே ஒளிவிளங்குகின்ற குறைக்கொள்ளியையுடையராய்க் கல்லெறியுங் கவணையுடையராய் வில்லினையுடையராய்க் களிறு வந்ததென்று கருதித் தினைப்புனத்தைக் காக்கின்றவர்கள் ஆரவாரிப்பர்கள்; எ - று.

மாலைமுதலியன பாரத்தாற் குலைந்து வீழ்கின்ற கதுப்புமாம்.

ஆர * * * ழுரோ—எ-து, ஆரம் அணிந்த மார்பினையுடை யையாய்த் தலைமையுடையையாய் அருளுடையையாய் நுண்ணிதாய மைந்த நுசுப்பினையுடையாள் செய்த குறியிலே நீ வருவையாயின் நின்னைக் கண்டு விலங்குமுதலியன வெருவி ஓடுகின்ற ஓசையாலே மிளகு வளர்ந்த மலையிலே உலாவுதலை அமையாத புலியென்று இந்தச் செருக்குப் பொருந்தின ஊர் ஓராநிற்கும்; எ - று.

எனவாங்கு, அசை.

விலங்கோரார் * * * யானே—எ-து, யாவரும் அறிவைப் புகழப்படும் ஒப்பில்லாதவனே! அங்ஙனம் அவர் வேறாக ஓராராய்மெய்யாக ஓர்ப்பராயின் இக்களவொழுக்கம் அறிந்தாளொன்று இவள் உயிர்கொண்டிராள்; இவளையொழிந்து யான் உயிர்வாழேன்; ஆகை

யினாலே நீ நின் காரியத்தினைப் பலர்க்குக் கூறி அவர் உடன்பட்ட பின்பு பூக்கள் அலர்கின்ற விடியற்காலத்திலே வந்து வரைந்துகொள்ளுதலை விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், அப்பொழுது நீ புதியாய்போல வரும் நின் வரவையும் இவள் கலியாணத்திற் தோன்றிய நாணால் ஒடுங்கியிருக்கும் ஒடுக்கத்தையும் யான் காண்பேனுதலாலென்றாள்; எ - று.

ஏகாரம் பிரிநிலை.

இவர்கள் முன்னர்க் களவொழுக்கம் ஒழுகியவாறும் அக்காலத்து அவன் புதியனாக நடித்தவாறும் இவள் ஒடுங்கியிருந்தவாறும் பிறர் அறியாராதலின், இத்தாழிசைகள் *"பொழுது மாறுங் காப்புமென் றிவற்றின்" என்னும் பொருளியற் சூத்திரத்திற் கூறிய காப்பின்வழுவுணர்த்தியன.

இதனாற் தலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

†"ஏவன் மரபி னேனோரும்" என்னுஞ் சூத்திரத்தில் நால்வகை வருணத்தாருங் களவொழுக்கத்திற்கு உரியரென்றலின் அந்தணன் களவொழுக்கங் கூறினார்.

இது தரவுந் தாழிசைக்குஞ் சிறிதுபொருந்திய இடைநிலைப் பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கசு)

ருங. வறனுற லறியாத வழையமை நறுஞ்சாரல்
விறன்மலை வியலறை வீழ்பிடி யுழையதா
மறமிகு வேழந்தன் மாறுகொண் மைந்தினாற்
புகர்நுதல் புண்செய்த புய்கோடு போல
வுயர்முகை நறுங்காந்த ளுடோறும் புதிதீன
வயனந்தி யணிபெற வருவியார்த் திழிதரும்
பயமழை தலைஇய பாடுசால் விறல்வெற்ப;

மறையினின் மணந்தாங்கே மருவுறத் துறந்தபி
னிறைவளை நெகிழ்போட வேற்பவு மொல்லுமன்
னயலலர் தூற்றலி னாய்நல னிழந்தகண்
கயலுமிழ் நீர்போலக் கண்பனி கலுழாக்கால்;

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கக - ம் சூத்.
† ,, ,, அகத்திணையியல், உச - ம் ,,

இனியசெய் தகன்றுநீ யின்னாதாத் துறத்தலிற்
பனியிவள் படரெனப் பரவாமை யொல்லுமன்
ஊரலர் தூற்றலி னொளியோடி நறுநுதல்
பீரல ரணிகொண்டு பிறைவனப் பிழவாக்கால்;

அஞ்சலென் றகன்றுநீ யருளாது துறத்தலி
னெஞ்சழி துயரட நிறுப்பவு மியையுமன்
நனவினா னலம்வாட நலிதந்த நடுங்கஞர்
கனவினா லழிவுற்றுக் கங்குலு மாற்றாக்கால்;

எனவாங்கு,

விளியாநோ யுழந்தாணு வென்றோழி நின்மலை
முளிவுற வருந்திய முளைமுதிர் சிறுதினை
தளிபெறத் தகைபெற் றாங்குநின்
னளிபெற நந்துமிவ ளாய்நுதற் கவினே.

இஃது ஒருவழித்தணந்து வந்த தலைவற்குத் தோழி தலைவியா ற்றாமையும் ஆற்றுவித்தலதருமையுஞ் சொல்லி வரைவுகடாயது.

(இ - ள்.) வறனுற * * * விறல்வெற்ப—எ-து, வற்கட முறுதலை அறியாத சுரபுன்னை நெருங்கின நறிய பக்கமலையினையும் விறலினையுமுடைய மலையிடத்து அகற்சியையுடைய பாறையிடத் தே உறையுந் தான் விரும்பின பிடி தன்னிடத்தேயாகையினாலே தனக்குமாறாகிய யானையைத் தன் நெஞ்சிடத்துக்கொண்ட வலியி னாலே அதன் புகரையுடைய நுதலைப் புண்ணாக்கின மறமிகுகின்ற வேழங் குத்திவாங்கின கொம்புபோல உயர்ந்த முகையினையுடைய நறிய காந்தள் நாடோறும் புதுமையுண்டாக்கப் பள்ளங்களெல்லாம் நீர் நிறைந்து அழகுபெறும்படி அருவிகள் ஆரவாரித்துக் குதித்தற் குக் காரணமான பயனைத்தரும் மழையிடத்தேகொண்ட பெருமை யமைந்த வெற்றியையுடைய வெற்பனே! எ - று.

நறியகாந்தள் குத்திவாங்கின கொடியகொம்புபோல நாடோ றும் அரும்பு ஈன என்றதற்கு நற்குணமுடைய நீ வரையாதிருத்தலிற் கொடியையாய்த் தோன்றாநின்றாயென்றும், அயல் நந்தி அணிபெ றும்படி அருவியார்த்து இழிதற்குக் காரணமான மழைதழீஇய வெற் பென்றதற்கு அயலாரிடத்தே நிலைபெறும்படி அலராகாநின்றது நீ

இங்ஙனம் வந்து செய்கின்ற தலையளியென்றும் உள்ளுறையுவமங் கொள்க. இது பயவுவமப்போலி.

கோடுபோலவென்ற ஏனையுவமம் உள்ளுறையுவமத்திற்குச் சிறப்புக்கொடுத்து உள்ளுறையுவமம் போலத் திணையுணர்தலைத் தள்ளாதாகி நின்றது.

மறையினின் * * * கலுழாக்கால்—எ-து, அயலிலுள்ளார் அலர்தூற்றுகையினாலே கண்கள் ஆய்ந்த தம் நலத்தை இழந்தன, அவ்வளவிலே நில்லாதே பின்னர்க் கண்கள் கயல்காலுகின்ற நீர்போல நீர்விழாத காலத்துக் களவிடத்துக் கூடி அக்களவொழுக்கத்தை நிகழ்கின்றகாலத்தே மருவுதலுறும்படி நீ அருமைசெய்தயர்த்தபின்னர் இறையிற்கிடக்கின்ற வளைகள் நெகிழ்ந்து கழலாநிற்க அவ்வருத்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கவும் பொருந்தும், அதனாற்பெற்றதென்? அக்கண்கள் அதற்கு இயைகின்றனவில்லையே; எ - று.

மன், ஒழியிசை.

இனியசெய் * * * பிழவாக்கால்—எ-து, ஊரிலுள்ளார் அலர்தூற்றுகையினாலே நறியநுதல் ஒளிகெட்டுப் பீர்க்கம்பூவினது அழகைத் தான் கொண்டு பிறையினது அழகை இழவாதகாலத்து இயற்கைப்புணர்ச்சியிடத்துத் தெளிவகப்படுத்து இட்டுப்பிரிதலையுஞ் செய்து பின்னர் இன்னாதாம்படி நீ அருமைசெய்தயர்த்தபின்னர் இவள் வருத்தந் தெய்வத்தால் வந்ததோர் நடுக்கமென்று தெய்வத்திற்குப் பரவிக்கடன்பூணுமையும் பொருந்தும், அதனாற் பெற்றதென்? அந்நறுநுதல் அதற்கு இயைகின்றதில்லையே; எ - று.

அமர்ந்தென்பதும் பாடம்,

அஞ்சலென் * * * மாற்றாக்கால்—எ-து, பகலிடத்தே அழுகுகெடும்படி எம்மை நலிதலைத் தந்த நடுங்குதற்குக் காரணமான வருத்தந் தங்குதலிற் கனவின்கண்ணும் வந்து வருத்தமுறுத்தி இவள் ஆற்றாதகாலத்து இயற்கைப்புணர்ச்சிக்கட் தெளிவகப்படுத்து இட்டுப்பிரிதலைச்செய்து பின்னர் நீ அருளாதே அருமைசெய்தயர்த்தபின்னர் இவள்நெஞ்சழிவதற்குக் காரணமான வருத்தம் இறந்துபாடெய்துவியாநிற்கவும் உயிரைப் போகாமல் நிறுத்தவும் பொருந்தும், அதனாற் பெற்றதென்? அக்கனவின் ஆற்றல் அதற்கு இயைகின்றதில்லையே; எ - று.

எனவாங்கு—எ-து, என்று யான் கூறும்படியாக; எ - று.

ஆங்கு, அசை.

விளியாநோ * * * கவினே—எ-து, கெடாதநோயாலே வருந்தி அமையாத என் தோழி மலையிடத்து முளிதலுறும்படி வருந்திய முளைத்தல் மிகச்சிறிய தினை மழையைப்பெறஅழகுபெற்றாற்போல இவள் ஆய்நுதற்கவின் நின் அளியைப்பெற அழகுபெறும்; எ-று.

இட்டுப்பிரிவிரங்கலையும் அருமைசெய்தயர்த்தலையும் பின்பு நூல்செய்தோர் ஒருவழித்தணத்தலென்று பெயர்கூறியவாறு காண்க.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இது தரவுந் தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கஎ)

ருச. கொடியவுங் கோட்டவு நீரின்றி நிறம்பெறப்
பொடியழற் புறந்தந்த பூவாப்பூம் பொலன்கோதை
தொடிசெறி யாப்பமை யரிமுன்கை யணைத்தோளா
யடியுறை யருளாமை யொத்ததோ நினக்கென்ன
நரந்தநா றிருங்கூந்த லெஞ்சாது நனிபற்றிப்
பொலம்புனை மகரவாய் நுங்கிய சிகழிகை
நலம்பெறச் சுற்றிய குரலமை யொருகாழ்
விரன்முறை சுற்றி மோக்கலு மோந்தன
னறாஅவவிழ்ந் தன்னவென்மெல் விரற்போது கொண்டு
செறாஅச் செங்கண் புதைய வைத்துப்
பறாஅக் குருகி னுயிர்த்தலு முயிர்த்தனன்
றெய்யி விளமுலை யினிய தைவந்து
தொய்யலந் தடக்கையின் வீழ்பிடி யளிக்கு
மையல் யானையின் மருட்டலு மருட்டினன்;

அதனால்,

அல்லல் களைந்தனன் றோழி நன்னக
ரருங்கடி நீவாமை கூறி னன்றென
நின்னொடு சூழ்வ றோழி நயம்புரிந்
தின்னது செய்தா ளிவளென
மன்னா வுலகத்து மன்னுவது புரைமே.

இது கைப்பட்டுக்கலங்கிய வருத்தத்தைக் களைந்தேனென உரையெனத் தோழிக்கு உரைத்தற்கட் தலைவி கூறியது. அது நொதுமலர்வரைவிற்கு மணமுரசு இயம்பியவழி ஆண்டானும் பிறவாண்டானுந் தோழிக்கு இன்னவாறு கூட்டம் நிகழ்ந்ததெனக்கூறி, அதனை நமர் அறியக் கூறல்வேண்டுமென்றுந் தலைவற்கு நம்வருத்தம் அறியக் கூறல்வேண்டுமென்றுந் தலைவி கூறுதற்கண் நிகழ்வது.

(இ - ள்.) கொடியிலுள்ளனவுங் கோட்டிலுள்ளனவுமாகியவாக நீரின்றுயிருக்க நிறம்பெறும்படி பொடியினையுடைய நெருப்பாற்பண்ணப்பட்ட பொற்பூவாற்செய்த கோதையினையுந் தொடி செறிந்த கட்டுவடங்கள் அமைந்த அழகினையுடைய முன்கையினையும் அணைபோலும் மெல்லியதோளினையுமுடையாய்! நின் அடியிலே யான் உறைதற்கு நீ அருளாதிருத்தல் நினக்குப் பொருந்தினதொன்றோவென்று கூறிப் பொன்னாற்செய்த மகரவாயாகச் சமைந்த தலைக்கோலம் விழுங்கிக் கிடந்த நரந்தம்பூ நாறுங் கரியகூந்தலின் முடியை ஒழியாமல் மிகப்பிடித்து அதிலே நன்மைபெறும்படி கட்டின பற்றமைந்த ஒருமாலையை விரலாலே முறையாகச் சுற்றி அதனை மோந்துபார்த்தலையுஞ் செய்தான்; அதுவேயன்றி நறவம்பூ அலர்ந்தாற்போன்ற என்னுடைய மெல்லிய விரலையுடைய கையைத் தாங்கிக்கொண்டு அருளையுடைய தன் சிவந்த கண் மறையும்படி வைத்துக் கொல்லன் உலைமூக்கு வெவ்விதாய் உயிர்க்குமாறுபோல உயிர்த்தலையுஞ் செய்தான்; அதுவேயன்றித் தொய்யில் எழுதின இளையமுலையை இனியவாகத் தடவி அத்தொய்யிலைக் கொண்டுவந்த தடக்கையினாலே தான் விரும்பின பிடியை அருள்செய்யும் மயக்கத்தையுடைய யானைபோல மெய்முழுதினையுந் தடவுதலையுஞ் செய்தான்; அச்செயலாலே யான் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைத் தோழி போக்கினேன்; இனித், தோழீ! நீயும் யான் விரும்பிய விருப்பத்தின் மனம்புரிந்து நின்மகள் நங்குடிக்கு வடுவாகாமற் கற்புக்கடம்பூண்டாளென்று நம்முடைய மனைக்கண் நிகழ்கின்ற அரிய மணம் அவனைவிட்டுநீங்காமல் யாய்க்கு அறத்தொடுநிலைவகையாற் கூறின் அது நமக்கு நல்லதொன்றென்று கருதி நின்னோடு உசாவுவேன்; நீ இங்ஙனங் கூறின் நிலைநில்லாத உலகத்திலே நிலைநிற்பதோர் புகழ் நமக்குப் பொருந்தும்; எ - று.

இது தலைவி கைப்பட்டுக்கலங்கிப் புணர்ச்சிநிகழ்ந்தமை தோழிக்குக் கூறினாள், அவள் அறத்தொடுநிற்றல் கருதி. இஃது உண்மைசெப்பலென்னும் அறத்தொடுநிலையாம்.

இதனாற் தலைவிக்குக் கைம்மிகல் பிறந்தது.

சுரிதகத்து இருகாற் தோழியென்றல் நாணுத்தளையாக மறை
ரந்தவாறு காத்த தோழிக்கு முகமனாக.

விரல் ஆகுபெயர். பரூஅக்குரூகு, பறவாக்குருகு; வெளிப்ப
டை. விகாரம். புனையும் ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெட்டது.

இஃது அதனாலெனத்தனிச்சொற்பெற்றும் அடக்கியலில்லாச்
ரிதகத்தோடு அடிநிமிர்ந்தோடிய பாநிலைவகைக் கொச்சகக்கலிப்பா.

ருரு. மின்னொளி ரவிரற விடைபோழும் பெயலேபோற்
பொன்னகைத் தைவகிர் வகைநெறி வயங்கிட்டுப்
பொழிலிடை யிட்ட கமழ்நறும் பூங்கோதை [ய்
யின்னகையிலங்கெயிற்றுத் தேமொழித்துவர்ச்செவ்வா
நன்னுதா னினக்கொன்று கூறுவாங் கேளினி;
நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து
நுதலு முகனுந் தோளுங் கண்ணு
மியலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ
யைதேய்ந் தன்று பிறையு மன்று
மைதீர்ந் தன்று மதியு மன்று
வேயமன் றன்று மலையு மன்று
பூவமன் றன்று சுனையு மன்று
மெல்ல வியலு மயிலு மன்று
சொல்லத் தளருங் கிளியு மன்று;
எனவாங்கு,
அனையன பலபா ராட்டிப் பையென
வலையர் போலச் சோர்பத னொற்றியென்
னெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணூஉப்
புலையர் போலப் புன்க ணோக்கித்
தொழலுந் தொழுதான் றொடலுந் தொட்டான்
காழ்வரை நில்லாக் கடுங்களி றன்னோன்
றொழூஉந் தொடூஉமவன் றன்மை
யேழைத் தன்மையோ வில்லை தோழி.

இது *"பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி - யொருமைக் கேண்மையி னுறுகுறை தெளிந்தோ - ளருமை சான்ற நாலிரண்டு வகையிற் - பெருமை சான்ற வியல்பின்கட்" தலைவி கூறியது. என்றது, "ஒருமைக்கேண்மையின் உறுகுறை=தான் அவளென்னும் வேற்றுமையில்லாத நட்பினாலே தோழி தனக்கு வந்து கூறிய குறையை: பொறியின் யாத்த புணர்ச்சிநோக்கித் தெளிந்தோள்= முன்னர்த் தெய்வப்புணர்ச்சிநிகழ்ந்தமைநோக்கி அதுகாரணத்தான் முடிப்பதாகத்தெளிந்த தலைவி: அருமைசான்ற நாலிரண்டுவகையில் =தான் முன் அருமையமைந்துநின்றநிலையாற் தலைவன்கண் நிகழ்த்திய மெய்தொட்டுப்பயிறன்முதலிய எட்டினாலே: பெருமைசான்ற இயல்பின்கண்ணும்=தனக்கு உளதாம் பெருமைகூறுதற்கு அமைந்ததோர் இயல்பின் கண்ணும்: எ-று. இதனாற் போந்த பொருள் தலைவன் இத்துணை இளிவந்தன செய்யவும் யான் நாணும் மடனும் நீங்கிற்றிலேனென்று தன்பெருமை தோழிக்குக் கூறுதலாயிற்று."

(இ - ள்.) மின்னொளி * * * கேளினி—எ-து, ஒளிர்கின்ற மின்னினது விளங்குகின்ற அறுதிகள் இடையே பிளந்தோடும் மேகங்கள்போலே பொன்னைக் கூறுபடுத்தின அழகினையுடைய வகிர்களை ஐந்துபகுதியையுடைய நெறித்த மயிரிடத்தே விளங்கவிட்டுப் பின்னாற் தாழம்பூ உதிர்ந்தவற்றையும் இடையிலேயிட்டு முடித்த மிகவும் நாறுகின்ற பூமாலையினையும் இனிய நகையினையும் இலங்குகின்ற எயிற்றினையும் இனிய மொழியினையும் இயல்பான சிவந்த வாயினையுமுடைய நன்றாகிய நுதலினையுடையாய்! நினக்கு ஒரு வார்த்தை கூறுவேம்; அதனை இப்பொழுது கேள்; எ - று.

இட்டென்னுஞ் செய்தெனெச்சம் இட்டவென்னும் பெயரெச்சத்தோடு முடிந்து அது ஈன்னுதலென்னும்பெயரோடு முடிந்தது. கூறுவாமென்றது உயர்த்துக்கூறல்; உளப்பாடன்று. வயங்க, விகாரம்.

நில்லென * * * தோழி—எ-து, நீ போகாதே நில்லென்று என்னை நிறுத்தினான்; நிறுத்தி அணுகவந்து நுதலையும் முகத்தையுந் தோளையுங் கண்ணையுஞ் சாயலையுஞ் சொல்லையும் நோக்கா நின்று உவமையைக்கூற நினைந்து, நுதல் வியப்பையுடைத்தாய்த் தேய்ந்ததாயினும் பிறையுமன்று, முகம் மறுவற்றதாயினும் மதியுமன்று, தோள் வேயின்றன்மை நெருங்கிற்று அது பிறக்கும் இடமன்று, கண் பூவின்றன்மை நெருங்கிற்று அது பிறக்கும் இடமன்று; சாயலிருந்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௦-ம் சூத்.

நபடி மெத்தென நடக்கும் மயிலுமன்று, சொல்லுச்சொல்லத் தளரு மாயினுங் கிளியுமன்று, என்று அவ்விடத்து அத்தன்மையனவாகிய உறுப்புக்கள் பலவற்றையும் பொய்பாராட்டி, வலையர் அம்மாக்க ளின் சோர்வைப் பார்க்குமாறுபோல என் நெஞ்சழிந்த செவ்வியைப் பார்த்துப், புலையர் நோக்குமாறுபோல வருத்தமுண்டாக நோக்கித் தொழுதலைச்செய்தான்; தீண்டுதலையுஞ் செய்தான்; மதத்தான் அறி விழந்து பரிக்கோலெல்லையில் நில்லாத கடிய களிற்றையொப்பான் பலகாலுந் தொழுவதுஞ்செய்யும்; தீண்டுவதுஞ் செய்யும்; ஆதலாற் றோழீ! அவன் குணத்தில் அறியாமையாகிய குணமோ இல்லை; எ-று.

இவன் இங்ஙனமாகவும் யான் நாணும் மடனும் நீங்காமை நின்றேனெனத் தலைவி தன் பெருமைசான்ற இயல்புகூறினாள்.

இதனுட் பாராட்டியெனப் பொய்பாராட்டலுஞ் சோர்பத னொற்றியென நெஞ்சு நெகிழ்ந்த செவ்விகூறினமையிற் கூடுதலுறு தலும் புலையர்போல நோக்கியென நீடுநினைந்திரங்கலுந் தொழலுந் தொழுதானென இடம்பெற்றுத்தழாலுந் தொடலுந்தொட்டானென மெய்தொட்டுப்பயிறலுங் களிறுபோல அறிவினெல்லையினில்லாதவ னெனத் திராத்தோற்றமும் ஒருவாற்றாற் கூறியவாறு காண்க.

இதனாற் றோழிக்கு நினைத்தல் பிறந்தது.

*"உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" என்னுஞ் சூத்திர த்து உள்ளுங் காலையென்றதனாற் பிறையுமன்று, மதியுமன்று, மயி லுமன்று, கிளியுமன்றென்பன மறுத்தனவென்று கொண்டவுவமம். †"முதலுஞ் சினையுமென் றாயிரு பொருட்கு - நுதலிய மரபி னுரி யவை யுரிய" என்னுஞ் சூத்திரத்தில் நுதலிய மரபினென்றதனான் மலையுமன்று சுனையுமன்றென்பன மலையோடுஞ் சுனையோடும் உவ மைகருதாது மலையுள் வேயெழும் இடத்தையுஞ் சுனையுட் பூவெ ழும் இடத்தையும் நோக்கி வேயையும் பூவையும் மறுத்துநிற்றலிற் றோளையுங் கண்ணையும் உணர்த்திநின்றவென்று கொண்ட உவமம்.

இது தனிச்சொல்லும் ஆசிரியச்சுரிதகமும்பெற்றுப் "பாநி லைவகையே" என்பதனால் அகப்பொருளின்கண்வந்த தரவிணைக் கொச்சகம். (கக)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், ௩-ம் சூத்.
† ,, ,, கூ-ம் ,,

௫சு. ஊர்க்கா ணிவந்த பொதும்பரு ணீர்க்காற்
கொழுநிழன் ஞாழன் முதிரிணர் கொண்டு
கழும முடித்துக் கண்கூடு கூழை
சுவன்மிசைத் தாதொடு தாழ வகன்மதி
தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்
தீங்கே வருவா ளிவள்யார்கொ லாங்கேயோர்
வல்லவன் றைஇய பாவைகொ னல்லா
ருறுப்பெலாங்கொண்டியற்றி யாள்கொல்வெறுப்பினல்
வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொ லாண்டார்
கடிதிவளைக் காவா விடுதல் கொடியியற்
பல்கலைச் சில்பூங் கலிங்கத்த ளிங்கிதோர்
நல்கூர்ந்தார் செல்வ மகள்;
இவளைச், சொல்லாடிக் காண்பேன் றகைத்து;

நல்லாய் கேள்,

ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்
தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினல
மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்
பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ;

நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென
முழங்குநீர்ப் புணையென வமைந்தநின் றடமென்றோள்
வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்
கணங்காகு மென்பதை யறிதியோ வறியாயோ;

முதிர்கோங்கின் முகையென முகஞ்செய்த குரும்பை
பெயறுளி முகிழெனப் பெருத்தநின் னிளமுலை[யெனப்
மயிர்வாய்ந்த வரிமுன்கை மடநல்லாய் நிற்கண்டா
ருயிர்வாங்கு மென்பதை யுணர்தியோ வுணராயோ;

எனவாங்கு,

பேதுற்றாய் போலப் பிறரெவ்வ நீயறியா
யாதொன்றும் வாளா திறந்தீவாய் கேளினி

நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமருந் தவறிலர்
நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்
பறையறைந் தல்லது செல்லற்க வென்னா
விறையே தவறுடை யான்.

இது * "காமஞ் சாலா விளமை யோள்வயி - னேமஞ் சாலா விடும்பை யெய்தி - நன்மையுந் தீமையு மென்றிரு திறத்தாற் - றன்னொடு மவளொடுந் தருக்கிய புணர்த்துச் - சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல் - புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே" என்பதனாற் தருக்கிச்சொல்லிச் சொல்லெதிர்பெறான் இன்புற்றது.

(இ - ள்.) ஊர்க்கா * * * மகள்—எ-து, ஊரிடத்தே வளர்ந்த இணர்க்காவினுள் நீர் ஓடுகின்ற காலிடத்தே நின்ற கொழுவிய நிழலையுடைய ஞாழலினது முதிர்ந்த தொத்துக்களைப் பறித்துக்கொண்டு, பூவும் மயிருந் தம்முண்மயங்கும்படி முடித்து, வாரி முடிக்கும்படி தலைகூடினமயிர் தோட்கட்டிலே தாதோடே சிறிது குலைந்து வீழ, நிறைந்த மதி இனிய கதிர்களை விட்டாற்போல் முகம் ஒளிபொருந்தி, யான் நிற்கின்ற இவ்விடத்தே வருவாளாகிய இவள் யார்தான் கொல்? இம்மலையிலே வல்லவனாலே பண்ணப்பட்ட ஒப்பில்லாத பாவையோ? அன்றி அயனாலே நல்லமகளிருடைய உறுப்புக்களெல்லாவற்றையும் ஒருங்குகொண்டு ஒருவடிவாகப் பண்ணப்பட்டாளொருத்தியோ? அன்றி ஆடவர்மேலுள்ள வெறுப்பாலே தன்னைக்கூற்றமென்று அறியாதபடி மறைத்துப் பெண்வடிவு கொண்டு வந்ததோர் கூற்றமோ? இந்நிலையை ஓர்ந்துபாராய்; கொடிபோன்ற நடக்கத்தினையும் எண்கோவையாகிய மேகலையையுஞ் சில பூத்தொழிலையுடைய கலிங்கத்தையுமுடையளாயிருந்தாளாதலால் இவ்வூரிடத்துப் பிள்ளையால் மிடிபட்டாருடைய செல்வத்தையுடைய மகள்காண்; இவளைக் காத்துப்போந்தவர்கள் இப்பொழுது காவாராய்ப் புறப்படவிடுதல் கொடிது; எ - று.

இவளைச் * * * நல்லாய்கேள்—எ-து, இனி இவளை நல்லாய்! யான் கூறுகின்றதனைக்கேள் என்று போகாமற் தடுத்து வார்த்தைசொல்லிப் பார்ப்பேன்; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ருO-ம் சூத்.

இஃது ஐயுற்றுத் துணிந்து நெஞ்சொடு கூறியது. மேகலையானுங் கலிங்கத்தானும் ஐயம் நீங்கி மகளென்று துணிந்தான், மனைக்கிழத்தியாகக் கோடல்வேண்டுமெனக் கருதி. "மருந்து பிறிதில்லாப் பெருந்துயர்" எய்தினுதலின் இங்ஙனம் ஐயமும் நிகழ்ந்தது. இவ்வகை உவமைகள் *"வேறுபட வந்த உவமத் தோற்றங் - கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்" என்பதனாற் கொண்டாம். †"அவ்வ மாக்களும் விலங்கு மன்றிப் - பிறவவண் வரினுந் திறவதின் நாடித் - தத்த மியலின் மரபொடு முடியி - னத்திறந் தானே துறையெனப் படுமே" என்பதனுன் ஞாழல் முடித்தாளென நெய்தற் தலைவிபோலவும் ஊர்க்காணிவந்த பொதும்பரொன்றதனுன் மருதத்துக்கண்டான்போலவுங் கூறிக் குறிஞ்சிப் பொருளாகிய புணர்தனிமித்தம் பொருளாக முடித்தான். இவ்வாறு மயங்கினுங் குறிஞ்சித்துறைப்பாற்பட்ட துறையுறப்பான் வந்ததென்க.

ஆய்துவி * * * வறியாயோ—எ-து, கண்டார் காதல்கோடற்குக் காரணமாகிய மான்போலும் நோக்கத்தினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே! சூட்டுமயிரினையுடைய அன்னமென்ன, அழகினையுடைத்தாகிய பெடைமையினையுடைய மயிலென்னக், கல்லையுண்கின்ற அழகிய புறவென்ன, நடையுஞ் சாயலும் மடப்பமுமாகிய நலம் நெருங்கின நின்னுடைய இவ்வெழில் நின்னைக் கண்டவர்களை மயக்கமுறுத்துமென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ? எ - று.

இது நிலம்வரையாது வந்த கைக்கிளை. மயிலும் பிறவுஞ் சினையொடுசினையுவமம்.

நுணங்கமைத் * * * வறியாயோ—எ-து, வளைந்த முன்கையினையும் வெள்ளிய எயிற்றினையுமுடைய அழகிய நல்லாளே! நிறத்தாலுந் திரட்சியாலும் புகரினது நுண்மையையுடைய மூங்கிலென்ன, மென்மையால் நுண்ணிய துகிலினையுடைய அணையென்னக், காமக் கடலை நீந்துதற்குத் தெப்பமாதலான் முழங்கும் நீராக்கடக்கும் வேழங்கோலாற்செய்த தெப்பமென்னப், பொருந்தின நின்னுடைய பெருமையையுடைய மெல்லிய தோள்கள் நின்னைக் கண்டவர்களுக்கு வருத்தமாமென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ? எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், ௬௨-ம் சூத்.
† „ „ செய்யுளியல், ௨௧௦-ம் „

முதிர்கோங்கின் * * * வுணராயோ—எ-து, மயிர் நேரிதான வரிகளையுடைய முன்கையினையும் மடப்பத்தினையுமுடைய நல்லாளே! முற்றின கோங்கமரத்தினது இளையமுகையென்ன, வடிவுவாைந்து கட்புலனான குரும்பையென்னப், பெய்தற்றொழிலையுடைய மேகத்தின் துளியாலுண்டான மொக்குளென்னப், பெருத்த நின்னுடைய இளையமுலைகள் நின்னைக் கண்டவர்களுடைய உயிரை வாங்கிக்கொள்ளுமென்னும் நிலைமையை நீதான் அறிவையோ? அறியாயோ? எ - று.

எனவாங்கு—எ-து, என்று யான் கூறாநிற்க; எ - று.

ஆங்கு, அசை.

பேதுற்றாய் * * * யான்—எ-து, நீ மயக்கமுற்றாய்போலே பிறருடைய வருத்தத்தை நீ அறியாயாய்க் கேட்டார்க்கு யாதொன்றுஞ் சொல்லாயாய்க் கழிந்துபோகின்றவளே! இப்பொழுது யான்கூறுகின்றதனைக் கேள்; நீயுங் குற்றமுடையையல்லை; நின்னை இற்புறத்தே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாருங் குற்றமுடையரல்லர்; குற்றமுடையான் யாவனென்னில், நிறையழிந்து கொல்கின்ற யானையை நீர்க்குவிட்டாற் பறைசாற்றிச் செல்லுமாறுபோலப் பறைசாற்றிச் செல்வதல்லது பறைசாற்றாமற் செல்லாதொழிகவென்று சொல்லாத இறைவனேயென்க; எ - று.

இதனாற் தலைவற்கு அசைவென்னும் அழுகை பிறந்தது. இது புணர்தனிமித்தமாதலிற் குறிஞ்சியுட்கோத்தார். இது தான் உயிர்கொடுத்தானாகத் தனது நன்மைகூறி அவள் தீங்குங் கூறினான்.

இது முன் ஒரு நெடுவெண்பாட்டும் ஓர் அம்போதரங்கமுந் தனிச்சொல்லுந் தாழிசையும் பின்னும் ஒரு தனிச்சொல்லும் வெள்ளைச்சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலிப்பா. (உo)

௫எ. வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்
மான்வென்றமடநோக்கின் மயிலியற்றளர்பொல்கி[பான்
யாய்சிலம் பரியார்ப்ப வவிரொளி யிழையிமைப்பக்
கொடியென மின்னென வணங்கென யாதொன்றுந்
தெரிகல்லா விடையின்கட் கண்கவர் பொருங்கோட
வளமைசா லுயர்சிறப்பி னுந்தைதொல் வியனக
ரிளமையா னெறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி;

பூந்தண்டார்ப் புலர்சாந்திற் றென்னவ னுயர்கூடற்
றேம்பாய வவிழ்நீலத் தலர்வென்ற வமருண்கண் [விற்
ணேந்துகோட் டெழில்யானை யொன்னுதார்க் கவன்வே
சேந்துநீ யினையையா யொத்ததோ சின்மொழி;

பொழிபெயல் வண்மையா னசோகந்தண் காவினுட்
கழிகவி னிளமாவின் றளிரன்ன யதன்றலைப்
பணையமை பாய்மான்றே ரவன்செற்றார் நிறம்பாய்ந்த
கணையினு நோய்செய்தல் கடப்பன்றோ கனங்குழாய்;

வகையமை தண்டாரான் கோடுயர் பொருப்பின்மேற்
றகையிண ரிளவேங்கை மலரன்ன சுணங்கினாய்
மதவலி மிகுகடாஅத்த வன்யானை மருப்பினுங்
கதவவாற் றக்கதோ காழ்கொண்ட விளமுலை ;

எனவாங்கு,

இனையன கூற விறைஞ்சுபு நிலனோக்கி
நினையுபு நெடிதொன்று நினைப்பாள்போன் மற்றாங்கே
துணையமை தோழியர்க் கமர்த்த கண்ணள்
மனையாங்குப் பெயர்த்தாளெ னறிவகப் படுத்தே.

இதுவும் அது.

(இ - ள்.) வேயெனத் * * * கேளினி—எ-து, மூங்கிலெ ன்னும்படி திரண்ட தோளினையும் மணம் நாறுகின்ற கடைகுழன்ற ஐம்பாலினையும் மானோக்கினைவென்ற மடப்பத்தையுடைய நோக்கி னையும் மயில்போன்ற சாயலினையுமுடையையாய், அழகிய சிலம்பு உள்ளிடுமெணி ஆரவாரிப்ப, விளங்குகின்ற ஒளியினையுடைய கலங்கள் விளங்க, நுடக்கத்தாற் கொடியென்ன விளக்கத்தான் மின்னென் னக் கட்புலனாகாமையின் வருத்தமென்ன யாதொன்றுந் தெரியாத இடையிடத்தே கண்கள் விரும்பிச் சேர ஓட, நின்னுடைய இள மைப்பருவத்தாலே செல்வம் அமைந்த உயர்ந்த தலைமையினையுடைய நுந்தையுடைய பழமையுடைத்தாகிய அகற்சியையுடைய மனையி னின்றும் அடிக்கின்ற பந்தோடே தளர்ந்து ஒதுங்கிப் புறப்படுதலைச் செய் தவளே! இப்பொழுது யான் கூறுகின்றதனைக் கேள்; எ-று.

பூந்தண்டார்ப் * * * சின்மொழி—எ-து, சிலவான மொழியினையுடையாய்! பூவினையுடைய குளிர்ந்த மாலையினையும் புலர்ந்த சந்தனத்தினையுமுடைய பாண்டியனது உயர்ந்த மதுரையிடத்துத் தேன்பரக்கும்படி அவிழ்ந்த நீலத்தினது அலரைவென்ற போரையுடைய கண்கள் தலையேந்தின கோட்டையும் அழகினையுமுடைய யானையினையுடைய பகைவர்க்கு அப்பாண்டியன் வேல் வருத்துமாறுபோல் நம்மைச் சிவந்து வருத்தஞ்செய்து நீ இத்தன்மையாயிராநின்றாய், இது நின் இளமைக்குத் தக்கதோ; எ - று.

கண்சேந்தினையையென்றது சினைவினை முதலொடுமுடிந்தது.

பொழிபெயல் * * * கனங்குழாய்—எ-து, பொன்னாற்செய்த குழையினையுடையாய்! பொழிகின்ற பெயல்போலுங் கொடையினையுடைய பாண்டியனது அசோகமரத்தினையுடைய குளிர்ந்த பொழிலிடத்துநின்ற மிக்க அழகினையுடைய இளைய மாவினது தளிரையொத்த நிறத்தினையுடையையாய் அங்ஙனம் வருந்துதற்கு மேலே பந்தியிலே நிற்றலமைந்த பாய்ந்துசெல்லுங் குதிரைபூண்ட தேரையுடைய பாண்டியனாற் செறப்பட்டவர்கள் மருமத்தே தைத்த அம்பினுங்காட்டில் நோவைச்செய்தல் உலகிற் கொடுமைகளின் மிக்க கொடுமையன்றோ? எ - று.

வகையமை * * * விளமுலை—எ-து, வகுப்பமைந்த குளிர்ந்த தாரினையுடைய பாண்டியனது சிகரங்களுயர்ந்த பொதியின்மலையிடத்து அழகினையுடைய கொத்துக்களையுடைய இளைய வேங்கைப் பூவையொத்த சுணங்கினையுடையாய்! முத்துவடத்தைத் தன்னிடத்தேகொண்ட நின்னுடைய இளையமுலைகள் இப்பருவத்திலும் அப்பாண்டியனுடைய மிகுதியையுடைய வலியினையும் மிகுகின்ற கடத்தினையுமுடைய யானையினுடைய கொம்புகளிலுங் கோபத்தினையுடைய வாயிராநின்றன, இக்கொடுமை இப்பருவத்திற்குத் தக்கதோ? எ - று.

எனவாங்கு—எ-து, என்று; எ - று. ஆங்கு அசை.

இனையன * * * படுத்தே—எ-து, இத்தன்மையனவற்றையான் நெடிதொன்று நினையாநின்று கூற அதற்கு ஒன்று கூறாதே கவிழ்ந்து நிலத்தைப்பார்த்துப் பின்னை அவ்விடத்தே தோழியரை நினைப்பாள்போலே துணையாய் அமைந்த தோழியர்க்குப்பொருந்தின கண்ணையுடையளாய் என் அறிவைத் தன்னிடத்தே அகப்படுத்திக் கொண்டு தன்மனையிடத்தே மீண்டுபோனாள்; எ - று.

இஃது ஏமஞ்சாலாவிடும்பையெய்திக் கூறினது.

நெடிதொன்றுநினையாநின்றென்றது தான் சிறிதுநாட் சென்றால் வரைந்துகோடலை நினையாநின்றென்றதாகக்கொள்க. நினைப்பாள்போலென்றதனால் அவன்கூற்றினையும் இதுவுமொன்றெனச் சிறிது கொண்டமையுந் தோன்றிற்று.

இதனாற் றலைவற்கு அசைவென்னும் உவகைபிறந்தது.

இஃது ஏழடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (உக)

ருஅ. **வா**ருறுவணரைம்பால் வணங்கிறைநெடுமென்றோட்
பேரொழின் மலருண்கட் பிணையெழின் மானோக்கிற்
காரொதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்
கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுப்பினாய்
நேர்சிலம் பரியார்ப்ப நிரைதொடி வீசினை
யாருயிர் வௌவிக்கொண் டறிந்தீயா திறப்பாய்கேள்;

உளனாவென் னுயிரையுண் டுயவுநோய் கைம்மிக
விளமையா னுணராதாய் நின்றவ றில்லானுங்
களைநரி னோய்செய்யுங் கவினறிந் தணிந்துதம்
வளமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

நடைமெலிந் தயர்வுறீஇ நாளுமென் னலியுநோய்
மடமையா னுணராதாய் நின்றவ றில்லானு
மிடைநில்லா தெய்க்குநின் னுருவறிந் தணிந்துதம்
முடைமையாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

அல்லல்கூர்ந் தழிவுற வணங்காகி யடருநோய்
சொல்லினு மறியாதாய் நின்றவ றில்லானு
மொல்லையே யுயிர்வௌவு முருவறிந் தணிந்துதஞ்
செல்வத்தாற் போத்தந்த நுமர்தவ றில்லென்பாய்;

எனவாங்கு,

ஒறுப்பின்யா னொறுப்பது நுமரையான் மற்றிந்நோய்
பொறுக்கலாம் வரைத்தன்றிப் பெரிதாயிற் பொலங்கு
மறுத்திவ்வூர் மன்றத்து மடலேறி [ழாய்
நிறுக்குவென் போல்வல்யா னீபடு பழியே.

இதுவும் அது.

(இ - ள்.) வாருறு * * * திறப்பாய்கேள்—எ-து, கோதுத லுற்ற கடைகுழன்ற ஐம்பாலினையும் வளைந்த இறையினையுடைய நெடிய மெல்லிய தோளினையும் பெரிய அழகினையுடைய மலர் போலுங் கண்ணினையும் மான்பிணையினது அழகினையுடைய வெருவின நோக்குப்போலும் நோக்கினையும் மழையைப்பெற்ற தளிர்போலும் நிறத்தினையும் அழகுபெறுகின்ற பிறைபோன்ற நுதலினையும் விழுந்தெழுந்த கூரிய எயிற்றினையும் விழுந்தெழாத முகைபோலும் வெள்ளிய பல்லினையுமுடைய கொடியையொக்கும் இடையினையுடையாய்! காலுக்குப் பொருந்தின சிலம்பின் உள்ளிடுமணி ஆரவாரிப்ப நிரைத்த தொடியையுடைய கையை வீசினையாய்ப் பெறுதற்கரிய என் உயிரைக்கொண்டு இளமையாற் கைக்கொண்டதனை அறியாதே போகின்றவளே! யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

உளனுவென் * * * றில்லென்பாய்—எ-து, வருத்தத்தினையுடைய காமநோய் கைம்மிகும்படியாக யான் சிறிது உயிருடனே இருக்கும்படி என் உயிரை வாங்கிக்கொண்டு நின் இளமைப்பருவத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நின்னையொழியப் போக்குவார் பிறர் இல்லாத நோயைச்செய்யும் அழகையறிந்துவைத்தும் அதன்மேலே ஒப்பித்துத் தநு செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நும்முடைய சுற்றத்தாரைத் தவறுடையர் அல்லரொன்று கூறலாமாகிற் கூறு, அஃது அரிது; எ - று.

நடைமெலிந் * * * றில்லென்பாய்—எ-து, அறிவு நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடி என்னும் ஒழுக்கந் தேய்ந்து மறத்தலை எனக்கு உறுத்தி நாடோறும் என்னை நலிதற்குக் காரணமான நீ செய்த நோயை நினது மடப்பத்தாலே அறியாமற் போகின்றவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் நிற்கமாட்டாதே இளைக்கும் இடையையுடைய நின் வடிவை அறிந்துவைத்தும் அதன்மேலே ஒப்பித்துக்

தஞ்செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நம்முடையசுற்றத்தாரைத் தவறுடையர்அல்லரென்று கூறலாமாகிற் கூறு; அஃது அரிது; எ-று.

அல்லல்கூர்ந் * * * றில்லென்பாய்—எ-து, நெஞ்சழிந்து வருத்தமிக்குக் கெடும்படி வருத்தமாகி மேன்மேலும் அடர்ந்துவருகின்ற காமநோயைக் குறிப்பான் அறிதலின்றிச் சொல்லிக்காட்டினும் அறியாதவளே! நின்னிடத்துத் தப்பில்லையாயினும் ஒழுக உயிரைவாங்காது விரைய உயிரைவாங்கும் நின் வடிவை அறிந்துவைத்தும் அதற்குமேலே ஒப்பித்துவைத்துத் தஞ் செல்வச்செருக்காலே புறப்படவிட்ட நம்முடைய சுற்றத்தாரைத் தவறுடையர் அல்லரென்று கூறலாமாகிற் கூறு; அஃது அரிது; எ-று.

ஆயினும், ஆனுமெனக் குறைந்துநின்றது. அழிபுகவென்றும் பாடம்.

எனவாங்கு, அசை.

ஒறுப்பின்யா * * * பழியே—எ-து, யான் ஒறுத்துக்கூறில் ஒறுப்பது புறத்துப்போதவிட்ட நம்முடைய சுற்றத்தாரை; நின்னையன்று; பின்னை இக்காமநோய் பொறுக்கலாம் அளவையுடைத்தன்றி மிகுமாயிற் பொன்னாற்செய்த குழையினையுடையாய்! யான் இங்ஙனம் வருந்துகின்றநிலைமையைப் போக்கி இவ்வூரின் மன்றத்தின்கண்ணே மடலேயேறி நீ எய்துவதொரு பழியை யான் உனக்கு நிறுத்துவேன்போலே இராநின்றேன், நீ அதனை அறி; எ-று.

இது சொல்லெதிர்பெறான் சொல்லியின்புற்றது.

அவளுந் தமருந் தீங்குசெய்தாராக அவளொடு தீங்கைப் புணர்த்துந் தான் ஏதஞ்செய்யாது உயிர்கொடுத்தானாகத் தன்னொடு நன்மையைப் புணர்த்துங் கூறியவாறு காண்க.

அவன் இங்ஙனம் மிகுதிகூறுவான் மடலேறுவேன்போல்வலென ஐயுற்றுக்கூறினான்.

இதனாற் றலைவற்கு அசையென்னும் உவகை பிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையும் பொருள்பெறாத தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. ()

௫௬. தளிநெகிழ் பிணிவிவந்த பாசடைத் தாமரை
முளிவிமிர் தவைபோலு முத்துக்கோ லவிர்தொடி
யடுக்கா றலர்காந்த ணுண்ணோர்தண் ணேருருவிற்
றுடுப்பெனப் புரையுநின் றிரண்டேந ரரிமுன்கைச்
சுடர்விரி வரிவாய தூதையும் பாவையும்
விளையாட வரிப்பெய்த வழகமை புனைவினை
யாய்சிலம் பெழுந்தார்ப்ப வஞ்சில வியலுநின்
பின்னுவிட் டிருளிய வைம்பால்கண் டென்பால
வென்னைவிட் டிகத்தர விறந்தீவாய் கேளினி;

மருளியான் மருளுற விவனுற்ற தெவனென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையினீ ராடிய தவந்தலைப் படுவாயோ;

உருளிழா யொளிவாட விவனுண்ணோ யாதென்னு
மருளிலை யிவட்கென வயலார்நிற் பழிக்குங்காற்
பொய்தல மகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ
யெய்திய பலர்க்கீத்த பயம்பயக் கிற்பதோ;

ஆய்தொடி யைதுயிர்த் திவனுண்ணோ யாதென்னு
நோயிலை யிவட்கென நொதுமலர் பழிக்குங்காற்
சிறுமுத் தனைப்பேணிச் சிறுசோறு மடுத்துநீ
நறுநுத லவரொடு நக்கதுநன் கியைவதோ;

எனவாங்கு,

அனையவை யுளையவும் யானினக் குரைத்தநை
யினையநீ செய்தது தவாயாயிற் சேயிழாய்
செய்ததன் பயம்பற்று விடாது
நயம்பற்று விடினில்லை நசைஇயோர் திறத்தே.

இஃது இரந்துகுறையுற்றுப் பின்னின்ற தலைவன் ஆற்றுறு
ய்த் தலைவியைநோக்கி இங்ஙனம் வருத்துவையாயின் நீ செய் தவம்
இன்றாமெனக் கூறியது.

(இ - ள்.) தளைநெகிழ் * * * கேளினி—எ-து, முறுக்கு அவிழ்ந்ததும் அரும்புகள் நீருக்குமேலே ஓங்கின பசிய இலையினையுடையதுமான தாமரையினது வளையம் வளர்ந்தவையிற்றையொக்கும் மூத்தை அழுத்திச்செய்த திரட்சியையுடைய விளங்குகின்ற தொடியினையுடைய அடுக்கமெல்லாம் நாறுகின்ற கூரிய அழகினையுடைத்தாகிய அலர்களையுடைய காந்தளினது குளிர்ந்த எழுச்சியையுடைத்தாகிய வடிவினையுடைய துடுப்பென்று கூறும்படியாக ஒக்குந் திரண்ட தம்மில் இணையொத்த மெல்லிய முன்கையினாலே இங்குலிகம் எழுதின ஒளிவிரிந்த தொழில்களையுடையவாகிய வாய்களையுடைய மரத்தாற்செய்த சிறுபானையாலும் பாவையாலும் விளையாடுதற்கு உள்ளிடுமணியிட்ட அழகமைந்த புனைந்த தொழில்களையுடைய அழகிய சிலம்புகள் மிக ஆரவாரிப்ப அழகினையுடைய சில அடியிடாநடக்கும் நின்னுடைய இளமை நீங்குதலாற் பின்னுதல் விட்டு இருண்ட ஐம்பாலைக் கண்டு என்னிடத்துண்டாகிய அறிவுமுதலியன என்னைவிட்டுப் போம்படியாகப் போகின்றவளே! யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள்; எ - று.

தளைநெகிழ்தாமரை, பிணிநிவந்தபாசடைத்தாமரை, என்க.

மருளியான் * * * படுவாயோ—எ-து, யான் மயக்கமுறுகையினாலே அதுகண்டு தானும் மருண்டு இவனுற்ற நோய் யாதுதானென்று கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான் கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கும் அளவிற் கூரிய எயிற்றினையுடைய இளையமகளிர்க்கு நடுவே வகுப்புடைய கோலத்தாலே பொலிவுபெற்று நீ தைத்திங்களில் நீராடிய நோன்பின் பயனைப் பெறுவையோ? பெறாய்காண்; எ - று.

உருளிழாய் * * * கிற்பதோ—எ-து, தலையிற் கிடந்து அசையுந் தலைப்பாளையையுடையவளே! ஒளிகெடும்படி இவன்மனத்தில் உண்டாகிய நோய் யாதென்று கேட்கும் அருள் இவட்கு இல்லையென்று யான் கூற அது கேட்டு அயலார் நின்னைப் பழிக்கும் அளவில் நோன்பாகிய விளையாட்டினையுடைய மகளாந்தன்மையையுடையையாய்ப் பிறர் மனையின்கண்ணே ஐயமேற்றுப் பாடி நீ ஆண்டுப்பெற்றவையிற்றைப் பிறர்க்குக் கொடுத்ததனாலுள்ள பயன் நினக்குப் பயன் தருவதொன்றோ? தாராதுகாண்; எ - று.

பொய்தல, அகரஞ் செய்யுள் விகாரம்.

ஆய்தொடி * * * கியைவதோ—எ-து, ஆராய்ந்திட்ட தொடியினையுடையாய்! நீதான் ஐதாக உயிர்த்து இவன்மனத்திலுண்டாகிய நோய் யாதென்று கேட்கும் நோய் இவட்கு இல்லையென்று யான் கூற அதுகேட்டு அயலார் நின்னைபழிக்கும் அளவிற் சிறிய குழமகனைப் பேணி வளர்த்து அவனுக்கு வேறொருத்தியுடைய பெண்மனையைக் கோடற்குச் சிறுசோற்றைச் சமைத்து ஆயத்திற்கு இட்டு நீ நறிய நுதலையுடைய மகளிரோடே மகிழ்ந்த நோன்பின் பயன் நினக்கு வந்துபொருந்துமோ? பொருந்தாதுகாண்; எ - று.

எனவாங்கு—எ-து, என்று; எ-று. ஆங்கு, அசை.

அனையவை * * * திறத்தே—எ-து, நீ நெஞ்சுளையவும் யான் நினக்குக் கூறியது செயிழாய்! நின்னை நச்சினோர் திறத்தே வருந்தும்படி நீ செய்த கொடுமைக்கு நீ ஓர் உதவிசெய்யாயாயின் நீ செய்த அத்தீங்கினுலுள்ள பயன் நின்னைப் பற்றுதல்விடாது, அதுவேயுமன்றி நீ அருளைப் பற்றுவிடுவையாயின் நினக்கு அனையவை பயன் தருதலில்லை; எ - று.

நச்சினோரெனத் தன்னைப் பிறர்போற் கூறினான். நயம், அருள். அனையவையென்றது, தைநீராடன் முதலியவற்றை.

இதனாற் தலைவற்கு இழிவுபிறந்தது; தலைவிக்குச் சூழ்ச்சி பிறந்தது.

இஃது ஒன்பதடித் தரவும் நான்கடித்தாழிசையும் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (உரு.)

சூ0. சுணங்கணி வனமுலைச் சுடர்கொண்ட நறுநுதன்
மணங்கமழ் நறுங்கோதை மாரிவீ ழிருங்கூந்த
னுணங்கெழி லொண்டித்தி நுழைநொசி மடமருங்குல்
வணங்கிறை வரிமுன்கை மயிலியன் மடநல்லாய்;

கண்ணார்ந்த நலத்தாரைக் கதுமெனக் கண்டவர்க்
குண்ணின்ற நோய்மிக வுயிரெஞ்சு துயர்செய்தல்
பெண்ணன்று புனையிழா யெனக்கூறித் தொழூஉந்
தொழுதே; கண்ணுநீ ராக நடுங்கின னின்னகா
யென்செய்தான் கொல்லோ விஃதொத்தன் றன்கட்

பொருகளி றன்ன தகைசாம்பி யுள்ளூ
ளூருகுவான் போலு முடைந்து;

தெருவின்கண், காரண மின்றிக் கலங்குவார்க் கண்டுநீ
வாரண வாசிப் பதம்பெயர்த லேதில
நீநின்மேற் கொள்வ தெவன்;

அலர்முலை யாயிழை நல்லாய் கதுமெனப்
பேரம ருண்கணின் றோழி யுறீஇய
வாரளு றெவ்வ முயிர்வாங்கு
மற்றிந்நோய் தீரு மருந்தருளா யொண்டொடீ;

நின்முகங் காணு மருந்தினே னென்னுமா
னின்முகந் தான்பெறி னல்லது கொன்னே
மருந்து பிறிதியாது மில்லேற் றிருந்திழா
யென்செய்வாங் கொல்லினி நாம்;

பொன்செய்வாம்,

ஆறு விலங்கித் தெருவின்க ணின்றொருவன்
கூறுஞ்சொல் வாயெனக் கொண்டதன் பண்புணராந்
தேற லெளிதென்பா நாம்;

ஒருவன், சாமா றெளிதென்பா மற்று;

சிறிதாங்கே, மாணுவூ ரம்ப லலரி னலர்கென
நாணு நிறையு நயப்பில பிறப்பிலி
பூணாக நோக்கி யிமையா னயந்துநங்
கேண்மை விருப்புற் றவனை யெதிர்நின்று
நாணடப் பெயர்த்த நயவர வின்றே.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி தலைமகளோடு உறழ்ந்து அவனது குறைநயப்பக் கூறியது.

(இ-ள்.) சுணங்கணி * * * மடநல்லாய்—எ-து, சுணங்கு அணிந்த அழகிய முலையினையும் பிறையின் தன்மையைக்கொண்ட

நறிய நுதலினையும் நறிய மாலையினையுடைய மணம் நாறுகின்ற மழை விரும்புங் கரிய கூந்தலினையும் கூரிய அழகுபெற்ற ஒளிபொருந் திய தித்தியினையும் நோக்கினர் கண் சென்று நுழைந்துபார்க்கும் நுண்மையாலே அவர்க்கு அறியாமையைக் கொடுக்கும் மருங்குலையும் வணங்குகின்ற இறையினையுடைய வளையணிந்த முன்கையினையும் மயில்போன்ற சாயலையுமுடைய மடப்பத்தையுடையவளே ; எ-று.

கண்ணார்ந்த * * * முடைந்து—எ-து, இனிய நகையினையு டையாய்! நின்னைநோக்கித் தொழூஉந்; தொழுதபின், புனையிழாய்! என்னைநோக்கி, உலகத்திற் கண்ணுக்கு நிறைந்த நலத்தினையுடைய மகளிரைக் கண்டவர்களுக்கு உண்ணின்ற காமநோய் மிகும்படி சடுக உயிர்போந் துயரைச்செய்தல் அவர்க்குப் பெண்டன்மையன்றெனக் கூறிக் கண்ணும் உருகநின்று நடுங்கினன்; நடுங்கி இவனொருத்தன் தன்னிடத்துப் பொருகின்ற களிற்றையொத்த தன்மைகெட்டு மன முடைந்து உள்ளேயுள்ளே உருகுவான்போலே இராநின்றான்; இ வன் ஈண்டு வந்து என்னகாரியஞ்செய்தான்கொலென்றாள்; எ-று.

ஒருத்தனென்பது இடைக்குறைந்துநின்றது.

தெருவின்கண் * * * தெவன்—எ-து, அதுகேட்ட தலைவி நீ நம்மாற் றமக்கு நிகழ்ந்ததோர் காரணமின்றியிலே தெருவின்கட் கலங்குவார் சிலரைக் கண்டு நினக்கு ஏதிலவாயிருப்பனவற்றை நீ நின்மேல் ஏறட்டுக்கொள்கின்றதன்மை வாரணவாசியிலுள்ளார் பெ றும் அருளுடைமையாகிய பதத்தை நீ நின்னிடத்தே ஏறட்டுக் கோ டல்காண்; இது நமக்கு என்னாய் விளையும்? எ - று.

பிறர்வருத்தந் தம்வருத்தமாகக் கொண்டு ஒழுகுவதனை வார ணவாசியென்னும் ஊரிலுள்ளார் பதமென்றாள்.

இது "கூறியவாயில்கொள்ளாக்காலைத்" தலைவிகூறியது.

அலர்முலை * * * நாம்—எ-து, அதுகேட்ட தோழி அடிபர ந்த முலையினையும் ஆராய்ந்த பூணினையுமுடைய நல்லாய்! பெரிய அம ர்த்த உண்கண்ணினையுடைய என் தோழி உறுத்தின பொறுத்தற்க ரிய மனக்கவர்ச்சியைச் செய்யும் வருத்தங் கதுமென உயிரைவாங் கும்; அஃது உயிரைவாங்காதபடி ஒண்டொடீ! பின்னை இந்நோய் தீர் த்தற்குக் காரணமான மருந்தை அருளாய்; அம்மருந்துதான் மிகவும் அரிதன்று; நின்முகங்காண்டல்காரணமாக அதன்காரியமாகப் பிற

ந்த அருளை மருந்தாகற்றன்மையாக உடையேனென்று கூறுகின்ருன்; ஆதலால் அவன்ருன் நின்முகத்தை இக்காலத்தே பெறின் அது மருந்தாவதல்லது வேறு சிறிதும் மருந்தில்லையாயிருக்குமாயிற் றிருந்திழாய் இனி நாம் என்செய்யக்கடவேமென்ருள்; எ-று.

நின்முகங்காணுமருந்தினேனென்றது தலைவியைக்கருதி. மற்று வினைமாற்று. கொன் காலமுணர்த்திற்று. சொல், ஐயம்.

பொன்செய்வாம் * * * நாம்—எ-து, அதுகேட்ட தலைவி பொன்செய்வாம் என்று நகைக்குறிப்புக் கூறிப் பின்னும் உலகவொழுக்கத்தைத் தப்பி ஒருவன் தெருவின்கண் நின்று கூறுங் கூற்றை உண்மையென்றுகொண்டு அதன் உண்மையை உணராமாய் நாம் அதனைத் தெளிதல் எளிதென்று சொல்லக்கடவேமென்ருள்; எ-று.

நாமென்றது உயர்த்துக்கூறியது. உளப்பாடுமாம். மேலே என்பாம் என்பதும் அது. பொன்செய்வாமென்றதன் அமைதி * "இசைதிரிந்து" என்னும் பொருளியற் சூத்திரத்துக் கூறினும்.

ஒருவன் * * * மற்று—எ-து, அதுகேட்ட தோழி பின்னை நின்கருத்து இதுவாயின் ஒருவன் சாந்தன்மை எளிதென்று கூறக்கடவேமென்ருள்; எ-று.

சிறிதாங்கே * * * வின்றே—எ-து, அதுகேட்ட தலைவி மாட்சிமைப்படாத இவ்வூரில் அம்பலின் அலரினாலே அலர்வதாகவென்று கருதி நாணையும் நிறையையும் விரும்புதலில்லாத குடிப்பிறப்பிற்கு உரிய ஒழுக்கநெஞ்சு இல்லாதவனுக்கு அவன் இறந்துபடுமென்று கூறுகின்ற அத்தன்மையே மிக இன்று காணென்ருள். அதுகேட்ட தோழி நின் பூணுகத்திற் புணர்ச்சியை மனத்தாற் கருதி இரவுந் துயில்கொள்ளானாய் நங் கேண்மையை நயந்து விருப்புற்றவனை நாண் அடுகையினாலே எதிர்நின்று மீட்ட நயப்பாடு வருதலின் அதற்குத்தக்கது அறிவாயென்ருள்; எ - று.

† "சினனே பேதைமை நிம்பிரி நல்குர - வனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே" என்பதனுன் 'நாணு நிறையு நயப்பில பிறப்பிலி' எனச் சினம்பற்றி வரினும் அஃது அவன் காதலைச் சிறப்பித்துவருதலின் அமைந்தது. பிறப்பிலி பெயர்மாத்திரையாய் இல்லாதவென்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், க-ம் சூத்.
† „ „ „ கூக-ம் „

னும் பெயரெச்சமறைக்கு முடிவாய்நின்றது. பிறப்பிலிக்கு ஆங்கே சிறிதென மாறிப் பொருளுரைக்க.

ஆங்கேயென்ற ஏகாரந் தேற்றம்.

*"உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி" என்றதனாற் றலைவி உறழ்ந்துகூறினாள்.

இதனாற் றலைவிக்கு விருப்பமுற்று நினைத்தல் பிறந்தது.

இது தரவுந் தளைவிரவி ஐஞ்சீரடியும் வந்த நெடுவெண்பாட்டும் ஐஞ்சீர் அடுக்கிய குறுவெண்பாட்டும் †இடையே முச்சீரடிவந்த கொச்சகமும் வெண்பாவுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டும் ஓரடியானொன்றும் ஐஞ்சீரடி வந்த போக்கிலக்கணமில்லா நிலைமண்டில வாசிரியச்சுரிதகமும் பெற்றுவந்த உறழ்கலி. ‡"மண்டிலங் குட்டமென்றிவை யிரண்டுஞ் - செந்தூக் கியல வென்மனார் புலவர்" என்பதனான் மண்டிலங்கொள்க. (உச)

சுக. எல்லாவிஃதொத்தனென்பெறான்கேட்டைக்காண்
செல்வங் கடைகொளச் சாஅய்ச் சான்றவ
ரல்லல் களைதக்க கேளி ருழைச்சென்று
சொல்லுத லுற்றுரைக் கல்லா தவர்போலப்
பல்லூழ் பெயர்ந்தென்னை நோக்குமற் றியானோக்கின்
மெல்ல விறைஞ்சுந் தலை;

எல்லாநீ,முனர்த்தானென்றுகுறித்தாய்போற்காட்டினை
நின்னின் விடாஅ நிழற்போ றிரிதருவா
யென்னீ பெறாத திதென்;

சொல்லின், மறாதீவாண் மன்னோ விவள்;

செறாஅது, ஈத விரந்தாற்கொன் றாற்றாது வாழ்தலிற்
சாதலுங் கூடுமா மற்று;

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சச-ம் சூத்.

† "ஆரஞ ரெவ்வ முயிர்வாங்கு மற்றிந்நோய் - தீரு மருந்தரு ளாய்." எனவும், "ஒண்டொடீஇ, நின்முகங் காணு மருந்தினே னென்னுமால்" எனவும் அடிவகுப்பின் இரண்டும் வெண்பாவாம். பொன்செய்வாம் ஐஞ்சீராகச் சிறிதாங்கே தனிச்சொல்லினும் அமையும்.

‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ககஎ-ம் சூத்.

இவடந்தை,காதலின் யார்க்குங் கொடுக்கும் விழுப்பொ
யாதுநீ வேண்டி யது; [ருள்

பேதாய், பொருள்வேண்டும் புன்கண்மை யீண்டில்லை
மருளி மடநோக்கி னின்றோழி யென்னை [யாழ
யருளியல் வேண்டுவல் யான்;

அன்னையோ, மண்டமரட்டகளிறன்னான்றன்னையொரு
பெண்டி ரருளக் கிடந்த தெவன்கொலோ;

ஒண்டொடீ, நாணிலன் மன்ற விவன்;

ஆயின் ஏஎ,

பல்லார்நக் கெள்ளப் படுமடன் மாவேறி
மல்லலூ ராங்கட் படுமே நறுநுத
னல்காள்கண் மாறி விடினெனச் செல்வானு
மெள்ளி நகினும் வரூஉ மிடையிட்டுக்
கள்வர்போ னோக்கினு நோக்குங் குறித்தது
கொள்ளாது போகாக் குணனுடைய னெந்தைதன்
னுள்ளங் குறைபடா வாறு.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவனோடு உறழ்ந்து சொல்லி அவனது நீக்கத்துக்கண் அவன்குறைமறாமைக்கு ஏற்பன சொல்லித் தலைமகளைக் குறைநயப்பித்தது.

(இ-ள்.) எல்லா * * * தலை—எ-து, ஏடீ! இவனொருத்தன் என்குறைபெறாதவன்? இவன் கேட்டைப் பாராய்; அறிவுடையோர் தம்முடைய செல்வம் முடிவை அடைகையினாலே மிடித்துத் தம்முடைய வருத்தத்தைக் களைதல் தக்க உறவானவரிடத்தே சென்று தங் குறையை அவர்க்கு வாய்விட்டுச் சொல்லத்தொடங்கிப் பின்னை அதனை முடியச் சொல்லமாட்டாதிருப்பானைப்போலத் தான் கூறக்கருதியதனைக் கைவிட்டு என்னைப் பலமுறையாகப் பார்க்கும்; பின்யான் தன்னைப்பார்க்கின் தான் மெத்தெனத் தலையிறைஞ்சிநிற்கும்; எ-று.

இது தலைவன் தம்மிடத்து வருகின்றமைகண்டு தலைவிக்குக்கூறிப், பின்னர் அவனெதிர்சென்று அவனை நோக்கிக் கூறுகின்றாள்.

எல்லாநீ * * * திதென்—எ-து, எடா! நீ குறிப்பாலே எம்மோடு ஓர் நட்புச்செய்யக் குறித்தாய்போல எமக்கு அறிவித்தாயாய், நின்னைவிட்டு நீங்காத நிழற்போல என்னைவிட்டு நீங்காமற் திரிகின்றவனே நீ பெருத குறை யாது? அதனை இதுவென்று கூறு; எ - று.

இது குறையுறவுணர்தல்.

சொல்லின் * * * விவள்—எ-து, யான் என் குறையைச் சொல்லின் இவள் மிகவும் மறுதிருப்பாளோ; எ - று.

இது தலைவன் தன் நெஞ்சோடுசாவினது. *" ஐயக்கிளவி யாடேிற்குரித்தே" என்பதனுன் ஐயக்கிளவி தலைவற்குரித்தாய் வந்தது.

மறுதிவாள், வினைத்திரிசொல். ஓகாரம், வினு.

செருஅது * * * மற்று—எ-து, அங்ஙனம் உசாவித் தம்பால் இரந்தவர்களுர்கு யாதானுமொன்றை முகமறுது ஈதலைநடத்தாது உயிர்வாழலிற் பின்னைச் சாதலுங்கூடுமென்ருன்; எ - று.

இவடந்தை * * * யது—எ-து, அதுகேட்ட தோழி இவள் தந்தை இரப்பார்மேலுள்ள காதலினுல் யார்க்குஞ் சீரிய பொருள்கள் கொடுக்கும், நீ வேண்டியபொருள் யாதுதானென்ருள்; எ-று.

இஃது *" உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி-யையக் கிளவியூடேவிற் குரித்தே" என்பதனுற் தோழி உறழ்ந்துகூறினுள்.

பேதாய் * * * யான்—எ-து, அதுகேட்ட தலைவன் கூற்றின் குறிப்பறியாதவளே! என்னிடத்துப் பொருளை இரக்கும் மிடியில்லை. மருண்டு மடப்பத்தையுடைத்தாகிய நோக்கினையுடைய நின் தலைவி என்னை அருளுதலை யான் இரப்பேனென்ருன்; எ - று.

அன்னையோ—எ-து, அத்தன்மையையோ? எ - று.

இஃது அதுகேட்ட தோழி இவனிடத்துக் களவொழுக்கம் அறியாள் போன்றுகூறியது.

மண்டமர் * * * தெவன்சொலோ—எ-து, மிக்குச் செல்கின்ற போரிலே பகைவரைக் கொன்ற களிறுபோல்வான் தன்னை

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௨௪-ம் சூத்.

ஒரு மகளாயிருக்கின்றவள் அருளும்படியாகக் கிடந்த குறை எத் தன்மையதோதான்; எ - று.

இது தோழி தலைவன் நீங்கியபின்னர்த் தலைவியோடுசாவியது.

ஒண்டொடீ * * * வாறு—எ-து, ஒண்டொடீ! இவன் எந்தைதன் உள்ளங் குறைபடாதபடி வேண்டுவன கொடுத்துத் தான் குறித்ததொன்று கைப்பற்றுமற் போகாக் குணத்தையுடையன்; அதனால் நீ அருளினுந் தாழ்வில்லை; அவன்றான் குறையுற்றுநிற்கின்ற காலத்து யான் தன்னை இகழ்ந்து சிரித்தாலும் பலகாலும் வரும்; அக்குறையுறவுக்கு நடுவேநடுவே கள்வர் தாங்குறித்த பொருளை நோக்காது நோக்குமாறுபோல நின்னை மனநோக்காதுநோக்கும்; அதனான் இவனுயின் அறுதியாக ஏஎ! நாணமில்லன், நாணமின்மையால் இவன் போகின்ற போக்குப்பலருஞ் சிரித்து இகழப்படும்; மடன்மா யான் ஏறும்படி நறிய நுதலினையுடையாள் அருளாளாய் அருளைமாறியேவிடின் அவளோடு என்னிடை நிகழ்ந்தது ஊரிடத்தே அலராமேயெனக் கருதிச் செல்வான்போலேயிருந்தது; எ - று.

இஃது உசாவியபின், தோழி அவளை நோக்கி, மேல் இதற்குத் தக்கது நீ அறிந்து செய்யெனக் குறைநயப்பித்தது.

எள்ளிநகினும்வருமென்றது தன்கண் நிகழ்ந்த எள்ளல்பொருளாக நகைபிறந்தது. ஏறி, ஏற. எந்தை என்றது தலைவிதந்தையை. நோக்கினுமென்றது நோக்கு அல் நோக்கம். ஏஎ இகழ்ச்சிக்குறிப்பு. * "முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ - னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே." என்பதனான் எல்லாவிஃதொத்தன் எல்லாவென இருபாற்குமாய்நின்றது.

இதனாற் தலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது கைகோள் இரண்டினுங் கூறத் தகாதனவாகப், பொருள் யாது நீ வேண்டியதென்றும், அருளியல் வேண்டுவல் யானென்றுங், கூறலிற் "காமஞ்சான்றவிளமையோ" ளாக நிகழ்ந்த கைக்கிளையாம்.

இது தளைவிரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஓரடியானொன்றும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டு மூன்றுங் கொச்சகமும் ஓரடியானொன்றுந் தனிச்சொல்லும் வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கொச்சகக்கலி. (உரு)

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், உசு-ம் சூத்.

சுஉ. ஏஎ யிஃதொத்த னுணிலன் றன்னொடு
மேவேமென் பாரையும் மேவினன் கைப்பற்று
மேவினு மேவாக் கடையு மஃதெல்லா
நீயறிதி யானஃ தறிகல்லேன் பூவமன்ற
மெல்லிணர் செல்லாக் கொடியன்னாய் நின்னையான்
புல்லினி தாகலிற் புல்லினெ னெல்லா
தமக்கினி தென்று வலிதிற் பிறர்க்கின்னா
செய்வது நன்றாமோ மற்று;

சுடர்த்தொடீ,போற்றாய்களைநின்முதுக்குறைமைபோற்
வேட்டார்க்கினிதாயினல்லதுநீர்க்கினிதென் [றிக்கேள்
றுண்பவோ நீருண் பவர்;

செய்வ தறிகல்லேன் யாதுசெய் வேன்கொலோ
ஐவா யரவி னிடைப்பட்டு நைவாரா
மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வெளவிக் கொளலு மறனெனக் கண்டன்று;

அறனு மதுகண்டற் றாயிற் றிறனின்றிக்
கூறுஞ்சொற் கேளா னலிதரும் பண்டுநாம்
வேறல்ல மென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு.

இஃது *"ஏறிய மடற்றிறம்" என்னுஞ் சூத்திரத்து மிக்க காமத்து மிடலென்றதனாற் தலைவனுந் தலைவியும் உறழ்ந்துகூறித் தலைவி கூடக் கருதிய பெருந்திணை.

(இ - ள்.) ஏஎ * * * மற்று—எ-து, இவனொருத்தன் தன்னோடு புணர்ச்சிக்குறிப்பின்றிநிற்பாரையுந் தான் புணர்ச்சிக்குறிப்புடையனாய்க் கையாலே வலிதிற் பிடித்துக்கொள்ளும், ஆதலால் ஏஎ நாணிலனாயிருந்தானெனத் தலைவி கூறினாள்; அதுகேட்ட தலைவன் அப்புணர்ச்சிக்குறிப்பினது பகுதியாகிய மெய்ப்பாடெல்லாம் நின்னிடத்துப் பொருந்துதலைச் செய்யினும் பொருந்தாத இடத்தினுமுள்ள நன்றுதீது நீ அறியக்கடவை; யான் புணர்ச்சிக்குறிப்பை

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ருக - ம் சூத்.

அறிதலைச்செய்யேன்; பூ நெருங்கின மெல்லிய கொத்துநீங்காத கொடியையொப்பாய்! நின் மேனி புல்லுதற்கு இனிதாயிருக்கையினாலே நின்னை யான் புல்லினேனென்றான்; அதுகேட்ட தலைவி எடா! தமக்கு இனிதாயிருக்குமென்று கருதிப் பிறர்க்கு இன்னாதனவற்றை வலிதிற் செய்வது இன்பத்தைத் தருமோவென்றாள்; எ - று.

ஏஎ இகழ்ச்சிக்குறிப்பு.

இது *" வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன் - மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" என்பதனான் அடியோன் தலைவனை யவழித் தலைவி வேட்கைமறுத்து உரைத்தது.

சுடர்த்தொடீ, * * * காண்டன்று—எ-து, அதுகேட்ட தலைவன் சுடர்த்தொடீ! நின் முதுமைக்கண் உறைகின்ற நிலைமை ஈண்டுப் போற்றாது கைவிடு; யான் கூறுகின்றதனைப் பேணிக்கேள்; நீர் உண்பார்சிலர் தண்ணீரை விரும்பினர்க்கு அஃது இனிதாயின் உண்ணுமதல்லது அந்நீர்க்கு இனிதாயிருக்குமென்று கருதி உண்பரோ உண்ணார்காணென்றான்; என்று பின்னும் ஐந்துவாயினையுடைய பாம்பினது பார்வையிலே அகப்பட்டு வருத்தம்வந்து மேற்செய்யுங் காரியம் அறிகல்லேன்; இனி யாதுசெய்வேன்கொல்லென நெஞ்சொடுகிளந்து, மறுவில்லாத மதிபோல விளங்கும் முகத்தினையுடைய மகளிரை வலிதிற்புணர்தலும் ஒருமணமென நூல்கண்டதெனத் துணிந்துகூறினான்; எ - று.

ஐவாயரவென்றது தலைவியை.

அறனு * * * நமக்கு—எ-து, அதுகேட்ட தலைவி நூல் உயர்ந்த மணத்தைக் கூறப்பட்டு உலக ஒழுக்கமும் அத்தன்மைத்தாயிருக்குமாயின், அவனும் யான் மறுத்துக்கூறுஞ் சொல்லைக் கொள்ளாது திறனன்றி நலியுமாயின், அவையேயன்றி அவன் மனத்துமுற்பிறப்பில் யானும் அவளும் வேறல்லமென்பதொன்று அவனிடத்துண்டாயிருக்குமாயின், நெஞ்சே அவனோடு நமக்கு இனி மாறுபாடுண்டோவெனப் புணர்ச்சிக்கு உடம்பட்டுக்கூறினாள்; எ - று.

அறனுமதுகண்டற்றென்பது ஆங்குநெஞ்சழிதல். தான்மறுத்துரைப்பவுந் தன்மேல் அவன் விருப்பஞ்செய்தமை கண்டு பண்டு நாம் வேறல்லமென்பதொன்று அவனிடத்துண்டாலென்றாள். இது ஓதாமாதலான் அடியோர் தலைவராகவந்த பெருந்திணை.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௧௨-ம் சூத்.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தனிவிரவின நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டுங் கொச்சகமும் வெள்ளைச்சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (உசா)

சாரு. நோக்குங்கா னோக்கித் தொழூஉம் பிறர்காண்பான்
றூக்கிலி தூற்றும் பழியெனக் கைகவித்துப்
போக்குங்காற் போக்கு நினைந்திருக்கு மற்றுநாங்
காக்கு மிடமன் றினி; எல்லா வெவன்செய்வாம்,

பூக்குழாய் செல்ல லவனுழைக் கூஉய்க்கூஉய்
விரும்பியான் விட்டேனும் போல்வலென் றேண்மேற்
கரும்பெழுது தொய்யிற்குச் செல்வலீங் காக
விருந்தாயோ வென்றாங் கிற;

அவனின், திருந்தடி மேல்வீழ்ந் திரக்குநோய் தீர்க்கு
மருந்துநீ யாகுத லான்;

இன்னும், கடம்பூண் டொருகானீ வந்தை யுடம்பட்டா
ளென்னுமை யென்மெய் தொடு;

இஃதோ வடங்கக்கேள்,

நின்னொடு சூழுங்கா னீயு நிலங்கிளையா
வென்னொடு நிற்ற லெளிதன்றோ மற்றவன்
றன்னொடு நின்று விடு.

இது தலைமகற்குக் குறைநேர்ந்த தோழி அவனிலைமை தலைமகட்குக் கூறி அவளுரைத்த மாற்றத்தால் அவள் குறிப்பறிந்து இவ்வகையான தலைவற்குக் கூறென அவளுடன் நகையாடிக் கூட்டமுண்மை தான் அறிந்தமை தோற்றுவித்தது.

(இ - ள்.) நோக்குங்கா * * * வெவன்செய்வாம்—என்-து, தான் தொழுகின்ற தன்மையைப் பிறர் காண்பாராக மனத்தாற் றூக்குதல் இல்லாதவன் நாம் பார்க்குங்கால் நம்மைநோக்கித் தொழாநிற்கும், இங்ஙனந் தொழுது நமக்குப் பழியைத்தூற்றுமென்று கருதித் தொழுதலை விலக்கிப் போகவிடுங் காலத்து அப்போக்குத்

தனக்குச் செய்யும் வருத்தத்தை நினைத்துப் போகாதிருக்கும், ஆதலால் இனி நாம் அவனை நம்பால் வாராமற் காக்குங் காலமன்று, பின்னை எடீ! இங்ஙனங் காத்தற்கு அரிதான நிலைமைகண்டு மேல் என்செய்யக்கடவேங் கூறாய்; எ - று.

அதுகேட்ட தலைவி அதற்கு மறுமொழிகொடாது உடம்பட்டமை குறிப்பான் உணர்ந்தமையிற் பின்னுந் தோழி கூறுகின்றாள்.

பூக்குழாய் * * * லான்—எ-து, பூங்குழையினையுடையாய்! வருத்தத்தையுடைய அவனிடத்து நீ கூடுங்கூட்டத்தை யான் விரும்பி நின்னைப் பலகாலும் அழைத்தழைத்துக் கொண்டுபோய் விட்டேன்போலேயுமிருப்பேன், அவற்கு அது தோன்றாதபடி யான் அவனிடத்தே நீ என் தோண்மேற் கரும்பாக எழுதுங் குழம்பிற்கென்று செல்வன், ஆண்டு வந்து இவ்விடமே நினக்கு இருப்பிடமாகக் கருதி இருந்தாயோவென்று என்னைத் தேடிவந்தாயாகக் கூறி அவ்விடத்தினின்று குறியிடமே போ, அப்பொழுது அவன் நோய்தீர்க்கும் மருந்து நீயாகையினாலே நின்னுடைய நன்றாகிய அடிமேலே வீழ்ந்து நின்னை இரந்துகொள்ளும்; எ - று.

இன்னும் * * * தொடு—எ-து, அதுகேட்ட தலைவி நீ வாராய், இன்னமும் ஒருகால் அவனிடத்தே சென்று உன்குறைமுடித்தலைத் தனக்குக் கடனாக அவள் ஏறட்டுக்கொண்டு கூட்டத்திற்கு உடம்பட்டாளென்று அவற்குக் கூறாமைக்கு என்மெய்யைத் தொட்டுச் சூளுறுவாயாகவென்றாள், எ - று.

வாவென்றது வந்தையெனத் திரிந்தது.

இஃதோ * * * விடு—எ-து, அதுகேட்ட தோழி யான் கூறிய குற்றம் இதுவோ? இனி இது செய்யும்படியைச் சுருங்கக்கேள், நின்னோடு யான் இதனை ஆராயுங்காலத்து நீயும் நாணத்தால் நிலத்தைக் கீறி என்னுடனே வேறுபட்டு நின்றநிலை செய்தற்கு எளிதன்றோ? இந்நிலையைப் பின்னை அவன் தன்னுடனே நின்று பார்த்து நின்னாற்செய்தலரிதன்றோ? என்றாள்; எ - று.

இஃதோவென்றாள் உடம்பட்டாளென்னுமை என் மெய் தொடு என்றதனை. ஒகாரம் இது குற்றமன்றெண மறையுணர்த்திற்று.

இதனாற் தலைவிக்குப் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இஃது எல்லா எவன்செய்வாமெனவும் இஃதோ அடங்கக் ...கௌனவும் வழியசைபுணர்த்த சொற்சீரடிகள் வந்து ஐஞ்சீரடிக் ...ய வெண்பாக்களும்வந்த வெண்கலிப்பாட்டு. (உஎ)

சுசு. அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்கு
மணிமுக மாமழைநின் பின்னொப்பப் பின்னின்கண்
விரிநுண் ணூல் சுற்றிய வீரித ழலரி
யரவுக்கண் ணணியுற ழாரன்மீன் றகையொப்ப
வரும்படர் கண்டாரைச் செய்தாங் கியலும்
விரிந்தொலி கூந்தால் கண்டை யெமக்குப்
பெரும்பொன் படுகுவை பண்டு;

ஏஎ! எல்லா, மொழிவதுகண்டையிஃதொத்தன்றெய்யி
லெழுதி யிறுத்த பெரும்பொன் படுகே
முழுவ துடையமோ யாம்;

உழுதாய்,

சுரும்பிமிர் பூங்கோதை யந்நல்லா யானின்
றிருந்திழை மென்றோ ளிழைத்தமற் றிஃதோ
கரும்பெல்லா நின்னுழ வன்றோ வொருங்கே
துகளறு வாண்முக மொப்ப மலர்ந்த
குவளையு நின்னுழ வன்றோ விகலி
முகைமாறு கொள்ளு மெயிற்று யிவையல்ல
வென்னுழுவாய் நீமற் றினி;

எல்லா, நற்றோ ளிழைத்த கரும்புக்கு நீகூறு
முற்றெழி னீல மலரொன வுற்ற
விரும்பீர் வடியன்ன வுண்கட்கு மெல்லாம் [ள்,
பெரும்பொன்னுண் டென்பா யினி; நல்லா யிகுளேகே

ஈங்கே தலைப்படுவெ னுண்டான் றலைப்பெயின்
வேந்துகொண் டன்ன பல;

ஆங்காக வத்திற மல்லாக்கால் வேங்கைவீ
முற்றெழில் கொண்ட சுணங்கணி பூணுகம்

பொய்த்தொருகா லெம்மை முயங்கினை சென்றீமோ
முத்தேர் முறுவலாய் நீபடும் பொன்னெல்லா
முத்தி யெறிந்து விடற்கு.

இஃது அருமைசெய்தயர்த்த தலைவன் வந்துழித் தலைவி ஏள்ளின இடத்துத் தலைவன் அவளோடு உறழ்ந்துகூறி நகையாடிக் கூட்டத்திற்கு உடம்படுவித்தது. இதற்கு விதி *"உயர்மொழிக் குரிய வுறழுங் கிளவி" என்பதனுட் தலைவன் உயர்மொழிக்குத் தலைவி உறழ்ந்து கூறுமென்றும்.

(இ - ள்.) அணிமுக * * * பண்டு—எ-து, நினது அழகினையுடைய முகம் மதியையொப்ப, மணிகள் விளங்கும் நின் பின்னின் மயிர் முகத்துக்கொப்பாகிய மதியை மிகவும் பொருந்துங் கருமையையுடைய மழையையொப்ப, அப்பின்னின் மயிர்க்கண்ணே கிடந்து அலர்ந்த நுண்ணிய நூலாற் கட்டின தேறல் ஈரமான இதழையுடைய பூக்கள் பின்னுக்கொப்பாகிய கரும்பாம்பிடத்தே கிடந்து அதன் கரியநிறத்தோடே மாறுபடுகின்ற கார்த்திகையென்னும் மீனினது அழகையொப்ப, மனத்தான் ஒப்புக்கண்டவர்களை அவ்விடத்தே அரிய வருத்தத்தைச்செய்து போகின்ற பரந்து தழைத்த கூந்தலையுடையாய்! நீ என்னை எள்ளும் நிலைமையைக் கைவிட்டு யான் கூறுகின்றதனை மனத்தான் ஆராய்ந்துபார்; நீ பண்டு எம் பொருட்டுப் பெரிய பொன்னுண்டாவை; எ - று.

இது முன் நீ இடைவிடாமற் கூடிய கூட்டத்தாற் தோற்றப் பொலிவு எய்தினையெனக் கூறி ஈண்டு நிகழ்ந்த அருமைசெய்தயர்த்ததனாற் பிறந்த வருத்தத்தை நீக்கிற்றும். அஃது எமக்கு நீ பெரிய பொன்கடவையென்பதோர் நகைப்பொருளுந் தோன்ற நின்றது.

அலரி பூவென்னும் மாத்திரையாய் நின்றது. ஒப்பவென்னுஞ் செயவென்னெச்ச உவமவுருபுகள் கண்டாரென்னுந் தொழிற் பெயரிற் றொழிலொடுமுடிந்தன.

ஏஎ எல்லா * * * யாம்—எ-து, இவனொருத்தன் தன்னாற் தோற்றப்பொலிவு எய்தினேமெனக் கூறுகின்ற கூற்றைப் பாராயென நெஞ்சொடு கூறி, நீ என் தோண்மேற் றொய்யிலெழுதிக் கனவு போல ஒரோருகாற் றங்கின நிலையாலுண்டான தோற்றப் பொலிவு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல் ௪௪-ம் சூத்.

உண்டாவேம்; அதுவன்றி எம்முலையால் நின் மார்பிடத்து இடைவிடாது உழுத நல்வினையை உடையேமோ? அஃதின்றே; எ - று.

ஏஎ இகழ்ச்சிக்குறிப்பு.

இதனாற் றொய்யிலெழுதி முடித்ததனால் உண்டான பொன்கடவேம், அதுவன்றி நின்கீழ் உழுத நிலைமையையுடையேமோவென ஒரு நகைக்குறிப்புத் தோன்றநின்றது.

உழுதாய் * * * றினி—எ-து, சுரும்புகள் ஒலிக்கின்ற பூவாற்செய்த கோதையினையுடைய அழகினையுடைய நல்லாய்! நீ உழுதாய்; பின்னை இக்களவொழுக்கத்திலும் இந்தத் திருந்தின இழையையுடைய மென்றோளிலே யான் எழுதின கரும்பின் தோற்றப் பொலிவெல்லாம் நின் முலைகள் இடைவிடாமற் புணர்ந்ததனாலுண்டான பயனல்லவோ? அதனோடேகூடப் பழுதறுகின்ற ஒளியினையுடைய முகமானது குவளையோடு இகலிப் புணர்ச்சிதோறும் பொலிவு பெறும்படி பூத்த கண்களின் தோற்றப்பொலிவு நீ இடைவிடாமற் புணர்ந்ததனாலுள்ள பயனல்லவோ? முல்லைமுகையோடு மாறுபாடு கொள்ளும் எயிற்றினையுடையாய்! இத் தோற்றப் பொலிவுகளன்றி வேறே தோற்றப்பொலிவுண்டாக நீ புணர்வாயென்றான்; எ-று.

என்றதனால் நின்கருத்து இடைவிடாது முயங்குதலேயாயின் இனி நீ இடைவிடாமல் முயங்கினைகாணென்றான். அதன் பயன் இனி வரைவேனென்றதாம். இதனால் நீ என்கீழ் உழுதாயென நகைக்குறிப்புத்தோன்றநின்றது. மற்று வினைமாற்று. குவளையென்றது கண்ணை.

இதனால் அருமைசெய்தயர்த்ததுமில்லையென்றான். இதனால் நீ கரும்புங் குவளையுமன்றி வேறு என்னுழுவாயென ஒரு நகைக்குறிப்புத் தோன்றநின்றது.

எல்லா * * * யினி—எ-து, அதுகேட்ட தலைவி எடா! என் அவயவங்களிற் தோற்றப்பொலிவு உண்டாகக் கூறாமல் என்தோள்களில் நீ எழுதப்பட்ட கரும்பிற்குத் தோற்றப்பொலிவுண்டென்று நீ கூறுவதற்கு இயைந்தேன்; இனி அலர்ந்த செவ்வி குலைந்து முற்றின அழகையுடைய நீலமலரொன்று பிறர் கூறும்படியாக வருத்தமுற்ற இரும்பு ஈர்வடியன்ன உண்கட்கும் மற்றுமுள்ள எல்லா உறுப்புக்கட்கும் பெரிய பசப்புண்டென்று சொல்லுவாயாக; எ - று.

இதனால் அவன் அருமைசெய்தயர்த்திலேனென்றதற்கு அக்காலமெல்லாம் யான் வருத்தமுற்றேனென்றாளாயிற்று. கரும்பு அவ

யவமன்றி எழுதப்பட்டதாகலிற் தோற்றப்பொலிவு உண்டென்றாள். கூட்டத்தாற் பொலிவுபெறாது இளமைப்பருவத்தும் இரும்பு ஈர்ந்த வடிவெகிளையொத்து ஈருதலுளதாகலின் இரும்பீர்வடியன்னவுண்கட்குமென்றாள். இது கண்ணென்னும் பெயர்மாத்திரையாய் நின்றது. இதனால் அவன் அருமைசெய்தயர்த்திலேனென்று நன்றாகக் கூறிய பொன்னிறத்தைப் பசப்பாக்கி அக்காலமெல்லாந் தான் வருந்தும்படி தன் நலத்தை இவன்கொண்டமை கூறினாளாயிற்று.

நல்லாய் * * * பல—எ-து, அதுகேட்ட தலைவன் நல்லாய்! இருளையே! யான்கூறுகின்றதனைக் கேள், அரசனைச் சேர்ந்து அவன் செல்வத்தை நுகர்ந்தானொருவன் அவன்வயத்தனாய்நின்று காரியத்தாற் தலைமைப்பாடு எய்துவனாயின், அவ்வேந்தன் அவனாலுள்ள பயனைக்கொண்டாற் போன்ற பலபயனையும் யான் இவ்விடத்தே எய்துவேனென்றான்; எ-று.

என்றது கூட்டத்தாற் செயற்கைநலம்பெற்ற நின்னை வளைந்து கொண்டு நின்றாற் பெறும் பயனெல்லாங் கொள்வேனென்றதாம். இனி அரசனுடைய பொருளை நுகர்ந்தவன் எதிர்ப்படில் அவ்வரசன் அவனிடத்து வருத்தமுறுத்திக்கொண்டாற்போன்ற பலபயன்களையும் யானும் இங்கே கொள்வேனென ஒரு நகைக்குறிப்புத்தோன்றநின்றது.

ஆங்காக—எ-து, அதுகேட்ட தலைவி நீ அருமைசெய்தயர்த்ததனைப் பொய்யாக்கி அன்பின்றி நின்றதன்மை நீங்கி எம்மிடத்து அன்புடையையான காலத்து நீ கூறியவாறே ஆவதாகவென உடம்பட்டுக்கூறினாள்; எ-று.

அத்திற * * * விடற்கு—எ-து, அதுகேட்ட தலைவன் நீ இங்ஙனம் வெறுத்துக் கூறிய கூறுபாடு நீங்கியகாலத்து, முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நீ முன்பு உற்ற பசப்பெல்லாம் இனி ஒருகாலமும் உறாதபடி கழித்துவிடுதற்கு வேங்கைப்பூவினது முற்றின அழகைக்கொண்ட சுணங்கணிந்த பூணினையுடைய ஆகத்தாலே பொய்த்தாகிலும் ஒருகால் முயங்கினையாய்ச் செல்வாயென்றான்; எ-று.

பொன்னெல்லாம் உத்தியெறிந்துவிடவென்றதனால் வளைவேனென்றான். இதனால் நீ கடவ பொன்னெல்லாம் பெற்றேனென்று கழித்துவிடுவேனென ஒரு நகைக்குறிப்புத் தோன்றநின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது தரவும் ஐஞ்சீரடுக்கித் தளைவிரவின குறுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டும் வழியசைபுணர்த்த சொற்சீரடியுங் குறுவெண்பாட்டும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கலிவெண்பாட்டு. இதனுள் நிரையீற்றியற் சீர்ப்பின்னர் நிரைமுதல்வெண்சீரும் நேர்முதல்வெண்சீரும் வருதலின் அணிமுக மதியேய்ப்ப வம்மதியை நனியேய்க்குமென்பது கட்டளை யன்றாயிற்று. *"நிரைமுதல் வெண்சீர் வந்து நிரைதட்பினும் - வரைநிலை யின்றே யவ்வடிக் கென்ப" என்பதனால் உணர்க. (உ அ)

சுரு. திருந்திழாய் கேளாய்நம் மூர்க்கெல்லாஞ் சாலும்
பெருநகை யல்க னிகழ்ந்த தொருநிலையே
மன்பதை யெல்லா மடிந்த விருங்கங்கு
லந்துகிற் போர்வை யணிபெறத் தைஇநம்
மின்சாயன் மார்பன் குறிநின்றேன் யானாகத்
தீரத் தறைந்த தலையுந்தன் கம்பலுங்
காரக் குறைந்து கறைப்பட்டு வந்துநஞ்
சேரியிற் போகா முடமுதிர் பார்ப்பானைத்
தோழிநீ போற்றுதி யென்றி யவனாங்கே
பாராக் குறழாப் பணியாப் பொழுதன்றி
யாரிவ ணின்றி யெனக்கூறிப் பையென
வைகாண் முதுபகட்டிற் பக்கத்திற் போகாது
தையா றம்பலந் தின்றியோ வென்றுதன்
பைக்கழித்துக் கொண்டீ யெனத்தரலும் யாதொன்றும்
வாய்வாளே னிற்பக் கடிதகன்று கைமாறிக்
கைப்படுக்கப் பட்டாய் சிறுமிநீ மற்றியா
னேனைப் பிசாசரு ளென்னை நலிதரி
னிவ்வூர்ப் பலிநீ பெறுமற்கொள் வேனெனப்
பலவுந் தாங்காது வாய்பாடி நிற்ப
முதுபார்ப்பா னஞ்சின னாத லறிந்தியா
னெஞ்சா தொருகை மணற்கொண்டு மேற்றூவக்
கண்டே கடிதரற்றிப் பூசவிறோடங் கினனாங்கே
யொடுங்கா வயத்திற் கொடுங்கேழ்க் கடுங்க

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சுOம் சூத்.

ணிரும்புலி கொண்மார் நிறுத்த வலையுளோ
ரேதில் குறுநரி பட்டற்றாற் காதலன்
காட்சி யழுங்க நம்மூர்க் கெலாஅ
மாகுல மாகி விளைந்ததை யென்றுந்தன்
வாழ்க்கை யதுவாகக் கொண்ட முதுபார்ப்பான்
வீழ்க்கைப் பெருங்கருங் கூத்து.

இஃது இரவுக்குறி அலராமென்றஞ்சித் தலைவனை நீக்கி நிறுத்தக் கருதிய தோழி *"அல்லகுறிப் படுதலு மவள்வயி னுரித்தே - யவன்குறி மயங்கிய வமைவொடு வரினே" என்னுஞ் சூத்திரத்தான் அல்லகுறிப்படுதல் தனக்கும் உரித்தாகலின், அவன்செய்த குறிப்பறிதற்குப் புறத்துச் சென்றவழி, ஆண்டுப் பிறந்ததோர் செய்தியாக ஒரு பொய்யை நாடகவழக்கும் உலகியல்வழக்குமாகப் புனைந்துரைவகையாற் படைத்துக்கொண்டு, பிற்றைஞான்று தலைவன் சிறைப்புறமாகத் தலைவிக்குக் கூறியது. இதனை †"இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி - நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும் - வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும் - நல்வகை யுடைய நலத்திற் கூறியும் - பல்வகை யானும் படைக்கவும் பெறுமே" என வழுவமைத்தவாற்றாற் கொள்க.

(இ - ள்.) திருந்தின இழையினையுடையாய்! தன்னுடைய மயிர்நீங்குதலாற் றட்டையான தலையினையும் படாத்தினையுமுடையனாய்க் கருங்குட்டத்தாலே காலுங் கையுங் குறைந்து கட்டமைத்துறைப்பட்டு வந்து நந் தெருவினின்றும் போகாமல் ஒளித்துத்திரியும் முடமாகிய முதிர்ந்த பார்ப்பானைத் தோழி நீ பேணுவாயாகவென்று பலகாலுங் கூறுவை; அதனைப் பேணாதே உயிர்ப்பன்மைகளெல்லாஞ் சேரத் துயில்கொண்ட கங்குலிலே அழகிய துகிலாற் போர்த்த போர்வையை வாங்கி அழகுபெற உடுத்து நம்முடைய மென்மையிணிய மார்பையுடையவன் செய்யுங் குறியை உற்றுநின்றேனாக அப்பார்ப்பானாலே இராக்காலத்தே பெரிய நகைநிகழ்ந்தது; அந்நகை ஊர்க்கெல்லாங் கொண்டாடுதற்கு அமைந்திருக்கும்; அது நிகழ்ந்தபடியைக் கேளாய், அவன் அவ்விடத்தே குனிந்துபார்த்து மகளிர் நிற்குங் காலம் அன்றாக இவ்விடத்து நின்ற நீ யாரொன்று முற்படக்கூறிச் சிறியவளே நீ என்னாலே அகப்படுத்திக்கொள்ளப்பட்டாயென்று கூறிப் பையெனப் பணிந்து வைக்கோலைக் கண்ட முதிய எ

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், சஉ-ம் சூத்.
† ,, ,, பொருளியல், சங-ம் ,,

ருதுபோலே என்பக்கத்தினின்றும் போகாதே நின்று நையால் தம்பலந் தின்பாயென்று தன் பாக்கிடும்பையைக் குலைத்து நீ எடுத்துக்கொள்ளென்று தந்த அளவிலே யான் அங்கு ஒருவார்த்தையும் வாய்திறந்து சொல்லேனாய் நிற்கையினாலே, அஞ்சி முன்புகொண்டுநின்ற ஒழுக்கத்தைக் கைவிட்டுக் கடிதாக நீங்கிப், பின்னை யான் பெண்பாற் பசாசாகிய நின்னையொழிந்த ஆண்பாற் பசாசு, எனக்கு அருள், அங்ஙனம் அருளாது என்னை வருத்துதலைச் செய்வையாயின் இவ்வூரில் நீ பெறும் பலியை நீ பெறாமல் யான் எடுத்துக்கொள்வேனென்று பல் வார்த்தைகளையும் பேணாமல் வாயாற் சொல்லிநிற்க, முதியபார்ப்பான் என்னைப் பெண்பசாசென்று கருதி அஞ்சினானாதலை யான் அறிந்து ஒருகையாலே மணலை அள்ளிக்கொண்டு ஒழியாது அவன்மேலே தூவக்கண்டு அவ்விடத்தேநின்று கடிதாகக் கதறி ஊர்க்கெல்லாங் கேட்பக் கூப்பிடத் தொடங்கினான்; எந்நாளுந் தன் தொழில் அவ்வாறு தனிநிற்கும் மகளிரைக்கண்டாற் தன் காமவேட்கையால் மேல்விழுதலாகக்கொண்ட முதியபார்ப்பானுடைய விரும்புதலையுடைய் பெரிய தண்ணிய நாட்சம் நங் காதலர் நம்மைக் குறியிடத்து வந்து காணுங் காட்சி நெடும்படியாக நமக்கு வருத்தமாய் விளைந்தது; இது விளைந்தபடி ஒன்றற்குங் கெடாத வலியினையும் வளைந்த வரியினையுந் தறுகண்மையினையுமுடைய புலியாலுள்ள பயனைக் கொள்ளுதற்கு நிறுத்தின வலையிலே அதன் தொழிற்கு வேறாகியதோர் குறுநரி அகப்பட்ட தன்மைத்தாயிற்று; ஆதலால் இனி இரவிற் குறிநிகழ்ச்சியின்றுபோலுமென்றாள்; எ - று.

வீழ்க்கை வாழ்க்கைபோல் நின்றது. காரக்குறைந்த அக்குச்சாரியை. குறழாப் பாராவென்க.

வைகாண் முதுபகடெனவே காம இன்பம் நுகர்தலாற்றாமை காட்டிநின்றது. எனைப்பிசாசெனவே அவள் பெண்பாற்பசாசுந் தான் ஆண்பாற்பசாசுமென்பது உணர்த்திற்று. அருளெனப் பிரிக்க. ஆங்கே கடிதரற்றி நம்மூர்க்கெலாம் பூசலிறுட்ங்கினனென மாறுக. தம்பலம், தாம்பூலமெனும் வடமொழித்திரிவு. தின்றியோ, ஓகாரம்அசை.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒருபொருணுதலாது அடியிகந்து தளைவிரவி வந்த கலிவெண்பாட்டு. (உக)

குறிஞ்சிக்கலி முற்றும்.

## மூன்றாவது மருதக்கலி.

சூசு. வீங்குநீர் வீழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந் தூர்புகுந்த வரிவண்
டோங்குய ரெழில்யானைக் கனைகடாங் கமழ்நாற்ற
மாங்கவை விருந்தாற்றப் பகலல்கிக் கங்குலான்
வீங்கிறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினு ளரும்பவிழ் நறுமுல்லைப்
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதா மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர;

அணைமென்றோள் யாம்வாட வமர்துணைப் புணர்ந்துநீ
மணமனையா யெனவந்த மல்லலின் மாண்பன்றோ
பொதுக்கொண்ட கவ்வையுட் பூவணிப் பொலிந்தநின்
வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை;

கனலுநோய்த் தலையுநீ கனங்குழை யவரொடு
புனலுளா யெனவந்த பூசலிற் பெரிதன்றோ
தார்கொண்டா டலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
னீரணி சிதையாதெம் மில்வந்து நின்றதை;

தணந்ததன் றலையுநீ தளரிய லவரொடு
துணங்கையா யெனவந்த கவ்வையிற் கடப்பன்றோ
வொளிபூத்த நுதலாரோ டோரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தவிக் கவின்காண வியைந்ததை;

எனவாங்கு,

அளிபெற்றே மெம்மைநீ யருளினை விளியாது
வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனு
நீட்டித்தா யென்று கடாங்கடுந் திண்டேர்
பூட்டு விடாஅ நிறுத்து.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் றனது ஆற்றுமை
யே வாயிலாகத் தலைவியுழைச் சென்றாற்கு, அவன் முன்பு வதுவை

யயர்ந்ததூஉம் அப்பொழுது புனலாடியதூஉம் இப்பொழுது துணங்கையாடியதூஉங் கூறிப் புலந்தாள் தலைவி, அவள் புலந்தவாறுகண்டு சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

(இ-ள்.) வீங்குநீர் * * * நல்லூர—எ-து, பெருகுகின்ற நீரில் வீழ்ந்த கருங்குவளையைக் கொண்டுவந்து விற்பார் வயலிடத்தே பறித்துக்கொண்டவை சுமத்தலிற் தலையிடத்தனவாகிய மலரைச் சூழ்தலைச்செய்து ஊரிடத்தே புகுந்த பாட்டினையுடைய வண்டுக்குத் தம் உடலிலக்கணங்கள் ஓங்குஞ் சிறந்த அழகினையுடைத்தாகிய யானையினுடைய நாறுகின்ற நாற்றத்தையுடைய செறிந்த மதத்தை அம்மதத்தில் முன் படிந்திருந்த வண்டுகள் விருந்துசெய்ய அப்பூவொடு வந்த வண்டுகள் பகற்பொழுதெல்லாந் தங்கிக் கங்குலிடத்து வீங்கின இறையிற்கிடந்த தொடியாலே தங் கணவர் மேனி வடுக்கொள்ளும்படியாகத் தாம் விரும்பின கணவரைக் கூடின மகளிருடைய தேன் நாறுகின்ற மயிரினுள்ளே கிடந்து அரும்பாந்தன்மை முற்றி விரிந்த நறிதாகிய முல்லைகளைப் பாய்ந்து நுகர்ந்து வேறுசில பூக்களை நுகரவேண்டுமென்னும் நினைவின்றிப் பண்டு தாம் விரும்பின பூக்களையுடைய பொய்கையை மறந்து அதனை ஒரு காலத்தும் நினையாத புனல் அணிந்த நல்ல ஊரனே; எ-று.

கடாம், மதம்படுதுளை; ஆகுபெயர். வீங்கிறை, பிரிந்து வருந்தாமையின் மெலியாவிறை.

வீங்குநீர் பரத்தையர்சேரியாகவும், அதன்கண் வீழ்ந்த நீலங் காமச்செவ்வி நிகழ்ந்த பரத்தையராகவும், பகர்பவர் பரத்தையரைத் தேரோற்றிக்கொண்டுவரும் பாணர்முதலிய வாயில்களாகவும், அம்மலரைச் சூழ்ந்த வண்டு தலைவனாகவும், யானையின் கடாத்தை ஆண்டுறைந்த வண்டுகள் வந்த வண்டிற்கு விருந்தாற்றுதல் பகற்பொழுது புணர்கின்ற சேரிப்பரத்தையர் தமது நலத்தை அத்தலைவனை நுகர்வித்தலாகவுங், கங்குலில் வண்டு முல்லையை ஊதுதல் இற்பரத்தையருடன் இரவுதுயிலுதலாகவும், பண்டு மருவிய பொய்கையை மறத்தல் தலைவியை மறத்தலாகவும் பொருள் தந்து ஆண்டுப் புலப்படக்கூறிய கருப்பொருள்கள் புலப்படக்கூறாத மருதத்திணைப்பொருட்கு உள்ளுறையுவமமாயவாறு காண்க. இது *"கிழவோட்குவமமீரிடத்துரித்தே" என்பதனான் மருதத்துக்கண் உவமப்போலி கூறியது.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், உகூ-ம் சூத்.

இது சீர்வகைக்கலியாகலின் வரிவண் டோங்குயரொண் ணே ரீற்றியற்சீரும் வந்தது.

அணைமென்றோள் * * * பெற்றதை—எ-து, ஆரவாரத் தாற் பொலிவுபெற்ற சிறப்பில்லாமையைக்கொண்ட பரத்தையளைப் பூப்பேசிக் கொள்கின்ற கலியாணத்திலுண்டான நின்னுடைய அழகினையுடைய நாறுகின்ற மணத்தினை விடியற்காலத்தே யாங்கள் பெற்றது யாம் அணைபோலும் மெல்லியதோள் மெலியும்படியாக நின் நெஞ்சிற்கு அமர்ந்த பரத்தையளைக் கூடி மணமனையிடத்தா யென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான வளப்பத்திலும் மாட்சிமையுடையதொன்றன்றோ? எ - று.

கௌவையுட் பொலிந்த பொதுக்கொண்ட பூவணி வதுவையென மாறுக.

மருதத்திற்குச் சிறுபொழுது வைகறையென்பது தோன்ற 'வைகறைப்பெற்றதை' என்றாள்.

கனலுநோய்த் * * * நின்றதை—எ-து, நின் மார்பின் மாலையை வாங்கிக்கொண்டவளுடைய நெற்றிக்கட்டை வைகறையிலே வருதலின் மனந்தடுமாறிப் பூண்ட இரண்டு அணியுங் கெடாமல் எம் இல்லிடத்தே வந்துநின்றது எம் மேனி கனலுதற்குக் காரணமான காமநோய்க்கு மேலேயும் நீ பொன்னாற்செய்த மகரக்குழையையுடைய பரத்தையருடனே புனலிடத்தே விளையாடுகின்றாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் பெரியதொன்றன்றோ? எ - று.

ஆடவர்கோலமும் மகளிர்கோலமுங் கொண்டு வந்துநிற்றலின் இரண்டணியென்றாள்.

தணந்ததன் * * * வியைந்ததை—எ-து, ஒளிபொலிவுபெற்ற நுதலினையுடையாரோடே கூடுதலானுண்டான பூணின் வடுக்கிடத்தலின் அவர்க்கும் நினக்கும் ஓரணியாகப் பொலிவுபெற்ற நின் செருக்குப் பிறர்பாற் செல்லாமல் அமைதி பிறப்பித்துத் தடுக்கையினாலே வந்த இவ்வழகை யாங்கள் காணும்படி பொருந்தினது நீ எங்களைப் பிரிந்த இதற்குமேலேயும் நின்னைப் பெறாது தளர்ந்த இயல்பினையுடையாரோடே துணங்கைக்கூத்தாடினாயென்று பிறர்சொல்ல நினக்கு உண்டான ஆரவாரத்திலும் மிகுதியானதொன்றன்றோ? எ - று.

எனவாங்கு—எ-து, என்று யாங்கள் காணும்படியாக; எ-று.

ஆங்கு, அசை.

அளிபெற்றே * * * நிறுத்து—எ-து, நீ ஈண்டு வருதலாலே நினது அளியைப்பெற்றேம்; நீயும் எம்மை அருளினை; இதுவே அமையும்; இனி நீ விரும்பியோர்திறத்தே நீ செல்லுதலை விரும்பிய நின்பாகனும் பூட்டுதலைவிடாத கடிய திண்ணிய தேரை நீ இவ்விடத்தே தாழ்த்தாயென்று கருதி அது நிற்கும் நிலையிலே செலுத்துவதற்கு முன்னே சென்று அப்பரத்தையர் அன்பு கெடாமல் அவ்வன்பை நிறுத்துவாயாக; எ - று.

விளியாது நிறுத்து எனக் கூட்டுக.

இதனல் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (௬)

௬௭. கார்முற்றி யிணரூழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்பெய்தி யிருநிலந்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
னீர்முற்றி மதில்பொரூஉம் பகையல்லா னேரார்தார்
போர்முற்றொன் றறியாத புரிசைசூழ் புனலூரன்;

நலத்தகை யெழிலுண்க ணல்லார்தங் கோதையா
லலைத்தபுண் வடுக்காட்டி யன்பின்றி வரினெல்லா
புலப்பேன்யா னென்பெண்ம னங்நிலையே யவற்காணிற்
கலப்பே னென்னுமிக் கையறு நெஞ்சே;

கோடெழிற் பிறைநுதற் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடழி சாந்தினன் பண்பின்றி வரினெல்லா
வூடுவே னென்பெண்ம னங்நிலையே யவற்காணிற்
கூடுவே னென்னுமிக் கொள்கையி னெஞ்சே;

இனிப்புணர்ந்த வெழினல்லா ரிலங்கெயி றுறூஉவி
னனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரினெல்லா
துனிப்பேன்யா னென்பெண்ம னங்நிலையெ யவற்காணிற்
றனித்தே தாழு மித்தனி நெஞ்சே;

எனவாங்கு,

பிறைபுரை யேர்நுதா லுறுமெண்ணி யவையெல்லாந்
துறைபோத லொல்லுமோ தூவாகா தாங்கே
யறைபோகு நெஞ்சுடை யார்க்கு.

இது வாயின்மறுத்த தலைமகள் ஆற்றாமைவாயிலாகப் புக்குக் கூடிய தலைமகனது நீக்கத்துக்கட் புக்க தோழிக்குக் கூறியது.

(இ - ள்.) கார்முற்றி * * * புனலூரன்—எ-து, கார்காலம் முதிர்கையினாலே பூங்கொத்துக்கள் அலர்ந்த கமழ்கின்ற இதழ்களையுடையனவாகிய மலர்களைச் சூடித் தலைமைமுதிர்ந்து புலவர் வாயிற் கவிகளைத் தான்பெற்று, ஊரைச் சூழ்ந்து வருதலிற் பெரிய நிலமடந்தைதான் ஒரு பூமாலையைச் சூழ்ந்துகொண்டிருந்த தன்மைபோல அழகு பொலிவுபெற்ற வையையாற்றினது நீர் சூழ்ந்து மதிலைப்பொரும் பகையன்றிப் பகைவர் போரால் வளைத்தலைச் சிறிதும் அறியாத புரிசை சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையையுடையவன்; எ - று.

புனலூரனென்றது பாண்டியனையாதலிற் பாட்டுடைத்தலைவனை கிளவித்தலைவனுக்கக்கூறிய அகப்புறமாயிற்று. இதற்கு விதி *"காமப் பகுதி கடவுளும் வரையா - ரேனோர் பாங்கினு மென்மனார் புலவர்" என்பதனுள் 'ஏனோர்பாங்கினும்' என்பதனாற் கூறினும்.

நலத்தகை * * * நெஞ்சே—எ-து, எடீ! எழிலையுடையவாகிய மையுண்கண்ணினையுடைய பரத்தையர்தங் கோதைகளாலே அடித்த நலத்தினையுடைய அழகினையும் நகத்தாலும் எயிற்றாலும் அலைத்த புண்களையும் பூண்கள் பொறித்த வடுக்களையுங் காட்டி என்னிடத்து அன்பின்றி வருவானாயின் யான் புலப்பேனென்றிருப்பேன், அதனாற் பெற்றதென்? இச்செயலற்ற நெஞ்சு அவனைக் கா ணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே யான் கூடுவேனென்று கூறாநிற்கும்; எ - று.

கோடெழிற் * * * னெஞ்சே—எ-து, எடீ! வளைந்த இளம்பிறையொத்த நுதலையுடைய கொடியையொக்கும் பரத்தையர் முலைகள் அழுந்திப் பூசின பாடழிந்த சந்தனத்தையுடையனாய் நன்மக்கள்குணமின்றி வருவனாயின் ஊடியிருப்பேனென்று கூறுவேன்,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், ௨அ-ம் சூத்.

அதனாற் பெற்றதென் ? யான் கூறியதனைக் கொள்ளுதலில்லாத இந்நெஞ்சு அவனைக் காணில் அத்தவறுகளோடுகூடிய அந்நிலைதன்னிலே யான்கூடுவேனென்று கூறாநிற்கும் ; எ - று.

இனிப்புணர்ந்த * * * நெஞ்சே—எ-து, எடீ! இப்பொழுது புதிதாகக் கூடிய அழகினையுடைய பரத்தையருடைய விளங்குகின்ற எயிறுகள் அழுந்துகையினாலே மிகுதியையுடைத்தாய்ச் சிவந்த வடுக்களைக் காட்டி நாணமின்றியே வரிற் துனித்திருப்பேன் யான் என்று கூறுவேன், அதனாற் பெற்றதென் ? இத்தனிமையான மனத்தைத் தனக்கு உரித்தாக்குதலில்லாத நெஞ்சு அவனைக்காணில் அத்தவறுகளோடு கூடிய அந்நிலைதன்னிலே என்னை நீக்கித் தான் அவனிடத்தே தாழும் ; எ - று.

உறாஅல் விகாரம்.

இத்தாழிசை மூன்றும் மறுத்துரைப்பதுபோல் உவகைபற்றிக் கூறியன. *"உடம்பு முயிரும் வாடியக் காலு - மென்னுற் றனகொ லிவையெனி னல்லது - கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை" என்பதனால் இந்நெஞ்சிற்குத் தன்றன்மையென்பதொன்றின்றியது என்னென்றவாறுகாண்க.

எனவாங்கு—எ-து, என்று ; எ - று. ஆங்கு, அசை.

பிறைபுரை * * * யார்க்கு—எ-து, பிறையையொத்த அழகிய நுதலினையுடையாய்! தமக்கு வலியாகாதே அவனிடத்தே கீழ் அற்றுச் செல்லும் நெஞ்சினையுடைய மகளிர்க்குத் தாம் நினைத்தவையெல்லாம் முடிவுபோதல் பொருந்துமோ ? பொருந்ாதன்றே! என்றாள் ; எ - று.

இதனாற் தலைவிக்கு இளிவுபிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தால் இற்ற ஒத்தாழிசைக்கலி. (உ)

௬அ. பொதுமொழி பிறர்க்கின்றி முழுதாளுஞ் செல்வ
மதிமொழி யிடன்மாலை வினைவர்போல் வல்லவர் [ர்க்கு
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர ;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௬ம் சூத்.

ஊரன்மன் னுரனல்ல னமக்கென்ன வுடன்வாரா
தோரூர்தொக் கிருந்தநின் பெண்டிரு ணேராகிக்
களையாநின் குறிவந்தெங் கதவஞ்சேர்ந் தசைத்தகை
வளையின்வாய் விடன்மாலை மகளிரை நோவேமோ
கேளல னமக்கவன் குறுகன்மி னெனமற்றெந்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

ஊடியார் நலந்தேம்ப வொடியெறிந் தவர்வயின்
மாறீர்க்கு மவன்மார்பென் றெழுந்தசொன் னோவேமோ
முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் றாரெள்ள
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;

சேரியாற் சென்றுநீ சேர்ந்தவில் வினையினன்
றேறெரோடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ
வொலிகொண்ட சும்மையான் மணமனை குறித்தெம்மிற்
பொலிகெனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்;

எனவாங்கு,

நனவினுன் வேறாகும் வேளா முயக்க
மனைவரிற் பெற்றுவந்து மற்றெந்தோள் வாட
வினைய ரெனவுணர்ந்தா ரென்றேக்கற் றாங்குக்
கனவினு னெய்திய செல்வத் தனையதே
யைய வெமக்குநின் மார்பு.

இது பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தி தன்காதன்மிகுதி கூறி ஊடியவாறு கண்டு சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

(இ - ள்.) பொதுமொழி * * * புனலூர—எ-து, பிறர்க்கும் இம் மண்ணுலகம் பொதுவென்னும் மொழி இன்றாக மண்ணுலகம் முழுதையும் ஆளுஞ் சக்கிரவர்த்திகளுக்கு அறிவாகிய சொல்லைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அமைச்சனைப்போல, நூல்வல்ல ஆசிரியராலே பொல்லாவாகிய சொற்கள் இடையிற் புகுதாமற் போக்கப்பட்ட தஞ் செவிகள் செய்யாக, முன்னுள்ள சான்றோர் கூறிய செய்யுட்கள் தஞ் சொல்லை வளர்க்கும் நீராக, அறிவினையுடைய நா

வாகிய ஏராலே உழுது உண்ணும் புலவருடைய புதிய கவிகளைக் கொள்ளைகொண்டு உண்ணும் மதில் சூழ்ந்த புனலையுடைத்தாகிய மதுரையையுடையவனே; எ - று.

இதுவும் பாட்டுடைத்தலைவனைக் கிளவித்தலைவனாகக் கூறியது.

ஊரன்மன் * * * நெஞ்சத்தேம்—எ-து, நமக்கு ஊரன் மிகவும் பற்றுக்கோடல்லனெனச் சொல்லிப் பின்னர் ஒருவர்கூறியது ஒருவர்கூறாதே ஓரூர் குடியேற்றவேண்டுவாராய்த் திரண்டிருந்த நின் சேரிப்பரத்தையருடனே யாங்களும் ஒப்பாகி, நமக்கிவன் உறவல்லன் அவனை முயங்காதேகொள்ளுங்கோளெனச் சொல்ல, முயங்கக் கருதின எங் தோள்களுடனே மாறுபட்டுப் பின்னை முயங்கக் கருதின நினைவு கெடுகின்ற நெஞ்சத்தினையுடைய யாங்கள் நின் பெண்டிருள் நேராகி ஊரன் உரனல்லனென்ற வார்த்தையைக் கேட்டு நின்குறியிடத்தே வந்து ஆண்டுக் காணாமையின் எம்மிடத்தே வந்தாயென்று கருதி எங் கதவத்தைச் சேர்ந்து தட்டின கையின் வளையினாலே தம் வரவினைச் சொல்லுதலை இயல்பாகவுடைய அப்பரத்தையளா கோவேமோ? அதற்கு யாங்கள் உரியேமல்லேமே; எ-று.

இது * "வண்ணம் பசந்து புலம்புறு காலை - யுணர்ந்த போல வுறுப்பினைக் கிழவி - புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே" என்பதனான் உறுப்பினை உணர்வுடையதுபோற் கூறிற்று.

ஊடியார் * * * கோதையேம்—எ-து, முகையின்றன்மை வாய்த்த முலைகள் முயங்குகையினாலே செவ்வி குலைந்த நினது மாலை எம்மை இகழ்ந்துகூறக், கூறுபாட்டினையுடைத்தாகிய வரியினையுடைய பூச்செப்பிலே பயன்படாது தங்கிய மாலைத்தன்மையையுடைய யாங்கள் இற்பரத்தையர் ஊடின் மகளிர் ஊடலைத்தீர்த்து முயங்காதே அவர்கள் நலங்கெடும்படி அவளை இடையன்கொன்ற மரமாக்கிவைத்து அச்சேரிப் பரத்தையரிடத்து வேட்கையைத் தீர்க்குமவனுடைய மார்பென்று ஊரிற்பிறந்த சொல்லை நோவேமோ; அதற்கு யாங்கள் உரியேமல்லேமே; எ - று.

ஓடியவெறிந்தென்பது, ஒடியெறிந்தெனவிகாரமாயிற்று.

சேரியாற் * * * கண்டயாம்—எ-து, ஆரவாரத்தை மாறாமற் தன்னிடத்தேகொண்ட ஆரவாரத்தாலே நீ மணஞ்செய்கின்ற

* தொல்காப்பியம், பொருளதிகாரம் பொருளியல், அ-ம் சூத்.

மனையாகக் கருதி எம்முடைய மனையிலே பொலிக பொலிகவென்று கூறிப் புகுந்த நின்னுடைய புலைத்தொழிலையுடைய பாணனைக் கண்ட யாங்கள் சேரிதோறுஞ் சென்று நீ சேர்ந்த இல்லை வினையினுய்த் தேரோடே கூடத் திரிதலைச்செய்யும் பாகனைக் குறைகூறுவேமோ? அதற்கு யாங்கள் உரியேமல்லேமே; எ - று.

சேரியான் என்றது "ஊரான் ஓர் தேவகுலம்"என்றாற்போல் நின்றது. சும்மையை ஒலி விசேடித்து நின்றது. புலையன் செற்றச் சொல்.

எனவாங்கு, அசை.

நனவினான் * * * மார்பு—எ-து, எம்மனைக்கண்ணே நீ ஒருகாலத்தே வந்தாயாயின் நின்னைப் பெற்று மகிழ்ந்து நீ நீங்கிய பின் எந் தோள் மெலிகையினாலே அதனை உணர்ந்தவர்கள் இக்காலத்து இவளும் இவரும் இத்தன்மையராயினரென்று புறங்கூறுதலின் அக்கூற்றை யாம் ஏற்றுக்கொண்டு பழையநிலையைப் பெறுதற்கு எக்கற்று முயங்குமாறுபோலே வியக்கத்தக்க நின் மார்பினிடத்தே முயங்கினும் உண்மையிடத்து வேறாயிருக்கும் நீ விரும்பாத முயக்கம் எமக்குக் கனவின்கண் வரப் பெற்ற செல்வத்தையொப்பத் தோன்றாய் இருக்கும்; எ - று.

இதனாற் பயனின்றென ஊடினாள். நனவினான் கனவினானென்பன இடப்பொருள. நனவு, உண்மை; கனவு, பொய்.

ஐயென்னும் உரிச்சொல் ஐயவென ஈறுதிரிந்தது.

இது மெய்யன்றிப் பொய்யாகக்கோடலிற் பொய்யாகக்கோடலென்னும் மெய்ப்பாடு.

இஃது ஈரடிமிக்க தாழிசையும் வருதலிற் கொச்சகம். (ங)

சுகூ. போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு
காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய
மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் றுணையாக
வோத்துடை யந்தண னெரிவலஞ் செய்வான்போ
லாய்தூவி யன்னந்தன் னணிநடைப் பெடையொடு
மேதகத் திரிதரூஉ மிகுபுன னல்லூர;

தெள்ளரிச் சிலம்பார்ப்பத் தெருவின்கட் டாக்கிநின்
னுள்ளங்கொண் டொழித்தாளைக் குறைகூறிக் கொளநின்ருய்
துணிந்தது பிறிதாகத் துணிவில ளிவளெனப்
பணிந்தாய்போல் வந்தீண்டுப் பயனில மொழிவாயோ;

பட்டுழி யறியாது பாகனைத் தேரொடும்
விட்டவள் வரனேக்கி விருந்தேற்றுக் கொளநின்ருய்
நெஞ்சத்த பிறவாக நிறையில ளிவளென
வஞ்சத்தான் வந்தீங்கு வலியலைத் தீவாயோ;

இணர்ததை தண்காவி னியன்றநின் குறிவந்தாள்
புணர்வினிற் புகன்ருங்கே புனலாடப் பண்ணியாய்
தருக்கிய பிறவாகத் தன்னில ளிவளெனச்
செருக்கினல் வந்தீங்குச் சொல்லுகுத் தீவாயோ;

எனவாங்கு,

தருக்கேம் பெருமநின் னல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்துமற் றெம்மையு முள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்.

இதுவும் அது.

(இ - ள்.) போதவிழ் * * * னல்லூர—எ-து, உத்தரீயத்துள்ளே நாணல் ஒடுங்கிநோக்குகின்ற காதல்கொண்ட மான் போலும் நோக்கினையுடைய மடந்தை தனக்கு இம்மை மறுமைக்குத் துணையாகக் காதலித்தலைக்கொள்கின்ற கலியாணநாளிலே ஒத்தினையுடைய அந்தணன் அங்கியங்கடவுளை வலஞ்செய்வான் போலே மெல்லிதாகிய சூட்டுமயிரினையுடைய அன்னந் தன்னுடைய அழகிய நடையினையுடைய பேட்டோடே கூடிப் பூக்கள் அலர்ந்த குளிர்ச்சியினையுடைய பொய்கையிடத்தே நின்ற தாமரையினது புதிதாக முறுக்கு நெகிழ்ந்த தாது சூழ்ந்த் தனித்த மலரைப் புறத்தே சேர்ந்து பெருமை தரும்படி திரிதரும் பரந்த புனலையுடைய நல்ல ஊரினையுடையவனே; எ - று.

வலஞ்செய்வான் போலென்ற வினையுவமம் பயவுவமமின்றி வினையுவமமாத்திரையை மேல்வருகின்ற கருப்பொருட்குக் கொ

டுத்து அதனைச் சிறப்பித்துநின்றது, அன்னத்திற்கு அங்கியங்கடவுள் அறிகரியாக மந்திரவிதியாற் சூழுங் கருத்தின்றித் தாமரையைச் சூழ வருகின்ற தொழின்மாத்திரையேகோடலின். அந்தணன் எரிவலஞ் செய்வான்போலக் கருத்தில்லாத அன்னப்பெடையோடே தனிமலரைச் சூழத் திரியும் ஊரவென்றதனுன் நீயும் அக்கருத்தின்றிக் குலமகளிரைத் தீவலஞ்செய்து வரைந்துகொண்டு பாதுகாவாது ஒழுகுகின்ற நினக்கு எம்மைப் பாதுகாத்தலுளதாமோவெனக் காமக்கிழத்தியும் உள்ளுறையுவமங் கூறினுளாகவுரைக்க. இதனை *''ஏனோர்க் கெல்லா மிடம்வரை வின்றே'' என்று உவமப்போலியிற் கூறிய விதியாற்கொள்க.

தெள்ளரிச் * * * மொழிவாயோ—எ-து, தெளிந்த உள்ளிடுமணியையுடைய சிலம்பு ஆரவாரிப்ப வந்து தெருவிடத்தே தாக்கணங்குபோலத் தாக்கி நின் நெஞ்சை அகப்படுத்திக்கொண்டு பின்னர்க்கைவிட்டவளை நின் வருத்தத்தைச் சொல்லி அழைத்துக்கொள்ளக் கருதிநின்ற நீ அறுதியிட்டு வந்த காரியம் வேறென்றாயிருக்க இவள் தனக்கென ஓர் அறுதியுடையளல்லளென்று கருதி இவ்விடத்தே தாழ்ந்தாரைப்போல வந்து பயனில்லாத சொற்களைச் சொல்லக்கடவையோ? அது நின்னை வருத்தாதோ? எ - று.

பட்டுழி * * * தீவாயோ—எ-து, நீ சொல்லாதே அகப்பட்ட பரத்தையரது நெஞ்சு வலிதென்று அறியாது பாகனைத் தேரொடும் போகவிட்டவள் உன்னை விருந்தாக எதிர்கொள்ள அவள் வரவினைக் கருதிநின்ற நீ அவள் வரக்காணுமையினுலே நின்னெஞ்சத்திடத்தன வேறுசிலவாயிருக்க இவள் நிறையென்கின்ற குணமுடையளல்லளென்று கருதிப் பொய்வன்மையாலே இவ்விடத்தே வந்து உன் ஊராண்மையாலே அலைக்கக்கடவையோ? அது நின்னை வருத்தாதோ? எ - று.

நெஞ்சத்தவென்ற பன்மை தன்வயத்தளாக்கிக்கொள்ளக் கருதிய தொழில்களை.

இணர்ததை * * * தீவாயோ—எ-து, பூங்கொத்து நெருங்கின குளிர்ந்த பொழிலிலே நீ செய்த குறியிடத்தே வந்தவளைப் புணர்ச்சியிடத்தே கொண்டாடி அப்பொழுதே கூடப் புனலாடும்படி பண்ணின நீ நின் நெஞ்சின் மிக்குநடக்கின்றவை வேறென்றாயிருக்க

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், உஎ.ம் சூத்.

இவள் தனக்கென ஒரு நெஞ்சுடையளல்லளென்று கருதி மனச் செருக்காலே இவ்விடத்தே வந்து பரத்தையர்க்குக் கூறும் பயன் படுசொற்களைப் பாழே போக்கக்கடவையோ? அது நின்னை வருத் தாதோ? எ - று.

*"வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்த - றாவின் றுரிய தத்தங் கூற்றே" என்பதனாற் றுணிவிலள் நிறையிலளென ஆற்றாமைவாயி லாகத் தலைவன் வந்துழி வெளிப்படக்கூறினாள்.

எனவாங்கு, அசை.

திருக்கேம் * * * கால்—எ-து, பெருமா! நின் அருளால் யாங்கள் மனஞ்செருக்கேம்; எம்மிடத்தே விருப்பமுற்றுக் குறைந் தாய்போலே வந்து நின்று நினக்குத் தகுதிப்பாடில்லாதவற்றைச் செய்யாதே நீ விரும்பினாரிடத்து நீ நுகரக்கருதியவற்றைச் செய்து முடித்து ஆண்டுள்ள விருப்பமற்ற இடத்துப் பின்பு எம்மையும் நினைப்பாயென ஊடல் தீர்கின்றாள் கூறினாள்; எ-று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (ச)

எ0. மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடு மன்னந்தன்
னணிமிகு சேவலை யகலடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கியம் மடப்பெடை
மதிநிழ னீருட்கண் டதுவென வுவந்தோடித்
துன்னத்தன் னெதிர்வரூஉந் துணைகண்டு மிகநாணிப்
பன்மல ரிடைப்புகூஉம் பழனஞ்சே ரூரகேள்;

நலநீப்பத் துறந்தெம்மை நல்காய்நீ விடுதலிற்
பலநாளும் படாதகண் பாயல்கொண் டியைபவாற்
றுணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மணமனைத் ததும்புநின் மணமுழவந் தெடுப்புமே;

அகலநீ துறத்தலி னழுதோவா வுண்கணெம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துத லியைபவா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சஎ-ம் சூத்.

னினக்கொத்த நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றமர்பாடுந் துணங்கையு ளரவம்வந் தெடுப்புமே;

வாராய்நீ துறத்தலின் வருந்திய வெமக்காங்கே
நீரிதழ் புலராக்கண் ணிமைகூம்ப வியைபவா
னேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
றேர்பூண்ட நெடுநன்மான் றெண்மணிவந் தெடுப்புமே;

எனவாங்கு,

மெல்லியான் செவிமுதன் மேல்வந்தான் காலைபோ
லெல்லாந் துயிலோ வெடுப்புக நின்பெண்டி
ரில்லி னெழீஇய யாழ்தழிஇக் கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் தோழியை வாயில் வேண்ட அவள் வாயினேர்வாள் நெருங்கிக் கூறியது.

(இ - ள்.) மணிநிற * * * ரூரகேள்—எ-து, பலமணிகள் போலும் நிறங்களையுடையவாகிய மலர்களையுடைய பொய்கையிலே சேவலோடு மகிழ்ந்து விளையாடும் அன்னப்பெடை தனது அழகுமிக்க சேவலன்னத்தை அகன்ற தாமரையிலை மறைத்ததாக அதனைக்காணாமற் கதுமெனக் கலங்கி அந்த அறியாமையையுடைய பெடை மதியினுடைய நிழலை நீருக்குள்ளே கண்டு அச்சேவலென்று உவந்து ஓடிச்சென்று தன்னைச் சேருதற்கு எதிரோவருகின்ற சேவலைக்கண்டு மிகவும் நாணிப் பல்பூக்களின் செறிவுக்குட் புக்கு ஒளித்திருக்கும் பழனநிலஞ்சூழ்ந்த ஊரனே யான் கூறுகின்றதனைக்கேள்; எ - று.

பரத்தையர்சேரியிலே இருந்து நின்னோடே புணர்ந்து விளையாடுகின்ற பரத்தை வேறொரு பரத்தை களவொழுக்கத்தாலே மறைத்துக் கொண்டுபோனளாக நின்னைக் காணுது கதுமெனக் கலங்கி அந்தப் பரத்தையை வேறோர் தலைவன் வதுவையயர்கின்றதனை நீ வதுவையயர்கின்றாயென்று கருதி உவந்து சென்று தன்னைக் கூடுதற்கு எதிரோவருகின்ற நின்னைக் கண்டு இவன் தானே வருகின்றதனை அறியாது நாந் தேடிவந்தோமேயென்று அதற்குநாணித் தன் சுற்றத்திடத்தேயிருந்து நின்னை வருத்துகின்றாளென்று உள்ளுறையுவமங்கூறித் தலைவனைத் தோழிநெருங்கினாள்.

நலநீப்பத் * * * தெடுப்புமே—எ-து, நீ எம்மை நலம்போம்படியாக நீங்கிப் பின்னர் ஒருகாலத்தும் அருளாயாய்க் கைவிடுகையினாலே பலநாளுந் துயிலாத கண்கள் வருத்தமிகுதியால் யாங்கள் இருத்தலாற்றாது ஒருநாட் படுக்கையையும் இடமாகக் கொள்கையினாலே இமைபொருந்துதலுங் கூடும், அதனை இணைந்த மலராற் செய்த கோதையினையுடைய கலைகளெல்லாம் முற்றக்கற்று முதிர்ந்த பரத்தையர் நன்றென்று கொண்டாடும்படி நாடோறும் மணஞ் செய்யும் மனைகளிடத்தே நின்று முழங்கி நின் மணத்தை எமக்கு உணர்த்தும் முழவோசை வந்து போக்கும், அதுவே குறை; எ - று.

இயைப அகரவீற்றுத்தொழிற்பெயர். ஆல் ஐயப்பொருட்டு.

அகலநீ * * * தெடுப்புமே—எ-து, நீ எம்மை நீங்கத் தாந் துயிலைத் துறக்கையினாலே அழுது மாறாத மையுண்கண் எம் மெய் புதல்வனைத் தீண்டுகையினாலே பொருந்துதலுங் கூடும், அதனை நின் இளமைப்பருவச் செவ்விக்கொத்த பரத்தையரை அவர்க்கென்று சமைத்த நெடிய மனையிலே கொண்டுவந்து நின் சுற்றமாகிய பரத்தையர் நின்று பாடுந் துணங்கைக்கூத்தில் எழுந்த ஆரவாரம் வந்து போக்கும், அதுவே குறை; எ - று.

வாராய்நீ * * * தெடுப்புமே—எ-து, நீ ஈண்டு வாராயாய் யாந் துயிலைத் துறக்கையினாலே வருந்திய எமக்கு நீர் வீழ்கின்ற இதழ்போல் நீர் மாறாக் கண்கள் பாயலிலே இமைபொருந்துதலுங் கூடும், அதனை ஒத்த இழையினையுடைய பரத்தையைத் தமக்குச் சமைத்த நெடிய இல்லிலே கொண்டுவருகையினாலே பிறந்த நின் தேரிலே பூண்ட உயர்ந்த நல்ல குதிரையிற் கட்டின தெளிந்த மணியோசை வந்து போக்கும், அதுவே குறை; எ - று.

எனவாங்கு, அசை.

மெல்லியான் * * * கால்—எ-து, நாற்படையாற் குறைந்த அகத்துழிஞையான் செவியிடத்தே மேலேவந்துவிட்ட புறத்துழிஞையானுடைய பள்ளியெழுச்சிமுரசுபோல முற்கூறியவெல்லாம் அரிதிற்பெற்ற துயிலையோ போக்குக, பரத்தையர் இல்லிலே வாசித்த யாழைத் தழுவிக்கொண்டு வாயிலாய்த்திரிகின்றதொழிலைப் பாட்டைத் திருந்தக்கல்லாத வாயினையுடைய பாணன் நம் இல்லின்கண் வாராதவிடத்து; அவன்வரவேகாண் எமக்கு வருத்தமென நெருங்கிக்கூறினாள்; எ - று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

*"வாயிற்கிளவி வெளிப்படக்கிளத்த - றவின்றுரிய தத்தங் கூற்றே" என்பதனாற் றோழி தாழிசைகளில் வெளிப்படக் கூறினாள்.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (ரு)

எக. விரிகதிர் மண்டிலம் வியல்விசும் பூர்தரப்
புரிதலை தளையவிழ்ந்த பூவங்கட் புணர்ந்தாடி
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுட்
டுனிசிறந் திழிதருங் கண்ணினீ ரறல்வார
வினிதமர் காதல னிறைஞ்சித்தன் னடிசேர்பு
நனிவிரைந் தளித்தலி னகுபவண் முகம்போலப்
பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர;

ஒருநீ பிறரில்லை யவன்பெண்டி ரெனவுரைத்துத்
தேரொடுந் தேற்றிய பாகன்வந் தியான்கொ [புண்
லோரிற்றன் கொணர்ந்துய்த்தார் புலவியுட் பொறித்த
பாரித்துப் புணர்ந்தநின் பரத்தைமை காணிய;

மடுத்தவன் புகுவழி மறையேனென் றியாழொடு
மெடுத்துச்சூள் பலவுற்ற பாணன்வந் தியான்கொ [ன்க
லடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் னெருத்தி
ணெடுத்துக்கொள் வதுபோலுந் தொடிவடுக் காணிய;

தணந்தனை யெனக்கேட்டுத் தவறோரா தெமக்குநின்
குணங்களைப் பாராட்டுந் தோழன்வந் தியான்கொல்
கணங்குழை நல்லவர் கதுப்பற லணைத்துஞ்சி
யணங்குபோற் கமழுநின் னலர்மார்பு காணிய;

என்றுநின்,

தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்நீ வருநாட்போ லமைகுவம்யாம் புக்கீமோ
மாரிக் கவாவுற்றுப் பீள்வாடு நெல்லிற்காங்
காராத் துவலை யளித்தது போலுநீ
யோர்யாட் டொருகால் வரவு.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சஎ-ம். சூத்.

இது பரத்தையிற் பிரிந்துவந்த தலைவனது வரவுகண்டு ஊடிய காமக்கிழத்தி ஊடியவாறுகண்டு சென்று சார்ந்த தலைவனுடன் அவள் ஊடல் தீர்கின்ருள் கூறியது.

(இ-ள்.) விரிகதிர் * * * நல்லூர—எ-து, மேல்விரியுங் கதிரையுடைய இளஞாயிறு அகற்சியையுடைய விசும்பிலே பரவா நிற்க விடியற்காலத்தே இதழ்கள் முறுக்குண்ட தலைகள் அம்முறுக்கு நெகிழ்ந்த செவ்விப்பூவிடத்து அழகிய தேனை வரியினையுடைய வண்டுகள் அனைத்துங் கூடி நுகர்ந்து அதனானும் அமையாது பின்னும் நுகர்தற்கு அவ்விடத்தைச் சூழ்ந்து திரியுஞ் செல்வம் மிக்க பொய்கையிடத்தே துனிமிகுதலாலே பெருக்கு மாறாது வீழ்கின்ற கண்ணினுடைய நீர் காமத்தீயாற் சுவறி அறுதலையுடைத்தாய் ஒழுக அவ்வருத்தத்தைக் கண்டு இனிதாக அமர்ந்த கணவன் தன் அடியைச் சேர்ந்து இறைஞ்சி மிகவிரைந்து அளித்தலாலே சிறிது மகிழ்பவள் முகம்போலப் பசிய இலைக்குள்ளே நின்ற தாமரையினது தனித்த மலர் தனக்கு வருத்தத்தைச்செய்யும் பனி ஒருகூற்றிலே வடியாநிற்கத் தான் மிகச் செவ்வியின்றி அலருங் குளிர்ந்த துறையினையுடைய நல்ல ஊரனே; எ-று.

இதனால் வைகறைக்காலத்து மனைவயிற் செல்லாது இளைய செவ்வியையுடைய பரத்தையரைப் புணர்ந்து விளையாடி அதனினும் அமையாது பின்னும் அவரைப் புணர்தற்குச் சூழ்ந்துதிரிகின்ற இவ்வூரிடத்தே நின்னைப் பெருது சுற்றத்திடத்தேயிருந்து கண்ணீர் வாராநிற்க, நீ ஒருகாலத்து அளித்தலிற் சிறிது செவ்வி பெற்ருளாயிருக்கும்படி தலைவியை வைத்தாய், என்னை வருத்துதல் கூறவேண்டுமோவெனக் காமக்கிழத்தி உள்ளுறையுவமங் கூறினாள்.

முகம்போலவென்ற ஏனையுவமந் தாமரைமலர் பனிவாரத் தளைவிடுமென்ற உள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புச்கொடுத்து நின்றது. இஃது உவமப்போலி. * "இனிதுறு கிளவியுந் துனியுறு கிளவியு - முவம மருங்கிற் ருேன்று மென்ப" என்பதனான் இரண்டுந் தோன்றநின்றது.

ஒருநீ * * * காணிய—எ-து, அவன்பெண்டிர் நின்னையொழியப் பிறர் இல்லை அதனை ஓர்ந்துபாரெனக் கூறித் தனக்குத் தெய்வமாகிய தேரைத் தொட்டுச் சூளுற்ற பாகன் ஈண்டு வாரா

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், உஅ-ம், சூத்.

ளே? தான் கொண்டுவந்த பரத்தையரெல்லாரும் வருதற்குச் சமைத்ததோர் இல்லிலே விட்ட பரத்தையர் புலவியாலே அழுந்தின வடுக்கள் நாணமின்மையின் இவை கிடக்கவேண்டுமென்று பரப்பி இட்டுவைத்தகையினாலே அவை மறையாமற் கூடிக்கிடந்த நின் பரத்தைமையைக் காண்டற்கு. எ - று.

உம்மை சிறப்பு. வந்தியான் வினைத்திரிசொல். ஓர் என்னுஞ்சொல் உகரம்பெற்று வந்தது.

மடுத்தவன் * * * காணிய—எ-து, அப்பரத்தையர் உடன்பாடின்றித் தானே செல்லுமிடத்து நின்னை மறையேனென்று கூறி யாழாகிய தெய்வத்தோடும் பல தெய்வங்களையுங் கூட்டிப் பல சூளுஞ் சூளுற்ற பாணன் வாரானோ? இவன்செய்தி பொய்யென்று அறிந்துவைத்து மருண்டு அப்பொய்யைப் பலகாலும் அனுபவித்தவர்களைக் கூடின நின் கழுத்தின்கண்ணே அள்ளிக்கொள்ளலாவதொன்றுபோலும் மறையாமற் கிடக்கின்ற தொடித்தழும்பைக் காண்டற்கு; எ - று.

தணந்தனை * * * காணிய—எ-து, நின் தீயகுணங்களை உணர்ந்திருக்கின்ற எமக்கு நீ எங்களை நீங்கினையென்று பிறர் கூறக்கேட்டிருந்து நின் தவறுகளை ஓராதே நினக்கு நற்குணங்கள் உளவாகக் கொண்டாடுந் தோழன் வாரானோ? திரட்சியுடைத்தாகிய குழையினையுடைய மகளிருடைய புணர்ச்சியாற் குலைந்து வீழ்ந்த அறலையுடைய கதுப்பாகிய அணையிலே துஞ்சுகையினாலே தெய்வம்போல மணக்கும் நின் அலர்ந்த மார்பைக் காண்டற்கு; எ - று.

இது நாற்றச்செவ்வி குலையாமல் வந்தமைகூறலின் மருதத்து விடியற்காலங் கூறிற்றும்.

என்றுநின் * * * வரவு—எ-து, இங்ஙனம் நின் அன்புநீங்காத முயக்கத்தை என்றும் பெறுகின்ற பரத்தையரை வெறுப்பார் யார்? நீ ஓர் யாண்டிடத்து ஒருகால் வருகின்ற வரவு எமக்கு மழைக்கு அவாவுற்றுத் தோன்றின கதிர் உலரும் நெல்லிற்கு அப்பருவத்தே நிறையப்பெய்யாதே ஆராத சிறுதுவலையைப் பெய்த தன்மைபோல மிக்க வருத்தத்தை தரும்; ஆதலான் நீ வருநாட்போல யாம் ஆற்றியிருப்பேம்; நீ அவர் வருந்தாமல் அவர்மனைக்கட் செல்வாயாக; எ - று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை தோன்றிற்று.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (சு)

எஉ. இணைபட நிவந்த நீலமென் சேக்கையுட்
டுணைபுண ரன்னத்தின் றூவிமெல் லணையசைஇச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
யூடுமென் சிறுகிளி யுணர்ப்பவண் முகம்போலப்
புதுநீர்ப் புதலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி யலர்வித்த வாம்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடூஉம் வயலணி நல்லூர;

கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாமழப்
பண்ணினாற் களிப்பிக்கும் பாணன்காட் டென்றானோ
பேணானென் றுடன்றவ ருகிர்செய்த வடுவினான்
மேணாணின் றோள்சேர்ந்தார் நகைசேர்ந்த விதழினை;

நாடிநின் றூதாடித் துறைச்செல்லா ளூரவ
ராடைகொண் டொலிக்குநின்புலத்திகாட் டென்றாளோ
கூடியார் புனலாடப் புணையாய மார்பினி
லூடியா றறிதர வொளிவிட்ட வரக்கினை;

வெறிதுநின் புகழ்களை வேண்டாரி னெடுத்தேத்து
மறிவுடை யந்தண னவளைக்காட் டென்றானோ
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட வுருவின்மேற்
குறிபெற்றார் குரற்கூந்தற் கோடுளர்ந்த துகளினை;

எனவாங்கு,

செறிவுற்றே மெம்மைநீ செறிய வறிவுற்
றழிந்துகு நெஞ்சத்தே மல்ல வுழப்பக்
கழிந்தவை யுள்ளாது கண்ட விடத்தே
யழிந்துநிற் பேணிக் கொளலி னிழிந்ததோ
விந்நோ யுழத்த லெமக்கு.

இதுவும் அது.

(இ - ள்.) இணைபட * * * நல்லூர—எ-து, ஐந்துவகைப்படப் படுத்தலால் உயர்ந்த நீலப்பட்டாற்செய்த மெல்லிய படுக்கையிடத்துக் கிடந்த துணையோடே கூடிய அன்னத்தின் தூவியாற் செய்த மெல்லிய அணையைச் சார்ந்திருந்து பெருமையியன்ற வெள்ளிவட்டிலிலே வார்த்த பாலைச் சிறிதுகாட்டி அப்பாலை உண்ணுது வெறுத்திருந்த இளி அதனை உண்டற்கு வேண்டும் மொழிகளைக் கூறி உண்ணப்பண்ணுவித்து அவ்வுண்விஞன் மகிழ்ந்து முத்தங் கொள்பவள் முகம்போல மிகுதியுடைய கயத்திடத்துநின்ற புதிய நீரிடத்தனவாகிய பசிய தூறுகளின்மேலே இடைவிடாது வருகின்ற திரைகள் மோதுகையினுலே அதன் துவலை மிகாநிற்க இடைநின்ற தாமரையினது கமழாநின்ற முகை தனக்குரிய வண்டு நுகர அலராமல் நின்று கரையில் நின்ற மாவினது வடு மதியைநோக்கி அலர்ந்த ஆம்பலினது வெள்ளிதாகிய மலரை முதற் றீண்டிப் பின்னர்த் தன்னைத் தீண்ட அலரும் வயலணிந்த நல்ல ஊரனே; எ - று.

முகம்போலவென்ற வினையுவமம் மேல்வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது. "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேண - முறுதூவி தாமிவையோ ரைந்து." துணையைப் புணர்ந்த காலத்து மெய்யுருகி உதிர்ந்த தூவி தானும் மிக மெல்லிதாயிருக்குமென்பது உணர்தற்குத் துணைபுணரன்னமென்ருர். பாலைச் சிறிதென்ருது சிலவென்றல் மரூஉ.

தாமரை வண்டு நுகர்வதற்குப் பயன்கொடாது வடுத்தீண்ட அலருமென்பதனுல் நின் தலைவி நீ நுகர்ந்த செவ்விபெருமற் செங்கையிடத்தே இருந்து பால் உண்ணுத புதல்வன் பால் உணப் பெற்றதற்கு அவனை முத்தங் கொண்டு மகிழ்ந்திருக்குமாறுபோல ஆற்றியிருக்குந் தன்மை எமக்கின்றெனக் காமக்கிழத்தி உள்ளுறையுவமங்கூறினுள்.

கண்ணிநீ * * * விதழினை—எ-து, நம்மைப் பேணுகின்றிலனென்று கோபித்தவர் தம்மைப் பேணுதற்காக உகிராற்செய்த வடுக்காரணமாக அவர்க்குப் பின்னுள்ள நாளிலே நின் தோளைச் சேர்ந்த பரத்தையருடைய எயிறு அழுந்தின இதழைத் தங் கூட்டத்திற் பிறந்த இன்பத்தைக் கருதி நீ காவல்கொண்ட பரத்தையரைச் செறியுந்தோறும் யாம் அழும்படி நின்னைப் பண்ணுலே களிப்பிக்கும் பாணன் எனக்குக் காட்டென்று சொன்னுனே? எ - று.

மேனுளென்றது பின்னுள். யாம் அழப் பண்ணிறை களிப் பிக்குமென்றது இல்லறம் நிகழ்த்துவதற்கு உரியனவற்றைப் பாடிக் காட்டி யாம் வருந்தாதபடி பண்ணுது பரத்தையரிடத்தே ஒழுகுதற்கு வேண்டுவனவற்றைப் பாடிக் காட்டிக் களிப்பிப்பனென்றவாறு.

நாடிநின் * * * வரக்கினை—எ-து, கூடினமகளிர் புனலா டுதற்குத் தெப்பமாகிய மார்பிலே அப்புனலாட்டுப்பெருது ஊடியமக ளிர் சாதிலிங்கம் இருந்த செப்போடே அதனை எறிதலைச் செய்கையி ஞலே விளக்கம் மிக்க சாதிலிங்கத்தை நினக்குக் கூடலாம் பரத் தையரைத் தேடித் தூதாய்த் திரிந்து துறையிற் செல்லாள் ஊரிலு ள்ளாருடைய ஆடைகளை இடுவித்துக்கொண்டு ஒலியாமற் திரியும் நின்னுடைய புலத்தி எனக்குக்காட்டென்று சொன்னுளோ? எ-று.

ஒலிக்கும் இகழ்ச்சிக் குறிப்பு. ஒளிக்குமென்றும் பாடம். புலத்தி, செற்றச்சொல்.

வெறிதுநின் * * * துகளினை—எ-து, கூட்டத்தாற் களி த்தல்பிறந்தவருடைய கமழ்கின்ற மாலை முயக்கத்தான் மென்மை படுதற்குக் காரணமான வடிவின்மேலே அதற்குப்பின்பு நின்னுற் குறியிடம்பெற்ருருடைய பற்றத்தினையுடைத்தாகிய மயிரினுடைய முடியை நீ வகிர்ந்து வகைசெய்து முடிக்கையினுலே வீழ்ந்துகிட ந்த பூந்துகளை நின் புகழ்களைக் கேட்கவேண்டாத எங்கள் இல் லிலே ஒருபயனின்றி மிகுத்துக்கொண்டாடும் அறிவில்லாத அந் தணன் அவனைக்காணப்பண்ணென்று சொன்னுளோ? எ-று.

கயம் மென்மை; ஈண்டுத் துவட்சியை உணர்த்திற்று. அறி வுடையந்தணன் இகழ்ச்சி. அவட்கு என உருபுமயக்கமுமாம்.

எனவாங்கு அசை.

செறிவுற்றே * * * லெமர்க்கு—எ-து, முன்பு எம்மை நீ செறிகையினுலே யாமும் நின்னேடு செறிதலையுற்றேம்; இக்காலத்து நீ செய்யுங் குறைகளை அறியலுற்று அதனுனே அழிந்துகெடுகின்ற நெஞ்சத்தினையுடையேம்; அதன்மேலே வருத்தத்திலே தங்கும்படி யாக நீ செய்து கழிந்த இக்குறைகளைக் குறையென்று நினையாதே நின்னைக் கண்ட இடத்தே நெஞ்சழிந்து நின்னைப் பேணிக்கொள் ளுதலின் இக்காமநோயிலே தங்குதல் எமக்குத் தாழ்ந்ததொரு தொழிலோ? இஃது இழிந்ததன்றுகாண்; எ-று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (எ)

எந. அகன்றுறை யணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ வுறநீண்ட பாசடைத் தாமரை
கண்பொர வொளிவிட்ட வெள்ளிய வள்ளத்தாற்
றண்கமழ் நறுந்தேற லுண்பவண் முகம்போல
வண்பிணி தளைவிடூஉம் வயலணி நல்லூர;

நோதக்கா யெனநின்னை நொந்தீவா ரில்வழித்
தீதிலேன் யானெனத் தேற்றிய வருதிமன்
ஞெகிழ்தொடி யிளையவ ரிடைமுலைத் தாதுசோர்ந்
திதழ்வனப் பிழந்தநின் கண்ணிவந் துரையாக்கால்;

கனற்றிநீ செய்வது கடிந்தீவா ரில்வழி
மனத்திற்றீ திலனென மயக்கிய வருதிமன்
னலமரு லுண்கண்ணா ராய்கோதை குழைத்தநின்
மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வந் துரையாக்கால்;

என்னைநீ செய்யினு முரைத்தீவா ரில்வழி
முன்னடிப் பணிந்தெம்மை யுணர்த்திய வருதிமன்
னிரைதொடி நல்லவர் துணங்கையுட் டலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந் துரையாக்கால்;

எனவாங்கு,

மண்டுநீ ராரா மலிகடல் போலுநின்
றண்டாப் பரத்தை தலைக்கொள்ள நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றிமற் றியாமேற்
றேர்லாமோ நின்பொய் மருண்டு.

இது "தங்கிய வொழுக்கத்துக் கிழவனை வணங்கி - யெங்கையர்க் குரையென விரத்தற்கட்" தலைவி கூறியது.

(இ - ள்.) அகன்றுறை * * * நல்லூர—எ-து, அகன்ற நீருண்ணுந்துறை அழகுபெறும்படி சிறுதூறேடே வந்து தாழ்ந்து

கிடந்த பகன்றையினது பூவைச்சேரும்படி வளர்ந்த பசிய இலையினை யுடைய தாமரைமுகை கண் வெறிகொள்ளும்படி ஒளிவிட்ட வெள் ளிவள்ளத்தாலே குளிர்ந்த நறிய கள்ளை உண்பவள் முகம்போல வளவிய முறுக்குநெகிழும் வயலணிந்த நல்ல ஊரனே; எ-று.

வெள்ளியவள்ளமென்பது *"மென்மையு மிடைமையும் வரூஉங் காலை - யின்மை வேண்டு மென்மனார் புலவர்" என்பத னால் அம்முச்சாரியையின் மகரங் கெட்டு அகரம் யகரவுடம்படு மெய்பெற்று நின்றது.

அகன்றதுறை பரத்தையர்சேரியாகவும், அழகுபெறும்படி புதலொடுவந்து தாழ்ந்த மணமில்லாத பகன்றைப்பூப் பாணர்முத லிய வாயில்களோடே வந்து தங்கின அன்பில்லாத பரத்தையராக வும், அதனை உற நீண்ட தாமரை அப்பரத்தையரிடத்தே சேர்ந்த தலைவனாகவும், அத்தாமரை கள்ளைத் தீதென்று உணர்ந்துவைத்தும் அதனை உண்டு களிக்கின்றவள் முகம்போலத் தளைவிடுதல் அன்பில் லாத மகளிரிடத்துப் பெறுகின்ற இன்பநுகர்ச்சி தீதென்று உண ர்ந்துவைத்தும் அதனை நுகர்ந்து மகிழ்கின்ற தலைவனாகவும் உள் ளுறையுவமங்கொள்க, முகம்போலவென்னும் ஏனையுவமங் கருப் பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது.

நோதக்காய் * * * துனையாக்கால்—எ-து, நீ நீங்குத லான் நெகிழ்ந்த தொடியினையுடைய பரத்தையருடைய முலையி டையிலே தாதுக்கள் உதிர்ந்து இதழ்கள் அழகிழந்த நின் கண்ணி நினக்கு உட்பகையாய்வந்து நின் பரத்தைமையை எமக்கு உணா யாதபொழுது நீ யாங்கள் வெறுக்கத்தக்க பரத்தைமையையென்று ஒருகாலத்தும் நின்னை வெறுப்பார் இல்லாத இடத்தே யான் தீதிலே னென்று தேற்றுதற்கு வருவாய், அதனாற் பெற்றதென்? எ-று.

கனற்றிநீ * * * துனையாக்கால்—எ-து, தம்வயத்தராதற் கு உரியானைத் தேடிச் சுழல்கின்ற மையுண்கண்ணினையுடைய பரத் தையருடைய அழகிய மாலைகள் முயக்கத்தாற் குழைவித்த நின் ம லர்ந்த மார்பிற் பூசின பாடழிந்த சந்தனம் நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உணாயாதபொழுது நெஞ்சைக் கனலப்பண்ணி நீ ஒழுகுகின்ற பரத்தைமையை வெறுப்பார் இல்லாத இடத்தே யான் தீதுடையென் அல்லேனென்று எங்கள் மனத்திடத் தே ஊடலுணர்த்துதற்கு வருவாய், அதனாற் பெற்றதென்? எ-று.

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புணரியல், உஅ-ம். சூத்.

என்னை * * * துனையாக்கால்—எ-து, நினைத்த தொடியினையுடைய பரத்தையர் ஆடுந் துணங்கைக்கூத்திடத்தே நீ சென்று தலைக்கைகொடுத்தற் றொழிலை நின்னிடத்தே கொள்கையினாலே அவர் சிலம்பு தொடக்கிக் கனையிடத்தே கிழிந்த நின்னுடைய நீல ஆடை நினக்கு உட்பகையாய் வந்து நின் பரத்தைமையை எமக்கு உரையாதபொழுது எப்படிப் பெரிய குறைகளைச்செய்யினும் இக்குறைகளைச் செய்யாநின்றாயென்று கூறுவார் இல்லாத இடத்தே அடிமுன்னே பணிந்து எம்மை ஊடலுணர்த்துதற்கு வருவாய், அதனாற்பெற்றதென்? எ - று.

* "பயங்கெழு துணையணை புல்லிய புல்லா - துயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப் - புல்கென முன்னிய நிறையழி பொழுதின் - மெல்லென் சீறடி புல்லிய விரவினும்" என்பதனான் முன்னடிப்பணிந்தென்றார்.

எனவாங்கு அசை.

மண்டுநீ * * * மருண்டு—எ-து, யாற்றினின்று மிக்குச் சென்றுவீழ்கின்ற நீரால் நிறையாத மிகுகடல்போலும் நின் அமையாத பரத்தைமை மேலிடுகையினாலே நாடோறும் நின்னொடு புலக்குந் தகுதியையுடைய பெண்டிரைத் தெளிவிப்பாய், பின்னை யாமாயின் நின்பொய்யை மெய்யாக நினைந்து நினக்குத் தோலாதிருப்பேமோ? தோற்பேமன்றே? என்று எங்கையர்க்கு உரையென்றாள்; எ - று.

இதனாற் றலைவிக்கு முனிவுபிறந்தது.

இது வெள்ளைச்சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (அ)

எச. பொய்கைப்பூப் புதிதுண்ட வரிவண்டு கழிப்பூத்த
நெய்தற்றா தமர்ந்தாடிப் பாசடைச் செப்பினுட்
செய்தியற் றியதுபோல் வயற்பூத்த தாமரை
மைதபு கிளர்கொட்டை மாண்பதிப் படர்தரூஉங்
கொய்குழை யகைகாஞ்சித் துறையணி நல்லூர;

அன்பில னறனில னெனப்படா னெனவேத்தி
நின்புகழ் பலபாடும் பாணனு மேமுற்றான்;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௯ - ம் சூத்.

நஞ்சுயிர் செகுத்தலு மறிந்துண்டாங் களியின்மை
கண்டுநின் மொழிதேறும் பெண்டிரு மேழுற்றார்;

முன்பகற் றலைக்கூடி நன்பக லவணீத்துப்
பின்பகற் பிறர்த்தேரு நெஞ்சமு மேழுற்றாய்;

எனவாங்கு,

கிண்கிணி மணித்தாரோ டொலித்தார்ப்ப வொண்டொடிப்
பேரமர்க் கண்ணார்க்கும் படுவலை யிதுவென
ஆரவ ருடனகத் திரிதருந்
தேரோ முற்றன்று நின்னினும் பெரிதே.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தியை அவன் இவ்வகையன கூற நீ ஏழுற்றாயோவென்றாற்கு அவள் கூறியது.

(இ-ள்.) பொய்கைப்பூ * * * நல்லூர—எ-து, பொய்கையிடத்துப் பூவினுடைய தேனையுண்ட வரியினையுடைய வண்டு கழியிடத்துப் பூத்த நெய்தற்பூவிற் றாதை மனம்பொருந்தி நுகர்ந்து வயலிடத்துப் பசிய இலையினையுடைய தான்றோன்றுங் கழுங்கிட்டத்தைக் கைசெய்துபண்ணினதுபோலப் பூத்த, கரிய இதழ்பொதிந்த, நீங்குகின்ற தாமரைப்பூவினது விளங்குகின்ற கொட்டையாகிய மாட்சிமையையுடைய பதியிடத்தே மீண்டுவரும் மகளிர் கொய்யுந்தழை தளிர்க்கின்ற காஞ்சிமரத்தினையுடைய துறையணிந்த நல்ல ஊரனே ; எ - று.

மைதபுதாமரையெனக் கூட்டுக. தேரோற்றிக்கொண்டுவந்த பரத்தையரை முற்படநுகர்ந்து பின்னர்ச் சேரிப்பரத்தையரை நுகர்ந்து விடியற்காலத்துத் தலைவிமனைவயிற் செல்கின்ற ஊரனென்று காமக்கிழத்தி புலந்துகூறினாள்.

அன்பில * * * மேழுற்றான்—எ-து, அவன் அன்புடையனல்லனென்றும் அறனுடையனல்லனென்றும் நீ சொல்லப்படானென்று நின்னைப் புகழ்ந்து நின் புகழ் பலவற்றையும் பாடிக்காட்டும் பாணனும் பித்தேறினான் ; எ - று.

நஞ்சுயிர் * * * மேழுற்றார்—எ-து, நஞ்சு தன்னைநுகர்ந்தார் உயிரைப்போக்குதலையும் அறிந்துவைத்து உண்டாற்போல நின் மனக்

கருத்து அருளின்றி வருத்துதலைக்கண்டுவைத்துப் பின்னும் நின்பொய் மொழியை மெய்யாகத்தெளியும் பரத்தையரும் பித்தேறினர்; எ-று.

செருக்குத்தலுமென்ற உம்மை சிறப்பு.

முன்பகற் * * * மேழுற்றாய்—எ-து; நாட்காலமெல்லாம் ஒருத்தியிடத்தே கூடியிருந்து உச்சிக்காலமெல்லாம் அவளைக்கைவிட்டுப் பலரிடத்தே சென்று அந்திக்காலத்திற் கூடுதற்கு வேறுசிலரை ஆராயும் நின் நெஞ்சமும் பித்தேறினாய்; எ - று.

அவளையென்னும் இரண்டாவது *"ஒழியாதுவருதலும்" என்றதனாற் சிறுபான்மை ஒழிந்துநின்றது. நெஞ்சமும் எழுற்றாயெனச் சினைவினை முதலொடு முடிந்தது. உம்மைகள் எண்ணும்மை.

எனவாங்கு, அசை.

கிண்கிணி * * * பெரிதே—எ-து, சதங்கை தண்டை சிறுமணிகள் கோத்த தாருடனே ஒலியெழுந்து ஆரவாரிப்ப ஒள்ளிதாகிய தொடியினையுடைய பெருத்து அமர்ந்த கண்ணினையுடைய பரத்தையர்க்கும் அவர்கள் அகப்படுத்தற்குக் காரணமான வலை இதுவென்று சொல்லி ஊரிலுள்ளார் சேரச் சிரிக்கும்படி திரிதருந் தேர் நின்னினும் பெரிதாகப் பித்தேறிற்று; யான் பித்தேறிலேனென்று ஊடினாள்; எ-று.

தேரென்றது ஆகுபெயராய்ப் பாகனையுணர்த்திற்று.

இதனான் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது சிறுமைக்கெல்லைகூறிய ஈரடித்தாழிசையான் வந்த ஒத்தாழிசைக்கலி. (கூ)

எரு. நீரார் செறுவி னெய்தலொடு நீடிய
நேரித ழாம்ப னிரையிதழ் கொண்மார்
சீரார் சேயிழை யொலிப்ப வோடு
மோரை மகளி ரோதை வெரீஇ
யார லார்கை யஞ்சிறைத் தொழுதி
யுயர்ந்த பொங்க ருயர்மர மேறி
யமர்க்கண் மகளி ரலைப்பிய வந்நோய்
தமர்க்குரைப் பனபோற் பல்குரல் பயிற்று

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, கஙு-ம் சூத்.

முயர்ந்த போரி னொலிநல் லூரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்ய னாயின்
வதுவை நாளால் வைகலு மஃதியா
னோவேன் றோழி நோவாய் நீயென
வெற்பார்த் துறுவோய் கேளினித் தெற்றென ;

எல்லினை வருதி யெவன்குறித் தனையெனச்
சொல்லா திருப்பெ னாயி னொல்லென
விரியுளைக் கலிமான் றேரொடு வந்த
விருந்தெதிர் கோடலின் மறப்ப லென்றும் ;

வாடிய பூவொடு வாரலெம் மனையென
வூடி யிருப்பெ னாயி னீடா
தச்சா றாக வுணரிய வருபவன்
பொய்ச்சூ ளஞ்சிப் புலவே னாகுவல்;

பகலாண் டல்கினை பரத்த வென்றியா
னிகலி யிருப்பெ னாயிற் றான்றன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளி பெற்ற
புதல்வற் புல்லிப் பொய்த்துயி றுஞ்சும்;

ஆங்க,

விருந்தெதிர் கொள்ளவும் பொய்ச்சூ ளஞ்சவு
மரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவு
மாங்கவிந் தொழிபுமென் புலவி தாங்கா
தவ்வ விடத்தா னவையவை காணப்
பூங்கண் மகளிர் புனைநலஞ் சிதைக்கு
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன் றோழி கடனமக் கெனவே.

இது தலைவன் நாடோறும் வதுவையயர்ந்து வந்தால் யான் அதற்குப் பொறேனாக நீ ஊடலின்றி அவன் வந்தபொழுதே எதிர் கொள்ளுதியென்ற தோழிக்குத் தலைமகள் அதற்குக் காரணங் கூறியது.

(இ - ள்.) நீரார் * * * தெற்றெனா—எ-து, நீர் நிறைந்த செய்யில் வளர்ந்த ஒத்த இதழையுடைய நெய்தற்பூவோடே ஆம்பலினது நிரைந்த இதழையுடைய பூக்களைப் பறித்துக்கோடற்குத் தலைமை நிறைந்த சிவந்த சிலம்பு முதலியன ஒலிப்ப ஓடுகின்ற விளையாட்டினையுடைய மகளிருடைய ஆரவாரத்திற்கு வெருவியெழுந்து ஆரல்மீனை உண்டலையுடைய அழகிய சிறகினையுடைய பறவைத்திரள் உயர்ந்த மரத்தில் உயர்ந்த கொம்பிலே ஏறியிருந்து போரைச்செய்யுங் கண்ணினையுடைய மகளிர் தம்மை அலைக்க அந்தநோயை அம்மகளிருடைய சுற்றத்தார்க்குக் கூறுவனபோலப் பலகுரலாலே பலகாலுஞ் சொல்லும் உயர்ந்த போர்களால் உண்டாகிய ஆரவாரத்தினையுடைய நல்ல ஊரினையுடையவன் புதிய பரத்தையரை மணஞ்செய்தலை எக்காலமும் விரும்புவனாயின், அதற்கேற்ப நாள்களும் வதுவைக்கு உரிய நாளாயிருக்குமாயின், அவ்வொழுக்கத்திற்குத் தோழீ! யான் வருந்துவேன், நீ அதற்கு ஒருகாலமும் வருந்தாயெனச் சொல்லி என்னைப் பார்த்து வருத்தமுறுகின்றவளே! இனி அவன் செய்தியை நின் நெஞ்சு தெளியும்படியாகக் கேள்; எ-று.

உயர்ந்தாரோடு இழிந்தாரையுந் தத்தம் மனைகளினின்றுங் கொண்டுபோந்து வருந்த விடுதற்கு விறலி முதலிய வாயிலோர் செல்கின்ற ஆரவாரத்தைக் கேட்டு வெருவி அவனை அரிதிற்பெற்றுழி நுகர்ந்து வருந்தியிருக்கின்ற சேரிப்பரத்தையர் பின்பு அவன் செலுத்துகின்ற வாயில்கட்கு எய்தாத இடங்களிலே புலந்திருந்து அவன் வாயில்களைத் தம்மை வருத்தின நோவை அவர் சுற்றத்தார்க்குப் பலகாலும் முறைப்பட்டுக்கூறும் ஊரனென உள்ளுறையுவமங்கொள்க.

எல்லினை * * * லென்றும்—எ-து, வதுவை அயர்ந்தபின்பு விளக்கத்தினையுடையையாய் வாராநின்றாய், எம்மை எத்தன்மையாகக் கருதினையெனப் புலந்துகூறிப் பின்னர் ஒருமொழியைக் கூறுதிருப்பேனாயின் அது நீங்கப், பரந்த கழுத்தின்மயிரினையும் மனச்செருக்கினையுமுடைய குதிரை பூண்ட தேரிலே ஆரவாரிப்பக் கொண்டுவந்த விருந்தினரை எதிர்கொள்ளுகையினாலே எந்நாளும் புலவியை மறப்பேன்; எ - று.

வாடிப் * * * ளுதவல்—எ-து, முயக்கத்தால் வாடிய பூவோடே எம்மனையிடத்து வாராதேகொள்ளென்று கூறி யான் ஊடியிருப்பேனாயின் நீடியாமற் தன் பொய்ச்சூளுக்கு நாம் அஞ்சும் அச்ச

மே தான் ஊடலுணர்த்தும் வழியாக ஊடலுணர்த்துதற்கு வருபவனுடைய பொய்யாகிய சூளுக்கு அஞ்சிப் புலவேனாயிருப்பேன்; எ-று.

"அஞ்சியச்சுறுத்தலும்" என்றாற்போல அச்சம் அச்சு என விகாரமாய் நின்றது.

பகலாண் * * * றுஞ்சும்—எ-து, பரத்தைமையையுடையவனே! பகற்பொழுதெல்லாம் பரத்தையர் மனையிலே தங்கினாயென்று கூறி யான் அவனுடனே மாறுபட்டிருப்பேனாயிற் தான் தன்னுடைய தந்தையுடைய பெரிய பெயரைப் பெறுமுறையாற் பெற்ற புதல்வனைத் தழுவிப் பொய்யாகிய துயிலைக்கொண்டு வருந்தும்; எ-று.

துஞ்சுதல் இறந்துபடுதல். 'பகலாண்டல்கினை' எனவே உண்டிக்காலத்தும் வந்திலையென்றாள்.

ஆங்க, அசை.

விருந்தெதிர் * * * கெனவே—எ-து, தோழீ! பூப்போலுங் கண்ணையுடைய மகளிருடைய கைசெய்த நலத்தைக் கெடுக்கும் பொய்யைவல்ல மகிழ்நனது பரத்தைமையாலே வதுவையயர்ந்து வந்த மனைதோறும் அவர் புலவியாற் செய்த வடுக்களைக் கண்டிருக்க நமக்கு முறைமையாயிற்றென்று கருதி யான் நொந்திருப்பேன்; ஆயின் யான் இங்ஙனமாகவும் விருந்தினரை எதிர்கொள்ளுதலைச் செய்கையினாலும் அவன் பொய்யாகிய சூளால் நமக்கு வருத்தம் வருமென்று அஞ்சுகையினாலும் பெறுதற்கரிய புதல்வனை முயங்கிக்கொண்டு வருந்தக்காண்கையினாலும் என் நெஞ்சு புலவியை முழுக்கத் தாங்காது; தாங்காதபடியாலே அவ்விடத்துப் புலவி கெட்டுப்போகாநிற்கும்; இதுகாண் யான் உறுகின்ற துன்பமென்றாள்; எ - று.

இதனாற் பிறர் இகழ்ந்தமைபற்றித் தலைவிக்கு எள்ளல் பிறந்தது.

இது *"தரவே தானு நாலடி யிழிபா - யாறி ரண்டுயர் பேறவும் படுமே" என்றதனில் ஏறவுமென்ற உம்மையாற் சிறுபான்மை பதின்மூன்றடியும் வருமென்றலிற் பதின்மூன்றடியான் வந்த தரவுந் தாழம்பட்ட ஓசையின்றித் தரவகப்பட்ட இடைநிலைப்பாட்டும் ஆங்கவென்னுந் தனிச்சொல்லும் ஏழடிச்சுரிதகமும்பெற்ற ஒத்தாழிசைக்கலி.(௭௦)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், - செய்யுளியல், கூகூ-ம். சூத்.

எசு. புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்து
மணிவரி தைஇயுநம் மில்வந்து வணங்கியு
நினையுபு வருந்துமிந் நெடுந்தகை திறத்திவ்வூ
ரினையளென் றெடுத்தோதற் கனையையோ நீயென
வினவுதி யாயின் விளங்கிழாய் கேளினி;

செவ்விரல் சிவப்பூரச் சேட்சென்று யென்றவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந் தனைத்தற்கோ
கௌவைநோ யுற்றவர் காணுது கடுத்தசொல்
லொவ்வாவென் றுணராய்நீ யொருநிலையேயுரைத்ததை;

ஒடுங்கியாம் புகலொல்லேம் பெயர்தர வவன்கண்டு
நெடுங்கய மலர்வாங்கி நெறித்துத்தந் தனைத்தற்கோ
விடுத்தவர் விரகின்றி யெடுத்தசொற் பொய்யாகக்
கடிந்தது மிலையாய்நீ கழறிய வந்ததை;

வரிதேற்ருய் நீயென வணங்கிறை யவன்பற்றித்
தெரிவேய்த்தோட் கரும்பெழுதித் தொய்யில்செய்தனை
புரிபுநம்மாயத்தார் பொய்யாகவெடுத்தசொ [த்தற்கோ
லுரித்தென வுணராய்நீ யுலமந்தாய் போன்றதை;

எனவாங்கு,

அரிதினி யாயிழா யதுதேற்றல் புரிபொருங்
கன்றுநம் வதுவையு ணமர்செய்வ தின்றீங்கே
தானயந் திருந்த திவ்வூ ராயி னெவன்கொலோ
நாஞ்செயற் பால தினி.

இஃது *"அச்ச நீடினும்" என்றதனுற் கூட்டமுண்மைஉணர்ந்த தோழிக்கு உண்மைகூறுதற்கு அஞ்சிய அச்சம் நீட்டித்துத் தலைவிகூறியது. இது †"திணைமயக் குறுதலுங் கடிநிலை யிலவே" என்னுஞ் சூத்திரவிதியான் மருதத்துக் குறிஞ்சி வந்தது.

(இ - ள்.) புனையிழை * * * கேளினி—எ-து, கைசெய்த பூண்களைக் கிடக்கும் முறைமையிலே கிடக்கத் திருத்தியும் நாம் நீ

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௦-ம், சூத்.
† ,, ,, அகத்திணையியல், கஉ-ம் ,,

ரிலே விளையாட நமக்கோர் ஏதம் வாராமற் புறத்தே சூழ்ந்து திரிந்தும் அழகிய தொய்யிலெழுதியும் நம்முடைய சிற்றிலிலே வந்து ஏவற்றொ ழிலைச் செய்துங் கூட்டத்தை நினைந்து வருந்துகின்ற இந்தப் பெரிய தகுதிப்பாட்டையுடையவனிடத்தே கூட்டத்தையுடையளென்று இவ்வூரிலுள்ளார் பலகாலுங் கூறுதற்கு நீ அங்ஙனம் ஒருகூட்டத்தை யுடையையோவென்று கேட்கின்றாயாயின், விளங்குகின்ற இழையி னையுடையாய்! இப்பொழுது யான் கூறுகின்றதனைக்கேள்; எ - று.

செவ்விரல் * * * யுரைத்ததை—எ-து, அலர் தூற்றுதலில் லாதபொழுது வருத்தமுற்றிருந்த மகளிர் இது தகாதென்று ஆரா யாதே ஐயுற்றுக் கூறியசொல் இவட்குப் பொருந்தாவென்று அறி யாயாய் நீயும் அவர்கள் சொன்ன நிலையிலே சொன்னது சிவந்தவி ரல் மிகச்சிவப்புப் பரக்கும்படியாக நெடும்பொழுதுநின்று வாங்கி றுயென்றுசொல்லி அவன் கடல் நீர் வந்து ஏறின கழியிடத்துத் தண்டான்கோரையைப் பறித்துக் கிழித்துப் பாவையாக்கித் தந்த அச்சிற்றுபகாரத்திற்கோ? எ - று.

நீர் ஆகுபெயர். * "ஒன்றேவேறே" என்பதனால் வேற்றுநில மாயிற்று, மருதத்துத் தலைவி நெய்தலில் நேர்பட்டமையின்.

ஒடுங்கியாம் * * * வந்ததை—எ-து, தீயதொன்று எல்லா ருங் கைவிடப்பட்ட மகளிர் அங்ஙனங் கூறுதல் தீதென்று உண ரவல்ல விரகின்றிப் பல்காற் கூறிய சொல் பொய்யாகக் கெடும்படி தவிர்ந்ததுவுமில்லையாய் நீ என்னைக் கோபித்தற்கு வந்தது கூசி யாம் உட்புகுதலைப் பொருந்தேமாய் மீள அவன் அதனைக் கண்டு நெடிய கயத்தின் மலரைப் பறித்துப் புறவிதழை ஒடித்துத் தந்த அச்சிற்றுபகாரத்திற்கோ? எ - று.

தந்த, விடுத்த, இவை விகாரம்.

வரிதேற்றாய் * * * போன்றதை—எ-து, காவல்புரிந்து காக்கின்ற நம் ஆயத்தார் காவல் பொய்யாம்படி இவ்வூரார் பலகாற் கூறிய கூற்றை நீ பொய்யென்றுணராயாய் இவட்கு உரித்தென்று கருதி உலமந்தாரைப்போலே இருந்தது நீ தொய்யிலெழுத அறியாயெ ன்று கூறி வளைந்த முன்கையை அவன் பிடித்துத் தெரிந்த வேய் போலுந் தோளிலே கரும்பை எழுதித் தொய்யிற்குழம்பான் மற்றும் எழுதுதற்கு உரியனவற்றை எழுதின அச்சிற்றுபகாரத்திற்கோ? எ-று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ-ம் சூத்.

செய்ர, உரித்து, இவை விகாரம்.

எனவாங்கு—எ-து, என்றியானினக்குக் கூறும்படியாக; எ-று.

ஆங்கு, அசை.

அரிதினி * * * இனி—எ-து, நின் நெஞ்சிடத்து நிகழ்ந்த இக்காரியம் ஆயிழாய் இனித் தெளிவித்தலரிது. இனி நம்முடைய் வதுவையிடத்தே நஞ் சுற்றத்தார் சேர விரும்பி அன்று செய்யுங் காரியத்தை இன்று இவ்விடத்தே இவ்வூர் விரும்பியிருந்ததாயின் அதற்கு நாஞ் செய்தற்பகுதியையுடைய காரியம் எக்காரியம்? எ - று.

இது தலைவி தோழிக்குக்கூறியது.

*"பன்னூறு பகையினுந் தன்வயின் வரூஉ - நன்னய ம ருங்கி ளுட்டம் வேண்டலிற் - றுணைச்சுட்டுக் கிளவி கிழவிய தா கும் - துணையோர் கரும மாக லான" என்பதனான் வினவுதியாயி னென நாட்டம் நிகழ்ந்தவாறுஞ் சுரிதகத்துக் கூட்டங் கூறித் து ணைச்சுட்டுக் கிளவி கிழவியதாயவாறுங் காண்க.

இதனாற் தலைவிக்கு அச்சம் நிகழ்ந்தது. இதனைத் தோழி கூற்றாக்கி உரைப்பாரும் உளர்.

இஃது ஆசிரியத்தளையுங் கலித்தளையும் விரவி †ஐஞ்சீரடியும் வந்த வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. ‡"வெண்பா வியலினும் பண்புற முடியும்" என்பதனால் வெள்ளைச்சுரிதகத்தாலி ற்றது. இது §"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு - மைஞ்சீ ரடியு முளவென மொழிப" என்பதனான் ஐஞ்சீரடியும் வந்தது. (கக)

எஎ. இணையிரண் டியைந்தொத்த முகைநாப்பட் பிறிதின்
துணையின்றித் தளைவிட்ட தாமரைத் தனிமலர் [யாதுந்
திருமுக மிறைஞ்சினள் வீழ்பவற் கினைபவ
ளரிமதர் மழைக்கண்ணீ ரலர்முலைமேற் றெறிப்பபோற்
றகைமலர்ப் பழனத்த புள்ளொற்ற வொசிந்தொல்கி
மிகநனி சேர்ந்தவம் முகைமிசை யம்மல
ரகவிதழ்த் தண்பனி யுறைத்தரு மூரகேள்;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், ௩உ-ம் சூத்.
† "தானயந் திருந்தவிவ் வூராயி னெவன்கொலோ" என நாற்சீராக்கினும் அமையும்.
‡ தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், எஎ-ம் சூத்.
§ ,, ,, ,, சுரு-ம் ,,

தண்டளிர்த் தகைபூத்த தாதெழி னலஞ்செலக்
கொண்டுநீ மாறிய கவின்பெறல் வேண்டேன்மன்
னுண்டாதல் சாலாவென் னுயிர்சாத லுணர்ந்துநின்
பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்;

பொன்னெனப் பசந்தகண் போதெழி னலஞ்செலத்
தொன்னல மிழந்தகண் டுயில்பெறல் வேண்டேன்மன்
னின்னணங் குற்றவர் நீசெய்யுங் கொடுமைக
ளென்னுழை வந்துநொந் துரையாமற் பெறுகற்பின்;

மாசற மண்ணுற்ற மணியேசு மிருங்கூந்தல்
வீசேர்ந்துவண்டார்க்குங் கவின்பெறல்வேண்டேன்மன்
னோய்சேர்ந்த திறம்பண்ணி நின்பாண னெம்மனை
நீசேர்ந்த வில்லினுய் வாராமற் பெறுகற்பின் ;

ஆங்க,

கடைஇய நின்மார்பு தோயல மென்னு
மிடையு நிறையு மெளிதோநிற் காணிற்
கடவுபு கைத்தங்கா நெஞ்சென்னுந் தம்மோ
டுடன்வாழ் பகையுடை யார்க்கு.

இது பரத்தையர் சேரியிற் சென்று வந்த தலைவனோடு ஊடிய தலைவி ஊடறீர்கின்றாள் கூறியது.

(இ-ள்.) இணையிரண் * * * மூரகேள்—எ-து, தாமரையிற் தனித்த மலர்கள் இரண்டு தம்மிற் சேர்ந்து ஒப்பொத்த முகைகளுக்கு நடுவே நின்று வேறொரு பூக்கள் சிறிதுந் தன் அருகு சேர்தலின்றி முறுக்கு அவிழ்ந்தன; தான் விரும்பப்பட்டவனுக்கு அழகினையுடைய முகங் கவிழ்ந்து அழுகின்றவளுடைய செவ்வரியினையுஞ் செருக்கினையுங் குளிர்ச்சியினையுமுடைய கண்ணின் நீர் அடிக்கொண்ட முலைமேல் வீழ்வனபோல அப்பூக்கள் அழகினையுடைத்தாகிய மலர்களையுடைய பழனத்திடத்தனவாகிய பறவைகள் வந்து தாக்க மிகவுஞ் சாய்ந்து வளைந்து மிகவும் அணைந்த அந்த முகைகளின்மேலே தம்முடைய உள்ளின் இதழினின்ற நீரைத் துளித்தலைத் தருகின்ற ஊரனே கேள் ; எ-று,

அம்மலர் புள்ளொற்ற ஒல்கி அம்முகைகளின்மேலே தண் பனியுறைத்தரும் ஊர என்றதனுற் சேரிப்பரத்தையர் நின்மனைவியை இகழ்ந்து வந்து அவர்மனை தோறும் நின்னைத் தேடுகையினுலே அவர் வருந்தி அழுகின்ற ஊரவெனத் தலைவி புலந்து கூறினுள்.

அவிழ்ந்தன எள வினைமுற்ருக உரைக்க.

நண்டளிர்த் * * * பெறுகற்பின்—எ-து, உண்டென்று கூறுதல் அமையாத என்னுயிர் அந்நிலையினும் நில்லாமற் சாதலை உணர்ந்துவைத்தும் நின் பெண்டென்று பிறர்கூறும் பழி போசப்பெறிற் குளிர்ந்த தளிரிடத்தே வீழ்ந்து அழகு பொலிவுபெற்ற தாதுபோலும் எழிலையுடைய மாமையுஞ் சுணங்கும் எம்மிடத்தினின்றும் போம்படியாக வாங்கிக்கொண்டு நீ பின்பு ஒருகாலுந் தாராதுவிட்ட அழகை யான் பெறுதலை விரும்பேன்; அதனுற் பெற்றதென்? பெண்டென்னும் பெயர் போகாதாயிற்றே; எ-று.

பெறுகற்பின், வினைத்திரிசொல். மன், கழிவு.

சாதலுணர்ந்துமென்பது நெடுங்காலங் கைவிட்டமை தோன்றநின்றது.

பொன்னெனப் * * * பெறுகற்பின்—எ-து, கண்கள் பூவினது அழகையுடைய நலம்போம்படியாகப் பொன்போலப் பசந்தன; நின்ஞல் வருத்தமுற்ற பரத்தையர் நீ செய்யுங் கொடுமைகளை என்னிடத்தேவந்து வெறுத்துச்சொல்லாமையை யான் பெறின் இயற்கைநலத்தையும் இழந்த அக்கண் துயில்பெறுதலை விரும்பேன்; அதனுற் பெற்றதென் ? அங்ஙனம் என்னை இகழ்ந்து கூறுதல் தவிராரோ; எ-று.

பசந்தனவென முற்ருக்குக. இயற்கை நலத்தையும் இழந்த அக்கண்ணெனச் சுட்டாக்கி உரைக்க.

மாசற * * * பெறுகற்பின்—எ-து, நின்னுடைய பாணன் நோவுசேர்ந்த திறப்பண்ணைப்பண்ணி எம்முடைய மனையிடத்தே நீ சென்று சேர்ந்த பரத்தையர் மனையை என்னைக் கேட்டு வாராதிருத்தலை யான் பெறின் மாசறக் கழுவுதலுற்ற நீலமணியை நீ எனக்கு ஒவ்வாயென்று ஏசுங் கரியகூந்தல் பூவணிந்து வண்டுகள் ஆரவாரிக்கும் அழகைப்பெறுதலை யான் விரும்பேன்; அதனுற் பெற்றதென்? அவன் வினவுதலைத் தவிரானே; எ-று.

எம்மனை, வேண்டேனென்பது ஒருமைப்பன்மைமயக்கம்.

ஆங்க, அசை.

கடைஇய * * * யார்க்கு—எ-து, *தம்முறு விழுமம் பரத்தையர் கூறினு - மெய்ம்மை யாக வவர்வயி னுணர்ந்து - தலைத்தாட் கழறற மெதிர்ப்பொழு தின்றே - மலிதலு மூடலு மவையலங் கடையே.'' என்பதனாற் பரத்தையர்முன்னர் அண்மையின் மலிதலும் ஊடலும் நிகழ்ந்துத் தலைக்கழறினுள் நின்னைக் காணில் என்னை உன்னிடத்தே செலுத்தித் தானும் நின்னிடத்தே தங்கியிருந்து நெஞ்சென்று சொல்லப்படுந் தம்மோடு ஒன்றாய் வாழப்படுகின்ற உட்பகையையுடையார்க்கு முன்னர் எம்மை நின்மேல் வீழ்வித்த நின் மார்பைக் கூடக்கடவேமல்லேமென்று கருதும் நிறையென்னுங் குணத்தையும் பெறுதலெளிதோ? அஃது அரிதன்றோ? என ஊடறீர்ந்தாள்; எ-று.

இடையும் நெஞ்சென்க. நிறையுமென்னும் உம்மை சிறப்பு.

இதனாற் தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது. † "அருண்முந் துறுத்த வன்புபொதி கிளவி - பொருள்பட மொழிதல் கிழவோட்கு முரித்தே.'' என்பதனால் 'வாராமற் பெறுகற்பின்' என்ற தலைவி 'நிற்காணிற் கடவுபு கைத்தங்கா நெஞ்சு' என அவனாற்றாமை கண்டு அருளி நெஞ்சு ஏவல் செய்தன என்று ஓர் பொருள்பயப்பத் தன் அன்பினைக் கரந்தவாறு காண்க.

இது வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற ஒத்தாழிசைக்கலி. (௬௨)

எஅ. பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
யின்மல ரிமிர்பூதுந் துணைபுண ரிருந்தும்பி
யுண்டுறை யுடைந்தபூப் புனல்சாய்ப்பப் புலந்தூடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென
வதுகைவிட் டகன்றோரீஇக் காக்கிற்பான் குடைநீழற்
பதிபடர்ந் திறைகொள்ளுங் குடிபோலப் பிறிதுமொரு
பொய்கைதேர்ந் தலமரும் பொழுதினான் மொய்தப
விறைபகை தணிப்பவக் குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுன னீங்கவந் தத்தும்பி யம்மலர்ப்
பறைதவிர் பசைவிடூஉம் பாய்புன னல்லூர;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௪௧-ம் சூத்.
† ,, ,, கற்பியல் ௨௦-ம் ,,

நீங்குங்கா னிறஞ்சாய்ந்து புணருங்காற் புகழ்பூத்து
நாங்கொண்ட குறிப்பிவ ணலமென்னுந் தகையோதா
னெரியிதழ் சோர்ந்துக வேதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறுங் கண்ணியை யீங்கெம்மில் வருவதை;

சுடர்நோக்கி மலர்ந்தாங்கே படிற்கூம்பு மலர்போலெண்
ணுடர்நீப்பிற் றெருகுமிவ ணலமென்னுந் தகையோதா
னலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர்கூந்தன்
மலர்நாறு மார்பினை யீங்கெம்மில் வருவதை;

பெயினந்திவறப்பிற்சாம்புலத்திற்குப்பெயல்போல்யான்
செலினந்திச்செறிற்சாம்பு மிவளென்னுந்தகையோதான்
முடியுற்ற கோதைபோல் யாம்வாட வேதிலார்
தொடியுற்ற வடுக்காட்டி யீங்கெம்மில் வருவதை;

ஆங்க,

ஐய வமைந்தன் றனைத்தாகப் புக்கீமோ
வெய்யாரும் வீழ்வாரும் வேறுகக் கையின்
முகைமலர்ந் தன்ன முயக்கிற் றகையின்றே
தண்பனி வைக லெமக்கு.

இது பரத்தையர் சேரியிற் சென்று வந்த தலைவனோடு ஊடிய காமக்கிழத்தி ஊடறீர்கின்றாள் கூறியது.

(இ - ள்.) பன்மலர்ப் * * * னல்லூர—எ-து, பலமலர்களையுடைத்தாகிய மருதநிலத்திடத்தனவாகிய பசிய இலைகளையுடைய தாமரையினது கட்கினிய மலரை ஆரவாரித்துச் சென்று ஊதுந் துணையைப்புணர்ந்த கரிய தும்பி பலரும் நீர் உண்ணுந் துறையில் அலர்ந்த பூவைப் பெருகி வந்த நீர் சாயப்பண்ணுகையினாலே அப்பூவிலிருந்தலை வெறுத்து அப்புனலுடனே ஊடி நற்குணங்களையுடைய நல்ல நாட்டிற்கு உரிய பகை தம்மிடத்தே வந்ததாக அந்நாட்டை இருப்பல்லவென்று கைவிட்டு நீங்கிப் போய்த் தந் நாட்டைக் காக்கின்றவனுடைய குடைநிழலினூர்களை இருப்பாக நினைத்துத் தங்குதல்கொள்ளுங் குடிமக்களைப்போல வேறுமொரு பொய்கையைத் தனக்கு இருப்பாக ஆராய்ந்திருந்து பழைய பொய்கையை நினைத்துச் சுழல்கின்ற காலத்தே அவ்விறைவன் வந்த பகையின் வலிகெடும்படியாக அப்ப

கையைப்போக்க அக்குடிமக்கள் பதியிடத்தே மீண்டு சென்ருற்போல அந்நிலத்துள்ளார் போக்க அப்பெரும்புனல் நீங்குகையினாலே மீண்டுவந்து அத்தும்பி அந்தத் தாமரைப்பூவிலே பறத்தலைத் தவிர்ந்து இளைப்பாறும் பரந்த புனலையுடைய நல்ல ஊரனே; எ-று.

பகை தலைவந்தென இறைகொள்ளுங் குடிபோலத் தும்பி ஊடித் தேர்ந்து அலமரும்பொழுதிலே அவ்விறை பகைதணிப்ப அக்குடி பதிபெயர்ந்தாற்போலே புனனீங்க மீண்டுவந்த தும்பி அம்மலரிலே அசைவிடும் ஊர என்றதனாற் பல பரத்தையரையுடைய பரத்தையர் சேரியிலே சிறந்தாள் ஒரு பரத்தையை ஆரவாரத்துடனே நீ வதுவையயர அவளை நின் காதற்பரத்தை வந்து கோபித்துத் தீங்கு கூறுகையினாலே வதுவையயர்ந்தவளிடத்துக் கூட்டத்தையும் வெறுத்துக் காதற்பரத்தையொடும் ஊடி வேருர் பரத்தையர் சேரியிலே சென்றிருந்து நீ வதுவையயர்ந்தவளை நினைத்து வருந்துகின்ற காலத்தே அவள் சுற்றத்தார் காதற்பரத்தை கோபத்தை நீக்க மீண்டு சென்று அவளிடத்தே தங்குகின்ருயெனக் காமக்கிழத்தி புலந்துகூறினாள். இது வினையுவமப்போலி. ஏனையுவமமும் வினையுவமம்.

நீங்குங்கா * * * வருவதை—எ-து, எரிபோலும் நிறத்தையுடைய இதழ்கள் வாடி உதிரப் பரத்தையரைப் புணர்ந்தபடியைச் சான்ருய் எமக்குக் கூறுங் கண்ணியையுடையையாய் எம்முடைய இல்லில் யாம் இருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை இவளுடைய நலம் யாம் பிரியுங்காலத்து நிறங்கெட்டுப் புணருங்காலத்துப் பிறர் புகழ்நல் பொலிவுபெற்று நாம் மனத்திற் கொண்ட கருத்தாயிருக்குமென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோகாண்; எ-று.

சுடர்ரோக்கி * * * வருவதை—எ-து, பிறர் கூறும் அலருக்கு நாணி மறைத்த காமநோய் ஒழுக்கத்தெல்லையைக் கடவாநிற்கப் பிறர் கூந்தலின் மணம் நாறுகின்ற மார்பினையுடையையாய் எம்முடைய இல்லிலே யாம் இருக்கின்ற இடத்தே வருகின்ற நிலைமை இவள் நலம் ஆதித்தனைக் கண்டு அலர்ந்த தாமரைப்பூ அந்த ஆதித்தன் அடங்குமளவிற் குவிந்தாற்போல நினது தொடர்ச்சி நீங்கின் வறிதுபட்டிருக்குமென்னுந் தகைமைப்பாடோதான்? எ-று.

பெயினந்தி * * * வருவதை—எ-து, முடியிலே பொருந்தும் மாலைபோல யாம் வாட நின் பரத்தையரது தொடியினாலுற்ற வடுவினைக் காட்டி இவ்விடத்து எம் இல்லிலே யாம் இருக்கின்ற

இட்டத்தே வருகின்ற நிலைமை இவள் மழைபெய்யிற் செருக்கி அது பெய்யாதொழியிற் புலர்கின்ற நிலத்திற்கு அப்பெயல்கள் பெய்து விளைவித்தும் பெய்யாது கெடுத்தும் போமாறுபோல யான் சென்றேனாயிற் செருக்கிச் செல்லாமல் வருத்திற் கெடுமென்று நீ குறித்திருக்குந் தகைமைப்பாடோதான்; எ - று.

ஆங்க, அசை.

ஐய * * * லெமக்கு—எ-து, நும் பரத்தைமையாற் பலரும் வியக்கத்தக்கன எல்லாம் நுமக்குப் பொருந்திற்று; நும்மைவிரும்புவாரும் நீர்தாம் விரும்புவாருமாகிய பரத்தையரும் உமக்கு வேறுபடும்படியாக ஈண்டு நில்லாதே அவர் மனைக்கண்ணே செல்வீராக; தன் செவ்வியான் அலராது கையினால் வலிய அலர்த்துதலின் முகையலர்ந்தாற்போல இனிதல்லாத முயக்கத்தில் எமக்குக் குளிர்ந்த பனிக்காலம் அப்படிக் கொடிதாயிருக்க நும்மையின்றித் தங்குதல் தகைமையில்லையோ அது தகைமையுண்டோவென ஊடல் தீர்கின்றாள் கூறினாள்; எ - று.

தண்பனி அனைத்தாகவென்க.

இது கைம்மிகலும் இழிவுமென்னும் மெய்ப்பாடுகள் உணர்த்திற்று.

இது தரவுந் தாழிசையும் இசைநிலையாகிய இடைநிலைக்கிளவியும் வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கஙு)

எகூ. புள்ளிமி ழகல்வய லொலிசெந்நெ லிடைப்பூத்த
முள்ளரைத் தாமரை முழுமுதல் சாய்த்ததன்
வள்ளித ழுறநீடி வயங்கிய வொருகதி
ரவைபுக ழரங்கின்மே லாடுவா ளணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம்போற் றோன்றுந்
தகைபெறு கழனியந் தண்டுறை யூரகேள்;

அணியொடு வந்தீங்கெம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகல நனைப்பவாற்
றோய்ந்தாரை யறிகுவென் யானெனக் கமழுநின்
சாந்தினாற் குறிகொண்டாள் சாய்குவ ளல்லளோ;

புல்லலெம் புதல்வனைப் புகலக னின்மார்பிற்
பல்காழ்முத் தணியாரம் பற்றினன் பரிவானுன்
மாணிழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பிற்
பூணினாற் குறிகொண்டாள் புலக்குவ ளல்லளோ;

கண்டேயெம் புதல்வனைக் கொள்ளாதி நின்சென்னி
வண்டிமிர் வகையிணர் வாங்கினன் பரிவானு
னண்ணியார்க் காட்டுவ திதுவெனக் கமழுநின்
கண்ணியாற் குறிகொண்டாள் காய்குவ ளல்லளோ;

எனவாங்கு,

பூங்கட் புதல்வனைப் பொய்பல பாராட்டி
நீங்கா யிகவாய் நெடுங்கடை நில்லாதி
யாங்கே யவர்வயிற் சென்றி யணிசிதைப்பா
னீங்கெம் புதல்வனைத் தந்து.

இது செல்லாக் காலைச் செல்கெனக் கூறி விடுத்தது. அது தலைவன் இனிச் செல்லானென்பது இடமுங் காலமும்பற்றி அறிந்த காலத்து ஊடலுள்ளத்தாற் கூடப் பெறாதாள் செல்கெனக் கூறி விடுத்தாற்றுதலாம்.

(இ - ள்.) புள்ளிமி * * * யூரசேள்—எ-து, பறவைகள் ஒலிக்கின்ற அகன்ற வயலிடத்து ஒலிக்கின்ற செந்நெலிடையிலே பூத்த முள்ளை அரையிலேயுடைய தாமரையை ஒன்றாகிய செந்நெ ன் முதல் சாய்க்கையினாலே இதனுடைய வள்ளிய இதழையுறும்படி வளர்ந்து அப்பூவிலே கிடந்து விளங்கின ஒரு கதிர் அவையினுள்ளார் புகழப்பட்ட அரங்கின்மேலே ஆடுகின்றவளுடைய தலைச்கோலத்தினின்று நுதலிலே தாழும்படி ஒரு வடமாகச் செருகி வைத்த வயந்தகமென்னும் அணிபோலத் தோன்றும் அழகு பெறுகின்ற கழனியையுடைத்தாகிய அழகினையுடைய குளிர்ந்த துறையினையுடைய ஊரனே கேள்; எ - று.

சாய்த்துவயங்கியவென முடிக்க. அணி, தலைச்சோலம். பரத்தையர்சேரியிற் பரத்தையரிடத்தே பொலிவுபெற்ற நின்னை அவர்கள் தம்வசமாகக் கொள்கையினாலே அவர்களில் ஒருத்தி நின்னிடத்தே விடாமற் தங்கி நினக்கு அணியாய்த் தோன்றாநின்றாளென உள்ளுறையுவமங் கொள்க.

அணியொடு * * * னல்லளோ—எ-து, பரத்தையரிடத்து அணிந்த அணியுடனே இவ்விடத்தே வந்து எம்புதல்வனை எடாதே கொள்; அவனுடைய மணியை ஒக்கின்ற சிவந்த வாயின் நீர் நின் மார்பினுடைய பரப்பையெல்லாம் நனைக்கப்படுவதொன்றாய் இராநின்றது ; அஃது அங்ஙனம் நனைத்தால் யான் நின் மார்பின் முயங்கினை அறிவேனெனச் சொல்லிக் கமழ்கின்ற நின்னுடைய சந்தனத்தாலே பிறர்முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற்கொண்டவள் வருந்துவளல்லளோ? எ - று.

புல்லலெம் * * * னல்லளோ—எ-து, எம் புதல்வனை நீ தழுவாதேகொள்; பரத்தையர் கொண்டாடுதலையுடைத்தாகிய நின்னுடைய அகன்ற மார்பிற் கிடக்கின்ற பல வடங்களையுடைத்தாகிய முத்து அணிந்த ஆரத்தைப் பிடித்து அறுப்பானொருவனாய் இராநின்றான்; அவன் அறுத்தால் மாட்சிமைப்பட்ட இழையினையும் மடப்பத்தினையுமுடைய மகளிர் முயங்கின முயக்கத்தை நின் மார்பிற் கிடக்கின்ற பூணாலே கருதுதலை மனத்தாற்கொண்டவள் புலப்பளல்லளோ ; எ - று.

கண்டேயெம் * * * னல்லளோ—எ-து, எம் புதல்வனைத் தேடி எடுத்துக்கொள்ளாமல் அவன் தானே வரக் கண்டு எடாதே கொள்; நின்னுடைய தலையில் வண்டுகள் ஒலிக்கின்ற கூறுபாட்டையுடைய பூங்கொத்திற் பூக்களை வாங்கி அம்மாலையை அறுப்பானொருவனாய் இராநின்றான்; அவன் அறுத்தால் நின்னை முயங்கினவர்களை அறிவிப்பது இக்கண்ணியென்று கூறி மணக்கின்ற நின் கண்ணியாலே பிறர் முயக்கத்தைத் தான் கருதுதலை மனத்தாற்கொண்டவள் கோபிப்பளல்லளோ ; எ - று.

எனவாங்கு, அசை.

பூங்கட் * * * தந்து—எ-து, பூப்போலுங் கண்ணினையுடைய புதல்வனைப் பல பொய்களைச் சொல்லிப் பாராட்டிப் புதல்வனை விட்டுப் போகாயாய்ப் பரத்தையர் குறிக்கொண்ட நிலைமையைக் கடவாயாய்ப் பெரிய வாயிலில் நில்லாதேகொள்; நின்றால் அவன் அணியைச் சிதைப்பானொருவனாய் இருப்பனாதலால் எம்புதல்வனை இங்கே தந்து அப்பரத்தையர்சேரியிலே அங்ஙனங் குறிக்கொண்ட பரத்தையரிடத்தே செல்வாயாக ; எ - று.

'ஈங்கெம் புதல்வனைத் தந்து' என்றது தலைவனிடத்தினின்றும் புதல்வனைச் சிறைத்தது.

இது தலைவற்குக்கைம்மிகலுந் தலைவிக்கிளிவரலும் பிறந்தது.

இது தரவுந் தாழிசையும் இசைநிலைத் தனிச்சொல்லுங் கட்டளையாகிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (கச)

அ0. நயந்தலை மாறுவார் மாறுக மாறுக்
கயந்தலை மின்னுங் கதிர்விடு முக்காழ்
பயந்தவெங் கண்ணுர யாங்காண நல்கித்
திகழொளி முத்தங் கரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்து பருதி சுமப்பக்
கவழ மறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றிற் பைபய வாங்கி
யரிபுனை புட்டிலி னுங்கணீர்த் தீங்கே
வருகவெம் பாக மகன்;

கிளர்மணி யார்ப்பச் சாஅய்ச்சாஅய்ச் செல்லுந்
தளர்நடை காண்ட லினிதுமற் றின்னுதே
யுளமென்னு நுந்தைமாட் டெவ்வ முழப்பார்
வளைநெகிழ் பியாங்காணுங் கால்;

ஐய, காமரு நோக்கினை யத்தத்தா வென்னுநின்
றேமொழி கேட்ட லினிதுமற் றின்னுதே
யுய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச்சாஅய்மா
ரெவ்வநோ யாங்காணுங் கால்;

ஐய, திங்கட் குழவி வருகென யானின்னை
யம்புலி காட்ட லினிதுமற் றின்னுதே
நல்காது நுந்தை புறமாறப் பட்டவ
ரொல்குமிடை யாங்காணுங் கால்;

ஐயஎங்!, காதிற் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
போதில் வறுங்கூந்தற் கொள்வதை நின்னையா

னேதிலார் கண்சாய நுந்தை வியன்மார்பிற
ரூதுதேர் வண்டின் கிளைபாடத் தைஇய
கோதை பரிபாடக் காண்கும்.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவி மகனுக்கு உரைத்தது.

(இ - ள்.) நயந்தலை * * * மகன்—எ-து, நின்னிடத்து அன்பு ஒழிவார் ஒழிந்தேபோக நின்னைப் பெற்ற எம்முடைய கண்ணிறைய அன்பு மாறாத யான் நின் வரவைக் காணும்படி அருளி மென்மையையுடைய தலையிடத்தே கிடந்து மின்னும் ஒளிவிடுகின்ற மூன்று வடத்தையுடைய பாகனாகிய மகன் விளிம்பிடத்தே விளங்குகின்ற ஒளியையுடைய முத்தை அரும்பாக அழுத்திப் பவழத்தாற் செய்த வட்டப்பலகை சுமந்துநிற்ப நின்ற கவழத்தைக் கொள்ளுதலறியாத கையாற் புனைந்த வேழத்தை நின்னுடைய காலிற் கட்டின உள்ளிடுமணியாற் புனைந்த கெச்சையாலே யாரவாரிப்ப நீ வளைத்து முப்புரியாக முறுக்கின கயிற்றாலே பையப் பைய ஈர்த்து இங்கே வருவாயாக; எ - று.

நயந்தலை, வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றியது. மகனென்றது இயல்புவிளி.

கிளர்மணி * * * கால்—எ-து, விளங்கின மணிகள் ஆரவாரிப்ப அசைந்தசைந்து நடக்குந் தளர்ந்த நடையைக் கண்டு மகிழ்ந்திருத்தல் எமக்கு இனிது; அஃதொழிந்து நுந்தையிடத்து எங்கள் உள்ளமென்று கூறி வளைநெகிழாநின்று வருத்தத்திலே தங்கும் மகளிரை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது; எ - று.

மற்று வினைமாற்று. இது நின் தந்தையாலுற்ற வருத்தம் நீங்குதற்கு நின்னைக்கொண்டு பொழுதுபோக்குவேமென்பது போதரநின்றது. மேல்வருவனவும் அன்ன.

ஐய * * * கால்—எ-து, ஐயனே! விருப்பம் மருவுகின்ற அழகினையுடையையாய் அத்தா அத்தாவென்று கூறும் நினது இனிய மொழியைக் கேட்டு மகிழ்ந்திருத்தல் இனிது; அஃதொழிந்து நுந்தை மகளிர் நலஞ் சாய்தற்கு அவர் நலத்தை உண்கையினாலே உய்வின்றிச் சாய்ந்துற்ற எவ்வத்தைத் தரும் நோயை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது; எ - று.

காமர் கடைகுறைந்து நின்றது. மரு ஈற்றுமிசை உகரம் மெய்யொடுங்கெட்டு அவ்வீறு சந்தியாற் கெட்டது. அத்தா கடைகுறைந்து நின்றது. சாய்மார் மாரீற்று எதிர்காலமுற்று உணர்த்திற்று. அது நலனுணவென்னும் வினையோடு முடிந்தது.

இஃது ஒப்புவழியுவத்தல், காமருநோக்கு இனிதென்றலின்.

ஐய * * * கால்—எ-து, ஐயனே! திங்களாகிய குழவீ! நீ இவனுடனே விளையாடும்படி வருவாயாகவென்று கூறி அவ்வம்புலிக்கு யான் நின்னைக் காட்டி மகிழ்தல் எமக்கினிது. அஃதொழிந்து நுந்தை அருளாதே தனக்குப் புறஞ்சொல் உண்டாக அருளைக் கைவிடப்பட்ட மகளிருடைய சிறிய மருங்குலை யாங் காணுமிடத்து அக்காட்சி இன்னாது.

*உயர்திணைமருங்கின் ஒழிந்துஞ்சிறுபான்மைவருமென்றலின் எவ்வமுழப்பார்நலனுணப்பட்டாரொன இரண்டாவதுவிரியாதுநின்றது.

ஐய, எங் * * * காண்கும்—எ-து, ஐயனே! எம்முடைய காதிற் பொன்னாற்செய்த மகரக்குழையை வாங்கிக்கொண்டுபோய் எம்மிடத்தே மீண்டுவருந்தோறும் எம்முடைய பூ இல்லாத வறவிய கூந்தலிலே நின்னை யாங்கள் வைத்துக்கொள்வது நுந்தை அகற்சியையுடைய மார்பிற் றாதைத் தேடும் வண்டின் சுற்றம் விழும்படி கட்டின கோதையை அறுத்து நீ விளையாடுதற்கு; நீ அங்ஙனம் விளையாடினால் யாமும் எமக்குப் பகையாயவரிடத்து அவன் வைத்த அன்பு தேயக் காண்போம்; எ - று.

இனி, ஏதிலார் இடஞ்சாயக் காண்போமன்றுமாம்.

இது தலைவிக்கு இழிவுந் தலைவற்குக் கைம்மிகலும் பிறந்தது.

இது தரவு வெண்பாவாய் ஏனைவெண்பாக்கள் ஐயவென்பதனோடு கூடி ஐஞ்சீரடுக்கிவருதலிற் கலிவெண்பாட்டு. †"தரவும்போக்கும்" என்பது போக்கினைத் தரவோடு கூறியவதனாற் றரவிறுதிபோல இது காண்கும் எனத் தேமாவாலிற்றது. (௧௫)

அக. மையற விளங்கிய மணிமரு ளவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூ ணணைத்தரப்

---

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, ௧௫-ம் சூத்.
† ,, பொருளதிகாரம், செய்யுளியல், ௧௫௭-ம் ,,

பொலம்பிறை யுட்டாழ்ந்த புனைவினை யுருள்கலன்
நலம்பெறு கமழ்சென்னி நகையொடு துயல்வர
வுருவெஞ்சா திடைகாட்டு முடைகழ லந்துகி
லரிபொலி கிண்கிணி யார்ப்போவா வடிதட்பப்
பாலோ டலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வறேர் கையி னியக்கி நடைபயிற்றா
வாலமர் செல்வ னணிசால் பெருவிறல்
போல வருமென் னுயிர்;

பெரும, விருந்தொடு கைதுவா வெம்மையு முள்ளாய்
பெருந்தெருவிற் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாங் கேட்ப
மருந்தோவா நெஞ்சிற் கமிழ்த மயின்றற்றாற்
பெருந்தகாய் கூறு சில;

எல்விழாய், சேய்நின்றுநாங்கொணர்ந்தபாணன்சிதைந்
வாயோடி யேஞ்திப் பாடிய மென்றாக [தாங்கே
நோய்நாந் தணிக்கு மருந்தெனப் பாராட்ட
வோவா தடுத்தடுத்தத் தத்தாவென் பான்மாண
வேய்மென்றோள் வேய்த்திறஞ் சேர்த்தலு மற்றிவன்
வாயுள்ளிப் போகா னரோ;

உள்ளி யுழையே யொருங்கு படைவிடக்
கள்வர் படர்தந் ததுபோலத் தாமெம்மை
யெள்ளுமார் வந்தாரே யீங்கு;

ஏதப்பா டெண்ணிப் புரிசை வியலுள்ளோர்
கள்வரைக் காணது கண்டேமென் பார்போலச்
சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவனின்
னுணை கடக்கிற்பார் யார்;

அதிர்வில் படிறெருக்கி வந்தென் மகன்மேன்
முதிர்பூண் முலைபொருத வேதிலாண் முச்சி
யுதிர்துக ளுக்கநின் னாடை யொலிப்ப
வெதிர்வளி நின்றாய்நீ செல்;

இனியெல்லாயாம், தீதிலேமென்றுதெளிப்பவுங்கைநீவி
யாதொன்று மெங்கண் மறுத்தர வில்லாயின்
மேதக்க வெந்தை பெயரனை யாங்கொள்வேந்
தாவா விருப்பொடு கன்றியாத் துழிச்செல்லு
மாபோல் படர்தக நாம்.

இது தலைவன் பரத்தையிற்பிரிந்து வந்துழித் தலைவி தன் மக னைத் தழீஇ விளையாடுகின்ற விளையாட்டின்கட் தன் வரவு அறியா மைச்சென்று நின்ற தலைவன் அவள் ஊடலுணர்வனவும் உறழ்ந்து சொல்லி மகன்வாயிலாக ஊடறீர்ந்தது.

(இ - ள்.) மையற * * * னுயிர்—எ-து, மாசற விளங்கிய மணியை ஒக்கின்ற அழகினையுடைய வாய் தன்னுடைய எழுத்துவ டிவு பெறாத மழலைச்சொல்லைக் கூறுதலாற் பிறந்த நீராலே விளங்கு கின்ற பூணை நனைத்தலைச்செய்யாநிற்க, நன்மை பெறுகின்ற கமழுந் தலையிற் கிடந்த பொன்னாற்செய்த பிறையுட் சேர்த்த முத்துவடத் தோடே நெற்றியிலே ஞான்ற புனைந்த வினையினையுடைய உரு ண்ட சுட்டி விளக்கத்தோடே அசைய, நிறத்தை ஒழியாமற் தன் நடுவே தோற்றுவிக்கும் உடுத்துதல் சுழன்ற அழகினையுடைய து கில் உள்ளிடுமணியாற் பொலிந்த சதங்கையொலிக்கும் ஒலிமாறாத அடியைத் தடுக்கப், பாலாலே விம்மின முலையை மறந்து முற்றத் தே உருளையோடுதல் வல்ல தேரைக் கையாலே செலுத்தி நடத்த லைக் கற்று ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முரு கனைப்போலே வரும் என்னுயிரோ; எ - று.

கால்வறேர் வினைத்தொகையாதலின் *"மருவின்பாத்திய" வாய் நின்றது. நனைத்தரத் துயல்வரத் தட்பமறந்து இயக்கிப் பயிற் றுப் பெருவிறல்போல வரும் என் உயிரோ! பெருமா! பெருந்தகாய்! யாங் கேட்பச் சில கூறெனை மேலுறுப்போடு முடிக்க.

பெரும * * * சில—எ-து, பெருமா! பெருந்தகாய்! நின து மழலைச்சொல்லைக் கேட்டு அவ்வினிமை மாறாத மனத்திற்கு, அமு தத்தை உண்டாற்போல இன்னும் இனிதாக, விருந்தினர் வருதலாற் கையொழியாத எம்மையும் நினையாயாய்த் தாய்மார் பெரிய தெருவி லே நின்னைக்கொண்டாடிக் கற்பிக்கக் கற்பிக்க நீ அவர்பாற் றிருந்திக் கற்றசொற்களை யாங் கேட்கும்படி அதிலே சிலவற்றைக் கூறு; எ-று.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், குற்றியலுகரப்புணரியல், எசு-ம் சூத்.

இது புதல்வனை நோக்கிக் கூறியது. மேற் றோழியை நோக்கிச் செய்தி கூறுகின்றாள்.

எல்லிழாய்—எது,ஒளியுடைத்தாகியபூணினையுடையாய்!எ-று.

சேய்நின்று * * * னரோ—எ-து, நாம் பழக்கங்கொண்டு போந்த பாணன், நீ இப்பொழுது எவ்விடத்தாயென்று வினவப், பரத்தையர்கூற்றிலே மனந் தங்கி நமக்குச் சேயனாய்நின்று வாயிற்கூறும் மொழிசிதைந்து எறுதிப்பாடியிடத்தேமென்ற தன்மைத்தாக, நம்முடைய நோயைத் தணித்தற்குக் காரணமாகிய மருந்தென்று கருதி நாம் பாராட்டாநிற்க, மாறுமல் அடுத்தடுத்து அத்தா அத்தாவென்று கூறுகின்றவனை அவன் தவறு பாராது நம்முடையவேய்போலும் மெல்லிய தோள்களிலே மாட்சிமைப்பட ஏறட்டுக்கொள்ளுங் கூற்றிலே ஏறட்டுக்கொண்ட அளவிலும், பின்னையும் இவனுடைய வாயிடத்தினின்றும் போகானாயிராநின்றான், இதற்குக் காரணமென்னென்றாள்;எ-று.

**வா**ய்சிதைந்தென்க. எறுதிப்பாடி, எறுதிப்பட்டங் கட்டினானொருவன் எற்றிய பரத்தையர்சேரி. தான் இல்லறமே பூண்டு புதல்வனைக்கொண்டு விளையாடுதலே இனிதென்று இருந்தமை தோன்ற நோய்தணித்தற்குப் பிள்ளையை மருந்தென்றாள். *“ சிறந்த செய்கையவ்வழித் தோன்றி-யறம்புரி யுள்ளமொடு தன்வர வறியாமைப் - புறஞ்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்” என்பதனாற் றலைவன் இவள் புதல்வனோடு விளையாடுகின்ற மனையறத்தினைத் தான் வேண்டி மறைந்து இவள்பின்னே நிற்ப, எதிராக நின்ற தலைவனைக் கண்டு பிள்ளை அத்தா அத்தாவெனவும், எதிர்நின்ற தோழிமுதலியோர் தன்னைக் கண்டு ஆசாரஞ்செய்தாற் றலைவி அறிவளென்று அவர்களை ஆசாரஞ்செய்யாமற் கைகவித்தலிற் றோழி ஆசாரஞ்செய்யாதிருத்தலிற் றலைவி அவன் பின்னின்றமை உணராமற் றோழியை வினவினாள்.

உள்ளி * * * யீங்கு—எ-து, அங்ஙனம் வினவின தலைவி தோழிகுறிப்பானும் புதல்வன் அத்தா அத்தாவென்றதனானுந் தலைவன் வந்தவாறு கண்டு பகைவரை நினைத்து அவரிடத்தே படைக்கலங்களைச் சேர விடுதற்குக் கள்வர் வருதலைச் செய்ததுபோல இவ்விடத்தே தாம் எம்மை இகழ்தற்கே வந்தார், நம்மேல் அன்பால் வந்தாரல்லரெனத் தலைவன் கேட்பத் தோழியைநோக்கிக் கூறினாள்; எ - று.

**த**லைவி துனி போக்குதற்குத் தலைவன் இங்ஙனம் வந்தான்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், கூ-ம் சூத்.

ஏதப்பா * * * யார்—எ-து, அதுகேட்ட தலைவன் மதிலை யுடைய ஊரிற் காவலாளர் கள்வனைக் கண்ணுற் காணுதிருக்கவும் அவரால் வருங் குற்றத்தைக் கருதி இங்கே கள்வனைக் கண்டேமென்று கூறுவானைப்போலே முன் நில்லாது ஒருசிறைப்போய் நின்று யான் செய்யாத குறைகளைக்கூறிச் சினவாதேகொள், நின் ஆணைவழி ஒழுகுதலன்றி ஈண்டு நின் ஆணையைத் தப்புவார் யாரென்றான்; எ-று.

'சேய்நின்று செய்யாத சொல்லிச் சினவல்' என்றது புலவி பொருளாக அச்சம்பிறந்தது. அது *"நின்றுநனி பிரிவி னஞ்சிய பையுளும்" என்னும் விதியான் உணர்க.

அதிர்வில் * * * செல்—எ-து, அதுகேட்ட தலைவி நடுக்கமில்லாத வஞ்சனையாலே வருத்தி என் மகன்மேல் வேட்கைநிகழ நினையாயாய் வந்து, பூணினையுடைய முதிர்ந்த முலைகளால் நின் மார்பொடு பொருத பரத்தைமுடியினின்றும் உதிர்ந்த துகள் சிந்திக்கிடந்த நின்னுடையது துகளை விளக்கக் காற்றின் எதிரோ நின்றாய், இங்ஙனம் நில்லாதே போவென்றாள்; எ - று.

படிறெருக்கி வஞ்சனையைப் போக்கியென்றுமாம். ஆடையெதிர்ப்பவும் பாடம்.

இனியெல்லாயாம் * * * நாம்—எ-து, அது கேட்ட தலைவன் ஏடீ! யாந் தீங்குடையேமல்லேமென்று சூளுறவும், அச்சூளுறவைக் கைகடந்து எம்மிடத்துச் சிறிதுந் துனித்த நிலைமை மீட்சியில்லையாயிற், தன்கன்றைக்கட்டின இடத்தே கெடாதவிருப்பத்தோடே செல்லும் பசுப்போல நாம் இனி நம்பாற் படர்தல் தகும்படி, மேம்பாடுதக்க எந்தை பெயரனை யாம் எடுத்துக்கொள்ளுவேம்; எ - று.

நாமென்றது இடவழுவமைதி. தாமென்றும் பாடம். †"முறைப்பெயர் மருங்கிற் கெழுதகைப் பொதுச்சொ - னிலைக்குரி மரபி னிருவீற்று முரித்தே" என்பதனுல் எல்லாவென்றாள். புதல்வனை வாங்கவே துனிதீர்ந்தாளாயிற்று. மறுத்தரவில்லாயினெனவே இறந்துபடுவனென்று துனிதீர்ந்தாள். ‡"கரணத்தி னமைந்து" என்னுஞ் சூத்திரத்திற் "சென்றுகை மிகந்துபெயர்த் துள்ளிய வழியும்" என்பதனுன் உணர்க.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், இ-ம் சூத்.
† ,, ,, பொருளியல் உக-ம் ,,
‡ ,, ,, கற்பியல் இ-ம் ,,

இதனாற் றலைவிக்கு எள்ளலுந் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இது *"வெளிப்பட" என்றதனால் இயற்சீர்நிரை ஒன்றிப் பாவேறுபட்ட தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிவந்த பாட்டும் வந்த கலிவெண்பா. (கசு)

அஉ. ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கேர்பு
காலத்திற் றோன்றிய கொண்மூப்போ லெம்முலை
பாலொடு வீங்கத் தவநெடி தாயினை
புத்தேளிர் கோட்டம் வலஞ்செய் திவனொடு
புக்க வழியெல்லாங் கூறு;

கூறுவென், மேயாயே போல வினவி வழிமுறைக்
காயாமை வேண்டுவல் யான்;

காயேம்,

மடக்குறு மாக்களோ டோரா யயரு
மடக்கமில் போழ்தின்கட் டந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாயுழைப் புக்காற் கவளும்
மருப்புப்பூண் கையுறை யாக வணிந்து
பெருமா நகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்
சொரிமுத்தங் காழ்சோர்வ போன்றன மற்றும்
வழிமுறைத் தாயுழைப் புக்காற் கவளும்
மயங்குநோய் தாங்கி மகனெதிர் வந்து
முயங்கினண் முத்தின ணோக்கி நினைந்தே
நினக்கியாம் யாரோ மாகுது மென்று
வனப்புறக் கொள்வன நாடி யணிந்தன
ளாங்கே, யரிமத ருண்கண் பசப்ப நோய்செய்யும்
பெருமான் பரத்தைமை யொவ்வாதி யென்று
ளவட்கினி தாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயுமற் றீதோர்
புலத்தகைப் புத்தேளில் புக்கா னலைக்கொரு
கோஒ நினக்கவள் யாராகு மெல்லா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கஙிகூ-ம் சூத்.

வருந்தியா நோய்கூர நுந்தையை யென்றும்
பருந்தெறிந் தற்றாகக் கொள்ளுங்கொண் டாங்கே
தொடியு முகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பிற் சிறுகண்ணு முட்காள்
வடுவுங் குறித்தாங்கே செய்யும் விடுவினி
யன்ன பிறவும் பெருமா னவள்வயிற்
றுன்னுத லோம்பித் துறவதன் முன்னினி
யையமில் லாதவ ரில்லொழிய வெம்போலக்
கையா றுடையவ ரில்லல்லாற் செல்ல
லமைந்த தினிநின் றொழில்.

இது புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்வித்துக்கொண்டு வருதற்குச் சேடியருடன் மகற் போக்கிய தலைமகள் அவன் நீட்டித்து வந்தவழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை - மாயப் பரத்தை யுள்ளிய வழி" யாற் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

(இ - ள்.) ஞாலம் * * * கூறு—எ-து, உலகம் வற்கடம் நீங்கும்படி பெய்தற்குக் கிழக்கே எழுந்து கூதிர்க்காலத்தே தோன்றிய மேகம்போல எம்முடைய முலை பாலாலே விம்மும்படி நீ போன காலம் மிகவும் நீடித்ததெனக் கூறும் நிலையிலே யான் அயர்தலாற் தேவர்கோயில் வலம்வந்து பின்னர் இவனோடே நீ சென்ற இடங்களையெல்லாம் எமக்குச்சொல்லென்றாள்; எ - று.

கூறுவென் * * * யான்—எ-து, அது கேட்ட தோழி யான் கூறுவேன், கூறுகின்றதனை மேவினுயேபோலக் கேட்டு அதன்பின்னாகக் கோபியாதிருத்தலை யான் நின்னிடத்தே பெற வேண்டுவேனென்றாள்; எ - று.

காயேம்—எ-து, அதுகேட்ட தலைவி யான் நின்னைக் கோபியேன் நீ கூறுகின்றனவற்றை எல்லாங் கூறென்றாள்; எ - று.

மடக்குறு * * * றொழில்—எ-து, அதுகேட்ட சேடி மட்பத்தையுடைய சிறிய அறிவில்லாத மகளிரோடே ஓரைப்பாவையைக் கொண்டு விளையாடும் விளையாட்டு வேண்டியவாறு ஒழுகும் பொழுதிலே இவன் தந்தை விரும்பின பரத்தைமை தொடங்குகின்ற காலத்துள்ளாகிய தாயிடத்தே சென்றவனுக்கு அவளும் இ

டப இலச்சினையைக் கைக்காணியாக இட்டுப் பெரியோனே! நினது சிரிப்பினையுடைய முகத்தை யான் முத்தங்கோடற்குக் காட்டென்று கூறுகின்றவளுடைய சொரிகின்ற கண்ணீர் கன முத்துவடங்கள் முத்தங் கழன்று விழுவனபோலே இருந்தன; பின்னை அவட்குப் பின்னர்வந்த தாயிடத்தே சென்றவனுக்கு அவளும் மனம் மயங்குதற்குக் காரணமான காமநோயைப் பொறுத்துத் தன் மக்னெதிர்வந்து தழுவிக்கொண்டு பின்னர் முத்தங்கொண்டு இவனைப் பார்த்துத் தலைவன் தன்னைக் கைவிட்ட தன்மையை நினைந்து நினக்கு யாங்கள் தாயாகின்ற முறைமை எம்மிடத்தின் நீங்கினமையின் இனி எம்முறைமையாவேமென்று கூறி இவனுக்கு அழகு மிகும்படி இவன் வடிவு தாங்கும்படியான பிள்ளைப்பணிகளை ஆராய்ந்து அணிந்தபொழுதே மகளிருடைய செவ்வரியினையுஞ் செருக்கினையுமுடைய மையுண்கண்கள் பசக்கும்படி அவர்க்கு நோவைக் கொடுக்கும் நின் தந்தையுடைய பரத்தைமைக்குணமொன்றையும் ஒவ்வாதேகொள்ளென்றாள்; அங்ஙனங் கூறினவளுக்கு இனிதாயிருக்கும்படி சில மறுமொழிகளைக் கூறிப் போய்ப் பின்னை நம்மோடு ஒப்பாளாகத் தலைமைப்பாடுகொண்டு நம்மைக் காய்ந்திருக்கும் இந்தப் புலக்குந் தகைமையினையுடைய புதியவள் இல்லிலேசென்றானென்றாள்; அதுகேட்ட தலைவி ஏடா! யான் வருந்தி நோய்மிக உன் தந்தையை எந்நாளுந் தான் குறித்ததொன்றை நினைவறப் பருந்தெடுத்துக்கொண்ட தன்மைத்தாக நினைவறக் கைக்கொண்டுபோம், கைக்கொண்ட அப்பொழுதே தொடியும் உகிரும் அவைபோல்வனபிறவுந் தனக்குப் படைக்கலமாகக் கொண்டு உகிராலே நுந்தையுடைய புதுமையையுடைய மார்பின் கண்ணும் அனையவற்றாலே ஒழிந்த சிறிய இடங்களிலுந் தான் குறித்தபடியிலே வடுக்களையும் அஞ்சாளாய் நிகழ்த்தும், ஆதலால் நின்க்கு அவள் என்ன உறவுடையள்? இவனை அடித்தற்கு ஒரு கோல் தருவாயாகவென்றாள்; அதற்கு அஞ்சி அவன் அழுதமைகண்டு இனி அழுகையை விடுவாயாகவென்று கூறி நின் தந்தையுடைய காதற்பரத்தையிடத்து நீ சேர்தலைப் பாதுகாத்து நீ செல்லுதற்குத் துறவாகிய இல்லிலும் மனத்தாற் கருதி அவன் நீங்குவனோ நீங்கானோவென்று ஐயப்படாமல் ஒருதலையாக நீங்கானென்று துணிந்த பரத்தையர் இல்லிலும் நின் செலவொழிந்து அது கிடக்க எம்மைப்போலே கையாற்றையுடையவர்இல்லிற் சேறலன்றி வேறோர் இல்லில் நீ செல்லாதேகொள்; இனி நின்னுடைய புறத்துப் போந் தொழில்தான் முடிந்ததெனக் கூறினாள், எ - று.

தொட்க்கத்துத் தாயென்றமையான் அவள் முதிர்ந்தமையும் வழிமுறைத்தாயென்றமையான் அவள் இடைநிலைப்பருவத்தாளானமையும் புத்தேளென்றமையான் அவள் இளமைப்பருவத்தாளானமையுங் கூறினாள். நகைமுகங் காட்டென்பாள் கண்ணீர்வீழ்ந்தது இப்புதல்வனாலுள்ள பயனை நுகர்ந்து இனிமையுறாது பயனில்லாப் புறத்தொழுக்கம் நிகழ்த்துகின்றமைகருதி. இது பரத்தையரில்லிற் புதல்வன் செல்லாமற் சிறைத்தது.

இதனாற் தலைவிக்கு இளிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கித் தனிச்சொற்பெற்று வந்த கலிவெண்பா.

அ௫. பெருந்திரு நிலைஇய வீங்குசோற் றகன்மனைப்
பொருந்துநோன் கதவொற்றிப் புலம்பியா முலமர
விளையவர் தழூஉவாடு மெக்கர்வாய் வியன்றெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்கெனச் சென்றா
யுளைவிலை, யூட்டலென் றீம்பால் பெருகு மளவெல்லா
நீட்டித்த காரண மென்;

கேட்டீ,

பெருமடற் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைங்குரும்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும் [பைக்
பெருமணித் திண்டேர்க் குறுமக்க ளுப்ப
ணகனகர் வீடருவா னாகப் புரிஞெகிழ்பு
நீல நிரைப்போ துறுகாற் குலைவனபோற்
சாலகத் தொல்கிய கண்ண ருயர்சீர்த்தி
யாலமர் செல்வ னணிசான் மகன்விழாக்
கால்கோளென் றாக்கிக் கதுமென நோக்கித்
திருந்தடிநூ புரமார்ப்ப வியலி விருப்பினாற்
கண்ணு நுதலுங் கவுளுங் கவவியார்க்
கொண்மை யெதிரிய வங்கையுந் தண்ணெனச்
செய்வன சிறப்பிற் சிறப்புச்செய் திவ்விரா
வெம்மொடு சேர்ந்துசென் றீவாயாற் செம்மா
னலம்புதி துண்டுள்ளா னாணிலி செய்த
புலம்பெலாந் தீர்க்குவே மன்னென் றிரங்குபு

வேற்றூஉத் தாய வெதிர்கொள்ள மாற்றாத
கள்வனாற் றங்கிய தல்லாற் கதியாதி
யொள்ளிழா யானறிகி லேன்;

எள்ளலான், அம்மென் பணைத்தோ ளுமர்வேய்ந்த கண்
டெம்மில்வருதியோ வெல்லாநீதன்மெய்க்கண் [ணியோ
ணந்தீஞ்சொ னல்லா ரணிந்த கலங்காட்டி
முந்தை யிருந்து மகன்செய்த நோய்த்தலை
வெந்தபுண் வேலெறிந் தற்றால் வடுவொடு
தந்தையும் வந்து நிலை.

இது விளையாட்டிக்கொண்டு வரற்குச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்துவந்தவழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை - மாயப் பரத்தை யுள்ளிய வழிச்" சிறைப்புறமாகக் கேட்டு வந்த தலைவனைக் கண்டு அவள் தன்னுள்ளே புலந்தது.

(இ - ள்.) பெருந்திரு * * * மென்—எ-து, பெரிய செல்வம் நிலைபெற்று மிகுகின்ற சோற்றையுடைய அகன்ற மனையிடத்து இரட்டையாய் வந்து சேரும் பலகைகள் தம்மிற் பொருந்தின கதவைத் தீண்டிநின்று பிள்ளையைக் கைவிட்டுத் தனித்து யாம் வருந்தப், பிள்ளைகள் தம்மிற் கூடி விளையாடும் இடுமணலை இடத்தேயுடைய அகற்சியையுடைய தெருவிலே பிள்ளையை விளையாடுவித்துக்கொண்டு வருதற்கென்று போன நீ, இனிய பாலை யான் பிள்ளைக்கு ஊட்டாமல் அப்பால் பெருகச்சுரக்கும் அளவெல்லாம் பிள்ளையால் உண்ணாதிருத்தற்கு நின்மனத்தில் வருத்தமிலையாய்த் தாழ்த்த காரணம்யாது? அதனைக்கூறு; எ - று.

கேட்டீ * * * லேன்—எ-து, அதனைக் கேட்பாய், பெரிய மடலையுடைத்தாகிய பனையினுடைய குடம்போலத் திரண்ட இடத்தையுடைத்தாய சர்ச்சரையையுடைய முகிழையுடைய பசியகுரும்பையைக் கொடியாற் கட்டிப் பின்னின பின்னலை இழுத்து அதனால் இளைக்குஞ் சிறிய பிள்ளைகளுக்குநடுவே பெரிய மணியழுத்தின திண்ணிய தேரிலேயிருந்து அகன்ற மனையை நோக்கி மீள்தலைச் செய்வானாகாநிற்க, நீலத்தினுடைய முறுக்குநெகிழ்ந்து நிரைத்த பூக்கள் மிக்க காற்றுக்கு அசைவனபோலே சாளரங்களிலே ஒதுங்கிப் பார்த்த கண்ணிணையுடையார் பரந்த மிக்க புகழையுடைய ஆலின்கீழ் இருந்த இறைவனுடைய மகனாகிய பிள்ளையார்

திருநாளுக்கு அடிக்கொள்ளுகின்ற நாளென்று கருதி, வாயிலிலே முயன்று கடுகிவந்து பார்த்து, இவனுதலாற் திருந்தின அடியிற் சிலம்பொலிப்ப அணுகி, நின் கண்ணாலும் நுதலாலுங் கதுப்பாலும் நின்னைத் தழுவிய தாயர்க்கு விளக்கத்தைக்கொடுத்தலை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அழகிய கையினாலும் நின் தந்தைக்குத் தண்ணென நீ செய்யுஞ் சிறப்புக்கள்போலே எமக்குஞ் சிறப்புக்கள் செய்து இவ்விராக்காலத்து எம்மோடே தங்கிப்போதலைச் செய்யவேண்டுஞ், சிறப்பாலே தலைவா! எங்கள் நலத்தின் புதுமையை நுகர்ந்து பின்னர் எம்மை நினையாத நாணில்லாதவன் தந்த தனிமையெல்லாம் மிகவும் போக்குவேமென்று கூறி, இவனிடத்து விருப்பத்தாலே அமையாத வேற்றுத்தாயர் எதிர்கொள்ள, அதனை மாற்றாத இக்கள்வனாலே ஆண்டுத் தாழ்க்க நின்றதன்றி, யான் வேறோர் தீதுடையேனல்லேன், ஒள்ளிழாய் ! என்னைக் கோபியாதேகொள்ளென்றாள் சேடி ; எ - று.

எள்ளலான் * * * நிலை—எ-து, அதுகேட்டுப் புதல்வனை நோக்கி ஏடா ! அழகையுடைய மெத்தென்ற மூங்கில்போலுந் தோளினையுடைய நும்முடைய தாய்மார் சூடின கண்ணியோடே எம்முடைய இல்லிலே நீ வருவையோ வாராயோ என வெறுத்துக்கூறித், தலைவன் வந்தமைகண்டு, முன்னேயிருந்து மகன் எமக்குச் செய்த நோய்க்குமேலே, எம்மை மனத்தால் இகழ்ந்து இருத்தலாலே தம் மெய்யிடத்துக் கிடந்த அழகிய இனிய சொல்லையுடைய நல்ல மகளிர் அணிந்த கலங்களில் வடுவைக்காட்டி ஏனை வடுக்களோடே தந்தையும் வந்து நிற்றல், வெந்ததொரு புண்ணிலே வேலால் எறிந்த தன்மைத்தாயிருந்ததென அவனோடு புலந்து கூறினாள்; எ - று.

இதனாற் தலைவிக்கு இளிவுந் தலைவற்குக் கைமிகலும் பிறந்தது.

இது தளைவிரவி ஐஞ்சீரடியும் வந்த வெள்ளைத்தரவுந் தனிச்சொல்லுந் தளைவிரவின வெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய வெள்ளைச்சுரிதகமும் பெற்ற கலிவெண்பா. (௧அ)

அ௪. உறுவளி தூக்கு முயர்சினை மாவி
னறுவடி யாரிற் றவைபோ லழியக்
கரந்தியான் காக்கவுங் கைநில்லா வீங்கிச்
சுரந்தவென் மென்முலைப் பால்பழு தாகநீ
நல்வாயிற் போத்தந்த பொழுதினா னெல்லா
கடவுட் கடிநகர் தோறு மிவனை

வலங்கொளீஇ வாவெனச் சென்றாய் விலங்கினை
யீர மிலாத விவன்றந்தை பெண்டிருள்
யாரிற் றவிர்ந்தனை கூறு;

நீருள், அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட
குடைநிழற் றோன்றுநின் செம்மலைக் காணூஉ
விவன்மன்ற யானேவ வுள்ளங்கொண் டுள்ளா
மகனல்லான் பெற்ற மகனென் றகனகர்
வாயில் வரையிறந்து போத்தந்து தாயர்
தெருவிற் றவிர்ப்பத் தவிர்ந்தனன் மற்றவர்
தத்தங் கலங்களுட் கையுறை யென்றிவற்
கொத்தவை யாராய்ந் தணிந்தார் பிறன்பெண்டி
ரீத்தவை கொள்வானு மிஃதொத்தன் சீத்தை
செறுத்தக்கான் மன்ற பெரிது;

சிறுபட்டி, ஏதிலார் கையெம்மை யெள்ளுபு நீதொட்ட
மோதிரம் யாவோயாங் காண்கு;

அவற்றுள், நறுவிதழ் கண்டன்ன செவ்விரற் கேற்பச்
சுறுவே றெழுதிய மோதிரந் தொட்டாள்
குறியறிந்தேன் காமன் கொடியெழுதி யென்றுஞ்
செறியாப் பரத்தை யிவன்றந்தை மார்பிற்
பொறியொற்றிக் கொண்டாள்வ லென்பது தன்னை
யறீஇய செய்த வினை; அன்னையோ இஃதொன்று,

முந்தைய கண்டு மெழுகல்லா தென்முன்னர்
வெந்தபுண் வேலெறிந் தற்றா லிஃதொன்று
தந்தை யிறைத்தொடீஇ மற்று;

இஃதிவன், றன்கைக்கட் டந்தா ரியார்;

எல்லாவிது இஃதொன்று;

என்னைத்துக் காண்க பிறரு மிவற்கென்னுந்
தன்னலம் பாடுவி தந்தாளா நின்னை
யிதுதொடு கென்றவள் யார்;

அஞ்சாதி, நீயுந் தவறிலை நின்கை யிதுதந்த
பூவெழி லுன்க ணவளுந் தவறிலள்
வேனிற் புனலன்ன நுந்தையை நோவார்யார்
மேனின்று மெள்ளி யிதுவிவன் கைத்தந்தா
டான்யாரோ வென்று வினவிய நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்.

இது கடவுட் கடிநகர்தோறும் வலங்கொளீஇ வரற்குச் சேடியரோடு மகற்போக்கிய தலைவி அவன் நீட்டித்து வந்துழித் "தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை - மாயப் பரத்தை யுள்ளிய வழி" யின்கட் தந்தை தொடி மகன்கைக்கண்டு புலந்தாள் தன்னுள்ளே அழிந்து கூறியது.

(இ-ள்.) உறுவளி * * * கூறு—எ-து, எடீ! நீ நல்வாயிலினின்றும் போதலைச்செய்த காலத்தின்கண்ணே தெய்வங்களையுடைத்தாகிய மிகுதிகளையுடைய கோயில்கடோறும் இவனை வலஞ்செய்வித்து வாவென்று யான் கூறச் சென்று நீ யான் கூறிய கூற்றினைத் தப்பினுய், இனி மாவினுடைய உயர்ந்த கொம்புகளினின்ற மிக்க காற்றால் அசைக்கும் நறிய வடுக்கள் காம்பு முறிந்தனபோலே பால் மிகக் குதிக்கையினலே அதனை மறைத்து யான் அங்கையால் அமுக்கித் தேய்க்கவும் அந்தக் கையினெல்லையில் நில்லாவாய் விம்மிச் சுரந்த என்னுடைய மெல்லிய முலையிற் பால் பிள்ளை உண்ணமற் பாழே போம்படி அருளில்லாத இவன் தந்தையுடைய பரத்தையர் களுள் யாருடைய இல்லிலே தங்கினுய் சொல்லென்முள் ; எ-று.

நீருள் * * * பெரிது—எ-து, நீரிடத்தே இலையின்கீழே மறைந்துநின்ற அழகிய இதழையுடைய தாமரைப்பூப்போலே எடுத்த பச்சைக்குடையின் நிழலிலே தோன்றுகின்ற நின் பிள்ளையைக்கண்டு தாய்மார் யான் நோம்படி மனத்தைக்கைக்கொண்டு பின்னர் என்னை நினையாத நன்கு மதிக்கும் மகனல்லாதவன் பெற்ற மகன் அறுதியாக இவனென்று கருதி அகன்ற மனையினுடைய வாயிலினெல்லையைக் கைவிட்டுப்புறப்பட்டுத் தெருவிலேவந்து தடுப்ப அவரிடத்தே தங்கினன்; அதனலே பின்னை அவர்கள் தம்முடைய தம்முடைய அணிகளில் இவன்வடிவிற்கு ஒத்தவையிற்றை ஆராய்ந்து கைக்காணியென்று அணிந்தாரென்முள் சேடி; அதுகேட்ட தலைவி தனக்கு அயலாயிருக்கின்ற தந்தையுடைய பரத்தையர் கொடுத்தவையிற்றை இவனெரு

வன் வாங்குவானும், இனி இவன் கைவிடப்படும், இவன் அறுதியாக மிகவும் நம்மாற் கோபித்தல் தக்கானென நெஞ்சொடுகூறினாள்; எ-று.

'அடைமறை யாயிதழ்ப் போதுபோற் கொண்ட-குடைநிழற் றோன்றுநின் செம்மல்' என்றது இலையும் பூவுங் குடைக்கும் புதல்வற்கும் உவமையாய் விரவிநின்றது. இது சினைக்கு முதல் வந்தது.

சிறுபட்டி—எது, காவலின்றிவேண்டியவாறே யொழுகுவாய்; எ-று.

ஏதிலார் * * * காண்கு—எ-து, நீ எம்மை இகழ்ந்து இட்ட பரத்தையர் கையின் மோதிரங்கள் யாவை? யாம் அவற்றைக் காண்பேன்; எ-று.

யாங் காண்கு பன்மையொருமைமயக்கம். யானும் பாடம்.

நருவிதழ் * * * வினை—எ-து, அம்மோதிரங்களுள் *நறும் பூவைக் கண்டாற்போன்ற சிவந்த விரலுக்குப் பொருந்தச் சுறவி லேற்றைக் குழித்த மோதிரத்தை இட்டவளுடைய கருத்தை அறிந்தேன்; காமன் கொடியாகிய மகரத்தை மோதிரத்தே குழித்தாற் போல வேறொன்றிலே அழுத்தி அதனை எந்நாளும் அடங்காத பரத்தைமைக்குணத்தையுடைய இவன் தந்தைமார்பிலே பொறியாக ஒற்றி அடிமைக்கொண்டாண்டு போதுவேனென்று சொல்கின்ற வார்த்தைதன்னை எனக்கு அறிவித்தற்குச் செய்ததொரு தொழிலெனப் புலந்து அவனோடு கூறினாள்; எ-று.

† "கடல்வாழ் சுறவு மேறெனப் படுமே" என்றதனாற் சுறவேறென்றார். பரத்தைமை பரத்தையென நின்றது, ‡"தன்வயினுரிமையு மவன்வயிற் பரத்தையும்" என்றார் ஆசிரியராகலின்.

அன்னையோ—எ-து, நீயும் அத்தன்மையையோ; எ-று.

புதல்வனாகிய நீயும் எம்மை இகழுந்தன்மையையோ என்றதாம். இது புதல்வனை நோக்கிக்கூறியது.

இஃதொன்று—எ-து, இவ்விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றென நெஞ்சொடு கூறினாள்; எ-று.

முந்தைய * * * யார்—எ-து, பின்னை எம்முற்பட்டனவற்றைக் கண்டுந் தலையெடுக்கமாட்டாது என்முன்னே வெந்ததோர் புண்

* காற்றலம்பூவென்றுஞ் சிலபிரதிகளுண்டு.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், ௪0-ம் சூத்.
‡ „ „ களவியல், உ0-ம் „

ணிலே வேலாலே எறிந்த தன்மைத்தாக இஃதொன்று இவன் தந்தை யுடைய முன்கையிற் தொடியை இவன் கையிடத்தே இட்டவர் யார்தான்? கூறென்றாள்; எ - று.

எல்லாவிது * * * யார்—எ-து, அவன்கூறுமையின், எடா! இத்தொடி என்னை ஒழிந்தவர்களும் இத்தலைவற்கு என்னையொழித்த வனப்பை வழிபடும்படியைக் காண்பார்களாகவென்று கூறுந் தன் நலத்தை மிகுத்துப் புகழ்கின்றவளாயிருக்குந் தந்தவள், இவ் விகழ்ச்சியும் நாமே செய்துகொண்டதொன்றெனா நெஞ்சொடு கூறிப் புதல்வனை நோக்கி நின்னை இத்தொடியை இடுகவென்று சொன்னவர் யார்தானென்றாள்; எ - று.

அஞ்சாதி * * * யேன்—எ-து, அவன் அதற்கு அஞ்சினமை கண்டு அஞ்சாதேகொள், இதனைத் தொட்டுவந்த நீயுந் தவறுடையையல்லை, நின்கையில் இத்தொடியையிட்ட பூவினது அழகை யுடைய மையுண்கண்ணையுடைய பரத்தையுந் தவறுடையளல்லள், வேனிற்காலத்துப் புதுப்புனல்போல எல்லார்க்கும் பயன்படுகின்ற நுந்தையை ஈண்டு நோவாரில்லை, நமக்கு மேலாய்நின்றுந் தன்னலம் பாடிப் பின்னரும் நம்மை இகழ்ந்து இத்தொடியை இவன் கையிலிட்டவள் யாரோவென்றுகேட்ட இந்நோயின்கூற்றேனுகிய யானேயன்றே தவறுடையேனெனத் தன்னுள்ளே அழிந்து கூறினாள்; எ-று.

இது பரத்தை தன் சிறப்பு உணர்த்தி அணிந்தமை கூறிற்று. 'மேனின்றுமெள்ளி' என்றதற்கு முற்காலந் தொடங்கி இகழ்ந்தென்றுமாம்.

இதனாற் தலைவிக்கு எள்ளல் தோன்றிற்று.

இது தனிவிரவி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (கஅ)

அரு. காலவை, சுடுபொன் வளைஇய வீரமை சுற்றெடு
பொடியழற் புறந்தந்த செய்யுறு கிண்கிணி;
உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்கா
மையில் செந்துகிர்க் கோவை யவற்றின்மேற் [ழ்மேன்
றைஇய பூந்துகி லைதுகழ லொருதிலா;
கையதை, அலவன் கண்பெற வடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுட் சிலகோ லவிர்தொடி;

பூண்டவை, எறியா வாளு மெற்று மழுவுஞ்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய வானேற் றவிர்பூண்;

சூடின, இருங்கடன் முத்தமும் பன்மணி பிறவுமாங்
கொருங்குடன் கோத்த உருளமை முக்காழ்மேற்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்று லாக
வரும்பவிழ் நீலத் தாயிதழ் நாணச்
சுரும்பாற்றுப் படுத்த மணிமருண் மாலை;

ஆங்க, அவ்வும் பிறவு மணிக்கணி யாகநின்
செய்வுறு திண்டேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பைபயத் தூங்குநின் மெல்விரற் சீறடி
நோதலு முண்டிங் கென்கை வந்தீ
செம்மானின் பாலுண் ணிய;

பொய்போர்த்துப், பாண்டலை யிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலா விட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்த றெழிலாத் திரிதரு
நுந்தைபா லுண்டி சில;

நுந்தைவாய், மாயச்சூ டேறி மயங்குநோய் கைமிகப்
பூவெழி லுண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பா லுண்டி சில;

அன்னையோ, யாமெம் மகனைப்பா ராட்டக் கதுமெனத்
தாம்வந்தார் தம்பா லவரோடு தம்மை
வருகென்றார் யார்கொலோ வீங்கு;

என்பாலல், பாராட் டுவந்தோய் குடியுண் டீத்தை;

என், பாராட்டைப் பாலோ சில்செருக் குறித்தானை
யுவகைக்கூத்தாட்டும் வரிசைப்பெரும்பாட்டெல்லாம்
பருகீத்தைத்தண்டுவென் ஞாயர்மாட்டைப்பால்.

இது தலைவி தன் மகனைப் பாராட்டிப் பால் கூறிட்டு ஊட்டு கின்றவழிச் சிறைப்புறமாகக் கேட்டுப் புக்க தலைவனைக் கண்டு தன் னுள்ளே புலந்து புலவியோடு பின்னும் பாராட்டியது.

(இ - ள்.) காலவை * * * கிண்கிணி—எ-து, செம்மால்! நின் காலிற் கிடக்கின்றவை, சுடுபொன்னாலே வளைத்த இரண்டாய் அமை ந்த * காற்சரியோடே பண்ணுதலைத் தான் உறுகின்ற பொடி மூடுத ணலாலே நிறம் உண்டாகப்பட்ட சதங்கை; எ - று.

சுடுபொன், எக்காலமும் பொன்னென முக்காலத்திற்கும் உ ரிய பொன்னின் இயல்பு கூறிற்று; சுடுபொன்னென வினைத்தொ கையாகாமை உணர்க.

உடுத்தவை * * * லொருதிரை—எ-து, அரையில் உடுத்த வை, கைத்தொழிலாலே பொலிவுபெற்ற மணிகள் இடையிடை அ மைந்த பொன்மணிகளையுடைய வடம்; அதின்மேலே அழுக்கில்லா த சிவந்த பவளவடம்; அவற்றின்மேலே உடுத்தின ஐதாய்க் கழல் கின்ற ஒன்றாகிய திரைத்த பூந்துகில்; எ - று.

வடங்கள் தோன்றத் திரைத்தாரென்றார்.

கையதை * * * லவிர்தொடி—எ-து, கையிடத்தது, ஞெண் டின் கண்தன்மைபெற நெருங்கப் பல அரும்புத்தொழில் சூழப்பட்ட சில கோற்றொழில் அவிர்கின்ற இரண்டாய்ச் சேருந் தொடி; எ-று.

கண், கண்ணுளதொழில்.

பூண்டவை * * * றவிர்பூண்—எ-து, பூணப்பட்டவை, வெட்டாத வாளும் வெட்டாத மழுவும் நெருங்கக் கட்டி இரண்டு புறத்தினுந் தங்கின மழைபெய்த புலத்து ஈயன்மூதாயினது புகரை யுடைத்தாகிய நிறத்தையுடைய பவளத்தாற் செய்த அழுக்கறவிளங் கிய இடபத்தையுடைய விளங்குகின்ற பூண்; எ - று.

சூடின * * * மாலை—எ-து, சூடப்பட்டன, கரிய கடலின் முத்தும் அதனுடனே பல மணிகள் பிறவுஞ் சேரக்கோத்த உருட்சி அ மைந்த மூன்று வடமதின்மேலே கிடக்கும் நூலாற் சூழ்ந்த சுரும்புகள் ஆருங் கண்ணிக்குப் பொருந்தும்படியாக நடுவே கிடக்க அரும்புகள் அலர்ந்த சில நீலத்தினது ஆய்ந்த இதழ் நாணும்படியாக நீலமணியாற் பண்ணின சுரும்புகளைப் போக்கின கண்டார் மருளும் மாலை; எ-று.

---

* காற்சாறை யெனறுங் காற்சுற்றை யென்றும் பிரதிபேத முண்டு.

ஆங்க, உரையசை.

அவ்வும் * * * ணிய—எ-து, யான் கூறியவையும் பிறவும் நின் அழகிற்குமேலே ஓர் அழகாகச் செறியும் நின்னுடைய மெல்லிய விரல்களையுடைய சிறிய அடிகள் இங்ஙனந் திரிந்ததற்கு நோதலுமுண்டு, அதனைத் தவிர்ந்து நின்னுடைய உருட்டுதலுறுகின்ற திண்ணிய தேரில் வளைந்த தாமரைமுகையினைக் கையாலே பிடித்து மெத்தென மெத்தென அசையாநின்று இவ்விடத்து என் கையிடத்தே வருவாய், நினக்கென வைத்த பாலையுண்டற்கு; எ - று.

அணியாகத் தூங்கும் நின்னையென்க. தேர்க்குத் தாமரை சினையாதலின் அதனைச் சினையென்றார்.

பொய்போர்த்துப் * * * சில—எ-து, தலைமேல் ஏறட்டுக்கொண்ட பாண்மையாலே வஞ்சனையை மறைத்து வசீகரித்தற்றொழில் பலவும் வல்ல பாணனைத் தூண்டிலாகப் போகட்டுப் பரத்தையரை அகப்படுத்தித் தான் விரும்பின பரத்தையருடைய நெஞ்சந் தன் வசமாக்குதல் தனக்குத் தொழிலாகக் கொண்டு திரியும் நுந்தைக்குப்பட்ட சில கூற்றை உண்பாய்; எ - று.

நுந்தைவாய் * * * சில—எ-து, நுந்தை வாயிற் பொய்ச்சூளை மெய்யாகத் தெளிந்து பூவினது அழகையுடைய உண்கண் நீர் பரக்கும்படியாக மயங்குகின்ற நோய் கைகடத்தலாலே அக்கண்கள் துயிலாத நின் தாய்மார்க்குப்பட்ட சில கூற்றை உண்பாய்; எ - று.

அன்னையோ * * * வீங்கு—எ-து, வாராத தலைவன் வந்தமை கருதி யாம் எம்முடைய மகனைப் பாராட்டாநிற்கத் தம் பகுதியிலுள்ள பாணன்முதலியோருடனே தாங் கடுகவந்தார்; அம்மையோ! தம்மை இவ்விடத்து வருகவென்று கூறினார் யார்தான்? எ - று.

அன்னையோவென்றது, அம்மையோவென ஒரு வியப்பு.

இது தன் நெஞ்சொடுகூறியது. மேற் பிள்ளையைநோக்கிக் கூறுகின்றாள்.

என்பாலல் * * * டீத்தை—எ-து, என்னுடையகுடியின் பகுதியிடத்தனவல்லவாகிய பாராட்டுக்கேட்டு மகிழ்ந்தவனே எனக்குப்பட்ட கூற்றை யுண்பாய்; அப்பால்தான் சிறிதுகாணென்றாள்; எ-று.

என்பாராட் * * * டைப்பால்—எ-து, அவனை உண்ணுமற் போகலிற் கோபிக்கக் கருதினவள் அவனைத் தன் பிள்ளையாட்டால்

மணமகிழ்ச்சி செய்து அவனை நோக்கிக் கோபிக்கக் கருதினவர்களை உவகையாகிய கூத்தாட்டுவிக்கும் உன்னுடைய தாசத்தாலே இனி யான் பாராட்டும் பெரிய பாட்டுக்களோடே நின் தாய்மாருக்குப்ப ட்ட கூற்றையுடைய பாலைப்பருகு, இத்தன்மையெல்லாம் நின்னை ஊட் டல் அமைவேனென்று கூறிட்டு ஊட்டினாள் ; எ - று.

தண்டுதல் அமைதலென்றும் பொருட்டுதல் தண்டாமையென் னும் அதன் மறையால் உணர்க; "தண்டாக்காற் றளரியல்" "தண்டா விருப்பினள்" எனவரும். ஞாயரெனத் தன்னைப் பிறள்போற்கூறினாள்.

இது தலைவிக்குத் தலைவனைக்கண்டு புதுமைபற்றி வியப்புத் தோன்றிற்று. தலைவற்கு நினைத்தல் பிறந்தது. புதல்வனாற் றலைவிக் குச் செல்வமாகிய உவகை பிறந்தது, புதல்வனுஞ் செல்வமாதலின்.

இது *"தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்தும்" என இ டைநிலைப்பாட்டினை ஈற்றின் வைத்தமையாற் றரவும் போக்குமின்றி இடைநிலைப்பாட்டுக்களே ஐஞ்சீரடுக்கிவந்து கலிவெண்பாவிற்கூறிய கூறுப்பொத்து யாப்புவேறுபட்டு வந்த கொச்சகம். (உ௦)

அசு. மைபடு சென்னி மழகளிற் றேடைபோற்
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாளணி கொண்ட
நலங்கிள ரொண்பூ ணணைத்தரு மவ்வாய்
கலந்துகண் ணொக்காரக் காண்மின் றுகிர்மேற்
பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
கடியரணம் பாயாநின் கைபுனை வேழந்
தொடியோர் மணலி னுழக்கி யடியார்ந்த
தேரைவாய்க் கிண்கிணி யார்ப்ப வியலுமென்
போர்யானை வந்ீக வீங்கு ;

செம்மால், வணப்பெலா நுந்தையை யொப்பினு நுந்தை
நிலைப்பா லொத்த குறியென்வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
யொன்றினேம் யாமென் றுணர்ந்தாரை நுந்தைபோன்
மென்றோ ணெகிழ விடல் ;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ககஙம் சூத்.

... லின்றிப் பகல்போன் முறைகோடாக்
... ம்மைம் மொத்தி பெரும்மற் றெவ்வாதி
... பொரு பூவிற் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாய விடல் ;

வீதலறியா விழுப்பொரு ணச்சியார்க்
கிழமைபட் டொத்தி பெருமமற் றெவ்வாதி
மாதர்மென் னேக்கின் மகளிரை நுந்தைபோ
னேய்கூர நோக்காய் விடல் ;

ஆங்க,

திறனல்ல யாங்கழற யாரை நகுமிம்
மகனல்லான் பெற்ற மகன்;

மறைநின்று, தாமன்ற வந்தீத் தனர்;

ஆயினுமிழாய், தாவாதவெற்குத்தவறுண்டோகாவாதீங்
கீத்தை யிவனையாங் கோடற்குச் சீத்தையாங்
கன்றி யதனைக் கடியவுங் கைநீவிக்
குன்ற விறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பிற் பாய்ந்தா னறனில்லா
வன்பிலி பெற்ற மகன்.

இது *"தந்தையரொப்பர் மக்களென் பதனு - லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்" என்பதனுன் மகனைத் தலைவனை ஒக்கலாங் குணனும் ஒக்கலாகாக் குணனுந் தலைவி கூறுகின்றுழி மறைந்துபுக்க தலைவன் அவர் ஊடலுணர்வன சொல்ல மகன் வாயிலாக ஊடறீர்வாள் தன்னுள்ளே கூறியது.

(இ - ள்.) மைபடு * * * வீங்கு—எ-து, பட்டத்தையுடைய இளைய களிற்றினது கருமையுண்டாகின்ற தலையில் நாலுகின்ற மூன்று வடம்போலே கையாற் புனைந்த மூன்று வடம் மென்மையையுடைய தலையிடத்தே தாழப், பொன்னுற் செய்த மழுவோடே வாளம் அணிதலைக்கொண்ட நன்றே விளங்குகின்ற ஒள்ளிய பூணை நனைத் தலைச் செய்யும் அழகிய வாயைக் கண் கலந்து நின் வேட்கை நுகரக் காணும் இனிய பவளப் பலகைமேலே செம்பாதி வடிவு வேறோர் யா

*தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௬-ம் சூத்.

னையை இறங் குத்துகின்ற போர்த்தொழிலைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும்படியாகப் பொன்னாற் செய்த காவலையுடைய அரணங்களைக் குத்தாத கையாற் புனைந்த நின் வேழத்தோடே, நின் அடியில் கிடந்த தேரையின் வாய்போலும் வாயையுடைய சதங்கை ஆரவாரிப்பத், தொடியினையுடைய மகளிர் இழைத்த வண்டலின்கண்ணே உழக்கி நடக்கும் என்னுடைய போர்த்தொழிலையுடைய யானை இவ்விடத்தே வருக; எ - று.

பொலம்புனைவேழமென்க; உழக்கியியலுமென்க.

செ மா * * * விடல்—எ-து, தலைவா! பெருமா! நுந்தையை அழகெல்லாம் ஒத்திருப்பினும் நுந்தை நிற்கின்ற நிலைகளின் கூற்றில் உனக்கொத்த குறிக்கப்படுங் குணங்களை யான் கூறக்கேட்டு ஒப்பாய்; அவற்றுள் மாறுபாட்டிற்பட்ட பகைவரை வென்று களத்தைக்கொள்ளும் வெற்றிக்குணத்திடத்து அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிலே யாம் இவனோடு ஒருமனமாயினேமென்று உணர்ந்திருந்த மகளிரை நுந்தை மென்றோள் மெலிய விடுமாறுபோல நீயும் அவர் மெல்லிய தோள் மெலியும்படி விடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதேகொள்; எ - று.

பால்கொள் * * * விடல்—எ-து, பெருமா! நுகத்துப் பகலாணிபோல் ஒருபக்கத்தைக் கொள்ளுதலின்றி முறைமைசெய்தற்குச் சாயாத கோல் செவ்விதாக நிகழ்த்துதலில் அவனை ஒப்பாய்; மற்றுள்ள குணங்களிற் தன்னுடைய அமைதிக்குணத்தாலே இவன் நம்மைத் தப்பானென்று ஆராய்ந்த மகளிரைக் காற்றுப் பொருகின்ற பூப்போலே அழகுகெடும்படி நுந்தை சாயவிடுமாறுபோலச் சாயவிடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதேகொள்; எ - று.

வீத * * * விடல்—எ-து, பெருமா! தன்னையுடையார் கெடுதலன்றித் தானே கெடுதல் அறியாத சிறிய பொருளை நச்சினவர்களுக்குக் கொடுத்தலிடத்து அவனை ஒப்பாய்; மற்றைக் குணங்களிற் காதலையுடைய மெல்லிய நோக்கினையுடைய மகளிரை நுந்தை நோய்கூரா நிற்க நோக்காது விடுமாறுபோல நீயும் அவர்களை நோய்மிகாநிற்கப் பாராது விடுதலாகிய பரத்தைமையை ஒவ்வாதேகொள்; எ - று.

ஆங்க, அசை.

திறனல்ல * * * மகன்—எ-து, பின்வந்துநின்ற தலைவனைக் கண்டு நக்க புதல்வனைநோக்கி இந்த நன்றுமதிக்கும் மகன

ல்லாதவன் பெற்ற மகன் நற்குணங்களல்லாதவற்றை நீ ஒவ்வா தேகொள்கென்று யான் கோபிக்க யாரைநோக்கி நகும்; எ - று.

என்று திரும்பிப் பார்த்துப் பின்னின்ற தலைவனைக் கண்டாள்.

மறைநின்று * * * தனர்—எ-து, கண்டு வாராதார் தாம் நம்பின்னே மறையநின்று பின்னர் நாந் தெளியும்படி முன்னேவந் தாரென்றாள்; எ - று.

ஆயிழையிழாய் * * * மகன்—எ-து, அதுகேட்ட தலைவன் இங்ஙனங் கொடுமைகூறுகின்றாயாயின் அழகிய இழையினையுடையாய்! நின்னிடத்துச் செய்வதோர் வருத்தம் இல்லாத எனக்கும் ஒரு தப்புண்டோ? இவனை யாம் எடுத்துக்கொள்ளுதற்கு நின்னிடத்தே காத்துக்கொள்ளாதே என்னிடத்தே தருவாயென்றான்; அதுகேட்ட புதல்வன் அவன்மேலே வீழ்ந்தவனைத் தலைவி நோக்கிக் கைவிடப்பட்டவனாகிய அன்பிலி பெற்ற பிள்ளை யாம் அவன்மேலே வீழ்தலை மனங்கன்றி விலக்கவும் நம்மைக் கைகடந்து மலையிடத்து உறுகின்ற அடிவரையிலே சிங்கம் பாய்ந்தாற்போல அறனில்லாத தந்தையுடைய அகன்ற மார்பிலே பாயந்தானென்றாள்; எ - று.

இது மகப்பழித்துநெருங்கியது. அன்பிலி பெற்ற மகனென அவன்வயிற் பிரிந்தவாறுங் காண்க. அறனில்லாததென்றது ஆங்கு நெஞ்சழிதல்.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஆங்கவெனத் தனிச்சொற்பெற்று ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (உக)

அஎ. ஒரூஉநீயெங் கூந்தல் கொள்ளல்யா நின்னை
வெரூஉதுங் காணுங் கடை;

தெரியிழாய், செய்தவ றில்வழி யாங்குச் சினவுவாய்
மெய்பிரிந் தன்னவர் மாட்டு;

ஏடா, நினக்குத் தவறுண்டோ நீவீடு பெற்றா
யிமைப்பி னிதழ்மறை பாங்கே கெடுதி
நிலைப்பா லறியினு நின்னொந்து நின்னைப்
புலப்பா ருடையர் தவறு;

அணைத்தோளாய்,தியாரைப்போலத்திறனின்றுடற்றுதி
காயுந் தவறிலேன் யான்;

மானோக்கி நீயழ நீத்தவ னானது
நாணில னாயி னலிதந் தவன்வயி
னூடுத லென்னோ வினி;

இனி, யாதுமீக் கூற்றும் யாமில மன்ற
தகையது காண்டைப்பாய் நெஞ்சே பனியானாப்
பாடில்கண் பாயல் கொள.

இது பரத்தையர்சேரி சென்றமை அறிந்திலளெனத் தலைவிமாட்டுச் சென்றவனோடு இவள் ஊடி உறழ்ந்துகூறித் தோழி வாயிலாக ஊடறீர்வாள் தன் நெஞ்சொடு கூறியது.

(இ - ள்.) ஒரூஉ நீயெங் * * * கடை—எ-து, யாம் நின்னைக் காணுமிடத்து வெருவுவேமாதலால் எங் கூந்தலைத் தீண்டாதேகொள், நீ நீங்கென்றாள் தலைவி; எ - று.

வெருவவேண்டாப் பொருட்கட் கடிதிற் பிறந்ததோர் வெறியாதலின், இது வெருவுதலென்னும் மெய்ப்பாடு.

தெரியிழாய் * * * மாட்டு—எ-து, அது கேட்ட தலைவன் தெரிந்த இழையினையுடையாய்! அத்தன்மையாகிய பரத்தையர்மாட்டு உண்மையாகப் பிரிந்து யான் செய்த தவறில்லாத இடத்து நீ எங்ஙனஞ் சினப்பாயென்றான்; எ - று.

அன்னவொன்றது நீ புலக்குந் தன்மையுடையவொன்றது.

இஃது ஊடல்பற்றிய வெகுளியென்னும் மெய்ப்பாடு.

இனி ஒருயிராயிருக்க உடம்பிரண்டாயிருப்பாயென்றாற் தன்னைப் பிறன்போற் கூறிற்றாகாது, பன்மையாய் நிற்றலின்.

ஏடா * * * தவறு—எ-து, ஏடா; நின் கண்ணை மறைத்த இமைக்குள்ளே மறைந்தபொழுதே தோன்றாமற் போதி, ஆதலால் நீ கைவிடுதலைப் பெற்றாய், அந்நிலைமைப் பகுதியை அறிந்திருப்பினும் அறியாதாரைப்போலே நின்னை நொந்து நின்னைப் புலக்கின்றவர் தவறுடையார்; நினக்கு ஒரு தவறு உண்டோவென்றாள்; எ - று.

அணைத்தோளாய் * * * யான்—எ-து, அதுகேட்ட தலைவன் அணைபோலுந் தோளினையுடையாய்! தீய மக்களை உடற்றுமா போல ஒரு தீய திறனின்றாகவும் உடற்றாநின்றாய்; யான் நீ காய்கைக்குக் காரணமானதோர் தவறுடையேனல்லேனென்றான்; எ - று.

மானோக்கி * * * வினி—எ-து, அதுகேட்ட தோழி மான்போலும் நோக்கினையுடையாய்! நீ அழும்படி நின்னைக் கைவிட்டவன் பரத்தைமையில் அமையாமல் நாணமற்றிருப்பனாயின் மேல் அவனிடத்தே நலிதலைக்கொடுத்து ஊடுகின்றதன்மை என்னபயன் தருமோவென்றாள்; எ - று.

இஃது "உறுதகை யில்லாப் புலவியுண் மூழ்கிய - கிழவோள் பால் நின்று கெடுத்தற்கட்" தோழி கூறியது.

இனி * * * கொள—எ-து, அதுகேட்ட தலைவி நெஞ்சே நீர்விழுதல் அமையாத துயிலுதலில்லாத கண் துயில்கொள்ளும்படியாக நாம் இனிச் சிறிதும் மேலாகக் கூறுங் கூற்றையுடையேமல்லேமென்று இவள்கூறுந் தகைமையினையுடைய கூற்றினைக் காரியமென்று நினைத்துப் பார்ப்பாயென நெஞ்சொடு கூறி ஊடறீர்ந்தாள்; எ-று.

இதனாற் தலைவற்குந் தலைவிக்கும் உணர்வென்னும் உவகை பிறந்தது.

இது தாவும்போக்குமின்றி ஐஞ்சீரடுக்கி வந்தஉறழ்கலி.(உஉ)

அஅ. ஒரூஉக், கொடியிய னல்லார் குரனூற்றத் துற்ற
முடியுதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிஇய வெமக்குநீ யாரை பெரியார்க்
கடியரோ வாற்றா தவர்;

கடியர்தமக், கியார்சொல்லத் தக்கார் மற்று;
வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை யுரையாது சென்றீநின் [ன்றீநின்
மாய மருள்வா ரகத்து;

ஆயிழாய், நின்கண் பெறினல்லா லின்னுயிர் வாழ்கல்லா
வென்க ணெவனோ தவறு;

இஃதொத்தன், புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்
வள்ளுகிர் போழ்ந்தனவும் வாளெயி றுற்றனவு [போல்

மொள்ளித்தழ் சோர்ந்தநின் கண்ணியு நல்லார்
சிறுபு சீறச் சிவந்தநின் மார்புந்
தவறாதல் சாலாவோ கூறு;

அதுதக்கது, வேற்றுமை யென்கண்ணோ வோராதி தீதி
தேற்றக்கண் டீயாய் தெளிக்கு; [ன்மை

இனித் தேற்றேம்யாம்,

தேர்மயங்கி வந்த தெரிகோதை யந்நல்லார்
தார்மயங்கி வந்த தவறஞ்சிப் போர்மயங்கி
நீயுறும் பொய்ச்சூ ளணங்காகின் மற்றினி
யார்மேல் விளியுமோ கூறு.

இஃது அவ்வாற்றாற் புக்க தலைவனுடன் ஊடியும் உறழ்ந்துஞ் சொல்லிப்போய்ச் சூளஞ்சி ஊடறீர்ந்தது.

(இ - ள்.) ஒரூஉக் * * * தவர்—எ-து, கொடியின் இயல்பையுடைய பரத்தையருடைய புழுகுமுதலியவற்றிலே அளைந்த மயிர்முடியினின்றும் உதிர்ந்த பூந்தாதுகள் நின் தோட்கட்டிலே கிடவாநிற்க எம்மை நீ தீண்டுதற்கு எமக்கு நீ யாராந் தன்மையை யுடையை? எம்மைவிட்டு நீ நீங்குவாயாக; பிரிவாற்றாதவர் பிரிய வல்ல பெரியோர்க்கு அடியரோ? அன்றேயென்றாள்; எ - று.

குரல், மயிர். நாற்றம் ஆகுபெயர்.

இது *“சினனே பேதைமை நிம்பிரி நல்குர - வனைநால் வகையுஞ் சிறப்பொடு வருமே” என்பதனாற் தொடிஇய எமக்கு நீ யாரை எனச் சினம்பற்றி வரினும் அது தன் காதலைச்சிறப்பித்தலின் அமைந்தது.

கடியர்தமக் * * * மற்று—எ-து, அதுகேட்டுக் கடியராயிருப்பார்தமக்கு மாற்றஞ்சொல்லத்தக்கவர் யாரொன்றான்; எ - று.

வினைக்கெட்டு * * * ரகத்து—எ-து, அதுகேட்டு நீ போகின்ற தொழிலைத் தவிர்த்துநின்று உண்மையல்லாத வெண்மைகளைச் சொல்லாதே நின் பொய்ம்மைகளை மெய்யென்று மயங்குவாரிடத்தே செல்லென்றாள்; எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௪௬-ம் சூத்.

வினைக்கேட்டுப் பாடமாயின் வினைக்கேடாகிய வாயல்லா வென்க. உனாயாதியும் பாடம். வெண்மை பண்புப்பெயர்.

ஆயிழாய் * * * தவறு—எ-து, அதுகேட்ட தலைவன் ஆராய்ந்த இழையினையுடையாய் நின்னுடைய கண்ணினில் அருளுநோக்கினைப் பெறிலன்றி இனிய உயிர் வாழமாட்டாத என்னிடத்துத் தப்பு யாதுதானென்றான்; எ - று.

*"காமக் கடப்பினுட் பணிந்த கிளவி - காணுங் காலைக் கிழவோற் குரித்தே" என்பதனாற் தலைவன் பணிந்து கூறினான்.

இஃதொத்தன் * * * கூறு—எ-து, அதுகேட்ட தலைவி இவனொருத்தனென நெஞ்சொடு வியந்து கூறிப், பின்னர்ப் புள்ளியையுடைய நண்டுகளின் நடையாலுண்டான வடு நீரருகைச் சேர்ந்து கிடந்தாற்போலப் பெரிய உகிராற் பிளந்த வடுக்களும் ஒளியையுடைய எயிறு அழுந்தின வடுக்களும் ஒள்ளிய இதழ்கள் வாடின நின் கண்ணியும் பரத்தையர் நின்னோடு வேறுபடுகிக் கோபித்து அடிக்கச் சிவந்த நின்னுடைய மார்புந் தப்பாதலுக்கு அமையாவோ? அமையாவாயிற் கூறென்றாள்; எ - று.

சேர்பென்னும் எச்சத்திற்கு வினை வருவித்து முடிக்க. ஒதுக்கமென்னுந் தொழிற்பெயர் ஆகுபெயர். "சிரறுசே லாடிய நீர்வாய்ப் பதத்த" என்றாற்போலச் சிரறுதல் சிதறுதன்மேல் நின்றது. † "வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன் - மரீஇய மருங்கினுரித்தென மொழிப" என்பதனுள் "ஒன்றெனமுடித்தலென்பதனான் மரீஇயவாறு ஏனையவற்றிற்குங் கொள்க" என்றலின் இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவனவும் அமைத்தாம். அதனான் வள்ளுகிர் போழ்ந்தன முதலியன கொள்க.

அதுதக்கது * * * தெளிக்கு—எ-து, நீ கூறுகின்ற மெய்வேறுபாட்டையோ என்னிடத்துண்டாக ஓராதேகொள்; அங்ஙனம் ஓராதிருத்தல் நினக்குத்தக்கது, அதற்குக் காரணமென்னெனில் அத்தீது என்கண் இல்லாமையை யான் நினக்குத் தெளிவிக்க நீ காணாயாயின் இனித்தெளிவிப்பேனென்றான்; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௧௩-ம் சூத.
† ,, ,, பொருளியல், ௪௭-ம் ,,

இனித்தேற்றேம்யாம்—எ-து, இக்கற்புக்காலத்து நீ சூளுறு கின்றதனைக்கொண்டு யாம் எம் நெஞ்சைத் தெளிவியேம்; அதற்குக்காரணங்கேள்; எ - று.

தேர்மயங்கி * * * கூறு—எ-து, தேரேறி வருகின்ற சிறப்பிலே மயங்கி நின் தீங்கைக் கருதாது வந்த தெரிந்த கோதையையுடைய அழகிய பரத்தையருடைய தாரை நின் தாராக நினைத்து அணிந்துவந்த தப்பிற்கு அஞ்சி யாம் ஊடிப் பொருத போரிலே கலங்கி இக்கற்புக்காலத்து நீ சூளுறும் மிகப்பொய்யாகிய சூளுறவு வருத்தத்தைச் செய்யுமாயின், பின்னை அதுதான் எங்கள் மேலன்றி யார்மேல் வரும்? அங்ஙனம் வாராமற் களவுகாலத்துச் சூளுறவுபோற் கெடுமோ? நீதானே கூறுவாயாகவென ஊடறீர்ந்து கூறினுள் எ - று.

யார்மேல் வருமென ஒருசொல் வருவிக்க. இனி நீயுறு மென்க.

இது *"இன்னுத் தொல்சூ ளெடுத்தற் கண்ணும்" என்பதனற் கூறிற்று. என்றது இன்னுங்குப் பயக்குஞ் சூளுறவினைத் தலைவன் சூளுறுவலெனக் கூறுமிடத்துமென்றவாறு. தலைவன் "வந்த குற்றம் வழிகெட வொழுகிக்" களவிற் சூளுறுவான் வந்த ஏதம் நீக்கிக் கற்புக்காலத்துக் கடவுளரையுங் குரவரையும் புதல்வனையுஞ் சூளுறுதலின் இன்னுதசூளென்றுள். இது களவுபோலச் சூளுறுதலிற் றொல்சூளாயிற்று. இதனுள் இரத்தலுந் தெளித்தலும்வந்தவாறுணர்க.

இதனற் றலைவிக்கு அணங்கால் அச்சம் பிறந்தது. தலைவற்குப் புணர்வாகிய உவகை பிறந்தது.

இஃது ஒரூஉவென ஒழியசையாகிய சொற்சீரடிவந்து ஐஞ்சீரடிக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா. தரவும் போக்கும் பாட்டிடை மிடைந்து மேவப் பாப் போக்கின்பின் வைத்ததனற் 'கடியர்தமக் கியார்சொலத் தக்கரா மற்று' எனப் போக்குட்போல் நாற்சீரான் இறும் பாட்டும் வந்தது. (உஙு)

அக. யாரிவ னெங்கூந்தல் கொள்வா னிதுவுமோ
ரூராண்மைக் கொத்த படிறுடைத் தெம்மனை
வாரனீ வந்தாங்கே மாறு;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், சு-ம், சூத்.

ஏஎஇவை, ஒருயிர்ப் புள்ளி னிருதலை யுள்ளொன்று
போரெதிர்ந் தற்றாப் புலவனீ கூறியென்
னுருயிர் நிற்குமா றியாது;

தெளிந்தேம்யாங் காயாதி யெல்லாம்வல் லெல்லா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
வருந்தனின் வஞ்ச முரைத்து;

மருந்தின்று, மன்னவன் சீறிற் றவறுண்டோ நீநயந்த
வின்னகை தீதோ விலேன்;

மாண்மறந் துள்ளாத நாணிலிக் கிப்போர்
புறஞ்சாய்ந்து கண்டைப்பாய் நெஞ்சே யுறழ்ந்திவனைப்
பொய்ப்ப விடேஎ மெனநெருங்கிற் றப்பினே
னென்றடி சேர்தலு முண்டு.

இது தலைவன் *"காமத்தின்வலியும்" என்றதனால் ஆற்றாமை வாயிலாக மலிந்து புக்கு நெருங்கிக் கூடுமிடத்து அவனுடன் தலைவி யூடிச் சிலசொல்லி அவன் ஆற்றாமைகூறுவது கேட்டு ஊடறீர்ந்தது.

(இ-ள்.) யாரிவ * * * மாறு—எ-து, இவன் யார்? எங் கூந்தலைத் தொடுதற்கு இவன் என்ன தொடர்புடையனென நெஞ்சொடு கூறிப், பின்னர் இங்ஙனங் கூந்தலைப் பிடிக்கின்ற இதுவும் நீ பாதுகாத்தலின்றிப் பாதுகாப்பாரைப்போலே பண்ணிக் கொண்டு ஊரையாளுந் தன்மைக்குப் பொருந்தினதொரு கொடுமையையுடைத்து, இதனை ஓர்ந்துபார்; இனி நீ எம் மனையிடத்தே வாராதேகொள்; வந்தாற்போலே மீண்டுபோவென்றாள்; எ-று.

இது வலிந்துபுக்கது கூறிற்று. வான் வினையெச்சம்.

† ஏஎஇவை * * * றியாது—எ-து, அதுகேட்ட தலைவன் உடலும் உயிரும் ஒன்றாய்த் தலை இரண்டாகிய புள்ளினுடைய அவ்விரண்டு தலையில் ஒருதலை மற்றத்தலையோடே போர்செய்தலை மேற்கொண்ட தன்மைத்தாக நீ இக்கொடுமைகளைக் கூறிப் புலந்தாற் பயனென்? அதனைக் கைவிட்டு இனி என்னுடைய அரிய உயிர் நிற்கும் வழியாது? அதனைக் கூறுவாயென்றான்; எ-று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௬-ம் சூத்.
† ஏஎ என்பதனைப் பின்கூற்றோடு சேர்த்துப் பொருள் கொள்க.

இது ஆற்றாமைகூறிற்று. புலவல் புலத்தலெனப் படுத்தலோசையாற் பெயராய் நின்றது. இவை கூறிப் புலவலென்னென்க. கூறு என வருவிக்க. ஏஎ இகழ்ச்சிக்குறிப்பு. நீங்கின காலமெல்லாம் மறந்து ஈண்டு வந்தால் இறந்துபடுவேனெனக் கூறலின் அதனை ஏஎயென இழித்து நெஞ்சொடுகூறினாள்.

*தெளிந்தேம்யாங் * * * முறைத்து—எ-து, ஏடா! எல்லாம் உணர்ந்திருக்கும் பெரிய காட்டிடத்திற் கொற்றவைக்கு அவள் அறியாதன சில உண்டாகப் பேய் நொடிசொன்னாற்போல நின் பொய்களை எனக்குச் சொல்லி வருந்தாதேகொள்; யாம் முன்பே நின் வஞ்சனைகளைத் தெளிந்துவிட்டேமென்றாள்; எ - று.

மருந்தின்று * * * விலேன்—எ-து, அதுகேட்ட தலைவன் என்னைப் பேயென்று காயாதேகொள்; எனக்குத் தவறுகள் ஏற்றுதற்கு அலமராதேகொள்; எனக் கூறிப், பின்னும், இனிய நகையினையுடையாய்! நீ என்மேல் ஏற்றிச்சொல்ல விரும்பிய தீதோ யான் உடையேனல்லேன்; அரசன் கோபிக்கப்படுகின்றவன்மேல் ஒருதவறு உண்டோ? தவறில்லையாயினுங் கோபிப்பனன்றே? அங்ஙனங் கோபிக்குமிடத்து அதற்கொரு பரிகாரமில்லையென்றான்; எ-று.

யாண்மறந் * * * முண்டு—எ-து, அதுகேட்ட தலைவி நெஞ்சே! இவனைப் பொய்சொல்ல விடேனென்று மாறுபட்டுக் கோபிக்கிற் தப்பினேனென்று வணக்கஞ்செய்தலும் இவனுக்குப் பரிகாரமுண்டாதலான் நம்மை மறந்து ஒருகாலமும் நாம் மாட்சிமைப் பட்டிருக்க நினையாத நாணமில்லாதவனுக்கு இவ்வூடற்போனாத் தோற்று அதனானுள்ள பயனைக் காண்பாயென்று ஊடறீர்ந்தாள்.

இதனாற் தலைவிக்குச் சூழ்ச்சியுந் தலைவற்குப் புணர்வாகிய உவகையும் பிறந்தன.

†"ஒருசிறை நெஞ்சமொ டுசாவுங் காலை - யுரிய தாகலு முண்டென மொழிப" என்பதனால் இவள் ஆற்றானெலென நெஞ்சுடன் உசாவினாள்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (உ௪)

* தெளிந்தேம்யாம் காயாதி என்னுங் கூற்றுக்களைப் பிரித்துரைகூறிற் செம்பாகமாம்.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௪0-ம். சூத்.

கூo. கண்டேனின் மாயங் களவாதல் பொய்ந்நகா
வண்டாத சொல்லித் தொடாஅ ரொடீஇயநின்
பெண்டி ருள்ர்மன்னோ வீங்கு;

ஒண்டொடிநீ, கண்ட தெவனோ தவறு;

கண்டது, நோயும் வடுவுங் கரந்து மகிழ்செருக்கிப்
பாடு பெயனின்ற பாணு ளிரவிற்
ருெடிபொலி தோளு முலையுங் கதுப்பும்
வடிவார் குழையு மிழையும் பொறையா
வொடிவது போலு நுசுப்போ டடிதளரா
வாராக் கவவி னொருத்திவந் தல்கற்றன்
சீரார் ஞெகிழஞ் சிலம்பச் சிவந்துநின்
போரார் கதவ மிதித்த தமையுமோ
வாயிழை யார்க்கு மொலிகேளா வவ்வெதிர்
தாழா தெழுந்துநீ சென்ற தமையுமோ
மாருள் சினைஇயவ ளாங்கேநின் மார்பி
ஞறிணர்ப் பைந்தார் பரிந்த தமையுமோ
தேறிநீ தீயே னலேனென்று மற்றவள்
சீறடி தோயா விறுத்த தமையுமோ
கூறினிக் காயேமோ யாம்;

தேறிற், பிறவுந் தவறிலேன் யான்;

அல்கற், கனவுகொ னீகண் டது;

கனைபெயற், றண்டுளி வீசும் பொழுதிற் குறிவந்தாட்
கண்ட கனவெனக் காணுது மாறுற்றுப்
பண்டைய வல்லநின் பொய்ச்சூ ணினக்கெல்லா
நின்ருய்நின் புக்கில் பல;

மென்றோளாய், நல்குநின் னல்லெழி லுண்கு;

ஏடா, குறையுற்று நீயெம் முனையனின் றீமை
பொறையாற்றே மென்றல் பெறுதுமோ யாழ
நிறையாற்ற நெஞ்சுடை யேம்.

இது *"புல்லுதன் மயக்கும் புலவிக் கண்ணும்" என்பதனாற் தலைவன் புலப்படப் பரத்தையரிடத்து ஒழுகாது மறைந்தொழுகி வந்து நின்றவனுடன் காமக்கிழத்தி ஊடிச்சொல்லித் தலைமகன் ஆற்றாமைகண்டு தன் ஆற்றாமையுஞ்சொல்லி ஊடறீர்ந்தது.

(இ - ள்.) கண்டேனின் * * * வீங்கு—எ-து, நின் பரத்தைமை இச்காலத்துக் களவொழுக்கத்தேயாதலைக் கண்டேன்; ஆதலாற் பொய்யாகவே நக்து யான் விரும்பாதனவற்றைக் கூறி என்னைத் தீண்டாதேகொள்; நீ தீண்டுதற்கு இவ்விடத்து நினக்குப் பெண்டிராயிருப்பார் உளரோ? இல்லையே என்றாள்; எ - று.

மன்னும் ஓவும் அசை.

ஒண்டொடி நீ * * * தவறு—எ-து, அதுகேட்ட தலைவன் ஒள்ளிய தொடியினையுடையாய்! நீ என்னுடைய தவறாகக் கண்டதெவனென்றான்; எ - று.

கண்டது * * * யாம்—எ-து, யான்கண்டது ஒருத்தி தான் உற்ற காமநோயையும் அதனாற் பிறந்த அலரையும் பிறர் அறியாமல் மறைத்து மகிழ்ச்சியின்றியிருக்கவும் மகிழ்ச்சியுண்டாக்கிச் செருக்கிச் சொரிகின்ற மழை மாறாமல் நின்ற ஒருநாளிற் பாதியாகிய இராப்பொழுதிலே தொடி பொலிவுபெற்ற தோளும் முலையுங் கூந்தலும் மகரத்தின் வடிவு நிறைந்த குழையும் ஏனை அணிகலங்களுந் தனக்குச் சுமையாக முறிவதொரு வஞ்சிக் கொம்புபோலும் இடையைத் தாங்கிக்கொண்டு அமைதி பிறவாத முயக்கத்தாலே அடிதளர்ந்து வந்து தங்குதலையுடைய தன் தலைமைநிறைந்த சிலம்பொலிப்பக் கோபித்து நின்னுடைய பலகை பொருத நிறைந்த கதவத்தைப் பாய்ந்தது; அது தவறாதற்கு அமையுமோ? அந்த ஆராய்ந்த இழையினையுடையவள் ஆரவாரிக்கும் ஆரவாரத்தைக் கேட்டு அவ்வாரவாரத்திற்கெதிரே நீ நீட்டியாது எழுந்திருந்து போனது; அது தவறாதற்கு அமையுமோ? அவள் மாறாளாய்ச் சினத்து அவ்விடத்தே நின்மார்பிற் கிடந்த நாறுகின்ற இதழையுடைய செவ்விமாலையை அறுத்தது; அது தவறாதற்கு அமையுமோ? பின்னை அவளுடைய சிறிய அடியைச் செறிந்து யான் தீமையையுடையேனல்லேன் அதனை நீ தெளியென்று கூறி அவளிடத்தே தங்கினது; அது தவறாதற்கு அமையுமோ? இனிச் சொல்லு; யாம் நின்னைக் கோபியேமோ என்றாள்; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௬0-ம் சூத்.

பாடுபெயல் பாடென விகாரம். நாளிற்பால் பாறுளென மரூஉ. நுசுப்போடென உருபுமயக்கம். கண்டது மிதித்தது; அது அமையுமோ? கண்டது சென்றது; அது அமையுமோ? கண்டது விரிந்தது; அது அமையுமோ? கண்டது இறுத்தது; அது அமையுமோ? என முடிக்க.

தேறிற் * * * கண்டது—எ-து, அதுகேட்ட தலைவன் யான் தேற்றத் தெளிவையாயின் இக்கேட்பதோர் தவறு யான் உடையேனல்லேன் நீ கண்டது தான் இராக்காலத்துக் கனவுபோலே இருந்ததென்றான்; எ - று.

கனைபெயற் * * * பல—எ-து, அதுகேட்ட தலைவி செறிந்த மழையாகிய தண்ணிய துளியைப்பெய்கின்ற இராக்காலத்தே ஒருவன் செய்த குறியிடத்தே வந்தாளொருத்தியை நீ கண்டதனால் உனக்கு நிகழ்ந்த கனவு இதுவெனச் சொல்லி நீ செய்ததனை நினையாதே அச்செய்தியை மாறுதலுற்று நின்றாய்; அங்ஙனம் நின்று பின்னர் நீ சூளுற்ற நின்னுடைய பொய்யாகிய சூளுறவு யாம் நுண்மையாகக் கொண்டமையின் நினக்குப் பண்டுபோற் பயன்தருந் தன்மையையுடையவல்ல; ஆதலால் எடா! நினக்குப் புகும் இல்லும் பலவால் ஆண்டே செல்லென்றாள்; எ - று.

கண்ட கனவு உண்ட எச்சில்போல் நின்றது.

மென்றோ * * * னுண்கு—எ-து, அதுகேட்ட தலைவன் மெல்லிய தோளினையுடையாய்! இனி யான் செய்த குறையைக் கைவிட்டு நின்னுடைய நன்றாகிய அழகை எனக்கு அருள்; அதனை யான் நுகர்வேனென்றான்; எ - று.

எடா * * * யேம்—எ-து, எம் வயத்தாக நிறுத்தமாட்டாத நெஞ்சையுடைய யாம் நினது தீமையைப் பொறுத்தலை நடத்தமாட்டேமென்று கருதுதலைப் பெறுவேமோ? பெறேமே; ஆதலால் நீ இக்காரியத்திலே உற்று எமக்குச் சில குறை கூறாதேகொள்ளென்று ஊடறீர்ந்தாள்; எ - று.

*"பிறவும்" என்றதனாற் சேரிப்பரத்தையாற் புலந்துகூறினாள்.

இதனாற்றலைவிக்குந் தலைவற்கும்புணர்வாகிய உவகைபிறந்தது.

இஃது ஒண்டொடிநீயெனவுந் தேறினெனவும் அல்கலெனவும் ஒழியசையும் பிறவுந் தவறிலேன்யானெனவுங் கனவுகொனீகண்ட

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௬0-ம் சூத்.

தெனவும் வழியசையும் புணர்த்துக், கண்டதெவனோதவறென முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும்பெற்றுக், கலிவெண்பாவின் வேறுபட்டுப் *"பாநிலை வகையே கொச்சகக் கலியென-நூனவில் புலவர் நுவன்றறைந் தனரே" என்னும் விதியாற் கொச்சகக்கலியாயிற்று. (உரு)

சுசு. அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம்
புரிநெகிழ் முல்லை நறவோ டமைந்த
தெரிமலர்க் கண்ணியுந் தாரு நயந்தார்
பொருமுரண் சீறச் சிறைந்து நெருநையி
னின்றுநன் றென்னை யணி ;

அணைமென்றோளாய்,

செய்யாத சொல்லிச் சினவுவ தீங்கெவ
னையத்தா லென்னைக் கதியாதி தீதின்மை
தெய்வத்தாற் கண்டீ தெளிக்கு ;

மற்றது, அறிவல்யா னின்கு ளனைத்தாக நல்லார்
செறிதொடி யுற்ற வடுவுங் குறிபொய்த்தார்
கூருகிர் சாடிய மார்புங் குழைந்தநின்
றுருந் ததர்பட்ட சாந்தமுஞ் சேரி
யரிமத ருண்கண்ணா ராராக் கவவிற்
பரிசழிந் தியாழநின் மேனிகண் டியானுஞ்
செருவொழிந்தேன் சென்றீ யினி ;

தெரியிழாய், தேற்றாய்சிவந்தனை காண்பாய்நீதீதின்மை
யாற்றி னிறுப்பல் பணிந்து ;

அன்னதே யாற்றல்காண்

வேறுபட் டாங்கே கலுழ்தி யகப்படின்
மாறுபட் டாங்கே மயங்குதி யாதொன்றுங்
கூறி யுணர்த்தலும் வேண்டாது மற்றுநீ
மாணா செயினு மறுத்தாங்கே நின்வயிற்
காணி னெகிழுமென் னெஞ்சாயி னென்னுற்றாய்
பேணாய்நீ பெட்பச் செயல்.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், கதிகூ-ம் சூத்.

இதுவும் அது.

(இ - ள்.) அரிநீ * * * யணி—எ-து, நரும்பூவோடே அழகிய நீரில் அலர்ந்த அல்லியையுடைய நீலப்பூ அனிச்சப்பூ முறுக்கு நெகிழ்ந்த முல்லைப்பூப் பொருந்தின தலைமாலையும் ஆராய்ந்த நறிய மலராற் செய்த கண்ணியும் மார்பின்மாலையும் விரும்பின பரத்தையர் ஊடுகின்ற மாறுபாட்டாலே கோபித்துப் பற்ற நிறங்கெட்ட என்னையுடைய ஒப்பனை நேற்றையில் இன்று நன்றாயிருந்ததென்றாள்; எ-று.

கண்ணி வாகைமாலை.

*"அன்னை யென்னை யென்றலு முளவே - தொன்னெறி முறைமை சொல்லினு மெழுத்தினுந் - தோன்றா மரபின வென்மனார் புலவர்" என்பதனாற் தலைவனை என்னையென்றாள்.

அணைமென்றோளாய் * * * தெளிக்கு—எ-து, அதுகேட்ட தலைவன் அணைபோல மெல்லிதாய தோளினையுடையாய்! இவன் நீங்கிற் பரத்தையரிடத்தல்லது நீங்கானென்று உட்கொண்டு அவ்வையத்தாலே யான் செய்யாத காரியங்களைச் சொல்லி இவ்விடத்தே சினக்கின்ற குறை யாதுதான்? என்னிடத்துத் தீதில்லாமையைத் தெய்வத்தாலே நினக்குத் தெளிவிப்பேன்; அதனைக் காண்பாய்; இனி என்னைக் கோபியாதேகொள்ளென்றான்; எ - று.

மற்றது * * * யினி—எ-து, அதுகேட்ட தலைவி யான் நீ நீங்கியபின்னர் நீ செய்த காரியமும் அறிவேன்; நின் சூளுறவு பொய்யாதலும் அறிவேன்; புதிய பரத்தையருடைய செறிந்த தொடியழுந்தின வடுவையும் அவர் முயக்கத்தாற் குழைந்த நின் தாரையும் நீ சூறியாற் பொய்க்கப்பட்ட பரத்தையர் கோபித்துக் கூரிய உகிராற் தாம் விரும்பியாங்கு வடுச்செய்த மார்பையுஞ் சேரியிலிருந்த செவ்வரியினையுஞ்செருக்கையுமுடைய மையுண்கண்ணினையுடையாருடைய நிறையாதமுயக்கத்தாலே பூசின பாடழிந்த சிதறுதல்பட்ட சந்தனத்தையுமுடைய நின்வடிவைக் கண்டு இதற்குரிய யானும் நின்னோடு ஊடுதலைத் தவிர்ந்தேன்; இனி அப்பரத்தையரிடத்தே செல்வாயென்றாள்; எ - று.

தெரியிழாய் * * * பணிந்து—எ-து, அதுகேட்ட தலைவன் தெரிந்த இழையினையுடையாய்! யான் தெளிவித்ததனைக்கொண்டு நின் நெஞ்சைத் தெளிவியாயாய்க் கோபித்தாய்; யான் தீயேனல்லாமையை நின்னைத் தாழ்ந்து நெறியாலே நின் நெஞ்சிடத்தே நிறுத்துவேன், அதனைச் காண்பாயாகவென்றான்; எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல்; ருஉ - ம் சூத.

அன்னதே * * * செயல்—எ-து, அதுகேட்ட தலைவி இவன் கருத்து இன்னுந் தீதின்மையேயென்பது நெஞ்சிடத்தே நிறுத்துதலேயாயின், இவன் வலியை நெஞ்சே காண்பாயாகவென நெஞ்சொடு கூறி, அவனைநோக்கி யான் நின்னோடு வேறுபட்ட அப்பொழுதே நெஞ்சு கலங்குவையாயின் வேறுபடாமல் நின் கையிலே அகப்படுவேனாயின் அக்கலக்கத்தை மாறுபட்டபொழுதே என்னை இகழ்ந்து பரத்தையர்பாற் சேறற்கு மனம் மயங்குவையாதலால் யாதொரு வார்த்தையையுஞ் சொல்லி என்னை ஊடலுணர்த்துதலும் உனக்கு வேண்டாததொரு காரியம், இச்குறைகளையொழிய நீ வேறு மாட்சிமைப்படாத குறைகளை நீ செய்யினும் அவற்றைத் தள்ளி நின்னைக் காணின், அப்பொழுதே என் நெஞ்சு நின்னிடத்தே நெகிழ்ந்துவருமாயின், என் நெஞ்சின் தன்மையை உட்கொள்ளாயாய் நீ யான் விரும்பும்படி என் நெஞ்சைத் தெளிவிக்குஞ் செயல்களை என்ன காரியத்திற்குச் செய்தாயென ஊடறீர்ந்தாள் ; எ-று.

இதனான் இருவர்க்கும் புணர்ச்சியாகிய உவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய் பெற்றும் வந்து போக்கின்றி உற்ற உறழ்கலி *"கூற்று மாற்றமு மிடையிடை மிடைந்தும்-போக்கின் றாக லுறழ்கலிக் கியல்பே" என்பது விதி. (உகு)

கூ௨. புனவளர் பூங்கொடி யன்னாய் கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி
மயங்கிமற் றுண்டாண்டுச் சேறலுஞ் செல்லா
துயங்கி யிருந்தார்க் குயர்ந்த பொருளு
மரிதி னறஞ்செய்யா வான்றோ ருலகு
முரிதி னொருதலை யெய்தலும் வீழ்வார்ப்
பிரிதலு மாங்கே புணர்தலுந் தம்மிற்
றருத றகையாதான் மற்று;

நனவினாற் போலு நறுநுதா லல்கற்
கனவினாற் சென்றேன் கலிகெழு கூடல்
வரையுறழ் நீண்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரையணி காவி னகத்து;

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், சுஎ௰ சூத்.

உரையினி, தண்டாத்தீஞ் சாய னெடுந்தகா யவ்வழிக்
கண்ட தெவன்மற்று நீ;

கண்டது, உடன்ம ராயமொ டவ்விசும் பாயு
மடநடை மாயின மந்தி யமையத்
திடன்விட் டியங்கா விமையத் தொருபா
லிறைகொண் டிருந்தன்ன நல்லாரைக் கண்டேன்
றுறைகொண் டுயர்மணன் மேல்; ஒன்றி நிறைவதை,

ஓர்த்த திசைக்கும் பறைபோனின் னெஞ்சத்து
வேட்டதே கண்டாய் கனு;

கேட்டை, விரையனீ மற்று வெகுள்வா யுரையான்
டிதுவாகு மின்னகை நல்லாய் பொதுவாகத்
தாங்கொடி யன்ன தகையா ரெழுந்ததோர்
பூங்கொடி வாங்கி யிணர்கொய்ய வாங்கே
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனையரண் போல வுடைந்தன்றக் காவிற்
றுனைவரி வண்டி னினம்;

மற்றுங்கே, நேரிணர் மூசிய வண்டெல்லா மவ்வழிக்
காரிகை நல்லார் நலங்கவர்ந் துண்பபோ
லோராங் காங்க மூச வவருள்
ஒருத்தி, செயலமை கோதை நகை
ஒருத்தி, யிகலார் செருவிற் றெரடியொடு தட்ப
ஒருத்தி, தெரிமுத்தஞ் சேர்ந்த திலதம்
ஒருத்தி, யரிமா ணவிர்குழை யாய்காது வாங்க
ஒருத்தி, வரியா ரணிசெறி காழகம்
ஒருத்தி, யரியார் ஞெகிழத் தணிசுருத் தட்ப
ஒருத்தி, புலவியாற் புல்லா திருந்தா ளலவுற்று
வண்டின மார்ப்ப விடைவிட்டுக் காதலன்
றண்டா ரகலம் புகும்;

ஒருத்தி, யடிதாழ் கலிங்கந் தழீஇ யொருகை
முடிதா ழிருங்கூந்தல் பற்றிப்பூ வேய்ந்த
கடிகயம் பாயு மலந்து;

ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்ருள் பூண்
மணங்கமழ் கோதை பரிவுகொண் டோச்சி [ட
வணங்குகாழ் வங்கம் புகும்;

ஒருத்தி, யிறந்த களியா னிதழ்மறைந்த கண்ணள்
பறந்தவை மூசக் கடிவாள் கடியு
மிடந்தேற்ருள் சோர்ந்தனள் கை;

ஆங்க, கடிகாவிற் காலொற்ற வொல்கி யொசியாக்
கொடிகொடி தம்மிற் பிணங்கி யவைபோற்
றெரியிழை யார்ப்ப மயங்கி யிரிவுற்ருர் வண்டிற்கு
வண்டல் வரக்கண்டேன் யான்;

நின்னைநின் பெண்டிர் புலந்தனவு நீயவர்
முன்னடி யொல்கி யுணர்த்தினவும் பன்மாண்
கனவின் றலையிட் டுரையல் சினைஇயான்
செய்வதி லென்பதோ கூறு;

பொய்கூறேன், அனவகை யால்யான் கண்ட கனவுத்தா
னனவாகக் காண்டை நறுநுதால் பன்மாணுங்
கூடிப் புணர்ந்தீர் பிரியன்மி னீடிப்
பிரிந்தீர் புணர்தம்மி னென்பன போல
வரும்பவிழ் பூஞ்சினை தோறு மிருங்குயி
லானு தகவும் பொழுதினுன் மேவர
நான்மாடக் கூடன் மகளிரு மைந்தருந்
தேனிமிர் காவிற் புணர்ந்திருந் தாடுமா
ரானு விருப்போ டணியயர்பு காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவன் வாயில்பெருது ஆற்ருமைவாயிலாகப் புக்குத் தலைவியை நயப்பித்தல் காரணமாகத்

தெய்வமகளிர் பொய்தலாடுவதோர் சுனைக்கண்டேன், அது கனவா ய்ப் பருவம் வந்து இறுத்தது பாராயென ஊடநீர்வது பயனாகத் தலைவிக்குக் கூறியது.

(இ - ள்.) புனவளர் * * * மற்று—எ-து, புனத்திடத்து வளர்ந்த பூவையுடைய கொடியையொப்பாய்! பொருள்வயிற்செ ன்று முயலாதே வருந்தியிருந்தவர்களுக்கு அவர்கள் இருந்த இடங்க ளிலே இடங்களிலே மிக்க பொருளுந் தானே செல்லுதலும் அரிதா யிருத்தலாலே உலகந் தமக்கு உரித்தாக அறத்தைச்செய்யாது இப் படி இருக்கவும் அறஞ்செய்தற்கு அமைந்தோர் அறுதியாக அவ்வ றத்தைச் செய்தலுங் கனவிடத்தின்றாய்ப் போகத் தாம் முயங்கிய மகளிருடைய முலையினிடையிலே அழுந்திய இன்பத்தே மயங்கி விரும்புகின்ற கணவரை மகளிர் ஊடலாற் பிரிதலும் அப்பொழுதே ஊடநீர்ந்து புணர்தலுமாகிய தம்மின் மாறான இன்பத்தைக் கன விடத்தே தருதலை விலக்காதாம்; இனி மிகுத்த காதலாற் கனவெ ன்று சொல்லப்பட்டது ஓர் அழகினையுடைத்தாகிய நீர்மையையுடை த்தாயிருந்ததென்றான்; எ - று.

என்றது இன்பமும் பொருளும் அறனுமென்று ஆசிரியர் கூ றிய இலக்கணம்பற்றிச் சிறந்த இன்பத்தையே தந்தது, அறனும் பொருளுந் தாராமற்போயிற்று, இக்கனவாதலால் அதனை ஓர் காரி கைநீர்த்தென்றான்.

பொருளுமென்ற உம்மை சிறப்பு. மற்று அசை.

நனவினுற் * * * னகத்து—எ-து, ஒளிய நுதலினையுடை யாய்! ஆரவாரம்பொருந்தின மதுரையினையுடைய வரையை மாறுப டுகின்ற நீண்ட மதிலிடத்தைச்சூழ்ந்த வையையாற்றங்கரையை அழ குபெறுத்தின பொழிலினிடத்தே நனவிடத்தே சென்றாற்போல இராப்பொழுதிலே கனவிடத்தே சென்றேனென்றான்; எ - று.

உரையினி * * * நீ—எ-து, அதுகேட்ட தலைவி அமையாத இனிய மென்மையினையுடைய நெடுந்தகாய்! பின்னை நீ அவ்விடத்துக் கண்டது எத்தன்மைத்து? அதனை இனிச்சொல்லென்றாள்; எ - று.

கண்டது * * * நிறைவதை—எ-து, அதுகேட்ட தலைவன் யான்கண்டது கேள், அன்னங்கள் தன்னிடத்தைவிட்டுப் போகாத

இமயமலையில் ஒருபக்கத்தே அழகிய விசும்பிலே இரைகவர்ந்த இளைப்பால் ஓய்ந்து பறக்கும் மடப்பத்தையுடைத்தாகிய நடையினையுடைய அன்னத்திரள் அந்திக்காலத்தே தங்குதல்கொண்டிருந்த தன்மையவாகத் துறை தன்னிடத்தேகொண்டு உயர்ந்த மணற்குன்றிலே நல்லார் தம்முடனே அமர்ந்த ஆயத்தாருடனே பொருந்தி நிறைந்திருக்கின்றதனைக் கண்டேனென்றான்; எ - று.

மாஇனம் மாயினமெனை மருஉவான் யகரவுடம்படுமெய் பெற்றது. அன்னவாகவென விரிக்க.

ஓர்த்த * * * கனா—எ-து, அதுகேட்ட தலைவி கொட்டுகின்றவன் தன்மனத்தில் ஓர்த்த ஓசையைத் தானும் ஒலிக்கும் பறைபோல நின்னுடைய நெஞ்சத்து விரும்பின இன்பத்தையே கனவாகக் கண்டாயென்றாள்; எ - று.

கேட்டை * * * னினம்—எ-து, அதுகேட்ட தலைவன் நீ விரையாதேகொள்; பின்னைக் கோபிப்பாயென்றான்; அதுகேட்ட தலைவி மேல் உரையென்றாள்; அதுகேட்ட தலைவன் இனிய நகையினையுடைய நல்லாய்! ஆண்டுப் பிறந்தது இதுவாயிருக்கும் அதனைக் கேள்; கொடியையொத்த அழகினையுடையார் தாம் அக்காவிடத்து எழுந்துநின்றதோர் பூங்கொடியை எல்லார்க்கும் பொதுவாகக்கொண்டு வளைத்து அதிற் கொத்துக்களைப் பறிக்க இரைந்து வரியினையுடைய வண்டின் திரள்கள் கொம்புகள் அலர்ந்த வேப்பந்தாரினையுடைய பொதியினையுடையவன் பொருத பகைப்புலத்து அரண்போல் அவ்விடத்தே உடைந்தது; எ - று.

உடைந்தன்றென்பது றகரம் ஊர்ந்த குன்றியலுகரவீற்று முற்றுச்சொல், வந்தன்றென்பதுபோல.

மற்றுங்கே * * * புகும்—எ-து, பின்னை அப்படியே உடைந்த தம்மிலொத்த இணர்களிலே மொய்த்த வண்டுகளெல்லாம் அவ்விடத்து நின்ற அழகினையுடைய மகளிர் நலத்தைக் கைக்கொண்டு நுகர்வனபோல ஒருபடிப்படி மொய்க்கையினாலே அவ்வண்டின் போரிலே அவர்களில் ஒருத்தியுடைய பூமாலையும் பண்ணுதல் அமைந்த முத்தமாலையும் வேறொருத்தியுடைய அசைதலார்ந்த தொடியோடே தடுத்துக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய நெற்றியிற் திலகத்தைச் சேர்ந்த தலையிற் கிடந்த தெரிந்த முத்துவடத்தை வே

ெருத்தியுடைய அழகினையுடைய காதிற்கிடந்த அழகுமாட்சிமைப்பட்ட விளங்குகின்ற மகரக்குழை துடக்கிக்கொள்ளாநிற்க, ஒருத்தியுடைய வரிநிறைந்த அரையிற் கட்டிய துகிலை வேறொருத்தியுடைய உள்ளீடுமணியமைந்த சிலம்பிடத்திற் கிடந்த சுரிவடிவாகிய மூட்டுவாயிரும்புகள் தளைத்துக்கொள்ளாநிற்க, ஒருத்தி புலவியாலே கணவனைப் புல்லாதிருந்தவள் வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கையினாலே வருத்தமுற்றுப் புலவியை நடுவே கைவிட்டுக் கணவன் வணங்குகையினாலே அவனுடைய குளிர்ந்த மாலையையுடைய மார்பிடத்தே முயங்கும்; எ - று.

செயவெனெச்சங்கள் புகுமென்னும் பிறவினை கொண்டன.

ஒருத்தி * * * மலந்து—எ-து, ஒருத்தி அடியிலே தாழ்ந்த துகிலை ஒருகையாலே தழுவிக்கொண்டு மற்றைக்கையாலே முடித்த முடி குலைந்த கரிதாகிய கூந்தலைப் பிடித்துக்கொண்டு அலவுற்று மிகுதியையுடைய பூ வேய்ந்த குளத்திலே பாயாநிற்கும்; எ - று.

ஒருத்தி * * * புகும்—எ-து, ஒருத்தி திரட்சிகொண்டு வண்டுகள் மொய்க்கையினாலே கையாற் சடியமாட்டாளாய் மணம் நாறுகின்ற மாலையை அறுத்துக்கொண்டு ஓட்டி அதற்கு அவை போகாமை கண்டு வளைந்த தண்டுகள் தனக்கு உள வலியாக உள்ளே பூண்ட ஓடத்தே பாயும்; எ - று.

காழ்பூண்டவென்க. பரிவு செய்தெனெச்சம்.

ஒருத்தி * * * கை—எ-து, ஒருத்தி அறிவுபோதற்குக் காரணமான கள்ளின் களிப்பால் இமை கூடுகையினாலே பாவை மறைந்த கண்ணையுடையளாய்ப் பறந்த வண்டுகள் மொய்க்க ஓட்டுகின்றவள் தன் களிப்பாலே அவற்றை ஓட்டும் இடம் அறியாளாய்க் கைசோர்ந்தாள்; எ- று.

கைசோர்ந்தனள் சினைவினை; முதலொடு முடிந்தது.

ஆங்க. உரையசை; அங்ஙனேயெனநின்றது.

கடிசாலிற் * * * யான்—எ-து, விளையாட்டையுடைய மகளிர் மிகுதியையுடைய பொழிலிலே காற்றடிக்க ஒதுங்கி வளைந்து கொடியுங் கொடியுந் தம்மிற் பிணங்கியவைபோலத் தெரிந்த அணிகள் ஆரவாரிப்பத் தம்மிலே மயங்கி அவ்வண்டுகளுக்குக் கெடுதலுற்றார் யான் கனவைக்கண்டேனென்றான்; எ - று.

நின்னைநின் * * * கூறு—எ-து, அதுகேட்ட தலைவி நின்னை நின்னுடைய பெண்டிர் புலந்தனவற்றையும் நீ அவருடைய அடிமுன்னே வணங்கிப் புலவிதீர்ந்தனவற்றையும் பலபடியாகக் கனவின்மேலிட்டுக் கூறுதல் யான் சினத்துச் செய்வதொரு படியு இன்றென்பதனை உட்கொண்டோ சொல்லென்றாள்; எ - று.

உறையல் படுத்தலோசையாற் றொழிற்பெயராயிற்று.

பொய்கூறேன் * * * கொண்டு—எ-து, அதுகேட்ட தலைவன் யான் பொய்சொல்லேன் நறிய நுதலினையுடையாய்! பல மாட்சிமையும் உண்டாய்ப் புணர்ந்தீர் பிரியாதேகொள்ளும், புணர்ச்சிநீட்டித்து இடையே பிரிந்தீர் கூடுதலைத் தருமினென்று கூறுவனபோலக், கரியதாகிய குயில்கள் அரும்பு அவிழ்ந்த பூக்களையுடைய கொம்புகடோறும் இருந்து அமையாமற் பெடையை அழைக்கும் இளவேனிற்பொழுதின்கண்ணே காமற்கு விருந்திடுதலை மேவுதல்வர எதிர்கொண்டு கூடலின் மகளிரும் அவர் கணவருந் தேனினம் ஒலிக்குங் காவிலே கூடியிருந்து விளையாட வேண்டி அமையாத விருப்பத்தோடே அணிகளை அணிவாராதலாற் பிரிதலும் புணர்தலுமாகிய கூற்றாலே யான்கண்ட கனவு நன்றாகிய உண்மையாம்படி நெஞ்சாலே கருதுவாயென்றான்; எ-று.

கனவு செய்யுண்முடிவு. நான்கு மாடங் கூடலின் நான்மாடக்கூடலென்றாயிற்று. அவை திருவாலவாய் திருநள்ளாறு திருமுடங்கை திருநடுவூர். இனிக் கன்னி கரியமால் காளி ஆலவாய் என்றுமாம். புணர்தம்மின் "நல்லெயி லுழந்த செல்வர் தம்மின்" என்றாற்போலத் திரிசொல்.

இஃது *"உறலருங் குண்மையி னூடன் மிகுத்தோளைப் - பிறபிற பெண்டிரிற் பெயர்த்தற் கண்ணும்" என்பதனாற் பிறபிற பெண்பால் காட்டி ஊடறீர்த்தது. புல்லாதிருந்தாளென்றதனான் ஊடன்மிகுதி கூறி மகளிரும் மைந்தரும் விருந்தெதிர்கொண்டு அணியயர்வர் நாமும் அது செய்யவேண்டுமென்றவாறு காண்க.

இதனாற் றலைவற்குக் கனவு முதற் றோன்றிப் பின்னர் வினைவு தோன்றிற்று. இது †"யாறுங் குளனுங் காவு மாடி" என்னுஞ் சூத்திரத்தாற் காவிற்புணர்ந்திருந்தாட நீயுங் கருதெனத் தலைவிக்குக் கூறியது.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௯-ம் சூத்.
† " " " ௰௦-ம் "

இஃது ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வந்த கலிவெண்பா. ஆசிரியத்தளையும் வந்தது. (உஎ)

கூரு. வண்டூதுசாந்தம் வடுக்கொள நீவிய
தண்டாத்தீஞ் சாயற் பரத்தை வியன்மார்ப
பண்டின்னை யல்லைமன் னீங்கெல்லி வந்தீயக்
கண்ட தெவன்மற் றுரை;

நன்றும், தடைஇய மென்றோளாய் கேட்டீவா யாயி
னுடனுறை வாழ்க்கைக் குதவி யுறையுங்
கடவுளர் கட்டங்கி னேன்;

சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்நீ
கடவுண்மை கொண்டொழுகு வார்;

அவருள், எக்கடவுள் மற்றக்
கடவுளைச் செப்பீ மன;

முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கா
லிப்பொழுது பொழுதென் றதுவாய்ப்பக் கூறிய
வெக்கடவுள் மற்றக் கடவுள்; அதுவொக்கும்,

நாவு ளழுந்து தலைசாய்த்து நீகூறு
மாயமோ கைப்படுக்கப் பட்டாய்நீ கண்டாரை
வாயாக யாங்கூற வேட்டீவாய் கேளினி;

பெறனசை வேட்கையி னின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகையாராய்க் கண்டார்க்
கிறுமுறை செய்யு முருவொடு நும்மிற்
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ;

நறுந்தண் டகரமு நானமு நாறு
நெறிந்த குரற்கூந்த லுளணிக் கொப்ப
நோக்கிற் பிணிகொள்ளுங் கண்ணொடு மேனணி
பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ;

ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளு
மாராக் கணைகாமங் குன்றத்து நின்னொடு
மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ;

கண்ட கடவுள் தம்முளு நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறாகச் செய்து
குறிகொளச் செய்தார்யார் செப்புமற் றியாருஞ்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர் செறுத்தக்காய்
தேறினென் சென்றீநீ செல்லா விடுவாயேற்
றூர கலத்துக் கொருசார் மேவிய
நெட்டிருங் கூந்தற் கடவுள ரெல்லார்க்கு
முட்டுப்பா டாகலு முண்டு.

இது "சாவற் பாங்கி னுங்கோர் பக்கமும்" என்புழி ஆங்கோர்பக்கமான கடவுளைக் கண்டு தங்கினேனென்ற தலைவற்கு நீ கண்ட கடவுளர் இவரெனக் கூறிப் புலந்தது.

(இ - ள்.) வண்டேது * * * றுரை—எ-து, அமையாத இனிய மென்மையினையும் பரத்தைமைக் குணத்தையுமுடைய வண்டுகள் ஊதுஞ் சந்தனத்தைக் கை வடுக்கொளப் பூசின அகற்சியையுடைய மார்பனே! முன்பு இத்தன்மையையுடையையல்லை; அத்தன்மை போயிற்று; இவ்விடத்து இராக்காலத்தே வர நீ புறத்துப்போய்க் கண்ட விநோதம் எத்தன்மைத்து? பின்னை அதனைக் கூறென்றாள்; எ-று.

நின்றும் * * * னேன்—எ-து, அதுகேட்ட தலைவன் பெரிதும் பெருத்த மெல்லிய தோளினையுடையாய்! யான் கூறுகின்றதனைக் கேட்பையாயிற் கேள், யாம் இருவரும் போய் உடனே துறக்கத்திருக்கும் வாழ்க்கைக்கு உதவியாயிருக்குங் கடவுளைக் கண்டு அவரிடத்தே தங்கினேனென்றான்; எ - று.

இல்லறம் நிகழ்த்தி வானப்பிரத்தம் நிகழ்த்துங்கால் உடனுறைதலின் உடனுறைவாழ்க்கையென்றான். நூல்களான் உணர்த்துதலை உதவியென்றான். அது *"காமஞ்சான்ற" என்னுஞ் சூத்திரத்திற் "சிறந்தது பயிற்ற லிறந்ததன் பயனே" என்பதனானுணர்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ருக-ம் சூத்.

சோலை * * * மன—எ-து, அதுகேட்ட தலைவி கடவுட்டன்மை உண்மையாகக் கொண்டு நடத்துவார் சோலையின் மலரைச் சூடின மான்பிணைபோலும் நோக்கினையுடைய பரத்தையர் பலருளர், அப்பரத்தையருள் நீ கூறிவந்த கடவுள் எந்தக்கடவுள்? அக்கடவுளைச் சொல்லுவாயென்றாள்; எ - று.

மற்று வினைமாற்று.

முத்தேர் * * * கடவுள்—எ-து, பின்னை அந்தக் கடவுள் முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நாம் மணத்தைச்செய்ய இப்பொழுது முகூர்த்தமென்று அம்முகூர்த்தம் வாய்ப்பச் சொன்ன அந்தக் கடவுள் காணென்றான்; எ - று.

புக்கக்கால் காலீற்று வினையெச்சம். முற்கூறிய கடவுள்தன்னையே இவள் அறியுமாற்றான் மீட்டுங் கூறினான், அவற்கு எல்லாக் கண்களும் உளவாகலின்.

அதுவொக்கும்—எ-து, அதுகேட்ட தலைவி நீ கூறியது எனக்கும் ஒக்குமெனத் தனதொவ்வாமை கூறினாள்; எ - று.

நாவு * * * கேளினி—எ-து, உள்ளே அழுந்துநாவுடனே தலையைச்சாய்த்து நீ கூறுங் கூற்றே பொய்; ஆகையினாலே நீ எம்மால் அகப்படுக்கப்பட்டாய்; நீ கண்ட கடவுளை உண்மையாக யாங்கள் சொல்லக் கேட்க விரும்பியவனே! இனி யாங்கள் கூறக்கேளென்றாள்; எ - று.

பெறனசை * * * கண்டாயோ—எ-து, நின்னைப் பெறுதலை நச்சின ஆசையாலே நீ செய்த குறியிடத்தே தப்பாமல் வந்த கடவுள் கண்டவர்களுக்கு இறந்துபடும் நிலைமையைச் செய்யும் வடிவோடே விழுந்தெழுந்த முறைமை சேர்ந்த எயிற்றினையுடையராய் நும் மனையிடத்தே சேரும் முறைமையோடே வந்த கடவுளை நீ கண்டாயோவென்றாள்; எ - று.

நகை ஆகுபெயர். நகவொன்றும் பாடம்.

பொருளதனைப் பெறுதல் நச்சின ஆசையாலே நின் மனத்திற் கருதிய கருத்துக்களெல்லாம் வாய்ப்பப் பறிந்துபோம் முறைமையைச் சேர்ந்த கடவுள் மனவேட்கையை அடக்கும் முறைமையை இகழாராய்த் தம்மைக் கண்டவர்களுக்குத் தீவினை இறும் முறைமை

யைக் கொடுக்கும் வடிவுடனே நும் இல்லிடத்தே வந்த கடவுளைக் கண்டாயோவென்று வேறுமொருபொருள் தோன்றியவாறு காண்க.

வாய்ப்பப் பறிமுறையென்றார் வேரோடே பறிதலின். செறிதல், அடக்கம்; நகை, எள்ளல்.

நறுந்தண் * * * கண்டாயோ—எ-து, பார்வையாலே பிணித்தலைக் கொள்ளுங் கண் வருத்துதலாலே நறிய தேன்குளிர்ந்த மயிர்ச்சாந்தமும் புழுகும் நாறும் அறல்பட்ட பற்றத்தையுடைத்தாகிய மயிர்க்கு நாட்காலத்து அணியும் அணிக்குப் பொருந்த நீ முதனாட் பூவைப் பலியாகப்போகவிட்ட கடவுளைக் கண்டாயோ வென்றாள்; எ-று.

ஒடு ஆலாக்குக. மேற் கடவுளென்றதற்கேற்பப் பலியென்றார். அருணேக்கினாற் பிணியை வாங்கிக்கொள்ளுங் கண்ணினராகையாலே கூந்தலையுடையாள் நாட்காலத்து அணிதற்கேற்பப் பூப்பலியைக் கைவிட்டு அர்ச்சித்த கடவுளொன்பதும் ஒன்று. கூந்தல் ஆகுபெயர். பராசத்தியைப் பூவால் அர்ச்சித்த கடவுளொன்றுணர்க. நீ கண்டாயோவென்க.

ஈரணிக் * * * கண்டாயோ—எ-து, கெடாத விரதத்தாலே முகங் குதிரைமுகமும் உடலம் மக்களுடலுமாகிய இரண்டு அழகுக்குப் பொருந்திய சூரபன்மாவைக் கொன்ற சிவந்த வேலையுடைய முருகனைப் புகழ்ந்து நிறையாத செறிந்த காமவேட்கையாலே திருப்பரங்குன்றினிடத்தே நின்னோடே மாரிக்காலத்தே பலநாளுந் தங்கின கடவுளைக் கண்டாயோவென்றாள்; எ-று.

இனிப், பெண்ணும் ஆணும் ஆகிய இரண்டு அழகினுக்குப் பொருந்திய செவ்விதாகிய எழுச்சியையுடைய இறைவனை அமையாத செறிந்த வீடுபேற்றில் ஆசையாலே பலநாளும் புகழ்ந்து கொடுந்தொழில்களைக் கொன்ற கெடாத விரதத்தோடே மலைகளிலே மாரிக்காலத்திலே நின்னோடு உறவுகொண்டிருந்து தவஞ்செய்த கடவுளைக் கண்டாயோவென்பதும் ஒன்று தோன்றிற்று. சத்தியுஞ் சிவனும் ஒன்றாகிய வடிவைப்பாடி என்க. நின்னொடென்ற ஒடுவிற்கு உறவு கொண்டிருந்தவென ஒரு வினை வருவிக்க.

கண்ட * * * முண்டு—எ-து, நீ கண்ட கடவுளர் தங் களுள்ளும் நின் மணத்தைத் தன்னிடத்தே கொண்ட அகலத்தை

யுடைய மார்பைப் பழையதன்மை குலைந்து போம்படி பண்ணிப் பிறர் முயங்காதபடி அடையாளமாக வடுப்படுத்துதலைச்செய்தார் யார் சொல்லு; பின்னை அப்பரத்தையர் யாவருஞ் சிறிதாகிய காலத்தளவு இங்கே தங்குவையாயின் கோபிப்பராகையினாலே எம்மாற் செறுக்கத்தக்கவனே! நின் பொய்மையெல்லாம் உள்ளபடி யான் அறிந்து தெளிந்தேன்; இனி அவர்பாற் செல்லாதொழிவையாயின் நினது நல்ல தாரையுடைய மார்பத்துக்கோர் முட்டுப்பாடு உண்டாம்; அது நீ சாரும்படி நின்னை முயங்கிய நெடிய கரிய கூந்தலையுடையரெல்லார்க்கும் முட்டுப்பாடு உண்டாதலும் உண்டாதலால் ஆண்டே செல்லெனப் புலந்துகூறினாள்; எ - று.

தம்முளுமென்ற உம்மை சிறப்பும்மை.

இனிக் கடவுளர்தம்முளும் வியன்மார்பையுடைய நின்னை மனம் வேறாகப்பண்ணி வானப்பிரத்தத்தைக் குறித்தல் கொள்ளும்படி பண்ணின இருடிகள் யார்தான் சொல்லு; யாவரும் வெகுள்வர், அவர்பாற் செல்லாதொழிவாயேல், நல்ல ஒழுங்கினையுடைத்தாகிய கடாவின்புறத்தே தோன்றும் விடைகளையுடைய, நீரைப் பலகாலுஞ் சாருதலாலே ஈரம்பொருந்திய நெடிய கரிய சடையினையுடைய, இருடிகளெல்லார்க்கும் முட்டுப்பாடு பிறத்தலும் உண்டென்பதும் ஒன்று தோன்றிநின்றது. அவர்க்கு முட்டுப்பாடு நினக்குக் கூடும்பொருள்கள் கூடாமையாலுள்ள முட்டுப்பாடு. தார், ஒழுங்கு. அகலமென்றது பரசமயத்தார் கூறுங் கடாவிற்கு விடையாகக் கூறும் விகற்பங்களை. "தன்னூன் மருங்கினும் பிறநூன் மருங்கினுந் - துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம் - பன்னிய வகல மென்மனார் புலவர்" *"தெள்ளிது" என்றதனான் நின்னை மார்பை வேறாகச் செய்தென்றார்.

இதனாற் றலைவிக்கு இழிவுந் தலைவற்கு அசைவும் பிறந்தது.

† "மரபுநிலை திரியா மாட்சிய" என்னுஞ் சூத்திரத்திற் றலைவி கடவுளரைப் பரத்தையராகக் கூறுமென்பது கூறினும்.

இஃது ஐஞ்சீரடுக்கி வெண்பாவாய்வந்து இடைநிலைப்பாட்டுப்பெற்று வருதலிற் கலிவெண்பாவுறுப்பு ஒத்துப் பாவேறுபட்டு வந்த கொச்சகம். (உ அ)

---

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், வேற்றுமைமயங்கியல், ௯-ம் சூத்.
† ,, பொருளதிகாரம், அகத்திணையியல், ௪௯-ம் ,,

௬௪. என்னோற் றனைகொல்லோ
நீரு ணிழற்போ னுடங்கிய மென்சாய
லீங்குச் சுருங்கி
யியலுவாய் நின்னொ டுசாவுவெ னின்றீத்தை;

அன்னையோ, காண்டகையில்லாக் குறணுழிப்போதினொ
ணுண்டலைக் கீன்ற பறழ்மகனே நீயெம்மை
வேண்டுவ லென்று விலக்கினை நின்போல்வார்
றீண்டப் பெறுபவோ மற்று;

மாண்டை, எறித்த படைபோன் முடங்கி மடங்கி
நெறித்துவிட் டன்ன நிறையேரா லென்னைப்
பொறுக்கல்லா நோய்செய்தாய் போறி நிறுக்கல்லே
னீநல்கி னுண்டென் னுயிர்;

குறிப்புக்காண்; வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள கடும்பகல் வந்தெம்மை
யில்லத்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்
பெண்டி ருளர்மன்னோ கூறு;

நல்லாய்கேள், உக்கத்து மேலு நடுவுயர்ந்து வாள்வாய
கொக்குரித் தன்ன கொடுமடாய் நின்னையான்
புக்ககலம் புல்லினெஞ் சூன்றும் புறம்புல்லி
னக்குளுத்துப் புல்லலு மாற்றே னருளீமோ
பக்கத்துப் புல்லல் சிறிது;

போசீத்தை, மக்கண் முரியேநீ மாறினித் தொக்க
மரக்கோட்டஞ் சேர்ந்தெழுந்த பூங்கொடி போல
நிரப்பமில் யாக்கை தழீஇய ரொம்மைப்
புரப்பேமென் பாரும் பலராற் பரத்தையென்
பக்கத்துப் புல்லீயா யென்னுமாற் றெக்க
வுழுந்தினுந் துவ்வாக் குறுவட்டா நின்னி
னிழிந்ததோ கூனின் பிறப்புக் கழிந்தாங்கே

யாம்வீழ்து மென்றுதன் பின்செலவு முற்றியாக்
கூனிகுழை யுங்குழைவு காண் ;

யாமை, யெடுத்து நிறுத்தற்றாற் றோளிரண்டும் வீசி
யாம்வேண்டே மென்று விலக்கவு மெம்வீழுங்
காமர் நடக்கு நடைகாண் கவர்கணைச்
சாமனார் தம்முன் செலவு காண்க ;

ஓஒகாண், நம்மு ணகுதற் றொடீஇயர் நம்மு
ளுமுசாஅங் கோனடிதொட் டேன் ;

ஆங்காக,

சாயலின் மார்ப வடங்கினேன் ஏஎ
பேயும் பேயுந் துள்ள லுறுமெனக்
கோயிலுட் கண்டார் நகாமை வேண்டுவல்
கண்டாய் தகடுருவ வேறாகக் காவின்கீழ்ப்
போத ரகடாரப் புல்லி முயங்குவேந்
துகடீர்பு காட்சி யவையத்தா ரோலை
முகடுகாப் பியாத்துவிட் டாங்கு.

இஃது * "அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங் - கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்" என்பதனால் அடியோராகிய கூனுங் குறளும் உறழ்ந்துகூடிக் கூறியது.

(இ - ள்.) என்னோற் * * * னின்றீத்தை—எ-து, கரையில் நின்றதொன்றின் நிழல் நீருக்குள்ளே நுடங்கினாற்போல நுடங்கிய மெல்லிய மென்மையோடே இவ்விடத்து உடலிலே கூன் புறப்பட்டு நடக்கின்றவளே! நின்னோடு ஒருகாரியத்தை உசாவுவேன் ; அங்ஙனம் உசாவுதற்கு நீ என்ன நல்வினையைச் செய்தாய்தான்? இங்ஙனே நிற்பாயாகவென்றான் குறளன் ; எ - று.

இயலுவாய் வினைத்திரிசொல்.

அன்னையோ * * * மற்று—எ-து, அதுகேட்ட கூனி அம்மையோவென இகழ்ந்து தன் நெஞ்சிற் கூறிக், கண்ணாற் பா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உரு ம், சூத்.

ர்க்குந் தன்மையில்லாத குறளாய்ப் பிறத்தற்கு ஏதுவாகிய நாழிகையின் முகூர்த்தத்தே ஆண்டலைப்புள்ளுக்குத் தன்பெடையீன்ற பறழாய மகனே! நீ எம்மை விரும்புவேனென்று போகாமற் தடுத்தாய்; நின்னைப்போற் குறளாயிருப்பார் பின்னை என்னைத் தீண்டப்பெறுவார்களோவென்றாள்; எ - று.

*"பறழெனப் படினு முறழா ணில்லை" என்பதனாற் பறழ் பறவைக்காகாதாயினும் இவனை 'யாமையெடுத்து நிறுத்தற்றால்' என ஊர்வனவாகக் கூறலிற் பறழென்றார். தலை ஆண்டலையாயிருத்தல் பற்றி ஆண்டலைக்கு ஈன்ற மகனென்றாள்.

மாண்டை * * * னுயிர்—எ-து, அதுகேட்ட குறளன் மாட்சிமைப்பட்ட கலப்பையிற் றைக்கும் படைவாள்போலே ஓரிடங் கூனாய்ப் புறப்பட்டு ஓரிடம் முன்னே வளைந்து வலிய முறித்து விட்டாற்போன்ற நிறைந்த அழகாலே என்னைப் பொறுக்கலாத காமநோயைச் செய்தாய்; யான் ஆற்றிநிறுக்கமாட்டேன்; நீ அருளுவாயாயின் என்னுயிருண்டு; இனி நின் நினைவைக் கூறென்றான்; எ - று.

பொருளியும் பாடம்.

குறிப்புக்காண் * * * கூறு—எ-து, அதுகேட்ட கூனி இவன் மனக்குறிப்பைப் பாராயென நெஞ்சொடுகூறி, நெத்தப்பலகையை எடுத்து நிறுத்தினாற்போன்ற, மகளிரைக் கூடும் முறையைக் கல்லாத, குறளனே! மக்கள் இயங்காத உச்சியம்பொழுதிலே வந்து எம்மைக் கையைப்பிடித்து நின்னில்லத்தே வாவென்று சொல்லுதற்கு ஏடா! மிகவும் நின்னுடைய பெண்டிராயிருப்பார் சிலருளரோ? சொல்லாயென்றாள்; எ - று.

நல்லாய்கேள் * * * சிறிது—எ-து, அதுகேட்ட குறளன் நல்லாளே! தலைக்குமேலும் நடு வில்லையாய் வாள்போன்ற வாயையுடைய கொக்கை உரித்தாற்போன்ற வளைந்த மடிப்பையுடையாய்! யான் கூறுகின்றதனைக் கேள்; நின்னை யான் மார்பிடத்தே சென்று புல்லுவேனாயின் என்னுடைய நெஞ்சிலே அக்கூன் ஊன்றும், முதுகிலே புல்லுவேனாயின் முதுகிற் கூன் அக்குளுக்காட்டுதலை உடைத்தாதலாற் கூடுதலேயன்றி முயங்குதலையுஞ் செய்யமாட்டேன், இனிப் பக்கத்தே சிறிது முயங்கும்படியாக வருவாயாகவென்றான்; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம் மரபியல், எ-ம் சூத்.

நடுவெயர்ந்தென்றது "நோன்புயர்ந்து" என்றாற்போல நின்றது.

போசீத்தை—எ-து, அதுகேட்ட கூனி சீ! கெட்டதன்மையையுடையவனே! நீ எம்மிடத்தினின்றும் போவென்றாள்; எ-று.

மக்கண் * * * பிறப்பு—எ-து, அதுகேட்ட தலைவன் உகுதலின், மக்களிற் பாதியானவனே! இனி நீ இந்நிலையைக் கைவிடென்று கூறிப், பின்னர்த் திரண்ட மரத்தின் வளைவான இடத்தை விட்டு நீங்காமற் பற்றிவளர்ந்த பூங்கொடிபோலே எம்முடைய கூனல் வடிவொத்தலில்லாத யாக்கையை முயங்கி எம்மைப் பாதுகாப்பேமென்று கூறுவாரும் பலராயிருக்கும்; இப்பரத்தைமையையுடையவன் பக்கத்தைப் புல்லுதலைத் தாராயென்று கூறாநிற்குமால்; இங்ஙனங் கூற நமக்கு உண்டாகிய குறை யாதுதானெனன அவன் கேட்பத் தன் நெஞ்சொடுகூறிக், குறிய வட்டின்றன்மையையுடையாய்! பலங் கூடின உழுத்தம்பணியாரத்தினுங்காட்டிற் றுய்க்கப்பட்டிருக்கின்ற கூன்சாதியினுடைய பிறப்பு நின்னாற் றாழ்ந்ததோவென்றாள்; எ-று.

கழிந்தாங்கே * * * காண்—எ-து, அதுகேட்ட குறளன் யாம் நின்னை விரும்புவேமென்று கூறித் தன்பின்னே செல்லுதல் செய்தேயும் அதற்கும் மனம்பொருந்தாத கூனி நம் அருகுநின்றும் அவ்விடத்தே போய் நுடங்கும் நுடக்கத்தை நெஞ்சே பாராயென அவள் கேட்பக் கூறினான்; எ-று.

உற்றீயா பெயரெச்சமறைத்திரிசொல்.

யாமையெடுத்து * * * காண்க—எ-து, அதுகேட்ட கூனி ஊருகின்ற யாமையை எடுத்து நேரே நிறுத்தினாற்போல நெடியனாய்த் தோளிரண்டையும் விலாவுக்குள்ளே வீசி யாம் நின்னை விரும்பேமென்று விலக்காசிற்கவும் எம்மை விரும்பி வருகின்ற காமனார் நடக்கும் நடையை நெஞ்சே காணுயென்றாள்; அதுகேட்ட குறளன் ஒருவனை ஒருவர் முயங்குதற்குக் காரணமான கணையினையுடைய சாமனார் தமையனாகிய காமனார் நடையை நீ காணுயென நடந்து காட்டினான்; எ-று.

ஓஒகாண் * * * டேன்—எ-து, அதுகேட்ட கூனி ஓஒ! இவன் நடையைப் பாராயென நெஞ்சோடு கூறினாள்; அதுகேட்ட குறளன் நம்முள்ளே நாங் கூடி மகிழ்தற்கு யான் நின் மெய்யைத் தீண்டுதற்குக் குறியிடம் இன்னது என்ன இடமாமென்று நம்மு

ள்ளை நாம் உசாவக்கடவேம் ; இனி நின்னை இகழ்ந்து கூறுமைக்கு அரசன் அடியைத் தொட்டுச் சூளுற்றேனென்றான் ; எ - று.

ஒஓ இகழ்ச்சிக்குறிப்பு.

ஆங்காக * * * டாங்கு—எ-து, அதுகேட்ட கூனி அப்படியேயாகுக ; யானும் மென்மையால் இனிய மார்பனே ! இகழ்ந்து கூறுதலைத் தவிர்ந்தேன்; இனி இக்கோயிலுட் கண்டவர்கள் நம்மை எவ்வென இகழ்ந்து பேயும் பேயுந் தம்மிலே துள்ளுதலை இக்கூனுங் குறளும் உறுநிற்குமெனக் கூறி நகாதிருத்தலை விரும்புவேன்; ஆதலால் அமையாத பொற்தகடுபோலும் உருவத்தினையுடையாய் ! கோயிலுக்கு நீங்கலாகக் காவின்கீழே போதருவாயாக ; துகள் தீர்ந்து நின்ற அறிவினையுடைய அவையிலுள்ளார் திரட்சிபொருந்தின ஓலையின் தலையைக் கட்டி அதன் தலையிலே அரக்கிலச்சினை இட்டுவிட்டாற்போல நிரம்பாத உடலினுளவாய முயக்கம் பெற்று நிறையும்படி இறுகப் புல்லிக் கூடக்கடவேமென்றாள் ; எ-று.

ஆங்கு, அசை. போதரு போதரென விகாரமாயிற்று. *"தோடே மடலே" என்னுஞ் சூத்திரத்தால் ஓலையென்றார்.

இதனால் இருவர்க்கும் முன்னர் நகைபிறந்தது. பின்னர்ப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இதனுட் 'கோனடிதொட்டேன்' எனவுங் 'கோயிலுட்கண்டார் நகாமைவேண்டுவல்' எனவுங் கூறலின் அடியோரென்பது பெறுதும். 'கொக்குரித்தன்ன' எனத் தோல் திரைந்தமை கூறலின் இளமைதீர்திறமாகிய பெருந்திணையாயிற்று. இது †"வேட்கைமறுத்து" என்னும் பொருளியற்சூத்திரத்தால் வேட்கைமறுத்துக்கூறிய பெருந்திணை. இஃது ஊடற்பகுதியாகலின் மருதத்துக் கோத்தார்.

இஃது 'என்னேற்றனைகொல்லோ' எனவும் 'ஈங்குச்சுருங்கி' எனவும் முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடியும் வந்து இரண்டடியான் இற்றதோர் கொச்சகமும் ஐஞ்சீரடுக்கிவந்த வெண்பா ஐந்தும் ஐஞ்சீரடியான் வந்த கொச்சகம் ஒன்றும் இரண்டடிக்கொச்சகம் ஒன்றும் ஆசிரியத்தளைவிரவின கொச்சகவெண்பாவும் பெற்று வெண்கலிப்பாவின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலிப்பா. (உ௫)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், அ௬-ம் சூத்.
† ,, ,, பொருளியல், ௪௭-ம் ,,

கூ௫. நில்லாங்கு நில்லாங் கிவர்தர லெல்லாநீ
நாறிருங் கூந்தலா ரிற்செல்வா யிவ்வழி
யாறு மயங்கினை போறிநீ வந்தாங்கே
மாறினி நின்னுங்கே நின்சே வடிசிவப்பச்
செறிந்தொளிர் வெண்பல்லா யாம்வே றியைந்த
குறும்பூழ்ப்போர் கண்டே மனைத்தல்ல தியாது மறிந்த
தில்லைநீ வேறோர்ப் பது; [தோ

குறும்பூழ்ப்போர் கண்டமை கேட்டன னீயென்றும்
புதுவன வீகை வளம்பாடிக் காலிற்
பிரியாக் கவிகைப் புலையன்றன் யாழி
னிகுத்த செவிசாய்த் தினியிளிப் பட்டன
வீகைப்போர் கண்டாயும் போறிமெய் யெண்ணிற்
றபுத்த புலர்வில புண்;

ஊரவர் கவ்வை யுளைந்தீயா யல்கனின்
றாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு
போர்வாய்ப்பக் காணினும் போகாது கொண்டோடும்
பார்வைப்போர் கண்டாயும் போறிநின் றோண்மேலா
மீரமாய் விட்டன புண்;

கொடிற்றுப்புண் செய்யாது மெய்ம்முழுதுங் கையிற்
றுடைத்துநீ வேண்டினும் வெல்லாது கொண்டோடு
மொட்டியபோர் கண்டாயும் போறி முகந்தானே
கொட்டிக் கொடுக்குங் குறிப்பு;

ஆயி, ழையிழா யன்னவை யானுங் கறியாமை
போற்றிய நின்மெய் தொடுகு;

அன்னையோ, மெய்யைப்பொய் யென்று மயங்கிய கை
றறிகல்லாய் போறிகா ணீ; [யொன்

நல்லாய், பொய்யெல்லா மேற்றித் தவறு தலைப்பெய்து
கையொடு கண்டாய் பிழைத்தே னருளினி;

அருளுகம் யாம்யாரோ மெல்லா தெருள
வளித்துநீ பண்ணிய பூழெல்லா மின்னும்
விளித்துநின் பாணனோ டாடி யளித்தி
விடலைநீ நீத்தலி னோய்பெரி தேய்க்கு
நடலைப்பட் டெல்லாநின் பூழ்.

இது "கொடியோர் கொடுமை சுடுமென வொடியாது - நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப் - பகுதியி னீங்கிய தகுதிக்கட்" தலைவி பரத்தையைப் பூழாக்கிக் கூறியது.

(இ - ள்.) நில்லாங்கு * * * சிவப்ப—எ-து, எடா! நீ நாறுகின்ற கரிய கூந்தலையுடைய பரத்தையர் இல்லின்கட் செல்கின்றாயாய் இவ்விடத்துப் போகின்ற வழி தப்பி வந்தாய்போலே இருந்தாய்; நீ இவ்விடத்துப் பரந்து பாராதேகொள்; அவ்விடத்தேகில்; இனி நின்னுடைய பரத்தையர் மனைக்கண்ணே நின் சிவந்த அடி மிகச் சிவக்கும்படி வந்தாற்போலப் போவென்றாள்; எ - று.

செறிந்தொளிர் * * * பது—எ-து, அதுகேட்ட தலைவன் செறிந்து விளங்குகின்ற வெள்ளிய பல்லினையுடையாய்! யாம் புதிதாக வந்து பொருந்தின குறும்பூழ்ப்போர் கண்டேம் அவ்வளவல்லது நீ எனக்குத் தீங்காகக் கருதும் ஒழுக்கஞ் சிறிதும் யான் அறிந்ததோ இல்லையென்றான்; எ - று.

ஓகாரம் ஐயம்.

குறும்பூழ்ப்போர் * * * புண்—எ-து, அதுகேட்ட தலைவி நீ எந்நாளுங் குறும்பூழினது போரைக் கண்டபடியை யான் கேட்டேன், அது கூறக் கேள்; ஒருநாட் கொடுத்தாற்போலன்றிப் புதியவாயிருக்கின்ற கொடையினது பெருமையைப் பாடி நின்னிடத்தினின்று நீங்காத யாழ் வாசித்தலாற் கவிழ்ந்த கையினையுடைய பாணன் தன்னுடைய யாழோசையாலே முன்பு தாழ்க்கப்பட்ட செவிகளை அவன் கூறுகின்றவற்றைக் கேட்டற்கு அவர்சாய்க்கையினாலே இப்பொழுது அக்கூற்றாலே புதிதாக அகப்பட்டனவாகிய பூழினுடைய புதிய போர்களைக் கண்டாயும்போலே இருந்தாய்; அதனை உண்மையாக எண்ணிற் புலர்ச்சியில்லவாகிய புண்கள் உன்னைக்கொன்ற; இதனை ஆற்றியவாறென்னென்றாள்; எ-று.

இனி நின் மெய்யிற் புலர்வில்லாப் புண்கள் எண்ணிப்பார்க்கில் அவ்வெண்ணைக் கெடுத்தனவென்றுமாம். இனி என்றும் புதியனவாகிய பூழினது வளப்பத்தை யாழோசைபோலே பாடி அப்பூழ் பொருத்துமிடத்து விட்டுநீங்காத புலையனென்று புலையனுக்கு அடைகூறினாள். யாழோசை கேட்டாரை அகப்படுக்குமாறுபோல இவன் பாட்டும் அகப்படுத்தலின் யாழிற்பாடியென்றார். பூழைத் தடவிக் கவிழ்ந்த கையினையுடைய புலையன் பூழ், பொருத்துமவன் புலையன்றன்னுடைய இப்பொழுதிப்பொழுது அகப்பட்டனவாகிய பூழ், தத்தஞ் செவிகளைச் சாய்த்து இவன் கூறும் மந்திர முதலியன கேட்கையினாலே அவன் தன்வசமாகத் தாழ்க்கப்பட்ட பூழ், அப்பூழின்போரைக் கண்டாயும்போறியெனப் பூழிற்கும் ஏற்பதோர் பொருளுந் தோன்ற நின்றது. இனி யாழின் இருத்த செவிக்கு யாழைப்போலும் மந்திரத்தாற் றாழ்ந்த செவியென்பாருமுளர்.

ஊரவர் * * * புண்—எ-து, ஊரிலுள்ளார் கூறும் அலருக்கு வருந்தாயாய்த் தங்குதலையுடைய நின் மார்பிற் றாரிடத்தே கையாலே அணைத்துக்கொண்டு தழுவி அகப்படுத்துதலாலே மாட்சிமைப்பட்டு வேறுஞ் சிலரை அகப்படுத்திக்கொண்டு வருதற்குப் பார்வையாகப் போகவிட்ட மகளிராலே உண்டான ஊடற்போரை வாய்ப்பக் கண்டாராகிலும் அதற்கு ஊடிப்போகாதே உன்னைக் கைக்கொண்டு நுகருங் கலவிப்போரைக் கண்டாயும்போலே இருந்தாய்; நின்றோளிற் புண்களெல்லாம் புலராமல் ஈரமாயே கிடந்தனவென்றாள்; எ - று.

இனி, ஊரிலுள்ளார் எக்காலமும் பூழ் பொருத்தித் திரிவனென்று கூறும் ஆரவாரத்திற்கு வருந்தாயாய் மார்பிலே அணைத்துக்கொண்டு முயங்கித் தசை கண்ணாயும்படி கையாற் பிடித்தலாலே மாட்சிமைப்பட்டுத் தனக்கு மாறுகிய பூழின் போரை வாய்ப்பக் காணினும் அதற்கு அஞ்சிப் போகாதே போர்செய்தலைத் தன்னிடத்தேகொண்டு பின்னும் போர்செய்யும் பார்வையாகிய பூழின் போரைக் கண்டாயும்போறியென வேறுமோர் பொருள் தோன்றி நின்றவாறு காண்க.

கொடிற்றுப்புண் * * * குறிப்பு—எ-து, இவட்கு வருத்தமாகவுங் கூடுமென்று கருதிப் புணர்ச்சிக்காலத்துக் கடவுளிடத்துச் செய்யும் வடுக்களையுஞ் செய்யாமல் மெய்ம்முழுதையுங் கையாலே எப்பொழுதுந் தடவி நீ விரும்பினும் நீ தன்னை வெல்லாமற் கொண்டு புணரும் ஒட்டுதலையுடையாளது கலவிப்போரைக் கண்டாயும்

போலே இருந்தாய்; நின் மனக்குறிப்பை நின் முகந்தானே கோட்டிக் கொடாநிற்குமென்றாள்; எ - று.

தான் விரும்பிய நீர்விளையாட்டுமுதலியவற்றிலே உன்னை ஒட்டுதலையுடையாள் இனி மருந்திடுதற்குச் செவியின் மயிரைப் பறிக்குங்காற் புண்ணாகப் பறியாதே மெத்தெனப் பறித்து மெய்யை முழுக்கப் பலகாற் றுடைத்து நீ இவ்வாறு கொண்டாடினுந் தான் எதிர்ந்த பூழினை வெல்லாமல் அப்பூழினைக்கொண்டு போர்செய்யும் இயக்கனுரிய பூழின் போரைக் கண்டாயும்போறியென வேறுமொருபொருள் தோன்றி நின்றவாறு காண்க.

ஆயி * * * தொடுகு—எ-து, அதுகேட்ட தலைவன் அப்படியாயின் ஆயிழாய்! நீ கூறுகின்ற அத்தன்மையான குறிகளை யான் அவ்விடங்களிற் செய்தறியாமையை நின் னெஞ்சிடத்தே போற்றுதற்கு நின் மெய்யைத்தொட்டுச் சூளுறுவேனென்றான்; எ-று.

தொடுகுமென்றும் பாடம்.

அன்னையோ—எ-து, அதுகேட்ட தலைவி அம்மையோவென இரழ்ந்துகூறினாள்; எ - று.

மெய்யைப் * * * ணீ—எ-து, அதுகேட்ட தலைமகன் கூறுகின்ற மெய்யைப் பொய்யென்று மயங்கிய நீ உலகவொழுக்கமொன்றும் அறியாய்போலே இருந்தாய்காணென்றான்; எ - று.

நல்லாய் * * * னருளினி—எ-து, பின்னும் நல்லாளே! யான் செய்த தவறுகளை என் தலையிலேயிட்டு என் பொய்களையெல்லாம் எனக்கு ஏறத் தெளிவித்து என் களவைக் கையோடே பிடித்துக்கொண்டாய்; யானும் நின்னைத் தப்பினேன்; இனி எனக்கு அருளென்றான்; எ - று.

அருளுகம் * * * பூழ்—எ-து, அதுகேட்டு அவள் ஏடா! யாம் நீ கூறியவாறே அருளுகம்; அங்ஙனம் அருளுதற்கு யாம் யாரந்தன்மையையுடையேம்? விடலாய்! நின் பூழெல்லாம் நின்முன்னர் அளித்துப் பின்னர்க் கைவிடுதலின் அந்நடிப்பிலே அகப்பட்டு நோயைப் பெரிதாகப் பொருந்தும்; அவை வருந்தாதபடி நீ உனக்கு ஆம்படி பண்ணின பூழெல்லாவற்றையும் இன்னும் நின் பாணனாலே அழைத்துவிட்டு அவற்றின் மனந்தெளியும்படி அளித்து ஆடுவாயாகவென்றாள்; எ - று.

எனவே, பரத்தையர்க்கும் பூழிற்கும் ஏற்ப நின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்வாகிய உவகைபிறந்தது.

*"கொடுமை யொழுக்கங் கோடல் வேண்டி - யடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக் - காத லெங்கையர் காணி னன்றென - மாதர் சான்ற வகையின் கண்ணும்" என்றதனான் அருளினியென அடிமேல் வீழ்ந்தவாறும், அருளுகம் யாம் யாரெனக் காதலமைந் தவாறும், அளித்தியெனப் பணிவை நின் பெண்டிர் கொள்வரென் றவாறுங் காண்க.

இது பல சொச்சகங்களும் வருதலிற் கலிவெண்பா உறுப் பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (௯௦)

௯௧. ஏந்தெழின் மார்ப வெதிரல்ல நின்வாய்ச்சொற்
பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை
சாந்தழி வேரை சுவற்றூழ்ந்த கண்ணியை யாங்குச்
சென்றீங்கு வந்தீத்தந் தாய்; கேளினி ஏந்தி,

எதிரிதழ் நீலம் பிணைந்தன்ன கண்ணாய்
குதிரை வழங்கிவரு வல்; அறிந்தேன் குதிரைதான்

பால்பிரியா வைங்கூந்தற் பன்மயிர்க் கொய்சுவல்
மேல்விரித் தியாத்த சிகழிகைச் செவ்வுளை
நீல மணிக்கடிகை வல்லிகை யாப்பின்கீழ்
ஞாலியன் மென்காதிற் புல்லிகைச் சாமரை
மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற
வுத்தி யொருகாழ்நூ லுத்திரியத் திண்பிடி
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகைத்
தார்மணி பூண்ட தமனிய மேகலை
நூபுரப் புட்டி லடியோ டமைத்தியாத்த
வார்பொலங் கிண்கிணி யார்ப்பப் பயிற்றிநீ
காதலித் தூர்ந்தநின் காமக் குதிரையை
யாய்சுதை மாடத் தணிநிலா முற்றத்து

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௬-ம் சூத்.

ளாதிக் கொளீஇய வசையினை யாகுவை
வாதுவன் வாழிய நீ;

சேகா, கதிர்விரி வைகலிற் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போலநின் மெய்க்கட்
குதிரையோ வீறி யது;

கூருகிர் மாண்ட குளம்பி னதுவன்றே
கோரமே வாழிகுதி ரை;

வெதிருழக்கு நாழியாற் சேதிகைக் குத்திக்
குதிரை யுடலணி போலநின் மெய்க்கட்
குதிரையோ கவ்வி யது;

சீத்தை, பயமின்றி யீங்குக் கடித்தது நன்றே
வியமமே வாழிகுதி ரை;

மிகநன், றினியறிந்தே னின்றுநீ யூர்ந்த குதிரை
பெருமணம் பண்ணி யறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோ வன்று பெருமநின்
னேதில் பெரும்பாணன் றாதாட வாங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை யாதி
யுருவழிக்கு மக்குதிரை யூரனீ யூரிற்
பரத்தை பரியாக வாதுவனுய் மற்றச்சாத்
திரிகுதிரை யேறிய செல்.

இது "கொடியோர் கொடுமை சுடுமென * * * பகுகியி னீங்கிய தகுதிக்கட்" தலைவி பரத்தையனைக்குதிரையாக்கிக் கூறியது.

(இ - ள்.) எந்தெழின் * * * தாய்—எ-து, உயர்ந்த அழகினையுடைய மார்பனே! நின் வாயிற்சொல் நினக்கு மாறல்ல, நின் தன்மைகண்டு வினவுகின்றேன், நீ மடிவிரிந்து கரையற்று முசிந்த புடைவையுடைய அமையாத வலியினையுடையை; சந்தனம் அழிதற்குக் காரணமான வேர்வையையுடையை; தோட்கட்டிலே கிடந்து நிறங்குறைந்த கண்ணியையுடையை; ஆகையினுலே எவ்விடத்தே சென்று இவ்விடத்தே வந்தாயென்முள்; எ - று.

கேளினி * * * வருவல்—எ-து, அதுகேட்ட தலைவன் யான் கூறுகின்றதனை இப்பொழுது கேள்; உயர்ந்து தன்னில் இணையொத்த நீலப்பூவைத் தொடுத்தாலொத்த கணணினையுடையாய்! குதிரையேறி வருவேனென்றான்; எ - று.

அறிந்தேன் * * * வாழியநீ—எ-து, அதுகேட்ட தலைவி நீ ஏறின குதிரைதான் யானறிந்தேன்; அதனைக்கேள், ஐம்பாற் பகுதி நீங்காத ஐந்துவகையினையுடைய கூந்தலாகிய பலமயிர்களைப் பலகாலுங் கத்திரிகையிடுங் கேதாரியின் மயிரினையும், மயிர்முடியின்மேலே விரித்து நிலைபெறுத்தின * குஞ்சியாகிய சிவந்த தலையாட்டத்தினையும், நீலமணியைத் தோலிலேவைத்துத் தைத்துச்செய்த கட்டுவடமாகிய கழுத்திற் கட்டுதலையுடைய வல்லிகையினையும், மெல்லிய காதிற் கிடக்கும் புல்லிகையென்னும் பூணுகிய கீழே நாலும் இயல்பையுடைய கன்னசாமரையினையுந், தெய்வவுத்தியென்னும் பூணினருகே துவக்கி ஒருவடமாய் நாலுஞ் சுட்டியாகிய குதிரை கண்ணுற்கண்டு அஞ்சும்படியாக விட்டுவைத்த அழகுபெற்ற சம்மட்டியினையும், நூலாற்செய்யப்பட்ட உத்திரியமாகிய திண்ணிய குசையினையும், இனமொத்த மணிகளாற் செய்த தன்னிலொத்த முக்கண்டன் கட்டுவடமாகிய பலபல நிறத்தையுடைய கண்டிகையினையும், பொன்னாற்செய்த மேகலையாகிய கழுத்திலேகட்டின சதங்கைத்தண்டையினையும், அடியிடத்தே சமைத்துக்கட்டின ஒழுகின பொன்னாற்செய்த சதங்கையினையும், அடியிடத்தே சமைத்துக்கட்டின சிலம்பாகிய கெச்சையையும் ஆரவாரிப்பச்செலுத்தி நீ காதலித்து ஏறின விருப்பத்தையுடைய குதிரையைச் செண்டுவெளியிலன்றி அழகினையுடைய சாந்து வாரின மாடத்தில் அழகினையுடைய நிலாமுற்றத்தே ஆதியென்னும் நெடுஞ்செலவை அதற்குக் கொளுத்த இளைத்தாயாகையினாலே நீ மேல் நல்ல அரசவாரியனாகுவை; நீ வாழ்வாயாகவென்றாள்; எ - று.

ஆதி மாதி யென்பனவற்றுள் ஆதி நெடுஞ்செலவு. நீகாதலித் தூர்ந்த, மயிர்முதலியவற்றையுடைய, காமக்குதிரையை ஆர்ப்ப இயற்றி ஆதிக்கொளீஇய அசையினையெனஃக.

சுவல் ஆகுபெயர். ஒடு உருபுமயக்கம்.

சிகழிகைமேல் விரித்தியாத்த செவ்வுளையெனமாறுக. நீலமணிக்கடிகை யாப்பின்வல்லிகையென்க. மென்காதிற் புல்லிகைக்

* பிரதிகளிற். "துஞ்சாகிய" என்றிருக்கின்றது.

கீழ் ஞாலியல் சாமனா யெனவும், உத்தி ஒருகாழ் கண்ணுறையாசுக் கவின்பெற்ற மத்திகை எனவுங் கூட்டுசு. தமனிய*மேகலைபூண்ட மணித்தார் எனமாறுக.

கண்டிகை தோலிலே மூன்று நிரையாகப் பலநிறத்து மணியை வைத்துத் தைத்துக் கழுத்திற் கட்டுவது.

அடியோடமைத்தியாத்த என்பதனை வார்பொலங்கிண்கிணி நூபுரப்புட்டில் இரண்டற்குங் கொள்க.

சதங்கை பரத்தைக்குங் குதிரைக்கும் ஒக்கும்.

நீ காதலித்தூர்ந்த நின் காமக்குதிரை என்பதற்கு நீ காதலித்துப் புணர்ந்தநின்னுடைய காமத்தையுடைய பரத்தையெனினுமாம்.

சேகா * * * வீறியது—எ-து, ஞாயிற்றின் கதிர் விரிகின்ற விடியற்காலத்தே கையிற்பிடித்த அலகாலே துராலை வாருதல் சொண்ட மதுரையிற் பெரிய முற்றம்போல நின் மெய்க்கட் கீறியது குதிரையோ; எ - று.

சேவகா சேகா எனத் திரிந்து நின்றது. விகாரமெனினுமாம்.

வாரு வாரூஉவென அலகு பெற்றது. வீறுதல் கீறுதல்.

கூருகிர் * * * குதிரை—எ-து, அக்குதிரை கூரிய உகிராலே மாட்சிமைப்பட்ட குரத்தினையுடையதாதலின் மிகவுங் கொடிதே; இதனை ஏறுகின்ற நீ தப்பின்றி வாழ்வாயாக; எ - று.

வெதிருழக்கு * * * கவ்வியது—எ-து, மூங்கிலுழக்காலும் நாழியாலுஞ் சேதிகையென்னும் பெயரையுடைய தொழில்களாக வன்னங்களைத் தோய்த்துக் குத்தின குதிரையுடலிற் பக்கரைபோல நின் மெய்க்கட் கவ்வியது குதிரையோ ? கூறுயென்றாள்; எ - று.

சீத்தை * * * குதிரை—எ-து, சீ! கெட்டது! தனக்கொரு பயனின்றியிருக்க வடுப்படுத்தற்கு உரித்தல்லாத இடத்தே வடுப்படுத்திற்றாதலால் இக்குதிரை பெரிதும் வியமமே; இக்குதிரையை ஏறின நீ தீங்கின்றி வாழ்வாயாக ; எ - று.

வியவென்னும் உரிச்சொல் முதனிலையாகப்பிறந்து வியமமெனப் பெயர்படநின்றது. அம் அசை. உரிச்சொல் முதனிலையாக எல்லா நிலைகளும் பிறக்குமாறுணர்க. இனி விஷமமென்னும் வடமொழியென்பாரும் உளர். அது ஷ டசரம் பெற்றே வருமென உணர்க.

*"வேட்கை மறுத்துக் கிளந்தாங் குரைத்தன் - மரீஇய மருங்கி னுரித்தென மொழிப" என்பதனுள் ஒன்றெனமுடித்தலான் மரீஇய வாறு ஏனையவற்றிற்குங் கொள்க. என்றதனான் இழிந்தோர் கூற்றை உயர்ந்தோர் கூறுவன அமைத்தாம். அவை வீறுதலுங் கவ்வுதலும்.

மிகநன் * * * செல் — எ-து, இன்று நீ ஏறிய குதிரை மிக வும் நன்றாயிருந்தது; அதனை இப்பொழுதறிந்தேன்; அதுதான் நூல் கூறிய வழியான் பெரிய மணஞ்செய்துகொண்ட மேகலையையுடைய காமக்கிழத்தியாகிய குதிரையோ அன்று; பெருமா! ஆண்டொழிற்கு ஏதிலனாகிய பெரிய பாணன் தூதாய்ச்செல்ல, அவ்விடத்துப் பரத் தையருடனே உண்டான மாறுபாட்டாலே வந்த காற்றுப்போற் கடிய குதிரை; அதுதான் நினது பழைய உருவை முற்கூறியவாறே கெடுக்குமாதலால் அக்குதிரையை இனி ஏறாதேகொள்; அன்றி அப் பரத்தை குதிரையாக நீ அரசவாரியனாய் எந்நாளும் மேல் ஈண்டு வாராக்கூற்றிலே திரி; இனி ஈண்டுத் தாழ்க்ககில்லாதே அக்குதிரை யை ஏறுதற்குப் போவெனத் தலைவி புலந்துகூறினாள்; எ - று.

இதனுட் 'பாணன்றூதாடவந்த' என்றதனான் அவன் கூட் டிய புதியபரத்தையரென்பதூஉம் 'அறத்தினிற்கொண்ட குதிரை யோவன்று' என்பதனாற் காமக்கிழத்தியன்றென்பதூஉம் மனை பகு தியினீங்கியதூஉம் மேனியில் வடுக்கள் நெஞ்சினைச் சுடுகின்றதூஉம் பரத்தையரைக் குதிரையாகக் கூறித் தான் அதற்குத் தக்குநின்ற தூஉங் கூறியவாறுணர்க. † "மரபுநிலை திரியா மாட்சிய" என்பத னாற் தலைவி அங்ஙனங் கூறும் வழு அமைத்தாம். இதனுள் மடன் அழிந்த வழுவமைதி ‡ "தன்வயிற் கரத்தலு மவன்வயின் வேட்ட லு - மன்னவிடங்க ளல்வழி யெல்லா - மடனொடு நிற்றல் கடனென மொழிப" என்பதனுள் அமைத்தாம்.

இதனான் இருவர்க்கும் புணர்ச்சியுவகைபிறந்தது.

இது சொற்சீரடி பெற்று ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பா. (௩௧)

கூஎ. அன்னை கடுஞ்சொ லறியாதாய் போலநீ
யென்னைப் புலப்ப தொறுக்குவென் மன்யான்
சிறுகாலை யிற்கடை வந்து குறிசெய்த

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கஎ-ம் சூத.
† ,, ,, அகத்திணையியல், சஙி-ம் ,,
‡ ,, ,, பொருளியல், கக-ம் ,,

வவ்வழி யென்றும்யான் காணேன் றிரிதர
வெவ்வழிப் பட்டாய் சமனாக விவ்வெள்ளல்;

முத்தேர் முறுவலாய் நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது காண்பான்யான் றங்கினேன்;

ஒக்கும், அவ்வியானை

வனப்புடைத் தாகலுங்கேட் டேன்; அவ்வியானைதான்

சுண்ணநீ ரூடி நறுநறா நீருண்
டொண்ணுதல் யாத்த திலக வவிரோடைத்
தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டி குழைதாழ் வடிமணி
யுத்தி பொறித்த புனைபூண் பருமத்து
முத்தேய்க் கும்வெண் பன்னகை திறந்து
நன்னகர் வாயிற் கதவ வெளில்சாய்த்துத்
தன்னலங் காட்டித் தகையினாற் காறட்டி வீழ்க்குந்
தொடர்தொட ராக வலந்து படர்செய்யு
மென்றோட் டடக்கையின் வாங்கித் தற்கண்டார்
நலங்கவளங் கொள்ளு நகைமுக வேழத்தை
யின்றுகண் டாய்போ லெவனெம்மைப் பொய்ப்பதுநீ;

எல்லா, கெழீஇத்தொடி செறித்த தோளிணை தாங்கித்
தழீஇக்கொண் டோர்ந்தாயு நீ;

குழீஇ, அவாவினாற் றேம்புவா ரிற்கடை யாறா
வுவாவணி யூர்ந்தாயு நீ;

மிகாது, சீர்ப்பட வுண்ட சிறுகளி யேருண்க
ணீர்க்குவிட் டோர்ந்தாயு நீ;

சாஅர்ச்சாஅர், நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாஞ்
சிறுபாக ராகச் சிரற்றாது மெல்லா
விடாஅது நீயெம்மில் வந்தாயவ் வியானை
கடாஅம் படுமிடத் தோம்பு.

இது "கொடியோர் கொடுமை சுடுமென * * * பகுதியி னீங்கிய தகுதிக்கட்" தலைவி பரத்தையனை யானையாகக் கூறிப் புலந்தது.

(இ - ள்.) அன்னைகடுஞ் * * * வெள்ளல்—எ-து, நீ தலைநின்று ஒழுகுகின்ற பரத்தை, யான் புணர்தற்கு நீ குறித்தல்செய்த இடத்து எந்நாளும் உன்னைக் காணேனாய்ப் பலகாலுந் திரிதலைச் செய்ய, நீ எவ்விடத்தே போனாயென்று நாட்காலத்தே எம்முடைய மனையின் வாசலிலே வந்து கடுஞ்சொற் சொல்லி உன்னைப் புலக்கின்ற தொழிலை நீ அறியாதாய்போல இப்பொழுது நடுவாக நின்று இங்ஙனம் எம்மை இகழ்கின்ற இகழ்ச்சியிடத்து யான் என்னை மிகவும் ஒறுத்துக்கொள்வேன் நீ எந்நாளும் அத்தன்மையையென்றாள் தலைவி; எ - று.

முத்தேர் * * * தங்கினேன்—எ-து, அதுகேட்ட தலைவன் முத்தையொக்கும் முறுவலையுடையாய்! நம்வலையிலே அகப்பட்டுவந்ததொரு புத்தியானை ஈண்டு வந்தது, அதனை ஏறிக் காண்பதாய் யான் தங்கினேனென்றான்; எ - று.

ஒக்கும் * * * பொய்ப்பதுநீ—எ-து, அதுகேட்ட தலைவி நீ கூறியது ஒக்குமென நெஞ்சொடு கூறிப், பின்னர் அவன் கேட்ப அந்தப் புத்தியானை, ஒள்ளிய நெற்றியிலே நிலைபெறுத்தின திலகமாகிய விளங்கிய பட்டத்தினையுந், தொய்யில் எழுதின அழகினையுடைய முலையாகிய வெண்மையையுடைய கோட்டினையுந், தொய்யகமென்னுந் தலைக்கோலமாகிய தோட்டியினையுந், தாழ்ந்த மகரக்குழையாகிய வடித்த மணிகளையுந், திருவைப் பொறித்துவைத்த புனைந்த தலைப்பணியாகிய கழுத்துமெத்தையினையும் உடைத்தாகையினாலே அழகுடைத்தாகவும் பிறர் கூறக் கேட்டேன்; அந்த யானைதான் சுண்ணமாகிய நீற்றை அணிந்து நறிய கள்ளாகிய நீரை உண்டு நல்ல மனைவாசலிற் கதவமாகிய கம்பத்தைச் சேர்ந்து அதனோடே துவக்குண்டதே தனக்குச் சங்கிலியாகக் கட்டுண்டு தன்னழகைக் காட்டி அவ்வழகாலே ஒருவரும் போகாதபடி காலைத்தடுத்து வீழ்க்கும்; அதுவேயுமன்றிப் பிறர்க்கு வருந்தத்தைச் செய்யும் மெல்லிய தோளாகிய தடக்கையாலே வாங்கிக்கொண்டு தன்னைக் கண்டாருடைய நலமாகிய கவளத்தை முத்தையொக்கும் நகையினையுடைய வெண்பல்லைத் திறந்து கொள்ளும்; அந்தச்சிரிப்பை முகத்தேயுடைய வேழத்தை இன்று கண்டாய்போலே நீ எம்மைப் பொய்யாக்குவது என்னபயனையுடைத்தென்றாள்; எ-று.

"பருமப் பணையெருத்திற் பல்யானை புண்கூர்ந்து" என்றார் பிறரும். ஆடியென்பது முதலிய செய்தெனெச்சங்கள் வீழ்க்குமென்னும் முற்றுச்சொல்லோடு முடிந்தன. அதுவேயுமன்றிக் கவளமுங் கொள்ளுமெனப் பின்னும் முற்றாக முடிக்க. நகைவேழமென்றது சுட்டாய் நின்றது.

எல்லா * * * நீ—எ-து, எடா! தொடியைச் செறித்த தோளாகிய மருமத்தே கெழுமித் தழுவிக்கொண்டு பின்னர்த் தத்தி ஏறினும் நீ; எ - று.

இது முயக்கமும் புணர்ச்சியுங் கூறிற்று. யானையாதலிற் தத்தியூர்ந்தாயென்றாள்.

குழீஇ * * * நீ—எ-து, நின்மேல் வேட்கையால் எதிர்கொண்டுவந்து கூடிப் பின்னர் வருந்துகின்ற பரத்தையருடைய மனையின் வாயிலே வழியாகக் கொண்டுபோய் அவ்வியானையை அழகுண்டாக ஏறினும் நீ; எ - று.

உவாவென்றதனை இளையமகளிராகவும் யானையாகவுங் கூறுக. அது யுகம் உகமாயினாற்போல் நின்றது.

மிகாது * * * நீ—எ-து, நின்னை மிகாமற் சீர்மைப்பட்டுகர்ந்த சிறிய களிப்பினையுடைய அழகினையுடையவாகிய மையுண்கண் அழும்படி சிலநாள் விட்டுப் பின்னர்க் கூடினும் நீ; எ-று.

நின்னைக் கைகடவாமல் ஓர் அளவிற்பட மதம் பிறத்தற்கு வேண்டுவனவற்றை உண்ட சிறிய களிப்பையுடைய மக்கள் அழகை உண்டற்குக் காரணமான கண்ணையுடைய யானையை நீர்க்கு விட்டு ஏறினாய் நீ என்றும் ஒருபொருள் தோன்றநின்றது. அழகையுண்டல் அவனைக் கொல்லுதல். கண் ஆகுபெயர்.

சாஅர்ச்சாஅர் * * * நோம்பு—எ-து, சார்ந்த சார்ந்த இடங்களிலுள்ள அறல்தங்கின கரிய கூந்தலையுடைய நின் பெண்டிரெல்லாரும் நின்னைக் கோபியாதபடி எம்முடைய இல்லிலே வந்தாய்; அதற்கு அப்புத்தியானை நீ ஏறமாட்டாத பாகனும்படியாக நின்னைக் கைகடந்து மதம்படும்; அவ்விடத்து விடாதே அதனை மெல்லெனப் பரிகரித்துக்கொள்ளெனப் புலந்துகூறினாள்; எ - று.

புதிய பரத்தையைப் புணர்தற்கு ஏனைப் பரத்தையர் கோபியாதபடி அதற்குப் பரிகாரமாக ஈண்டுவந்து என்பால் அடைந்தாய், தலைவி மனைக்கட் தங்கினனென்று அவர் கருதுவாராக நினைத்தாயென்றாள்.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவுகொச்சகங்களுஞ் சொற்சீரடிகளும் வெண்பாக்களும் விரவி வந்த கொச்சகக்கலி. (௩௨)

௬௮. யாரைநீ யெம்மில் புகுதர்வா யோரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் யாழ
வதுவை விழவணி வைகலுங் காட்டினையாய்
மாட்டுமாட் டோடி மகளிர் தரத்தரப்
பூட்டுமோன் றிண்டேர் புடைத்த மறுகெல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் பரத்தைமை
காட்டிய வந்தமை கைப்படுத்தேன் பண்டெலாங்
கேட்டு மறிவேன்மன் யான்;

தெரிகோதை யங்கல்லாய் தேறியல் வேண்டும்
பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுன லாடத் தவிர்ந்தேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

ஓஒ, புனலாடி னையெனவுங் கேட்டேன் புனலாங்கே
நீணீர் நெறிகதுப்பு வாரு மறலாக
மாணெழி லுண்கண் பிறழுங் கயலாகக்
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக
நாணுச் சிறையழிந்து நன்பகல் வந்தவிவ்
வியாணர்ப் புதுப்புன லாடினாய் முன்மாலைப்
பாணன் புணையாகப் புக்கு;

ஆனாது, அளித்தமர் காதலோ டப்புன லாடி
வெளிப்படு கவ்வையை யானறித லஞ்சிக்
குளித்தொழுகி னையெனவுங் கேட்டேன் குளித்தாங்கே

போர்த்த சினத்தாற் புருவத் திரையிடா
வார்க்கு ஞெகிழ்த்தா னீர்நடை தட்பச்
சீர்த்தக வந்த புதுப்புன னின்னைக்கொண்
டூர்த்துயப்பக் கண்டா ருளர்;

ஈர்த்தது, உரைசால் சிறப்பினின் னீருள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தி னின்னுங்
கரைகண் டதூஉ மிலை;

நிரைதொடீஇ, பொய்யாவாட் டானைப் புனைகழற்காற் [றென்னவன்
வையைப்புதுப்புனலாடத்தவிர்ந்ததைத்
தெய்வத்திற் றேற்றித் தெளிப்பேன் பெரிதென்னைச்
செய்யா மொழிவ தெவன்;

மெய்யதை, மல்கு மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்
பல்காலு மாடிய செல்வுழி யொல்கிக்
களைஞரு மில்வழிக் காலாழ்ந்து தேரோ
டிளமண லுட்பட லோம்பு முளைநேர்
முறுவலார்க் கோர்நகை செய்து.

இது பரத்தையிற்பிரிந்துவந்த தலைவன் ஆற்றுமையே வாயிலாகச் சென்றுழி அவனைக் கண்டு நீ தாழ்த்த காரணமென்னெனப், புதுப்புனலாடித் தாழ்த்ததென்னத், தலைவி இன்ன புதுப்புனலே ஆடியதென நெருங்கிக்கூறியது.

(இ - ள்.) யாரைநீ * * * யான்—எ-து, புதியனவாகிய மலர்களை ஆராய்ந்து நுகரும் வண்டுபோலே நீ புதிய பரத்தையரை நுகர்தற்கு விரும்புதலின் அவரைக் கொண்டுவருதற்கு அவரிருக்கின்ற இடந்தோறும் இடந்தோறும் ஓடிச் சென்று அப்பரத்தையரைக் கொண்டுவருகையினாலே எப்பொழுதும் பூட்டப்படுங் குதிரையையுடைய திண்ணியதேர் ஆரவாரித்த தெருவுகளெல்லாம் நின் பரத்தைமை கூறிய பாட்டு உண்டாதற்குப் பொருந்தின நின் பொய்யாகிய பரத்தைமைக்குணத்தை யான் முற்காலமெல்லாம் மிகவுங் கேட்டும் அறிந்திருப்பேன்; அதுவேயன்றி நாடோறும் வரைந்து கொள்ளுங் கல்யாணமாகிய விழாவாலுண்டாகிய ஒப்பனையை என்னை ஒழிந்தவர்களுக்குக் காட்டுதற்கு நீ வந்து இப்படி வருவையென நெஞ்

சிலே தெளிந்துவிட்டேன்; எம்முடைய இல்லிலே புகுதலைச்செய் வாயாகிய நீ எமக்கு ஆராந்தன்மையையுடையையென்றாள்; எ-று.

ஓரும் அசை. கேட்டுமென்னும் உம்மை எச்சம். யாழ அசை. கைப்படுத்துதல் ஈண்டுத் தெளிதலை உணர்த்திநின்றது. புகுதருவாயென்பது புகுதர்வாயெனத் திரிந்துநின்றது; உகரம் விகாரத்தாற்றொக்கதெனினுமாம்.

தெரிகோதை * * * தெவன்—எ-து, அதுகேட்ட தலைவன் தெரிந்த மாலையினையும் அழகினையுமுடைய நல்லாய் யான் செய்யாதனவற்றைப் பெரிதாக என்னைச் சொல்வது என்னபயனை யுடைத்து? தன்னிடத்தே சூழ்ந்த பூக்கள் மிக்க நீர் பொருகின்ற கரையையுடைய வையையாற்றில் வருகின்ற நீராயாடுதற்குத் தங்கினேன்; அதனை நின் நெஞ்சாற் தெளிதல்வேண்டுமென்றான்; எ-று.

ஓஒ! எனக் கூறிய பொய்யை வியந்து நெஞ்சோடு கூறினாள்.

புனலாடி * * * புக்கு—எ-து, அவ்விடத்தே புனலாடினா யென்றுங் கேட்டேன்; நீ ஆடிய புனல்தான் ஒழுகும் அறல் நீண்ட தன்மையையுடைய நெறித்த மயிராக, ஆண்டுப் பிறழுங் கயல்கள் மாட்சிமைப்பட்ட அழகினையுடைய உண்கண்ணாகக், கருமை மலர்தல் பொருந்தின கமழ்கின்ற பூக்களையுடைய சோலையிடத்தே நாணாகிய அணையை முறித்துப் பலருங் காணும்படி பகற்பொழுதிலே வந்த புதுப்புனலைப் பாணன் வாயிலாக ஊடறீர்ந்து மாலைக்காலத் திற்குமுன்னே சென்று ஆடினாயென்றாள்; எ - று.

மலர்தல் பரத்தற்பொருட்டு. புதுவருவாயையுடையது புதுப்புனல்.

ஆறுது * * * ருளர்—எ-து, மேன்மேலே தலையளிசெய்து அமர்ந்த காதலோடே அப்புனலை ஆடுதலால் வெளிப்படுகின்ற அலரை யான் அறிதலை அஞ்சி மறைந்து நடந்தாயென்று பிறர் சொல்லவுங் கேட்டேன்; அதுபொறாமல் மெய்யை மறைத்த சினத்தோடே புருவமாகிய திரையையிட்டு நல்ல நீர்மையையுடைய நின் ஒழுக்கத்தைத் தடுக்கும்படி கனம்பட வந்த சிலம்பொலியாலே ஆரவாரிக்கும் புதியபுனல் நீ குளித்த அவ்விடத்தே நின்னைக் கைக் கொண்டு இழுத்துச் செலுத்தக் கண்டாரும் உளரென்றாள்; எ - று.

குளித்த கடைக்குறைந்தது. குளித்தொழுகவென்று நீரிற் பிறக் தந் தொழிலுந் தோன்றநின்றது. கோபத்தாற் பல்காலும் புருவம் ஏறி முரிவதனைத் திரையிடவென்றாள். ஒழுகினுயெனவுமென்ற உம்மை எச்சவும்மை, பாணன் புணையாக ஆடியதேயன்றியென நிற்றலின்.

ஈர்த்தது * * * மிலை—எ-து, அங்ஙனம் இழுத்த நீர் புகழமைந்த தலைமையினையுடைய நினது நீர்மையையுடைய நெஞ்சை வாங்கிக்கொள்கையினாலே குற்றமற்ற அப்புதுப்புனலினுடைய பெருக்கினின்றுங் கரையேறுதற்கு இன்னுங் கரைகண்டதுதானும் இல்லையென்றாள்; எ - று.

இன்னுமென்ற உம்மை சிறப்பு. கண்டதுமென்ற உம்மை காணுமையேயன்றிக் கண்டதுமில்லையென எதிர்மறை.

நிரைதொடீஇ * * * தெவன்—எ-து, அதுகேட்ட தலைவன் நிரைதொடியினையுடையாய்! தப்பாத வாட்டானையினையும் புனைந்த கழற்காலினையுமுடைய பாண்டியனது வையையாற்றின் வந்த புதிய புனலை ஆடுதற்குத் தங்கினபடியை வார்த்தையாற் தெளிவித்துப், பின்னர்த் தெய்வத்தாற் தெளிவிப்பேன், நினக்கு யான் செய்யாதனவற்றை என்னைப் பெரிதாகச் சொல்லுகின்றது என்னபயன்தருமென்றான்; எ - று.

இந்நிலத்திற்கு உரியதெய்வம் இந்திரன்.

மெய்யதை * * * செய்து—எ-து, பெருகிய மலரைச்சூடின பொய்யையுடைய புதிய புனலைப் பலகாலும் ஆடல்வேண்டித் தேரோடே செல்லுமிடத்து முளையொத்த முறுவலையுடையார்க்கு ஒரு சிரிப்பை உண்டாக்கி நின்னைப் பிடித்துக் கரையேற விடுவாரில்லாத காலத்தே இளமணலினுள்ளே தான் நிலைதளர்ந்து கழுமி அகப்படுதலைப் பாதுகாப்பார் யாரோனத் தலைவி நெருங்கிக்கூறினாள்; எ - று.

இதனால் இருவருக்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது தரவும் போக்கும் ஐஞ்சீரடுக்கிய பாட்டும் இடைமிடைந்த கலிவெண்பா. (௩௩)

௩௪. நறவினை வரைந்தார்க்கும் வரையார்க்கு மவையெ
தறவினை யின்புறூஉ மந்தண ரிருவருந் [டுத்
திறம்வேறு செய்தியி னூனெறி பிழையாது

குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதனின் செம்மையிற் றரவாய்ந்த
விழையணி கொடித்திண்டே ரினமணி யானையாய்;

அறனிழ லெனக்கொண்டா யாய்குடை யக்குடைப்
புறநிழற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
பிறைநுதல் பசப்பூரப் பெருவிதுப் புற்றாளே;

பொய்யாமை நுவலுநின் செங்கோலைச் செங்கோலின்
செய்தொழிற்கீழ்ப் பட்டாளோ விவளிவட் காண்டிகா
காமநோய் கடைக்கூட்ட வாழுநாண் முனிந்தாளே;

ஏமமென் றிரங்குநின் னெறிமுரச மம்முரசி
னேமத் திகந்தாளோ விவளிவட் காண்டிகா
வேய்நல மிழந்ததோள் கவின்வாட விழப்பாளே;

ஆங்கு,

நெடிதுசே ணிகந்தவை காணினுந் தானுற்ற
வடுக்காட்டக் கண்காணா தற்றாக வென்றோழி
தொடிகொட்ப நீத்த கொடுமையைக்
கடிதென வுணராமை கடிந்ததோ நினக்கே.

இஃது அரசன் தலைவனாய் அவன் றலைவியை நீங்கி இருந்ததற்குத் தலைவி புலவிநீட்டித்து ஆற்றாளாயவழி அவட்கு நிகழ்ந்த காமத்துமிகுதிறத்தை அவ்வரசனை நோக்கிச் சான்றோர் கூறியது. இது பெருந்திணை.

(இ - ள்.) நறவினை * * * யானையாய்—எ-து, கள்ளை உண்ணல் ஆகாதென்று நீக்கின தேவர்க்கும் அதனை உண்டலை நீக்காத அசுரர்க்கும் வளாதலும் வளையாமையுமாகிய அவ்விரண்டினையுங் கைக்கொண்டு அறத்தொழிலாக இன்பமுறுத்தும் வியாழமும் வெள்ளியுமாகிய குரு இருவருஞ் செய்த வழி வேறாகிய தொழில்களையுடைய அரசியலைக் கூறும் நூல்வழியைத் தப்பாமற்,

குழவியைப் பார்த்து இன்புறாஉந் தாய் அதற்கு முலைசுரந்து சொடுக்குமாறுபோல, மழையான்து தன்னை வேண்டின காலத்தே பெய்து உலகை அளித்துப் பாதுகாக்கும் நல்ல முறைமையை எல்லார்க்குந் தப்பாது வருதலை நினது நடுவுநிலைமையாலே உலகத்திற்குத் தரும்படியாக வாய்த்த இழையணிந்த கொடியினையுடைத்தாகிய திண்ணிய தேரினையும் மணிகட்டின இனமாகிய யானையினையுமுடையாய்; எ - று.

ஊழ் ஊழியெனத் திரிந்தது.

அறனிழ * * * புற்றாளோ—எ-து, நின் அழகிய குடையினது நிழல் அறத்தைச்செய்யுமென்று எடுத்தாய்; அந்தக்குடையினது நிழலின்புறத்தே இவளகப்பட்டாளோ? அதிற் பட்டவளல்லள்; இங்ஙனம் பிறைபோலும் நுதல் பசப்புப் பரப்பப் பெரிய நடுக்கமுற்ற இவளை இவ்விடத்தே அருளிப்பாராய்; எ - று.

காண்டியென்னும் முன்னிலைவினையோடு காவென்னும் அசைநிலையிடைச்சொல் நின்றது.

பொய்யாமை * * * முனிந்தாளோ—எ-து, நினது செங்கோலினையுடைய உயர்ந்த நடுவுநிலைமை தப்பாமையை உலகம் புகழ்ந்து கூறாநிற்கும்; அந்தச் செங்கோலினுடைய இனிய செய்தொழிலுக்குக் கீழாகிய கொடுந்தொழிலின்கண்ணே இவள் அகப்பட்டாளோ? அதிற்பட்டவளல்லள்; இங்ஙனங் காமநோய் இறந்துபாட்டைச் சேர்த்துகையினாலே தான் உயிர்வாழும் நாள் வெறுத்த இவளை இவ்விடத்தே அருளிப்பாராய்; எ - று.

ஏமமென் * * * விழப்பாளோ—எ-து, நின்னுடைய எறிகின்ற முரசம் இவ்வுலகத்திற்குக் காவலென்று கூறும்படியாக ஒலியாநிற்கும்; அந்த முரசினது காவலினின்றும் இவள் நீங்கினாளோ? நீங்கினவளல்லள்; இங்ஙனம் மூங்கில் தன் நலனிழத்தற்குக் காரணமான தோள் பழைய அழகுகெடும்படி வருந்துகின்ற இவளை இவ்விடத்தே அருளிப்பாராய்; எ - று.

ஓகாரங்கள் எதிர்மறை.

ஆங்கு, அசை.

நெடிது * * * நினக்கே—எ-து, கண்கள் சேணெடிதாக நீங்கின பொருள்களைக் காணினுந் தான் தன்னிடத்தே உற்ற வடுவைப் பிறர்காட்டவுங் காணாத தன்மைத்தாக என்னுடைய தோழியினது தொடிகள் சுழன்று கழலும்படியாக நீ கைவிட்ட கொடுமையை நீ கடிதென்று உணராதிருத்தல் நினக்குச் சான்றோரால் கடியப்பட்டவற்றில் ஒன்றோ! அஃதின்றேயென்றான்; எ - று.

இதனைக் கைக்கிளையென்பார்க்குச் சுட்டி ஒருவர் பெயர் கொள்ளாது நிற்றலிற் கைக்கிளையாகாதெனவும், இதனைக் குறுங்கலியென்பார்க்கு அகத்தியனாருந் தொல்காப்பியனாருங் கூறாமையின் அப்பெயர் பொருந்தாதெனவுங் கூறி மறுக்க.

இஃது எழுசீர்த்தரவும் மூன்றடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடிச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலிப்பா. (௩௪)

௧00. ஈண்டுநீர் மிசைத்தோன்றி யிருள்சீக்குஞ் சுடரே
போல்
வேண்டாதார்நெஞ்சுட்கவெருவந்தகொடுமையு[
நீண்டுதோன் றுயர்குடை நிழலெனச் சேர்ந்தார்க்குக்
காண்டகு மதியென்னக் கதிர்விடு தண்மையு
மாண்டநின் னொழுக்கத்தான் மறுவின்றி வியன்ஞாலத்
தியாண்டோருந் தொழுதேத்து மிரங்கிசை முரசினாய்;

ஐயந்தீர்ந் தியார்கண்ணு மருந்தவ முதல்வன்போற்
பொய்கூறா யெனநின்னைப் புகழ்வது கெடாதோதான்
நல்கிநீ தெளித்தசொ னசையெனத் தேறியாள்
பல்லிதழ் மலருண்கண் பனிமல்கக் காணுங்கால்;

சுரந்தவான் பொழிந்தற்றாற் சூழநின் றியாவர்க்கு
மிரந்தது நசைவாட்டா யென்பது கெடாதோதான்
கலங்கஞ ருற்றுநின் கமழ்மார்பு நசைஇயா
ளிலங்குகோ லவிர்தொடி யிறையூரக் காணுங்கால்;

உறைவரைநிறுத்தகோ லுயிர்திறம்பொய்ப்பான்போன்
முறைசெய்தி யெனநின்னை மொழிவது கெடாதோதா
னழிபடர் வருத்தநின் னளிவேண்டிக் கலங்கியாள்
பழிதபு வாண்முகம் பசப்பூரக் காணுங்கால்;

ஆங்கு,

தொன்னல மிழந்தோணீ துணையெனப் புணர்ந்தவ
ளின்னுறல் வியன்மார்ப வினையையாற் கொடிதென
நின்னையான் கழறுதல் வேண்டுமோ
வென்னோர்க ளிடும்பையுங் களைந்தீவாய் நினக்கே.

இதுவுமது.

(இ - ள்.) ஈண்டுநீர் * * * முரசினாய்—எ-து, குற்றமற்ற மாட்சிமைப்பட்ட நின் ஒழுக்கத்தாலே கடலின்மீதே தோன்றி இருளைக் கெடுக்கும் ஞாயிறுபோல இவ்வுலகத்திலுள்ள பகைவர் நெஞ்சம் அஞ்சும்படி வெருவுதல்வந்த கொடுந்தொழிலையும், நெடிதாய்த் தோன்றுகின்ற எனையவற்றின் உயர்ந்த குடையைத் தமக்கு நிழலென்று கருதிச் சேர்ந்தவர்கட்குக் காட்சிதருங் கதிரைச் சொரியும் மதியையொத்த குளிர்ச்சியினையும், அகற்சியையுடைய உலகில் எவ்விடத்துள்ளோரும் வணங்கிப் புகழும் இரங்குகின்ற ஓசையினையுடைய முரசினையுடையாய்! எ - று.

ஈண்டு இவ்வுலகம். எத்துமென்னும் பெயரெச்சம் முரசின்மேலன்றி அதனையுடைய மன்னவனென்னும் பெயரோடு முடிந்தது.

ஐயந்தீர்ந் * * * காணுங்கால்—எ-து, அன்புற்று நீ நின்னிற் பிரியேனென்று தெளிவித்த சொல்லை இது தான் நச்சப்படும் வார்த்தையென்று கருதித் தெளிந்தவளுடைய பல இதழையுடைய மலர்போலும் உண்கண் நீர்நிறைய நீ காணுமிடத்து அரிய தவத்தையுடைய அறம் வளர்த்த நாயனைப்போல யாவரிடத்தும் பொய்கூறாயென ஐயமற்று உலகம் நின்னைப் புகழ்கின்றதன்மை நினக்குக் கெடாதோதான்; எ - று.

சுரந்தவான் * * * காணுங்கால்—எ-து, மனங்கலங்குகின்ற வருத்தத்தையுற்று நின்னுடைய கமழ்கின்ற மார்பை நச்சினவளுடைய விளங்குகின்ற கோற்றொழில் விளங்குந் தொடி இறையினின்றுங் கழல நீ காணுமிடத்து நீரைச் சுரந்த மேகம் அந்நீரைப் பொழிந்ததன்மைத்தாக நின்னைச் சூழநின்று இரந்த பொருளை நச்சுதலை யாவர் சிலர்க்குங் கெடாயென்று உலகங் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான்? எ - று.

உறைவரை * * * காணுங்கால்—எ-து, நெஞ்சழிகின்ற நினைவு வருத்துகையினாலே நின் கருணை விரும்பிக் கலங்கினவளுடைய பழித்தலறும் ஒளியினையுடைய முகம் பசப்புப் பரப்ப நீ காணுமிடத்து உயிரை உடம்பிடத்தே நின்றும் போக்குங் கூற்றுவனைப்போல யாவரையும் உலகத்துறையும் எல்லைதனிலே நிறுத்தின கோலாலே முறைமைசெய்வையென்று உலகம் நின்னைக் கூறும் வார்த்தை நினக்குக் கெடாதோதான்? எ - று.

ஆங்கு, அசை.

தொன்னல * * * நினக்கே—எ-து, எத்தன்மையுடையோர்களுடைய வருத்தமுங் களைகின்ற அதனால் இனிய முயக்கத்தையுடைய வியன்மார்பனே! நீ புணருந் துணையென்று கருதிப் புணர்ந்தவள் தனது இயற்கைநலத்தையும் இழந்தாள்; நீ இத்தன்மையாய் இராநின்றாய்; இது நினக்குக் கொடிதென்று நின்னை யான் கோபித்தல்வேண்டுமோ? நீயே அளிப்பாயாகவென்றான்; எ - று.

இழந்தோள் ஆ ஓவாய் நின்றது.

இதனாற் தலைவற்கு அசைவுபிறந்தது.

இஃது ஆறடித்தரவும் நான்கடித்தாழிசையுந் தனிச்சொல்லும் நான்கடியாசிரியச்சுரிதகமும் பெற்ற ஒத்தாழிசைக்கலி. (௩௫)

மருதக்கலி முற்றும்.

# நான்காவது முல்லைக்கலி.

௧0௧. தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பீன்று
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு துடுப்பீன்று
ஞெலிபுட னிரைத்த ஞெகிழதழ்க் கோடலு
மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினேன் கணிச்சிபோற் கோடுசீ
யேறுதொழூஉப் புகுத்தன ரியைபுட னெருங்கு;

அவ்வழி, முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ;

மேற்பாட் டுலண்டி னிறனெக்கும் புன்குருக்க
ணேக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா
ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்;

சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய வேற்றெருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர்கூளிக் கார்த்துவான் போன்ம் ;

செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்காண்
ஆரிரு ளென்னு மருங்கங்குல் வந்துதன்
றுளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம்;

எனவாங்கு, அணிமாலைக் கேள்வற் றரூஉமா ராயன்
மணிமாலை யூதுங் குழல்;

கடாஅக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅகை
யீன்றன வாயமக டோள்;

பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணைகொடுப்பேம் யாம்;

கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கேளாள னாகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண்;

ஆங்கு, ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

இஃது.* "ஆயர் வேட்டுவ ராடூஉத் திணைப்பெய ராவயின் வரூஉங் கிழவரு முளரே" என்னுஞ் சூத்திரத்திற் "திணைநிலைப்பெயராகிய கிழவருங் கிழத்தியரும் உளர்" என்னும் விதியாற்கொண்ட அத்தலைவிக்கு அவள் தோழி ஆயர் ஏறுதழுவுகின்றமை காட்டி அவள் அதுகண்டு வருந்தாமல் ஆண்டுப் பெற்ற நன்னிமித்தங் கூறித்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், உச - ம் சூத்.

தெளிவித்து, அதனை அவ்விதியாற்கொண்ட தலைவற்குங் கூறி, மீட்டும் அத்தலைவிக்குத் தஞ் சுற்றத்தார் கூறியிருக்குங் கூற்றினையுங் கூறித், தலைவனும் இன்னும் ஒருஞான்று ஏறுதழுவி நம்மை வரைந்து கொள்வனென்று ஆற்றுவித்தது.

(இ - ள்.) தளிபெறு * * * ஞெருங்கு—எ-து, மழையைப் பெறுகின்ற குளிர்ந்த நிலத்தே நின்ற கார்காலத்து முற்பட்ட மழைக்கு அரும்பீனுநின்று முன்பு உலர்ந்த முதலிடத்தே தழைத்த முள்ளைப் புறத்தேயுடைய பிடவம்பூவும், கள்ளுண்டு களித்தலுற்றவன் நிலைமைபோல அசைந்து வளைந்த துடுப்புப்போலும் முகையை முன்னர் ஈன்று, பின்னர்த் தீயைக் கடைந்து, அதிற் பிறந்த நெருப்பைச் சேரநிரைத்தாற்போன்ற அலர்ந்த இதழினையுடைய செங்காந்தட்பூவும், நீலமணியையொக்கும் நிறத்தினையுடையவாகிய காயாம்பூக்களும், பிறவும் அழகுகொள்ளும்படி சூடிய கண்ணியையுடையவர் சேரத்தொக்கு ஏறுதழுவுவாரோடே மாறுபடுதலை ஏறட்டுக்கொண்ட தம்மைந்தினைச் சேரநிறுத்துதற்கு மகட்கொடை நேர்ந்த ஆயர் சேரக்கூடிப், பிறராற் சீறுதற்கரிய வலியினையுடைய இறைவனுடைய குந்தாலிப்படைபோலே கூரிதாகக் கொம்புகளைச் சீவி, ஏறுகளைச் சேரத் தொழுவிடத்தே புகுதவிட்டார்; எ - று.

தண்புலத்துநின்ற பிடவுங் காந்தளுங் காயாவும் பிறவுமென்க. இவை முதற்பொருட்கேற்ற அடையடுத்துநின்ற ஆகுபெயர். ஈன்றென்பது நிகழ்காலமுணர்த்துஞ் செய்தெனெச்சம். ஞெகிழியுடனென்றது ஞெலிபுடனென எச்சமாகக்கூறுதலின் இவ்வாறு பொருள்கூறினும். "ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழி" என்பதனானும் இது வினைச்சொல்லாம்.

அவ்வழி * * * தொழூஉ—எ-து, அவ்விடத்து ஏறுகளைத் தழுவிப் போக்கும்படியை உட்கொண்டு வந்து வந்து திரண்டு மழைமுழக்கென்ன இடியென்ன நடுவானிலத்தின்முன்னே ஆரவாரமெழப் புகையொடு துகள் எழ ஏறுதழுவினார்க்குக் கொடுத்தற்கு நல்ல மகளிர் திரண்டுநிற்ப நீர்த்துறையிலும் ஆலமரத்தின்கீழும் பழைய வலியினையுடைய மராமரத்தின்கீழும் உறையுந் தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவித் தொழுவிலே பாய்ந்தார்; எ-று.

"வளிவழக் கறுத்த வங்கம்" என்றாற்போல் வழக்குப் போக்குதன்மேல் நின்றது. இடி ஏற்றின் இடிப்பிற்கு உவமம். அவர்

பாய்ந்த அளவிலே தோழி தலைவியை அழைத்துக்காட்டுகின்றாளாக மேற்கூறுக.

மேற்பாட் * * * போன்ம்—எ-து, உயர்ந்த கொம்பிடத்தே வைத்த உலண்டினது நிறத்தையொக்கும் புல்லியநிறத்தைத் தன்னிடத்தேயுடைய எருத்தினது நோக்கை அஞ்சானாய் அதின்மேலே பாய்ந்த இடையனைச் சாவக்குத்திக் கொம்பிடத்தே எடுத்துக்கொண்டு உடலைக்குலைக்கின்றதனுடைய தோற்றரவைக் காணாய்; அழகிய தலைமையினையுடைய மணமசைந்த இயல்பினையுடையளாகிய துரோபதையது தூய்ய கூந்தலிலே கையை நீட்டிய துச்சாசனனுடைய நெஞ்சைப் பிளந்துபோகட்டுப் பகைவர்நடுவே தான்சொன்ன வஞ்சினத்தை வாய்க்கச்செய்த வீமசேனனைப்போலும்; எ - று.

போலும் போன்மெனத் திரிந்தது. *"ணகாரை முன்னர் மகாரங் குறுகும்" என்பதனான் மகரங் கான்மாத்திரையாய் நின்றது. புன்குருக்கண் ஆகுபெயர். சாவக்குத்தியென்பது †"சாவ வென்னுஞ் செயவெ னெச்சத் - திறுதி வகரங் கெடுதலு முரித்தே" என்பதனால் வகரங்கெட்டது.

சுடர்விரிந் * * * போன்ம்—எ-து, மதிவிரிந்தாற்போன்ற சுட்டியை நெற்றியிலேயுடைய கரிய எருது முழைஞ்சினையுடைய மலையிற்பூவாற்செய்த அழகையுடைய கண்ணியையுடைய பொதுவனைத் துகைத்துக் குடர்சரியும்படி குத்திக் கோட்டிடைக்கொண்டு குலைப்பதனுடைய தோற்றரவைக் காணாய்; பல்லுயிரும் வருத்தத்தை அணிகின்ற ஊழிமுடிவிலே பசியநிறத்தைத் தன்பாகத்தேயுடைய உருத்திரன் வருத்தத்தைச்செய்த எறுகிய எருமையையேறுகின்ற கூற்றுவனுடையநெஞ்சைப் பிளந்துபோகட்டு அவன் குடரைச் சூடிக்கிட்டு அவற்றின் வயிற்றை நிறைவிக்கின்றவனைப்போலும்; எ-று.

எருமை ஆகுபெயராய்க் கூற்றுவனை உணர்த்திற்று.

செவிமறை * * * போன்ம்—எ-து, செவிமறுவாயிருக்கின்ற விளங்கும் நுண்ணிய சிவந்த பொறிகளையுடைய ஆயர் சேர்ந்துவிட்ட வெள்ளை எருத்தினது கோபத்தை அஞ்சானாய்த் தன்மேலே பாய்ந்த பொதுவனைத் துகைத்து முள்ளினது நுனிபோலும் முனையிலையுடைய கோட்டாலெடுத்துக் குலைப்பதனுடைய தோற்றர

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமரபு, ௧௬-ம் சூத்.
† " " உயிர்மயங்கியல், ௭-ம் "

வைக் காணாய்; வருதற்கரிய கங்குலிலே அரிய இருளென்று கரு
சாறப் வந்து துரோணாசாரியனைக் கொன்ற சிகண்டியைத் தன்
முயற்சியாலேவென்று கொன்று தன் தோளாற் தலையைத் திருகும்
அச்சுவத்தாமாவைப்போலும்; எ - று.

நேர்வெள்ளையென்க. நுதியென்றது முனை; எனவே, தலை
யென்பது தோன்றிற்று. "நுதிக்கோலஞ்செய்தது" என்றாற்போல.

ஏனவாங்கு, அசை.

இங்ஙனந் தோழி காட்டக் கண்டு நங்கணவற்கும் இங்ஙன
மாகுமோவென்று அஞ்சின தலைவியது அச்சத்தை ஆண்டுப்பெற்ற
நன்னிமித்தங்கண்டு தோழி போக்குவாளாக மேற்கூறுகின்றாள்.

அணிமாலை * * * குழல்—எ-து, ஆயர் ஈண்டு ஊதுகின்ற
குழல் நீலமணிபோலுங் காயாம்பூவாற்செய்த மாலையினை அணியும்
இயல்பினையுடைய கேள்வனை நமக்குத் தருதற்கு நன்னிமித்தமாக
இசைத்தது காண், நீ அஞ்சாதேகொள்ளென்றாள்; எ - று.

அது மங்கலமான பண்ணைத் தருதலின் நிமித்தமாயிற்று.

கடாஅக் * * * டோள்—எ-து, தோழி தலைவனிடத்தே
சென்று ஆண்டுச்செய்த நிமித்தத்தை ஆராய்ந்துபார்க்கில் மதத்தை
யுடைய களிற்றினுங்காட்டிற் தறுகண்மையையுடைய ஏற்றை நீ கை
நெகிழவிடாது கொள்வை; இப்பொழுது இவ்வாயமகள் தோள் வீர
மகளிர் தோள்களிற்காட்டில் வெற்றிக்கொடியை உண்டாக்கினவா
மென்றாள்; எ - று.

பகலிடக் * * * யாம்—எ-து, பின்னர்த் தலைவியிடத்தே
வந்து எம்முடைய பலவான கரிய கூந்தலினையுடையவளை யாங் கூடு
தற்குக் கொடுப்பேம் கொல்லேற்றைச் சாடுதற்குச் சமைந்திருந்தவர்க
ளுக்கென்று நமர்கூடிக்கூறுந் தலைவனைப், பகற்பொழுதிலே அலர்ந்த
கண்ணியையுடையவன் வருத்தத்தையுடைத்தாகிய குழலினையுடைய
வன் சுவலின்மேலே கோலைவைத்த கையையுடையவனாய் ஒழிந்த
வினைவலபாங்கினோர்க்கு அயலதாயிருக்குங்காணென்றாள்; எ-று.

அயலதென்றது ஏறுதழுவுதற்கரிதென்னும்பொருட்டு. இம்
மூன்றுபெயரும் ஏறுதழுவினவர்களை நோக்கிக் கூறிற்று.

கோளாள * * * கண்—எ-து, யான் முற்கூறிய நிமித்தமேயன்றித் தலைவனைக் கண்டு என்கண்கள் உபகாரத்தைச் செய்கையினாலே ஏறுகொள்ளவல்லார் என்னையொப்பார் பிறரில்லையென்று நம்முடைய பசுத்திரளிலே நின்று தனது தாளாண்மையைக் கூறுந் தலைவன் பின்பு ஒருநாளிலேயாயினும் ஏறுதழுவி நம்மைத் தனக்குக் கேளாக ஆளுந் தன்மையையுடையனாகாமை இல்லையென்றாள்; எ - று.

தாளாண்மை முயற்சி, ஆண்டுப் பொதுவன்தன்மை. நமக்கு உருபுமயக்கம். கண் வேளாண்மை செய்தலாவது, இடக்கண் துடித்தல். வலக்கண்துடித்தலாயிருத்தலும் நன்னிமித்தமாதலிற் செய்தனவெனப் பன்மையாற் கூறினார்.

ஆங்கு, * * * கொண்டு—எ-து, அவ்விடத்தில் ஏறுகளும் வருந்தின இடையரும் புண்மிக்காரொன்று எல்லாம் விலக்குகையினாலே தம்மைக் கொள்ளுதற்கு நின்ற பொதுவரோடே தாம் புணர்தற்கு வேண்டும் நிமித்தங்களைப் பெற்று நாறுகின்ற கரிய கூந்தலையுடைய பொதுமகளிரெல்லாரும் முல்லையையுடைய குளிர்ந்த பொழிலிடத்தே விளையாடுதற்குப் புக்கார்; நாமும் பொழிலிடத்தே விளையாடுதற்குப் போதுவாயாகவென்றாள்; எ - று.

அச்சூத்திரத்துட் பொதுவனென்னும்பெயர் முதலியனவும் அச்சாதியிற் தலைவற்கு வருதலுங் கொண்டவாறுணர்க. * "புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்ல - தகத்திணை மருங்கி னளவுத லிலவே" என்னுஞ் சூத்திரத்திற் கைக்கிளை பெருந்திணைக்குந் தலைவருந் தலைவியரும் பலராய் வருவனொன்றலின் இதன்சுரிதகத்துத் தலைவருந் தலைவியரும் பலராகக் கூறினார். இது சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை.

இதனாற் தலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது கொச்சகம் இரண்டும் வந்தமையிற் கலிவெண்பாவின் வேறுபாட்டு வந்த கொச்சகக்கலி. (௪)

கOஉ. கண்ணக னிருவிசும்பிற் கதழ்பெயல் கலந்தேற்ற
தண்ணறும் பிடவமுந் தவழ்கொடித் தளவமும்
வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையு

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ருசு-ம் சூத்.

மன்னவை பிறவும் பன்மலர் துதையத்
தழையுங் கோதையு மிழையு மென்றிவை
தைஇனர் மகிழ்ந்து திளைஇ விளையாடு
மடமொழி யாயத் தவரு ளிவள்யா ருடம்போ
டென்னுயிர் புக்கவ ளின்று;

ஓஒ இவள், பொருபுக னல்லேறு கொள்பவ ரல்லாற்
றிருமாமெய் தீண்டல ரென்று கருமமா
வெல்லாருங் கேட்ப வறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட் டவள்;

சொல்லுக, பாணியேமென்றா ரறைகென்றார்பாரித்தார்
மாணிழை யாறுகச் சாறு;

சாற்றுள், பெடையன்னார் கண்பூத்து நோக்கும்வா யெல்லா
மிடைபெறி னேராத் தகைத்து;

தகைவகை மிசைமிசைப் பாயப்பா ரார்த்துட
னெதிரெதிர் சென்றார் பலர்;

கொலைமலி சிலைசெறி செயிர்சி னஞ்செறிந்
துருத்தெழுந் தோடின்று மேல்;

எழுந்தது துகள் - ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக் - கலங்கினர் பலர்;

அவருள்,மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ
யெருத்தோ டிமிலிடைத் தோன்றினன் றோன்றி
வருத்தினான் மன்றவவ் வேறு;

ஏற்றெவ்வங் காணூ வெழுந்தா ரெவன்கொலோ
வேறுடை நல்லார் பகை;

மடவரோ நல்லர்யா மக்க ளெருந்
லடலேற் றெருத்திறுத்தார்க் கண்டுமற் றின்று
முடலேறு கோட்சாற்று வார்;

ஆங்கினித்,

தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுட் டெண்கண்ணித்
திண்டோட் டிறலொளி மாயப்போர் மாமேனி
யந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த
முறுவலாண் மென்றோள்பா ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துறை.

இஃது ஆயன் தலைவனாய் ஏறுதழுவினமை சுற்றத்தார் கண்டுநின்று கூறியது.

(இ - ள்.) கன்னக * * * ளின்று—எ-து, இட்மகன்ற பெரியவிசும்பிலே விரைந்துவருகின்றமழை தன்னிடத்தே கலக்கையினாலே அதனை ஏற்றுநின்ற தண்ணிய நறிய பிடவமும் படர்கின்ற கொடியினையுடைய முல்லையும் நிறத்தினையுடைய வளவிய தோன்றியும் விளங்குகின்ற கொத்தினையுடைய கொன்றையும் இவைபோல்வனபிறவும் பூத்த பலமலர்கள் நெருங்கும்படி தழையுங் கோதையும் இழையுமென்று சொல்லுகின்ற இவற்றைக் கட்டினராய் அணிந்து மகிழ்ந்து திளைத்து விளையாடும், வடிவத்தையுடைத்தாகிய மொழியினையுடைய, ஆயத்தாருள்ளே இன்று உடம்போடே என் உயிர்க்குள்ளே புக்கவளாகிய இவள் யார்தானென்றான் தலைவன்; எ-று,

இழை பூண்வடிவாகக் கட்டினது.

ஓஓஇவள் * * * ட்வள்—எ-து, அதுகேட்ட பாங்கன் ஓஓவென வியந்து இவள் பொருகின்ற புகழ்ச்சியையுடைய நல்ல ஏற்றைத் தழுவுமவரல்லது அழகினையுடைய மாந்தளிர்போலும் நிறத்தையுடைய மெய்யைச் சேராளென்று எல்லாருங் கேட்டிருப்ப இது காரியமாகப் பலகாலுஞ் சாற்றிச் சாற்றி எப்பொழுதுஞ் சொல்லிய சொல்லாலே அடிப்படக் கொண்டுவரப்பட்டவளென்றான்; எ - று.

சொல்லுக—எ-து, அது கேட்ட தலைவன் அச்சுற்றத்தை நோக்கி இவன் ஏறுதழுவி இவளைக் கொள்வனென்று அவர்க்குக் கூறுகவென்றான்; எ - று.

பாணியே * * * சாறு—எ-து, அவரும் ஆண்டுச்சென்று தழுவுதற்கு யாங்கள் தாழ்த்திரேமென்றார்; அதுகேட்டு அவள் சுற்றத்

தார் மாட்சிமைப்பட்ட இழையினையுடையாள் வழியாக நிகழ்த்தும் ஏறுவிடுகின்ற விழவைப் பரக்கச்செலுத்தி இவனேயன்றி மற்றும் ஏறு தழுவுவார் உளராயினும் வருகவென்று பறையறைகவென்றார்; எ-று.

சாற்றுள் * * * தகைத்து—எ-து, இந்த விழவினைப் பெட்டையொப்பார் தங்கண்கள் பொலிவுபெற்று இவ்வழகைப் பார்க்குமிடமெல்லாம் நின்று பார்க்கும் பரணைப் பெறுவார்களாகில் அது தகைமையையுடைத்தென்றார்; எ - று.

இதற்குமுன் உள்ளனவும் மேல்வருகின்றனவுங் கண்ட சுற்றத்தார் கூறியதாகப் பொருளுரைக்க.

தகைவகை * * * பலர்—எ-து, அழகினையுடைத்தாகிய வகுப்பையுடைய அவ்வேறுகளின் மேலே மேலே பாய்கைக்குச் சேர ஆர்ப்பரித்து ஏறுகளினெதிரேயெதிரே பலருஞ் சென்றார்; எ - று.

கோலமலி * * * மேல்—எ-து, அப்பொழுது அவ்வேறுகள் கொலைத்தொழின்மிகச் சிலைசெறிந்த குற்றத்தைச்செய்யுஞ் சினமிக்கு வெவ்விதாயெழுந்து அவர்மேலே ஓடிற்று; எ - று.

எழுந்தது துகள்—எ-து, அப்பொழுது துகள் எழுந்தது; எ-று.

ஏற்றனர் * * * பலர்—எ-து, அவர்களும் மார்புகளை எதிரே கொடுத்தார், அவற்றின் கொம்புகளுங் கவிழ்ந்து குத்தின, அதனாற் தழுவினவர்கள் பலருங் கலங்கிப்போனார்; எ - று.

முன்னர்ப் பலரும் வருகவென்று சாற்றுதலிற் பல ஏறுகளும் விடப் பலருந் தழுவித் தோற்றோன்றார்.

அவருள் * * * வேறு—எ-து, அங்ஙனம் ஏறுதழுவ வந்தவர்களுட் பார்த்தல் மிக்க விழுப்பம் எழுதலாலே பூமலிந்த நீலமணியையொக்கும் நிறத்தையுடைய நெடிய தோள்களாலே ஏற்றின் கழுத்தை இறுகத் தழுவிக் கழுத்தோடேகூடக் கிடக்கின்ற குட்டேற்றிடத்தே தோன்றினான்; அங்ஙனந் தோன்றிப் பின்னர் அறுதியாக அவ்வேற்றை வருத்தினானென்றார்; எ - று.

ஏற்றெவ்வம் * * * பகை—எ-து, ஏற்றையுடைய நல்லவர்கள் தங்கள் ஏற்றுடைய வருத்தத்தைக் கண்டு எழுந்திருந்தார்; அவன் தழுவினவாற்றிற்கு மகிழ்வதன்றிப் பகையாதல் என்னபயன் தருமென்றார்; எ - று.

கொல்லும் ஓவும் அசை.

மடவரே * * * வார்—எ-து, முன்னைநாளிலே கொல்லு தலையுடைய ஏற்றின் கழுத்திலே தங்கினவர்களைக் கண்டுவைத்தும் மீண்டும் உடலுகின்ற ஏற்றைத் தழுவிச் சாற்றுவாராகிய நல்லவர் யாம் மக்கள் அறியாதவர்களேயென்றார்; எ - று.

ஆங்கினித் * * * துணா—எ-து, இப்பொழுது அவ்விடத்துச் சிறுகுடியின் மன்றத்தில் ஆடுகின்ற பண்ணமைந்த இனிய தாளத்தையுடைய குரவைக்கூத்தினுள்ளே விளங்கிய கண்ணியையுந் திண்ணிய தோளினையுந் திறலினது விளக்கத்தினையும் மாயத்தையுடைய போர்த்தொழிலினையுங் கரியமேனியினையும் அழகிய துவர் ஊட்டின ஆடையினையுமுடைய பொதுவன் தோளையும் ஆராய்ந்த முறுவலாளுடைய மென்றோளையுங் கொண்டாடி ஏறுதழுவின புகழ் பரந்தது; இனிய மணஞ்செய்தற்குத் தண்ணுமையிற் றாளந் தளராமல் எழுப்புவார்களாகவெனக் கண்ட சுற்றத்தார் கூறினார்; எ-று.

பொதுவன் தோளிற்கு அவள் தோள் நிகர் ஒக்குமென்று பாராட்டி இனிப் பொதுவனோடே மென்றோளையுடைய முறுவலாளையும் பாராட்டியென்றலும் ஒன்று. இதுவுஞ் சிறப்பில்லா ஆசுரமாகிய கைக்கிளை. *"பாங்க னிமித்தம் பன்னிரண் டென்ப" என்றதனான் ஆசுரத்திற்கும் பாங்கி நிமித்தமாயினாள்.

இதனால் இருவர்க்கும் நினைத்தல் பிறந்தது.

இஃது †"ஆசிரிய மருங்கினும் வெண்பா மருங்கினு - மூவகை யடியு முன்னுத லிலவே" என்னுஞ் சூத்திரத்திற் கொண்ட நாற்சீரடி முடுகியலோடுந் தொடர்ந்த 'தகைவகை மிசைமிசை' 'கொலைமலி சிலைசெறி' என்னும் வெண்பாக்களும் "மலர்மலி புகலெழ வலர்மலிர் மணிபுரை நிமிர்தோள் பிணைஇ" என அறுசீரடி முடுகியலோடு தொடர்ந்த வெண்பாவும், இருசீர்ச்சின்னமும் பெற்றுக் கலிவெண்பாவுறுப்பில் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. (உ)

௧0௩. மெல்லிணர்க் கொன்றையு மென்மலர்க் காயாவும்
புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவுங்
குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கருங்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், ௨௩-ம் சூத்.
† ,, ,, செய்யுளியல் ௬௭-ம் ,,

கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்
பல்லான் பொதுவர் கதழ்விடை கோட்காண்மார்
முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லர் பெருமழைக் கண்ணர் மடஞ்சேர்ந்த
சொல்லர் சுடருங் கனங்குழைக் காதினர்
நல்லவர் கொண்டார் மிடை;

அவர்மிடைகொள, மணிவரை மருங்கி னருவி போல
வணிவரம் பறுத்த வெண்காற் காரியு
மீன்பூத் தவிர்வரு மந்திவான் விசும்புபோல்
வான்பொறி பரந்த புள்ளி வெள்ளையுங்
கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல்
வளைபு மலிந்த கோடணி சேயும்
பொருமுரண் முன்பிற் புகலேறு பலபெய்
தரிமாவும் பரிமாவுங் களிறுங் கராமும்
பெருமலை விடரகத் தொருங்குடன் குழீஇப்
படுமழை யாடும் வரையகம் போலுங்
கொடிநறை சூழ்ந்த தொழூஉ;

தொழுவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின வேறு;

ஏற்றின்; அரிபரி பறுப்பன சுற்றி
யெரிதிகழ் கணிச்சியோன் சூடிய பிறைக்க
ணுருவ மாலை போலக்
குருதிக் கோட்டொடு குடர் வலந்தன;

கோடொடு சுற்றிக் குடர்வலந்த வேற்றின்முன்
னாடிநின் றக்குடர் வாங்குவான் பீடுகொண்
செந்நூற் கழியொருவன் கைப்பற்ற வந்நூலை
முந்நூலாக் கொள்வானும் போன்ம்;

இகுளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோட்டினத் தாய மகனன்றே விட்டோரான்

போர்புக லேற்றுப் பிணரொருத்திற் றத்துபு
தார்போற் றழீஇய வன் ;

இருளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
கோவினத் தாய மகனன்றே யோவான்
மறையேற்றின் மேலிருந் தாடித் துறையம்பி
யூர்வான்போற் றோன்று மவன்;

தொழிலீஇஇ,காற்றுப்போல்வந்தகதழ்விடைக்காரியை
யூற்றுக் களத்தே யடங்கக்கொண் டட்டதன்
மேற்றோன்றி நின்ற பொதுவன் றகைகண்டை
யேற்றெருமை நெஞ்சம் வடிம்பி னிடந்திட்டுச்
சீற்றமொ டாருயிர் கொண்டஞான் றின்னன்கொல்
கூற்றென வுட்கிற்றென் னெஞ்சு;

இருளை யிஃதொன்று கண்டை யிஃதொத்தன்
புல்லினத் தாயர் மகனன்றே புள்ளி
வெறுத்த வயவெள்ளேற் றம்புடைத் திங்கண்
மறுப்போற் பொருந்திய வன்;

ஓவா வேகமோ டுருத்துத்தன் மேற்சென்ற
சேஎச் செவிமுதற் கொண்டு பெயர்த்தொற்றுங்
காயாம் பூங்கண்ணிப் பொதுவன் றகைகண்டை
மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை
வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் றின்னன்கொல்
மாயோனென் றுட்கிற்றென் னெஞ்சு;

ஆங்கு, இரும்புலித் தொழுதியும் பெருங்களிற் றினமு
மாறுமா றுழக்கியாங் குழக்கிப் பொதுவரு
மேறுகொண் டொருங்குதொழூஉ விட்டனர் விட்டாங்
மயிலெருத் துறழணி மணிநிலத்துப் பிறழப் [கே
பயிலிதழ் மலருண்கண்
மாதர் மகளிரு மைந்தரு மைந்துற்றுத் தாதெரு
மன்றத் தயர்வர் தழூஉ;

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே யாய மகள்;

அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய வுயிர்துறந்து
நைவாரா வாயமக டோள்;

வளியா வறியா வுயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சு நெஞ்சினர் தோய்தற்
கெளியவோ வாயமக டோள்;

விலைவேண்டா ரெம்மினத் தாயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்;

ஆங்கு,

குரவை தழீஇயா் மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுது
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னில
மாளுங் கிழமையொடு புணர்ந்த
வெங்கோ வாழியரிம் மலர்தலை யுலகே.

இஃது *ஆயர் ஏறுதழுவுகின்றமையைத் தோழி தலைவிக்குத் தனித்தனியே காட்டிப் பின்னர் அவர் ஏறுதழுவிவிட்டுக் குரவையாடுகின்றமையுங் கூறி ஆண்டு யாமுஞ் சென்று நின்னை ஏறுதழுவிக் கோடற்கு நிற்கின்ற தலைவன் கேட்டு ஏறுதழுவிக்கொள்ளுமாறு நமக்குச் சுற்றத்தார் கூறிக்கிடக்கின்ற முறைமையைப் பாட்டிலேதோன்றப் பாடிக் குரவையாடி வழுதிவாழ்கவென்று தெய்வம்பராவுதும் நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாகவெனக் கூறியது.*

(இ - ள்.) மெல்லிணர்க் * * * மிடை—எ-து, பலபசுவையுடைய பொதுவர் கல்லிடத்தனவுங் காட்டிடத்தனவுமாகிய மெல்லிய கொத்தினையுடைய கொன்றைப்பூவாலும் மெல்லிய மலரையுடைய காயாம்பூவாலும் புல்லிய இலையையுடைய வெட்சிப்பூவாலும் பிடவம்பூவாலும் முல்லைப்பூவாலுங் கஞ்சங்குல்லைப்பூவா

லுங் குருந்தம்பூவாலுங் கோடற்பூவாலும் பாங்கர்ப்பூவாலுஞ் செய்த கமழுங்கண்ணியைச் சூடினராய் விரைந்த ஏற்றைத் தழுவுதலைக் காணவேண்டி முல்லைமுகையும் பீலிமுருந்தும் நிரைத்தாலொத்த பல்லினையுடையராய்ப் பெரிய குளிர்ச்சியையுடைத்தாகிய கண்ணினையுடையராய் மடப்பம் பொருந்தின சொல்லினையுடையராய் விளங்கும் பொன்னாற்செய்த மகரக்குழையையணிந்த காதினராய் ஆயர் மகளிர் வந்து பரணைக் கைக்கொண்டார்; எ - று.

மிடை, பரண்.

அவர்மிடைகொள * * * தொழூஉ—எ-து, அவர் ரத்தம் மிடையைக் கைக்கொள்ள ஆயர் மணிகளையுடைய மலையிடத்தினின் றும் வீழ்கின்ற அருவிகள்போல அழகினது எல்லையைப் போக்கின வெள்ளிய கால்களையுடைய காரியாகிய ஏற்றினையும் மீன் பொலிவு பெற்று விளங்குதல்வரும் அந்திக்காலத்து மேகத்தையுடைய சிவந்த ஆகாயம்போலே அழகிய ஒளிபரந்த புள்ளிகள் வெள்ளையாயிருக்கின்ற சிவந்த ஏற்றையுங் கொலைத்தொழிலையுடைய இறைவன் சூடிய இளையதாகிய திங்களைப்போல வளைந்து நிறைந்த கொம்பை அணிந்த சிவந்த ஏற்றையும் பொருகின்ற மாறுபாட்டினையும் வலியினையுமுடைய கொண்டாடுகின்ற பிற ஏறுகள் பலவற்றையுந் தொழுவினுள்ளே விடுகையினாலே ஒழுங்குபட்ட புகைசூழ்ந்த அத்தொழுச் சிங்கமாகிய மாவுங் குதிரையாகிய மாவுங் களிறுகளும் முதலையிலொருசாதியாகிய கராமும் பெரிய மலையின் முழையிடத்திலே சேரத் திரளப்பட்டுப் பெய்கின்ற மழை ஒருங்குதிரியும் மலையிடத்தையொக்கும்; எ - று.

தொழுவினுள், * * * வேறு—எ-து, அத்தொழுவினுள்ளே அவ்வேறுகளைத் தழுவுதற்கு விரும்பி விரும்பிக் குதித்த பொதுவரைத் தெரிந்து தெரிந்து அவ்வேறுகள் குத்தின; எ - று.

ஏற்றின், * * * வலந்தன—எ-து, அவை குத்தினபொழுது, எரி சுற்றிவிளங்குகின்ற கணிச்சிப்படையையுடைய இறைவன் சூடிய பிறையிடத்துக்கிடந்த சிவந்தநிறத்தையுடைய மாலைபோலப் பசுயான ஏறுகளை விரும்பிப் போக்குவனவாகிய ஏற்றினங்களின் குருதிதோய்ந்த கொம்புகளுடனே குடர்கள் சுற்றிப்பிணித்தன; எ-று.

கோடொடு * * * போன்ம்—எ-து, அங்ஙனங் கொம்புகளோடே சுற்றிக் குடர்கள் பிணித்த ஏற்றின்முன்னே நின்று ஆடி அக்குடரை இரண்டுகையாலும் வாங்கி வயிற்றிலே இடுகின்

றவன் சிவந்த நூற்கழியை ஒருவன் இரண்டுகையிலுங் கோத்துப் பிடித்திருக்க அந்நூலை மூன்று நூலாகக் கொள்கின்றவனையும் ஒக்கும்; இவனுடைய பெருமையைப் பாராயென்று தோழி தலைவிக்குக் காட்டினாள்; எ - று.

இகுளை * * * வன்—எ-து, போரைக்கொண்டாடுகின்ற ஏற்றினது சர்ச்சரையையுடைய கழுத்திலே பாய்ந்து அதற்கு இட்ட மாலைபோலே அதனைத் தழுவினவன் எருமைத்திரளையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலான் இனி அதன்வலியை மீளப்பண்ணி அதனை நீங்கான்; இளையோளே! இஃதொரு வலியைப்பாராய், இவனொருத்தன்காணென்று காட்டினாள்; எ - று.

இவனொருத்தனென்றது வியந்தது.

இகுளை * * * மவன்—எ-து, மறுவினையுடைய ஏற்றின் மேலேயிருந்து ஆடிவிட்டுப் பின்னர் நீர்த்துறையிடத்துத் தெப்பத்தின்மேற் கிடந்து அதனைத் தள்ளுகின்றவனைப்போலே தோன்றுகின்றவன் பசுத்திரளையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலால் இவன் இங்ஙனம் செலுத்துந் தொழிலை ஒழியான்; இளையோளே! இஃதொரு வலியைப் பாராய், இவனொருத்தன் காணென்று காட்டினாள்; எ-று.

தொழிஇ—எ-து, காண்டற்றொழிலையுடையவளே; எ-று.

இஃது "அளபெடைமிகூஉம் இகரவிறுபெயர்".

காற்றுப்போல் * * * னெஞ்சு—எ-து, எழுகிய எருமையையேறுகின்ற கூற்றுவனுடைய நெஞ்சை வடிம்பாலே பிளந்துபோகட்டுச் சினத்தோடே அரிய உயிரை வாங்கின அஞ்ஞான்றையிறைவன் இத்தன்மையை உடையவன்கொலென்று கூறும்படியாகக் காற்றின் விசைபோல ஓடிவந்த விரைந்த எழுகிய காரியதனைப் பலரும்வந்து சேர்தலையுடைய களத்தே வலியடங்கத் தழுவி வருத்தி அதன்மேலே தோன்றிநின்ற பொதுவனது அழகைப் பாராய்; அதனைக் கண்டு என் நெஞ்சு உட்கிற்றுக்காணென்றாள்; எ - று.

இகுளை * * * வன்—எ-து, மற்றைப் புள்ளிகள் செறிந்த வலியையுடைய வெள்ளேற்றினது அழகையுடைய பக்கத்தே திங்களிற் கிடக்கின்ற மறுப்போலே பொருந்திக் கிடந்தவன் ஆட்டினத்தையுடைய ஆயர்மகனல்லவோ? ஆதலால் இவனொருத்தன்காண், இளையோளே! இஃதொரு வலியைப் பாராயெனக் காட்டினாள்; எ - று.

ஓவா * * * னெஞ்சு—எ-து, கஞ்சன்முதலியோர் வரவிட்ட கழுத்தின்மயிரினையுடைய குதிரையை வாயைப் பிளந்துபோகட்டுக் கையால் அடித்த அஞ்ஞான்றைக்கண்ணன் இத்தன்மையன் கொல்லென்று கூறும்படியாக ஒழியாத கோபத்தோடே வெவ்விதாய்த் தன்மேலே சென்ற சிவந்த ஏற்றைச் செவியடியிற் கொம்புகளைப் பிடித்துக்கொண்டு அதன்வலியை மீட்டுத் தழுவுங் காயாம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் அழகைப்பாராய்; அவனைக் கண்டு என் நெஞ்சு உட்கிற்றுக்காணென்றாள் ; எ - று.

ஆங்கு * * * யுலகே—எ-து, அவ்விடத்தே அப்படிக்காட்டி மயிலினது கழுத்தை மாறுபடுகின்ற அணியப்பட்ட காயாம்பூவாற் செய்த கண்ணிகள் பவளம்போலும் நிறத்தையுடைய சிவந்த நிலத்தே மாறுபட்டுக்கிடக்கும் பொதுவரும் பெரிய புலித்திரளும் பெரிய களிற்றுத் திரளுந் தம்முண் மாறுமாறாய்ப் பொருதாற்போலப் பொருது ஏற்றைத்தழுவிக்கொண்டு சேரத் தொழுவைவிட்டுப் போனார்; அவர் போன அப்பொழுதே நெருங்கிய இதழ்களையுடைய மலர்போலும் உண்கண்ணினையுடைய காதலையுடைய மகளிரும் அவர் கணவரும் வலியுற்றுத் தாதாகிய எருவையுடைய மன்றத்திலே குரவைக்கூத்தை ஆடுவார்கள்; ஆண்டு யாமுஞ் சென்று அக்குரவைக்கூத்தின்கண்ணே கூடிக் கொல்லுகின்ற ஏற்றினுடைய கோட்டிற்கு அஞ்சும் பொதுவனை மறுபிறப்பினும் ஆயர்மகள் தழுவாளென்றும், ஆயர்மகள் தோள் அஞ்சாராய் உயிரைத் துறந்து கொலைத்தொழிலையுடைய ஏற்றைக் கொள்பவர் செறியுமவையல்லது வருந்துதல்வந்து தழுவுதற்கு நெஞ்சில்லாதவர்கள் செறிதற்கரியவென்றும், உயிராவது ஒரு காற்றாக உணராதே அதனைக் காவல்கொண்டு அதனுடனே ஒரு செறிவாயேற்றின் மருப்பினை அஞ்சும் நெஞ்சினையுடையார் செறிதற்கு ஆயர்மகளிருடைய தோள் எளியவாயிருக்குமோவென்றுங், கொலைத்தொழிலையுடைய ஏற்றினது கொம்பினிடையிலே தாம்விரும்பும் மகளிருடைய மார்பின் முலையிடையிலே வீழுமாறுபோல வீழில் எம்முடைய இனத்தில் ஆயர் தத்தம் மகளிர்க்கு முலைவிலை வேண்டாரென்றும், யாஞ் சுற்றத்தார் கூறும் முறைமையைப் பாடிக் குரவைக்கூத்தாடி அவ்விடத்துக் குற்றமில்லாத அழகையுடைய கடலிடத்தே பரந்துகிடக்கின்ற பழைய நிலத்தையாளும் உரிமையோடே பொருந்தின எம்முடைய பாண்டியன் இந்த அகன்ற இடத்தையுடைய உலகின்கண்ணே வாழ்வானாகவென்று அவ்விடத்துக் கெடாத சீரிய புகழையுடைய

தெய்வத்தைப் பரவுவேம் ; நீயும் அங்ஙனம் பாடுதற்குப் போதுவாயாகவென்றாள் ; எ - று.

* "மரபுநிலைதிரியா" என்னுஞ் சூத்திரத்து "விரவும்பொருளும் விரவும்" என்றதனாற் குரவையாடல் ஏறுகோடற்கைக்கிளையுள் விராய்வருமென்றுந் தெய்வத்தையன்றி அரசனை வாழ்த்திய வாழ்த்தும் விராய்வருமென்றுங் கூறலின் இங்ஙனங் கூறினர். இவ்விதி இவ்வாறே மேல்வருவனவற்றிற்குங்கொள்க.

இதனாற் தலைவிக்கு நினைத்தல் பிறந்தது.

இது †"குட்ட மெருத்தடி யுடைத்து மாகும்" என்பதனாற் குட்டம்பட்ட தரவும் 'புரிபுரிபு * * * வேறு' என இரண்டடி முடுகியலும் 'அரிப்ரிபறுப்பனசுற்றி' எனவும் 'உருவமாலைபோல' எனவும் முச்சீரான்வந்த சொற்சீரடிபெற்ற சொச்சகமும் ஓரடியான்வந்த அம்போதரங்கங்களும் 'பயிலிதழ்மலருண்கண்' எனச் சொற்சீரடிபெற்ற கொச்சகமும் வந்து கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்டு வந்த கொச்சகக்கலி. ‡"முச்சீர் முரற்கையு ணிறையவு நிற்கும்" என்பதனான் முச்சீரடியும் வந்தன. (௩)

௧0௪. மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
றொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத் தாய ரொருங்குதொக் கெல்லாரும்
வானுற வோங்கிய வயங்கொளிர் பனைக்கொடிப்
பானிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போற் றிறல்சான்ற காரியு
மிக்கொளிர் தாழ்சடை மேவரும் பிறைநுதன்
முக்கண்ணா னுருவேபோன் முரண்மிகு குராலு
மாகடல் கலக்குற மாகொன்ற மடங்காப்போர்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௪௫-ம் சூத்.
† ,, ,, செய்யுளியல், ௧௪௩-ம் சூத்.
‡ ,, ,, ,, ௭0-ம் ,,

வேல்வல்லா னிறனேபோல் வெருவந்த சேயு மாங்கப்
பொருவரும் பண்பி னவ்வையும் பிறவு
முருவப்பல் கொண்மூக் குழீஇயவை போலப்
புரிபு புரிபு புகுத்தனர் தொழூஉ;

அவ்வழி, முள்ளெயிற் றேஎ ரிவளைப் பெறுமிதோர்
வெள்ளேற் றெருத்தடங்கு வான்;

ஒள்ளிழை, வாருறு கூந்தற் றுயில்பெறும் வைமருப்பிற்
காரி கதனஞ்சான் கொள்பவ னீரரி
வெரூஉப்பிணை மானோக்கி னல்லாட் பெறூஉமிக்
குரூஉக்கட் கொலையேறு கொள்வான் வரிக்குழை
வேயுறழ் மென்றோட் டுயில்பெறும் வெந்துப்பிற்
சேஎய் சினனஞ்சான் சார்பவ னென்றுங்
கறைவனர் நல்லாரை யாயர் முறையினு
ணுண்மீன்வாய் சூழ்ந்த மதிபோன் மிடைமிசைப்
பேணி நிறுத்தா ரணி ;

அவ்வழிப், பறையெழூஉந் திசைப்பப் பல்லவ ரார்ப்பக்
குறையா மைந்தர் கோளெதி ரெடுத்த
நறைவலஞ் செயவிடா விறுத்தன வேறு; அவ்வேற்றின்,

மேனிலை மிகலிகலின் மிடைகழி பிழிபுமேற் சென்று
வேனுதி புரைவிறற் றிறனுதி மருப்பின் மாறஞ்சான்
பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானைக்
கோணுது குத்து மிளங்காரித் தோற்றங்காண்
பான்மதி சேர்ந்த வரவினைக் கோள்விடுக்கு
நீனிற வண்ணனும் போன்ம் ;

இரிபெழு பதிர்பதிர் பிகந்துடன் பலர்நீங்க
வரிபரி பிறுபிறுபு குடர்சோரக் குத்தித்தன்
கோடழியக் கொண்டானை யாட்டித் திரிபுழக்கும்
வாடில் வெகுளி யெழிலேறு கண்டை யிஃதொன்று
வெருவரு தூம மெடுப்ப வெகுண்டு
திரிதருங் கொல்களிறும் போன்ம்;

தாளெழு துணிபிணி யிசைதவிர் பின்றித் தலைச்சென்று
தோள்வலி துணிபிணி துறந்திறந் தெய்திமெய் சாய்ந்து
கோள்வழுக்கித்தன்முன்னர்வீழ்ந்தான்மேற்செல்லாது
மீளும் புகரேற்றுத் தோற்றங்காண் மண்டமருள்
வாளகப் பட்டானை யொவ்வா னெனப்பெயரு
மீளி மறவனும் போன்ம்;

ஆங்க, செறுத்தறுத் துழக்கி யேற்றெதிர் நிற்ப
மறுத்து மறுத்து மைந்தர் சாரத்
தடிகுறை யிறுபிறுபு தாயின கிடப்ப
விடியுற ழிசையி னியமெழுந் தார்ப்பப்
பாடேற்றுக் கொள்பவர் பாய்ந்துமே லூர்பவர்
கோட்டிடை நுழைபவர் கோட்சாற்று பவரொடு
புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவ ரட்ட
பொருகளம் போலுந் தொழூஉ;

தொழுவினுள், கொண்டவே றெல்லாம் புலம்புகத் தண்டாச்சீர்
வாங்கெழி னல்லாரு மைந்தரு மல்லலூ
ராங்க ணயர்வர் தழூஉ;

பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறிசெய்த மார்பு;

நெற்றிச் சிவலை நிறையழித்தா னீண்மார்பிற்
செற்றார்கண் சாயயான் சாரா தமைகல்லேன்
பெற்றத்தார் கவ்வை யெடுப்ப வதுபெரி
துற்றியா ளாயர் மகள்;

தொழிஇஇ, ஒருக்குநா மாடுங் குரவையு ணம்மை
யருக்கினன் போனேக்கி யல்லனோய் செய்தல்
குரூஉக்கட் கொலையேறு கொண்டேன்யா னென்னுந்
தருக்கன்றோ வாயர் மகன்;

நேரிழாய், கோளரி தாக நிறுத்த கொலையேற்றுக்
காரி கதனஞ்சான் பாய்ந்த பொதுவற்கே
யார்வுற் றெமர்கொடை நேர்ந்தா ரலமொடுத்த
வூராரை யுச்சி மிதித்து;
ஆங்குத்,
தொல்கதிர்த் திகிரியாற் பரவுது மொல்கா
வுருமுறழ் முரசிற் றென்னவற்
கொருமொழி கொள்கவிவ் வுலகுட னெனவே.

இது * "நாடகவழக்கினும்" என்னுஞ் சூத்திரத்துப் "பாடலுளமையாத" என்றதனுல் ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக்கூறி, இக்குரவையுள் அவனைப் பாடுகம் வாவென்றுட்கு, அவள் உடம்பாட்டினுட் தான் அலரச்சம் நீங்கினமையும் அவன் தன்னை வருத்தினமையுங் கூறிப் பாடிப், பின்னர்த் தோழி நமர் அவற்கு நின்னைக் கொடைநேர்ந்தாரெனக்கூறியது.

(இ - ள்.) மலிதிரை * * * தொழூஉ—எ-து, தன் நாட்டைக் கடலினுடைய மிக்க திரையேறிக் கைக்கொண்டுவிடுகையினுலே தனக்கு நாடு இடமுண்டாம்படியாக மனத்தின் இளைப்பின்றுய்ப் பகைவரைத் தன் வலியினுலே தாழ்க்கவேண்டி அவர்மேலே சென்று அவருடைய புலிப்பொறியையும் விற்பொறியையும் அவர் நாட்டினின்றும் போக்கி விளங்குகின்ற கயலை அவ்விடத்தே பொறித்த புகழையுடைய கெடாத தலைமையினையுடைய பாண்டியனுடைய பழைய புகழை நிலைபெறுத்தின குடியோடு ஒக்கத் தோன்றின பசுவினத்தில் ஆயரெல்லாருஞ் சேரத் திரண்டு விளங்குகின்ற வானிலேயுறும்படி ஓங்கிய ஒளிபெருகுகின்ற பனைச்கொடியினையுடைய பாலினது நிறத்தையுடைத்தாகிய நிறத்தினையுடையவனைப் போலே பழித்தலற்ற வெள்ளை ஏற்றையும் பொருகின்ற மாறுபாட்டினுலே ஏனையவற்றின் மேலான பொன்னுற்புனைந்த புகழையுடைத்தாகிய சக்கரப்படையையுடைய திருவாகிய மறுவையுடைத்தாகிய மார்பனைப்போலே அமைந்த கரிய ஏற்றையும் மிக்குவிளங்குகின்ற தாழ்ந்த சடையினையும் ஒருபாகத்திலே மேவுதல்வரும் பிறைபோன்ற நுதலினையுடையாளையுமுடைய மூன்றுகண்ணையுடையானுடைய நிறம்போலே மாறுபாடு மிக்க குராலேற்றையும் பெருமைய

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ௫௩-ம் சூத்.

யுடைய கடல் கலக்கமுறும்படி உள்ளே சென்று மாமரத்தைவெட்டின மீளாத போரையுடைய வேலை ஏந்திய முருகனது நிறம்போல அச்சம்வந்த சிவந்த ஏற்றையும் அவ் ஒப்புவருங் குணத்தினையுடைய வற்றையும் ஒப்பில்லாத பிறவற்றையும் வடிவையுடையவாகிய பல மேகங்கள் திரண்டவைபோல முழங்கும்படி விரும்பி விரும்பித் தொழுவிலே புகுதவிட்டார்; எ - று.

அவ்வழி * * * வான்—எ-து, அவ்விடத்து இந்த ஒப்பில்லாத வெள்ளிய ஏற்றின் கழுத்திலே கிடக்குமவன் கூரிய எயிற்றினையும் அழகினையுமுடைய இவளைக் கூடும்; எ-று.

ஒள்ளிழை * * * கொள்பவன்—எ-து, கூரிய கொம்பையுடைய கரிய ஏற்றினது கோபத்தை அஞ்சாது அதனைத் தழுவுமவன் இந்த ஒள்ளிய இழையினையுடையாளுடைய வாருதலுற்ற கூந்தலிலே துயிலுதலைப் பெறும்; எ - று.

ஏரரி * * * கொள்வான்—எ-து, குரால் நிறத்தவாகிய கண்ணினையுடைய கொலைத்தொழிலையுடைய ஏற்றைத் தழுவுமவன் வெருவுதலையுடைய பிணையாகிய மானோக்குப்போலும் நோக்கினையுடைய இரண்டாகியகண்களையுடைய இந்த நல்லாளைக் கூடும்; எ-று.

அரி ஆகுபெயர்.

வரிக்குழை * * * சார்பவன்—எ-து, வெய்ய வலியினையுடைய சிவந்த ஏற்றினது சினத்தை அஞ்சாஞய் அதனைத் தழுவுமவன் வரியினையுடைத்தாகிய குழையினையுடையாளுடைய மூங்கிலையொக்கும் மெல்லிய தோளிலே துயிலுதலைப்பெறும்; எ - று.

வரி அருப்புத்தொழில்.

என்றுங் * * * ரணி—எ-து, என்று நல்லாயர் தமக்குரிய முறைமையாலே சுற்றுவனராகிய நாளாகிய மீன்கள் தன்னிடத்தைச் சூழப்பட்ட மதிபோலே அவ்விடத்திலிட்ட பரண்களின்மேலே தத்தம் மகளிரைத் திரளாக ஒப்பித்து நிறுத்தினர்; எ - று.

மீனும் மதியும் ஆயத்திற்கும் மகளிர்க்கும் உவமை.

அவ்வழி * * * வேறு—எ-து, அவ்விடத்துப் புகை வலம்வர விடப்பட்டு நிறுத்தப்பட்டனவாகிய ஏறுகள் பறை மிக்கொலிக்கையினாலும் பலரும் ஆரவாரிக்கையினாலும் வலிகுறையாத ஆயர் கோடற்றொழிற்கு எதிரே ஏன்றன; எ - று.

அவ்வேற்றின் * * * போன்ம்—எ-து, அந்த ஏறுகளின் மேலே நிலைபெறும் மிகுதலையுடைத்தாகிய மாறுபாட்டினாலே மிடை மிசையினின்றும் இழிந்து அதனைவிட்டுச்சென்று வேலினது முனையையொக்கும் முனையுடைய கொம்பினது விறலாகிய திறத்தினையுடைய மாறுபாட்டிற்கு அஞ்சானாய்ப் பானிறம்போலும் வெள்ளிய ஏற்றினது கழுத்திலே பாய்ந்தானைப் பொருதே மேற்சென்று குத்தும் இளைய கரிய ஏற்றினது தோற்றரவு பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அது மறைத்த தன்மையை விடுவிக்கும் நீலநிறம்போலும் நிறத்தையுடையவனையும் ஒக்கும், அதனைப் பாராயென்றாள்; எ - று.

வண்ணன் மாயோன்.

இரிபெழு * * * போன்ம்—எ-து, பலரும் எழுந்திருந்து சென்று அதிர்ந்து அதிர்ந்து கெட்டு அவ்விடத்தைக் கடந்து சேர நீங்கும்படியாக எலும்பு முறிந்து குடர்களற்றுச் சுவிழும்படி குத்திவிட்ட பின்பு தன் கொம்பின் வலியழியத் தழுவினவனை அலைத்துச்கொண்டு திரிந்து துகைக்குங் குறையாத கோபத்தினையுடைய அழகினையுடைய ஏறு வெருவுதல் வருதற்குக் காரணமான மருந்தினாற் புகைக்க அதற்கு வெகுண்டு திரிதருங் கொல்கின்ற களிற்றையும் ஒக்கும், இஃதொன்றைப் பாராயென்றாள்; எ - று.

தாளெழு * * * போன்ம்—எ-து, தோள்வலியாலே துணிந்த ஏறுதழுவுதல் எக்காலமும் மனத்தைச் செலுத்துதலின் அம்மனம் பிணித்த முயற்சியாலே எழுந்து துணிந்த இசை தவிர்தலன்றி அதனிடத்தே சென்று மற்றுள்ளார் தழுவுமாற்றைக் கடந்து சேர்ந்து மெய்யைத் தழுவித் தான்கொள்ளும் நிலையைத்தப்பித் தன்முன்னே வீழ்ந்தவன்மேலே செல்லாமல் மீளுகின்ற நிறத்தையுடைய ஏற்றினது தோற்றரவு மிக்குச்செல்லும் போருட் தன்கையில் வாளோடே அகப்பட்டவனை எனக்கு ஒவ்வானென்று வெட்டாமல் மீளுங் கூற்றுவனையொத்த மறவனையும் ஒக்கும், இதனைப் பாராயென்றாள்; எ-று.

ஆங்க * * * தொழூஉ—எ-து, அங்ஙனங் கொம்பு மார்பிற் படுதலை மார்புகொடுத்து ஏற்றுக்கொள்பவரோடும் மேலே பாய்ந்து ஏறுபவரோடுங் கோட்டிடையிலே சென்று புகுவாரோடும் ஏறு கொள்ள வல்லேனென்று சாற்றுவாரோடும் ஏறுகள் பொருது பின்பு பொருவாரை அறுத்துச் செறுத்து எதிரேற்க அதனைப் பொ

ருமல் மைந்தர் விலக்குமவரை மறுத்துமறுத்துச் சென்று தழுவு கையினாலே என்புகள் முறிந்து முறிந்து தசைகளற்றுப் பரந்தன வாய்க் கிடக்க இடியோடே மாறுபடுகின்ற ஏற்றினது முழக்கோ டே வாச்சியங்கள் மிக்கு ஆரவாரிக்க அத்தொழூப் போரைவிரும்பி மேலேசென்ற துரியோதனுதிகள் படும்படி வரிந்து புனைந்த வலிய வில்லையுடைய தருமன்முதலியோர் கொன்ற பொருகின்ற களத் தையொக்கும்; எ - று.

தொழுவினுள் * * * தழூஉ—எ-து, அத்தொழுவிடத்துத் தழுவிக்கொண்ட ஏறுகளெல்லாம் மேயும் நிலத்தேபோக அமை யாத சீரினையும் நோக்கினார் கண்ணை வாங்கிக்கொள்ளும் அழகினை யுமுடைய ஆய்ச்சியரும் ஆயரும் வளப்பத்தையுடைய ஊரிடத்தே குரவையாடுவரெனத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறினாள்; எ-று.

பாடுகம் * * * மார்பு—எ-து, கூறிப் பொதுவனுடைய கொலைத்தொழிலையுடைய ஏற்றினுடைய கொம்புகள் குறியிட்டுவி ட்ட மார்பைப் பாடுவேமாக வாருங்கோளெனத் தலைவியையும் ஆய த்தையும் நோக்கிக் கூறினாள்; எ-று.

நெற்றிச் * * * மகள்—எ-து, அதுகேட்ட தலைவி நெற் றியிலே சிவந்த சுட்டியினையுடைய ஏற்றை விரவி நிறைதலைக் கெடு த்தவனுடைய நீண்ட மார்பிலே பகைத்து அலர்கூறுகின்ற மகளிர் நம்மை இகழ்ந்து பார்க்குங் கண்கள் இகழ்ந்துபாராதிருக்கும்படியாக யான் சாராமல் அமைந்திரேன், இனிப் பசுவையுடைய ஆய்ச்சியர் அலர்கூறுவதற்குப் பெரிதும் வருத்தமுறேன் யானென்றாள்; எ-று.

ஆயர்மகளென்று தன்னைப் பிறர்போற் கூறினாள்.

தொழிலீஇ—எ-து, தொழில்செய்கின்றவளே; எ - று.

ஒருக்குநா * * * மகன்—எ-து, ஆயர்மகன் ஆயத்தோடே நாம் ஆடுங் குரவைக்கூத்திலே நம்மை அருமைசெய்தான்போலே நோக்கி நமக்கு வருத்தத்தைத் தரும் நோயைச்செய்தல் நிறத்தையு டைய கண்ணையுடைய கொலையேற்றை யான் கொண்டேனென் னும் மனச்செருக்கன்றோ? அது வேறொன்றல்லவே என்றாள்; எ-று.

நேரிழாய் * * * மிதித்து—எ-து, அதுகேட்ட தோழி ஒத்த இழையினையுடையாய்! கொள்ளுதலரிதாக நஞ்சுற்றத்தார் நிறு த்தின கொலைத்தொழிலையுடைய ஏருசிய காரியினது கோபத்திற்கு

அஞ்சாதுய்த் தழுவின பொதுவனுக்கே எம்முடைய சுற்றத்தார் மகிழ்ச்சிநிறைதலுற்று அலரை மிகக் கூறிய ஊரிலுள்ளாரைத் தலையிலே மிதித்துக் கொடுத்தலைப்பொருந்தினர் இனி வருந்தாதேகொள்ளென்றாள்; எ - று.

எமரென்றாள் *"தாயத்தி னடையா" என்னுஞ் சூத்திரவிதியால். அவர் அலர் கூறிய அவற்கே கொடுத்தலின் அவர் உச்சியிலே மிதித்த தன்மைத்தென்றாள்.

ஆங்குத் * * * னெனவே—எ-து, கெடாத உருமேற்றை மாறுபடுகின்ற முரசினையுடைய அவ்விடத்திற் பாண்டியனுக்கு இவ்வுலகுசேர அவனுடைய ஒருமொழியைக் கேட்பதாகவென்று கூறிப் பழைதாகிய கதிரையுடைய சக்கரப்படையையுடையானை வாழ்த்தும் அதற்கு நீயும் வருகவென்றாள்; எ - று.

ஒருமொழி, ஆணை. தென்னவற்கென்னும் நான்காவது †"நாடகவழக்கினும்" என்னுஞ் சூத்திரத்திற் "பாடலுள் அமையாதனவும்" என்றதனால் இவ்வுலகம் நடப்பதாகவென்று வைத்துப் போந்த பொருளோடு முடியும்.

இதனாற் தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

‡"ஆயர் வேட்டுவர்" என்னுஞ் சூத்திரத்தில் ஆயரிலுங் கிழவருங் கிழத்தியரும் உளரென்றாராதலின் இவர்க்குங் களவொழுக்கம் நிகழுமென்பதாம். "நாடகவழக்கினும்" என்னுஞ் சூத்திரத்திற் பாடலுள் அமையாதனவாய்க் களவொழுக்கம் நிகழ்ந்து ஏறுதழுவி வரைவுடன்பட்டாராகக் கூறினர். மேலும் இங்ஙனங் களவுநிகழ்ந்து ஏறுதழுவி வரைகின்றதாகக் கூறும் பாட்டுக்களுக்கெல்லாம் இதுவே விதியாகக் கொள்க.

இது தரவும் ஐஞ்சீரடிப்பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடிப்பெற்ற கொச்சகமும் வழியசைபுணர்த்த சொற்சீரடியும் முடுகியலோடு தொடர்ந்த கொச்சக வெண்பாவும் நாற்சீரடி முடுகியலோடு தொடர்ந்து ஐஞ்சீரடியும் வந்த கொச்சகவெண்பாவிரண்டும் ஐஞ்சீரடியும் ஆசிரியத்தளையும் விரவி ஈறு வேறோர் சீரான் இற்ற கொச்சகவெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய வற்றிற் குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டிரண்டுங்

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௨எ-ம். சூத்.
† தொல்காப்பியம், „ அகத்திணையியல், ௫௩-ம் சூத்.
‡ „ „ „ ௨௪-ம் „

தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்றுவந்த கலிவெண்பாவின்வேறுபட்ட கொச்சகம். *"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு - மைஞ்சீ ரடியு முளவென மொழிப" என்பதனான் மூவகைப் பாவிற்கும் ஐஞ்சீரடிவருதல் பெற்றாம். (௬)

௧0௫.* அரைசுபடக் கடந்தட் டாற்றிற் றந்த
முரைசுகெழு முதுகுடி முரண்மிகு செல்வற்குச்
சீர்மிகு சிறப்பினோன் றொல்குடிக் குரித்தெனப்
பார்வளர் முத்தமொடு படுகடல் பயந்த
வார்கலி யுவகையா ரொருங்குடன் கூடித்
தீதின்று பொலிகெனத் தெய்வக் கடியயர்மார்
வீவில் குடிப்பி னிருங்குடி யாயருந்
தாவி லுள்ளமொடு துவன்றி யாய்புடன்
வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்குஞ் சுரிநெற்றிக் காரியு
மொருகுழையவன்மார்பிலொண்டார்போலொளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற் றணிபோல
விரும்பிண ரொருத்தி னேந்திமிற் குராலு
மணங்குடை வச்சிரத்தோ னாயிரங் கண்ணேய்க்குங்
கணங்கொள் பல்பொறிக் கடுஞ்சினப் புகரும்
வேல்வலானுடைத்தாழ்ந்த விளங்குவெண்டுகிலேய்ப்ப
வாலிது கிளர்ந்த வெண்காற் சேயுங்
கால முன்பிற் பிறவுஞ் சால
மடங்கலுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுந்
தொடர்ந்துசெல் லமையத்துத் துவன்றுயி ருணீஇய
வுடங்குகொட் பனபோற் புகுத்தனர் தொழூஉ;

அவ்வழிக்,

காரொதிர் கலியொலி கடியிடி யுருமி னியங்கறங்க
வூர்பெழு கிளர்புளர் புயர்மங்குலி னறைபொங்க

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௩௩ - ம் சூத்.

நேரிதழ் நிரைநிரை நெறிவெறிக் கோதைய ரணிநிற்பச்
சீர்கெழுசிலைநிலைச் செயிரிகன்மிகுதியிற் சினப்பொதுவர்
தூர்பெழு துதைபுதை துகள்விசும் புறவெய்த
வார்புடன் பாய்ந்தா ரகத்து;

மருப்பிற் கொண்டு மார்புறத் தழீஇயு
மெருத்திடை யடங்கியு மிமிலிறப் புல்லியுந்
தோளிடைப் புகுதந்துந் துதைந்துபா டேற்று
நிரைபுமேற் சென்றுரை நீண்மருப் புறச்சாடிக்
கொளவிடங் கொளவிடா நிறுத்தன வேறு ;

கொள்வாரைக் கொள்வாரைக் கோட்டுவாய்ச் சாக்குத்
கொள்வார்ப் பெறூஅக் குரூஉச்சேகில் காணிகா [திக்
செயிரிற் குறைநாளாற் பின்சென்று சாடி
யுயிருண்ணுங் கூற்றமும் போன்ம்;

பாடேற் றவரைப் படக்குத்திச் செங்காரிக்
கோடெழுந் தாடுங் கணமணி காணிகா
தகைசா லவிழ்பத நோக்கி நறவின்
முகைசூழுந் தும்பியும் போன்ம்;

இடைப்பாய்ந் தெருத்தத்துக் கொண்டானே டெய்தி
மிடைப்பாயும் வெள்ளேறு கண்டைகா
வாள்பொரு வானத் தரவின்வாய்க் கோட்பட்டுப்
போதரும் பான்மதியும் போன்ம்;

ஆங்க, ஏறும் பொதுவரு மாறுற்று மாறு
திருபெரு வேந்தரு மிகலிக் கண்ணுற்ற
பொருகளம் போலுந் தொழூஉ;

வெல்புகழுயர்நிலைத்தொல்லியற்றுதைபுதைத்துளங்கிமி
னல்லேறு கொண்ட பொதுவன் முகனோக்கிப்
பாடில வாயமகள் கண்;

நறுநுதா லென்கொலோங் கூந்த லுளரச்
சிறுமுல்லை நாறிய தற்குக் குறுமறுகு

பொல்லா துடன்றெமர் செய்தா ரவன்கொண்ட
கொல்லேறு போலுங் கதம்;

நெட்டிருங் கூந்தலாய் கண்டை யிஃதோர்சொல்;
கோட்டினத் தாயர் மகனொடியாம் பட்டதற்
கெங்க ணைமரோ பொறுப்பர் பொருதார்
தங்கண் பொடிவ தெவன்;

ஒண்ணுதால், இன்ன வுவகை பிறிதியாதி யாயென்னைக்
கண்ணுடைக் கோல ளலைத்ததற் கென்னை
மலரணி கண்ணிப் பொதுவனோ டெண்ணி
யலர்செய்து விட்டதிவ் வூர்;

ஒன்றிப் புகரினத் தாயமகற் கொள்ளிழா
யின்றெவ னென்னை யெமர்கொடுப்ப தன்றவன்
மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக் கோட்டிடைப்
புக்கக்காற் புக்கதென் னெஞ்சு;

என, பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
வாடுகொ ணேமியாற் பரவுது நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி
யமைவர லருவி யார்க்கு
மிமையத் தும்பரும் விளங்குக வெனவே.

இஃது ஏறுதழுவியவாற்றைத் தோழி தலைவிக்குக் காட்டிக் கூறி, அவள் ஏறுதழுவிய தலைவனை விருப்பொடு நோக்கியவற்றைத் தன்னுள்ளே கூறி, முன்னர்க் களவின்கட் தமர் கோபித்ததனையும் அயலார் பொருதிருந்ததன்மையினையுந் தலைவிக்குக் கூற, அவளும் அவர் அலர்கூறியது நன்றென்று கூறி, இன்றே என் நெஞ்சு கலந்துவிட்டது இனி அவர் கொடுப்பதாகக் கூறிய நாளிற் செய்வதென்னென மகிழ்ந்து கூற, அது கேட்ட தோழி யாம் அங்ஙனங் கூடி இனிதிருக்குமாறு காக்கின்ற பாண்டியன் நீடுவாழுமாறு தெய்வத்தைப் பரவுகம் வாவெனக் கூறியது.

(இ - ள்.) அளைசுபடக் * * * தொழூஉ—எ-து, அரசு களம்படும்படியாக வென்று கொன்று நெறியாலே கொண்டுவந்த தலை

மைமிகுகின்ற சிறப்புக்களையுடையோனுடைய பழைதாகிய குடிக்குரித்தென்றுகூறிய, பாண்டிமண்டலம் பயந்த விளைவுகளும் ஒலிக்குங் கடலில் விளைந்த முத்தத்தோடே மற்றும் பயந்த பொருள்களும் மூன்று முரசமுங் கெழுமும் முதிய குடியிற்பிறந்த மாறுபாடு மிகுகின்ற அச்செல்வனுக்குத் தீதின்றிப் பொலிவனவாகவென்று உட்கொண்டு, தெய்வத்திற்குச் சிறப்புக்களைச் செய்தற்கு அவனுடைய கேடில்லாத குடியின்பின்பு தோன்றிய பெரியகுடியிற் பிறந்த ஆயரும், ஒருங்குநிறைந்த செருக்கினையுடைய உவகையராய்ச் சேரக்கூடி, ஏறுதழுவுங்காற் பிறர்க்குத் துன்பம் நிகழுமென்னும் வருத்தமில்லாத உள்ளத்தோடே நிறைந்து ஏறுகளை ஆராய்ந்து, வள்ளிய உருண்ட நேமிப்படையவன் ஊதிய சங்குபோலத் தெள்ளிதாக விளங்குஞ் சுட்டியையுடைத்தாகிய நெற்றியையுடைய கரிய ஏற்றையும், நம்பிமூத்தபிரானுடைய திருமார்பில் ஒள்ளிய சிவந்த மாலைபோல ஒளிமிகும்படியாக ஒப்பு மிகநீண்டு பொருந்திய சிவந்த மறுவினையுடைய வெள்ளிய ஏற்றையும், பெரிய பெயரையுடைய கணிச்சிப்படையினையுடையவனுடைய நீலமணிபோலுந் திருமிடற்றில் அழகுபோலக் கரிய சர்ச்சரையையுடைய கழுத்தினையும் ஏந்தின குட்டேற்றினையுமுடைய குரால் நிறத்தினையுடைய ஏற்றையும், வருத்தமுடைய வச்சிரப்படையையுடையோனுடைய ஆயிரங் கண்களையொக்குந் திரட்சிகொண்ட பலவாகிய புள்ளிகளையுங் கடிய சினத்தையுமுடைய புகர்நிறத்தையுடைய ஏற்றையும், முருகனுடைய உடையாய்த் தாழ்ந்த விளங்குகின்ற வெள்ளிய துகிலையொப்ப நன்றாய் உயர்ந்த வெள்ளிய கால்களையுடைய சிவந்த ஏற்றையுங், காலனது வலிபோலும் வலியையுடைய பிற ஏறுகளையுஞ், சால நிறைகின்ற பல்லுயிர்களை உண்ணவேண்டி ஊழித்தீயுங் கணிச்சியுங் காலனுங் கூற்றுவனும் அவ்வுயிர்களை விடாமற்செல்கின்ற ஊழிமுடிவாகிய காலத்தே அவை சேரச் சுழன்று திரியுமாறுபோலச் சுழன்று திரியும்படி தொழுவிடத்தே சேரப் புகுதவிட்டார்; எ - று.

பார்பயந்தன கடல்பயந்தனவென இரண்டிற்கும் பயந்தன என்னுந் தொழிற்பெயரைக் கூட்டுக. இனிப் பார்நிலத்தில் வளர்ந்த முத்தென்றுமாம். உடன்புகுத்தனரென்க. முருகன் தனக்கு உரித்தல்லாத வெண்டுகில் உடுத்தாற்போலக் கால் வெளுத்த எருது. முன் இறைவன் கையதாய் ஊழிமுடிவின்கண் அவன் ஏவலால் உயிர்த்திறமேற் றிரியுங் கணிச்சி. காலன் கூற்றுவனேவலாளன்.

அவ்வழிக் * * * ரகத்து—எ-து, அங்ஙனம் அவர் புகுத விட்ட இடத்துக் கார்காலத்துத் தம்மில் எதிர்ந்த கலிப்பினையுடைய உருமினது கடிய இடியொலிபோல வாச்சியங்கள் ஒலியாநிற்கப் பரந்து உயர்ந்து எழுகின்ற அசைதலையுடைய மேகம்போலத் திசைகளிலே புகைமூச்செழாநிற்கப், புறவிதழ் ஒடிந்த மணத்தையுடைய ஒத்தவிதழாற் கட்டின மாலையையுடைய மகளிர் நிரைநிரையாக அணியாநிற்கக், குற்றத்தைச் செய்த மாறுபாட்டின் மிகுதியாலே தலைமை பொருந்தின சிலைக்கின்ற நிலைமையினையுடைய சினத்தையுடைய பொதுவர் எழுகின்ற நெருங்கின கண்கள் மறைத்தற்குக் காரணமான துகளாலே விசும்பு தூர்ந்துபோம்படி அத்துகள் சென்று சேரும்படியாக ஆர்த்துத் தொழுவினுள்ளே சேரப் பாய்ந்தார்; எ-று.

மருப்பிற் * * * போன்ம்—எ-து, அங்ஙனம் பாய்ந்து கொம்பிடத்தே பிடித்துக்கொண்டும் மார்பிலே உறும்படி தழுவிக் கொண்டுங் கழுத்திடத்திலே அடங்கிக்கிடந்துங் குட்டேறு முறியும்படி தழுவியுந் தோளுக்குநடுவே கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும் நெருங்கிக் கொம்புகள் தம்மேலேபடுதலை ஏற்றுக்கொண்டும் நிரைத்துத் தம்மேலே சென்ற ஆயரைப் பின்னர்க் கீழேவீழ்த்து நீண்ட மருப்புத் தைக்கும்படி குத்தி அவர்கள் தழுவுகின்ற கழுத்திடத்தைத் தழுவக்கொடாதே ஏறுகள் அவரை நீக்கி நிறுத்தின; அங்ஙனம் நிறுத்தினபின்புஞ் சென்று தழுவுவாரைத் தழுவுவாரைக் கோட்டிடத்தே சாம்படி குத்திப் பின்பு சென்று தழுவுவாரைப் பெருமல் நின்ற நிறத்தையுடைய சிவந்த ஏறு உயிர்குறைகின்றநாளிடத்தே அவர்பின்னேசென்று குற்றத்தைச்செய்து துகைத்து உயிரையுண்ணுங் கூற்றுவனையும்போலும், இதனைப்பாராயென்றாள்; எ - று.

பாடேற் * * * போன்ம்—எ-து, சிவந்த கரிய ஏற்றினுடைய கொம்புகள் படுதலை மார்பிலே ஏற்றவர்களைக் கொம்புகளாலே படும்படி குத்தி மேனோக்குதலாலே வீழ்ந்த குருதியால் நனைந்து அசையும் பலவாகத் திரண்ட திரட்சியையுடைய சிறியமணிகள் ஒளியமைந்த நறும்பூவினது முகையவிழுஞ் செவ்வியையநோக்கி அதனைச் சூழ்ந்து திரியுந் தும்பியையும்போலும், அதனைப்பாராயென்றாள்; எ-று.

"நறுவிதழ் கண்டன்ன மெல்விரற் கேற்ப" என உவமைகூறலின் நறும்பூவை ஈண்டு மணிக்கு உவமைகூறவே சிறிய மணிகள் கோத்துக்கட்டினமையுங் கோடெழுந்தென்றதனால் அக்கோடு எழுந்தகாலத்து வீழ்ந்த குருதியால் அவை சிவந்தமையும் பெற்றாம்.

இடைப்பாய்ந் * * * போன்ம்—எ-து, நடுவே பாய்ந்தெய்திக் கழுத்திடத்தே தழுவிக்கொண்டு கிடந்தவனோடே பரணின்மேலே தாவிப்பாயும் வெள்ளிய ஏறு பாம்பின்வாயாற் சிறிதிடம் விழுங்கப்பட்ட, பாம்புடனே ஒளியைத்தருகின்ற விசும்பிலே போதலைச்செய்கின்ற, பால்போலும் மதியையும்போலும்; இதனைக்காணுயென்றாள்; எ-று.

இகா முன்னிலையசை. அது காவெனத் திரிந்தது.

ஆங்க * * * தொழூஉ—எ-து, அங்ஙனே ஏறுகளும் இடையருந் தம்மின் மாறுபடுகையினாலே அத்தொழு இருவராகிய பெரிய வேந்தர் மாறுபட்டு எதிர்ப்பட்ட போர்மாறாத பொருகளத்தையொக்கும் என்றாள்; எ - று.

இத்துணையுந் தோழி தலைவிக்குக்காட்டிக்கூறியது.

வெல்புக * * * கண்—எ-து, வெல்கின்ற புகழ் உயர்கின்ற நிலைமையையுடைய, பழைதாகியகுலத்தியல்பினையுடைய, நெருங்கின கழுத்தையெல்லாம் மறைத்தலையுடைய அசைகின்ற குட்டேற்றினையுடைய நல்ல ஏற்றைத்தழுவின, பொதுவன்முகத்தை நோக்கி ஆயச்சாதியிற்பிறந்த மகளுடைய கண் இமைத்தலையிலவாயிருந்தன; எ-று.

இது தோழி தன் நெஞ்சோடே அவள் விரும்பக் கூறியது.

நறுநுதா * * * கதம்—எ-து, நறிய நுதலினையுடையாய்! ஐவகைப்பட்ட கூந்தலை ஆற்ற அது வெண்ணெயின் நாற்றம் நீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம் மேவி மிகவுநாறியதற்கு எம்முடைய சுற்றத்தார் பொருந்தாதே அண்ணிதாக மனஞ்சுழன்று மாறுபட்டு அவன் தழுவின கொல்லுகின்ற ஏறுபோலுங் கோபத்தினைச்செய்தார், அன்று அவர் இங்ஙனங் கோபித்தது என்னபயனையுடைத்தாயிற்றென்றாள்; எ - று.

இது தலைவியைநோக்கிக் கூறியது.

நெட்டிருங் * * * தெவன்—எ-து, நெடிய கரிய கூந்தலையுடையாய்! இன்னும் யான்கூறுகின்ற ஈதொரு சொல்லையும் நெஞ்சால் ஆராய்ந்துபாராய், கொம்பையுடையவாகிய எருமையினத்தையுடைய ஆயர்மகனோடே யாங்கூடியதற்கு எம்முடைய சுற்றத்தாரோ இன்னும் பொறுப்பர், அதுபொறாத அயலார்தம்முடைய கண்கள் எங்கண்களை நோக்கித் தீய்ந்துபோயது என்னபயனையுடைத்தென்றாள்; எ-று.

ஒண்ணுதால் * * * வூர்—எ-து, அதுகேட்ட தலைவி ஒள்ளிய நுதலினையுடையாய்! ஆய் தன்கண்களுடையவாகிய கோலையுடையளாய் என்னைவருத்தியதற்கு இவ்வூர் என்னை மலர் அணிந்த கண்ணியையுடைய பொதுவனோடே கூட்டமென்றெண்ணி அலரையுண்டாக்கிவிட்டது, இத்தன்மைத்தாகிய உவகை நமக்கு வேறியாதுதானென மகிழ்ந்துகூறினாள்; எ - று.

அலைக்குங்கோலின் காரியத்தைக் கண்கள் செய்தமைபற்றிக் கண்களுடையவாகிய கோலென்றார்.

ஒன்றிப் * * * னெஞ்சு—எ-து, அங்ஙனங் கூறியபின்னரும் ஒள்ளிய இழையினையுடையாய்! தன்மேல் மிக்குச்சென்ற சிவந்த கரிய ஏற்றினுடைய கோட்டிடையிலே இற்றைநாள் இவன்செல்ல என்னெஞ்சும் உடன்சென்றது; இனி நஞ்சுற்றத்தாரெல்லாரும் பொருந்திப் புகரையுடைய பசுத்திரளையுடைய ஆயச்சாதியிற் பிறந்த மகனுக்கு என்னைக் கொடுப்பதாக அறுதியிட்ட அற்றைநாளிற் கொடுக்கின்றது என்னபயனையுடைத்தென்று தலைவி மகிழ்ந்துகூறினாள்; எ - று.

என, பாடிமிழ் * * * வெனவே—எ-து, அதுகேட்ட தோழி யாம் இல்லறம் நிகழ்த்தி இனிதிருக்குமாறு காத்தற்குப் பிறநாடுகளைக்கொண்டு இனிய ஓசையையுடைத்தாகிய முரசினையுடைய பாண்டியன் அமைந்துவருதலையுடைய அருவி ஆரவாரிக்கும் இமயத்திற்கு வடதிசையிலேயும் மன்னி விளங்குகவென்று உட்கொண்டு முறிதலையுடைத்தாய முழங்குகின்ற கடலிடத்துப் பாம்பணையிலே பள்ளிகொண்ட வெற்றிகொண்ட சக்கரத்தினையுடையோனை வாழ்த்துவேமென்றாள்; எ - று.

இதனாற் தலைவிக்குப் புணர்வாகிய உவகைபிறந்தது.

இது தரவுந் தனிச்சொல்லும் ஐஞ்சீரடி பலவும் விராய் முடிகுவண்ணம் அடியிறந்தோடிய கொச்சகவெண்பாவுங் கொச்சகமும் இரண்டு நெடுவெண்பாட்டும் *"வெண்பாட் டீற்றடி முச்சீர்த்தாகும்" என்றதனான் இடையீற்று முச்சீரடிவந்த நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரடி பெற்ற குறுவெண்பாட்டும் ஐஞ்சீரடி முடுகியலோடு தொடர்ந்த கொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டும் ஓரடியானேன்றுங் குறுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் இரண்டு நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகம். (௫)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், ௭௨-ம் சூத்.

௧0௬. கழுவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்
ணிமிழிசை மண்டை யுறியொடு தூக்கி
யொழுகிய கொன்றைத் தீங்குழன் முரற்சியர்
வழூஉச்சொற் கோவலர் தத்த மினநிரை
பொழுதொடு தோன்றிய கார்நனை வியன்புலத்தர் ;

அவ்வழி, நீறெடுப்பவை நிலஞ்சாடுபவை
மாறேற்றுச் சிலைப்பவை மண்டிப்பாய் பவையாய்த்
துளங்கிமி னல்லேற் றினம்பல களம்புகு
மள்ளர் வனப்பொத் தன;

தாக்குபு தம்முட் பெயர்த்தொற்றி யெவ்வாயும்
வைவாய் மருப்பினுன் மாறுது குத்தலின்
மெய்வார் குருதிய வேறெல்லாம் பெய்காலைக்
கொண்ட னிரையொத் தன;

அவ்வேற்றை, பிரிவுகொண் டிடைப்போக்கி யினத்தோ
யிருதிறனு நீக்கும் பொதுவ [டு புனத்தேற்றி
ருருகெழு மாநில மியற்றுவான்
விரிதிரை நீக்குவான் வியன்குறிப் பொத்தனர் ;

அவரைக், கழல வுழக்கி யெதிர்சென்று சாடி
யழல்வாய் மருப்பினுற் குத்தி யுழலை
மரத்தைப்போற் றொட்டன வேறு;

தொட்டதம், புண்வார் குருதியாற் கைபிசைந்து மெய்
தங்கார் பொதுவர் கடலுட் பரதவ [திமிரித்
ரம்பியூர்ந் தாங்கூர்ந்தா ரேறு;

ஏறுதங், கோலஞ்செய் மருப்பினுற் றேண்டிய வரிக்கு
ஞாலக்கொண் டெழூஉம் பருந்தின் வாய்வழீஇ [டர்
யாலுங் கடம்பு மணிமார் விலங்கிட்ட
மாலைபோற் றூங்குஞ் சினை ;

ஆங்குத், தம்புல வேறு பரத்தர வுய்த்தத
மன்புறு காதலர் கைபிணைந் தாய்ச்சிய
ரின்புற் றயர்வர் தழூஉ;

முயங்கிப் பொதிவே முயங்கிப் பொதிவே
முலைவேதி னேற்றி முயங்கிப் பொதிவேங்
கொலையேறு சாடிய புண்ணையெங் கேளே;

பல்லூழ் தயிர்கடையத் தாஅய புள்ளிமேற்
கொல்லேறு கொண்டான் குருதி மயக்குறப்
புல்லலெங் தோளிற் கணியோவெங் கேளே;

ஆங்கு, போரேற் றருந்தலை யஞ்சலு மாய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலு மிவ்விரண்டு
மோராங்குச் சேற லிலவோவெங் கேளே;

கொல்லேறு கொண்டா னிவள்கேள்வ னென்றூரார்
சொல்லுஞ்சொற் கேளா வளைமாறி யாம்வருஞ்
செல்வமெங் கேள்வன் றருமோவெங் கேளே;

ஆங்க,

அருந்தலை யேற்றொடு காதலர்ப் பேணிச்
சுரும்பிமிர் கானநாம் பாடினம் பரவுது
மேற்றவர் புலங்கெடத் திறைகொண்டு
மாற்றாரைக் கடக்கவெம் மறங்கெழு கோவே.

இது தத்தம் இனந் தத்தம்புலத்துப் பிரிப்பான்புக்கவர் ஏறு கொண்டவாறுகண்டு ஆய்ச்சியர் தங்காதன்மிகுதியாற் தங்காதலரைக் கைபிணைந்துகுரவையாடித் தென்னன்வாழ்கெனக் கானம்பாடியது.

(இ - ள்.) கழுவொடு * * * வியன்புலத்தர்—எ-து, பால் பற்றச் சீவுதலைச்செய்த கழுவோடே கறவைக்கலங்கள் வைத்த உறியோடே சோற்பையிடத்தே சூட்டுக்கோல்களையும் இட்டுச் சுருக்கிய பைகளையுந் தூக்கி நீளவளர்ந்த கொன்றைக்காயைத் திறந்து சமைத்த இனிய குழலில் உண்டான ஓசையராய் வழுவின சொல்லையுடைய கோவலர் தம்முடைய தம்முடைய இனமாகிய பசுக்கள் கார்காலத்தோடே தோன்றின அப்பொழுது வரும் மழையாலே நனைந்த அகற்சியையுடைய நிலத்திடத்தராயினர்; எ - று.

பழிசை பாடமாயின் பழித்தலையுடையதென்க. பழித்தலையுடையது பழிசை. முரற்சியர் என்னும் எச்சம் உடையவென்னும் வி

னைக்குறிப்போடு முடிந்தது. கழுவாவது கறத்தற்கரிய பசுக்களைக் கற த்தற்கு இரண்டு தலையுஞ் சீவி மாலையாகக்கட்டிக் கழுத்தில் இடுவது.

அவ்வழி * * * தன—எ-து, அவ்விடத்துத் துளங்குகின்ற குட்டேற்றினையுடைய நல்ல ஏற்றினங்கள் பலவும் முன்பு காலாலே வெட்டி நீற்றை எடுப்புமவை இப்பொழுது மழைபெய்தமையிற் கோட்டுமண் கொள்ளுமவை ஒன்றோடொன்று மாறுபடுதலை மேற் கொண்டு முழங்குமவை மிக்குப் பாயுமவையாய்ப் போர்க்களத்தே செல்லும் வீரர் அழகையொத்தன; எ - று.

தாக்குபு * * * தன—எ-து, ஒன்றோடொன்று தாக்கி மீண்டு அடிப்பறித்துச்சேர்ந்து கூரிய இடத்தையுடைய கொம்பாலே மாறுமல் எவ்விடத்துங் குத்துகையினாலே மெய்யினின்றும் வடி கின்ற குருதியையுடைய ஏறெல்லாம் நாட்காலைப் பெய்யும் மேகநிரை யையொத்தன; எ - று.

நாட்காலைமேகஞ் சிவந்திருத்தலின் உவமையாயிற்று. பெய் யும் மேகம் அதற்கு அடைகூறிற்று.

அவ்வேற்றை * * * பொத்தனர்—எ-து, அவ்வேறுகள் போர்செய்யாமற் பிரிதலைத் தாம் உட்கொண்டு அவை இரண்டுகூறாக நீங்கும்படி நடுவே சில ஏறுகளைச்செலுத்தி விலக்கிப் பின்னர்ப் பசுத் திரளோடே மேயும் புலத்திலே ஏற்றித் தத்தம் இனங்களைப்பிரிக்கும் இடையர் பழைய வடிவுகளெல்லாங் கெழுமும்படி பெரிய நிலத்தைப் படைத்தற்கு அந்நிலத்தை மறைத்துக்கிடந்த அகற்சியையுடைய கடலைப் போக்குங் கருத்தினையுடைய நான்முகனையொத்தார்; எ-று.

ஏற்றையென்றது ஏறிற்கு ஐகாரவீற்றதோர்பெயர், *" ஆற்ற லொடு புணர்ந்த வாண்பாற் கெல்லா - மேற்றைக் கிளவி யுரித்தென மொழிப" என்றலின்.

அவரைக் * * * வேறு—எ-து, அங்ஙனம் நீங்குகின்றவர் களை அவ்வேறுகள் ஓடும்படி மிதித்து ஓடாமல் நின்றவர்களை எதிர் சென்று அழலுகின்ற இடத்தையுடைய கொம்பாலே குத்திச் சாடி உழலைகோத்த மரத்தைப்போலத் துளைத்தன; எ - று.

தொட்டதம் * * * சோறு—எ-து, பொதுவர் அங்ஙனந் துளைத்த தம்முடைய புண்களினின்றுஞ் சோருகின்ற குருதி வழுக்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், சஃ - ம் சூ.

குதலாலே மணலை அள்ளிக் கையைப் பிசைந்து உடம்புந் திமிர்ந்து தாழ்க்கநில்லாராய்க் கடலுக்குள்ளேபரதவர் சிறியதெப்பத்தை ஏறி னாற்போல ஏற்றைத் தழுவினர்; எ - று.

ஏறுதங் * * * சினை—எ-து, அவ்வேறுகள் தம்முடைய அழகுசெய்கின்ற கொம்பாலே தோண்டிய வரிகளையுடைய குடர்கள் நான்று விழும்படி எடுத்துக்கொண்டு உயர்ந்துபோம் பருந்தின் வாயி னின்றுந் தப்பி ஆலமரத்தையுங் கடம்பமரத்தையும் ஆண்டு உறை யுந் தெய்வங்கட்கு மகிழ்ச்சியுண்டாகவேண்டி அணிதலைச்செய்தற் கு விலங்க இட்டுவைத்த மாலைகள்போலே கொம்புகடோறுந் தூங் காநிற்கும்; எ - று.

ஆங்குத் * * * தழூஉ—எ-து, அப்பொழுது ஆய்ச்சியர் தாம் மேயும் புலத்திலே ஏறு பரத்தலைச்செய்யும்படி செலுத்தின தம்முடைய அன்புமிக்க காதலருடைய கையைக் கோத்து இன் பமுற்றுக் குரவையாடுவர்; எ-று.

முயங்கிப் * * * கேளே—எ-து, எம்முடைய தோழீ! கொலைத்தொழிலையுடைய ஏறுகள் சாடின புண்களைத் தழுவிக் கொண்டு பொதிந்துவிடக் கடவேம், எங்ஙனந் தழுவுவதென்று கேட் பராயின் முலையின் வெம்மையாலே ஆறும்படி ஒற்றித் தழுவிக் கொண்டு பொதிந்துவிடக் கடவேம்; எ - று.

பல்லூழ் * * * கேளே—எ-து, எம்முடையதோழீ! பலமு றைமையாகத் தயிராக் கடைகையினாலே பாய்ந்த புள்ளிகளின்மே லே கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினவனுடைய குருதி மயக்கமு றும்படி தழுவுதல் எம்முடைய தோளிற்கு அழகுமாத்திரையோ? அதிலுஞ்சிறந்ததொன்றன்றோ? எ - று.

ஆங்கு * * * கேளே—எ-து, எம்முடைய தோழீ! ஆயர் பொருகின்ற ஏற்றினது சேருதற்கரிய தலை அஞ்சுதலும் ஆய்ச்சியர் ஏறுதழுவாதவருடைய காரிகைத்தோளை விரும்புதலுமாகிய இவ்வி ரண்டு நிலையும் இக்குடிப்பிறந்தவர்களுக்கு ஒன்றாகச் செல்லுதல் ஈண்டு இல்லையோ? எ - று.

காரிகைத்தோளென்றது இகழ்ச்சி,வடுப்படாததோளாதலின்.

கொல்லேறு * * * கேளே—எ-து, எம்முடையதோழீ! இவருடைய கணவன் கொல்லுகின்ற ஏற்றைத் தழுவினனென்று

ஊர் புகழ்ந்துசொல்லுகின்ற அச்சொல்லைக் கேட்டு மோவாவிற்று யாம் வருஞ் செல்வத்தை எங்கணவன் தருமோ? எ - று.

ஓகாரம் தெரிநிலை. என்றது அவன்புறத்துப்போய்ப் புகழ் கேட்க என்னைவிடானென அவன் தன்மேலுள்ள விருப்பங் கூறிற்று. இவை குரவைப்பாட்டு.

ஆங்க * * * சோவே—எ-து, அங்ஙனே பாடாநின்ற ஆய்ச்சியர் அரிய தலைமையையுடைய ஏற்றையும் நங்காதலனையும் பாது காத்துச் சுரும்பினம் ஒலிக்கின்ற கானத்தை நாம் பாடினமாய்த் திருமாலைப் பரவுவேம், அப்பயனாலே எம்முடைய மறம்பொருந்திய பாண்டியன் பகைவர்நிலமென்னும் பெயர்கெட்டுத் தன் நிலமென்னும் பெயர்பெறும்படி அவர் நாட்டைத் திறைகொண்டு பகைவரை வெல்வானாக என்றார்; எ - று.

இந்நிலப்பண்பிருந்தவாறென்று கண்டோர்கூற்றாகக்கொள்க.

இது கண்டார்க்குப் புதுமையாகிய மருட்கை பிறந்தது.

இது முன் ஓர்கொச்சகமுந் தனிச்சொல்லும் முட்டடியின்றிக் குறைவுசீர்த்தாகிய சொற்சீரடிபெற்ற கொச்சகவெண்பாவும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ் சொற்சீரடிவந்த கொச்சகமும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டிரண்டும் ஐஞ்சீரடுக்கிய நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டும் நான்கு தாழிசையுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற கொச்சகம். (சு)

கOஎ. எல்லா விஃதொன்று கூறுங் குறும்பிவர்
புல்லினத் தார்க்குங் குடஞ்சுட் டவர்க்குமெங்
கொல்லேறு கோடல் குறையெனக் கோவினத்தார்
பல்லேறு பெய்தார் தொழூஉ;

தொழுவத்துச்

சில்லைச் செவிமறைக் கொண்டவன் சென்னிக் குவிமுல்லைக்
கோட்டாங்காழ் கோட்டி னெடுத்துக்கொண் டாட்டிய
வேழை யிரும்புகர் பொங்கவப் பூவந்தென்
கூழையுள் வீழ்ந்தன்று மண்;

அதனைக், கெடுத்தது பெற்றார்போற் கொண்டியான் மு
கேட்டன னென்பவோ யாய்; [டித்தது

இஃதொன்று கூறு;

கேட்டா லெவன்செய்ய வேண்டுமோ மற்றிகா
வவன்கண்ணி யன்றோ வது;

பெய்போ தறியாத்தன் கூழையு ளேதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென் றியாய்கேட்பிற்
செய்வதி லாகுமோ மற்று;

எல்லாத் தவறு மறும்;

ஓஒ அஃதறு மாறு;

ஆயர் மகனாயி னாயமக ணீயாயி
னின்வெய்ய னாயி னவன்வெய்யை நீயாயி
னன்னைநோ தக்கதோ வில்லைம னின்னெஞ்ச
மென்னைநெஞ் சாகப் பெறின்;

அன்னையோ,

ஆயர் மகனையுங் காதலை கைம்மிக
ஞாயையு மஞ்சுதி யாயி னரிதரோ
நீயுற்ற நோய்க்கு மருந்து;

மருந்தின்றி யானுற்ற துயராயி னெல்லா
வருந்துவெ னல்லனோ யான்;

வருந்தாதி,

மண்ணிமா சற்றநின் கூழையு ளேறவன்
கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
பொய்யில் பொதுவற் கொடைசூழ்ந்தார் தந்தையோ
டையன்மா ரெல்லா மொருங்கு.

இது தலைவி தோழிக்கு அறத்தொடுநிற்பத் தமர் வரைவுடன் பட்டமை அவட்கு அவள் சொல்லியது.

(இ - ள்.) எல்லா * * * தொழூஉ—எ-து, ஏடீ ! குறும்பிடத்தே பரந்திருக்கின்ற ஆட்டிடையர்க்கும் இப்பசு இன்னதனைக்குடம் பால் போதுமென்று சுட்டுதலையுடைய பசு இடையர்க்குமாகக் கோவினத்தையுடைய நஞ்சுற்றத்தார் எம்முடைய கொல்லுகின்ற ஏற்றைத் தழுவுதலேகாரியமென்றுதொழுவிலேஏறுகளைப்புகுதவிட்டார்; எ-று.

தொழுவத்து * * * மன்—எ-து, அத்தொழுவிடத்துச் சிலுவைக் குணத்தையுடைய செவிமறையாயிருக்கின்ற ஏற்றைத் தழுவினவனுடைய சென்னியிற் கிடந்த குவிந்த முல்லைப்பூவாற் கட்டின வளையிலையுடைய கண்ணியைக் கொம்பிலே எடுத்துக்கொண்டு அலைத்த ஏழையாய பெரிய புகரேறு துள்ளுகையினால் அப்பூவந்து என்மயிருக்குள்ளே மிகவும் வீழ்ந்தது ; எ - று.

ஏழையென்றாள் களவொழுக்கம் வெளிப்படுத்தல் இறவாமற் கோட்டால் அலைத்தமைபற்றி.

அதனைக் * * * கூறு—எ-து, அக்கண்ணியைக் கெடுத்ததொன்று மீண்டுப் பெற்றாற்போல எடுத்துக்கொண்டு யான் முடித்ததன்மையை யாய் கேட்டாளென்று சொல்லுவர்களோ ? ஈதொரு வார்த்தையை எனக்கு விளங்கக் கூறுவாயென்றாள் ; எ - று.

இஃதொன்று கூறு என்னுஞ்சொல்லை என்பவோ என்பதன் பின்னே கூட்டிப் பொருள்கூறுக.

கேட்டா * * * வது—எ-து, மேற் தோழீ ! அக்கண்ணி வனைந்துகோடல் தாழாத அவனுடைய கண்ணியன்றோ ? அதனாற் பின்னை யாய் கேட்டால் என்ன பரிகாரம் யாஞ் செய்யவேண்டும் ? அதற்கு ஒன்று வேண்டாவென்றாள் ; எ - று.

ஓ அசை.

பெய்போ * * * மற்று—எ-து, அதுகேட்ட தலைவி முடிக்கும் பூ இதென்றறியாத தன்மயிரில் ஏதிலான் கையாலேபுனைந்தகண்ணியை முடித்தாளென்று தாய்கேட்கில் அதற்குப் பின்னை அவள் வெகுளாமற்செய்வதொரு பரிகாரமில்லையாயிருக்குமோ என்றாள்; எ-று.

மயிருக்கு மணந்தரும் பூ முடித்தல்வேண்டுமென்றறியாதவள்.

எல்லாத் தவறு மறும்—எ-து, அதுகேட்ட தோழி இனி எல்லாத் தவறுகளும் நீங்குங்காணென்றாள் ; எ - று.

அவன் வரவுணர்ந்தமையின்.

ஓஒ! அஃதறு மாறு—எ-து, அதுகேட்ட தலைவி ஓஒ என வியந்து அத்தவறு அறுமாறென்னையென வினவினாள் ; எ - று.

ஆயர் * * * பெறின்—எ-து, அதுகேட்ட தோழி, அவன் ஆயருடைய மகனாயிருப்பனாயின், நீ ஆயச்சாதியிற் பிறந்த மகளாயிருப்பையாயின், இவன் உன்னை விரும்பியிருப்பனாயின், நீ அவனை விரும்பியிருப்பையாயிற், தாய் மிகவும் நோவத்தக்கதோர் காரியம் இல்லைக்காணென்றாள்; அதுகேட்ட தலைவி அன்னையுடைய நெஞ்சு நின்னுடைய நெஞ்சாகப் பெறின் அவள் நோவத்தக்கதோ இல்லையென்றாள் ; எ - று.

அன்னையோ—எ-து, அதுகேட்ட தோழி இன்னும் அத்தன்மையையோவென்றாள் ; எ - று.

என்றது யான் இத்துணையெல்லாங் கூறவுங் கொள்ளாத தன்மையையோ என்றவாறு.

ஆயர் * * * மருந்து—எ-து, கைம்மிக ஆயர்மகனையுங் காதலித்தலையுடையையாய்க் கைம்மிக யாயையும் அஞ்சியிராநின்றாயாயின், இனி நீயுற்ற காமநோய்க்கு மருந்து அரிதென்றாள்; எ-று.

அரோ அசை.

மருந்தின்றி * * * யான்—எ-து, அதுகேட்ட தலைவி ஏடீ! யானுற்ற வருத்தத்திற்கு மருந்தில்லையாயின் இனி வருந்தியே விடுவேனல்லனோ என்றாள் ; எ - று.

வருந்தாதி * * * மொருங்கு—எ-து, அதுகேட்ட தோழி இனி வருந்தாதேகொள் ; கழுவி அழுக்கற்ற நின்னுடைய மயிரிடத்தே ஏற அவன் கண்ணியைத் தந்ததென்று பிறர் சொல்லக் கேட்டுத், தந்தையோடே தமையன்மாரெல்லாருஞ் சேரக் கூடியிருந்து, தெய்வமாகிய மால் இவளுக்கு இவனைத் திண்ணிதாகக் கொண்டுவந்து காட்டிற்றென மகிழ்ந்து, நின்னை அந்தக் களவொழுக்கத்தைப் பிறர் அறியாமல் ஒழுகவல்ல பொதுவனுக்குக் கொடுத்தலைச்சூழ்ந்தார் காணென்றாள் ; எ - று.

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது கொச்சகவெண்பாவுந் தனிச்சொல்லும் ஐஞ்சீரடுக்கிய கொச்சகவெண்பாவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டுஞ் சொற்சீரடியும் ஈரடியானென்றுங் கொச்சகவெண்பாவும் முச்சீரடியானென்றும் இருசீரடியானென்றும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டுங் கொச்சகவெண்பாவுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும்பெற்ற கொச்சகக்கலி. (எ)

க0அ. இகல்வேந்தன் சேனை யிறுத்தவாய் போல
அகலல்குல் தோள்கண் ணெனமூவழிப் பெருகி
நுதலடி நுசுப்பென மூவழிச் சிறுகிக்
கவலையாற் காமனும் படையிடு வனப்பினோ
டகலாங்க ணளைமாறி யலமந்து பெயருங்கா [ட்ட
ணகைவல்லேன் யானென்றென் னுயிரோடு படைதொ
விகலாட்டி நின்னை யெவன்பிழைத்தே னெல்லாயான்;

அஃதவல மன்று மன;

ஆய மோரா னோரா ணாய்த்தியேம் யாமிகக்
காயாம்பூங் கண்ணிக் கருந்துவ ராடையை
மேயு நிரைமுன்னர்க் கோலூன்றி நின்றாயோ
ராயனை யல்லை பிறவோ வமரருண்
ஞாயிற்றுப் புத்தேண் மகன் ;

அதனான் வாய்வாளேன்

முல்லை முகையு முருந்து நிரைத்தன்ன
பல்லும் பணைத்தோளும் பேரம ருண்கணு
நல்லேன்யா னென்று நலத்தகை நம்பிய
சொல்லாட்டி நின்னொடு சொல்லாற்ற கிற்பார்யார்;

சொல்லாதி,

நின்னைத் தகைத்தனென்; அல்லல் காண்மன் ;

மண்டாத கூறி மழகுழக் காகின்றேன்
கண்ட பொழுதே கடவனாப் போலநீ

பண்டம் வினைய படிற்றூற் றெருஉஇயகிற்
கொண்ட தெவனெல்லா யான் ;

கொண்டது,

அளைமாறிப் பெயர்தருவா யறிதியோ வஞ்ஞான்று
தளவமலர் ததைந்ததோர் கானச்சிற் றூற்றய
விளமாங்காய் போழ்ந்தன்ன கண்ணினு லென்னெஞ்சங்
களமாகக் கொண்டாயோர் கள்வியை யல்லையோ;

நின்னெஞ்சங், களமாக்கொண் டியாமாள லெமக்கெவ
னெளிதாகும்;

புனத்துளா னெந்தைக்குப்புகாவுய்த்துக்கொடுப்பதோ
வினத்துளா னென்னைக்குக் கலத்தொடு செல்வதோ
தினைக்காலுள் யாய்விட்ட கன்றுமேய்க் கிற்பதோ ;

அனைத்தாக,

வெண்ணெய்த்தெழிகேட்கு மண்மையாற்சேய்த்தன்றி
யண்ணணித் தூராயி னன்பகற் போழ்தாயிற்
கண்ணுக் கொழிக்குங் கவின்பெறு பெண்ணீர்மை
மயிலெருத்து வண்ணத்து மாயோய்மற் றின்ன
வெயிலொ டெவன்விரைந்து சேறி யுதுக்காண்
பிடிதுஞ்சு வன்ன வறைமேல நுங்கின்
றடிகண் புரையுங் குறுஞ்சுனை யாடிப்
பனிப்பூந் தளவொடு முல்லை பறித்துத்
தனிக்காயாந் தண்பொழி லெம்மொடு வைகிப்
பனிப்படச் செல்வாய்நும் மூர்க்கு ;

இனிச்செல்வேம்யா

மாமருண் டன்ன மழைக்கட்சிற் றூய்த்தியர்
நீமருட்டுஞ் சொற்கண் மருள்வார்க் குரையவை
யாமுனியா வேறுபோல் வைகற் பதின்மரைக்
காமுற்றுச் செல்வாயோர் கட்குத்திக் கள்வனை
நீயெவன் செய்தி பிறர்க்கு;

யாமெவன் செய்து நினக்கு ;

கொலையுண்கட் கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி
யினைவனப்பின் மாயோய் நின்னிற் சிறந்தார்
நிலவுலகத் தின்மை தெளிநீ வருதி
மலையொடு மார்பமைந்த செல்வ னடியைத்
தலையினுற் றொட்டுற்றேன் சூள் ;

ஆங்குணர்வார் நோவ வதுபொய்ப்பாய் நீயாயிற்
றேங்கொள் பொருப்பன் சிறுகுடி யெம்மாயர்
வேந்தூட் டரவத்து நின்பெண்டிர் காணுமற்
காஞ்சித்தா துக்கன்ன தாதெரு மன்றத்துத்
தூங்குங் குரவையு ணின்பெண்டிர் கேளாமை
யாம்பற் குழலாற் பயிறொம் படப்பைக்
காஞ்சிக்கீழ்ச் செய்தேங் குறி.

இஃது * "அடியோர் பாங்கினும் வினைவல பாங்கினுங் - கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்" என்பதனுற் பிறர் ஏவிய தொழிலைச்செய்தல் வல்ல அகப்புறத் தலைவனுந் தலைவியும் முன்னொருகாற் கூடிப் பின்னர் அவனெதிர்ப்பட்டுழி அவன்வயிற் பரத்தைமையால் ஊடிக் குறிநேர்ந்தது.

(இ - ள்.) இகல்வேந்தன் * * * யான்—எ-து, முலை தோள் கண் என்று சொன்ன மூன்றிடமும் பெருத்து, நுதல் அடி இடை என்று சொன்ன மூன்றிடமுஞ் சிறுத்துச், காமனும் பிறர்க்கு மனக்கவலை செய்தலோடே தன் அம்பை விடுதற்குக் காரணமான அழகோடே ஊரிடத்தே அலமந்து, மோரை விற்று நீ மீளுங்காலத்தே, யான் நகுதலைவல்லேனென்று நக்குப், பின்னர் இகலிடத்தே சென்றுவிட்ட பாண்டியன்சேனை உயிரோடு போம்படி படை தொடுமாறுபோல என்னுயிரோடு போம்படி படையைத் தொட்ட மாறுபாட்டையுடையவளே ! ஏடீ ! யான் நின்னை எப்படித் தப்பினேன் கூறென்றான் ; எ - று.

இகல்வாயிறுத்தவேந்தன்சேனைபோல என மாறுக.

---

* தொல்காப்பியம், அகத்திணையியல், உ௩ - ம் சூத்.

அஃதவல மன்று மன—எ-து, அதுகேட்ட தலைவி அனை மாறித் திரிகின்றது மிகவும் எங்குலத்திற்குத் தீதன்று; எ - று.

ஆய * * * மகன்—எ-து, நஞ்சுற்றத்தார் ஆயராகுல், யாங்கள் மிகவும் ஆய்த்தியரோம்; அதுகிடக்க, நீதான் காயாம்பூவாற்செய்த கண்ணியையுந் துவருட்டின கரிய ஆடையையுமுடையையாய், மேய்கின்ற நிரைகளுக்குமுன்னே ஒருகோலை ஊன்றி அந்நிரை மேய்த்து நின்ற நீ இடையருந் தன்மையை உடையையல்லை; வேருகத் தேவர்களுள் ஞாயிருகியதெய்வத்தின் மகனே? கூறென்ருள்; எ-று.

மகன், கன்னன். இஃது இகழ்ச்சி. ஆய்த்தியேம் யாமாயின் என்றும் பாடம்.

அதனுன் * * * யார்—எ-து, அதுகேட்டு அவன் நீ இங்ஙனம் மகிழ்ந்துகூறுதலால் நின்னேடு ஒன்றுங்கூறேன்; முல்லையினது முகையையும் பீலிமுருந்தையும் நிரைத்தாலொத்த பல்லும் பணைபோலுந் தோளும் பெரிய அமர்செய்யும் உண்கண்ணும் யான் நல்லேனென்று நின்னுடைய தகுதியைப் பிறர் நச்சுதலன்றி நீதானே நச்சியிருக்கின்ற சொல்லுமுடையவளே! நின்னேடு மறுமாற்றஞ் சொல்லுதலை யார் நிகழ்த்துவார் என்ருன்; எ - று.

முல்லைமுதலியன சினைவினை முதலொடு முடிந்தது. ஆற்றகிற்பார் வினைத்திரிசொல்.

சொல்லாதி—எ-து, அதுகேட்டு அவள் அங்ஙனமாயின் ஒன்றுஞ் சொல்லாதேகொள் என்ருள்; எ - று.

நின்னைத் தகைத்தனென்—எ-து, அதுகேட்டு அவன் நின்னைப் போகாமல் விலக்கினேனென்ருன்; எ-று.

அல்லல் காண் மன்—எ-து, அதுகேட்டு அவள் இவன் நம்மிடத்து நிகழ்த்துகின்றதோர் வருத்தத்தைப் பாராயென நெஞ்சொடு கூறினுள்; எ - று.

மண்டாத * * * யான்—எ-து, கூறிப் பின்னும் மனமயங்குதலையுடைய குழவிப்பருவத்துக்கு ஆகாநின்றேன், மனம் மிக்கு விரும்பிச்சொல்லாத சொற்களைச் சொல்லி என்னைக் கண்டபொழுதே தனிசு கடவாரிடத்துக் கொடுத்தவர்கள் அவர்களுக்குள்ள பண்டங்களை உசாவுமாறுபோல நீயும் என்னிடத்திலுள்ள பண்டங்களை

இவை யாவை என்று வினவின வஞ்சனையாலே எனது வட்டியைப் பிடித்தற்கு எடா! நின்னிடத்து யாம் வாங்கிக்கொண்ட பொருள் எப்பொருள் என்றாள்; எ - று.

குழக்கு தரங்கக்கு வண்ணகக்கு என்றாற்போல் நின்றது.

கொண்டது—எ-து, அதுகேட்டு நீ என்னிடத்து வாங்கிக் கொண்ட பொருள் கூறக்கேள்; எ - று.

அளைமாறிப் * * * கிற்பதோ—எ-து, அந்நாளிலே மோர் விற்று மீள்கின்ற நீ செம்முல்லை நெருங்கினதோர் கானத்திடத்துச் சிற்றாற்றின் அயலிடத்தே இளம்மாவடுவைப் பிளந்தாலொத்த கண்ணாலே எனக்கு உரித்தாகிய என் நெஞ்சை நினக்கு இருப்பிடமாக வாங்கிக்கொண்டு அடிமைத்தொழில்கொண்டாய், ஒரு கள்வியையல்லையோ? அது நீயறியாயோ என்றான்; அது கேட்டு அவள் நின் நெஞ்சை எனக்கு இருப்பிடமாக வாங்கிக்கொண்டு யாம் அடிமைத்தொழில் கொள்ளுதல் எங்ஙனம் எளிதாயிருக்கும்? நின் நெஞ்சு புனத்திடத்தானாகிய என் தமையனுக்கு உணவைக்கொண்டு சென்று கொடுக்குமதொன்றோ? பசுத்திரளிடத்தானாகிய என் தந்தைக்குக் கறவைக்கலங் கொண்டு செல்லுவதொன்றோ? தினை அரிந்த தாளிடத்தே யாய் மேயவிட்ட கன்று மேய்க்குமதொன்றோ? அன்றே! ஆதலால் அரிதேகாண் என்றாள்; எ - று.

அனைத்தாக—எ-து, அதுகேட்டு அவன் இனி நீ ஏவின தொழில்களை என் நெஞ்சு செய்வதொன்றாக என்றான்; எ - று.

வெண்ணெய்த் * * * மூர்க்கு—எ-து, என்று பின்னர்க் கடைந்த மோரைக் கையால் அலைக்கும் ஓசை கேட்கும் அணுமையினாலே தூரம் அன்றாய் ஊர் மிகவும் அணித்தாயிற், பொழுது உச்சியம் பொழுதாயிற், கண் வேறொரு வடிவை நோக்குதலைத் தவிர்க்கும் அழகைப்பெறுகின்ற பெண்டன்மையினையும் மயிலினுடைய கழுத்தினுடைய நிறத்தையுமுடையமாயோளே! இப்படி வெய்தாகிய பொழுதோடே விரைந்து செல்லாநின்றாய், இதனால் மற்றுப் பெறும் பயனென்? காயாம் பூவையுடைய குளிர்ந்த பொழிலை அவ்விடத்தே பாராய், அவ்விடத்திற் பிடி துஞ்சுவனவற்றையொத்த பாறையிடத்து உக்கனவாகிய நுங்கினது வெட்டின கண்ணையொக்கும் நீர்நிறைந்த அண்ணிய சுனைகளிலே ஆடிக் குளிர்ச்சியையுடைத்தாகிய பூக்களையு

டைய செம்முல்லைமலரோடே முல்லைமலரையும் பறித்துத் தனியே அப்பொழிலிடத்தே எம்முடனே தங்கிப் பொழுது குளிர்ச்சியுண்டாக தும் ஊர்க்குச் செல்வாயென்றான்; எ-று.

இனிச்செல்வேம்யாம்—எ-து, அதுகேட்டு அவள் நீ போக வேண்டா என்கின்றாயாதலின் யாம் போவேமென ஊடல்தோன் றக் கூறினாள்; எ-று.

மாமருண் * * * நினக்கு—எ-து, கூறிப், பின்னும் மான் மருண்டு நோக்கினாலொத்த குளிர்ச்சியையுடைய கண்ணையு டைய சிறிய ஆய்த்தியராய் நீ மயக்கிக் கூறுஞ் சொல்லிடத்தே மயங் குவார்க்கு அம்மொழிகளைக் கூறு, யான் அதற்கு மருளேன், நீதான் பல பசுக்களையுந் தெவிட்டாமற் கூடும் ஏறுபோல நாடோறும் பதின் மரை ஒருவரைப்போலே விருப்பமுற்று அவர்மேற் செல்வாய், ஒரு கட்குத்தியாகிய கள்வனுதலால் நீ பிறர்க்கு என்ன நன்மை செய் வாய்? இத்தன்மையையுடைய நினக்கு யாம் என்ன நன்மை செய் வேமென்றாள்; எ-று.

கட்குத்திக்கள்வன் என்றது "விழித்திருக்க மிண்டையைக் கொள்வான்" என்னும் பழமொழி. ஓ அசை. நீ அம்மகளிரையும் அவர் கருத்து முற்ற நுகராது அவர் வருந்த நீங்குவையென்பது தோன்ற நீ எவன்செய்தி என்றாள். யாமெவன்செய்துமென்றது எம் மிடத்து நீங்காத அன்புடையையல்லை என்பது தோன்ற நின்றது.

கொலையுண்கட் * * * சூள்—எ-து, அதுகேட்டு அவன் கொலைத்தொழிலையுடையகண்ணினையுங் கூரிய எயிற்றினையுங் கொய் யப்படுந் தளிர்போலும் நிறத்தினையுங் கண்டார் வருந்தும் அழகினையு முடைய மாயோளே! யான்விரும்புதற்கு உரியாராய்நின்னிற்காட்டிற் சிறந்தமகளிர் மண்ணுலகத்தில் இல்லாமையை நீதானே தெளிவாய், இனி நீ நினைத்த தவறுகளின்றென்று யான் தெளிவித்தற்கு நீ அனு க வருவாய்; மார்பு மலையோடு ஒப்பமைந்த திருமாலடியைத் தலையினா லே வணங்கிக் கையினாற் தொட்டுச் சூளுறற்றேன் என்றான்; எ-று.

ஆங்குணர்வார் * * * குறி—எ-து, அதுகேட்டு அவள் அப் படியை மெய்யென்று உணரும் அறியாமகளிர் கூட்டத்திற்கு உடன் படுவார், அச்சூளுறவு பொய்க்குமவன் நீ, நின்வருத்தத்தை ஆராய்ந் து பார்க்கில் அதற்கு உடன்படுதலே வேண்டுதலின் எம்முடைய புழைக்கடையிற் காஞ்சிமரத்தின் கீழே குறியிடஞ்செய்தேம்; ஆண்டு

வருங்காற், தேனைத் தன்னிடத்தே கொண்ட பொதியின்மலையை யுடையவனுடைய சிறுகுடியில் வாழும் எம் ஆயர் அவ்வேந்தன் இனிதிருந்து வாழ்வதற்கு அந்நிலத்திற் தெய்வத்திற்கு மடைகொடுக்கும் ஆரவாரத்தாலே வந்த நின்னுடைய பெண்டிர் நின்னைக் காணாமற், காஞ்சிப்பூவின் தாது உதிர்ந்தாற் போன்ற தாதாகிய எருவையுடைய மன்றத்திடத்து ஆடுங் குரவைக்கூத்திடத்து வந்த நின்னுடைய பெண்டிர் கேளாமல், நீ செய்யுங் குறியை ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே குறிசெய்து வருவாயாக என்றாள் ; எ - று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகைபிறந்தது. இதனுட் தலைவன் வினைவலபாங்கினனாயவாறு காண்க. இது கைக்கிளை.

இது தரவுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டுஞ் சொற்சீரடியுங் கொச்சகமுந் தனிச்சொல்லுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் ஒருதாழிசையும் ஐஞ்சீரடியானொன்றுங் கொச்சகமுந் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டுஞ் சொற்சீரடியும் நெடுவெண்பாட்டும் மூச்சீரானொன்றும் நெடுவெண்பாட்டும் வெள்ளைச் சுரிதகமும் பெற்று வந்த கொச்சகக்கலி. (அ)

௧0௯. காராரப் பெய்த கடிகொள் வியன்புலத்துப்
பேராது சென்று பெரும்பதவப் புன்மாந்தி
நீரார் நிழல குடஞ்சுட் டினத்துள்ளும்
போராரா வேற்றின் பொருநா கிளம்பாண்டி
றேரூரச் செம்மாந் ததுபோன் மதைஇனள்
பேரூருஞ் சிற்றூருங் கௌவை யெடுப்பவள்போன்
மோரோடு வந்தா டகைகண்டை யாரோடுஞ்
சொல்லியா ளன்றே வனப்பு ;

பண்ணித் தமர்தந் தொருபுறந் தைஇய
கண்ணி யெடுக்கல்லாக் கோடேந் தகல்குறிப்
புண்ணில்லார் புண்ணுக நோக்கு முழுமெய்யுங்
கண்ணளோ வாய மகள் ;

இவடான், திருந்தாச் சுமட்டினள் ளேனைத்தோள் வீசி
வரிக்கூழை வட்டி தழீஇ யரிக்குழை

யாடற் றகையள் கழுத்தினும் வாலிது
நுண்ணிதாய்த் தோன்று நுசுப்பு ;

இடைதெரியா வேள ரிருவருந் தத்த
முடையவனப் பெல்லா மிவட்கீத்தார் கொல்லோ
படையிடுவான் மற்கண்டீர் காமன் மடையடும்
பாலொடு கோட்டம் புகின் ;

இவடான், வருந்தநோய் செய்திறப்பி னல்லான் மருந்தல்லள்
யார்க்கு மணங்காதல் சான்றுளென் றூர்ப்பெண்டிர்
மாங்காய் நறுங்கடி கூட்டுவேம் யாங்கு
மெழுகின் கிளையொடு போவென்று தத்தங்
கொழுநனைப் போகாமற் காத்து முழுநாளும்
வாயில டைப்ப வரும்.

இது வினைவலபாங்கிற் றலைவியைக் கண்ட வினைவலபாங்கிற் றலைவன் "காமஞ் சாலா விளமை யோள்வயி - னேமஞ் சாலா விடும்பை யெய்திக்" கூறியது.

(இ - ள்.) காராரப் * * * வனப்பு—எ-து, மழைநிறையப் பெய்த விளக்கங்கொண்ட அகற்சியையுடைய நிலத்தேசென்று நின்று அவ்விடத்தே நின்ற பெரிய அறுகாகிய புல்லை நிறையத்தின்று நீர்நிறைந்த நிழலிடத்தனவாய் இன்னதனைக்குடம்பால் போதுமென்று கருதப்படும் பசுத்திரளில் வைத்துக்கொண்டு ஏனையவற்றிற்கு ஒப்புச்சொல்லப்படும் நாகு போர்த்தொழில் அமையாத ஏற்றினுக்கீன்ற இளைய எருது கொல்லர் வண்டியை ஊராநிற்க இளமையால் இறுமாக்குமாறுபோலத் தலையில் மோர்ப்பானையுடனே அழகாலும் இளமையாலும் மிகுதியையுடையவளாய்ப் பெரிய ஊர்களையுஞ் சிறிய ஊர்களையும் ஆரவாரத்தை உண்டாக்குவாள்போலே மோரோடே வந்தவள் அழகை நெஞ்சே காண்பாயாக; இவள்தான் மிக்க வனப்புடைய மகளிரெல்லாரொடுந் தன் அழகு ஒவ்வாமை சொல்லப்பட்டவள்;எ-று.

இது சினைவினை முதலொடு முடிந்தது.

பண்ணித் * * * மகள்—எ-து, சுற்றத்தார் கட்டிக்கொண்டு வந்து மயிர்முடியில் ஒருபுறத்தே சொருகிவைத்த கண்ணியைச் சுமக்கமாட்டாத பக்கம் ஏந்தின அகன்ற குறியினையுடைய இவ்வாயர்

மகள் மனத்திற் காமவேட்கையில்லாத இருடிகளுக்கும் புண்பட்டு நெஞ்சு வருந்தும்படி பார்க்கும்; அதுவேயன்றி மெய்முழுதுங் கண் ணையுடையளே; எ - று.

என்பது, கண்கள் செய்கின்ற வருத்தம்போல மெய்ம்முழு தும் வருத்துதலின் மெய்ம்முழுதுங் கண்ணளோ என்றதாயிற்று.

இவடான் * * * நுசுப்பு—எ-து, இவள்தான் பலநிறத்தை யுடைய நெல்லையுடையவாகிய வட்டியை ஒருகையால் அணைத்து மற் றைத்தோளை இளமைச் செருக்குத்தோன்ற வீசித் தன் அழகிற்குத் திருந்தியிராத சுமையினையுடையளாய் மெய்க்கட் பூண்டனவன்றிக் கழுத்திடத்திலும் அழகையுடைய மகரக்குழையாடுதலுண்டான அழ கையுடையவள்; அதுவேயன்றி நகிலமுந் தோளுஞ் சுமந்து இளைத் த நுசுப்புக் கண்ணியெடுக்கலா மென்மைக்கேற்ப நுண்ணிதாய் நன் ருய்த் தோன்றுநிற்கும்; எ - று.

இடைதெரியா * * * புகின்—எ-து, தம்மில் வேறுபெயர் விளங்கி அழகையுடையராகிய உருப்பசியுந் திலோத்தமையுந் தம்மு டைய தம்முடைய அழகையெல்லாம் இவட்குக் கொடுத்தார் கொல் லோ? அது தெரிந்ததில்லை; அவள் தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலோடே காமன் கோயிலிலே செல்லில் அக்காமனும் நெஞ்சழிந்து தன்கையிற் படையை மிகவும் போடுவன்; எ - று.

காமன் மாயோன்மகனுதலின் அவனும் அந்நிலத்திற்குத் தெய் வமாதல் "அவ்வகைபிறவும்" என்றவழி வகை என்றதனுற் கொள் ளப்பட்டது. தெரியா என்பது செய்தெனெச்சம். இருவர் திருமக ளும் பூமகளுமெனினுமாம். கண்டீர் வினவொடு சிவணிநின்ற அசை.

இவடான் என்று நெஞ்சொடு வினயினன்.

வருந்தநோய் * * * வரும்—எ-து, அதுவேயுமன்றித் தன் னை நோக்கினுரெல்லார்க்கும் வருத்தமாதல் அமைந்தவளென்று கருதி இவ்வூர்களிற் பெண்டிரெல்லாரும் மோருக்கு மாருக மாங்காயை நறி ய ஊறுகாயாகக் கூட்டி நுகரக்கடவேம் நீ எவ்விடத்தும் போய் அம் மோர்முதலியன விற்றுத்திரியும் நின் சுற்றத்தாருடனே போவா யாக என்று கூறித் தம்முடைய கணவனைப் புறத்துப் போகாமற் காத்துக்கொண்டு இவள் வருங்காலமேயன்றி ஒருநாள் முழுதும் வா யிலே இடையிட்டுக்கொண்டு நிற்கும்படியாக வாராநிற்கும்; இவள்

தான் மனம்வருந்தும்படி நோயைச்செய்து போவதன்றி அந் நோய் தீர்க்கும் மருந்தல்லள்; எ - று.

மருந்தல்லளென்றது காமஞ்சாலா இளமையோளென்றது.

மோர்விற்கின்றமை கூற வினைவலபாங்கினளாயிற்று.

இஃது இவடாளென ஐஞ்சீர் அடுக்கிய சுரிதகத்தான் இற்ற கலிவெண்பாட்டு. (௧)

௧௧௦. கடிகொ ளிருங்காப்பிற் புல்லினத் தாயர்
குடிதொறு நல்லாரை வேண்டுதி யெல்லா
விடுதேள் மருந்தோகின் வேட்கை தொடுதரத்
துன்னித்தந் தாங்கே நகைகுறித் தெம்மைத்
திளைத்தற் கெளியமாக் கண்டை யளைக்கெளியாள்
வெண்ணெய்க்கு மன்ன ளெனக்கொண்டா யொண்
லாங்குநீ கூறி னனைத்தாக நீங்குக; [ணுதா

அச்சத்தான் மாறி யசைவினுற் போத்தந்து
நிச்சந் தடுமாறு மெல்லிய லாயமகண்
மத்தம் பிணித்த கயிறுபோ னின்னலஞ்
சுற்றிச் சுழலுமென் னெஞ்சு;

விடிந்த பொழுதினு மில்வயிற் போகாது
கொடுந்தொழுவி னுட்பட்ட கன்றிற்குச் சூழுங்
கடுஞ்சூலா நாகுபோ னிற்கண்டு நாளு
நடுங்கஞ ருற்றதென் னெஞ்சு;

எவ்வ மிகுதர வெந்திறத் தெஞ்ஞான்று
நெய்கடை பாலிற் பயன்யாது மின்றாகிக்
கைதோயன் மாத்திரை யல்லது செய்தி
யறியா தளித்தெ னுயிர்;

அன்னையோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளி
யின்றி யமையேனென் றின்னவுஞ் சொல்லுவாய் [ரை
நின்றாய்நீ சென்றி யெமர்காண்பர் நாளையெங்
கன்றொடு சேறும் புலத்து.

இது வினவலபாங்கினால் வெண்ணெய் நொடைக்குச் சென்ற தலைவியைக்கண்டு வினவலபாங்கிற் தலைவன் மெய்தீண்டித் தனது ஆற்றாமையை அறிவித்துழி, அவள் ஈண்டுப் பிறர் அறிவர், நாளைக் கன்றொடு சேறுமென இடங்கூறியது.

(இ - ள்.) கடிசொ * * * நீங்குக—எ-து, ஏடா! வரைவு கொண்ட பெரிய குறும்பிடத்தே இருக்கின்ற ஆட்டிடையருடைய குடிதோறுமுள்ள மகளிரை விரும்பாநின்றாய்; நினது காம வேட்கை எறிந்த தேளுக்குக் கடுப்பற இப்பொழுதே இட்டுத் தீர்க்கும் மருந்துபோல வேட்கைதோன்றியபொழுதே கூடத்தீர்க்க வேண்டுவதொன்றோ? அல்லவே! நின்னோடு ஓர்நகைசெய்தலைக் குறித்து நீ என் மெய்யைத் தீண்டுதற்கு யான் நின்னை அணைந்து மெய்யைத் தந்த அப்பொழுதே, எம்மைப் புணர்ச்சிக்கும் எளியேமாதல் நீ மனத்தாலே கண்டாய்; அங்ஙனங் கண்டது, மோரை வேண்டினார்க்குச் சிறிது மோரை வார்த்து எளியாளானவள் ஒருத்தி வெண்ணெய்யை வேண்டினார்க்கு வெண்ணெய்யை இட்டு எளியளாயிருப்பள் என்று நெஞ்சாலே கருதினாற்போலே இருந்ததென்றாள்; அதுகேட்ட தலைவன் ஒள்ளிய நுதலினையுடையாய்! அங்ஙனம் நீ கூட்டத்தை மறுத்துக் கூறுவையாயின், அக்கூட்டம் இல்லையாவதாக; இனி நின்னைவிட்டு நீங்குக என்றான்; எ - று.

அச்சத்தான் * * * னெஞ்சு—எ-து, மெல்லிய இயல்பினையுடைய ஆயச்சாதியிற் பிறந்த மகள் மத்தைச் சுற்றிய கயிறுபோல நின்னுடைய நலத்தைச் சூழ்ந்துகொண்டு சுழன்றுதிரிகின்ற என்னுடைய நெஞ்சு நீ கூறிய கூற்றினாற் தனக்கு உண்டாகிய அச்சத்தினாலே நின்னிடத்துநின்று மீண்டு தான் நிலைபெறமாட்டாது பின்னரும் அசைகின்ற அசைவாலே என்னிடத்தினின்றும் புறப்பட்டு நாடோறும் மீளத் தடுமாறாநிற்கும் என்றான்; எ - று.

விடிந்த * * * னெஞ்சு—எ-து, என்று பின்னும் முதற்சூல் கொண்ட பசு இல்லிடத்தினின்றுந் தூரிய இடத்தில் இடப்படாத வளைந்த தொழுவினுள்ளே கட்டிவைத்த தன்கன்றிற்குப், பொழுது விடிந்த காலத்திலும் மேயப்போகாது சூழ்ந்துதிரியும்; அந்நாகுபோலே நின்னைக் கண்டு என் நெஞ்சு நாடோறும் நடுங்குகின்ற வருத்தத்தை உற்றதுகாண் என்றான்; எ - று.

நாகு ஈண்டு இளமை.

எவ்வ * * * னுயிர்—எ-து, என்று பின்னரும் என்னிடத்து எந்நாளும் வருத்தம் மிகுகையினாலே அளித்தக்க என்னுடைய உயிர் மருந்தையிட்டு நெய்யைக் கடைந்து வாங்கின பாலிடத்து நுகர்வார்க்குச் சிறிதும் பயன்படுதலில்லையாய் அவர் கைசென்று தோய்ந்துவிடுகின்ற அளவாய்விட்டது; அதுவும் ஒழிய மேற் தான் செய்வதோர் செயலையும் அறியாதென்றான்; எ - று.

என்றதனால், நீ என் உயிரிடத்துள்ள நன்மையை ஒருவழியாலே வாங்கிக்கொண்டு விட்டாயென்றும் அது பின்னர் நீ பயன் கொள்ளுங்காலத்து நினக்கு ஓர் இன்பந் தருதல் ஆற்றாதென்றுங் கூறினானாயிற்று.

அன்னையோ * * * புலத்து—எ-து, அதுகேட்டு அவள் நீ அத்தன்மையையுடையையோ என அருள்செய்து, பலருந் திரிகின்ற மன்றத்திலே எதிர்ப்பட்ட அப்பொழுதே நின்னைப்போலன்றி அமைதியையுடையோர் மகளிரை இவ்விடத்துப் புணர்ச்சியின்றாயின் உயிர்வாழேனென்று நின்றாய்; இவ்விடத்து நின்றால் எம்முடையசுற்றத்தார் காண்பர்; இனி இன்றேயன்றி நாளையும் புலத்திலே கன்றுமேய்த்தற்குப் போவேம்; ஆண்டு வந்து இத்தன்மையன உற்றவை மேற் சொல்லுவாய்; நீதான் இனி ஈண்டு நில்லாமற்போ என இடங்கூறினாள்; எ - று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது நெடுவெண்பாட்டும் பின்னர் மூன்று வெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் பெற்ற அகப்புறக்கலிவெண்பாட்டு. (௩௦)

௧௧௧. தீம்பால் கறந்த கலமாற்றிக் கன்றெல்லாந்
தாம்பிற் பிணித்து மனைநிறீஇ யாய்தந்த
பூங்கரை நீலம் புடைதாழ மெய்யசைஇப் பாங்கரு
முல்லையுந் தாய பாட்டங்காற் றோழிநம்
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லா
மொருங்கு விளையாட வவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றா னெல்லாநீ

பெற்றேம்யா மென்று பிறர்செய்த வில்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிய
தாதுசூழ் கூந்த றகைபெறத் தைஇய
கோதை புனைகோ நினக்கென்று னெல்லாநீ
யேதிலார் தந்தபூக் கொள்வாய் நனிமிகப்
பேதையை மன்ற பெரிதென்றே னையிழா
யைய பிதிர்ந்த சுணங்கணி மென்முலைமேற்
றொய்யி லெழுதுகோ மற்றென்றான் யாம்பிறர்
செய்புற நோக்கி யிருத்துமோ நீபெரிது
மையலை மாதோ விடுகென்றேன் றையலாய்
சொல்லிய வாறெல்லா மாறுமா றியான்பெயர்ப்ப
வல்லாந்தான் போலப் பெயர்ந்தா னவனைநீ
யாயர் மகளி ரியல்புரைத் தெந்தையும்
யாயு மறிய வுரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன்.

இது தலைவி ஆயத்திடைத் தலைவனைக் கண்டவாறும் அவனைக் கூறியனவுங் கூறித், தோழியைத் தலைவனை வரைவுகடாவி யாய்க்கு அறத்தொடுநிற்கவேண்டுமென்றது.

(இ - ள்.) தோழீ! இனியபாலைக் கறந்த கலங்களை அவ்விடத்துநின்றும் எடுத்துவைத்துக் கன்றுகளையெல்லாந் தாம்பாற் கட்டி மனைக்கண்ணே நிறுத்தித் தாய் தந்த பூத்தொழிலினையுங் கரையினையுமுடைய நீலத்தையுடைய ஆடை பக்கத்தே தாழாநிற்க மெய்யை அசைத்துப் பாங்கர்க்கொடியும் முல்லைக்கொடியும் பரந்த முற்றூட்டாகிய தோட்டத்திடத்தே நம்முடைய ஆட்டினத்தையுடைய ஆயர்மகளிரோடே மற்றை இருகூற்றில் ஆயர்மகளிரெல்லாருஞ் சேர விளையாடாநிற்ப அவ்விடத்தே வந்த குருந்தம்பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் பின்னை என்னைநோக்கிச் சூழ்ந்த அணிகலங்களையும் அழகினையும் மடப்பத்தையுமுடைய நல்லாய்! நீ இழைத்து விளையாடுஞ் சிற்றிலை யானுஞ் சிறிது புனைவேனோ என்றான்; யான் அதற்கு எடா! வரைந்துகொண்டு எமக்கு ஓரில்லை அமைத்தலறியாயாய்த் தன் சுற்றத்தார் எடுத்த இல்லிலே இவள் இருக்க யாம் பெற்றேமென்று நினைத்திருக்குமவன் நீ ஆதலால் உறுதியாக நீ உலகியலிற் கற்றதொன்றும் இல்லைக்காணென்றேன்; அதன்பின்பு

கட்டின மாலையை நினக்கு முற்றின தாதுசூழ்ந்த கூந்தலிலே அழகு பெறப் புனைவேனோ என்றான்; யான் அதற்கு ஏடா! நீ வரைந்துகொண்டு, விடாமற் கோதை புனைதல் அறியாயாய், என் சுற்றத்தார் மிகக் கொண்டுவந்து சூட்டின பூவை மிகப் பூவென்றுகொள்ளுமவன் நீ ஆதலால் உலகில் உறுதியாகப் பெரிதும்பேதைத்தன்மையையுடையை என்றேன்; அதன்பின்பு ஆயிழாய்! வியக்கத்தக்க சிதறின சுணங்கு அணிந்த மெல்லிய முலைமேலே தொய்யில் எழுதுங் குழம்பால் எழுதுவேனோ என்றான்; யான் அதற்கு நீ வரைந்துகொண்டு வெளியாக எழுதுதல் நின் மனத்து இல்லை, யாம் எப்பொழுதும் என்சுற்றத்தார் கோலஞ்செய்து எழுதுங் காலம்பார்த்திருப்பேமோ? இனி இங்ஙனம் இருத்தலாற்றேம், இங்ஙனங் கூறுதலின் நீ பெரிதும் மயக்கத்தையுடையை, இங்ஙனம் அன்புள்ளார்போலக் கூறுகின்றாய், அவற்றைத் தவிர் என்று கூறினேன்; தையலாய்! அவற்றின்பின்னர் அவன் சொன்ன நெறிகளெல்லாவற்றையும் இங்ஙனம் மாறாய் மாறாய் யான் மறுக்க, இனிக் களவு நிகழாதென்று அலமந்தான்போலே மீண்டு போயினான்; அவனை நீ ஆயர்மகளிரை வரைந்துகொள்ளும் இலக்கணத்தை அறிவித்துப், பின்னர் என்னுடைய தந்தையும் யாயும் இக்களவொழுக்கம் அறியும்படி அறத்தொடு நிலைவகையால் உரைப்பையாயின், அவன் உற்ற நோயன்றி யான் உற்ற நோயையும் மிகப் போக்குவை; இதனைக் குறிக்கொள் என்றாள்; எ - று.

இதனாற் தலைவிக்கு அசைவு பிறந்தது.

இது பன்னீரடியின் இகந்து தளையும் விரவி ஐஞ்சீரடியும் வந்து ஒருபொருணுதலாது வந்த கலிவெண்பாட்டு. (௧௧)

௧௧௨. யாரிவ னென்னை விலக்குவா னீருளர்
பூந்தா மரைப்போது தந்த விரவுத்தார்க்
கல்லாப் பொதுவனை நீமாறு நின்னொடு
சொல்லலோம் பென்றா ரெமர்;

எல்லா, கடாஅய கண்ணாற் கலைஇய நோய்செய்யு
நடாஅக் கரும்பமன்ற தோளாரைக் காணின்
விடாஅலோம் பென்றா ரெமர்;

கடாஅயார், நல்லாரைக் காணின் விலக்கி நயந்தவர்
பல்லித ழுண்கண்ணுந் தோளும் புகழ்பாட

நல்லது கற்பித்தார் மன்ற நுமர்பெரிதும்
வல்ல ரெமர்கட் செயல்;

ஓஒ, வழங்காப் பொழுதுநீ கன்றுமேய்ப் பாய்போல்
வழங்க லறிவா ருளையாரோ வென்னை
யிகழ்ந்தாரோ யன்றோ வெமர்;

ஒக்கும், அறிவல்யா னெல்லா விடு;

விடேன்யா, னென்னீ குறித்த திருங்கூந்தா
ளின்னையென் முன்னின்று
சொல்லலோம் பென்றமை யன்றி யவனைநீ
புல்லலோம் பென்ற துடையரோ மெல்ல
முயங்குநின் முள்ளெயி றுண்டு மெவன்கொலோ
மாயப் பொதுவ னுரைத்த வுரையெல்லாம்
வாயாவ தாயிற் றலைப்பட்டாம் பொய்யாயிற்
சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்
றுயித ழுண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினு மேள ருடைத்து.

இது வினைவலபாங்கிற் றலைவியை ஆற்றிடைக் கண்டு வினைவலபாங்கிற் றலைவன் விலக்கி நகையாடி இருவருஞ் சிலமொழி கூறியவழி அவள் கூட்டத்திற்கு உடம்பட்டது. இது கைக்கிளை.

(இ - ள்.) யாரிவ * * * ரெமர்—எ-து, என்னை விலக்கு வானாகிய இவன் எமக்கு என்ன உறவுடையனென முன்னிலைப் புறமொழியாகப் புலந்துகூறிப், பின்னர் அவனைநோக்கி நீரிலே அசைகின்ற பொலிவையுடைய தாமரையினது பூவை எமக்கு விளையாடத் தந்த, பலமலர் விரவுதலையுடைத்தாகிய தாரினையுடைய, நினது *சாதித்தன்மை கல்லாத வடிவு இயல்பாகப்பட்ட இடையனுந் தன்மையையுடையை; இவ்வொழுக்கம் அறிந்தாளைப்போல எம்முடைய சுற்றத்தார் நின்னோடு சிலசொல்லுதலைப் பாதுகாத்துக்கொள் என்றார்; ஆதலான் நீ ஈண்டு நில்லாது போ என்றாள்; எ - று.

†"எங்கில மருங்கிற் பூவும்" என்பதனாற் றாமரை கூறினார்.

---

* தார்க்கு அல்லா எனப் பிரிதலுச் சாதித்தனமைக்கு அல்லாத எனவும் ஒனறு.

† தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கக-ம் சூத்.

எல்லா * * * ரெமர்—எ-து, அதுகேட்டு அவன் ஏடீ! வேட்கைசெலுத்தின கண்ணாலே மனத்தைக் கலக்கின காமநோயை உண்டாக்கும் எழுதுகரும்பு நெருங்கின தோளினையுடைய மகளிரைக் கண்டாயாயிற் போகவிடாதே கொள்; அவர் செய்த நோயை அவரைக் கொண்டே பரிகரித்துக்கொள்ளென்று கூறினார் எம்முடைய சுற்றத்தார் என்றான்; எ - று.

கடாஅயார் * * * செயல்—எ-து, அதுகேட்டு அவள் அங்ஙனம் பரிகரித்துக்கொள்ளென்று கூறினவர்கள் அதுவேயன்றி நல்ல மகளிரைக் கண்டாயாயிற் போகாமற் தடுத்து விரும்பி அவருடைய பல பூக்களையும் போலுங் கண்ணையும் புகழப்படுந் தோளையும் பாடும்படியாக நல்லதொரு தொழில்கற்பித்தார்; அவர்தாம் அறுதியாக; எம்முடைய சுற்றத்தாரிடத்தவர் வரைவுநேர்தற்குச் செய்யுஞ் செயலை நம்முடைய சுற்றத்தார் பெரிதும் வல்லராயிருந்தாரென்றாள்; எ-று.

இஃது இகழ்ச்சி.

ஓஒ, * * * வெமர்—எ-து, அதுகேட்டு அவன் தன் மனத்தே ஓஒ! என வியந்து, பின்னர் வெயில்வெம்மையால் ஒருவரும் வழங்காத உச்சிக்காலத்தே நீ கன்றுமேய்ப்பாய்போலே பிறர்க்கு நோயைச்செய்து திரிகின்ற தன்மையை அறிந்திருக்கின்றவர்கள் இப்படித் திரிகின்றாளென்று எனக்கு உரையாதிருப்பாராயில் எம்முடைய சுற்றத்தார் எம்மை இகழ்ந்தாரேயல்லவோ என்றான்; எ-று.

ஒக்கும் * * * * விடு—எ-து, அதுகேட்டு அவள் நீ கூறியது ஒக்கும்; ஏடா! இது பொய்யென்று யான் அறியவேண்டா; இக்கூற்றைக் கைவிடென்றாள்; எ-று.

விடேன்யா * * * ருடைத்து—எ-து, அதுகேட்டு அவன் யான் நின்னை விடேன், கரிய கூந்தலையுடையாய்! யான் கூறிய கூற்றை நீ பொய்யாகக் குறித்ததென்? யான் பொய்கூறிற்றிலேன்; அது நிற்க, நின் சுற்றத்தார் நின்னை என்முன்னே நின்று சில சொல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளெனச் சொன்னமையன்றி அவனை நீ புல்லுதலைப் பாதுகாத்துக்கொள்ளென்ற வார்த்தையை அவர் உடையரோ? இல்லையன்றே! ஆதலால் நீ மெத்தென முயங்குவாய், அப்பொழுது யான் நின் கூரிய எயிற்றை உண்பேனென்றான்; அதுகேட்டு அவள் இவன் கூறியது எத்தன்மைத்தோவென நெஞ்சொடு உசாவிப், பின்னுந் தன் நெஞ்சைநோக்கிப் பொய்யை வல்ல

பொதுவன் கூறிய கூற்றெல்லாம் மெய்யாயிருப்பதோர் வார்த்தையாயில் அவனிடத்து மனைவாழ்க்கையிலே பட்டேமாகின்றேம்; அன்றி அது பொய்யாயிற்றேல் மென்மை இனிதாகிய மார்பிற் கமழ்கின்ற மாலை வருத்தின நின்னுடைய அழகிய இதழ்போலுங் கண்கள் பசலைநிறங் கொள்ளப் பெருமையையுடைய மெல்லிய தோள் பின்னர் மெலியினும் நின் மேனி இப்பொழுது பெறுகின்ற அழகையுடைத்துக்காண் எனக் கூட்டத்திற்கு உடம்பட்டுக் கூறினாள்; எ-று.

குழைத்த என்னும் பெயரெச்சம் நின் என்னும் பெயரொடு முடிந்தது. கன்று மேய்ப்பாய்போலென்பதனால் வினைவலபாங்காயிற்று. *"நோயு மின்பமும்" என்னுஞ் சூத்திரத்து "உறுப்புடை யது போ லுணர்வுடை யதுபோன் - மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" என்பதனால் உறுப்புடைத்தாகக் கூறினாள்.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது முச்சீரடியும் இருசீரடியும் இடையேவந்த கொச்சகக்கலி.

௧௧௩. நலமிக நந்திய நயவரு தடமென்றோ
ளலமர லமருண்க ணந்நல்லாய் நீயுறீஇ
யுலமர லுயவுநோய்க் குய்யுமா றுரைத்துச்செல்;

பேரேமுற் றார்போல முன்னின்று விலக்குவா
யாரெல்லா நின்னை யறிந்ததூஉ மில்வழி;

தளரியா லென்னறிதல் வேண்டிற் பகையஞ்சாப்
புல்லினத் தாயர் மகனேன் மற்றியான்;

ஒக்கும், புல்லினத் தாயனை நீ யாயிற் குடஞ்சுட்டு
நல்லினத் தாய ரெமர்;

எல்லா, நின்னொடு சொல்லி னேதமோ வில்லைமன்;

ஏதமன், றென்னை வருவான் விடு;

விடேன், உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய வாக லறியினு மெல்லியா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், உ-ம் சூத்.

னின்மொழிகொண் டியானோ விடுவேன்மற் றென்மொ
டென்னெஞ்ச மேவல் செயின்; [ழிகொண்

நெஞ்சேவல் செய்யா தெனநின்றாய்க் கெஞ்சிய
காதல்கொள் காமங் கலக்குற வேதிலார்
பொய்ம்மொழி தேறுவ தென்;

தெளிந்தேன் றெரியிழாய் யான்;

பல்கால்யாங் கான்யாற் றவிர்மணற் றண்பொழி
லல்க லகலறை யாயமொ டாடி
முல்லை குருந்தொடு முச்சிவேய்ந் தெல்லை
யிரவுற்ற தின்னங் கழிப்பி யரவுற்
றுருமி னதிருங் குரல்போற் பொருமுர
ணல்லேறு நாகுட னின்றன
பல்லா னினநிரை நாமுடன் செலற்கே.

இது வினைவலபாங்கிற் தலைவியை ஆற்றிடைக் கண்டு அவளை வினைவலபாங்கிற் தலைவன் விலக்கி அவளோடு சிறிது கூறியவழி அவள் கூட உடம்பட்டாளாக அவன் கூறியது. இது கைக்கிளை.

(இ - ள்.) நலமிக * * * றுணைத்துச்செல்—எ-து, நன்மை மிகப் பெருகிய விருப்பம் வருகின்ற பெருமையையுடைய மெல்லிய தோளிணையுஞ் சுழலுதலுடைய முகத்தோடு பொருந்தின கண்ணிணையும் அழகினையும் உடைய நல்லாளே! நீ உற்றதனால் உழத்தலையுடைய வருந்துநோய்க்கு உய்யும் நெறியைக் கூறிப் பின்பு போ என விலக்கினான்; எ - று.

பேரமுற் * * * மில்வழி—எ-து, அதுகேட்டு அவள் எடா! நின்னை முன்பு கண்டு அறிந்ததூஉமில்லாத என்னிடத்தே பெரிய பித்தேறினாைப் போல முன்னே நின்று விலக்குகின்ற நீ யார்தான் என்றாள்; எ - று.

தளரியால் * * * மற்றியான்—எ-து, அதுகேட்டு அவன் என்னை நீ அறிதலை விரும்பின் மனந்தளர்கின்ற இயல்பினையுடையாய்! யான் பகைக்கு அஞ்சாத ஆட்டினத்தையுடைய ஆயரானவர்க்கு ஒரு மகனாதலுளேனென்று தன்செல்வக்குடிப்பிறப்புஉணர்த்தினான்;எ-று.

ஒக்கும் * * * ரெமர்—எ-து, அதுகேட்டு அவள் அது மிகவும் ஒக்குமென அதற்கு உடம்பட்டுப், பின்னர், நீ ஆட்டினத் தையுடைய ஆயனுந் தன்மையையுடையையாயின் எம்முடைய சுற் றத்தார் நும் இனத்திற் சிறந்த இன்னதனைக்குடம் பால் போது மென்று கருதப்படும் பசுவினத்தையுடைய இடையரெனத் தன் செல்வக்குடிப்பிறப்பு உணர்த்தினுள்; எ - று.

எல்லா * * * வில்லைமன்—எ-து, அதுகேட்டு அவன் ஏடீ! இங்ஙனஞ் சிறந்த நின்னோடே சில மொழி கூறின் மிகக் குற்ற மோ இல்லை என்முன்; எ - று.

ஏதமன் * * * விடு—எ-து, அதுகேட்டு அவள் இருவ ரும் ஒத்த குடியாயிற் பின்னைச் சில கூறிக் குற்றமென்? யான் நாளை வருதற்கு இப்பொழுது போக விடு என்முள்; எ - று.

விடேன் * * * செயின்—எ-து, அதுகேட்டு அவன் யான்விடேனென்று கூறிப், பின்னரும் என்னுடைய வார்த்தையைக் கேட்டு என் நெஞ்சம் அறியாமையிலே புகுந்து எனக்கு ஏவலைச்செய் யுமாயின், உலகத்தில் ஒரு காரியக்கூற்றால் உடன்பட்டு மனத்தால் உடன்படாதார் கூற்றுச் செவிக்கு மெத்தென்றிருத்தலை அறிந்திருந் தேனுயினும் மெல்லிய இயல்பினையுடையாய்! நின்னுடைய வஞ்சமா னமொழியை உண்மையாகக்கொண்டு யானே போகவிடுவேன்! அத ஞற் பெற்றதென்? அஃது ஏவல்செய்யாதாயிற்றே என்முன்; எ-று.

நெஞ்சேவல் * * * தென்—எ-து, நின்னைக் கைகடந்து நின்று காதலைக் கொண்ட காமங் கலக்குதலுறுகையினுலே என் நெஞ்சு எனக்கு ஏவலைச்செய்யாதெனச் சொல்லி நின்ற உனக்கு ஏதிலார் கூறிய பொய்யாகிய வார்த்தையைத் தெளியுந்தன்மை எங்ஙனே உண்டாயிற்று என்முள்; எ - று.

ஏதிலாரென்றது, தான் ஏதிலேனல்லேனென்னும் பொருண் மை குறிப்பாற் தோன்றக் கூறியது. பொய்ம்மொழியென்றது தான் உண்மை கூறவும் பொய்யாகக் கொண்டானென்பது தோன் றக் கூறியது.

தெளிந்தேன் * * * யான்—எ-து, அதுகேட்டு அவன் தெரிந்த இழையினையுடையாய்! நீ இப்பொழுது கூறிய கூற்றால் நீ முன்னர் 'வருவான் விடு' என்றது உண்மையென்று யான் தெளிந்தேன் என்முன்; எ - று.

பல்கால்யாங் * * * செலற்கே—எ-து, என்று பின்னர் யாம் முல்லைப்பூவைக் குருந்தம்பூவோடே முடியிலே சூடிப் பலகாலுங் காட்டாற்றில் விளங்குகின்ற மணலையுடைய குளிர்ந்த பொழிலிடத்து யாம் முன்பு தங்கும் அகன்ற பாறையிலே ஆயத்தோடே விளையாடுகையினாலே பகற்பொழுது போய் இராப்பொழுது வந்து தோன்றிற்று; அது வருவதற்குமுன்னர்ப் போகாமற் றாழ்க்கின் நம்மைக் கோபிப்பார்கள்; அதனை உணராது நீ இன்னங் காலங்கழியாநின்றாய்; பல பசுவினத்தினுடைய திரளுக்குள்ளே பாம்பு சேர்கையினாலே அதிரும் உருமினுடைய குரல்போல அதிரும் பொருகின்ற மாறுபாட்டினையுடைய நல்ல ஏறு நாகுடனே தம்மிற் கூடி நின்றன; அவைபோல நாமுங் கூடிச் சேரப்போதற்குக் கூட்டத்திற்கு உடம்படுவாயாக என்றான்; எ - று.

"ஓங்குகிளைத் தொடுத்த *பூசலம் பாப்போன்-முழுமுத றுமிய வருமெறிந் தன்றே" என்றார் பிறரும். யாங் கூட ஆயத்தோடு ஆடியெனத் தானுங் கூட ஆடினனென்றதனானும், பொழுது வைகிற் போதற்குந் தாந் தமக்குரியரல்லரென்றமையானும், ஏறும் நாகுங் கூடப் போமாறுபோல நாமுங் கூடப் போக என்றமையானும், வினைவலபாங்கினராயிற்று. அரவுறவெனத் திரிக்க.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சிவேட்கை பிறந்தது.

இது தரவும் இரண்டடியான் இரண்டுகொச்சகமுந் தனிச்சொல்லுங் குறுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் ஓரடியான் இரண்டுந் தனிச்சொல்லும் நெடுவெண்பாட்டுங் குறுவெண்பாட்டுஞ் சிந்தடியோரடியானொன்றும் ஐஞ்சீரும் வந்து போக்கிலக்கணமில்வழி ஆசிரியச்சுரிதகமும் பெற்ற உறழ்கலி. (௧௩)

௧௧௪. வாரி நெறிப்பட் டிரும்புறந் தாஅழ்ந்த
வோரிப் புதல்வ னழுதன னென்பவோ வோரும்
புதுவ மலர்தைஇ யெமரொன் பெயரால்
வதுவை யயர்வாரைக் கண்டு விலக்கி மதியறியா
வேழையை யென்றகல நக்குவந் தீயாய்நீ
தோழி யவனுழைச் சென்று ;

---

* அசப்பட்ட பிரதிகளனைத்தும் பூதலமென்றிருக்கின்றது.

சென்றியா னறிவேன் கூறுக மாற்றினி ;

சொல்லறியாப் பேதை மடவைமற் றெல்லா
நினக்கொரூஉ மற்றென் றகலகல நீடின்று
நினக்கு வருவதாக் காண்பா யனைத்தாகச்
சொல்லிய சொல்லும் வியங்கொளக் கூறு ;

தருமணற் ஞாழப்பெய் தில்பூவ லூட்டி
யெருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமண மெல்லாந் தனித்தே யொழிய
வரிமணன் முன்றுறைச் சிற்றில் புனைந்த
திருநுத லாயத்தார் தம்முட் புணர்ந்த
வொருமணந் தானறியு மாயி னெனைத்துந்
தெருமரல் கைவிட் டிருக்கோ வலர்ந்த
விரிநீ ருடுக்கை யுலகம் பெறினு
மருநெறி யாயர் மகளிர்க்
கிருமணங் கூடுத லில்லியல் பன்றே.

இஃது *"ஆங்கதன் புறத்துப் புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇ என்பது, அவன் வரைவுவேண்டின இடத்து அவ்வரைவு புறத்ததாகியவழித் தலைவி தன்னுயர்வு உண்டாகத் தோன்றிய மறுத்தலோடே முற்கூறியவற்றைத் தொகுத்து" என்று பொருள் கூறி, "அதன்புறமெனவே அதற்கு அயலாகிய நொதுமலர்வரைவாயிற்று" என்றும்; உயர்வு குடிப்பிறப்புங் கற்பும்; அதற்கேற்பப் பிறர்வரைவு மறுத்துத் தலைவன் வரையுமாறு நீ கூறெனத் தோழிக்குக்கூறியது.

(இ - ள்.) வாரி * * * சென்று—எ-து, தோழீ! புதியனவாகிய மலர்களைச் சூடி எம்முடைய சுற்றத்தார் என்பெயரைச் சொல்லிப் பெண்பிள்ளைக்கலியாணஞ் செய்கின்றவர்களைக் கண்டு வைத்துங் கோதி நெறித்தற்றொழிலிலே பட்டுப் பெரிய முதுகிலே தாழ்ந்துகிடக்கின்ற மயிரினையுடைய புதல்வன் அழுதனனென்பவோ? அங்ஙனங் கூறுவர்களாயின் நீ அவனிடத்தே சென்று இவ்வதுவை நின்னைவிட்டு அகலாநிற்க அது நின்னிடத்தே ஆம்படி வரைந்துகொள்ளும் மதியை அறியாத ஏழைத்தன்மையையுடையையென்று சிரித்துவாராயென்றாள் ; எ - று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், கசு-ம். சூத்.

கோதி நெறித்து முதுகிலே கிடக்கின்ற மயிரினையுடைய புதல்வனென்றதனாற் பயன், மயிர்முடி கூடி இளமை முதிர்ந்து காமச்செவ்வி அறிந்து களவொழுக்கத்திற்கு உரியனாயுந் தான் வரைந்துகொள்ளுந் தன்மை அறியாமல் இருமுதுகுரவர்கீழே நிற்கின்ற பிள்ளையாயிருக்கின்றவனென்பது உணர்த்திற்று.

அழுதனனென்பவோ என்றது நொதுமலர்வரைவு வந்துழியுந் தான் வரைவின்முயலாது வருந்தினனென்று ஊரிலுள்ளார் கூறுவர்களோ என்றவாறு. இஃது அழுகையென்னும் மெய்ப்பாடு. பெயராலென்பது உருபுமயக்கம்.

சென்றியா * * * மாற்றினி—எ-து, அதுகேட்ட தோழி அஞ்சிச்சென்று அவன் நிலையை அறிவேன், பின்னை அவற்குக் கூறுவனவற்றை இனிக் கூறுவாயாக என்றாள்; எ-று.

சொல்லறியாப் * * * கூறு—எ-து, அதுகேட்ட தலைவி மடவாய்! நீ அவனிடத்தே சென்று எடா! நின்குரவரை நோக்கி இவ்வதுவை என்னிடத்தேயாகவேண்டுமென்று சொல்லுஞ் சொல்லை அறியாத பேதையாகையினாலே இவ்வதுவை நினக்குரித்தன்றி அகலும் அவ்வகற்சிதான் நீட்டித்தலில்லை; அது நொதுமலர்க்கின்றி நினக்குவருவதாக நெஞ்சாலே காண்பாய்; அங்ஙனங் காணாயாயின் அது நின்னை ஒருவுமென்று நீங்கு; அங்ஙனம் நீங்கும்பொழுது இவ்வதுவை தனக்குரித்தாக முயலும்படி நீ சொல்லிய சொற்றானும் முன்பு வரைவுகடாயவுஞ் சொல்லாத அவன் நினையாமல் நின் ஏவலை அவன் மனங்காரியமென்றே கொள்ளும்படி கூறுவாயாக என்றாள்; எ-று.

மடவாயென்றாள் ஆண்டுச் கூறுவனவற்றைத் தான் அறியாள்போலத் தன்னை வினாயினமைபற்றி.

தருமணற் * * * பன்றே—எ-து, என்று பின்னுந் தோழியை நோக்கி, ஆராய்ந்துபார்க்கில், அறலினையுடைத்தாகிய மணலினையுடைய துறையின்முன்னே சிற்றிலிழைத்து விளையாடிய அழகிய நுதலினையுடைய ஆயத்தார் தம்முள்ளே நின்று யான் தனியே நீங்கினேனாக அவன் புணர்ந்த ஒருமணத்தை நம்முடைய நெஞ்சு தான் அறியும்; அங்ஙனம் அறிந்திராநிற்கவுங், கொண்டுவந்து குவித்த மணலைத் தங்கப் பரப்பி இல்லைச் செம்மண்ணைப்பூசித் தெய்வமாக வைத்த எருமையாகிய பேட்டின் கொம்போடே எம்முடைய

சுற்றத்தார் இவ்விடத்து நடத்தும் பெண்பிள்ளைக் கல்லியாணமெல்லாம் அவனையின்றி வேறுசிலரிடத்தே தங்குகையினாலே இருமணம் உண்டாகாநின்றது; இவ்விருமணம் பரந்த திரை விரிகின்ற கடலை உடுக்கையாகவுடைய உலகத்தைப் பெறினும் அரிய நெறியையுடைய ஆயர்மகளிர்க்கு உண்டாதல் குடிப்பிறப்பிற்கு இயல்பன்றென்று யான் தெருமருதலைச் சிறிது கைவிட்டிருக்கவோ? கைவிட்டிருக்கிற் குடிப்பழுதுமாய்க் கற்பும் நீங்குமன்றோ என்றாள்; எ-று.

இனி, இருமணங்கூடுதல் இயல்பன்றாயிருக்க ஒருமணந்தான் அறியுமாயிற் பெருமணமெல்லாந் தனித்தே ஒழியச்செய்தே தெருமரல் கைவிட்டிருக்கோ என்றாற் பொருண்முடியாமை காண்க.

இதனாற் தலைவிக்குத் தம் மறையால் அச்சமே தோன்றிற்று.

எருமைப்பெடையென்றது *"பேடையும்பெடையும்" என்னுஞ் சூத்திரத்து நாடினென்றதனால் அமைத்தாம்.

இது வெள்ளைக்கொச்சகமும் ஓரடியானென்றுங் கொச்சகமும் போக்கிலக்கணமில்லா ஆசிரியச்சுரிதகமும் பெற்ற உறழ்கலி.(கச)

கக௫: தோழிநாங்,காணாமையுண்டகடுங்கள்ளைமெய்கூர
நாணாது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய்நம்
புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்
முல்லை யொருகாழுங் கண்ணியு மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மற் றோழியாய்
வெண்ணெ யுரைஇ விரித்த கதுப்போடே
யன்னையு மத்தனு மில்லரா யாய்நாண
வன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ;

அதனை, வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யா
ணெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள் யானுமென்
சாந்துளர் கூழை முடியா நிலந்தாழ்ந்த
பூங்கரை நீலந் தழீஇத் தளர்பொல்கிப்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், கூ-ம் சூத்.

பாங்கருங் கானத் தொளித்தே னதற்கெல்லா
மீங்கெவ னஞ்சு வது ;

அஞ்சல், அவன்கண்ணி நீபுனைந்தா யாயி னமரு
மவன்க ணடைசூழ்ந்தார் நின்னை யகன்கண்
வரைப்பின் மணற்றாழப் பெய்து திரைப்பில்
வதுவையு மீங்கே யயர்வ ரதுவேயா
மல்கலுஞ் சூழ்ந்த வினை.

இது தலைவி களவு வெளிப்பட்டதென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல எமர் நின்னை அவர்க்கே கொடுக்கச் சூழ்ந்தாரெனச் சொல்லி அச்சம் நீக்கியது.

(இ - ள்.) தோழிநாங் * * * பூ—எ-து, மெல்லிய இயல்பினையுடையாய்! நம்யாட்டினத்தையுடைய ஆயர்மகன் சூடிவந்ததொரு முல்லைத்தொடையினையும் அதனோடுசெயததோர் கண்ணியையுங் கூந்தலிலேயிட்டு மிகவும் முடித்தேன்; அப்பூச் செவிலித்தாய் வெண்ணெய்தேய்க்க விரித்த மயிரோடே நற்றாயுந் தந்தை முதலியோரும் இல்லிடத்தேயிராநிற்க நற்றாயுங் கெட்டுநாணும்படியாகச் செவிலிமுன்னே வீழ்ந்தது; ஆகையினாலே தோழீ! பிறர் காணாமையுண்ட கள்ளின்களிப்பு மெய்யிடத்தே தோன்றி மிகுகையினாலே பின்னை நாணுமற்சென்று பிறர் நடுங்கும்படி அக்கடுங்கள்ளைத் தாமுண்டபடியை உரைத்தாற்போலே நாங் கரந்த களவொழுக்கமுங் கையோடே பிடித்துக்கொள்ளப்பட்டேங் காணென்றாள்; எ - று.

அதனை * * * வது—எ-து, பின்னரும் அப்பூவை இது வந்தபடி என்னென்று கேட்டலுஞ் செய்யாளாய்ச் சினத்தலுஞ் செய்யாளாய் நெருப்பைக் கையாலே தீண்டினவர்கள் தங்கையைப் பிதிர்க்குமாறுபோலக் கையைப் பிதிர்த்து நீங்கிப் புறமாகிய புறத்தே போனாள்; அவள் போன பின்பு யானும் என்னுடைய மயிர்ச்சந்தனமும் பூசி உலர்த்தின மயிரை முடித்து நிலத்தே தாழ்ந்த பூத்தொழிலையுடைத்தாகிய கரையினையுடைய நீல ஆடையைக் கையாலே சிறிதேறத் தழுவிக்கொண்டு அச்சந்தாற் றளர்ந்து நடந்து பக்கத்திலுண்டான செல்லுதற்கரிய கானத்திலே சென்று ஒளித்தேனென்றாள்; அதுகேட்ட தோழி எடீ! அப்பூவீழ்ந்ததற்கு நீ இவ்விடத்து அஞ்சுவது என்னகாரியத்திற்கென்றாள்; எ - று.

அஞ்சல் * * * வினை—எ-து, என்று, பின்னும் நின் தலைவன் கண்ணியை நீ சூடினாயாயின் அதற்கேற்ப நம்முடைய சுற்றத்தாரும் நின்னை அவனிடத்தே அடுத்தலைச் சூழ்ந்தார் ; அதுவேயன்றி அகன்ற இடத்தையுடைய முற்றத்தே மணலைத் தங்கப்பெய்து திரையிட்டுக் கல்யாணமும் இப்பொழுதே செய்வார்கள் ; பகலேயன்றிப் போன இரவிலும் ஆராய்ந்த காரியம் அக்காரியமேயாம் ; நீ அஞ்சாதேகொள்ளென்றாள் ; எ - று.

இதனாற் தலைவிக்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கி வந்த தரவும் பாட்டுஞ் சுரிதகமும் பெற்ற கலிவெண்பா. (கரு)

கககசு. பாங்கரும் பாட்டங்காற் கன்றொடு செல்வேமெந்
தாம்பி னொருதலை பற்றினை யீங்கெம்மை
முன்னைநின் றங்கே விலக்கிய வெல்லாநீ
யென்னேமுற் றாஅய் விடு;

விடேன், தொடீஇய செல்வார்த் துமித்தெதிர் மண்டுங்
கடுவய நாகுபோ னோக்கிக் கொடுமையா
னீங்கிச் சினவுவாய் மற்று;

நீநீங்கு, தன்கன்று சேர்ந்தார்கட் கதவிற்றாய் சென்று
வன்கண்ண ளாய்வர லோம்பு ; [ங்கு

யாய்வருக வொன்றோ பிறர்வருக மற்றுநின்
கோவரினு மிங்கே வருக தளரேன்யா
னீயருளி நல்கப் பெறின் ;

நினைஇயான் சொல்லினவும் பேணாய் நினைஇக்
கனைபெய லேற்றிற் றலைசாய்த் தெனையதூஉ
மாறெதிர் கூறி மயக்குப் படுகுவாய்
கலத்தொடியாஞ் செல்வுழி நாடிப் புலத்தும்
வருவையா னணிலி நீ.

இது வினைவலபாங்கிற் தலைவியை ஆற்றிடைக்கண்டு விலக்கிய தலைவனோடு அவள் சில மொழிகூறிக் குறியிடங் கூறியது.

(இ - ள்.) பாங்கரும் * * * விடு—எ-து, மினைப்பச்கத்திற், பிறர் சேருதற்கரிய, நாம் பயிர் செய்யுந், தோட்டத்திடத்தே சன்றோடு போகாநின்றேம்; அங்ஙனம் போகின்ற எம்முடைய கையிற் தாம்பின் ஒரு தலையைப் பிடித்தனையாய் எம்மை இவ்விடத்தே முன்பேயும் ஒருத்தர் நின்று விலக்கினாைப்போலே விலக்குதற்கு எடா! நீ என்ன பித்தேறினாய்? நீ என்னைப் போகவிடு என்றாள்; எ-று.

விடேன் * * * மற்று—எ-து, அதுகேட்டு அவன் யான் நின்னைப் போகவிடேன்; தன்னைத் தீண்டுதற்குச் செல்லும் அவர்களை இடையே விலக்கி எதிரே மிக்குச்செல்லுங் கடிய வலியினையுடைய நாகுபோலே செறுத்து நோக்கித் தொழுவின் வாயிலினின்றும் போந்து நின்று பின்னைச் சினப்பாயென்றான்; எ-று.

நீநீங்கு * * * லோம்பு—எ-து, அதுகேட்டு அவள் நீ இவ்விடத்துநின்றும் போ; அதுவென்னெனில் தன்னுடைய கன்றைச் சேர்ந்தார்மேலே கோபத்தையுடைய புனிற்றுச் சென்றாற்போல நீ என்மேலே வந்தது காணில் யாய் தறுகண்மையையுடையளாய் வந்து சீறுதலுமுண்டு காண், அவ்வரவை நீ பேணிக்கொள்வாய்; எ-று.

யாய்வருக * * * பெறின்—எ-து, அதுகேட்டு அவன் நீ அருள்செய்து என்னைக் கூடப்பெறின், அவ்விடத்தே ஒன்று தாய் வருக, ஒன்று அயலார் வருக, அவர்களேயன்றிப் பின்னை நின் தந்தைதான் வரினும் வருக, அதற்கு யான் வருந்தேனென்றான்; எ-று.

நினைஇயான் * * * நீ—எ-து, அதுகேட்ட தலைவி நின்னை யான் எத்தன்மையவாகவுஞ் சொன்ன வார்த்தைகளைப் பரிகரியாயாய்க் கூட்டத்தையே நினைந்து செறிந்த மழையிடத்து ஏறுபோலே தலையைச் சாய்த்து யான் கூறியவற்றிற்கு எதிராகச் சில சொற்களைக் கூறி இங்ஙனம் மயக்கமுறுகின்றவனே! நாணமில்லாதவனே! நீ கறவைக்கலத்தோடே யாஞ் செல்லும் பசுமேய்க்கின்ற இடத்தையும் நாடி என் தமையன்மார் நிற்கும் புலத்திலும் வருவையாயிருந்தாய்; ஆண்டுக் கூடுதுமெனக் குறியிடங் கூறினாள்; எ - று.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (சகூ)

௧௧௭. மாண வுருக்கிய நன்பொன் மணியுரீஇப்
பேணித் துடைத்தன்ன மேனியாய் கோங்கின்
முதிரா விளமுகை யொப்ப வெதிரிய
தொய்யில் பொறித்த வனமுலையாய் மற்றுநின்
கைய தெவன்மற் றுரை;

கையதை, சேரிக் கிழவன் மகளேன்யான் மற்றிஃதோர்
மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்ததோர்
போழிற் புனைந்த வரிப்புட்டில் புட்டிலு ளென்னுள
காண்டக்கா யெற்காட்டிக் காண்;

காணினி, தோட்டார் கதுப்பினென் றோழி யவரொடு
காட்டுச்சார்க் கொய்த சிறுமுல்லை மற்றிவை
முல்லை யிவையாயின் முற்றிய கூழையா
யெல்லீற்றுப் போழ்தாயி னீத்தொளிக் கண்டேனாற்
செல்லென்று நின்னை விடுவென்யான் மற்றெனக்கு
மெல்லிய தோரா வறிவு.

இஃது ஆற்றிடைத் தலைவன் தலைவியைக் கையது வினாய்ச் சேர்ந்தது.

(இ-ள்.) மாண * * * றுரை—எ-து, மாட்சிமைப்பட உருக்கி ஓடவைத்த நல்ல பொன்னிலே நீலமணியை அழுத்திப் பேணி ஒப்பமிட்டாற்போன்ற கரிய நிறத்தையுடையாய்! முதிராத கோங்கினது இளைய முகையையொப்பத் தோன்றின தொய்யிலெழுதின வனமுலையையுடையாய்! பின்னை நின் கையிடத்தது யாதுதான் உரையென்றான்; எ-று.

கையதை * * * காண்—எ-து, அதுகேட்டு அவள் என் கையிடத்தது, இச்சேரிக்குரிய இடையர்மகளாயிருப்பேன் யான், பின்னை என் கையில் இருக்கின்ற இது காதலையுடைய புலைத்தி விற்கப்படுவதொன்றாக முடைந்ததொரு புட்டில்; அதுதான் பின்பு பனங்குருத்தின் வகிரால் பொத்தின தொழிலையுடைய புட்டிலென்றாள்; அது கேட்டு அவன் காட்சிதக்கவளே! இப்புட்டிலுள் என்னபண்டங்களுள? அவற்றை எனக்குக் காட்டிக்காணென்றான்; எ-று.

காணினி * * * வறிவு—எ-து, அதுகேட்டு அவள் இனிக் காண்பாயாக; பின்னை இவை இதழாலே நிறையப்பட்ட மயிரினையுடைய என் தோழி ஆயத்தாருடனே காட்டிடத்தே பறித்த சிறுமுல்லையென்றாள்; அதுகேட்டு அவன் முடிகூடின மயிரினையுடையாய்! யான் தனியே இவ்விடத்தே கண்டேனாயிருந்த இவை முல்லைப்பூவாயின், இவை தொடுத்துமுடித்து நாங் கூடுதற்குப் பொழுதாயின், ஒளி இத்தன்மைத்தாயிராநின்றது; நின் நினைவு போக்கிலேயாகில் யான் போவென்று விடுவதுஞ் செய்வேன்; பின்னை எனக்கு நின்னைப் போகவிடுதலை ஓராது இவண் என் அறிவு இளைத்திராநின்றது; இனி இக்கூட்டத்திற்கு உடம்பட நில்லென்றான்; எ - று.

இது ஒளி ஈதொளியெனச் சுட்டு நீண்டு நின்றது. இது சுட்டுமுதலாகிய இகரவீற்று வல்லெழுத்து மிக்கு நின்றது.

இதனால் இருவர்க்கும் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது கொச்சகக்கலி. (௪௭)

முல்லைக்கலி முற்றும்.

## ஐந்தாவது நெய்தற்கலி.

கக௮. வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தா
னல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த [போற்
தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம்வேட் டெழுந்தாற்
பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர
வானூது கலுழ்கொண்ட வுலகத்து மற்றவ
னேனையா னளிப்பான்போ லிகலிருண் மதிசீப்பக்
குடைநிழ லாண்டாற்கு மாளிய வருவாற்கு
மிடைநின்ற காலம்போ லிறுத்தந்த மருண்மாலை;

மாலைநீ, தாவறத் துறந்தாரை நினைத்தலிற் கயம்பூத்த
போதுபோற் குவிந்தவென் னெழினல மெள்ளுவா
யாய்சிறை வண்டார்ப்பச் சினைப்பூப்போற் றளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்;

மாலைநீ, தையெனக் கோவலர் தனிக்குழ லிசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்
செவ்வழியாழ் நரம்பன்ன கிளவியார் பாராட்டும்
பொய்தீர்ந்த புணர்ச்சியுட் புதுநலங் கடிகல்லாய்;

மாலைநீ, தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ளார்ப்பப்
பகைமிக்க நெஞசத்தேம் புன்மைபா ராட்டுவாய்
தகைமிக்க புணர்ச்சியார் தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகந் திறந்தன்ன முறுவலுங் கடிகல்லாய்;

எனவாங்கு,

மாலையு மலரு நோனா தெம்வயி
னெஞ்சமு மெஞ்சுமற் றில்ல வெஞ்சி
யுள்ளா தமைந்தோ ருள்ளு
முள்ளி லுள்ள முள்ளு ளுவந்தே.

இது பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுது கண்டு அத
னோடு புலம்பித் தோழிகேட்ப அதனோடு புலந்தது.

(இ - ள்.) வெல்புகழ் * * * மருண்மாலை—எ-து, பகைவரிடத்துப் போர்த்தொழில் நிகழ்த்த வல்ல விளங்கிய ஒழுக்கத்தாலே வெல்கின்ற புகழையுடைய அரசன் நல்ல தருமநூல்நெறியாலே பல்லுயிர்களையும் பாதுகாத்துத் தீவினையால் உளதான நடுக்கம் மனத்திலில்லையாம்படி தான்செய்த பழவினையின்பயனை நுகர்தற்குச் சுவர்க்கத்தை விரும்பிப் போனாற்போலப், பலகதிரையுடைய ஞாயிறு தனக்குப் பகையாகிய இருளைக் கெடுத்து உலகத்திற்குப் பகற்பொழுதை முறைமையாற் செலுத்தி மலையிலே சென்று சேராநிற்க, அமையாதே கலக்கங்கொண்ட உலகத்தினிடத்தே பின்னை அவ்வரசனுக்குப் பகைவனாகிய அரசன் வந்து அவ்வுலகைச் சிறிதே அளிப்பான்போலத், தனக்கு மாறுபாட்டையுடைய இருளை மதி போக்காநிற்க, அந்தக்குடையால் நிழல்செய்து ஆண்ட அரசனுக்கும் அவ்வுலகை ஆளவரும் அரசனுக்கும் நடுவுநின்ற வருத்தந்தருகின்ற காலம்போல வந்துவிட்ட மாலாய்! நீ மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றாள்; எ - று.

மாலைநீ * * * கடிகல்லாய்—எ-து, அதற்குக் காரணம் என்னெனில் நமக்கு வலியில்லையாம்படி நம்மைத் துறந்தவரை நினைக்கையினாலே கயங்கள்பூத்த போதுபோலே நின்னைக்கண்டு மனங்குவிந்த என்னுடைய அழகினையுடைய நலத்தை இகழ்கின்ற நீ அழகிய சிறகினையுடைய வண்டுகள் ஆரவாரிக்கும்படி முறுக்குநெகிழ்ந்த கோட்டுப்பூப்போலே மனநெகிழ்ந்து காதலரைக் கூடியிருக்கின்ற மகளிருடைய அழகைப் போக்கமாட்டாயென்று அதன் மருட்சி கூறினாள்; எ - று.

இதனால் நீ வருத்தினவர்களை வருத்தியே விடுவையென்றும் மகிழ்ந்தவர்களை மகிழப்பண்ணியே விடுவையென்றும் அதன் அருளின்மைநோக்கி மருட்சியையுடைய மாலையாய் இருந்தாயென்றாள்.

இறுத்தந்தமாலாய்! நீ மருண்மாலையாய் இருந்தாயென மேல்வரும் 'மாலைநீ' 'மாலைநீ' என்பனவற்றையும் இங்ஙனங் கூட்டிப் பொருள்கூறிக்கொள்க.

மாலைநீ * * * கடிகல்லாய்—எ-து, கோவலருடைய தனித்தகுழலோசை தையென்னும் ஓசைப்பட ஒலிப்ப அதுகேட்டுக் குறைந்த நெஞ்சத்தையுடையேம் பக்கத்தேநின்று உயிரைக்கொள்ளாதே விநோதித்துப் பாராட்டுகின்ற நீ தங்கணவர் பிரிந்த காலத்

துச் செவ்வழியென்னும் பண்ணையுடைய யாழினது நரம்போசை போல வருந்திக்கூறும் மொழியினையுடைய மகளிர் அக்கணவர் வருந் தின் எம்போற் கனவிற்புணர்ச்சியின்றிப் பாராட்டப்படும் நனவிற் புணர்ச்சியிற்பெற்ற புதியநலத்தைக் கடியமாட்டாய்; எ-று.

மாலைநீ * * * கடிகல்லாய்—எ-து, அழகு மிக்க தாழ்ந்த சினைகளிற் தமக்கிருப்பிடத்தே பேடுஞ்சேவலுமாகச் சேர்ந்து பறவை கள் ஆரவாரியாநிற்க, மற்றுள்ள பகைகளாலும் வருத்தமிக்க நெஞ் சத்தினையுடையேம் புன்மையை யாங்கள் இறந்துபடாதபடி பண்ணி வினைதித்துப் பாராட்டுகின்ற நீ அழகு மிக்க கூட்டத்தையுடைய மகளிரது தாழ்ந்த கொடியினையுடைய நறிய முல்லையினுடைய மு கையின் முகத்தை வண்டுகள் திறந்தாற்போல ஆடவராற் திறக்கப் படும் முறுவலையுங் கடிய மாட்டாய்; எ - று.

எனவாங்கு அசை.

மாலையு * * * ளுவந்தே—எ-து, நம்மைப் பிரிந்து உள் ளில்லாத உள்ளத்தாலே நம்மை நினையாமல் அமைந்திருந்தோனை உள்ளே உள்ளே உவந்து உள்ளும் நம்முடைய நெஞ்சமும் இம் மாலையையும் ஊரார் கூறும் அலரையும்பொருதே நம்மைவிட்டுப் போ காநின்றது; இனி என்செய்வேமென வருந்திக் கூறினாள் ; எ-று.

இதனாற் தலைவிக்கு இழிவு பிறந்தது.

இது *"நடைநவின்றொழுகு மாங்கென்கிளவி" என்ற இலக் கணஞ் சிதைய இடையிடை சொற்சீரடி வருதலின் ஒத்தாழிசையா காது எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகமாயிற்று.

இது முதலிய மூன்றுபாட்டும் மாலைக்காலத்தைக் கூறின மையின் †"காருமாலையுமுல்லை" என்னும் பொதுவிதிபற்றி முல்லை யுட்சோத்தல்வேண்டுமெனின், அது பெரும்பான்மைபற்றிக்கூறியது; மாலை எற்பாட்டின் பின் நிகழுங் காலமாதலின் அதற்கியைபுபட்டு நெய்தற்கும் உரித்தாயிற்று. அது ‡"திணைமயங்குறுதலும்" என் னுஞ் சூத்திரத்து "நிலனொருங்குமயங்குதலின்று" என்றதனாற் கால மொருங்கு மயங்குமென்றது கொண்டு சான்றோர்பலருஞ் செய்யுள்

* தொல்காப்பியம்,-பொருளதிகாரம், செய்யுளியல், ககூ௯-ம் சூத்.
† தொல்காப்பியம், ,, அகத்திணையியல், கூ-ம் ,,
‡ ,, ,, ,, கஉ-ம் ,,

செய்தார். "கானன்மாலைக்கழிப்பூக்கூம்பும்" என்னும் அகப்பாட்டு நெய்தற்கண் மாலைவந்தது. "தொல்லூழிதடுமாறி" என்னும் நெய்தற் கலியுட் கங்குலும் மாலையும் முன்பனியும் வந்தவாறுகாண்க. இந் நிலத்து மாலைவந்த பாட்டுக்கள் பலவுமுள. பிற சான்றோர் செய் யுட்களுட் காலம் மயங்குமாறு பலவுங் கண்டுகொள்க. (க)

கககூ. அகன்ஞாலம் விளக்குந்தன் பல்கதிர் வாயாகப்
பகனுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர
விகன்மிகு நேமியா னிறம்போல விருள்வர
நிலவுக்காண் பதுபோல வணிமதி போதரக்
கண்பாயல் பெற்றபோற் கணைக்கா லலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார்போற் றலைசாய்த்து மரந்துஞ்ச
முறுவல்கொள் பவைபோல முகையவிழ்பு புதனந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்பிமிர்ந் திம்மெனப்
பறவைதம் பார்ப்புள்ளக் கறவைதம் பதிவயிற்
கன்றமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர
மாவதி சேர மாலை வாள்கொளா
வந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ ளொடங்க வந்ததை
வாலிழை மகளி ருயிர்போதி யவிழ்க்குங்
காலை யாவ தறியார்
மாலை யென்மனார் மயங்கி யோரே.

இது பிரிவிடை மாலைப்பொழுதுகண்டு ஆற்றாத தலைவி தோ ழிக்கு உரைத்தது.

(இ-ள்.) அகன்ற உலகத்தை எவ்வுயிர்க்குந் தோற்றுவிக் குந் தன்னுடைய பலகிரணங்களைத் தனக்கு வாயாகக் கொண்டு காண்ற பகற்காலத்தை மீண்டும் அவ்வாயாலே விழுங்கினாற்போல அவற்றைச் சுருக்கிக்கொண்டு படுகின்ற சுடர் அத்தகிரியைச் சேர் கையினாலே போரின்கண் மிகுகின்ற சக்கரப்படையையுடைய மா யோன் நிறம்போல இயல்பாகவுள்ள இருள் பரந்துவாராநிற்க, அத னைப் பொறாதே தன் நிலவாலே ஓட்டிப் புறங்காண்பானைப்போ லே அழகினையுடைய மதிதோன்றச், கணவனைக் கூடித் துயிலைப் பெற்ற கண்கள் போலே திரண்ட தண்டுகளையுடையவாகிய தாம

ரைமுதலியன குவியத், தம் புகழ்களைக் கேட்ட சான்றோனாட்போலே தலையைச் சாய்த்து மரங்கள் துயிலச், சிறுதூறுகள் பிரிந்த மகளிரை இகழ்ந்து சிரிப்பவைபோலே முகைகள் அவிழ்ந்து விளங்கச், சிறிய மூங்கிலாகிய குழல்போலச் சுரும்புகள் ஆர்ப்பரவஞ்செய்து பாடப், புட்கள் தம் பார்ப்புக்களை நினைத்துக் குடம்பையைச்சேரப், பசுக்கள் தாம் தங்கும் ஊர்களிடத்திற் கன்றின்மேல் அமர்ந்த விருப்பந்தோடே மன்றுகணிறையப் புகுதலைச்செய்ய, மாக்கள் தாம் தங்குமிடத்தே சென்று தங்க, அந்தணர் தாஞ் செய்யுந் தொழில்களைச் செய்து அந்திக்காலத்தை எதிர்கொள்ள, மகளிர் செந்தீயால் உண்டான விளக்கை ஏற்றத் தொடங்க, மாலை விளக்கங்கொள்ள வந்ததனை அறிவுகெட்டோர் வாலிய இழையினையுடைய மகளிர் உயிரை அதனைப் பொதிந்துநின்ற உடலினின்றும் போக்குங் காலத்தினது இயல்பாவதறியாராய் மாலைக்காலம் என்று அதுவும் ஒருகாலமாகக் கூறுகிற்பரென ஆற்றளாய்த் தோழிக்குக் கூறினாள்; எ-று.

கல்சேர்கையினாலே இருள்வாராநிற்க அது பொழுது மதிதோன்ற என ஒருவினையாகமுடிக்க. "பகல்காண் டெழுதரும் பல்கதிர்ப் பரிதி" என்றார் பிறரும்.

மதிபோதர என்பது முதலிய செயவெனெச்சங்கள் எல்லாம் நிகழ்காலமுணர்த்திநின்று மாலைவாள்கொளா என்னுஞ் செய்யாவெனெச்சத்தோடு முடிந்தன. அது பின் வந்ததை என்னுந் தொழிற்பெயர்த் திரிசொல்லோடு முடிந்தது.

மயங்கியோர் என்றது தோழியைக்கருதி. *"திணைமயங்குறுதலும்" என்றதனாற் கருப்பொருண்மயங்குதலும் அமைத்தாம்.

இனி மாலைவாழ்கொளவென்று பாடமாயின் அப்பாடத்திற்கு மாலை தான் வாழ்தல்கொள்ள வந்ததனை என்க.

அளறுடங்க என்பதும் பாடம்.

இதனாற் தலைவிக்கு இழிவுபிறந்தது.

இஃது அடக்கியலின்றி அடிநிமிர்ந்தோடிய கொச்சகவொருபோகின் பகுதியாய்த் தனிச்சொல்லும் அடக்கியலுமின்றிச் சுரிதகம் பெற்று அடிநிமிர்ந்தோடிய அகநிலைக்கொச்சகம். (௨)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், கஉ - ம் சூத்.

௧௨௦. அருளுற்றகாட்சியானறனேக்கானயஞ்செய்யான்
வெருவுற வுய்த்தவ னெஞ்சம்போற் பையய
விருநேர்பு புலம்பூரக் கனைசுடர் கல்சேர
வுரவுத்தகை மழுங்கித்தன் னிடும்பையா லொருவனை
யிரப்பவ னெஞ்சம்போற் புல்லென்று புறமாறிக்
கரப்பவ னெஞ்சம்போன் மரமெல்லா மிலைகூம்பத்
தோற்றஞ்சால் செக்கருட் பிறைநுதி யெயிறாக
நாற்றிசையு நடுக்குறாஉ மடங்கற் காலைக்
கூற்றுநக் கதுபோலு முட்குவரு கடுமாலை ;

மாலைநீ, உள்ளங்கொண் டகன்றவர் துணைத்தாராப்பொ
ழுதின்கண் [ன்போ
வெள்ளமா னிறநோக்கிக் கணைதொடுக்குங் கொடியா
லல்லற்பட் டிருந்தானா யயர்ப்பிய வந்தாயோ;

மாலைநீ, ஈரமில் காதல ரிகந்தருளா விடனேக்கிப்
போர்தொலைந் திருந்தாரைப் பாடெள்ளி நகுவார்போ
லாரஞ ருற்றுரை யணங்கிய வந்தாயோ;

மாலைநீ, கந்தாதல்சான்றவர்களைதாராப்பொழுதின்கண்
வெந்ததோர்புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்
காய்ந்தநோ யுழப்பாரைக் கலக்கிய வந்தாயோ; [போற்

எனவாங்கு,

இடனின் றலைத்தரு மின்னுசெய் மாலை
துனிகொ டியர்தீரக் காதலர் துணைதர
மெல்லியான் பருவத்து மேனின்ற கடும்பகை
யொல்லென நீக்கி யொருவாது காத்தோம்பு
நல்லிறை தோன்றக் கெட்டாங்
கில்லா கின்று விருளகத் தொளித்தே.

இது பிரிவிடையாற்றாத தலைவி மாலைப்பொழுதுகண்டு கழிய ஆற்றாளாயின இடத்துத் தலைவன் வரவும் அவளது அகமலர்ச்சியுங் கண்டார் கூறியது.

(இ - ள்.) அருளுர்க்த * * * கடுமாலை—எ-து, அருள் ஒருகாலத்தும் இல்லையான அறிவாலே, அறஞ்செய்தல் இருமைக்கும் பயன்றரும் என்று கருதானாய்ப், பண்புஞ் செய்யானாய், எல்லாரும் வெருவுதலுறும்படி தனக்குள்ள நாளைப் பயன்படாமற் செலுத்தினவனுடைய நெஞ்சின் மருட்சிபோலே, மெத்தென மெத்தென இருளாலே உலகம் நிறைந்து கணவரைப் பிரிந்தோர்க்குத் தனிமை மேலிடும்படி செறிந்த சுடரையுடைய ஞாயிறு அந்தகிரியைச் சேர, மிடியாலே இரத்தற்கஞ்சினவன் வலியின் தகைமை கெட்டுச்சென்று ஒருவனை வேண்டுகின்றவனுடைய நெஞ்சுபோலே, மரமெல்லாம் முதற் பொலிவழிந்து, பின்பு அம்மரமெல்லாம் இரப்பாரைக்கண்டு இருந்தவிடத்தினின்றும் எழுந்திருந்து போய் மறைகின்றவனெஞ்சு கண்ணோடாது குவியுமாறுபோல, இலைகள் எல்லாங் குவிய, வருகின்ற மாலாய்! நீதான் நாலு திக்குஞ்சேர நடுக்கமுறும் ஊழிமுடிவாகிய காலத்திலே கூற்றுவன் விளக்கம் அமைந்த செக்கர்வானிடத்துத் தோன்றின நுதியையுடைய பிறை தனக்கெயிறாகக் கொண்டு பல்லுயிரையுஞ் சேரக் கோடற்கு நக்காற்போலும் உட்குதலையுடைய கடியமாலையாய் இருந்தாய்; எ - று.

முன்னர் நின்ற மாலை உட்குதலையுடைய மாலையெனப் பின்னர் வந்த மாலை விசேடித்து நின்றது.

மாலைநீ * * * வந்தாயோ—எ-து, இங்ஙனங் கடிய நீ என் நெஞ்சைத் தம்மிடத்தே கொண்டு நீங்கினவர் எனக்குத் துணையாந்தன்மையைத் தாராத காலத்திலே வெள்ளத்திலே அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானினது மருமத்தைப் பார்த்து அம்பைத் தொடுக்குங் கொடியவனைப்போலே அல்லலிலே அழுந்தியிருந்த என்னைக் கையறவெய்துவிக்க வந்தாயோ? எ – று.

மாலை நீ என வருகின்றவற்றையுந் தரவொடு கூட்டி முற்கூறியவாறே பொருளுரைக்க.

மாலைநீ * * * வந்தாயோ—எ-து, இங்ஙனங் கடிய நீ அருளில்லாத காதலர் விட்டுநீங்கி அருளாதிருந்த காலத்தைப்பார்த்துப் போரிலே தோற்றிருந்தவர்களை அவர்கள்பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப்போலே பொறுத்தற்கரிய வருத்தமுற்ற என்னை வருத்துவிக்க வந்தாயோ? எ - று.

போர்தொலைந்திருந்தார் தொழிலின்றொழில் தொழிலுடைய தன்மேல் நின்றது.

மாலைநீ * * * வந்தாயோ—எ-து, இங்ஙனங் கடிய நீ எனக்குப் பற்றுக்கோடாதலை அமைந்தவர் என் வருத்தத்தைப் போக்குதலைச்செய்யாத காலத்தே முன்பே வெந்ததொருபுண்ணிலே பின்பு ஒருவேலைக்கொண்டு சொருகுவாரைப்போலே மெய்வெதும்புதற்குக் காரணமான காமநோயிலே அழுந்துகின்ற என்னை உள்ளி உள்ள அறிவையுங் கலங்குவிக்க வந்தாயோ? எ - று.

எனவாங்கு—எ-து, என்று அவள் கூறும்படியாக, எ-று.

ஆங்கு அசை.

இடனின் * * * தொளித்தே—எ-து, ஆற்றுதற்கோரிடமின்றாக அலைத்தலைச்செய்யும் பொல்லாங்கே செய்யும் மாலைக்காலத்தாலே வெறுப்புக்கொண்ட வருத்தந் தீரும்படி காதலர் விரைந்து வருகையினாலே, அம்மாலை இராக்காலத்திடத்தே சென்றொளித்து, நாற்படையாலே இளைத்த அரசன் இளைத்த பருவத்தே அவனுக்கு மேலாய்வந்த கடியபகையானது அந்தப் பகைமையை விரையப் போக்கி நீங்காமல் நின்று காத்து நடத்தும் நல்ல இறைவன் வந்து தோன்றக் கெட்டுப்போனாற்போலே, இல்லையாகாநின்றதெனக் கண்டோர் கூறினர்; எ - று.

பகைகெட்டாங்கு மாலை ஒளித்து இல்லாகின்றதென்க.

இதனாற் கண்டோர்க்கு ஆக்கம்பற்றிய மருட்கை பிறந்தது.

இஃது இடையிடை சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகம். (௩)

௧௨௧. ஒண்சுடர் கல்சேர வுலகூருந் தகையது
தெண்கட லழுவத்துத் திரைநீக்கா வெழுதரூஉந்
தண்கதிர் மதியத் தணிநிலா நிறைத்தரப்
புள்ளின மிரைமாந்திப் புகல்சேர வொலியான்று
வள்ளிதழ் கூம்பிய மணிமரு ளிருங்கழி
பள்ளிபுக் கதுபோலும் பரப்புநீர்த் தண்சேர்ப்ப;

தாங்கருங் காமத்தைத் தணந்துநீ புறமாறத்
தூங்குநீ ரிமிழ்திரை துணையாகி யொலிக்குமே

யுறையொடு வைகிய போதுபோ லொய்யென
நிறையாற்று திழிதரூஉ நீர்நீந்து கண்ணாட்கு;

வாராய்நீ புறமாற் வருந்திய மேனியாட்
காரிருட் டுணையாகி யசைவளி யலைக்குமே
கமழ்தண்டா துதிர்ந்துக வூழுற்ற கோடல்வீ
யிதழ்சோருங் குலைபோல விறைநீவு வளையாட்கு;

இன்றுணை நீப்ப விரவினுட் டுணையாகித்
தன்றுணைப் பிரிந்தயாஅந் தனிக்குருகு குசவுமே
யொண்சுடர் ஞாயிற்று விளக்கத்தா னொளிசாம்பு
நண்பகன் மதியம்போ னலஞ்சாய்ந்த வணியாட்கு;

எனவாங்கு,

எறிதிரை தந்திட விழிந்தமீ னின்றுறை
மறிதிரை வருந்தாமற் கொண்டாங்கு நெறிதாழ்ந்து
சாயினள் வருந்தியா ளிடும்பை
பாய்பரிக் கடுந்திண்டேர் களையினோ விடனே.

இது தலைவன் ஒருவழித் தணந்தவிடத்துத் தலைவி ஆற்றுமைகூறி வரையக் கருதினாயின் இஃதிடமெனச்சொல்லியது.

(இ - ள்.) ஒண்சுடர் * * * தண்சேர்ப்ப—எ-து, ஒள்ளிய ஞாயிறு அத்தகிரியைச் சேர்தலானும் உலகெல்லாந் தன் ஒளிபரச்குந் தன்மையதாகித் தெளிந்த கடற்பரப்பிற் றிரையைநீக்கித் தோன்றுந் தண்ணியதாகிய கதிரையுடைய மதியத்தினது அழகையுடைய நிலா மிகுதலைச் செய்கையினாலும் பறவைகள் இரையை நிறையத் தின்று தாந்தங்கும் புகல்களைச் சேர்கையினாலே தன்னிடத்து ஆரவாரம் அடங்கப்பட்டு வளவிய இதழ்களுங் குவிந்த நீலமணியென்று மருளும் பெரிய கழி துயில்கொண்ட தன்மையை யொக்குங் கடலையுடைய குளிர்ந்த சேர்ப்பனே; எ - று.

தகையதாகி எழுதரும் மதி. ஞாயிறு படுதலும் மதியந்தோன்றுதலும் பறவைகள் புகல்சேர்தற்குக் காரணமென்றுகொள்க.

அவை சேர்கையினாலே ஒலியவிந்து பொய்கை பள்ளிபுக்காற்போலே இருந்ததென்றது தன்குறிப்பைத் தன்மேலேற்றிக்

கூறியதோர் உவமவிசேடம். இஃது * "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" என்னும் உவமவியற் சூத்திரத்தில் அடக்கினும். இதழ் கூம்புதலுந் துயிற்கு அடையாய் நின்றது.

ஞாயிறு கல்சேர்ந்ததனைத் தலைவன் இட்டுப்பிரிந்து தன் மனையிலே சேர்ந்திருத்தலிற் களவு புலப்படாத தன்மையாகவும் மதியத்தின் நிலாப் பரந்ததனை அவ்விடத்துக் காவலின் விளக்க மாகவும் பறவைகளின் ஆரவாரங் கெட்டதனை இவ்விரண்டினாலும் அலர்தூற்றுகின்ற மகளிரொலி அவிந்து இவ்வூர் துயில்கின்றாற் போலிருந்த தன்மையாகவும் உள்ளுறை உவமங் கூறுக.

தாங்கரும் * * * கண்ணாட்கு—எ-து, நீ இட்டுவைத்துப் பிரிந்த நின்னூரிடத்தே உறைந்து முன்பு நின் நெஞ்சிற் தாங்கு தற்கரிதாய்ப் போந்த காமத்தை நின்னிடத்தினின்றுங் கைவிடு கையினாலே துளியோடே தங்கின பூப்போலே நிறுக்குமளவில் அமையாதே விரைய விழும் நீரிலே கிடந்து நீந்துகின்ற கண்ணையு டையவட்கு அசைகின்ற கடலிலே எழுந்து முழங்குகின்ற திரை தான் துணையாகி நின்று ஆரவாரியாநிற்கும்; எ - று.

வருத்துகின்ற திரை தான் துணையாக ஒலிக்குமென்று அஃது இறந்துபடுத்தாது நின்றமைபற்றிக் கூறினாள்.

வாராய்நீ * * * வளையாட்கு—எ-து, நீ ஈண்டு வாரா யாய் நின்மனையிடத்தே இருந்து வருந்திய மேனியையுடையவட்கு நீ வைத்த வேட்கை நின்னிடத்தினின்றுங் கைவிடுகையினாலே கமழ் கின்ற தண்ணியதாது உதிர்ந்து சிந்தும்படி முறைமையுற்ற இதழ்கள் வீழுங் குலையினையுடைய கோடல்வீபோல இறையினின்றுங் கழ லும் வளையினையுடையாட்கு நிறைந்த இராக்காலத்தே அசைந்துவரு கின்ற காற்றுத் தான் துணையாகிநின்று வருத்தாநிற்கும்; எ - று.

இனி மேனியாட்குவருந்தியநீவாராயாய்ப்புறமாறஎன்றுமாம்.

இன்றுணை * * * வணியாட்கு—எ-து, இனிய துணையா கிய நீ கைவிட்டு உன்மனையிடத்தே இருக்கையினாலே ஒள்ளிய சுட ரையுடைய ஞாயிற்றினது மிக்க ஒளியாலே தன் ஒளி கெடுகின்ற உச்சிக்காலத்து மதிபோலே நன்மைகெட்ட முகத்தினையுடையாட்கு இராக்காலத்திடத்தே தன் சேவலைப் பிரிந்து வருந்துந் தனிக் குருகு தான் துணையாகி உசாவாநிற்கும்; எ - று.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், உவமவியல், ௩௩-ம் சூத்.

எனவாங்கு அசை.

எறிதிரை * * * விடனே—எ-து, இனிய துறையிடத்தே எறிகின்ற திரை ஏறக்கொண்டுவந்து போடுகையினால் எக்கரிலே கிடந்த மீனை மீள்கின்ற அத்திரை வருந்தாதபடி கைக்கொண்டு போன தன்மைபோலே நீ முன்பு நடத்தின நெறிதாழ்கையினாலே மெலிந்தனளாய் வருந்தினவளுடைய வருத்தத்தைப் பாய்ந்துசெல்லும் பரிபூண்ட கடிய திண்ணிய தேர் வெளியாக வரைவோடே வந்து களையுமாயின் நல்லகாலமென வரைவுகடாயினாள்; எ - று.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௪)

௧௨௨. கோதை யாயமு மன்னையு மறிவுறப்
போதெழி லுண்கண் புகழ்நல னிழப்பக்
காதல்செய் தருளாது துறந்தார்மாட் டேதின்றிச்
சிறிய துனித்தனை துன்னுசெய் தமர்ந்தனை
பலவுநூ றடுக்கினை யினைபேங்கி யழுதனை
யலவலை யுடையை யென்றி தோழீ;

கேளினி

மாணெழின் மாதர் மகளிரோ டமைந்தவன்
காணும்பண் பிலனாத லறிவென்மன் னறியினும்
பேணி யவன்சிறி தளித்தக் காலென்
னாணி னெஞ்ச நெகிழ்தலுங் காண்பல்;

இருளுற ழிருங்கூந்தன் மகளிரோ டமைந்தவன்
றெருளும்பண் பிலனாத லறிவென்மன் னறியினு
மருளி யவன்சிறி தளித்தக் காலென்
மருளி நெஞ்ச மகிழ்தலுங் காண்பல்;

ஒள்ளிழை மாதர் மகளிரோ டமைந்தவ
னுள்ளும்பண் பிலனாத லறிவென்மன் னறியினும்
புல்லி யவன்சிறி தளித்தக் காலென்
னல்ல னெஞ்ச மடங்கலுங் காண்பல்;

அதனால்,

யாம நடுநாட் டுயில்கொண் டொளித்த
காம நோயிறக் கழீஇய நெஞ்சந்
தாமவர் பாற்பட்ட தாயி
னுமுயிர் வாழ்தலோ நகைநனி யுடைத்தே.

இது காமஞ்சாலா இளமையோள்வயிற் பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன் இடையிட்டுப் பிரிந்து தொன்முறை மனைவியரொடு புணர்ச்சியெய்தி இருந்தானாக, அதனையறிந்து ஆற்றாளாய தலைவி ஆற்றாமைகண்டு வினாய தோழிக்கு அத்தலைவி அவனொழுகுகின்றவாறுந் தன்னெஞ்சு அவன்வயத்ததாயவாறுங் கூறியது.

*"மறையின் வந்த மனையோள் செய்வினை - பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்" என்பதனானும் †"பின்முறை யாக்கிய பெரும்பொருள் வதுவை" என்னுஞ் சூத்திரத்தானும் உணர்க.

(இ - ள்.) கோதை * * * கேளினி—எ-து, கோதை போல ஒழுங்குவிட்டு விளையாடும் ஆயத்தாருந் தாயும் அறிதலுறும்படி பூவினது அழகையுடைய கண்கள் புகழ்ந்த நலத்தை இழக்கும்படி முன்னர் நம்மிடத்தே மிக்க காதலை நிகழ்த்திப் பின்னர் நமக்கு அருளாதே ஒருகாரணமின்றி நம்மைத் துறந்தாரிடத்தே முன்னர்ச் சிறியவாக வெறுத்தனை; பின்னர் அவர் நமக்குப் பொருந்தாக் குறைகளைச் செய்கையினாலே அக்குறைகள் பல நூறுமாக அடுக்கிக்கூறி அதிலே அமர்ந்தனை; அதுவேயுமன்றி வருந்தி ஏங்கி அழுவதுஞ்செய்தாய்; ஆகலான் நீ அலமருதலையுடையையாய் இருந்தாயென்று சொல்லாநின்றாய்; தோழீ! இனி அலமரலைக் கேளென்றாள்; எ - று.

ஏது வடமொழி திரிந்து விகாரமாய் நின்றது.

மாணெழின் * * * காண்பல்—எ-து, மாட்சிமையையுடைய அழகினையுங் காதலையுமுடைய மனைவியரோடே அவன் பொருந்தி நம்வருத்தத்தைப் பார்க்குங் குணமிலனாயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் வந்து என்னைப் பேணிச் சிறிதாக அளிக்க என்னுடைய நாணமில்லாத நெஞ்சம் என்வயத்தன்றி அவனிடத்தே நெகிழ்ந்து செல்லுதலையுங் கண்டிருப்பேன்; எ-று.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல் ௧௦-ம் சூத்.
† ,, ,, ,, ௧௧-ம் ,,

இருளற * * * காண்பல்—எ-து, இருளோடே மாறுபடுகின்ற கரிய கூந்தலையுடைய தொன்முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம் வருத்தத்தைத் தெளியுங் குணமிலனயிருத்தலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் ஒருகால் அருள்பண்ணி அவன் சிறிதாக அளிக்க என்னுடைய மருளியாகிய நெஞ்சம் அதற்கு மகிழ்தலையுங் கண்டிருப்பேன்; எ - று.

ஒள்ளிழை * * * காண்பல்—எ-து, ஒள்ளிய இழையினையுங் காதலையுமுடைய தொன்முறை மனைவியரோடே அவன் பொருந்தி நம்மை நினைக்குங் குணமிலனுதலை மிகவும் அறிவேன்; அறிந்திருப்பினும் அவன் சிறிதாகப்புல்லி அளிக்க என்னுடைய வருத்தத்தையுடைய நெஞ்சம் வருத்தம் மீளுதலுங் கண்டிருப்பேன்; எ - று.

அதனல் * * * யுடைத்தே—எ-து, ஆகையினலே காமநோயாலே மிக்க நெஞ்சந்தான் நடுநாள்யாமத்தில் நாங்கொள்ளுந் துயிலைவாங்கிக்கொண்டு ஒளித்தவர்பகுதியிலே பட்டுவிட்டதாயின் இனி நாம் இருந்து உயிர்வாழ்கையோ மிகப் பிறர் சிரித்தலையுடைத்தென்று தோழி வரைவுகடாவுதற்குக் கூறினள்; எ-று.

இதனற்தன்வயினுரிமையும்அவன்வயிற்பரத்தையுங்கூறினள்

இதனற் தலைவிக்கு இழிவு பிறந்தது.

இது கேளினி எனச் சொற்சீரடிவந்தமையிற் கொச்சகம். (௫)

௧௨௩. கருங்கோட்டுநறும்புன்னைமலர்சினைமிசைதொறுஞ்
சுரும்பார்க்குங் குரலினே டிருந்தும்பி யியையூத
வொருங்குட னிம்மென விமிர்தலிற் பாடலோ
டரும்பொருண் மரபின்மால் யாழ்கேளாக் கிடந்தான்போற்
பெருங்கட றுயில்கொள்ளும் வண்டிமிர் நறுங்கானல்;

காணமை யிருள்பரப்பிக் கையற்ற கங்குலான்
மாணநோய் செய்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
காணவும் பெற்றுயோ காணயோ மடநெஞ்சே;

கொல்லேற்றுச் சுறவினங் கடிகொண்ட மருண்மாலை
யல்லனேய் செய்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
புல்லவும் பெற்றுயோ புல்லாயோ மடநெஞ்சே;

பொறிகொண்ட புள்ளினம் வதிசேரும் பொழுதினுற்
செறிவளை நெகிழ்த்தான்கட் சென்றுய்மற் றவனைநீ
யறியவும் பெற்றுயோ வறியாயோ மடநெஞ்சே;

எனவாங்கு,

எல்லையு மிரவுந் துயிறுறந்து பல்லூ
ழரும்பட ரவலநோய் செய்தான்கட் பெறனசைஇ
யிருங்கழி யோதம்போற் றடுமாறி
வருந்தினை யளியவென் மடங்கெழு நெஞ்சே.

இது சாப்புமிகுதிக்கண் ஆற்றுத தலைவி தலைவன்பாற்சென்ற நெஞ்சினை நோக்கி அழிந்து கூறியது.

(இ - ள்.) கருங்கோட்டு * * * நறுங்கானல்—எ-து, கரியகொம்பினையுடைய புன்னையின் சிறியசினையில் நறியதாகிய மலர் தோறும் மலருஞ்செவ்வி பார்த்து நுகருதற்குச் சுரும்பினம் ஆரவாரிக்கும் ஓசையோடே கரிதாகிய தும்பிகளும் ஒருங்கியைந்து ஊத எழுந்த குரலுஞ் சேர இம்மெனும் ஓசைபட ஒலிக்கையினாலே அவற்றைக்கேட்டு யாவராலும் பெறுதற்கரியபொருளாகிய முறைமையினையுடைய திருமால் பாட்டோடே யாழையுங்கேட்டுப் பள்ளிகொண்டவனைப்போலப் பெரிதாகிய கடலும் ஒலியவிந்து உறங்கும்; எ - று.

வண்டு ஒலிக்கின்ற கானலின்கண்ணே நெஞ்சே சென்றுய் என மேலேகூட்டுக.

ஓதம் வடிந்தகாலத்து மிக்க ஒலியின்மை பற்றிக் கூறிற்று.

புன்னை மலருஞ் செவ்விபார்த்து அவற்றை நுகர்தற்குரியன நுகர்கின்றமையுங் கண்டு யாமுங் காமச்செவ்வி அறிந்து நந் தலைவர் நுகரப்பெற்றிலேமேயென்று வருந்தியும், பாட்டையும் யாழையும்போலும் ஓசைகேட்டுக் கடலுட்படத் துயில்கின்ற காலத்தே யாமும் அவற்றைக் கேட்டுத் தலைவனிடத்தே துயிலப் பெறுகின்றிலேமேயென்று வருந்தியும், நெஞ்சுசென்றதென மேலே வருகின்ற இரங்கற்பொருட்கு முன்னின்ற கருப்பொருள் இறைச்சிப்பொருளாய் நின்று உபகாரப்பட்டு நின்றது. இஃது *"இறைச்சி தானே பொருட்புறத் ததுவே" என்பதனான் உணர்க.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௩௩-ம் சூத்.

காணாமை * * * மடநெஞ்சே—எ-து, அறியாமையையுடைய நெஞ்சே! கானலின்கண்ணே பொருள்களைக் கண்கள் காணாதபடி இருளைத் தான் பரப்பி உயிர்களெல்லாஞ் செயலறுதற்குக் காரணமான கங்குலிடத்தே ஒரு மருந்தாலும் மாட்சிமைப்படாத காமநோயைச் செய்தவனிடத்தே போனாய்; போன நீ பின்னை அவனைக் கண்ணாற் காண என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ அவனைக் காணாதிருந்தாயோ கூறென்றாள்; எ - று.

உம்மை இழிவுசிறப்பு. இனிக் காணப்பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்ததுநிற்க, நீ அவனாற் காணப்பட்டாயெனக்கூறி ஓகாரத்தினை இரக்கமாகக் கூறலுமாம்.

இது நடுயாமத்துச் சென்றமை கூறினாள்.

கொல்லேற்றுச் * * * மடநெஞ்சே—எ-து, மடநெஞ்சே! கானலின்கண்ணே கொல்கின்ற ஏறாகிய சுறவினுடைய திரள் போவாரைப் போகாமற் காத்தலைக்கொண்ட மயக்கத்தையுடைய மாலைக்காலத்தே வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத்தேபோனாய்; போன நீ பின்னை அவனைப் புல்ல என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ புல்லாதிருந்தாயோ கூறென்றாள்; எ-று.

இனிப் புல்லப்பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்ததுநிற்க, நீ அவனாற் புல்லப்பட்டாயெனக்கூறி ஓகாரத்தினை இரக்கமாக்கிக் கூறலுமாம்.

பொறிகொண்ட * * * மடநெஞ்சே—எ-து, மடநெஞ்சே! அக்கானலின்கண்ணே ஒழுங்குகொண்ட பறவைத்திரள் தாந் தங்கும் இடத்தே சென்றுசேரும் மாலைக்காலத்தே முன்பு செறிந்த வளை கழலப்பண்ணினானிடத்தே போனாய்; போன நீ பின்னை அவனை மனத்தினை அறிய என்கின்ற அவ்வளவுதானும் பெற்றாயோ அதுதானும் அறியாதிருந்தாயோ கூறென்றாள்; எ - று.

இனி அறியப் பெற்றாயோ இல்லையோ என ஓகாரத்தை ஐயமாக்கி உரைத்ததுநிற்க, நீதான் அவனாலறியப்பட்டாயென உரைத்து ஓகாரத்தை இரக்கமாக்கலுமாம்.

எனவாங்கு அசை.

எல்லையு * * * நெஞ்சே—எ-து, அது கூறாமையிற் பின்னும் அறியாமை பொருந்திய அளிக்கத்தக்க என் நெஞ்சே! பொ

றுத்தற்கரிய வருத்தத்தையுடைய காமநோயைச் செய்தவனிடத்தே பகலுமிரவுந் துயிலைக் கைவிட்டுக் கரியகழியில் ஒதம்போவதுவருவதாய்த் தமொறுந்தன்மைபோல நீயும் பலமுறைமையாகச் சென்றும் வந்துந் தமொறி அவனைப் பெறுதல் நச்சி முடிவில் வருந்திவிட்டாய்; ஈதன்றோ நீபெற்றதென நெஞ்சினைநோக்கி அழிந்துகூறினாள்; எ-று.

இஃது *"உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன்-மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடுபுணர்த்தும்" என்பதனாற் கூறியது.

இதனாற் றலைவிக்கு இழிவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௬)

௧௨௪. ஞாலமூன் றடித்தாய முதல்வற்கு முதுமுறைப்
பாலன்ன மேனியா னணிபெறத் தைஇய
நீலநீ ருடைபோலத் தகைபெற்ற வெண்டிரை
வாலெக்கர் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

ஊரல ரெடுத்தரற்ற வுள்ளாய்நீ துறத்தலிற்
கூருந்தன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
காரிகை பெற்றதன் கவின்வாடக் கலுழ்பாங்கே
பீரல ரணிகொண்ட பிறைநுத லல்லாக்கால்;
இணைபிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய்நீ துறத்தலிற்
புணையில்லா வெவ்வநோ யென்னையு மறைத்தாண்மற்
றுணையாருட் டகைபெறத் தொன்னல மிழந்தினி
யணிவனப் பிழந்தத னணைமென்றோ ளல்லாக்கால்;
இன்றிவ்வூ ரலர்தூற்ற வெய்யாய் நீதுறத்தலி
னின்றதன் னெவ்வநோ யென்னையு மறைத்தாண்மன்
வென்றவே லுதியேய்க்கும் விறனல னிழந்தினி
நின்றநீ ருகக்கலுழ நெடும்பெருங்க ணல்லாக்கால்;

அதனால்,

பிரிவில்லாய் போலநீ தெய்வத்திற் றெளித்தக்கா
லரிதென்னா டுணிந்தவ ளாய்நலம் பெயர்தரப்
புரியுளைக் கலிமான்றேர் கடவுபு
விரிதண்டார் வியன்மார்ப விரைகநின் செலவே.

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், உ-ம் ௫௩.

இது *"வெளிப்பட வரைதல் படாமை வரைதலென் - றாயி ரண் டென்ப வரை தலாறே" என்பதனாற் களவு வெளிப்பட்டபின் வரையாது பொருள்வயிற் பிரிந்துவந்தானைத் தோழி எதிர்ப்பட்டு நின்று தலைவியது ஆற்றாமை கூறி வரைவுகடாயது.

(இ - ள்.) ஞாலமூன் * * * தண்சேர்ப்ப—எ-து, உல கம் மூன்றையுந் தன்திருவடியாலே அளந்த எப்பொருட்கும் அடி யாயிருக்கின்றவனுக்கு மூத்த முறைமையினையுடைய நம்பி மூத்த பிரான் அழகுபெற உடுத்த நீலத்தினது நீர்மையையுடைய ஆடை யை ஒக்கும்படி அழகைப்பெற்ற வெண்டிரையினையுடைய கடல் வெண்மையையுடைய இடுமணலிடத்தே வந்து சூழ்ந்து விளங்கு கின்ற திரையையுடைய தண்ணிய சேர்ப்பனே; எ - று.

வெண்மை திரைக்கு அடையாய்த் திரை ஆகுபெயராய் நின்றது, நீல ஆடைக்கு வெண்மை ஒப்பன்மையின்.

கடல் தன்கரையை இகவாமை நிற்கின்ற சேர்ப்பனென்ற தனான் நீயுங் குடிப்பிறந்தார்க்கு வரைந்துகொண்டு இல்லறநிகழ்த்த வேண்டுமென்றுகூறிக், கரையைக் கடவாமல் வரைந்து கோடல் வேண்டுமென்ற உள்ளுறையுவமங்கொள்க.

ஊரல * * * லல்லாக்கால்—எ-து, காரிகைபெற்ற தன் அழகு கெடும்படி மனங்கலங்குதலாலே அப்பொழுதே பீர்க்கி னது பூவினது அழகைத் தன்னிடத்தேகொண்ட பிறைபோலும் நு தலல்லாத இடத்து, இவ்வூரிலுள்ளார் அலரை உயர்த்துக் கூப்பிடும் படி நீ இவளைக் கைவிடுகையினாலே மிகுகின்ற தன்னுடைய வருத் தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அத னாற் பெற்றதென்? நுதல் புலப்படுத்தாநின்றதே; எ - று.

காரிகைபெற்ற தன் கவின், பிறர் இவள் அழகைப் பெறுதற் குக் காரணமான தன் அழகு; என்றது பிற மகளுக்கு ஒப்புக் கூ றுமிடத்து இவள் உவமையாய் நிற்பளென்பதாம்.

இணைபிவ்வூ * * * ளல்லாக்கால்—எ-து, தோழியர் தோள்களில் அழகுபெற்ற அவ்வியற்கை நலத்தையும் இப்பொழுது இழந்து, நீ அணிதலாற் பெற்ற செயற்கை நலத்தையும் இழந்த தன்னுடைய அணைபோன்ற மெல்லிய தோளல்லாத இடத்துத்,

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், சக-ம் சூத்.

தம்மிற் தம்மிற் கூடி இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இவள் வருத்தத்தை நீ அறியாயாய் நீ துறக்கையினாலே உண்டான த னக்கு உவமை கூறவொண்ணாத வருத்தத்தையுடைய காமநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? தோள் புலப்படுத்தா நின்றதே; எ - று.

இன்றிவ்வூ * * * ணல்லாக்கால்—எ-து, வென்றவே லினது முனையை ஒக்கும் வெற்றியினையுடைய நலத்தை இப்பொ ழுது இழந்து நீர் நின்று உகும்படியாக அழுத நெடிய பெரிய கண் ணல்லாத இடத்து, இன்று இவ்வூரிலுள்ளார் அலர் தூற்றும்படி இ வள் வருத்தத்தை அறியாயாய் நீ துறக்கையினாலே தன்னிடத்தே நின்ற எவ்வநோயை என்னையும் உட்பட மறைத்தாள்; அதனாற் பெற்றதென்? கண் புலப்படுத்தாநின்றதே; எ - று.

அதனால் * * * செலவே—எ-து, அலர்ந்த குளிர்ந்த மாலையினையுடைய அகற்சியையுடைய மார்பனே! அவ்வருத்தத்தா லே பிரிவில்லாதானைப்போலே நீ இயற்கைப் புணர்ச்சிப் பின் னர்த் தெய்வத்தாலே பிரியேனென்று தெளிவிக்க அப்பிரிவின்மை அரிதென்று கருதாளாய் அதனை உண்மை என்று துணிந்தவளு டைய கெட்ட நலம் பண்டுபோலே நன்றாம்படி நின்னெஞ்சிலே புரிந்த உளையினையுடைய கலிமாப் பூண்ட தேரைச் செலுத்தாநின் று எம்மனையிடத்துச் செல்லும் நின்செலவை விரைவாயாகவென வரைவுகடாயினாள்; எ - று.

அதனால்விரைகவென்க. ஆய்நலம் நுணுகியநலம்.

இதனாற் தலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது நான்கடியே நான்கடித் தரவிற்கு மரபென்றதனாற் கொண்ட நான்கடித்தாழிசையும் நடைநவிலாது பொருள்பெற்ற தனிச்சொல்லுந் தரவியலொத்திறுதிநிலையுரைத்த சுரிதகமும் பெற் ற ஒத்தாழிசைக்கலி.

(எ)

௧௨௫. கண்டவ ரில்லெென வுலகத்து ளுணரா தார்
தங்காது தகைவின்றித் தாஞ்செய்யும் வினைகளு
ணெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறிபவர்
நெஞ்சத்துக் குறுகிய கரியில்லை யாகலின்
வண்பரி நவின்ற வயமான் செல்வ

நன்கதை யறியினு நயனில்லா நாட்டத்தா
லன்பிலை யெனவந்து கழறுவ லையகேள்;

மகிழ்செய் தேமொழித் தொய்யில்சூ ழிளமுலை
முகிழ்செய முழ்கிய தொடர்பவ ளுண்க
ணவிழ்பனி யுறைப்பவு நல்காது விடுவா
யிமிழ்திரைக் கொண்க கொடியை காணீ;

இலங்கே ரெல்வளை யேர்தழை தைஇ
நலஞ்செல நல்கிய தொடர்பவள் சாஅய்ப்
புலந்தழப் புல்லாது விடுவா
யிலங்குநீர்ச் சேர்ப்ப கொடியை காணீ;

இன்மணிச் சிலம்பிற் சின்மொழி யைம்பாற்
பின்னொடு கெழீஇய தடவர வாக
நுண்ணெழில் வாட வாராது விடுவாய்
தண்ணந் துறைவ தகாஅய் காணீ;

எனவாங்கு,

அனையளென் றளிமதி பெரும நின்னின்
றிறைவரை நில்லா வளைய ளிவட்கினிப்
பிறையேர் சுடர்நுதற் பசலை
மறையச் செல்லுநீ மணந்தனை விடினே.

இது வரைவுநீட ஆற்றாத தலைவிநிலைமை தலைவற்குத் தோழி கூறி அவனை நெருங்கி வரைவுகடாயது.

(இ - ள்.) கண்டவ * * * லையகேள்—எ-து, அறியாதவர்கள் தம் மனம் இது செயலாகாதென்று மீளாதே வேறு விலக்குவாரும் இன்றி உலகத்திற் கண்டவர்களும் இல்லையென்று கருதித் தாஞ் செய்யுந் தீவினைகளுள் தாம் நெஞ்சறியவே செய்த கொடிய தீவினைகளைப் பின்பு பிறர் அறியாமல் மறைத்தார்களாயினுந் தாஞ் செய்தமையை அறிந்திருக்கின்றவர்கள்தம்முடைய நெஞ்சத்திற்காட்டில் அணுகிய சான்று வேறில்லை; ஆகையினாலே வளவிய பரியிலேபயின்ற வலியினையுடைத்தாகிய குதிரையையுடைய செல்வனே! நின்னை யான் கழறவேண்டுவதில்லை. அக்கழற

வேண்டாமையை நன்றாக அறிந்தேனாயினும் நின்னோடு யான்கொண்ட நலம்பாடில்லாத ஆராய்ச்சியாலே நீ அன்புடையையல்லையென்று சொல்லிவந்து நின்னைக்கழறுவேன்; ஐயனே! அதனைக்கேள்; எ-று.

நயன் உறவு.

மகிழ்செய் * * * காணீ—எ-து, மகிழ்ச்சியைச் செய்கின்ற இனிமையையுடைத்தாகிய மொழியினையுடையாளுடைய தொய்யில் எழுதின இளையமுலை தோன்றுதலைச் செய்யாநின்ற இளமைப் பருவத்தே நீ கூடிய தொடர்ச்சியை இவள் கண் தோற்றுவித்த நீர் துளியாக விழவும் அதுகண்டு நல்காது விடுகின்றவனே! ஒலிக்கின்ற திரையையுடைய கொண்கனே! நீ மிகக் கொடியையைகாண்; எ-று.

இலங்கே * * * காணீ—எ-து, எல்வளையினையுடையாளது அழகையுடைய தழையை உடுத்து இலங்குகின்ற இளமைப்பருவத்து எழுச்சியினுடைய நலம் மேன்மேல் வளர்ந்து செல்லும்படி நீ நல்கிய தொடர்ச்சியை அவள்மேனி சாய்ந்து நின்னைவெறுத்து அழாநிற்க அது கண்டும் பொருந்தாதே கைவிடுகின்றவனே! இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! நீ மிகக்கொடியை காண்; எ-று.

இன்மணிச் * * * காணீ—எ-து, இனிதாகிய உள்ளீடு மணியையுடைத்தாகிய சிலம்பினையுடைய சிலவாகிய மொழியினையுடையாளுடைய மயிரைப் பின்னிமுடிக்கின்ற இளமைப் பருவத்தே வந்து பொருந்தின உறவின்பெருமை இடையறாது வாராநிற்க அவள் மேனியின் நுண்ணிய அழகு வாடும்படி அவள்பால் வாராமல் அவளைக் கைவிடுகின்றவனே! தண்ணந்துறைவனே! நீ இனித் தகுதிப்பாடுண்டாகாய் காண்; எ - று.

எனவாங்கு அசை.

அனையளென் * * * விடினே—எ-து, பெருமா! அவளை யான் கூறிய அத்தன்மையையுடையளென்று உட்கொண்டு அளிப்பாய்; அளித்துவரைந்து தோள்மணந்தனையாய்விடின் நின்னையின்றி இறையினெல்லை நில்லாமற் கழன்ற வளையினையுடைய இவட்கு இனிப் பிறையை ஒக்கும் திருநுதலிற் தோன்றிய பசலை ஒரு காலமும் வாராமல் மறையும்படியாகப் போமென வரைவுகடாயினாள்; எ-று.

இதனாற் தலைவற்குப் புணர்ச்சியுவகை பிறந்தது.

இது * "பரத்தைமறுத்தல்வேண்டியும்" என்னுஞ் சூத்திரத் தாற் சைகோளிரண்டற்கும் பொதுவாகப் பொருள்கூறவும் பெறும்.

இது தாழிசையல்லா இடைநிலைப்பாட்டுப்பெற்றுப் புல்லாதுவி டுவாயெனக்குறைந்துவருதலின் யாப்பின்வேறுபட்டகொச்சகம். (அ)

கஉசு. பொன்மலை சுடர்சேரப் புலம்பிய விடநோக்கித்
தன்மலைந் துலகேத்தத் தகைமதி யேர்தரச்
செக்கர்கொள் பொழுதினா னொலிநீவி யினநாரை
முக்கோல்கொ ளந்தணர் முதுமொழி நினைவார்போ
லெக்கர்மே லிறைகொள்ளு மிலங்குநீர்த் தண்சேர்ப்ப ;

அணிச்சிறை யினக்குரு கொலிக்குங்கா னின்றிண்டேர்
மணிக்குர லெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யுள்ளான்ற வொலியவா யிருப்பக்கண் டவைகானற்
புள்ளென வுணர்ந்துபிற் புலம்புகொண் டினையுமே ;

நீர்நீவிக் கஞன்றபூக் கமழுங்கா னின்மார்பிற்
றார்நாற்ற மெனவிவண் மதிக்குமன் மதித்தாங்கே
யலர்பதத் தசைவளி வந்தொல்கக் கழிப்பூத்த
மலரென வுணர்ந்துபின் மம்மர்கொண் டினையுமே ;

நீணகர் நிறையாற்று ணினையுநள் வதிந்தக்காற்
றோண்மேலா யெனநின்னை மதிக்குமன் மதித்தாங்கே
நனவெனப் புல்லுங்காற் காணாளாய்க் கண்டது
கனவென வுணர்ந்துபிற் கையற்றுக் கலங்குமே ;

எனவாங்கு,

பலநினைந் தினையும் பைத னெஞ்சி
னலமர லேவு ளுழக்குமென் றோழி
மதிமருள் வாண்முகம் விளங்கப்
புதுநல மேர்தரப் பூண்கநின் றேரே.

இது தோழி தலைவியது ஆற்றாமை கூறித் தலைவனை வரைவுகடாயது.

---

* தொல்காப்பியம், பொருளதிகாரம், கற்பியல், ௫௩-ம் சூத்.

(இ - ள்.) பொன்மலை * * * தண்சேர்ப்ப—எ-து, பொன்னையுடைய அத்தகிரியிலே ஞாயிறு சென்றுசேர, அஞ்ஞாயிறு உடனேபட, ஞாயிறின்றி வருந்தின உலகைநோக்கி உலகங் கொண்டாடும்படியாகத் தகைமையினையுடைய மதி எழாநிற்கச், செக்கர்வானத்தைக் கொண்ட அந்திக்காலத்தின்கண்ணே, முக்கோலைக் கையிலே கொண்ட அந்தணர் முதியமொழியை நினைக்கின்றவர்களைப்போலே, இனமான நாரைகள் ஆரவாரத்தைக் கைவிட்டு இடுமணன்மேலே இருந்தலைச் செய்யும் இலங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே; எ - று.

அந்தணர், காஷாயம் போர்த்த குழாங்கள். முதுமொழி, பிரணவம்.

பெரியநாரை சிறகுசிவந்திருத்தலானும் மூக்குத் தரையிலே சென்றூ ருத்துதலானும் அதனை முக்கோலை ஊன்றியிருந்த அந்தணரோடு ஒப்புரைத்தார்.

நாரை பகற்பொழுதெல்லாம் பல்லுயிர்க்கும் வருத்தஞ்செய்து இரைகவர்ந்து அந்திக்காலத்து ஓர் ஆரவாரமின்றித் தீங்குசெய்யாதாரைப் போலே குவிந்திருக்குஞ் சேர்ப்பன் என்றதனுன் இந்நாட்டின் மகளிர் பிரிந்திருந்தார் உயிர்போதற்கு வேண்டுந் தீங்குகளைப் பகற்பொழுதெல்லாங் கூறி அந்திக்காலத்து ஆரவாரத்தைத் தவிர்ந்து நல்ல மகளிரைப் போலே ஒடுங்கி உறைகின்றூர் என உள்ளுறை உவமங் கூறியவாறு உணர்க.

அணிச்சிறை * * * டினையுமே—எ-து, அழகினையுடைத்தாகிய சிறகினையுடைய குருகுகள் இராக்காலத்து ஒருகால் ஒலிக்குமிடத்து நின்னுடைய திண்ணிய தேரின்மணியின் ஓசையென்று இவள் மிகவுந் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப்பறவைகள் உள்ளடங்கிய ஒலியையுடையவாய் ஆரவாரியாதிருக்க, அதனைத் தன் மனத்தாலே தேர்மணி ஒலியல்லவென்று கண்டு, பின்னர் அவ்வொலியைக் கானலிடத்துப் பறவைகள் ஒலியென்று உணர்ந்து, பின்பு தனிமைகொண்டு வருந்தாநிற்கும்; எ - று.

நீர்நீவிக் * * * டினையுமே—எ-து, நீரைக் கைவிட்டு மேலாய் நெருங்கின பூ அலர்ந்து நாறுமிடத்து நின்மார்பிற் கிடந்த மாலையினது நாற்றமென்று இவள் மிகவுந் துணியாநிற்கும்; துணிந்த அப்பொழுதே அப்பூக்கள் அலருஞ்செவ்வியிடத்து அவற்றை அசைத்

த காற்றுவந்து தன்மேற்பட, அதனைக் கழியிற்பூத்த மலரினது மண மென்று உணர்ந்து, பின்பு மயக்கங்கொண்டு வருந்தாநிற்கும்; எ-று.

நீணகர் * * * கலங்குமே—எ-து, உயர்ந்த மனையிலே மனத்தை நிறுத்துதலைமாட்டாளாய் நின்னை நினைத்தவசத்தாற் சிறிது துயின்றவிடத்துத் தன் தோண்மேற் கிடந்தாயாக நின்னை மிகவுந் துணியும்; துணிந்த அப்பொழுதே மெய்யென்று கருதித் தழுவுமிடத்து உன்வடிவைக் காணாளாய்த் தான்கண்டது கனவாயிருந்ததென்று அறிந்து பின்பு செயலற்றுக் கலங்காநிற்கும்; எ-று.

எனவாங்கு—எ-து, என்று; எ-று. ஆங்கு, அசை.

பலநினைந் * * * றேறோ—எ-து, பலவற்றையும் நினைத்து வருந்தும் நோயையுடைய நெஞ்சாலே சுழலுதலையுடைய சாமகோயிலே அழுந்தும் என் தோழியுடைய மதியென்று மருளும் ஒளியினையுடைய முகம் விளங்கும்படி புதிய நலம் எழுதலைச் செய்ய நின் தேர் குதிரையைப் பூண்பதாகவென வரைவுகடாயினாள்; எ-று.

இதனாற் தலைவற்குப் புணர்ச்சி உவகை பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௬)

கஉஎ. தெரியிணர் ஞாழலுந் தேங்கமழ் புன்னையும்
புரியவிழ் பூவின் கைதையுஞ் செருந்தியும்
வரிஞிமி றிமிர்ந்தார்ப்ப விருந்தும்பி யியைபூதச்
செருமிகு நேமியான் றூர்போலப் பெருங்கடல்
வரிமணல் வாய்சூழும் வயங்குநீர்த் தண்சேர்ப்ப;

கொடுங்கழி வளைஇய குன்றுபோல் வாலெக்கர்
நடுங்குநோய் தீரநின் குறிவாய்த்தா ளென்பதோ
கடும்பனி யறலுகு கயலேர்கண் பனிமல்க
விடும்பையோ டினைபேங்க விவளைநீ துறந்ததை;

குறியின்றிப் பன்னாளின் கடுந்திண்டேர் வருபதங்கண்
டெறிதிரை யிமிழ்கான லெதிர்கொண்டா ளென்பதோ
வறிவஞ ருழந்தேங்கி யாய்நலம் வறிதாகச்
செறிவளை தோளூர விவளைநீ துறந்ததை;

காண்வர வியன்றவிக் கவின்பெறு பணித்துறை
யாமத்து வந்துநின் குறிவாய்த்தா ளென்பதோ
வேய்நல மிழந்ததோள் விளங்கிழை பொறையாற்றாள்
வாணுதல் பசப்பூர விவளைநீ துறந்ததை ;

அதனால்,

இறைவளை நெகிழ்ந்த வெவ்வநோ யிவடீர
வுரவுக்கதிர் தெறுமென வோங்குதிரை விரைபுதன்
கரையம லடும்பளித் தாஅங்
குரவுநீர்ச் சேர்ப்ப வருளினை யளியே.

இதுவுமது.

(இ - ள்.) தெரியிணர் * * * தண்சேர்ப்ப—எ-து, போரின் கண் மிகுகின்ற சக்கரத்தையுடைய திருமால் திருத்தோளிற் சேர்ந்த மாலைபோலே பெரிதாகிய கடற்கரையில் அறலையுடைய மணலிடத்தே விளங்குகின்ற கொத்தினையுடைய ஞாழற்பூவுந் தேன் நாறுகின்ற புன்னைப்பூவுந் தலையவிழ்ந்த பூக்களையுடையனவாகிய தாழம்பூவுந் தலையவிழ்ந்த பூக்களையுடையனவாகிய செருந்திப்பூவும் வரியினையுடைய மிஞிறு சிறிதே ஒலித்து மிக ஆரவாரிப்பக் கரியதாகிய தும்பிகள் தம்மில் இயைந்து தேனையூதச் சூழ்ந்துகிடக்கும் விளங்குகின்ற நீரையுடைய சேர்ப்பனே! எ - று.

கடலினது புலால் நாற்றமாகிய தீங்கினைப் பூக்களின் மணம் போக்கின அதனை அக்கடல் அறியாதிருக்கின்ற சேர்ப்பன் என்றதனான் நின்வருத்தத்தைத் தீர்க்கவேண்டுமென்று கருதி அவள் நின்னிடத்தே வந்து தீர்த்தநிலையை நீயறிந்திலையென மேல்வருகின்ற தாழிசைப்பொருளையுள்ளுறுத்து உள்ளுறையுவமந் தந்தவாறுகாண்க.

கொடுங்கழி * * * துறந்ததை—எ-து, முன்னர்க் கடியதாகிய நீர் பின்னர்ச் சுவறுதலின் அறுதியையுடைத்தாய் விழுகின்ற கயலையொத்த கண் நீரற்று மல்குகின்ற அளவாய் நிற்க வருத்தத் தோடே கெட்டு அழும்படி இவளை நீ துறந்தது நின் மனம் நடுங்குதற்குக் காரணமாகிய காமநோய் தீரும்படியாகச் சுறவு முதலியன வற்றையுடைமையாற் கொடியதாகிய கழிகள் சூழ்ந்த மலைபோல் உயர்ந்த வெண்மையையுடைய இடுமணலிடத்து நீ செய்த குறியிடத்தே தப்பாமல் வந்தாள் என்பதோ? எ - று.

என்பதோ என்றது என்று சொல்லப்படுவதோவென்னும் பொருடந்துநில்லாது வாய்த்தாளென்னுஞ் சொல்லுணர்த்திய செய்ந் நன்றியைத் தானும் உணர்த்திப் பிரிவிலசைநிலையாய் நின்றது. இஃது *"ஆக வாக லென்ப தென்னு - மாவயின் மூன்றும் பிரிவி லசை நிலை" என்னுஞ் சூத்திரத்து என்ப என்பதற்கு உதாரணமாகக்காட்டினும்; அதனானுணர்க. ஏனையவும் இவ்வாறேகொள்க.

குறியின்றிப் * * * துறந்ததை—எ-து, தன்னறிவு வருத்தத்தே அழுந்தி அழுது ஆராய்ந்த நலஞ்சிறிதாகையினாலே முன்பு செறிந்த வளை தோளினின்றுங் கழன்று விழும்படி இவளை நீ துறந்தது எறிகின்ற திரையொலிக்கின்ற கடற்கரையிலே நின்னுடைய கடியதாகிய தேர் இன்ன காலத்தே வரும் என்னுங் குறிப்பின்றிப் பலநாளும் வருங்காலத்தை மனத்தாலே நோக்கி எதிர்கொண்டாள் என்பதோ? எ - று.

திரையொலியாற் றேரொலி கேட்டற்கு அரிதாகவும் அவ்வொலிகேட்டு எதிர்கொண்டாளென்றாள்.

காண்வர * * * துறந்ததை—எ-து, மூங்கில் தன் நலன் இழத்தற்குக் காரணமான தோள்களிற் கிடந்து விளங்குகின்ற பூண்களை அத்தோள் பொறுத்தலைச் செய்யாமல் மெலிந்து வாணுதல் பசப்புப்பரக்கும்படி இவளை நீ துறந்தது நோக்கினார்க்குக் காட்சி வரும்படியாகப் பண்ணினதோர் அழகைத் தான்பெறுகின்ற இப்பணித்துறையிலே நடுயாமத்தே நீ வந்து செய்த நின் வரவு உணர்த்திய குறியிலே தப்பாமல் வந்தாள் என்பதோ? எ - று.

தன்மெலிவு தோள்பொறாமைக்குக் காரணமாய் நின்றது. ஆற்றாளாயென்னும் முதல்வினை நுதல்பசப்பூரவென்னுஞ் சினைவினையோடு முடிந்தது. இவளையென்றது இங்ஙனம் நன்மை செய்தவளையென்றும், நீயென்றது அங்ஙனங் குறைந்துகின்ற நீயென்றும் பொருள் தந்தன.

தாழிசை மூன்றும் பொச்சாப்பென்னும் மெய்ப்பாடு பயந்தன.

அதனால் * * * யளியே—எ-து, வலியினையுடைத்தாகிய நீரையுடைய சேர்ப்பனே! நினக்குச் செய்ந்நன்றிக்கேடு உண்டாம், ஆகையினாலே அதுதீர வலியினையுடைய ஞாயிறு சுடுமென்று கரு

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், நஉ-ம் சூத்.

தி ஓங்குகின்ற திரை தன் கரையில் நெருங்கின அடும்பை விரைந் தளித்தாற்போல இவளுடைய இறையில்வளை கழன்ற வருத்தத் தையுடைய நோய்திரும்படி அருளினையாய் வரைந்துகொள்ளென வரைவுகடாயினாள்; எ - று.

வளைகழல்தல் வெளியாக வருத்தத்தை விளக்குதல்பற்றிச் சுரிதகத்து வளைநெகிழ்தலைக்கூறினாள்.

இதனாற் றலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௩0)

கஉஅ. தோடுறந் தருளா தவர்போ னின்று
வாடை *தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைநடை நாரை
நளியிருங் கங்கு னந்துய ரறியா
தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயி
னனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி ;

அலந்தாங் கமையலெ னென்றானைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும் ;

முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும் ;

கோதை கோலா விறைஞ்சி நின்ற
வூதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும் ;

* வாடை தூதக்க என்றும் பாடம்.

ஆங்கு,

கனவினாற் கண்டேன் றோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப
னனவின் வருதலு முண்டெனா
வவன்வரை நின்றதென் னரும்பெற லுயிரே,

இது வரைவிடையாற்றாளாய்ச் செல்கின்ற தலைவியது கவின் கண்டு வினாயதோழிக்கு அவள் தான்கண்ட கனவுநிலையுரைத்தது.

(இ - ள்.) தோடுறந் * * * கேளினி—எ-து, வாடைக் காற்று அசைக்கையினாலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்த நடையினையுடைய நாரை நந்தோளைத் துறந்து நமக்கு அருளாதவரைப்போலே நின்று பெருமையையுடைய சங்குலிடத்து நந் துயரை அறியாமல் நம்மேலளித்தலின்றாய்த் தனக்குக் காமநோயாலே வருத்தமின்றாய் மாறாமற் கூப்பிடுங் கானலையுடைய அழகிய சேர்ப்பினையுடையவனைக் கண்டு கூடினாய்போலே புதிதாக ஓர் அழகினையுடையையானாயென்று கூறுகின்றாயாயின் வெளியாக வாராத உறவில்லாதவனைக் கனவிடத்தே கண்டு யான் செய்த காரியத்தை இப்பொழுது கேள்; எ - று.

அலந்தாங் * * * போலவும்—எ-து, நின்னைப் பிரிந்த இடத்து வருந்தி உயிர்வாழேனென்று கூறினவனைப் பிடித்துக் கொண்டு நீகொண்ட என் நலத்தை இனித் தாராயென்று வளைத்துக்கொள்வேன் போலேயும் அவ்விடத்தே என்னுடைய கழிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதேகொள்ளென்று கூறி என்னையும் அளிப்பான்போலேயும்; எ - று.

முலையிடைத் * * * போலவும்—எ-து, என்னை மறத்தலேயன்றிப் பின்னர் அவசத்தான் முலையிடையிற் றுயிலுந் துயிலையும் மறந்தாயென்றுகூறிப் பழைய தன்மைகெட்ட நெஞ்சத்தையுடையேன் அழுவேன்போலேயும் அதுகண்டு வலையிலே அகப்பட்ட மயில்போலே காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்தினாயேயென்றுகூறி அடிமுன்னே தன் தலையுறும்படி வணங்குவான் போலேயும்; எ - று.

கோதை * * * போலவும்—எ-து, அங்ஙனம் வணங்குகின்ற ஊதைக்காற்றையுடைய சேர்ப்பனை மாலையே கோலாகக்கொண்டு

அடிப்பேன்போலேயும் அவ்விடத்தே யான் செய்த தப்பு யாதென்று கூறி நடுங்கி நீ பெரிதும் அறியாமையையுடையையென்று தெளிவிப்பான் போலேயும்; எ - று.

இத்தாழிசைகளுள் நெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்தலுமுடையவாகக் கூறி, எதிர்பெய்துகொண்ட தலைவனுருவும் அம்மூன்றுமுடையவாய்ச் செய்யாமரபின செய்தனவாகக் கூறி, உயர்திணையாகக் கூறியவாறும் பிறவும் உணர்க.

* "கனவு மரித்தா லவ்விடத் தான" என்பதனாற் கனவு கொள்க. முன்னடிப்பணிவான் போலவும் அலைப்பேன் போலவும் என்றாள் முன்னே தன்மனத்து நிகழ்தலுடைமையின். இதுவும் † "மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு - நினையுங் காலைப் புலவியு ளுரிய" என்பதனாற்கொள்க.

ஆங்கு, அசை.

கனவினாற் * * * னுயிரோ—எ-து, தோழீ! கனவிடத்தே கண்டேன், அதனாலே என்னுடைய பெறுதற்கரிய உயிர் எனக்குத் தரும்படி கனவிலே வந்த கானலையுடைய அழகிய சேர்ப்பன் வெளியிலே வந்து கூடுதலும் உண்டென்று கருதி அவன் அருளும் எல்லைக்கண்ணே அது நகையாக நின்றது காணெனக் கனவில் நிகழ்ந்தது கூறினாள்; எ - று.

இதனாற் கனவொடுமயங்கலென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது ‡ "இடைநிலைப்பாட்டு" என்றதனாற் தாழம்பட்ட ஓசையின்றி வந்த இடைநிலைப்பாட்டுப்பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (௧௯)

௧௨௯. தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற் [போ
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்
மெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், ௩-ம் சூத்.
† ,, ,, ,, ௩௧-ம் ,,
‡ ,, ,, செய்யுளியல், ௧௪௨-ம் ,,

மெல்லியான் பருவம்போன் மயங்கிரு டலைவர
வெல்லைக்கு வரம்பாய விடும்பைகூர் மருண்மாலை;

பாய்திரை பாடோவாப் பரப்புநீர்ப் பனிக்கட
லூவறத் துறந்தனன் றுறைவனென் றவன்றிற
நோய்தெற வுழப்பார்க ணிமிழ்தியோ வெம்போலக்
காதல்செய் தகன்றாரை யுடையையோ நீ;

மன்றிரும் பெண்ணை மடல்சே ரன்றி
னன்றறை கொன்றன ரவரெனக் கலங்கிய
வென்றுய ரறிந்தனை நரறியோ வெம்போல
வின்றுணைப் பிரிந்தாரை யுடையையோ நீ;

பனியிருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழ
லினிவரி னுயருமற் பழியெனக் கலங்கிய
தனியவ ரிடும்பைகண் டினைதியோ வெம்போல
வினியசெய் தகன்றாரை யுடையையோ நீ;

எனவாங்கு,

அழிந்தய லறிந்த வெவ்வ மேற்படப்
பெரும்பே துறுதல் களைமதி பெரும
வருந்திய செல்ல றீரத் திறனறி யொருவன்
மருந்தறை கோடலிற் கொடிதே யாழநின்
னருந்தியோர் நெஞ்ச மழிந்துக விடினே.

இது "தன்னுட் கையா றெய்திடு கிளவி" யாற் றலைவி ஆற்றுளாயினவாறு தோழி தலைவற்குக் கூறியது.

(இ - ள்.) தொல்லூழி * * * மருண்மாலை—எ-து, பல உலகங்களில் உயிர்களெல்லாம் பழைதாகிய ஊழிக்காலத்தே பிறந்திறந்து தடுமாறித் திரியும்படி அயனாய்நின்று படைத்த முதல்வன் அரனாய் அவ்வுயிரெல்லாந் தன்னிடத்தே வந்து தொகுதலைத் தான் விரும்பும் ஊழி முடிந்த காலத்திலே தன்னிடத்தே மீட்டு ஒடுக்கிக் கொள்கின்றவனைப்போலே ஞாயிறு பசற்பொழுது வந்துசேர்தற்குக் காரணமான தன்னுடைய தெறுகின்ற கிரணங்களைத் தன்னிடத்தே மீட்டுக்கொண்டு மறைகையினாலே நல்ல நீதிநூல் வழியாலே

உலகை நெறியிலே நிறுத்தி உலகை ஆண்ட அரசன்போய்ப் பின்னர் நீதியல்லதனை ஏறட்டுக் கொண்டிருந்து அறநெறியை உலகத்து நிறுத்தமாட்டாத குறுநில மன்னன்காலம்போலே மயங்கின இருள் உலகிடத்தே வரும்படி பகற்பொழுதிற்கு ஓரெல்லையாகிய, வருத்தம்மிகுதற்குக் காரணமான, மயக்கத்தையுடைய மாலைக்கண்ணே; எ - று.

மடக்கி மடங்கியெனவிகாரமாயிற்று.

மெல்லியான், படைமுதலியன இன்றி இளைத்தவன்.

எல்லை மரணகாலமுமாம்.

பாய்திரை * * * நீ—எ-து, பரக்கின்ற திரை ஒலித்தல் மாறாத பரத்தலையுடைத்தாகிய நீரையுடைய பனிக்கடலே! துறைவன் எமக்கு வலியில்லையாம்படி துறந்தானென்று அவன் கூற்றாலே உண்டான காமநோய்கூட அதன்கண் அழுந்துவாரிடத்தே நின்று வருத்தவேண்டி முழங்குகின்றாயோ? அன்றியே முன்னர்க் காதல் செய்து பின்பு நீங்கினானை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

மன்றிரும் * * * நீ—எ-து, மன்றிலே நின்ற கரியதாகிய பனையின்மடலைச் சேர்ந்திருக்கும் அன்றிலே! நந்தலைவர் தாஞ்செய்த நன்றுகளை யான் இருந்து சொல்லுதலைக் கெடுத்துவிட்டாரென்று கலங்கிய என் வருத்தத்தை அறிந்தனையாய் மிகவும்வருத்தவேண்டி ஆரவாரிக்கின்றாயோ? அன்றியே முன்பு இனிய துணையாய்ப் பின்பு பிரிந்தானை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

நன்றறைசொன்றனர் என்றதனாற் றீங்கே செய்தமை கூறினாள். இனி மிகவும் மறைந்துநின்ற களவை வெளிப்படுத்தினாரும் என்பாரும் உளர்.

பனியிருள் * * * நீ—எ-து, வருத்தத்தினையுடைய அழகினையுடைய சிறியதாகிய குழலே! இக்காலத்தே வருவாராயிற் றாஞ்செய்த பழி மிகவும்போமென்று கருதிப் பனியோடு கூடிய இருள்சூழ்ந்து வருகையினாலே கலங்கின தனித்தவருடைய வருத்தத்தைக்கண்டு நீயும் வருந்துகின்றாயோ? அன்றியே முன்பு இனியனவற்றைச் செய்து பின்பு நீங்கினானை எம்மைப்போலே நீயும் உடையையாய் வருந்துகின்றாயோ? எ - று.

உயர்தல், நோன்புயர்தல்போல நீக்கத்தின்கணின்றது.

கடலும் அன்றிலுங் குழலும் உற்ற பிணியைத் தம்பிணிக்கு வருந்ினவாகச்சேர்த்தி உயர்திணையாக்கி உவமவாயிற்படுத்த ... காண்க. இஃது "அவரவ ருறுபிணி தம்போலச் சேர்த்தியது".

எனவாங்கு—எ-து, என்றுசொல்லி; எ - று. ஆங்கு, அசை.

அழிந்தய * * * விடினே—எ-து, நெஞ்சழிந்து, அயலிலுள்ளார் அறிந்தவருத்தம் மேலிட்டுவருகையினாலே பெரியதாகிய பித்தேறுதலைப் பெரும! வரைந்துகொண்டு போக்குவாய்; அங்ஙனம் போக்குங்கால் நின்னை நுகர்ந்தோருடைய நெஞ்சம் அழிந்து கெட்டுப்போம்படியாக அவரைக் கைவிடுவையாயின், அது வருந்தியவருத்தத்தைப் போக்கும் மருந்தின்றிறத்தை அறிந்த ஒருவன் அம்மருந்தை அறியேன் என்று வஞ்சித்து அம்மருந்தின் காரியத்தைக் கெடுக்குமதிலுங் கொடிதுகாணென அவள் ஆற்றாமையைத் தோழி கூறி வரைவுகடாயினாள்; எ - று.

இது *"காமஞ்சிறப்பினும்" என்பதனாற்கொள்க.

இதனாற் றலைவற்குச் சூழ்ச்சி பிறந்தது.

இதுவுங் காலம் மயங்கிற்று. செல்லறீர்திறனறியொருவன் என்பதும் பாடம்.

இது நீ நீ என ஓரசைச்சீர் வந்து ஐஞ்சீரடிவந்த மண்டிலவாசிரியத்தானிற்று யாப்பின்வேறுபட்ட கொச்சகம். (௧௨)

௧௩௦. நயனும் வாய்மையு நன்னர் நடுவு
மிவனிற் றோன்றிய விவையென விரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத் தினிதாண்ட
வரசனோ டொன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போ
னிரைகதிர்க் கனலி பாடோடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போற்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொண் மருண்மாலை;
இம்மாலை
ஐய ரவிரழ லெடுப்ப வரோவென்
கையறு நெஞ்சங் கனன்றுதீ மடுக்கும்;

* தொல்காப்பியம் பொருளதிகாரம், களவியல், உ0-ம் சூத்.

இம்மாலே,

இருங்கழி மாமலர் கூம்ப வரோவென்
னரும்படர் நெஞ்ச மழிவொடு கூம்பும் ;

இம்மாலே,

கோவலர் தீங்குழ லிஃனய வரோவென்
பூவெழி லுண்கண் புலம்புகொண் டிஃனயும் ;

எனவாங்கு,

படுசுடர் மாலையொடு பைதலே னுழப்பாளைக்
குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.

இது பிரிவிடையாற்றாத தலைவியது ஆற்றாமை தலைவன் வந்து சார்தலின் நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

(இ - ள்.) நயனும் * * * மருண்மாலை—எ-து, இவனாலே விளங்கின கலந்த உறவும் உண்மைகூறலும் நன்மையையுடைய நடுவுநிலைமையுமாகிய இவை இனி விளக்கமின்றிப் போயினவென்று தனக்குப்பின்பு உலகத்தார் இரங்கும்படியாக அவற்றிற்கு உயர்ச்சி மிகும்படி ஆராய்ந்து பொய்யைக்கெடுத்து நன்றாக ஆண்ட அரசனோடே சேரக்கெட்ட நல்ல ஊழால் உண்டாகிய செல்வம்போலே நிறைந்த கதிரையுடைய ஞாயிறு படுதலோடே பகற்காலமும் போகப் பின்பு வருத்தங் கோடற்குக் காரணமாகிய மருட்சியையுடைய மாலைக்காலம் ஒன்றையுங் கல்லாமல் மூத்தவனுடைய ஞானக்கண்ணில்லாத நெஞ்சுபோலே புற்கென்ற இருள் உலகிலே பரந்தலைத் தாராநிற்கும்; எ - று.

ஊழ் ஊழி எனத் திரிந்தது.

"நயனு நண்பு நாணுநன் குடைமையும் - பயனும் பண்பும் பாடறிந் தொழுகலும்" என்றாராகலின் பயன் பண்பன்மை உணர்க. இரங்கப் புரைதவ நாடியென்க. அச்செல்வம் அரசனோடு போனாற் போலப் பகற்காலமும் ஞாயிற்றோடே போயிற்றென்றுணர்க.

இம்மாலை * * * மடுக்கும்—எ-து, இம்மாலைக்கண்ணே, இருடிகள் விளங்குகின்ற அழலை ஆகுதிபண்ணி எழுப்ப, என் செயலறும் நெஞ்சந் தானுங் கொதித்து எனக்குங் காமத்தீயைக் கொளுத்தும்; எ - று.

இம்மாலை * * * கூம்பும்—எ-து, இம்மாலைக்கண்ணே, கரியதாகிய கழிகளிற் பெருமையையுடைய மலர்கள் குவிய, என் நெஞ்சம் அவனை உள்ளி அழிதலோடே தான் நினைவின்றிக்குவியும்; எ-று.

இம்மாலை * * * டினையும்—எ-து, இம்மாலைக்கண்ணே, கோவலருடைய இனியதாகிய குழலாலே நெஞ்சு வருந்த, எனது பூவினதழகையுடைய உண்கண் தனிமையைக்கொண்டு வருந்தும்; எ-று.

இஃது இன்பத்தைவெறுத்தல். அரோ அசை.

எனவாங்கு—எ-து, எனச் சொல்லி; எ - று. ஆங்கு, அசை.

படுசுடர் * * * பசப்பே—எ-து, படுகின்ற சுடரையுடைய மாலையாலே வருத்தத்தையுடைய காமநோயிலே அழுந்துகின்றவளைக், குடிமக்களைப் பாதுகாத்துப் பின்னர்த் தன்னைப் பாதுகாக்கும் பாண்டியனுடைய அகற்சியையுடைய படை விடவிடப் பகைவர் நீங்கினாற்போலப், பிரிந்தவர்வந்து தீண்டத்தீண்டப் பசப்புநீங்கிற்று; ஈதிருந்தவாறு என்னென வாயில்கள் தம்முட் தம்முட் கூறினார்; எ-று.

"வாயி லுசாவே தம்மு ளுரிய" என்பது விதி. உழப்பாளைத் தொடுவழியென்க. விடுவழி தொடுவழி என்பன செயவெனெச்சக் குறிப்புச்சொல்லாகிய வழி என்னும் வினையெச்சம்.

இதனால் வாயில்கட்குப் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு பிறந்தது.

இஃது இடையிடை சொற்சீரடி வந்த கொச்சகம். (கஙு)

கஙுக. பெருங்கடற் றெய்வ நீர்நோக்கித் தெளித்தென்
றிருந்திழை மென்றோண் மணந்தவன் செய்த
வருந்துயர் நீக்குவென் போன்மற் பொருந்துபு
பூக்கவின் கொண்ட புகழ்சா லெழிலுண்கண்
ணோக்குங்கா ணோக்கி னணங்காக்குஞ் சாயலாய் தாக்கி

யினமீ னிகன்மாற வென்ற சினமீ
னெறிசுறா வான்மருப்புக் கோத்து நெறிசெய்த
நெய்த னெடுநார்ப் பிணித்தியாத்துக் கையுளர்வின்
யாழிசை கொண்ட வினவண் டிமிர்ந்தார்ப்பத்
தாழா துறைக்குந் தடமலர்த் தண்டாழை
வீழூச லூங்கப் பெறின்;

மாழை, மடமான் பிணையியல் வென்றாய் நின்னூசல்
கடைஇயா னிருப்பநீ ரேங்காய் தடமென்றோ
ணீத்தான் றிறங்கள் படர்ந்து;

நாணினகொ ல்றோழி நாணினகொ ல்றோழி
யிரவெலா நற்றோழி நாணின வென்பவை
வாணிலா வேய்க்கும் வயங்கொளி யெக்கர்மே
லாணுப் பரிய வலவ னளைபுகூஉங்
கானற் கமழ்ஞாழல் வீயேய்ப்பத் தோழியென்
மேனி சிதைத்தான் றுறை;

மாரிவீ ழிருங்கூந்தன் மதைஇயநோக் கெழிலுண்கட்
டாழ்நீர முத்தின் றகையேய்க்கு முறுவலாய்
தேயாநோய் செய்தான் றிறங்கிளந்து நாம்பாடுஞ்
சேயுய ரூசற்சீர் நீயொன்று பாடித்தை;

பார்த்துற் றனதோழி பார்த்துற் றனதோழி
யிரவெலா நற்றோழி பார்த்துற்றன வென்பவை
தன்றுணை யில்லாள் வருந்தினுள் கொல்லென
வின்றுணை யன்றி லிரவி னகவாவே
யன்றுதா னீத்த கரும்பணி வாடவென்
மென்றோண் ஞெகிழ்த்தான் றுறை;

களைகவர் கொடுங்கழிக் கண்கவர் புள்ளினந்
திளையுறப் பொன்றிய புலவுமீ னல்லதை
யிளையுயிர் செகுத்துண்ணுத் துறைவனை யாம்பாடு
மசைவர லூசற்சீ ரழித்தொன்று பாடித்தை;

அருளினகொ ணேழி யருளினகொ ணேழி
யிரவெல்லாந் தோழி யருளின வென்பவை
கணங்கொ ளிடுமணற் காவி வருந்தப்
பிணங்கிரு மோட்ட திரைவந் தளிக்கு
மணங்கம ழைம்பாலா ருடலை யாங்கே
வணங்கி யுணர்ப்பான் றுறை;

எனநாம்,

பாட மறைநின்று கேட்டன னீடிய
வானீர்க் கிடக்கை வயங்குநீர்ச் சேர்ப்பனை
யானென வுணர்ந்து நீநனி மருளத்
தேனிமிர் புன்னை பொருந்தித்
தானூக் கினனவ் வூசலை வந்தே.

இது வரைவு நீட ஆற்றளாய தலைவியைத் தோழி அவன் முன் அருமைசெய்து அயர்த்தகாலத்து அவன் வரவினை யானறிந்து ஊசலாட நின்னைக்கொண்டுபோய் ஆடுகின்ற காலத்து யான் இயற் பழிக்க நீ இயற்படமொழிவது கேட்டு வந்து ஊசலை ஊச்கியவன் இக் காலத்து வருந்தவிடாது வருத்தமறிந்து வரைந்து கொள்வனென ஆற்றுவித்தது.

(இ - ள்.) பெருங்கடற் * * * பெறின்—எ-து, நோக்குங் காலத்து அப்பார்வையாலே பிறர்க்கு வருத்தமுண்டாக்குவதுந் தன்னில் இணையொத்துப் பூவினதழகைத்தன்னிடத்தேகொண்ட புகழ்ச் சியமைந்த அழகினையுடையதுமான கண்ணிணையுடைய சாயலாய்! இனமான மீன்களது மாறுபாடுகெடத் தாக்கிவென்ற சினத்தையுடைய மீனுகிய எறியுஞ் சுறவினது மருப்பாற் செய்த பலகையைக் கோத்துப் புறவிதழொடித்த நெய்தற் பூவை நெடியநாரிலே தொடுத்து அழகுபெறக் கட்டிக் கையாலே வாசித்தலையுடைய யாழினது ஓசையைத் தம்மிடத்தே கொண்ட இனமான வண்டுகள் ஆர்ப்பரவஞ் செய்து பாடத் தாழாமற் தேன்துளிக்கும் அளவையுடைத்தாகிய மலரையுடைய தாழையினது விழுதாற் திரித்து இட்ட ஊசலை நீ போந்தாடப் பெறின், நீரையுடைப் பெரிதாகிய கடலாகிய தெய்வத்தை நோக்கி நின்னிற் பிரியேன் என்று தெளிவித்து, உன்னுடைய திருந்தின இழையையுடைய மென்றோளைக் கூடினவன் அருமைசெய்தயர்த்த

தால் நினக்குண்டாகிய அரிய வருத்தத்தை யான் அவனை எதிர்ப்ப ட்டு மிகவுந் தீர்க்குவேன்போலே இராநின்றதென்றாள்; எ - று.

சாயல் ஈண்டுத் தலைவிக்கோர் பெயர்த்தன்மையாய் நின்றது. பெறிற் தீர்க்குவேன்போலுமென்க.

போலும் என்னும் முற்றுச்சொல் ஈற்றுமிசை உகரம் மெய்யொழித்துக் கெட்டுநின்றது. கோத்து யாத்து என்னுஞ் செய்தெனெச்சம் இட்ட என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது.

"தாயத்தினடையா" என்னும் பொருளியற் சூத்திரத்தால் என் தோளென்றாள். இது மேல் வருவனவற்றிற்குங் கொள்க.

மாழை * * * படர்ந்து—எ-து, அதுகேட்டு ஊசலிடத்தேசென்ற தலைவியை நோக்கி இளமையையுடைய மடமான்பிணையினது நோக்கின் இயல்பை வென்றவளே! நின் தடமென்றோளைக் கைவிட்டவனுடைய கொடுமையினது கூறுகளைச் சொல்லிப் பாடி நீ ஏறின ஊசலை யான் உயரச்செலுத்தித் தாழ்த்து ஆட்ட நெடும் பொழுது ஆடாய் என்றாள்; எ - று.

நீள் காலத்தின் நீட்சியை உணர்த்திற்று.

நாணினகொ * * * றுறை—எ-து, தலைவி அங்ஙனம் பாடாமையிற் தோழி தான் தோழீ! கானலிடத்துக் கமழ்கின்ற ஞாழற்பூவின் நிறத்தையொப்ப நின்மேனி பசப்பித்தவனுடைய துறையிடத்து ஒளியையுடைய நிலாவையொக்கும் விளங்குகின்ற ஒளியினையுடைய இடுமணலின்மேலே ஓடும் அமையாத செலவுகளையுடைய ஞெண்டுகளென்று சொல்லப்படுமவை இப்பொழுது நம்மைக் கண்டு தம் அளையிலே புகாநின்றன; அங்ஙனம் புகுகையினாலே அத்துறைவன் நம்பாற் செய்த கொடுமையை நினைத்துத் தோழீ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ? தோழீ! நம்முன் தாம் நிற்றற்கு நாணினவோ? எங்ஙனம் நாணினவாயிற் தோழீ! இராக்காலமெல்லாம் நாணிக்கிடந்தனவாய் இருக்குமென இயற்பழித்தாள்; எ-று.

துறையிடத்து அலவன் என்பவை என்க. என்பவை தொழிற் பெயர்.

மாரிவீ * * * பாடித்தை—எ-து, அது கேட்டுந் தலைவி பாடாமையிற் பின்னுந் தோழி மழை விரும்புகின்ற பெரிய கூந்

லையும் மதர்த்த நோக்கினது அழகையுடைய கண்ணிணையுந் தாழ்ந்த கடலிற் பிறந்த முத்தினது அழகை ஒக்கும் முறுவலிணையுமுடையாய்! மாயாத நோயைச் செய்தவனுடைய கொடுமையின் கூற்றினைச் சொல்லி நாம் பாடும் மிக உயர்ந்த ஊசற்பாட்டை நீ ஒன்றுபாடுவாய் என்றாள். எ - று.

சீர் என்றது தாள அறுதியையுடைய ஊசற்பாட்டை.

பார்த்துற் * * * றுறை—எ-து, அது கேட்ட தலைவி பின்னும் பாடாமையிற் றோழி நம்மேல் அன்புற்றுப் புணர்ந்த அன்று தானெழுதிய கரும்பினது அழகு கெடும்படி மென்றோளை மெலிவித்தவனுடைய துறையிடத்து இனிய துணையோடு கூடிய அன்றிலென்று சொல்லப்படுமவை தன் துணையானவனை நீங்கினவள் வருந்தினளோ என்று கருதி இராக்காலத்தும் அழைத்தனவில்லை; ஆகையினாலே தோழீ! அவை நம்வருத்தத்தைப் பார்த்துத் தாமும்வருத்தமுற்றனபோலே இருந்தன; ஆதலால் நற்றோழீ! இரவெல்லாம் நம்வருத்தத்தைப் பார்த்துத் தாம்வருத்தமுற்றன என்றாள்; எ-று.

பாத்துற்றன பாடமாயிற் பிரிவுற்றனவென்க.

கரைகவர் * * * பாடித்தை—எ-து, அது கேட்ட தலைவி கரையையிடித்துத் தனக்காக்கிக் கொள்ளுகின்ற கொடுங்கழியிடத்து நோக்கினார்கண்ணை வாங்கிக்கொள்ளும் அழகையுடைய பறவைத்திரள் திரைமோதுகையினாலே இறந்த புலானாற்றத்தையுடைய மீனை இரையாகத் தின்னுமதல்லது தாம் ஒன்றன் உயிரைப்போக்கி இரையாக அதனை உண்ணாத அருட் துறைவனை நாம்பாடும் அசைந்து வருதலையுடைய ஊசற்பாட்டை, நீ இயற்பழித்ததனை அழித்து, இயற்பட ஒன்று பாடுவாய் என்றாள்; எ - று.

அருளினகொ * * * றுறை—எ-து, அது கேட்ட தோழி அங்ஙனம் பாடாமையிற் தலைவி, மணம் நாறுகின்ற கூந்தலையுடையாரிடத்து உண்டாகிய ஊடலை அதுகண்டபொழுதே விளைந்து தீர்க்குமவன் துறையிடத்துத், திரட்சிகொண்ட இடுமணலாலே காவியென்று சொல்லப்படுமவை வருந்த, அவற்றைத் தம்மிற் பிணங்கிவருகின்ற கருமை தங்கிய பெருமையையுடையனவாகிய திரைகள் வந்து அம்மணலைக் கரைத்து அருள்பண்ணுகிற்கும்; ஆகையினாலே அத்திரைகள் தோழீ! அருளினவோ? தோழீ! அருளினவோ? தோழீ! எங்

ஙனம் அருளினவாயிற் தோழி! இரவெல்லாம் அருளினவாயிருக்கு மென இயற்படமொழிந்தாள்; எ - று.

களவுகாலத்துத் தலைவி *"தன்வயி னுரிமையு மவன்வயிற் பரத்தையுங்" கூறுதற்கு உரியளென்றலின் அவன்வயிற் பரத்தைமை கூறிய காலத்து அதனை வணங்கித் தீர்த்தமை கருதி ஊடலை வணங்கி உணர்ப்பானென்றாள்.

காற்றுத் தூற்றிய மணலிடத்து அறல்வருத்தின காவியைத் திரைவந்து அளித்தாற் போல அலர்தூற்றுதலால் வருந்திய வருத்தத்தை நீக்கி நம்மை அளித்து வரைவனென உள்ளுறையுவமங் கொள்க.

எனநாம் * * * வந்தே—எ-து, அன்று அங்ஙனம் இயற்பழித்தும் இயற்படமொழிந்தும் யானும் நீயும் பாடச், சேர்ப்பன், பாட்டை மறையநின்று கேட்டனனாய் நீடிய வெண்மையையுடைத்தாகிய நீர்க்கிடக்கை விளங்குகின்ற நீர்மையையுடைய சேர்ப்பனை யான் ஊசல் ஊக்கென்றேனென்று உணர்ந்து, பின்பு யானென நம்மில் நீ மிகவும் மருளும்படி அவன் தேனினம் ஒலிக்கும் புன்னையைப்பொருந்திநின்று, பின்பு வந்து அவ்வூசலைத் தான் ஊக்கினன்; அற வருத்தம் அறிந்து வியவாநின்று நம்வருத்தம் அறிந்து வரைந்து கொள்வனென ஆற்றுவித்தாள்; எ - று.

கிடக்கை, கட்டில்; நீர், கழி.

இதனாற் தலைவற்கு ஆராய்ச்சி பிறந்தது.

இனி † "உணர்ப்புவயின்வாரா ஊடற்" கட் தோழி களவுகாலத்து நிகழ்ந்தமை கூறித் தலைவியை ஊடறீர்த்ததென்று கிளவிகூறி அதற்கேற்ப உரைப்பாருமுளர்.

இஃது ஐஞ்சீரடி வந்த நெடுவெண்பாட்டாகிய தரவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டுங் கொச்சகமுந் தனிவிரவின கொச்சகவெண்பாவுங் கொச்சகமும் நெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லுஞ் சுரிதகமும் வந்த கொச்சகம். (கச)

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ0-ம் சூத்.
† " , கற்பியல் கூ-ம் "

௧௩௨. உரவுநீர்த் திரைபொர வோங்கிய வெக்கர்மேல்
விரவுப் பல்லுருவின் வீழ்பெடை துணையாக
விரைதேர்ந்துண் டசாவிடூஉம் புள்ளின மிறைகொள
முரைசுமூன் றாள்பவர் முரணியோர் முரண்டப
நிரைகளி றிடைபட நெறிஇயாத்த விருக்கைபோற்
சிதைவின்றிச் சென்றுழிச் சிறப்பெய்தி வினைவாய்த்துத்
துறையகலம் வாய்சூழுந் துனிகடற் றண்சேர்ப்ப ;

புன்னைய நறும்பொழிற் புணர்ந்தனை யிருந்தக்கா
னன்னுதா லஞ்சலோம் பென்றதன் பயனன்றோ
பாயின பசலையாற் பகற்கொண்ட சுடர்போன்றாண்
மாவின தளிர்போலு மாணல மிழந்ததை ;

பன்மலர் நறும்பொழிற் பழியின்றிப் புணர்ந்தக்காற்
சின்மொழி தெளியெனத் தேற்றிய சிறப்பன்றோ
வாடுபு வனப்போடி வயக்குறு மணிபோன்றா
ணீடிறை நெடுமென்றோ ணிரைவளை நெகிழ்ந்ததை ;

அடும்பிவ ரணியெக்க ராடிநீ மணந்தக்காற் [றோ
கொடுங்குழாய் தெளியெனக் கொண்டதன் கொளையன்
பொறையாற்றா நுசுப்பினாற் பூவீந்த கொடிபோன்றாள்
மறைபிற ரறியாமை மாணானோ யுழப்பதை;

எனவாங்கு ;

வழிபட்ட தெய்வந்தான் வலியெனச் சார்ந்தார்கட்
சழியுநோய் கைம்மிக வணங்காகி யதுபோலப்
பழிபரந் தலர்தூற்ற வென்றோழி
யழிபட ரலைப்ப வகறலோ கொடிதே.

இது வரைவு நீட்டித்துழிப் பகற்குறிவந்து நீங்குந் தலைவனை எதிர்ப்பட்டுத் தோழி, அவனை நாணு நெஞ்சலைப்ப வரைவுகடாயது.

(இ - ள்.) உரவுநீர்த் * * * றண்சேர்ப்ப—எ-து, முரைசு மூன்றை ஆள்கின்ற பாண்டியர் தம்மொடு மாறுபட்டோருடைய மாறு பாடு கெடும்படி நிரைத்த களிறுகள் வேற்படைக்கு நடுவே நிற்கும் படி நெறியுண்டாகக் கம்பத்தோடே கட்டின இருக்கை போலே விர

வுதலையுடைய பலவடிவினையுடையவாய் இரையைத் தேடித் தின்று இளைப்பாறும்புள்ளினங்கள், தாம்விரும்பினபேடுகள் தமக்குத் துணையாக வலியினையுடைய கடலினது திரை வந்துபொரும்படி உயர்ந்த இடுமணலின்மேலே தங்குதல்கொள்ளத், தாஞ்சென்ற இடத்துத் தமக்கொரு கேடின்றித் தாம்போன காரியம் வாய்த்துவந்து தலைமைபெற்றுத் துறையிடத்தனவாகிய மரக்கலங்கள் இடத்தைச் சூழ்ந்து நிற்குந் தெளிந்த கடலையுடைய சேர்ப்பனே; எ - று.

முரைசு மூன்ருவன வீரமுரைசு தியாகமுரைசு நியாயமுரை சென்பன. தன்முரைசுஞ் சேரன்முரைசுஞ் சோழன்முரைசுமென மூன்றென்றலுமாம்.

பாசறைபோலே என்ற வினையுவமம் மேல் வருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது. பறவைகள் வினைப்படைச்கும் மரக்கலங்கள் இடைநின்ற ஆனைக்கும் உவமை.

கரைக்குச் சிறந்தனவாகி இரைகவர்ந்து துணைபுணர்ந்த பறவைகளும் வினைவாய்த்து நின்றமரக்கலங்களும் பகைவர்க்கு வருத்தஞ் செய்யும் பாசறைபோலத் தோன்றும் என்றதனல், இல்லறம் நிகழ்த்தித் துணையொடு புணர்ந்தவர்களும் வினைவாய்த்துச் செல்வச் செருக்குடையவர்களுந் தமக்கு வருத்தத்தைத் தருகின்றரென உள்ளுறைதந்தவாறு காண்க; அவரைப்போல யாமுந் துணைபுணர்ந்து இல்லறநிகழ்த்திச் செல்வம் உண்டாயிருக்கப் பெற்றிலேம் என்னும் வருத்தத்தை அவர்கொடுத்தலின்,

புன்னைய * * * மிழந்ததை—எ - து, பரந்த பசலைநிறத்தாலே பகற்பொழுது எடுத்த விளக்குப்போல் ஒளிகெட்டவள் மாவின் கண்ணவாகிய தளிரை ஒக்கும் மாட்சிமையையுடைய நலத்தை இழந்தது புன்னையையுடைய நறியதாகிய பொழிலிலே இவளைப் புணர்ந்திருக்க நன்னுதால்! நீ யான் பிரிவேனென்று அஞ்சுதலைப் பாதுகாத்துக்கொள் என்று தெளிவித்ததனல் உள்ள பயனல்லவோ ? எ-று.

பன்மலர் * * * நெகிழ்ந்ததை—எ - து, அழகு வாடிக் கெட்டு நெடுங்காலம் விளக்கமுறுத்தாத மணியை ஒத்தவளுடைய திரண்ட நெடிய மென்றோளின் நிரைத்த வளைகழன்றது பல மலர்களையுடைய நறும்பொழிலிலே குற்றமின்ருக அவளைப் புணர்ந்திருக்கச் சிலவான மொழியினையுடையாய்! நின்னை யான் பிரியேன் இதனைத் தெளிவாயாக என்று தெளிவித்ததனல் உள்ள சிறப்பன்றே ? எ-று.

அடும்பிவ * * * யுழப்பதை—எ-து, தன் மென்மையால் அணிகளைப் பொறுத்தலாற்ருத இடையாலே அணிகலங்கள் அணியாமற் பூமாறின கொடியையொத்தவள் பிறர் இக்களவொழுக்கத்தையறியாமல் மறைந்து மருந்தால் மாட்சிமைப்படாத காமநோயிலே அழுந்தியது அடம்பங்கொடிபரந்த இடுமணலிலே கூடவிளையாடி நீபுணரக், கொடுங்குழாய்! யான்பிரியேன் இதனைத்தெளிவாயாக என்று கூற, அதனை மெய்யென்றுட்கொண்டதனுடைய கோட்பாடன்ருே? எ-று.

எனவாங்கு, அசை.

வழிபட்ட * * * கொடிதே—எ—து, தனக்கு வலியைத் தரும் என்று கருதித் தான் வழிபட்ட தெய்வந் தன்னைச் சேர்ந்தவர்கட்கு நெஞ்சழியும் நோய் கைமிகும்படி வருத்தமாகிய தன்மைபோல நின்னைத் தனக்கு வலியென்று வழிபட்ட என்றோழியை நீ செய்த பழி எங்கும் பரந்து அலர் தூற்றுகையினலே உண்டான மிக்க நினைவு வருத்தம் நீங்குதல் கொடிதுகாண் எனத் தோழி வரைவுகடாயினுள்; எ-று.

இதனுற் தலைவிக்கு அசைவுபிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கரு)

கநந. மாமலர் முண்டகந் தில்லையோ டொருங்குடன்
கான லணிந்த வுயர்மண லெக்கர்மேற்
சீர்மிகு சிறப்பினேன் மரமுதற் கைசேர்த்த
நீர்மலி கரகம்போற் பழந்தூங்கு முடத்தாழைப்
பூமலர்ந் தவைபோலப் புள்ளல்குந் துறைவகேள்;

ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுத
லன்பெனப் படுவது தன்கிளை செருமை
யறிவெனப் படுவது பேதையார் சொன்னேன்றல்
செறிவெனப் படுவது கூறியது மருமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணேடா துயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்ருரைப் பொறுத்தல்;

ஆங்கதை யறிந்தனி ராயினென் றோழி
நன்னுத னலனுண்டு துறத்தல் கொண்க
தீம்பா லுண்டவர் கொள்கலம் வரைதலி
னின்றலை வருந்தியா டுயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் றேரே.

இது "வரைவுடம் பட்டோர்க் கடாவல் வேண்டினும்" என்பதனாற் றலைவன் தெருளாதவனைத் தெருட்டி வரைவுகடாயது.

(இ-ள்) மாமலர் * * * துறைவகேள்—எ-து கருமையையுடைத்தாகிய மலரையுடைய கழிமுள்ளி தில்லையோடே சேரச் சூழ்ந்து கானலிடத்துத் திரையிட்ட மணல்மேலே காற்றால் உயர்ந்த மணலிலே உடனின்ற, புகழ்மிகுகின்ற தலைமையினையுடைய தக்கணாமூர்த்தித்தேவர் தாமிருந்த ஆலமரத்தே தாமிருப்பதற்குமுன்னே தூக்கிவைத்த நீர்நிறைந்த குண்டிகை போலப் பழந்தூங்கும் முடத்தையுடைய, தாழைப்பூ அலர்ந்தவைபோலக் குருகினம் அத்தாழைமேலே தங்குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக்கேள்; எ-று.

முள்ளுடையமுண்டகமுங் கொடியதில்லையுமே சூழ்ந்த கானலைக் கொடிதாக அலர்கூறுகின்ற மகளிர்சூழ்ந்திருக்கின்றதாகவும் உயிர்க்கொலை சூழுங்குருகுகள் நன்றாய தாழைமலர்போற் தோன்றுகின்றதனை எம்முயிர்க்கு வருத்தஞ்செய்கின்ற தலைவன் நன்மகனைப்போற் பிறர்க்குத் தோன்றுகின்ற தன்மையாகவும் உள்ளுறையுவமங்கொள்க.

ஆற்றுதல் * * * பொறுத்தல்—எ-து, இல்வாழ்க்கை நடத்துதல் என்று சொல்லுவது மிடித்தவர்க்கு யாதானும் ஒன்றை உதவுதலை; ஒன்றைப் பாதுகாத்தல் என்று சொல்லுவது கூடினாரைப் பிரியாதிருத்தலை; மக்கட்பண்பு என்று சொல்லப்படுவது உலகவொழுக்கம் அறிந்தொழுகுதலை; அன்பு என்று சொல்லப்படுவது தன்சுற்றத்தைக் கெடாதிருத்தலை; அறிவு என்று சொல்லப்படுவது அறியாதார் தன்னைப் பார்த்துச் சொல்லுஞ் சொல்லைப் பொறுத்தலை; ஒருவரோடு ஒருவர்க்கு உறவு என்று கூறப்படுவது கூறியதொன்றைத் தாம் மறாதிருத்தலை; நிறை என்று சொல்லப்படுவது மறைந்தது ஒரு காரியம் பிறர் அறியாமல் ஒழுகுதலை; முறை என்று சொல்லப்படுவது நமரொன்று கண்ணோட்டஞ் செய்யாது அவர் செய்த குறைக்கேற்ப அவர் உயிரைக் கொள்ளுதலை; பொறை என்று சொல்லப்படுவது பகைவரைக் காலம் வருமளவும் பொறுத்திருத்தலை; எ-று.

ஆங்கதை * * * றேரோ—எ-து, அப்படியே அக்குணத்தை நீரோ அறிந்தொழுகினீராயின் அவ்வொழுக்கத்திற்கு ஏற்பது ஒன்று கூறுவேன்; கொண்க! என் தோழியது நன்னுதலின் நலத்தை நுகர்ந்து அவளைத் துறத்தல், இனியதாகிய பாலையுண்ணுமவர்கள் பாலையுண்டு அதனைக் கொண்டிருக்குங் கலத்தைக் கவிழ்த்துவிடுதல் போல்வது ஒன்றாகையினாலே, நின்னிடத்து வருந்தினவள் துயரத்தை வளர்ந்து சென்றனையாய்க் களைவாய்; அங்ஙனங் களைதற்கு நின் தேர் புரவியைப் பூண்பதாக எனத் தெருட்டிவரைவுகடாயினாள்; எ-று.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இது தனிச்சொல்லின்றி ஆசிரியச் சுரிதகம் பெற்ற தரவிணைக் கொச்சகம். (கசு)

கஙசு. மல்லரை மறஞ்சாய்த்த மலர்த்தண்டா ரகலத்தோ
னொல்லாதா ருடன்றோட வுருத்துட னெறிதலிற்
கொல்யானை யணிநுத லழுத்திய வாழிபோற்
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலி
னிருங்கட லொலித்தாங்கே யிரவுக்காண் பதுபோலப்
பெருங்கட லோதநீர் வீங்குபு கரைசேரப்
போழ்ய வண்டினாற் புல்லென்ற துறையவாய்ப்
பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப
வொருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலா மச்சுற
விருநிலம் பெயர்ப்பன்ன வெவ்வங்கூர் மருண்மாலை;

தவலினோய் செய்தவர்க் காணாமை நினைத்தலி
னிகலிடும் பனிதின வெவ்வத்து ளாழ்ந்தாங்கே
கவலைகொ ணெஞ்சினேன் கலுழ்தரக் கடனோக்கி
யவலமெய்க் கொண்டது போலுமஃ தெவன்கொலோ;

நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலிற்
கடும்பனி கைமிகக் கையாற்று ளாழ்ந்தாங்கே
நடுங்குநோ யுழந்தவென் னலனழிய மணநோக்கி
யிடும்பைநோய்க் கிகுவன போலுமஃ தெவன்கொலோ;

வையினர் நலனுண்டார் வாராமை நினைத்தலிற்
கையறு நெஞ்சினேன் கலக்கத்து ளாழ்ந்தாங்கே

மையல்கொ ணெஞ்சொடு மயக்கத்தான் மாேனக்கி
யெவ்வத்தா லியன்றபோ லிலேகூம்ப லெவன்கொலோ;

எனவாங்கு,

களைகாணுப் பௌவத்துக் கலஞ்சிதைந் தாழ்பவன்
றிரைதரப் புணைபெற்றுத் தீதின்றி யுய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர
நிரைதொடி துயர நீங்கின்றால் விரைந்தே.

இது பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்ருத தலைவி இவ்வகைப்பட்டனவும் நமதிடுக்கண்கண்டு எவ்வங்கொண்டன போன்ற; அவரும் நமக்கருளுவர்கொல்லோ, எனச்சொல்லிய நேரத்துக்கட் தலைவன் புக, அவ்வளவில் அவள் அவலம் நீங்கினமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

(இ - ள்.) மல்லலை * * * மருண்மாலே—எ-து, பகையாய் வந்த மல்லனை மறத்தைக் கெடுத்த, அலர்ந்த தண்ணிய தாரை அணிந்த, திருமார்பையுடைய மாயவன், தன் பகைவர் எல்லாருஞ் சேரவந்து உருத்துத் தன்னை எறிகையினாலே, அவரை உடன்று அவர் ஓடும்படியாக அவர் ஏறின கொல்யானையினது அழகினையுடைய மத்தகத்திலே அழுத்தின சக்கரம்போலே, ஞாயிறு தான் பரப்பிய கதிர்களைத் தன்னிடத்தே குவித்துக்கொண்டு அத்தகிரியைச் சேர்ந்து மறைகையினாலே பெரிதாகிய கடலில் ஓதம் ஏறுகின்ற நீர் மிக்குச் கரையைச் சோாநிற்கக், கழியிடத்துப் பூச்களினின்றும் போன வண்டுகளாலே பொலிவழிந்த துறையிடத்தனவாய்த் துயில் கொள்வனபோலே, அக்கயத்தின்மலர்களெல்லாம் வாய்குவியாநிற்க, அக்காலத்தே இருங்கடல் ஒலித்து இவ்வுலகெல்லாம் ஒருபடிப்பட நடுக்கமுற்று அச்சமுறும்படி தான் தோற்றுவித்த இருநிலத்தைத் தான் மீண்டு தன்னிடத்தே ஒடுக்கிக்கொள்ளுந் தன்மையையொத்த இராக்காலத்தைத் தான்படைப்பதுபோல, அதற்குமுன்னே தோன்றுகின்ற, பிரிந்தோர்க்கு வருத்தம் மிகுதற்குக் காரணமான, மருண்மாலைக் கண்ணே; எ - று.

இருங்கடல் ஒலித்தெழுந்து உலகைக் கோப்பது போன்ற இராக்காலத்தைத் தான்படைப்பதுபோற் தோன்றுகின்ற மாலை யென்க. மறைதலின் ஆங்கே தோன்றுகின்ற மாலையென்க.

தவலினேய் * * * தெவன்கொலோ—எ-து, எனக்குக் கேடில்லாத காமநோயைச் செய்தவனைக் கண்ணாற் காணுமல் என் நெஞ்சு நினைக்கையினுலே, அது தனக்கிடமாகக் கொண்டு மாறு பாடுகளைக் கொடுக்கும் பனிக்காலம் அறிவைத் தின்றுவிட, அப்பொழுதே வருத்தத்திலே அழுந்திப் பலநினைவு கொண்ட நெஞ்சினையுடைய யான் கலக்கத்தைத் தரக், கடல் அதனை நோக்கி என்னுடைய இந்த அவலத்தைத் தன்னுடைய மெய்யிலே கொண்டது போலே கூப்பிடாநின்றதற்குக் காரணமென்னேதான்? எ-று.

நடுங்குநோய் * * * தெவன்கொலோ—எ-து, எனக்கு நடுங்குகின்ற காமநோயைச் செய்தவர் என்னை அருளாதபடியாலே என் நெஞ்சு அவரை நினைக்கையினுலே, அதுகண்டு கடிய பனிக்காலங் கைம்மிக்குவர, அதுகண்டு அப்பொழுதே செயலறவிலே யான் அழுந்த, மணற்குன்று அதனை நோக்கி நடுங்குகின்ற நோயிலே உழந்து என்னலத்தை இருந்திழந்தேனது இடும்பையைத் தரும் நோய்க்குத் தான் கரைந்து தாழ்வதுபோல இராநின்றதற்குக் காரணமென்னேதான்? எ-று.

திரையான் மணற்குன்று கரைந்து வீழ்கின்றதனைக் கண்டு கூறினுள். ஆழ்ந்து, ஆழவென்க.

வையினர் * * * லெவன்கொலோ—எ-து, இறந்துபட்டு வருத்தந்தீராமல் என்னைவைத்து என்னலத்தை உண்டவர் ஈண்டு வாராதபடியாலே என்னெஞ்சு அவரை நினைக்கையினுலே, அதுகண்டு பனிக்காலம் வருத்த, அது கண்டபொழுதே மயக்கத்தாலே செயலற்ற நெஞ்சினேனுய்க் கலக்கத்திலே அழுந்த, மரம் அதனை நோக்கி வருத்தத்தாற் செய்தவைபோலே மயக்கங்கொண்ட நெஞ்சோடே இலைகள் குவிதற்குக் காரணம் என்னேதான்? எ-று.

எனவாங்கு—எ-து, என இவள் சொல்லாநிற்க; எ-று.

ஆங்கு, அசை.

கரைகாணுப் * * * விரைந்தே—எ-து, கரைகாணுத நடுக்கடலிலே மரக்கலங் கெட்டு அழுந்துகின்றவன் திரைகொண்டுவந்துதர ஒருதெப்பத்தைப் பெற்றுப் பின்பு தீதில்லையாய்ப் பிழைத்தாற்போல இவள்காதலர் விரைந்து புகுத இடும்பையாவதும் விரைந்துபோயிற்று; அதனைக்காணீரோன வாயில்கள் தம்முள்ளே கூறினுர், எ-று.

எனப்புகுதரவென்க. ஆல் அசை.

இதனாற் றலைவிக்குப் புணர்ச்சியுவகைபிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கஎ)

க௩௫. துணைபுணர்ந் தெழுதருந் தூநிற வலம்புரி
யிணைதிரண் மருப்பாக வெறிவளி பாகனா
வயிறிணி நெடுங்கத வடைத்தமைத் தணிகொண்ட
வெயிலடு களிறேபோ லிடுமண னெடுங்கோட்டைப்
பயிறிரை நடுநன்னாட் பாய்ந்துறூஉந் துறைவகேள்;

கடிமலர்ப் புன்னைக்கீழ்க் காரிகை தோற்றாளைத்
தொடிநெகிழ்ந்த தோளளாத் துறப்பாயான் மற்றுநின்
குடிமைக்கீழ்ப் பெரியதோர் குற்றமாய்க் கிடவாதோ;

ஆய்மலர்ப் புன்னைக்கீ ழணிநலந் தோற்றாளை
நோய்மலி நிலையளாத் துறப்பாயான் மற்றுநின்
வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ;

திகழ்மலர்ப் புன்னைக்கீழ்த் திருநலந் தோற்றாளை
யிகழ்மலர்க் கண்ணளாத் துறப்பாயான் மற்றுநின்
புகழ்மைக்கட் பெரியதோர் புகராகிக் கிடவாதோ;

எனவாங்கு,

சொல்லக் கேட்டனை யாயின் வல்லே
யணிகிளர் நெடுவரை யலைக்குநின் னகலத்து
மணிகிள ராரந் தாரொடு துயல்வர
வுயங்கின ளுயிர்க்குமென் றோழிக்
கியங்கொலி நெடுந்திண்டேர் கடவுமதி விரைந்தே.

இது வரையாது வந்தொழுகுந் தலைவனைத் தோழி நெருங்கி வரைவுகடாயது.

(இ - ள்.) துணைபுணர்ந் * * * துறைவகேள்—எ-து வேல்தைத்துச் செறிந்த நெடிய கதவாகச் சமைத்து அதனால் அடைத்து அழகுகொண்ட எயிலைக் குத்தும் களிறுபோலே இடுமணலின்

நெடிய சிகரத்தைப் பயின்ற திரை, அலைக்கின்ற காற்றுப் பாகனுகத், துணையைக் கூடி எழுகின்ற தூய நிறத்தையுடைய வலம்புரிகள் இணைந்த திரண்ட கொம்புகளாக, நடுநாட்கண்ணே குத்திய வலிய யானைபோலே முழங்குந் துறைவனே! யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

"அயிற்கதவம் பாய்ந்துழக்கி" என்முர் பிறரும். தான்பாதுகாக்கப்படுகின்ற மணற்குன்றைத் தானே கரைத்தாற்போல நின்றற் பாதுகாக்சப்படுந்தலைவியை நீதானே வருத்தாநின்முய் என உள்ளுறையுவமங் கொள்க. களிறே போல என்ற வினையுவமும் கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்து நின்றது.

கடிமலர்ப் * * * கிடவாதோ—எ-து, மணத்தையுடைத்தாகிய மலரினையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனுற் தன் அழகு தோற்றவளைத் தொடியுட்பட நெகிழ்கின்ற தோளளாம்படி கைவிடுவையாயிராநின்முய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின் குடிமையிடத்துப் பெரியதோர் குற்றமாய்த் தங்காதோ? எ-று.

குடிமை, ஒழுக்கம்.

ஆய்மலர்ப் * * * கிடவாதோ—எ-து, நன்றென்று ஆய்ந்த மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனுற் தன் அழகையுடையநலந் தோற்றவளைக் காமநோய் மிகுகின்ற நிலைமையளாகக் கைவிடுவையாயிராநின்முய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின் மெய்கூறுதற்கட் பெரியதோர் பொய்யாய்த் தங்காதோ? எ-று.

மெய் நின்னிற்பிரியேனெனத் தெளிவித்தது.

திகழ்மலர்ப் * * * கிடவாதோ—எ-து, விளங்குகின்ற மலரையுடைய புன்னைக்கீழ் நின்னைப் புணர்ந்ததனுற் திருவின் நலம்போன்ற நலத்தைத் தோற்றவளை முன்பு தோற்ற மலர்கள் தாம் இகழ்கின்ற கண்ணையுடையளாம்படி கைவிடுவையாயிராநின் றுய்; அங்ஙனங் கைவிடுகின்றது பின்னை நின்னைப் புகழ்ந்து கூறுந் தன்மையிடத்துப் பெரியதோர் குற்றமாய்த் தங்காதோ? எ-று.

எனவாங்கு—எ-து, என்று யான்சொல்ல;எ-று. ஆங்கு அசை.

சொல்லக் * * * விரைந்தே—எ - து, வல்லே கேட்டாயாயின் அழகு விளங்குகின்ற நெடிய மலையை வருத்தும் நின் மார்பிடத்தே மாணிக்கம் விளங்கும் முத்துவடம் பூமாலையொடு

அசைதலுண்டாக அணிந்து வருந்தினளாய் நெட்டுயிர்ப்புக்கொள்ளும் என்றேழிபொருட்டு ஓடுகின்ற ஒலியினையுடைய நெடியதாகிய தேரை விரைந்து செலுத்துவாயென வரைவுகடாயினாள்; எ-று.

*"களனும்பொழுதும் வரைநிலைவிலக்கிக்-காதன்மிகுதி யுளப்படப்பிறவு - நாடுமூரு மில்லுங்குடியும் - பிறப்புஞ்சிறப்பு மிறப்பநோக்கி - யவன்வயிற்றோன்றிய கிளவியொடுதொகைஇ - யனைநிலைவகையான் வரைதல்வேண்டினும்" என்பதனிற் சிறப்பு என்பதனால் ஒழுக்கமும் வாய்மைம் புகழும் பிறப்புங் கூறி வரைவுகடாயினாள்.

இதனாற் தலைவற்கு அசைவு தோன்றிற்று.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கஅ)

கரு௯. இவர்திமி லெறிதிரை யீண்டிவந் தலைத்தக்கா
லுவறுநீ ருயரெக்க ரலவனா டளைவரித்
தவலிறண் கழகத்துத் தவிராது வட்டிப்பக்
கவறுற்ற வடுவேய்க்குங் காமர்பூங் கடற்சேர்ப்ப;

முத்துறழ் மணலெக்க ரளித்தக்கான் முன்னாயம்
பத்துருவம் பெற்றவன் மனம்போல நந்தியா
ளத்திறத்து நீங்க வணிவாடி யவ்வாயம்
வித்தத்தாற் றேற்றான்போல் வெய்துய ருழப்பவோ;

முடத்தாழை முடுக்கரு ளளித்தக்கால் வித்தாய
மிடைத்தங்கக் கண்டவன் மனம்போல நந்தியாள்
கொடைத்தக்காய் நீயாயி னெறியல்லாக் கதியோடி
யுடைப்பொதி யிழந்தான்போ லுறுதுய ருழப்பவோ;

நறுவீதாழ் புன்னைக்கீழ் நயந்துநீ யளித்தக்கான்
மறுவித்த மிட்டவன் மனம்போல நந்தியா
ளறிவித்து நீங்கக் கருதியாய்க் கப்பொருள்
சிறுவித்த மிட்டான்போற் செறிதுய ருழப்பவோ;

ஆங்கு,

கொண்டுபலர் தூற்றுங் கௌவை யஞ்சாய்
தீண்டற் கருளித் திறனறிந் தெழீஇப்

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், உ௩-ம். சூத்.

பாண்டியஞ் செய்வான் பொருளினு
மீண்டுக விவணல மேறுக தேரே.

இது வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைவனைத் தோழி தலைவியாற்ருமை கூறிச் செலவுவிலக்கி வரைவுகடாயது.

(இ - ள்.) இவர்திமி * * * கடற்சேர்ப்ப—எ-து, பரக்கின்ற மீன்பிடிக்குந் திமிலையுடைய எறியுந்திரைகள் திரண்டுவந்து அலைக்க, ஊறுகின்ற நீரையுடைய உயர்ந்த இடுமணலிடத்து அலையினின்றும் போந்து விளையாடித்திரியும் புள்ளிகளையுடைய அலவன் மனவேட்கை கெடுத்தலில்லாத தண்ணிதென்று நீக்கின சூது பொருகின்ற இடத்தே வடுவுற்ற கவற்றினை வேட்கை தவிராதே உருட்ட அக்கவற்றை ஒக்கும் விருப்பம் மருவின பொலிவினையுடைய கடற்சேர்ப்பனே; எ - று.

அலை முழை; வரி புள்ளி. "புள்ளிக்கள்வன்" என்ருர் பிறரும்.

தண்கழகம் ஈண்டுக் குளிர்ச்சியை உணர்த்தாது தண்பொன் என்ருற்போல இழிவை உணர்த்திநின்றது.

அத்துறைக்கு உரியவாய் இயல்பாகச் சிறப்பு நிகழும்படி ஆடித் திரியும் புள்ளியையுடைய அலவன் கண்களையுடைய உருண்ட கவற்றை உருட்ட அக்கவற்றை ஒக்கும் என்றதனுல் உலகியல்வழக்காகிப் பின்பு இல்லறம் நிகழுங் களவொழுக்கம் இவ்வூரினுள்ளார்க்கு இழிந்த தொழிலுமாய்த் தோன்ருநின்றதென உள்ளுறையுவமங்கொள்க. "பலகை செம்பொன் ஞகப் பளிங்கு நாயாப் பரப்பி-யலவ னுடும் வகைபோ லரும்பொற் கவறங் குருளக்-குலவும் பவழ வுழக்கிற் கோதை புரளப் பாடி-யிலவம் போதோ செவ்வா யினையோர் பொருவார்க் காண்மின்" என்னுஞ் சிந்தாமணியாலும் இது வே பொருளாதல் உணர்க.

முத்துறழ் * * * ருழப்பவோ—எ-து, முத்தையொக்கும் எக்கராகிய மணலிலே நீகூட முற்பட இடுகின்ற தாயம் முன்னே மனைகட்டலாம்படி கவற்ருலே ஈரைந்தைப் பெற்றவனுடைய மனம் போலே ஆக்கம் பெருகினவள், அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்குகையினுலே அப்பெருந் தாயமின்றி ஈரிரண்டு இருமூன்று என்னுஞ் சிறுதாயம் இடுதலாற் தோற்றவனைப் போலே அழகுகெட்டு வெய்தாகிய வருத்தத்திலே அழுந்தவோ? எ-று.

உருவம் என்றது கவற்றை.

முடத்தாழை * * * ருழப்பவோ—எ-து, முடத்தையுடைய தாழைமுடிக்குக்குள்ளே நீ கூடப் போரிடையிலே சிறுதாயம் இட வேண்டின அளவிலே சிறுதாயந் தங்கக்கண்டவனுடைய மனம்போலே ஆக்கம்பெருகினவள், சுற்றத்தார்க்குப் பொருளைக் கொடுத்து வரைந்துகோடற்குத் தக்கவனே! நீ முன்பே பொருளைத் தேடாதே இப்பொழுது பொருள்வயிற் பிரிவை ஆராய்ந்து பார்ப்பாயாயிற் சிறுதாயஞ் சிறுக இடவேண்டுமளவில் இடாமற் பெருக இட்டு வெல்லும் நெறியல்லாத நெறியிலே சூதுபொருகையினாலே அதற்சென்று கட்டிவைத்த தன்னுடைய பொருளை இழந்தவனைப் போலே மிக்க துயரிலே அழுந்தவோ? எ-று.

நறுவீதாழ் * * * ருழப்பவோ—எ-து, நறியதாகிய பூத்தங்கின புன்னைச்கீழே நீவிரும்பிக் கூட இருகாற் சிறுதாயம் இடவேண்டின அளவிலே ஒருகாலன்றியே இருகாலாவதுஞ் சிறுதாயம் இட்டவன் மனம்போலே ஆக்கம்பெருகினவள், நீ பிரிந்து வந்து வரைவேனென்றே மிக்கறிவித்துப் பிரியக் கருதின நின்பொருட்டு அக்கவறு இருகாற் சிறுதாயம் இட வேண்டின அளவிலே ஒருகாற் சிறுதாயம் இடப்பட்டவனைப்போலே செறிந்த துயரிலே அழுந்தவோ? எ-று.

இது தகவாகாது காணெனக் கூறிப் பின்னும்

ஆங்கு அசை.

கொண்மெலர் * * * தேரோ—எ-து, நீ பலரும் மேற்கொண்டு தூற்றும் அலருக்கு அஞ்சாய், இதனைக் கைவிட்டு இவளை வரைந்துகொண்டு கூடுதற்கு அருள்பண்ணி, அதற்சாந் திறத்தை அறிந்து எழுந்திருந்து தேரை ஏறுவாயாக; அங்ஙனம் வரைந்தால் இவள் நலமும் வாடிலளாகியிருப்பாள்; இருவரிடத்தும் பெறும் பொருள் இன்னும் ஈண்டுவதாக என வரைவுகடாயினாள்; எ-று.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (கக)

கஙஎ. அரிதே தோழிநா ணிறுப்பா மென்றுணர்தல்
பெரிதே காமமென் னுயிர்தவச் சிறிதே
பலவே யாமம் பையுளு முடைய

சிலவே நம்மோ டொசாவு மன்றி
லழலவிர் வயங்கிழை யொலிப்ப வுலமந்
தெழிலெஞ்சு மயிலி னடுங்கிச் சேக்கையி
னழலா கின்றவ னக்கதன் பயனே;

மெல்லிய நெஞ்சு பையுள் கூரத்தஞ்
சொல்லினு னெய்தமை யல்ல தவர்நம்மை
வல்லவன் றைஇய வாக்கமை கடுவிசை
வில்லினு னெய்தலோ விலர்ம ஞயிழை
வில்லினுங் கொடிதவர் சொல்லினுட் பிறந்தநோய்;

நகைமுத லாக நட்பினு ளெழுந்த
தகைமையி னலித லல்ல தவர்நம்மை
வகைமையு ளெழுந்த தொன்முரண் முதலாகப்
பகைமையி னலிதலோ விலர்ம ஞயிழை
பகைமையிற் கடிதவர் தகைமையி னலியுநோய்;

நீயலெ னென்றென்னை யன்பினுற் பிணித்துத்தஞ்
சாயலிற் சுடுதே லல்ல தவர்நம்மைப்
பாயிரு ளறநீக்கு நோய்தபு நெடுஞ்சுடர்த்
தீயினுற் சுடுதலோ விலர்ம ஞயிழை
தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்;

ஆங்கு,

அன்னர் காதல ராக வவர்நமக்
கின்னுயிர் போத்தரு மருத்துவ ராயின்
யாங்கா வதுகொ றோழி யெனையதூஉந்
தாங்குதல் வலித்தன் றுயி
னீங்கரி துற்றன் றவ ருறீஇய நோயே.

இது வரைவுநீட ஆற்றுளாயின இடத்துத் தலைவி ஆற்றாமையை அவட்கன்றே தலைவற்கு அறிவிக்கலுற்ற தோழி, தலைவன் சிறைப்புறத்தானாகத் தலைவியை வற்புறுக்க, அவள் வன்புறை எதிரழிந்து கூறியது.

(இ-ள்.) அரிதே * * * பயனே—எ-து, தோழீ! நம்முடைய நாணை நம்மிடத்தே நிறுத்துதலைச்செய்வாமென்று உணர்ந்திருத்தல் அரிது; அதற்குக் காரணமென்னெனில் வேட்கை பெரிதாயிராநின்றது, அதனாற் தேய்ந்த உயிர் மிகச் சிறிதாயிராநின்றது, நமக்கு வருத்தத்தைத் தருநிலையுடைய யாமங்களும் பலவாயிராநின்றன, அவ்வியாமங்களிற் துயிலாதபடி துணையைப் பிரிந்து வருந்தி நம்மோடு உசாவும் அன்றில்களுஞ் சில உளவாயிராநின்றன; ஆதலான் அவ்வுயிர் தாங்குதல் அரிது; முடிவில் அவர் நம்மோடு கூடியதனாற் பெற்றபயன் பீலி உதிர்ந்த மயில்போலே பொலிவழிந்த நாணத்தால் நாம் நடுங்கச் சேக்கையிலேகிடந்து உடம்பு நெருப்பிலே ஓடவைத்த பொன்னாற்செய்த சிலம்புமுதலியன ஒலிக்கும்படி உலமர நமக்குக் காமத்தீ உண்டாகாநின்றதொன்றுமே; எ-று.

உலமர நடுங்க எனத் திரிக்க.

மெல்லிய * * * பிறந்தநோய்—எ-து, அவர் நெஞ்சுபோல் வலியுடைத்தன்றி நம்முடைய வலியில்லாத நெஞ்சு வருத்தம் மிகும்படி தான் நின்னிற் பிரியேனென்று தெளிவித்த சொல்லால் வருத்தினமையல்லாது அவர் நம்மைப், பண்ணவல்லவனாலே பண்ணப்பட்ட வடிவமைந்த கடியவிசையையுடைய வில்லினால், எய்தற்றொழிலைச் செய்தலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் தெளிவித்தசொல்லாற் பிறந்தநோய் மிகவும் வில்லினுங் கடிதாயிராநின்றது; எ-று.

நகைமுத * * * னலியுநோய்—எ-து, நகுநயமறைத்தல் என்னும் மெய்ப்பாடு காரணமாக நாங்கொண்ட நட்பிலே தோன்றிய தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மைப் பொருள்களின் கூறுபாட்டாலே தோன்றிய பழைதாகிய மாறுபாடு காரணமாக வந்த பகையாலே வருத்துதலோ உடையரல்லர்; ஆயினும் ஆயிழாய்! அவர் தமது தகுதிப்பாடுகளாலே வருத்துதலொழிய அவர் நம்மை வருத்துநோய் பகைமையினுங் கடிதாயிராநின்றது; எ-று.

முதல் காரணம். பொருள்கள் ஈண்டு மனப்பொருள்முதலியன.

நீயலெ * * * கனலுநோய்—எ-து, நின்னிற் பிரியேனென்று சொல்லி, என்னைத் தனக்குண்டாகிய அன்பினாலே வயக்கப்படுத்தித் தமது மென்மையாலே சுடுதலொழிய அவர் நம்மைப் பரந்த இருளை அவ்விடத்தினின்றும் போம்படி நீக்கும் நெடியதாகிய கொ

மூக்தினையுடைய நெருப்பாற் சுடுதற் தொழிலோ உடையரல்லர்; ஆயி னும் ஆயிழாய்! அவர் ஆண்டுச் செய்த காமநோய் கெடுத்தற்குக் கார ணமான மென்மையால் நின்று எரியுங் காமநோய் தீயினுங் கடிதா யிராநின்றது; எ-று.

நோய்தபுசாயல் என்க.

ஆங்கு, அசை.

அன்னர் * * * நோயே—எ-து, தோழீ! நெஞ்சத்தண் மையவர் நம்மிடத்துக் காதலையுடையவராகக் கருதி முன்பு நம்மை நீங் குதலருமையுற்ற அவ்வியற்கைப் புணர்ச்சியின் அன்று அவர் நம்மையு றுத்தின நோயைத் தான் பொறுத்தலைத் துணிந்த துணிவை ஆராய்ந் துபார்க்கில் அத்துணிவு எப்படியும் நம் இனிய உயிரைப் போக்கும்; அவர் நமக்கு உயிரைப் போகாமல் மீட்கும் மருத்துவராய் இருப்பா ராயின் அந்நிலை எக்காலத்தே அவர்க்குண்டாவது கொல்லென வன் புறை எதிரழிந்து கூறினாள்; எ-று.

வலித்தன்று என்பது வலித்ததன்றென்னும் மறைப்பொருள் தாராமை உணர்க.

இதனாற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது "இடைநிலைப்பாட்டு" என்றதனாற் தாழம்பட்ட ஓசை யின்றி ஐந்தடியான் இடைநிலைப்பாட்டு வந்த ஒத்தாழிசைக்கலி.(உo)

கஙஅ. எழின்மருப் பெழில்வேழ மிகுதரு கடாத்தாற்
றொழின்மாறித் தலைவைத்த தோட்டிகை நிமிர்ந்தாங்
கறிவுநம் மறிவாய்ந்த வடக்கமு நாணொடு
வறிதாகப் பிறரென்னை நகுபவு நகுபுடன்
மின்னவிர் நுடக்கமுங் கனவும்போன் மெய்காட்டி
யென்னெஞ்ச மென்னொடு நில்லாமை நனிவெளவித்
தன்னலங் கரந்தாளைத் தலைப்படுமா றெவன்கொலோ
மணிப்பீலி சூட்டிய நூலொடு மற்றை
யணிப்பூளை யாவிரை யெருக்கொடு பிணித்தியாத்து
மல்லலூர் மறுகின்க ணிவட்பாடு மிஃதொத்த
னெல்லீருங் கேட்டீமி னென்று;

படரும் பணையீன்ற மாவுஞ் சுடரிழை
நல்கியா னல்கி யவை ;

பொறையென் வரைத்தன்றிப் பூநுத லீத்த
நிறையழி காமநோய் நீந்தி யறையுற்ற
வுப்பியல் பாவை யுறையுற் றதுபோல
வுக்கு விடுமென் னுயிர் ;

பூளை பொலமல ராவிரை வேய்வென்ற
தோளா ளெமக்கீத்த பூ ;

உரித்தென வரைத்தன்றி யொள்ளிழை தந்த
பரிசழி நைதனோய் மூழ்கி யெரிபரந்த
நெய்யுண் மெழுகி னிலையாது பைபயத்
தேயு மளித்தென் னுயிர் ;

இளையாரு மேதி லவரு முளையயா
னுற்ற துசாவுந் துணை ;

என்றியான் பாடக் கேட்டு
வன்புறு கிளவியா ளருளிவந் தளித்தலிற்
றுன்பத்திற் றுணையாய மடலினி யிவட்பெற
வின்பத்து ளிடம்படலென் றிரங்கின ளன்புற்
றடங்கருந் தோற்றத் தருந்தவ முயன்றோர்தம்
முடம்பொழித் துயருல கினிதுபெற் றாங்கே.

இது மடலூர்ந்து தலைவியை எய்திய தலைவன் தான் மடலூர்ந்த வாறும் அவளை எய்தியவாறுந் தனக்குப் பாங்காயினோர்க்குக் கூறியது.

(இ-ள்) எழின்மருப் * * * னென்று—எ-து, மின் விளங்குகின்ற நுடக்கமுங் கனவினது தோற்றமும்போலே தன்வடிவைக் காட்டி என்னுடனே முற்படக் கூடிப் பின்னர்ப் பிறர் என்னை இகழ்ந்து சிரிப்பனவற்றையும் எனக்குக் காட்டி எனக்குரிய நெஞ்சம் என்னோடு கூடி நில்லாமல் அழகினையுடைய மருப்பினையும் அழகினையுடைய வேழஞ் சொரிதலைச் செய்யும் மதத்தாலே பாகனுக்குச் செய்யுந் தொழில்களைத் தவிர்ந்து தான்வேண்டியவாறொழுகாத

படி தன்னை விலக்குந் தோட்டியையுங் கைகடந்தாற்போலத் தன் மேற் சென்ற வேட்கையினாலே என் ஏவலைச் செய்தலைத் தவிர்ந்து தான்வேண்டியவாறொழுகாதபடி தனக்குக் காவலாகிய அறிவும் நம்மறிவாலே ஆராய்ந்த அடக்கமும் இயல்பாகத் தோன்றிய நாணுடனே வறுவிதாக அவற்றைக் கைகடக்கும்படி மிகவும் என்னெஞ்சைக் கைக்கொண்டு தன் நலத்தை யான் காணாமல் மறைத்தவளைக் கூடும்வழி எவ்வழிதானென்று ஆராய்ந்து இனிமடலேறுதலே கூடும்வழியென்று கருதி மடன் மாவிலே சூட்டவேண்டினாலே நீலமணிபோலும் நிறத்தையுடைய பீலியையும் மற்றை அழகையுடைய பூளைப்பூவையும் ஆவிரம்பூவையும் எருக்கம்பூவோடே தொடுத்து அம்மடன்மாவிலே கட்டி வளப்பத்தையுடைய ஊரின் மறுகின்கண்ணே இவனொருத்தன் இவளைப்பாடும்பாட்டை எல்லீரும் கேட்பீராக என்று சொல்லிப் பாடத் தொடங்கி; எ-று.

நருவனவற்றையுங்காட்டி என்றான் மடலேறுதல் வரைபாய்தலாகிய இரண்டினையுந் தான் பின்புகருதுதலின். இவனொருத்தன் எனத் தன்னைப் பிறர்போற் கூறினான். அஃது உலகத்தார் பாடும் பாட்டன்மையுந் தோற்றுவித்துநின்றது.

இவளென்று சுட்டிற்று கையில் எழுதிப்பிடித்த கிழியிலவளை.

படரும் * * * யவை—எ-து, விளங்குகின்ற இறையினையுடைய, என்னாலே காமிக்கப்பட்டவள் எனக்குக் காதலித்துத் தந்தவை வருந்தமும் வருத்தத்தால் உண்டான பனையீன்ற மடலாற் செய்த குதிரையும்; எ-று.

பொறையென் * * * னுயிர்—எ-து, என்னுடைய உயிர் தான் பொறுத்தல் என் எல்லைத்தன்றாகப் பொலிவுபெற்ற நுதலினையுடையாள் தந்த, நிறை என்னுங் குணம் அழிதற்குக்காரணமான, காமநோயை நீந்தி உப்புப் பாத்தியிலே கிடந்த உப்பால் இயன்ற பாவை மழைத்துளியை உற்றதன்மைபோலக் கரைந்துவிடாநின்றது; எ-று.

பூளை * * * பூ—எ-து, வேயை வென்ற தோளையுடையாள் எனக்குத் தந்த பூக்கள் பூளைப்பூவும் பொன்போன்ற பூவையுடைய ஆவிரம்பூவும்; எ-று.

எனவே தான்தொடுத்தன நல்லபூ என்றான். பொலமலரொன்னும் முடிவு *"தொடரியலான" என்னும் இலேசான் முடித்தாம்.

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், புள்ளிமயங்கியல், கூக - ம் சூத்.

உரித்தென * * * னுயிர்—எ-து, ஒள்ளிய இழையினையுடையாள் என்றாற் பொறுக்குமெல்லைத்தன்றாக எனக்குரித்தாகத் தந்த, என்னியல்புகள் அழிதற்குக் காரணமான, வருத்தத்தையுடைய காமநோயிலே என்னுயிர் அழுந்தி, நெருப்புப் பரந்த நெய்யுள்ளே கிடந்த மெழுகு மெத்தென உருகித் தேயுமாறுபோல நிலையில்லாதே மெத்தென மெத்தெனத் தேயாநின்றது; இஃது எல்லாராலும் அளிக்குந்தன்மையையுடைத்து; எ - று.

இளையாரு * * * துணை—எ-து, யானுற்ற காமநோய்க்கு யான் உளையும்படி உசாவுந் துணை இளையபிள்ளைகளும் மிக்க காமநோய்க்கு அயலானருமே, பிறரில்லை; எ-று.

என்றியான் * * * ருங்கே—எ-து, இப்படி இப்படி யான் பாட வன்புறு கிளவியாள் அதனைக்கேட்டு அருள்பண்ணி அதன்மேலே அன்புற்று வந்து என்னை அளிக்கையினாலே, மனவேட்கை அடங்கின அரியவிளக்கத்தையுடைய செய்தற்கரிய தவத்தை முயன்றோர் தம்முடம்பை இவ்வுலகிலே போகட்டுச் சுவர்க்கத்தை இனிதாகப் பெற்றாற்போலத், துன்பத்திற்குத் துணையாய் நின்ற மடல் இனி இவளைப் பெறும்படியாக இன்பத்துக்கு இடம்படக்கடவானென்று இரங்கினாளென்றான்; எ-று.

இது பூளையாவிரை எனத் தளைவிரவின, பாட்டிடைமிடைந்த, ஐஞ்சீரடுக்கியும் ஆறுமெய்பெற்றும் வாராது தரவும்போக்கும் வந்த, கலிவெண்பாட்டு. (உச)

கஙங. சான்றவிர் வாழியோ சான்றவி ரென்றும்
பிறர்நோயுந் தந்நோய்போற் போற்றி யறனறிதல்
சான்றவர்க் கெல்லாங் கடனானா லிவ்விருந்த
சான்றீ ருமக்கொன் றறிவுறுப்பென் மான்ற
துளியிடை மின்னுப்போற் றோன்றி யொருத்தி
யொளியோ டுருவென்னைக் காட்டி யளியளென்
னெஞ்சாறு கொண்டா ளதற்கொண்டுந் துஞ்சே
னணியலங் காவிரைப் பூவோ டெருக்கின்
பிணையலங் கண்ணி மிலைந்து மணியார்ப்ப
வோங்கிரும் பெண்ணை மடலூர்ந்தெ னெவ்வநோய்
தாங்குத றேற்றா விடும்பைக் குயிர்ப்பாக

வீங்கிழை மாதர் திறத்தொன்று நீங்காது
பாடுவென் பாய்மா நிறுத்து;

யாமத்து மெல்லையு மெவ்வத் திரையலைப்ப
மாமேலே னென்று மடல்புணையா நீந்துவேன்
றேமொழி மாத ருறாஅ துறீஇய
காமக் கடலகப் பட்டு;

உய்யா வருநோய்க் குயவாகு மைய
லுறீஇயா ளீத்தவிம் மா;

காணுந ரெள்ளக் கலங்கித் தலைவந்தே
ஞணெழின் முற்றி யுடைத்துள் ளழித்தரு
மாணிழை மாதரா ளேஎரெனக் காமன
தாணையால் வந்த படை;

காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேம
மெழினுத லீத்தவிம் மா;

அகையெரி யானுதென் னுருயி ரெஞ்சும்
வகையினு னுள்ளஞ் சுடுதரு மன்னோ
முகையே ரிலங்கெயிற் றின்னகை மாதர்
தகையாற் றலைக்கொண்ட நெஞ்சு;

அழன்மன்ற காம வருநோய் நிழன்மன்ற
நேரிழை யீத்தவிம் மா;

ஆங்கதை,

அறிந்தனி ராயிற் சான்றவிர் தான்றவ
மொரீஇத் துறக்கத்தின் வழீஇ யான்றோ
ருள்ளிடப் பட்ட வரசனைப் பெயர்த்தவ
ருயர்நிலை யுலக முறீஇயாங்கென்
றுயர்நிலை தீர்த்த னுந்தலைக் கடனே.

இது மடலேறுகின்ற தலைவன் சான்றோர்க்குக் கூறியது.

(இ-ள்.) சான்றவிர் * * * நிறுத்து—எ-து, நற்குணங்கள் எல்லாம் அமைந்தீர்! நற்குணங்களெல்லாம் அமைந்தீர்! நீர் வாழ்வீ

ராக! பிறருடைய நோயுந் தம்முடைய நோய்போலே எந்நாளும் பேணி அதனாற் பெறும் அறனை அறிந்து போதுதல் உலகத்துள்ள சான்றவர்க் கெல்லாம் முறைமையானால், நமக்கும் அது முறைமையென்று கருதி நமக்கொரு காரியத்தினைக் கூறுவேன்; அஃதியாதெனின், ஒருத்தி மயங்கினமழைக்கு நடுவில் மின்போலேவந்து தோன்றித் தன்னொளியோடே தன்னுருவையும் என்னைக் காணப்பண்ணி என்னை அளிக்குந்தன்மையளாய் அளித்துப் பின்னர் என் நெஞ்சைத் தான்வரும் வழியாகக்கொண்டுவிட்டாள்; அதனை முதலாகக்கொண்டு துயில் கொள்ளேனாய் அசைகின்ற அழகினையுடைய ஆவிரையினது பூவோடே எருக்கினது கட்டுதலையுடைய அழகினையுடைய கண்ணியையுஞ் சூடி வளருங் கரிய பனைமடலாற் செய்த குதிரையை மணிகள் ஆரவாரிப்ப ஏறி அப்பாய்மாவை மனத்தே நிறுத்தி யான் நீங்காமனின்று வருத்தத்தைத் தருகின்ற என் காமநோயைத் தாங்கமாட்டாமையால் உண்டான மனவருத்தத்திற்கு இளைப்பாறுதலாக இறுகின பூணினையுடைய மாதர் என்னை வருத்தின கூற்றிலே ஒருகூற்றினைப் பாடுவேன்; அதனை இவ்விடத்திருந்த சான்றீர்! கேளுமென்றான்; எ-று.

பலராதலிற் சான்றீர் சான்றீரென்றான். இர் என்று விளியேலாது குறுகிநின்றது. ஓ அசை. பின்பு சான்றீர் என்றது தான் பின்பு கூறுகின்றதற்கு எதிர்முகமாக. கொண்டும் என்னும் உம்மை இசைநிறை. 'ஒருத்தியொளியோடுரு * * * துஞ்சேன்' என்றது தன்கட் தோன்றிய அசைவுபற்றி அவலம் பிறந்தது.

யாமத்து * * * பட்டு—எ-து, தேன்போலும் மொழியினையுடைய மாதர் தாங் காமுறாதே என்னைக் காமுறுத்தின காமமாகிய கடலிலே அகப்பட்டு உசாத்துணை இல்லாத நடுயாமத்தும் உசாத்துணையுள்ள பகலிடத்தும் மனவருத்தமாகிய திரைகள் வந்து அலைக்கையினாலே மாவின்மேல் இருக்கின்றேன் இருக்கின்றேன் என்று மனத்தாற் கருதி இருந்து அம்மடன்மா ஒருதெப்பமாக அக்கடலை நீந்துவேன்; அஃது என் நிலையென்றான்; எ-று.

உய்யா * * * மா—எ-து, என்னை மயக்கமுறுத்தினவள் அதற்கு மருந்தாகத் தந்த இம்மடன்மா யான் பிழையாமைக்குக் காரணமான அரிய காமநோய்க்குப் பிழைக்கும்படிக்குச் செய்வதொன்றாய் இராநின்றதென்றான்; எ-று.

காணுந * * * படை—எ-து, மாட்சிமைப்பட்ட இழையினையுடைய மாதராள் ஏரால் வந்த வருத்தமென்று யான் கூறும்படி

யாகக் காமனுடைய ஏவலாலே வந்த காமநோயாகிய படை என்னைக் கண்டார் இகழும்படி யான்கலங்க என்னிடத்தேவந்து என்னுடைய ஆண்டன்மையின் அழகாகிய மதிலைச் சூழ்விட்டிருந்து புறத்தை எல்லாமுடைத்துப் பின்னர் உள்வாயை அழியாநிற்குமென்றான்; எ-று.

கலங்கி, கலங்க என்க.

காமக் * * * மா—எ-து, காமமாகிய கடியபகை ஆண்மையை உள்ளும்புறம்பும் அழித்தலாலே இங்ஙனம் வடிவுகொண்டு தோன்றின எனக்கு அழகையுடைத்தாகிய நுதலினையுடையாள் தந்த இம்மடன்மாப் பரிகாரமாயிற்றென்றான்; எ-று.

அசையெரி * * * நெஞ்சு—எ-து, முல்லைமுகையை ஒக்கும் இலங்குகின்ற எயிற்றையும் இனியதாகிய மகிழ்ச்சியையுமுடைய மாதருடைய அழகாலே அவளிடத்தைப் பற்றிக்கொண்ட என்னுடைய நெஞ்சிடத்து உள்ளத்தைச் சுடப்பட்டு எரிகின்ற காமத்தீ என் அரிய உயிர்போங் கூற்றாலே அமையாதே நின்று சுடுதலைச் செய்யும்; ஐயோ! யான் எங்ஙனம் ஆற்றுவேனென்றான்; எ-று.

உறுப்புடையதுபோலே நெஞ்சுக்கு உள்ளமுண்டென்றான்.

அழன்மன்ற * * * மா—எ-து, காமமாகிய பொறுத்தற்கரிய நோய் அறுதியாக நெருப்பொத்த இழையினையுடையாள் அதற்குப் பரிகாரமாகத்தந்த இம்மடன்மா அறுதியாக அதற்கோர் நிழலாய் இருந்ததென்றான்; எ-று.

ஆங்கதை * * * கடனே—எ-து, என்று கூறி என்னிடத்துச் செல்கின்ற வருத்தத்தை நீர் அறிந்திராயிற் சான்றீராயுள்ளீர்! அமைந்த சான்றோர் இவன் தவஞ்செய்தற்கு உரியனென்று தவத்துள்ளே கூட்டிக்கொள்ளப்பட்ட அரசனை, அவன்றான் தவஞ்செய்தலினீங்கித் துறக்கத்திற் சேறலை வழுவுகையினாலே, அவ்வழுவுதலை அவர் மீட்டுத், தவஞ் செய்வித்து, உயர்ந்த நிலைமையையுடைய சுவர்க்கத்தே போகவிட்டுத் துயர்தீர்த்தாற்போல, என் துயரினது தன்மையைப் போக்குதலும் நும்மிடத்து முறைமை எனச் சான்றோரை நோக்கிக் கூறினான்; எ-று.

இது தன்கட் தோன்றிய அசைவுபற்றி அவலம்பிறந்தது.

இது தரவும் போக்கும் பாட்டிடைமிடைந்த கலிவெண்பாட்டு. (உஉ)

கசO. கண்டவி ரெல்லாங் கதுமென வந்தாங்கே
பண்டறியா தீர்போல நோக்குவீர் கொண்டது
மாவென் றுணர்மின் மடலன்று மற்றிவை
பூவல்ல பூளை யுழிஞையொ டியாத்த
புனவரை யிட்ட மயங்குதார்ப் பீலி
பிடியமை நூலொடு பெய்ம்மணி கட்டி
யடர்பொன் னவிரேய்க்கு மாவிரங் கண்ணி
நெடியோன் மகனயந்து தந்தாங் கனைய
வடிய வடிந்த வனப்பினென் னெஞ்ச
மிடிய விடைக்கொள்ளுஞ் சாய லொருத்திக்
கடியுறை காட்டிய செல்வேன் மடியன்மி
னன்னே னொருவனேன் யான் ;

என்னும், பாடெனிற் பாடவும் வல்லேன் சிறிதாங்கே
யாடெனி லாடலு மாற்றுகேன் பாடுகோ
வென்னு ளிடும்பை தணிக்கு மருந்தாக
நன்னுத லீத்தவிம் மா ;

திங்க ளரவுறிற் றீர்க்கல்ல ராயினுந்
தங்காதல் காட்டுவர் சான்றவ ரின்சாய [நோய்
லொண்டொடி நோய்நோக்கிற் பட்டவென் னெஞ்ச
கண்டுங்கண் ணோடாதிவ் வூர் ;

தாங்காச் சினத்தொடு காட்டி யுயிர்செகுக்கும்
பாம்பு மவைப்படி னுய்யுமாம் பூங்கண்
வணர்ந்தொலி யைம்பாலாள் செய்தவிக் காம
முணர்ந்து முணராதிவ் வூர் ;

வெஞ்சுழிப் பட்ட மகற்குக் கரைநின்
றஞ்சலென் றாலு முயிர்ப்புண்டா மென்சீர்
செறிந்தேர் முறுவலாள் செய்தவிக் காம
மறிந்து மறியாதிவ் வூர் ;

ஆங்க,

என்க ணிடும்பை யுணாஇயினெ னுங்கட்
டெருளுற நோக்கித் தெரியுங்கா லின்ன
மருளுறு நோயொடு மம்ம ரகல
விருளுறழ் கூந்தலா ளென்னை
யருளுறச் செயினுமக் கறனுமா ரதுவே.

இது மடலேறுவேனென்ற தலைவன் கண்டார்க்குக் கூறியது.

(இ-ள்.) கண்டவி * * * யான்—எ-து, என்னைக் கண்ட நீங்களெல்லாங் கடுகவந்து அவ்வூரிடத்து என்னைப் பண்டு அறியாதீர் போலப் பாராநின்றீர்; நாப்பெய்த மணியைக் கழுத்திலே கட்டிக் கையாற் பிடித்தலமைந்த வாய்க்கயிற்றோடே யான் கையிற்கொண்டது மடலன்று, மாவென்று ஏறுவார் ஏறப்படுங் குதிரையென்றும், பின்னைத் தலையினும் மார்பினுங் கிடக்கின்ற இவை தகடாகிய பொன்னினது விளக்கத்தை ஒக்கும் ஆவிரம் பூவாற் செய்த கண்ணியும் உளிஞைப் பூவோடே பூளைப்பூவும் புனத்தையுடைய மலையிலே மயிலுதிர்த்த பீலியும் விளங்குகின்ற தனமல்ல, என் மனத்தாலே நன்றென்று கருதி யான் கட்டின பூந்தாரென்றும் உணர்வீராக; திருமால் மகனாகிய காமன் என் தலைமையை அழித்தலை விரும்பிக் கொடுக்கப்பட்டுத் தன் மெய்யிடத்தே அத்தன்மையவாகிய நன்மைகளெல்லாந் தோன்றிய வனப்பாலுஞ் சாயலாலும் வடுவகிரின் தன்மையையுடைய கண்களாலும் என் நெஞ்சாகிய அரண் இடிந்துபோம்படி நடுவே வந்து என்னைக் கைக்கொள்ளும் ஒப்பிலாதவளுக்கு யான் வழிபட்டு உறைதலை உலகத்தார்க்குக் காட்டவேண்டிச் செல்லாநின்றேன்; இதனைக்கண்டு நீர் மனத்தே வெறுத்துக் குவிந்திராதேகொள்ளும்; யான் அத்தன்மையையுடையேன் ஒருவனென்றான்; எ-று.

அன்னேனென்றது தான் இவ்வாறுதற்கு முன்செய்த தீவினையை. நூல் ஆகுபெயர். தந்தென்பது *"செலவினும்வரவினும்" என்னுஞ் சூத்திரப்பொதுவிதியான் ஈண்டுக் கொடுத்தலை உணர்த்திற்று. அனைய என்றது நெஞ்சறி சுட்டாய் நின்றது. வடிய என்றது வடுவகிரின் தன்மையையுடைய கண்களை உணர்த்திற்று. அடியிலே யுறைதல் வழிபாடென்னும் பொருடந்து நிற்றலின் அதனோடே ஒருத்திக்கு என்னும் நான்கனுருபு முடிந்தது.

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், கிளவியாக்கம், உஅ-ம் சூத்.

என்னும் * * * மா—எ-து, நீ ஒன்றுபாடென்று கூறுவிராயில் எப்படியால் எப்படியாயினுஞ் சிறிது பாட்டும் வல்லேன்; அம்மடன்மா மேலே இருந்து அஃது இடவாய் வலவாய் பெயரும்படி நின் மெய்யை அசைப்பாயென்பீராயின் அத்தொழிலை யான் ஆளுதலையும் வல்லேன்; இப்பொழுது என் நெஞ்சிடத்துக் காமநோயை யான் ஆற்றும் மருந்தாக நன்னுதல் தந்த இக்குதிரையினைப் பாடிவேனே என்றான்; எ-று.

அவர் பாடென்னுமையின் மேற் றன்னை வருத்தினமையைக் கூறுகின்றான்.

திங்க * * * வூர்—எ-து, சான்றோர் திங்களைப் பாம்பு சென்று மறைக்குங்கால் அதனை வருத்தத்தைத் தீர்க்கமாட்டாராயினும் அதன்மேற் றமக்குள்ள காதலைக் காட்டித் துன்புறுவர்; அதுபோல இனிய மென்மையினையுடைய ஒண்டொடியது நோய்செய்யும் நோக்கிலே அகப்பட்ட என்னுடைய நெஞ்சிடத்துக் காமநோயைக் கண்ணுற் கண்டுவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்க்கமாட்டாராயினுங் கண்ணோட்டமாயினுஞ் செய்தலிலர்: எ-று.

தாங்காச் * * * வூர்—எ-து, பிறராற் றாங்கவொண்ணாத சினத்தோடே தன்வடிவைக் காட்டி அவருயிரைப் போக்கும் பாம்பும் பலரிடைப் பட்டாற் சாவாதென்னும் உலகவழக்கிற்கேற்பச் சான்றோர் அவைப்படிற் பிழைக்கவுங்கூடும்; அத்தன்மையேயல்லாத எனக்குப் பூப்போலுங் கண்ணையுங் கடைகுழன்று தழைக்கின்ற ஐம்பாலினையுமுடையாள் செய்த இக்காமநோயின் வருத்தத்தை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் தீர்ப்பதோர் உபாயம் அறிகின்றிலர்; எ-று.

வெஞ்சுழிப் * * * வூர்—எ-து, கடிய நீர்ச்சுழியிலே அகப்பட்டான் ஒருமகனுக்குக் கரையில் நின்றோர் சென்றெடாமல் அஞ்சாதேகொள்ளென்று கரையிலே நின்று கூறினாலும் அவனுக்கு வருத்தந் தீருதலுளதாம், அதுபோல அழகிய சீரையுடைய செறிந்த அழகினையுடைத்தாகிய முறுவலையுடையாள் செய்த இக்காமநோயை அறிந்துவைத்தும் இவ்வூரிலுள்ளார் அதனைத் தீர்த்தலாற்றாராயினும் ஒரு தண்ணளி செய்தலையும் அறிகின்றிலர்; எ-று.

ஆங்க, அசை.

என்க * * * ரதுவே—எ-து, என்னிடத்து நிகழ்கின்ற வருத்தத்தை யான் அறிவித்தேன்; இனி இதனை நும்மிடத்தே தெளிதலுறப் பார்த்து ஆராயுங்காலத்து இத்தன்மைத்தாகிய மயக்க முறுங் காமநோயாலுண்டாகிய என் மயக்கம் நீங்கும்படி இருட்சியுறுகின்ற கூந்தலையுடையாள் என்னை அருளுதலுறும்படி பண்ணுவீராயின் அது நமக்கு அறனும் புகழுமாமென்றான்; எ-று.

இது தன்கட் டோன்றிய அசைவுபற்றிய அவலம் பிறந்தது.

இது பாடெனில் ஆடெனில் என எதுகையியைந்த அடி என்னுனும் என வேறுநின்ற சீரோடுங் கூடி ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உஙு)

கசக. அரிதினிற் றோன்றிய யாக்கை புரிபுதாம்
வேட்டவை செய்தாங்கே காட்டிமற் றாங்க
வறம்பொரு ளின்பமென் றம்மூன்றி னொன்றின்
றிறஞ்சேரார் செய்யுந் தொழில்க ளறைந்தன்
றணிநிலைப் பெண்ணை மடலூர்ந் தொருத்தி
யணிநலம் பாடி வரற்கு;

ஓரொருகா லுள்வழிய ளாகி நிறைமதி
நீரு ணிழற்போற் கொளற்கரியள் போரு
ளடன்மாமே லாற்றுவே னென்னை மடன்மாமேன்
மன்றம் படர்வித் தவள்; வாழி சான்றீர்;

பொய்தீ ருலக மெடுத்த கொடிமிசை
மையறு மண்டிலம் வேட்டனள் வையம்
புரவூக்கு முள்ளத்தே னென்னை யிரவூக்கு
மின்னு விடும்பைசெய் தாள்; அம்ம சான்றீர்;

கரந்தாங்கே யின்னுநோய் செய்யுமற் றிஃதோ
பரந்த சுணங்கிற் பணைத்தோளாள் பண்பு;

இடியுமிழ் வானத் திரவிருள் போழுங்
கொடிமின்னுக் கொள்வேனென் றன்னள் வடிநாவின்
வல்லார்முற் சொல்வல்லே னென்னைப் பிறர்முன்னர்க்
கல்லாமை காட்டி யவள்; வாழி சான்றீர்;

என்றாங்கே,

வருந்தமா வூர்ந்து மறுகின்கட் பாடத்
திருந்திழைக் கொத்த கிளவிகேட் டாங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக் கருந்திறை
போலக் கொடுத்தார் தமர்.

இஃது இரந்துபின்னின்ற தலைவன் மடலேறியவழி அவள் தமர் அஞ்சித் தலைவியைக் கொண்டுவந்து கொடுத்தலைக் கண்டோர் கூறியது.

(இ-ள்.) அரிதினிற் * * * வரற்கு—எ-து, பெறுதற்கரிதாகத் தோன்றிய மக்கள் யாக்கைகள் முற்பிறப்பில்லாத மனம் வேறுபட்டு விரும்பின தீவினைகளைச் செய்து அறம் பொருள் இன்பம் என்றுசொல்லப்பட்ட அம்மூன்றில் அறமாகிய ஒன்றன் கூற்றைச் சாராதவர்கள் இப்பிறப்பிற் செய்து திரியுந் தொழில்களில் ஒன்றாகிய அழகினையுடைத்தாகிய நிலைமையினையுடைய பனைமடலை ஏறி அவ்வூரிடத்தே எல்லார்க்குங் காட்டி ஒருத்தியுடைய அழகினை யுடைய நலத்தைப் பாடி வருதற்கு நூல்கள் சாற்றிற்றுதலால் யானும் அதுவே துணிந்து மடலேறிப் பாடுவேனென்றான்; எ-று.

யாக்கை மடலூர்ந்து காட்டிப் பாடி வருதற்குச் சாற்றிற் றென்க. மற்று அசை. ஆங்கு என்றது முற்பிறப்பை.

ஓரொருகா * * * சான்றீர்—எ-து, சான்றீர் வாழ்வீராக! போரிடத்து வெற்றியினையுடைய குதிரையின்மேலே இருந்து போர்த் தொழிலை நடத்துவேனாகிய என்னை அம்மாவல்லாத மடன்மாவிலே ஏறி அக்களத்தே தோன்றி மன்றின்கண்ணே தன்னை உள்ளுறவித்தவள் ஒருகால் என் மனத்துள்ளே உள்ளாயிருந்து பின்னை நீருட் டோன்றிய நிறைமதியினுடையநிழல் வாங்கிக்கோடற்கு அரியவாறு போல வாங்கிக்கோடற்கு அரியளாய் இராநின்றாளென்றான்; எ-று.

ஆற்றுவேனென்னைப்படர்வித்தவளென்றது தறுகண்மையென்னும் மெய்ப்பாடு. வாழிசான்றீரென்றது ஒருமைப்பன்மைமயக்கம்.

பொய்தீர் * * * சான்றீர்—எ-து, கேளீர் சான்றீர்! உலகத்தை எல்லாம் பாதுகாத்தலை முயலும் உள்ளத்தையுடையேனாகிய என்னை ஒருவர்பால் ஒன்றை இரத்தலை முயலும் இன்னாதாகிய

வருத்தத்தைச் செய்தவள் கீழைத் திசையிடத்துத் தோன்றின, பொய்யற்ற நன்மக்கள் உயர்த்துப் புகழ்ந்த, மாசற்ற ஞாயிற்றின் மண்டிலத்தை யான் வாங்கிக் கோடற்கு விரும்பின அத்தன்மையளாய் இராநின்றாளென்றான்; எ-று.

என்றது கொடை என்னும் மெய்ப்பாடு.

கரந்தாங்கே * * * பண்பு—எ-து, பரந்த சுணங்கினையுடைய பணைபோலுந் தோளினையுடையாள் தான்மறைந்த பொழுதே பொறுத்தற்கரிய நோயைச் செய்யாநிற்கும்; அவள்குணம் எக்காலமும் இத்தன்மைத்தோ கூறின் என்றான்; எ-று.

இடியுமிழ் * * * சான்றீர்—எ-து, பின்னும் வாழ்வீராக! சான்றீர்! வழுவின சொற்கள் சொல்லாதபடி தெள்ளிய நாவினாலே வார்த்தைசொல்ல வல்லார்முன்னே சொல்லுதல் வல்லேனாகிய என்னைப் பிறர்முன்னே ஒன்றையுங் கல்லாத தன்மையனாகக் காட்டியவள் இராக்காலத்து இடியை உமிழ்கின்ற மேகத்திலிருளைப் போழும் ஒழுங்கினையுடைய மின்னை வாங்கிக்கொள்வேனென்று ஒருவன் கருதிய தன்மையளாய் இராநின்றாளென்றான்; எ-று.

வல்லார்முற் சொல் * * * காட்டியவளென்றது கல்வி பற்றிய பெருமிதம், என்னையுங் கல்லாமை காட்டினாள் என்றலின். வாழி சான்றீர் என்று அதனை முடிப்பாராகக் கருதி வாழ்த்தினான்.

என்றாங்கே * * * தமர்—எ-து, என்றுசொல்லி அவ்வூரிடத்து மறுகின்கண்ணே கண்டார் வருந்த மடன்மாவை ஏறிப் பாடத் திருந்தின இழையினையுடையாளைத் தான் பெறுதற்குப் பொருந்தின வார்த்தைகளைத்தான் கூறக்கேட்டுப், பகைவர் போர்த்தொழிலை வல்ல பாண்டியனுக்கு அஞ்சி அரிய திறைகொடுக்குமாறு போலத், தமர் குடிப்பழுதாமென்று அஞ்சி அவளை அவ்விடத்தே கொடுத்தார்; ஈதோர் மகட்கொடை இருந்தவாறென்னெனக் கண்டார் வியந்துகூறினார்; எ-று.

இது கண்டார்க்குக் கொடைபற்றிய பெருமிதம் பிறந்தது.

இது தரவும் போக்குமென்பதனுட் பாட்டினைப் போக்கின் பின் வைத்ததனாற் போக்குப்பெற்ற, பண்பு என நாற்சீரான் இயன்ற, பாட்டு வந்தது.

வாழிசான்றீர் அம்ம சான்றீர் என ஈற்றுக்கண் வந்த சீர்களை முதல் அடிக்கு ஆண்டபொருண்முடிவுள் மாறுகூட்டி அடுக்க அறுசீராய் ஆறுமெய்பெற்றமையிற் கலிவெண்பா. (உ௪)

கசஉ. புரிவுண்ட புணர்ச்சியுட் புல்லாரா மாத்திரை
யருகுவித் தொருவரை யகற்றலிற் றெரிவார்கட்
செயனின்ற பண்ணினுட் செவிசுவை கொள்ளாது
நயனின்ற பொருள்கெடப் புரியறு நரம்பினும்
பயனின்று மன்றம்ம காம மிவண்மன்னு
மொண்ணுத லாயத்தா ரோராங்குத் திளைப்பினு
முண்ணுனைதோன்றாமை முறுவல்கொண்டடக்கித்தன்
கண்ணினு முகத்தினு நகுபவள் பெண்ணின்றி
யாவருந் தண்குரல் கேட்ப நிரைவெண்பன்
மீயுயர் தோன்ற நகாஅ நக்கா்ங்கே
பூவுயிர்த் தன்ன புகழ்சா லெழிலுண்க
ணாயிதழ் மலக வழும்;

ஓஒ! அழிதகப் பாராதே யல்லல் குறுகினங்
காண்பாங் கனங்குழை பண்பு;

என்று, எல்லீரு மென்செய்தீ ரென்னை நகுதிரோ
நல்ல நகாஅலிர் மற்கொலோ யானுற்ற
வல்ல லுறீஇயான் மாய மலர்மார்பு
புல்லிப் புணரப் பெறின்;

எல்லாநீ, உற்ற தெவனோமற் றென்றிரே லெற்சிதை
செய்தா னிவனென வுற்ற திதுவென
வெய்த வுரைக்கு முரனகத் துண்டாயிற்
பைதல வாகிப் பசக்குவ மன்னோவென்
னெய்தன் மலரன்ன கண்;

கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று
நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே
யாடையான் மூஉ யகப்படுப்பேன் சூடிய

காணுன் றிரிதருங் கொல்லோ மணிமிடற்று
மாண்மலர்க் கொன்றை யவன்;

தெள்ளியே மென்றுரைத்துத் தேரா தொருநிலையே
வள்ளியை யாகென நெஞ்சை வலியுறீஇ
யுள்ளி வருகுவர் கொல்லோ வுளைந்தியா
னெள்ளி யிருக்குவென் மற்கொலோ நல்கிருண்
மாந்தர் கடிகொண்ட கங்குற் கனவினுற்
றோன்றின னாகத் தொடுத்தேன்மன் யான்றனை இப்
பையெனக் காண்கு விழிப்பயான் பற்றிய
கையுளே மாய்ந்தான் கரந்து;

கதிர்பகா ஞாயிறே கல்சேர்தி யாயி
னவரை நினைத்து நிறுத்தென்கை நீட்டித்
தருகுவை யாயிற் றவிருமென் னெஞ்சத்
துயிர்திரியா மாட்டிய தீ;
மையில் சுடரே மலைசேர்தி யாயிற்
பௌவநீர்த் தோன்றிப் பகல்செய்யு மாத்திரை
கைவிளக் காகக் கதிர்சில தாராயென்
றெய்யில் சிதைத்தானைத் தேர்கு;
சிதைத்தானைச் செய்வ தெவன்கொலோ வெம்மை
நயந்து நலஞ்சிதைத் தான்;
மன்றப் பணைமேன் மலைமாந் தளிரேநீ
தொன்றிவ் வுலகத்துக் கேட்டு மறிதியோ
மென்றோண் ஞெகிழ்த்தான் றகையல்லால்யான்காணே
னன்றுதீ தென்று பிற;

நோயெரி யாகச் சுடினுஞ் சுழற்றியென்
னுயிர முள்ளே கரப்பன் கரந்தாங்கே
நோயுறு வெந்நீர் தெளிப்பிற் றலைக்கொண்டு
வேவ தளித்திவ் வுலகு;
மெலியப் பொறுத்தென் களைந்தீமின் சான்றீர்
நலிதருங் காமமுங் கௌவையு மென்றிவ்

வலிதி னுயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழும மிரண்டு;

ஏனப்பாடி,

இனைந்துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தன
ளெல்லையு மிரவுங் கழிந்தனவென் றெண்ணி யெல்லிரா
* நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல
மணியுட் பரந்த நீர்போலத் துணிபாங்
கலஞ்சிதை யில்லத்துக் காழ்கொண்டு தேற்றக்
கலங்கிய நீர்போற் றெளிந்து நலம்பெற்றா
ணல்லெழின் மார்பனைச் சார்ந்து.

இது †"பொழுது தலைவைத்த கையறு காலை - யிறந்த போலக் கிளக்குங் கிளவி - மடனே வருத்த மருட்கை மிகுதியோ - டவை நாற் பொருட்க ணிகழு மென்ப. இச்சூத்திரம் பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே என்ற சிறப்புடைப் பெருந்திணையன்றிப் பெருந்திணைக்குறிப்பாகக் கந்தருவத்துட்பட்டு வழுவிவரும் 'ஏறிய மடற்றிறம்' முதலிய நான்கனுள் ஒன்றாய் முன்னர் நிகழ்ந்த கந்தருவம் பின்னர் வழுவிவந்த 'தேறுத லொழிந்த காமத்து மிகுதிறம்' ஆகிய பெருந்திணை வழுவமைக்கின்றது. ஓதலுந் தூதும் ஒழிந்த பகைவயிற்பிரிவாகிய வாளாணெதிரும் பிரிவும் முடியுடைவேந்தர்க்கும் அவர் ஏவலிற் பிரியும் அரசர்க்கும் இன்றியமையாமையின் அப்பிரிவிற் பிரிகின்றான் 'வன்புறை குறித்த றவிர்ச்சி யாகும்' என்பதனாற் கற்புப்போல நீ இவ்வாறொழுகி யான் வருந்துணையும் ஆற்றியிருவென ஆற்றுவித்துப் பிரிதல் இலக்கணமன்மையின் வாளாபிரியுமன்றே? அங்ஙனம் பிரிந்துழி அவன் கூறிய கூற்றினையே கொண்டு ஆற்றுவிக்குந் தோழிக்கும் ஆற்றுவித்தலரிதாகலின் அவட்கு அன்பின்றி நீங்கினானென்று ஆற்றாமை மிக்கு ஆண்டுப் பெருந்திணைப்பகுதி நிகழுமென்று உணர்க. பொழுது = அந்திக்காலத்தே: கையறுகாலை = 'புறஞ்செயச்சிதைதல்' என்னுஞ் சூத்திரத்தில் 'அதனிானுங்கின்று' எனக் கூறிய கையறவுணாத்தலென்னும் மெய்ப்பாடு எய்திய காலத்தே: தலைவைத்த = அந்த ஆற்றாமையின் இகந்தனவாக முடிவிலே வைக்கப்பட்ட மெய்ப்பாடுகள்: மிகுதியோடு ம

* எல்லிரா நல்கிய கேள்வ னிவன்மன்ற மெல்ல என அடிவகுத்தலுமொன்று.
† தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், சஉ-ம் சூத்.

டனே வருத்தம் மருட்கை நாற்பொருட்கண் நிகழும் = தன் வனப்பு மிகுதியுடனே மடப்பமும் ஆற்றாமையும் வியப்புமாகிய நான்கு பொருட்கண்ணே நடக்கும்: அவை இறந்தபோலக்கிளக்குங்கிளவிஎன்ப = அங்ஙனம் அவை நடக்கின்ற நான்குபொருளுங்கூற்றுநிகழுங்காற் தன்னைக் கைகடந்தனபோலக் கூறுங் கூற்றாய் நிகழுமென்று கூறுவர் புலவர்; எ-று. தலைவைத்த மெய்ப்பாடாவன ஆறாம் அவதியினும் ஒப்பத்தோன்றுதற்குரிய மெய்ப்பாடுகளாய் மன்றத்திருந்த சான்றோரறியத் தம் துணைவன் பெயரும் பெற்றியும் அவனொடுபுணர்ந்தமையுந் தோன்றக்கூறியும் அழுதும் அரற்றியும் பொழுதொடு புலம்பியும் ஞாயிறுமுதலியவற்றோடு கூறத்தகாதன கூறுதலும் பிறவுமாம்'' என்னும் விதிபற்றி வரவிடைப்பிரிந்துநீட்டித்துழித் தலைவி பிரிவாற்றகில்லாது நாணுவரையிறந்து கலங்கி மொழிந்து அறிவழிந்துழி அவன் வந்து சாரத் தெளிந்தமை கண்டார்கூறிற்றென்று கூறியது.

(இ - ள்.) சேட்பீராக; இவள் தன்னுடனே பொருந்தி விளையாடும் ஒள்ளிய நுதலினையுடைய ஆயத்தார் எல்லாரும் ஒருங்கு கூடி விளையாடும் அளவிலும் முட்போலக் கூரிய தன் பல்லினுனி தோன்றாமல் முறுவலித்தலைக் கொண்டு, அதனை உள்ளடக்கி, அந்நகுதற்குறிப்புப் பிறரறியாமற் தன்கண்ணாலும் முகத்தாலும் நகுபவள், இப்பொழுது பெண்டன்மையின்றிப் பிறர் கேளாமல் மொழியும் மெல்லிய மொழியினை எல்லாருங் கேட்கும்படி கூறி, நிரைத்த வெள்ளிய பல்லின் மேலெயிறுதோன்றப் பெருகச் சிரித்துச், சிரித்த அப்பொழுதே பூவெடித்த தன்மையை ஒத்த புகழ்ச்சி அமைந்த அழகினையுடைய கண்கள் அழகினையுடைய இமை நீர்மல்கும்படி அழாநிற்கும்; இவள் இங்ஙனம் அழுமாறு காமவின்பத்தை ஊழானது ஒருவர் மனம் ஒருவரிடத்தே புரிதலுண்ட கூட்டத்திற் புல்லுதனிறையாத அளவிலே இருவரில் ஒருவனை அரியராம்படி பண்ணி நீக்குகையினாலே இந்நிலையாமையை ஆராய்ந்து பார்ப்பாரிடத்து அஃதறுதியாக நரம்பை வீக்குதலைச் செய்ய அதனிடத்தே நின்ற பண்ணினுட் தோன்றிய இனிமையைக் கேட்போர் செவிகொண்டு இன்புறுவதற்கு முன்னே விருப்பம் நின்ற இனிமையாகிய பொருள் கெட முறுக்கு அறும் நரம்பிலுங் காட்டிற் பயனின்றாயிருந்தது; ஓஒ! இக்கனங்குழைக்கு அல்லலையுடைய குணத்தை நம்மை வருத்தும் என்று பாராதே நம் நெஞ்சழியும்படியாக வந்து குறுகினேம்; குறுகிய யாம் இதனை முடிவுபோகக் காண்பேம் என்று கருதிவந்து எல்லீரும் என்ன காரியஞ் செய்தீர்? இங்

ஙனம் வந்த நீர் தாம் என்னை இகழ்கின்றீரோ ? இகழ்கின்றீராயின் யானுற்ற வருத்தத்தினை எனக்குறுத்தினவனுடைய மாயத்தைச் செய்த மலர்ந்த மார்பை யான்முயங்கி அவனைக் கூடப்பெறினும் அஃதிகழ்ச்சியன்றாம்; இங்ஙனம் என்னைச் சிதைத்தலைச் செய்தான் இவனென்று யான் முற்கூறியதனைக் கேட்ட நீர் பின்னை அவனாலுற்றதுதான் எத்தன்மைத்தோ என்று கேட்பீராயின், யானுற்றதிதுவென எழுவகையவாகிய அறத்தொடுநிலைகளின் ஒன்றை நும்மனத்திற்குப் பொருந்தக் கூறும் என் அறிவு என் உள்ளத்துண்டாயின் யான் இங்ஙனம் வருந்துவனோ ? வருந்தேன் ; அவ்வறிவு கெட்டமையால் யானுற்ற வருத்தம் இத்துணைய வருத்தமென யான் உமக்குக் கூறுவன், அதனைக் கூறக்கேண்மின் ; சான்றீர் ! என்று சான்றோரை நோக்கிக் கூறுகின்றாள் ; என்னுடைய சிற்றிலுள்ளே கூடலிழைத்தவனைக் கூடுவேனோ என்று ஆராய்கின்ற யான் அக்கூடலில் ஒரு பாகத்தை இழைத்த அளவிலே அவர் ஆராய்ச்சிக்குப் பிறிதொன்றாகிய வளைவு தன்னிடத்தின் முழுதுங் கூடாத இளம்பிறையைக் கண்டேன்; கண்டு அஃது அவ்விசும்பிடத்தே பின்பு நிறைமதியாய் வருத்துமெனக் கருதி யான் உடுத்த துகிற்றலையாலே மூடி அகப்படுத்திக் கொள்கின்ற யான் அதனை அகப்படுத்தினல் நீலமணிபோலுந் திருமிடற்றையுடைய மாட்சிமையுடைத்தாகிய மலரையுடைய கொன்றை மாலையையுடையவன் அதனோடு சூடுதற்குக் காணாய்த் தேடித் திரியுமோ என்று கொண்டு நெஞ்சே ! இது பின் வருத்துதலைத் தேராதே இதனை அவற்குக் கொடுத்து ஒருபடிப்பட உபகாரியாவாய்; யாந் தெள்ளியேங்காணென்று கூறி நெஞ்சை வலியுறுத்தி அதனைக் கைவிட்டுப் பின்னரும் அவர் வருவாரோ? வந்தால் யான் உடம்படாதவரை மிகவும் இகழ்ந்திருப்பேனோ? என்று உள்ளி வளைந்திருந்த நள்ளிருளையுடைய ஊர்காவலர் காத்தலைக் கொண்ட கங்குலிடத்துக் கனவிலே யான் உள்ளியவாறே வந்து தோன்றினாக யான் அவனை வளைந்து பிடித்துக் கொண்டேன்; அதனாற் பெற்றதென்? அங்ஙனம் பிடித்துக் காண்பேனாகப் பையென விழிக்க யான் பிடித்த கையுள்ளே மறைந்து தோன்றானாயினான்; இனி யான் ஞாயிற்றைக் கொண்டே அவனைக்காண்பேன் என்று கருதி இருந்து மற்றை நாள் அந்தியிலே ஞாயிற்றை நோக்கிக் கிரணங்களைப் பிறர்க்குப்பகுத்துக் கொடாத ஞாயிறே ! அக்கதிர்களோடே நீ அத்தகிரியை அடைகின்றாயாயின் அவரை நினைத்துத் தேடிப் பிடித்துக் கொண்டு என்முன்னே நிறுத்தி என்கையிலே உன்கையை நீட்

டித் தப்பாமற் தருவையாயின் உயிர் திரியாக என்னெஞ்சாகிய அகலிலே கொளுத்திய காமத்தீ அவியும் என்றேன்; அதற்கு மறுமொழி தாராது அத்தகிரியே போகலின் அதனை நோக்கி மறுவில்லாத சுடரோ! அத்தகிரியைச் சேர்கின்றாயாயின் நீ கடலினீரிடத்தே மீண்டு வந்து தோன்றிப் பகற்பொழுதை உண்டாக்குமளவுந் தானெழுதுந் தொய்யிலை எழுதாமற் கெடுத்தவனை யான் தேடுவன்; யான் தேடும்படி எனக்குக் கைவிளக்காகச் சில கிரணங்களைப் பகுத்துத் தாராய் என்று கூறினேன்; அச்சுடரும் யாம் அதனைக் கொடுத்தால் அவனைக் கண்டு துனித்து வருவேன் என்றுட்கொண்டு அதனைத் தாராது போயவாறுணர்ந்து அவன் எம்மை முன்னர் விரும்பிப் பின்னர் நலத்தைச் சிதைத்தானாயினன்; இங்ஙனஞ் சிதைத்தவனை எதிர்ப்பட்டால் யான்கூடாமல் வேறுசெய்வது எவன்கொல் என்று கருதி அத்தகிரியிலே வீழ்கின்ற காலத்து மன்றத்தின் பனைமேலே தோன்றும் மலையிடத்து மாந்தளிர் போலும் நிறத்தையுடைய வெயிலே! என்மென்றோளை மெலிவித்தானது வடிவழகின் தன்மை யான் விரும்பிக் காண்பதல்லது அவன்செய்த தீதென்று கூறுகின்ற பிறவற்றைக் காணேன்; என்னையொழியப் பழைதாக இவ்வுலகத்து மகளிருந் தத்தங்கணவரைக் கண்டாற் கூடுவதன்றித் துனித்திருந்தார் என்றுகேட்டும் அறிவையோ என்று கூறினேன்; அங்ஙனங் கூறிக் காமநோய் என் மனத்தைச் சுழலப் பண்ணி நெருப்பாக நின்று சுட்டதாயினுந் தோன்றாமல் மனத்துள்ளே மறைப்பேன்; அதனை மறைத்தாற்போலே அழகிய இதழ்போலுங் கண் தன்னிடத்தேகொண்டுநின்ற காமநோயை உறுகின்ற வெவ்வியநீரையும் மறைப்பேன்; அதற்குக் காரணம் அந்நீரைத்தெளிப்பின் அளிக்கத்தக்க இவ்வுலகு வேவதொன்றாய் இருத்தலின் என்று யான் ஆற்றிய அருமையுங் கூறினேன்; இதுகாறும் யானுற்ற வருத்தம் இதுதானென்று நின்ற சான்றோரை நோக்கிக் கூறிப், பின்னருஞ் சான்றீர்! நலியுங் காமமுங் கௌவையும் என்று சொல்லப்படும் இரண்டு விழுமம் உயிர்காவலாக இரண்டு புறத்துந் தூங்கி என்னை நலியும், இதனை இங்ஙனம் உயிர்மெலியுமளவும் வலிதிற் பொறுத்தேன், இனி இறந்துபடுவதற்குமுன்னே இதனைக் களைவீராக என்று கூறினள்; என்று சொல்லிப் பகலும் இரவுங் கூட்டமின்றிக் கழிந்தன என்று எண்ணி வருந்தி அழுதனள்; அழுது நீடு நினைந்து நொந்து உயிர்த்தனள்; அதன் பின்னர் விளக்கத்தையுடைய இராக்காலத்தே வந்து வரைந்துகொண்ட கேள்வன் இவன் நல்ல அழகினையுடைய மார்பனைப் பு

ணர்ந்து, தேய்க்குங் காலத்தே சிதைக்கின்ற தேற்றாவினுடைய விதையைக்கொண்டு கலத்தே மெல்லத் தேற்றக் கலங்கிய நீரிற் சிதைவு தெளியுமாறுபோலத் தன் சிதைவு தெளிந்து பழைய நலத்தைப் பெற்றாள்; ஆதலான் யாமும் இவர்களை அறுதியாக மணியும் அதனிற் பிறந்த நீரும் போலே வேறல்லவொன்று துணியக் கடவாமென்று கண்டார்கூறிற்றாகப் பொருளுரைக்க; எ - று.

ஓஒ இரக்கக் குறிப்பு. நகுதிரோ என்னும் ஓகாரம் ஐயம். நல்ல நகாலிரொன்றது மிகவும் நல்ல சிரிப்பினையுடையீராவீர், நல்லீர்கொல்லோ? அது நல்ல சிரிப்பாகாதே என நின்றது. 'எற்சிதை செய்தான் இவனென' என்றது மூன் 'யானுற்ற அல்லலுறீஇயான்' என்றதனையேயாகக்கொள்க. உரன், அறிவு, "உரவோரெண்ணினும்" என்றார் பிறரும். என்னுடைய நெய்தன்மலரன்ன கண்கள் இங்ஙனம் வருந்தி மிகப்பசப்பனவோ பசவாவே என ஓகாரம் எதிர்மறை.

*"சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொ ளியற்கை-புல்லிய கிளவி யெச்ச மாகும்" என்பதனாற் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுமாகத் தம்பேரறிவுதோன்ற ஆசிரியர்நல்லந்துவனார் செய்யுட்செய்தார்.

எல்லீர நல்கியவென்றும் பாடம். மென்றோள் நெகிழ்த்தான் திறமல்லால் என்பதும் பாடம்.

இதனுள் அந்திக்காலத்தைக் கையறவெய்திப் பின்னர்ச் சான்றோரை நோக்கிக் கூறுகின்றவள் புல்லாராமாத்திரை என்று அவனோடு புணர்ச்சி நிகழ்ந்தமையுங் கூறி யாவருங் கேட்ப நக்கழுது அல்லலுறீஇயானெனப் பெயரும் பெற்றியுங் கூறிப் புல்லிப் புணரப் பெறின் இகழ்ச்சியன்றாமெனக் கூறத்தகாதன கூறல் மடந்தன்னை இறந்தவாறுந் தெள்ளியம் என்றதனானும் எள்ளி இருக்குவென் என்றதனானும் வருத்தமிறந்தவாறுங் "கோடுவாய் கூடா * * * கொண்றையவன்" என்றதனாற் தான்செய்ததனை வியவாமையின் மருட்கையிறந்தவாறும் நெய்தன்மலரன்ன கண்ணெனத் தன்வனப்பு மிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இதனுறுப்புக்களுட் தலைவிக்குக் கலக்கமென்னும் மெய்ப்பாடு பிறந்தது.

எல்லிரா நல்கிய கேள்வனிவனெனவே கந்தருவத்தின் வழுவிப் பெருந்திணை நிகழ்ந்தவாறும் பின்னர் வரைவு நிகழ்ந்தவாறுங் காண்க. அது புல்லாரா மாத்திரை என்றதனானுமுணர்க.

---

*தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், உ0எ-ம் சூத்.

இது புரிவுண்ட புணர்ச்சி எனக் கலித்தலை வந்தும் 'புல்லா
ரா மாத்திரை யருகுவித் தொருவனை யகற்றலின்' எனவும் இனைந்
துநொந் தழுதன ணினைந்துநீ டுயிர்த்தனள், எனவும் இயற்சீர் நி
ரை ஒன்றியும் பாவேறுபடாமையின் 'எல்லையு மிரவுங் கழிந்தன
வென்றெண்ணி யெல்லிரா' என ஐஞ்சீரடி வந்த வெள்ளைச் சுரிதக
ம் பெற்றகலிவெண்பாட்டு. (உரு)

கசரு. அகலாங்க ணிருணீங்கி யணிநிலாத் திகழ்ந்தபிற்
பகலாங்கட் பையென்ற மதியம்போ னகலின்று
நன்னுத னீத்த திலகத்தண் மின்னி
மணிபொரு பசும்பொன்கொல் மாவீன்ற தளிரின்மேற்
கணிகாரங் கொட்குங்கொ லென்றுங் கணிசெல
மேனி மறைத்த பசலைய ளானுது
நெஞ்சம் வெறியா நினையா நிலனேக்கா
வஞ்சா வழாஅ வரற்று விஃதொத்தி [ய்தேன்;
யென்செய்தாள் கொல்லென்பீர் கேட்டீமின் பொன்செ

மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா
தறைகொன்று மற்றத னாருயி ரொஞ்சப்
பறையறைந் தாங்கொருவ னீத்தா னவனை
யறைநவ நாட்டினீர் கொண்டுதரின் யானு
நிறையுடையே னாகுவென் மன்ற மறையினென்
மென்றோ ணெகிழ்த்தானை மேயவ னுங்கட்
சென்றுசேட் பட்டதென் னெஞ்சு;

ஒன்றி, முயங்குவெமென் றென்பின் வருதிர்மற் றங்கே
யுயங்கினு ளென்றுங் குசாதிர்மற் றந்தோ
மயங்கினு ளென்று மருடிர் கலங்கன்மி
னின்னுயி ரன்னாற் கெனைத்தொன்றுந் தீதின்மை
யென்னுயிர் காட்டாதோ மற்று;

பழிதபு ஞாயிறே பாடறியா தார்கட்
கழியக் கதழ்வை யெனக்கேட்டு நின்னை
வழிபட் டிரக்குவென் வந்தெனென் னெஞ்ச

மழியத் துறந்தானைச் சீறுங்கா லென்னை
யொழிய விடாதீமோ வென்று;

அழிதக, மாஅந் தளிர்கொண்ட போழ்தினு னிவ்வூரார்
தாஅந் தளிர்சூடித் தந்நலம் பாடுப
வாஅந் தளிர்க்கு மிடைச்சென்றார் மீடரின்
யாஅந் தளிர்க்குவெ மன்;

நெய்த னெறிக்கவும் வல்ல னெடுமென்றோட்
பெய்கரும் பீர்க்கவும் வல்ல னிளமுலைமேற்
றொய்யி லெழுதவும் வல்லன்றன் கையிற்
சிலைவல்லான் போலுஞ் செறிவினு னல்ல
பலவல்லன் றோளாள் பவன்;

நினையுமென் னுள்ளம்போ னெடுங்கழி மலர்கூம்ப
வினையுமென்னெஞ்சம்போ லினங்காப்பார்குழறேன்றச்
சாயவென் கிளவிபோற் செவ்வழியா ழிசைநிற்பப்
போயவென் னொளியேபோ லொருநிலையே பகன்மாயக்
காலன்போல் வந்த கலக்கத்தோ டென்றலை
மாலையும் வந்தன் றினி;

இருளொடியா னீங்குழப்ப வென்னின்றிப் பட்டா
யருளிலை வாழி சுடர்;

ஈண்டுநீர் ஞாலத்து ளெங்கேள்வ ரில்லாயின்
மாண்ட மனம்பெற்றார் மாசி றுறக்கத்து
வேண்டிய வேண்டியாங் கெய்துதல் வாயெனின்
யாண்டு முடையே னிசை;

ஊரலர் தூற்றுமிவ் வுய்யா விழுமத்துப்
பீரலர் போலப் பெரிய பசந்தன
நீரலர் நீல மெனவவர்க் கஞ்ஞான்று
பேரஞர் செய்தவென் கண்;

தன்னுயிர் போலத் தழீஇ யுலகத்து
மன்னுயிர் காக்குமிம் மன்னனு மென்கொலோ

வின்னுயி ரன்னானைக் காட்டி யெனைத்தொன்று
மென்னுயிர் காவா ததூ;

எனவாங்கு,

மன்னிய நோயொடு மருள்கொண்ட மனத்தவள்
பன்மலை யிறந்தவன் பணிந்துவந் தடிசேரத்
தென்னவற் றெளிந்த தேஎம்போல
வின்னகை யெய்தினை ளிழந்த தன்னலனே.

இதுவுமது. இதற்கும் முற்கூறிய உரைகளைக் கூறிக்கொண்டு பொருளுரைக்க.

(இ-ள்.) அகன்ற ஊரிடத்தேயிருந்து களவின்கண் அவனோடு கூடி இன்புற்ற காலத்து இராக்காலத்து இருணீங்க விளங்கின அணிநிலாவையுடைய மதியம்போலே விளக்கம் அமைந்தவன் நீங்கின பின்பு பகற்பொழுதிடத்து ஒளி பாழ்பட்ட மதிபோலே ஒளி கெட்டு நன்றாகிய நுதலினின்றும் போன திலதத்தையுடையளாய் நீலமணியைத் தானொளிவிட்டு மாறுபடும் பசிய பொன்னொளிகொல்லோ! மாவீன்ற பசிய கொம்பின்மேலே கோங்கம் பூவிற் தாது பரந்த ஒளிகொல்லோ! என்று பிறர்கூறுந் தன்னணி தன்னிடத்தினின்றும் போம்படி தன்மேனியை மறைத்த பசலையளாய் அமையாமை தன்னெஞ்சம் இன்பத்தைத் தரும் பொருள்களோடே வெருவி அவ்வின்பங் கழிந்தபடியை நினைத்து நாணுற் பிறரெதிர் முகநோக்காது நிலத்தை நோக்கி அந்நாண் மேற்போகின்றதற்கு அஞ்சி அழுது அழாதே பலவுஞ் சொல்லித் தன்குறை கூறி இவளொருத்தி என்ன வருத்தமுற்றாள் கொல்லோ என்று கூறுகின்றவர்களே! யான் பொன்செய்தேன், யானுற்றதனைக் கேட்பீராக என்று கூறினாள் அங்ஙனங் கூறுகின்றவள் வஞ்சனையாலே தான்வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்பமுற்றதென்று அருள் பண்ணாதே முன்பு செய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதன் அரிய உயிர்போம்படி பறையைத் தட்டினாற் போலே ஒருவன் முன்னர் வஞ்சித்து இன்பத்தை உண்டாக்கிப் பின்னர் அவ்வின்பம் போம்படி என்னைக் கைவிட்டான்; அக்களவொழுக்கத்தாலே என் மெல்லிய தோளை மெலிவித்தவனை நெஞ்சு பொருந்தி அவனுறைகின்ற இடத்தே சென்று வருதற்கு நெடுங்காலத்தவாயிற்று என்று கூறினாள்; அங்ஙனங் கூறி அவள் அது கொண்டுவ

ருதலுங்கூடும் அதனோடே நீருங் கூடி நவகண்டம் எனக் கூறு படுத்தின உலகத்தின்கண்ணே அவனை ஆராய்ந்து நீர் பிடித்துக் கொண்டு எனக்குத் தரப்பெறில் யானும் பிறமகளிரைப் போல அறுதியாக நிறை என்னுங் குணமுடையேனுவேன் என்றுங் கூறினாள்; அதுகேட்டு அவர்கள் அதற்கு மறுமொழி கொடாமற் பின்னே வந்தமையின், இவள் ஒருநாளிலேயாயினும் அவனைப் பொருந்தி முயங்கும் என்று கருதி என் பின்னே பின்னே வாராநின்றீர்; பின்னை இவள் அப்பொழுதே முன்புபோலன்றி மிகவும் வருந்தினாள் என்று கருதி அவ்விடத்தே நின்று அவனுக்கு ஓர் தீங்கு நிகழ்ந்ததோ என்று உசாவாநின்றீர்; அவ்வருத்தமேயன்றி ஐயோ இவள் கையறவு எய்தினாள் என்று மருளாநின்றீர்; இங்ஙனம் உண்மை உணராமற் கலங்காதேகொள்ளும்; பின்னை என் இனிய உயிரை ஒப்பானுக்கு யாதொன்றுந் தீதின்றி அவனுளனாய் இருக்கின்றமையை அவனுயிரோடு ஒன்றாகிய என்னுயிர் ஈண்டுக் காட்டாதொழியுமோ? அதுதான் இறந்துபடாது அவனிருந்தமை காட்டிற்றில்லையோ என்றாள்; அது கேட்டு அவர்கள் தனக்கோரேதமன்றி நின்று நின்னை இங்ஙனம் வருத்தினவனை நடுவாக நோக்கி நின்ற ஞாயிறு தான் வருத்துங்காண் என்றார்; அது கேட்டு நடுவு நிலைசெய்யாமல் உண்டாம் பழிநீங்கும் ஞாயிறே! உலகியல் அறியாதாரிடத்துக் கழியச்சீறுதற்கு விரைந்துசெல்வையென்று அவர்கள் கூறக் கேட்டு நின்னை வழிபட்டு நீ அவனை மிகச் சீறாதபடி இரந்துகொள்வேனாக வந்தேன்; நீ என்னெஞ்சங் கெடும்படி என்னைக் கைவிட்டவனைக் கண்டு சீறுமிடத்து என்னை நீங்கவிடாதேகொள்? அது என்னெனில் நீ அக்காலத்து அவனை மிகச் சீறில் யான் இறக்கும்படி நேரும் என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே ஞாயிறு படுகின்றமையைக் கண்டு பிரிந்தார்க்கு வருத்தந்தரும்படியாக மாந்தளிர்போலும் நிறத்தைக்கொண்ட மாலைக்குமுன்னாகிய இக்காலத்தே இவ்வூரின் மகளிர் தாந் தளிர் விரவின மாலைகளைச் சூடி ஆடவர்மேற் தாம் வைத்த நலத்தைப் பாடி இன்புறுவர்கள், அவர்களைப்போல ஆச்சாமரந்தளிர்க்குங் காட்டிடைச்சென்றவர் மீண்டுவரின் யாம் மனமகிழுவேம், அதனாற் பெற்றதென்? அவர்வரக் கண்டிலேம் என்றுங் கூறினாள்; கூறி யாம் தளிர்க்குமாறு எங்ஙனே என்பீராயின் என்தோளைத் தொழில் கொள்கின்ற அவன் நெய்தற் பூவைப் புறவிதழொடித்து மாலை கட்டிச் சூடவும் வல்லன், நெடிதாகிய மென்றோளிலே காமன் சிலையாகிய எழுதுகரும்பை எழுதவும் வல்லன், இளமுலைமேற் தொய்யிற்குழம்பாற் சொ

டி எழுதவும் வல்லன், இவை ஒழிந்து நீங்கி இருந்து மனம் வேட்கை அடக்கி இருக்குமிடத்துத் தன்கையில் வில்லைத் தொழில் கொள்ள வல்ல காமனை ஒக்குமதுவன்றி, வேட்கை நிகழ்ந்துகூடுங் காலத்து ஆண்டு நிகழ்த்தும் நல்ல தொழில்கள் பலவற்றையும் வல்லன், இவ்வாற்றான் என் மனந்தளிர்க்கும் என்று கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே மாலைக்காலம் வருகின்றதனைக் கண்டு, அவனை நினையும் என் உள்ளங் குவியுமாறுபோல நெடிய கழியின் மலர்கள் குவிய, இரங்கும் என்னெஞ்சுபோலே கோவலர் குழலோசைதோன்ற, அலைவுபெற்ற என் மொழிகள்போல வண்டுகளின் செவ்வழிப்பாட்டு அடங்கக், கெட்டுப்போன என் அழகுபோலப் பகற்காலத்தின் ஒளி மழுங்கக், கலக்கத்தோடேவந்த காலனைப்போல என்மேலே மாலைக் காலமும் வந்தது, இனி எங்ஙனம் ஆற்றுவேன் என்று கூறினாள்; கூறி அம்மாலையை வரவிட்ட ஞாயிற்றை நோக்கிச் சுடரே! யான் என்பதொருதன்மையின்றி யான் இவ்விடத்தே இராக் காலத்தாலே வருந்தும்படி நீ போனாய், அருளுடையையல்லையாயிருந்தாய், இத்தன்மையால் நீ வாழ்வாயாக என்று கூறினாள்; கூறி இவ்விரவால் இறந்துபட்டேனாயினுந் தீங்கின்றாய் இருந்தது என்று கருதி மிகுகின்ற நீர்மையுடைய உலகத்துள் உறைகின்ற கேள்வருளரல்லாராயிற் தங்கணவர்மேலுள்ள வேட்கையோடே இறந்துபடும் மாட்சிமைப்பட்ட மனத்தைப் பெற்றவர்கள் குற்றமில்லாத சுவர்க்கத்தைச் சென்று அவர்கள் நுகர விரும்பியவற்றைத் தாம் விரும்பியபடியே பெறுதல் மெய் என்று நூல்கள் கூறியவென்னின் யானும் அங்ஙனம் அவன்மேல் விருப்பத்தோடே உயிர்போய் அவனைப் பெற்று எவ்விடத்தும் புகழுடையேனாவேன், இனி வருத்தம் என்னென்றுங் கூறினாள்; கூறி "முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு பிற்பகற் கண்டு விடும்" என்றுகூறிய பழமொழி உளதாகலின் அவ்வாறே நீரில் அலர்ந்த நீலமென்று அவர் புகழ அவர்க்கு அந்நாளிற்பெரிய வருத்தத்தைச்செய்த என் கண்கள் இப்பொழுது பீரலர்போலப் பெரியவாகப் பசந்தன, இதனையும் என் வருத்தத்தையுங் கண்டும் அருளின்மையின் அவனை எனக்குக் காட்டாமல் இவ்வூர் நின்று அலர் தூற்றாநிற்கும்; இனி இவ்வுய்யாவிடும்பையிடத்து உயிர்களைக் காத்தற்கு யான் அரசனே என்று கருதித் தன்னுயிரைப் பாதுகாக்குமாறு போல உலகத்துப் பெரிய உயிர்களை எல்லாந் தழீஇப் பாதுகாக்கும் இம்மன்னனும் எனக்கினிய உயிரை ஒப்பானைக் காட்டி என்னுயிரைச் சிறிதொன்றுங் காவாதிருக்கின்ற

தன்மை என்ன பயனைக் கருதியோ என்றுங் கூறினுள்; என்று கூறும்படியாக நிலைபெற்ற காமநோயாலே அங்ஙனம் மயக்கங் கொண்ட மனத்தையுடையவள் பலமலைகளைக் கடந்து போனவன் வரவொடுவந்து பணிந்து தன்னடியைச் சேர்கையினுலே பாண்டியனை உறவாக அவன் மனத்தைத் தெளிவித்த தேயத்திலுள்ளார் இன்பமுற்று வாழுமாறுபோல அவனால் இழந்த நலத்தை இனிய அகமகிழ்ச்சியோடு எய்தினள்; இஃதென்ன வியப்போ எனக் கண்டார் கொண்டு கூறிற்றுக உரைக்க; எ - று.

'சென்றுசேட்பட்டதென்னெஞ்சு' என்னுந் துணையுங் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'நெடுமென்றோள்' 'நீரலர்நீலம்' 'இளமுலை' என்பனவற்றான் மிகுதியிறந்தவாறும் 'வழிபட்டிரக்குவென் வந்தென்' என வருத்தமிறந்தவாறும் 'யாண்டுமுடையேனிசை' என்பதனுல் வியவாமையின் மருட்கையிறந்தவாறும் உணர்க.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

நெய்தனெறித்தல் முதலியன திருவினுற் காமக்குறிப்புப் பிறந்த ஒப்பு; இவை குடிப்பிறப்பினை அறிவித்துக் காமக் குறிப்பினை நிகழ்த்தலின்.

இஃது ஐஞ்சீரடுக்கிவந்த கலிவெண்பாட்டு. (உசு)

கசச. நன்னுதால் காண்டை நினையா நெடிதுயிரா
வென்னுற்றாள் கொல்லோ விஃதொத்தி பன்மா
ணகுதருந் தன்னுணுக் கைவிட் டிகுதருங்
கண்ணீர் துடையாக் கவிழ்ந்து நிலனோக்கி
யன்ன விடும்பை பலசெய்து தன்னை
வினவுவார்க் கேதில சொல்லிக் கனவுபோற்
றெருளு மருளு மயங்கி வருபவள்
கூறுப கேளாமோ சென்று;

எல்லாநீ, என்னணங் குற்றனை யார்நின் னிதுசெய்தார்
நின்னுற்ற வல்ல லுரையென வென்னை
வினவுவிர் தெற்றெனக் கேண்மி னொருவன்
குரற்கூந்தா லென்னுற்ற வெவ்வ நினக்கியா
னுரைப்பனைத் தங்கிற்றெ னின்னுயி ரொன்று

மருவூட்டி மாறி யதற்கொண் டெனக்கு
மருவழிப் பட்டதெ னெஞ்சு;
எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி;

பொங்கிரு முந்நீ ரகமெல்லா நோக்கினை
திங்களுட் டோன்றி யிருந்த குறுமுயா
லெங்கே ளிதனகத் துள்வழி காட்டீமோ
காட்டீயா யாயிற் கதநாய் கொளுவுவென்
வேட்டுவ ருள்வழிச் செப்புவெ னாட்டி
மதியொடு பாம்பு மடுப்பென் மிதிதிரிந்த
வென்னல்ல நீரா யெனின்;

என்றாங்கே, உண்ணின்ற வெவ்வ முரைப்ப மதியொடு
வெண்மழை யோடிப் புகுதி சிறிதென்னைக்
கண்ணோடி னாய்போறி நீ;

நீடிலைத் தாழைத் துவர்மணற் கானலு
ளோடுவெ னோடி யொளிப்பென் பொழிறொறு
நாடுவென் கள்வன் கரந்திருக் கற்பாலன்கொ
லாய்பூ வடம்பி னலர்கொண் டுதுக்காணெங்
கோதை புனைந்த வழி;

உதுக்காண், சாஅய் மலர்காட்டிச் சால்பிலான் யாமா
பாவைகொண் டோடி யுழி; [டும்

உதுக்காணந், தொய்யில் பொறித்த வழி;

உதுக்காண், தையா றேறெனத் தேற்றி யறனில்லான்
பைய முயங்கி யுழி;

அளியவென் னுள்ளத் துயவுத்தே ரூர்ந்து
விளியாநோய் செய்திறந்த வன்பி லவனைத்
தெளிய விசும்பினு ஞாலத் தகத்தும்
வளியே யெதிர்போம் பல்கதிர் ஞாயிற்
றொளியுள் வழியெல்லாஞ் சென்று முனிபெம்மை
உண்மை நலனுண் டொளித்தானைக் காட்டீமோ

காட்டாயேன், மண்ணக மெல்லா மொருங்கு சுடுவே
கண்ணீ ரழலாற் றெளித்து; [னென்

பேணான், துறந்தானை நாடி மிடழ்விடா யாயிற்
பிறங்கிரு முந்நீர் வெறுமண லாகப்
புறங்காலிற் போக விறைப்பேன் முயலி
லறம்புணை யாகலு முண்டு;

துறந்தானை, நாடித் தருகிற்பா யாயி னினக்கொன்று
பாடுவெ னென்னோ வுரைத்து;

புல்லிய கேளிர் புணரும் பொழுதுணரே
னெல்லியா கெல்லையென் றுங்கே பகன்முனிவ
னெல்லியல் காலை யிராமுனிவன் யானுற்ற
வல்லல் களைவா ரிலேன்;

ஓஒகடலே, தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற விமை
யெடுத்துப்
பற்றுவெ னென்றியான் விழிக்குங்கான் மற்றுமெ
னெஞ்சத்து ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யு மறனில் லவன்;

ஓஒகடலே, ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயு
ணீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ
வீரமில் கேள்வ னுரீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்;

ஓஒகடலே, எற்றமி லாட்டியென் னேமுற்று ளென்றி
யுற்றறியா தாரோ நகுக நயந்தாங்கே [ந்நோ
யிற்று வறியின் முயங்கலென் மற்றென்னை
யற்றத்திட் டாற்றறுத்தான் மார்பு;

ஆங்கு,

கடலொடு புலம்புவோள் கலங்களுர் தீரக்
கெடலருங் காதலர் துணைதரப் பிணிநீங்கி
யறனறிந் தொழுகு மங்க ளுளனைத்

திறனில்லா ரெடுத்த திமொழி யெல்லா
நல்லவை யுட்படக் கெட்டாங்
கில்லா கின்றவ ளாய்நுதற் பசப்பே.

இதுவுமது. இதற்கும் அவ்வுரை கூறிக்கொள்க.

(இ-ள்.) நன்னுதால் * * * சென்று—எ-து, நன்றாகிய நுதலினையுடையாய்! இவளொருத்தி தனக்குரிய நாணினைக் கைவிட்டுத் தன் மனத்தே ஒன்றை நினைத்து நெட்டுயிர்ப்புக்கொண்டு வீழ்கின்ற கண்ணீரைத் துடைத்துப் பிறரை நோக்காது நிலத்தைக் கவிழ்ந்து நோக்கித் தன்னை நீ உற்றது என்னென்பார்க்குக் கனவின்கண் வாய்வெருவிக் கூறுவாரைப்போலே உத்தரமல்லாதன சில சொல்லிப் பலகாலும் நகுதலைச் செய்யும்; இங்ஙனந் தெளிவும் மயக்கமுமாய் மயங்கி வேறும் அத்தன்மையவாகிய இடும்பைகள் பலவற்றையுந் தன்னிடத்தே உண்டாகக் கொண்டு வருகின்றவள் என்ன துன்பமுற்றாளோதான்? இவளைக் காண்பாயாக; யாஞ் சென்று இவள்கூறும் வார்த்தைகளைக் கேட்டலைச் செய்யாமோ என்றாளொன்று கூறினாள்; எ-று.

எல்லாநீ * * * வழி—எ-து, அங்ஙனங் கூறி அவள், கேட்சக் கடவேமென்று நம்மிலே கூறி வந்து, ஏடீ! நீ என்ன வருத்தமுற்றாய்? யார்தான் நினக்கு இவ்வருத்தஞ் செய்தார்? நினக்கு உற்ற வருத்தத்தை எங்கட்கு உரையென்று சொல்லி என்னைக் கேட்கின்றவர்களே! அது வந்தவாற்றை என்பக்கலிலே தெரியக் கேண்மின், ஒருவன் கொத்தான கூந்தலையுடையாய்! எனக்கு உற்ற வருத்தத்தை யான் நினக்கு வந்து உரைக்குமளவும் என் இன்னுயிர் போகாமற் தங்கிற்றுக்காண் என்று இங்ஙனந் தன்னோடு யான் மருவுதலை உறுத்தி, அம்மருவுதலை அவன் மாறிப் போன அக்காலந்தொடங்கி என் நெஞ்சு எனக்கு அவன் மருவின இடத்தே அகப்பட்டு நின்றுவிட்டது; இனி அவனுள்ள இடமெங்குந் தேடித் தெரிந்து என்னெஞ்சினைக் கூட்டிக்கொள்வேன் என்று கூறினாள்; எ-று.

உரைப்பனை திசைச்சொல்.

பொங்கிரு * * * நீ—எ-து, அங்ஙனங் கூறி, அந்திக்காலத்தே கையறவெய்தி உரைத்து, அவள் இனி இக்காலத்துத் தன்னைத் தேடுதல் அரிதென்று கருதித், திங்களைக்கண்டு இதனோடு செறிந்த முயல் தேடித் தருமெனக் கருதி, மிக்கு எழுகின்ற கரிதாகிய கடல்

சூழ்ந்த உலகமெல்லாம் பார்த்துத் திங்களினுள்ளே விளங்கி இருந்த குறிய முயலே! அறிவு வேறுபட்ட என்னுடைய நெஞ்சை யான் தேடிக் கூட்டிக்கொள்ளக் கருதின வருத்தத்தை நீ அதனைக் கூட்டித் தீராயாயின் யான் வாங்கிக் கொள்ளும்படி இவ்வுலகத்தில் எங் கள்வன் இருக்கின்ற இடத்தைக் காட்டுவாய்; அவனிருக்கின்ற இடத்தைக் காட்டாயாயின் நினக்குப் பகையாகிய கோபத்தையுடைய நாயை நின்னிடத்தே கொளுத்துவேன்; அதுவன்றி வேட்டுவருள்ள இடத்தே சென்று ஒருமுயல் உண்டென்று கூறுவேன்; அதுவேயன்றி நீ அரணாக உறைகின்ற திங்களோடே நின்னை அலைத்துவிழுங்கும்படி மதிக்குப் பகையாகிய பாம்பைச் செலுத்துவேனென்று அவ்வந்திக்காலஞ் செல்கின்ற காலத்தே தன் நெஞ்சினின்ற வருத்தத்தைச் சொல்ல, அது வெண்மேகத்தே மறைந்ததனைக்கண்டு, நீ மதியோடே வெண்மேகத்தே ஓடிச் சென்று புகாநின்றாய், ஆகையினாலே சிறிதென்னைக் கண்ணோட்டஞ் செய்து நீ என்னைத் தேடிப் போகின்றாய்போலே இராநின்றாய் என்று கூறினாள்; எ-று.

நீடிலைத் * * * மார்பு—எ-து, அங்ஙனங் கூறி, அது கரிய மேகத்தே மறைந்து விடுதலின் அதனை நோக்கித் தேடுமாறு அதற்குக் கூறக் கருதி, அக்கள்வனவன் மறைந்திருக்கக் கடவனே என்று காட்டும்படி, யான் நீண்ட இலையினையுடைய தாழை நிற்கின்ற சிவந்த மணலையுடைய கானலிற் பொழில்கடோறும் ஓடிச் சென்று பார்ப்பேன்; அங்ஙனஞ் சென்று பார்த்துக் காணமையின், ஓடிச் சென்று அவனை ஒளித்திருந்து காணக் கடவேனென்று கருதி ஒளித்திருப்பேன்; நீயும் இங்ஙனம் ஒளித்திருந்தே தேடென்று கூறினாள்; அங்ஙனங் கூறிப் பின்பு அவனிருக்கும் இடங்களுங் கூறக் கருதிப், பூவினையுடைய அடம்பின் மலரைக் கொண்டு எமக்குத்தருங் கோதையைக் கட்டின இடத்தை உவ்விடத்தே பாராய், அன்மதியில்லாதான் யாங் கொண்டுவிளையாடுஞ் சாயப்பாவையையும் மலர்களையுங் கொண்டுவந்து நமக்குக் காட்டி யான் தன்பின்னே செல்லும்படி அவற்றைக் கொண்டோடிய இடத்தை உவ்விடத்தே பாராய், எமக்குத் தானெழுதுந் தொய்யிலை எழுதிய அவ்விடத்தை உவ்விடத்தேபாராய், மனத்தில் அறனில்லாதவன் தையால்! நின்னைப் பிரியேன் நீதெளியென்று தெளிவித்துப் பின்னர் மெல்ல முயங்கிய அவ்விடத்தை உவ்விடத்தே பாராயென்று கூறினாள்; அங்ஙனங் கூறின அளவிலே அம்முயல் கருமேகத்து மறைந்தேபோகலின் அதனைக் கைவிட்டு இடையே தன்மேல் வந்துற்ற வளியை நோக்கி

வளியாகியதேய்வமே! நீ திங்களின் ஒளி போலன்றி விசும்பிடத்தும் ஞாலத்திடத்தும் பரக்கும் பல கதிர்களையுடைய ஞாயிற்றின் ஒளியுள்ள இடமெல்லாஞ் சென்று நாடுதற்குரிய நீ உயவுத்தேனை ஊர்ந்து வந்து தன்னால் அளிக்கத்தக்க என்னுள்ளத்திடத்தே கெடாத காமநோயைச்செய்து என்னைக் கைவிட்டுப்போன அன்பிலாதவனை அந்நோய் நீங்கி என்மனந் தெளியும்படியாக எதிர்ப்படுவாய், அங்ஙனம் எதிர்ப்பட்டு வேட்கை மிகுதியான் எம்முடைய இயற்கை நலத்தை நுகர்ந்து பின்பு எம்மை ஒரு காரணமின்றி வெறுத்து அவ்வியற்கை நலத்தைக் கொண்டு இம்மண்ணகத்தே ஒளித்தவனைக் கொண்டுவந்து காட்டுவாய்; காட்டாயாகில் என்கண்ணீரைத் தெளித்து அதன்கண் எழுகின்ற அழலாலே நின் மேனி எல்லாஞ் சேரச் சுடுவேன் என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி அதனைப் பின்னர்க்காணாமையிற் தான் அவனைத் தேடக் கருதிக், கடலை நோக்கி மிக்கு வருகின்ற கரிய கடற் தெய்வமே! என்னைப் பாதுகாவாறுயத் துறந்தவனை யான் தேடிக் காணுமிடத்தை நீ விட்டுப் போகாமல் எறுவாயாயின் நின்னிடமெல்லாம் வெறு மணலாம்படி என் காற்புறத்தாலே நின்னுடைய நீரெல்லாம் போம்படி இறைப்பேன், அது முடியுயோவெனின் அங்ஙனம் முயலுவேன், அதற்குக் கடவுள் உதவியாதலும் உண்டாயிருக்கும் என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறி, ஓதம் வடிந்ததனைக் கண்டு என்னைக் கைவிட்டுப்போனவனை நீ தேடிக்கொண்டு வந்து தருவையாயின் அதற்குக் கைம்மாறாக என்னோயைச்சொல்லி நினக்கு ஒரு பாட்டினைப் பாடுவேனென்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறிப் பாடுகின்றவள் என்னைக் கூடின கேளிர் வந்து கூடுங் காலம் இரவோ பகலோ என்றறியேன், ஆதலால் என்னை வருத்தும் பகற்பொழுதுபோய் இராப்பொழுதாவதாக என்று கருதிப் பகற் பொழுதை வெறுப்பேன், அதுபோய் இராவான காலத்திடத்து அவ்விராச்காலத்தை அப்பொழுதே வெறுப்பேன், அப்படியே ஓஒ! யான் உற்ற வருத்தத்தைக் கடலே! நின்னை ஒழியப் போக்குவாரை வேறுடையேனல்லேன் என்றுங் கூறினாள்; அங்ஙனங் கூறிப் பின்னுங் கடலே! அறனில்லாதவன் தெளிய என்கண்ணுள்ளேவந்து தோன்றுகையினாலே கூடின இமையை விழித்துப் பிடித்துக் கொள்வேனென்று கருதி யான்விழிக்கப் பின்னையும் ஓடிப்போய் என்னெஞ்சத்துள்ளே மறைந்துநின்று அப்பொழுதே யான் துயிலாத காமநோயைத் தாராநிற்கும்; கடலே! ஊரை எல்லாந் தனக்குள்ளாக்கிக்கொண்டு காந்துங் கடியநெருப்புத் தன்னை அவிச்குநீரைச் சொரியச் சினமாறும், அதுபோலன்றி அருளில்

லாத என்செல்வன் என்னை உறுத்திய இந்தக் காமமாகிய நெருப்புத் தனக்குப் பகையாகிய நீருள்ளே புகினுமோ வேமாறு சுடாநிற்கும்; கடலே! தன் மனத்து ஒரு துணிவில்லாதாள் என்ன பித்தேறினளென்று கூறி இக்காமநோயுற்றறியாதவர்களோ என்னை இகழ்ந்து சிரிக்க; இக்காமநோய்க்குத்துணையாவதோர் ஆளறுதியிலேபின்னை என்னைவிட்டுவைத்து என்வலியை அறுத்தவன் மார்பினை யான் விரும்பின அக்காலத்தே பின்பு இத்தன்மைத்தாக வருத்துமென்றறியின் முயங்கேன்; அக்காலத்தறிகலேன் காணென்றுங் கூறினாள்; எ-று.

ஓஒ வருத்தக்குறிப்பு. ஓகாரம் பிரிநிலை. ஆற்றல் ஆற்றெனவிகாரமாயிற்று.

ஆங்கு, அசை.

கடலொடு * * * பசப்பே—எ-து, அங்ஙனங் கடலோடே வருந்திக் கூறினவளுடைய மனங்கலங்கும் வருத்தந்தீரும்படி அவள் காதலர் விரைந்து வரக் கெடுதலரிய காமநோய் நீங்கி, இவளுடைய அழகிய நுதலிற் பசப்பு, அறநெறியறிந்து நடக்குங் கண்ணோட்டமுடையவனை அத்திறமில்லாதார் உண்டாக்கிச் சொன்ன தீய மொழிகளெல்லாம் நன்மக்கள் இருக்கின்ற அவைக்குள்ளே ஆராய்ச்சிப்பட்டவைகெட்டாற் போல, இல்லையாகாநின்றது என்னவியப்போ எனக் கண்டார்கொண்டுகூறிற்றாக உரைக்க; எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'அருவழிப் பட்டதென் னெஞ்சு' என்னுந்துணையுங் கூறத்தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'அறம்புணை யாகலு முண்டு' எனத் தன்னுடம்பும் உயிரும் வருந்திய நிலைதோன்றக் கூறுதலாற் கலக்கமெய்தியவாறுங் காண்க.

இஃது 'எங்குந் தெரிந்தது கொள்வே னவனுள் வழி' என ஐஞ்சீரான் ஒன்றும் 'உதக்காணந் தொய்யில் பொறித்த வழி' என ஓரடியான் ஒன்றும் வருதலிற் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (உஎ)

கசஙு. துனையுநர்விழைதக்க சிறப்புப்போற்கண்டார்க்கு
நனவினு ளுதவாது நள்ளிருள் வேறாகுங்
கனவி னிலையின்றாற் காம மொருத்தி
யுயிர்க்கு முசாஅ முலம்வரு மோவாள்

கயல்புரை யுண்க ணரிப்ப வரிவாரப்
பெயல்சேர் மதிபோல வாண்முகந் தோன்றப்
பலவொலி கூந்தலாள் பண்பெல்லாந் துய்த்துத்
துறந்தானை யுள்ளி யழூஉ மவனை
மறந்தாள்போ லறலி னகூஉ மருளுஞ்
சிறந்ததன் னுணு நலனு நினையாது
காம முனைஇயா ளலந்தாளென் றெணைக்காண
நகான்மின் கூறுவென் மாக்காள் மிகாஅது
மகளிர், தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலு
நீள்சுரம் போகியார் வல்லைவந் தளித்தலு
மூழ்செய் திரவும் பகலும்போல் வேறுகி
வீழ்வார்கட் டோன்றுந் தடுமாற்ற ஞாலத்துள்
வாழ்வார்கட் கெல்லாம் வரும்;

தாழ்பு, துறந்து தொடிநெகிழ்த்தான் போகிய கான
மிறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானஞ் சிறந்தவென்
கண்ணீர்க் கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து;

நுமக்கெவன் போலுமோ வூரீ ரெமக்கெங்
கண்பாயல் கொண்டுள்ளாக் காத லவன்செய்த
பண்பு தரவந்த வென்றொடர் நோய்வேதுக்
கொள்வது போலுங் கடும்பகன் ஞாயிறே
யெல்லாக் கதிரும் பரப்பிப் பகலொடு
செல்லாது நின்றீயல் வேண்டுவ னீசெல்லிற்
புல்லென் மருண்மாலைப் போழ்தின்று வந்தென்னைக்
கொல்லாது போத லரிதா லதனெடியான்
செல்லாது நிற்ற லிலேன்;

ஒல்லையெங், காதலர்க் கொண்டு கடலூர்ந்து காலைநாட்
போதலிற் காண்குவென் மன்னோ பனியொடு
மாலைப் பகைதாங்கி யான்;

இனியனென், றேம்படுப்பன் ஞாயி றினி ;

ஒள்வளை யோடத் துறந்து துயர்செய்த
கள்வன்பாற் பட்டன் றெளித்தென்னை யுள்ளிப்
பெருங்கடல் புல்லெனக் கானல் புலம்ப
விருங்கழி நெய்த லிதழ்பொதிந்து தோன்ற
விரிந்திலங்கு வெண்ணிலா வீசும் பொழுதினன்
யான்வேண் டொருவனெ னல்ல லுரீஇயான்
றான்வேண்டு பவரோடு துஞ்சுங்கொ றுஞ்சாது
வானு நிலனுந் திசையுந் துழாவுமெ
னுறைப் படர்மிக்க நெஞ்சு ;

ஊரவர்க் கெல்லாம் பெருநகை யாகியென்
னுருயி ரெஞ்சுமெ னங்குநீ சென்றீ
நிலவுமிழ் வான்றிங்கா ளாய்தொடி கொட்ப
வளிபுற மாறி யருளான் றுறந்தவக்
காதலன் செய்த கலக்குறுநோய்க் கேதிலா
ரெல்லாருந் தேற்றார் மருந்து ;

வினைக்கொண்டென் காமநோய் நீக்கிய வூரீ
ரெனைத்தானு மெள்ளினு மெள்ளலன் கேள்வ
னினைப்பினுங் கண்ணுள்ளே தோன்று மனைத்தற்கே
யேமரா தேமரா வாறு ;

கனையிருள் வானங் கடன்முகந் தென்மே
லுறையொடு நின்றியல் வேண்டு மொருங்கே
நிரைவளை கொட்பித்தான் செய்த துயரா
லிறையிறை பொத்திற்றுத் தீ;

எனப்பாடி,

நோயுடை நெஞ்சத் தெறியா வினைபேங்கி
யாவரு மெங்கேள்வற் காணீரோ வென்பவட்
கார்வுற்ற பூசற் கறம்போல வெய்தந்தார்
பாயல்கொண் டுள்ளா தவரை வரக்கண்டு

மாயவன் மார்பிற் றிருப்போல் பவள்சேர
ஞாயிற்று முன்ன ரிருள்போல மாய்ந்ததென்
றாயிழை யுற்ற துயர்.

இதுவுமது. இதற்கும் முன்னர்க் கூறிய உரையைக் கூறிக்கொள்க.

(இ-ள்.) துணையுநர் * * * வரும்—எ-து. மக்கள் விரைந்தனராய் விரும்புதல் தக்கதொரு தலைமைபோலே இருக்கின்ற காமமானது நள்ளிருட்கண்ணே கண்டவர்களுக்கு நனவின்கண் உதவாதே வேறுபட்டுப் போங் கனவினும் நிலைபெறுதல் இன்றாயிருந்தது; எவ்வாறெனிற் பலவாய்த் தழைகின்ற கூந்தலையுடையாளாகிய ஒருத்தி தன் குணங்களை எல்லாம் நுகர்ந்து தன்னைக் கைவிட்டவனை நினைத்து நெட்டுயிர்ப்புக் கொள்ளும், அவனோடு கூடுமாற்றினைச் சிலரோடுசாவும், நெஞ்சு உழலும், பெய்கின்ற மழையைச் சேர்ந்த மதிபோலே தன்முகந் தோன்றும்படியாகக் கயலை ஒக்குந் தன் கண்களினின்று மறிந்து விழுகின்ற நீர் முகத்தே வடியும்படி ஒழியாளாய் அழாநிற்கும், அவனை மறந்தாளைப்போலே ஆரவாரித்து இடையே நகுவதுஞ் செய்யும்; ஆகையினாலே தனக்குச் சிறந்த தன் நாணையும் மற்றுள்ள நன்மைக்குணங்களையும் நிலைபெற நினையாதே காமம் ஒன்றையுமே நினைத்து அவள் அலமந்தாளென்று இங்ஙனம் இகழ்ந்து கூறி எல்லாருங் காண என்னைச் சிரியாதேகொள்ளும்; ஐயறிவினையுடையவர்களே! சுருங்க யான் அதன் தன்மை கூறுவேன், சேண் மினென்று கூறுகின்றவள் மகளிர் தோளைச் சேர்ந்த ஆடவர் அவர்கள் வருத்தம் மிகும்படி பிரிதலும் பின்னர் நீண்ட சுரத்தைப்போனவர்கள் விரைய வந்து அருள்செய்தலுமாகிய இரண்டும் இரவும் பகலும் போலே முறைமைசெய்து வேறாய் ஒருவரை ஒருவர் விரும்புவாரிடத்துத் தோன்றும் இன்பம் நிலையில்லாமையான தடுமாற்றமாய் இருக்குமது தனக்கே யன்றி உலகத்துக் கூடியிருந்து வாழ்வார்களுக்கு எல்லாம் வருவதுஞ் செய்யும் என்று அதனது தன்மை கூறினாள்; எ-று.

தாழ்பு * * * முகந்து—எ-து, அங்ஙனங் கூறி அவர் நக்கதனால் யாம் இங்ஙனமாயினேம் என்று கருதி அழுகின்றவள் ஆண்டெழுந்த வெண்மேகத்தை நோக்கி வானமே! நீ பெய்யாதே வறந்து என்னைகாரியஞ் செய்கின்றாய்? நின் இனத்தோடே கூடி

என் கண்ணீராற் சிறந்த கடலிலே முகந்து பரந்து முழங்கி முன்னர் என்னிடத்தே தாழ்ந்து பின்னர் என்னைத் துறந்து நெருங்குந் தொடியை உட்படநெகிழ்த்தவன் போகிய கானத்தினை நெருப்பு மிக்குச் சுடாமற் செறிந்த துளியை வீசாயோ? வீசென்று மழையை நோக்கிக் கூறினாள்; எ-று.

நுமக்கெவன் * * * றினி—எ-து, அங்ஙனங் கூறி, மீண்டும் அவ்வூரிலுள்ளாரை நோக்கி ஊரிலுள்ளீர்! இக்கடும்பகல் எமக்கு எங் கண்ணுறக்கத்தைக் கைக்கொண்டு எம்மை நினையாத காதலையுடையவன் என்னிடத்துச் செய்த குணங்கள் தருகையினாலே வந்த என்னுடைய இடையறாத நோயான் வருங் குளிரை வேதுக்கொள்வது போலேயிராநின்றது; இது நுமக்கு என்போலே இருக்கின்றது கூறுமின் என்றாள்; அங்ஙனங் கூறி, இங்ஙனம் வேதுக்கொண்டு என்னைக் காக்குங் கடும்பகல் ஞாயிறே! நீ எல்லாக் கதிர்களையும் பரப்பி இப்பகற் பொழுதோடே போகாது நிற்றலை விரும்பாநின்றேன்; அதற்குக் காரணம் என்னெனில், நீ போகிற் புற்சென்ற மயக்கத்தைத் தரும் மாலைக்காலம் இன்று வந்தென்னைக் கொல்லாமற் போதல் அரிது; அதனோடே யான் உயிர் போகாநிற்குந் தன்மையையுடையேனல்லேனுதலாற் காணென்றாள்; என்று பின்னும் ஞாயிறே! நீ எங்காதலனை விரையக் கொண்டு கடன்மேலே வந்து நாட்காலையிலே இவ்வுலகிலே போதுவாயாயின், யான் என்னோயின் நடுக்கத்தோடே மாலையாகிய பகையையும் பொறுத்து நின்னிடத்து அவன் இனியன், அவனை நீ துனித்திராதேகொள்ளென நெஞ்சினைப் பாதுகாப்பதுஞ் செய்வேன்; அங்ஙனம் பாதுகாத்துப் பின்னர் அவனைக் காண்பேன்கொல்லோ என்று கூறினாள்; எ-று.

உம்மை இசைநிறை. நின்றியல் தொழிற்பெயர்த்திரிசொல்.

ஒள்வளை * * * நெஞ்சு—எ-து, அங்ஙனம் ஞாயிற்றை நோக்கிக் கூறின அளவிலே மாலைக்காலமுந் திங்களும் வந்தன; அவற்றான் வருத்தம் மிக்கு என்னுடைய அமையாத வருத்தமிக்க நெஞ்சு முன்பே ஒள்ளிய வளை கழலும்படி என்னைக் கைவிட்டுப் பின்பு வருத்தஞ்செய்த கள்வனை உள்ளி என்னை ஒளித்துப் போய் அவன்பாற்பட்டது; அது தான்மீண்டுவந்து பெருங்கடல் தன்னிறந் தோன்றாமற் புற்கெனக் கானல் பறவைகள் முதலியனவின்றித் தனிப்பக் கழியின்நெய்தல் இதழ்குவிந்துதோன்ற வந்தமாலை பின்னர் விளங்குகின்ற வெண்ணிலாப் பரக்கும்பொழுதின்

கண்ணே விசும்பையும் நிலத்தையுந் திசைகளையும் அவனைத் தேடித் துழாவாநிற்கும்; இங்ஙனம் என்னை அல்லலுறீஇயினவன், தான் விரும்பாமல் யான் விரும்பப்பட்டான் ஒருவன், அவன் தன்னை விரும்புகின்ற என்னோடே துயிலாது தனியே துயில்கொள்ளுமோ கொள்ளானோ என்று கூறினாள்; எ-று.

வேண்டுபவர் என்றாள் தன்னைப்பிறர்போல.

ஊரவர்க்கெல்லாம் * * * மருந்து—எ-து, அங்ஙனங் கூறி, எழுந்த திங்களை நோக்கி நிலவைக் கான்ற திங்களே! தோள் மெலிந்தகாலத்துச் செருகலாம் என்றாராய்ந்த தொடியுட்பட்சுழலும்படி அளித்தலை என்னிடத்து மாறிப், பின்னர் என்னை அருள் செய்யாதே கைவிட்ட அக்காதலன் செய்த, மனக்கலக்கம் உறுகின்ற காமநோய்க்கு நின்னை ஒழிய அயலிலுள்ளார் எல்லாரும் அதற்கு ஒருமருந்தைத் தெளிவித்துக் கூறார்; ஆதலால் ஊரவர்க்கெல்லாம் பெரியதோரிகழ்ச்சி உண்டாம்படி என் அரிய உயிர் போகாநிற்கும்; இதனை நோக்கித் திங்களாய புத்தேளே! நீ அவன்பாற் சென்று என் குறைமுடிப்பாயாக என்று கூறினாள்; எ-று.

ஆகி, ஆக.

வினைக்கொண்டென் * * * வாறு—எ-து, அங்ஙனங் கூறிய திங்கள் போகாநிற்றலின் அதனைக் கைவிட்டு இன்னும் நம் வருத்தம் உணர்ந்து வினவிய ஊரிலுள்ளாரே! அவனே நம் வருத்தந் தீர்த்தற்குரியானென்று கருதினீர்; நீர் என்னை இகழ்ந்திருக்கினும் என்கேள்வன் சிறிதும் என்னை இகழ்ந்திரான்; அதற்குக் காரணமென்னெனில் மெய்யுற்றுப்புணர்ந்து யான் பரிகாரப்படாததொரு நெறியிலே நின்று நெஞ்சால் நினைப்பிடத்துத் தோன்றுதலினுங்காட்டிற் கண்ணினிடத்தே தோன்றுமவ்வளவு அருள்செய்தற்கு என்னெஞ்சு தான் பரிகாரப்படுகின்றதில்லை; இதனை நும்முடையதோர் தொழிலாக ஏறட்டுக்கொண்டேன்; அது காமநோயை நீக்குதற்கு நல்ல காலமென்று கூறினாள்; எ-று.

கனையிருள் * * * தீ—எ-து, அங்ஙனங் கூறி, அவனைத் தந்து அவன் இந்நோயை நீக்குமளவுஞ் செறிந்த இருளையுடைய மேகமே! நிறைந்த வளை கழலப் பண்ணினவன் செய்த வருத்தத்தாலே எனக்குச் சந்துதொறுஞ் சந்துதொறுங் காமத்தீ மூண்டது; இதன் வெம்மை ஆறும்படி கடலிலே முகந்து என்மேலே சேர இ

டைவிடாமற் பெய்யுந் துளியோடே நிற்றலைச் செய்தல் வேண்டும் என்று கூறினாள்; எ-று.

எனப்பாடி * * * துயர்—எ-து, என்று அங்கு அங்ஙனஞ்சொல்லிக் காமநோயையுடைய நெஞ்சிலே அடித்துக்கொண்டு வருந்தி அழுது, நீங்கள் எல்லீருந் தேடிச் சென்றும் எங்கணவனைக் காணப் பெற்றீலிரோ என்று கூறுகின்றவட்கு உற்ற வருத்தமானது தன் துயிலைவாங்கிக்கொண்டு தன்னை நினையாதவனைத் தன்னிடத்தே வரக்கண்டு அவர்மார்பிடத்தே மாயவன் மார்பிற் திருச்சேர்ந்தாற்போலே அவள்சேர ஞாயிற்றின்முன் இருள் கெடுமாறு போலக் கெட்டது. ஆதலால் இவ்வாயிழை பசப்புற்ற வருத்தத்திற் கடவுள் உதவித் தீர்த்தாற்போல் அவரும் உதவித் தீர்த்தார் என்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க; எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'நோய்வேதுக்கொள்வதுபோலுங் கடும்பகல்' என்னுந்துணையுங் கூறத்தகாதனகூறலின் மடனிறந்தவாறும் 'பனியொடு மாலைப் பகைதாங்கியான்' எனத் தன் வருத்தந் தோன்றாமற் கூறலின் வருத்தமிறந்தவாறுங், கண்ணீர்க் கடலால், என்றதனையும் 'வானுநிலனுந் திசையுந் துழாவும் என்னெஞ்சு' என்றதனையுந் தான்வியவாமையின் மருட்கையிறந்தவாறும் 'எங்கண்பாயல்கொண்டு' என்றும் 'ஒள்வளை ஓட' என்றும் வனப்பு மிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடிவந்த தரவும் ஐஞ்சீரடுக்கிய குறுவெண்பாட்டும் ஓரடியானென்றும் பெற்றுக் கலிவெண்பாவின் வேறுபட்ட பாநிலைவகைக் கொச்சகம். (உஅ)

கசகூ. உரைசெல வுயர்ந்தோங்கிச் சேர்ந்தாரை யொருநிலையே,
வரைநில்லா விழுமமுறீஇ நடுக்குரைத்துத் தெறன்மாலை
யரைசினு மன்பின்றாங் காமம் புரைதீர
வன்னமென் சேக்கையு ளாரா தளித்தவன்
றுன்னிய காலந் துறந்த வணியளாய்
நாணு நிறையு முணர்கல்லா டோண்ஞெகிழ்பு
பேரம ருண்க ணிறைமல்க வந்நீர்தன்

கூரெயி ருடிக் குவிமுலைமேல் வார்தரத்
தேர்வழி நின்று தெருமரு மாயிழை
கூறுப கேளாமோ சென்று ;

எல்லிழாய், எற்றி வரைந்தானை நாணு மறந்தாளென்
றுற்றநீர் போல வினவுதிர் மற்றிது
கேட்டீமி னெல்லீரும் வந்து ;

வறந்தெற மாற்றிய வானமும் போலு
நிறைந்தென்னை மாய்ப்பதோர் வெள்ளமும் போலுஞ்
சிறந்தவன் றூவற நீப்பப் பிறங்கிவந்
தென்மே னிலைஇய நோய்;

நக்கு நலனு மிழந்தா ளிவளென்னுந்
தக்கவிர் போலு மிழந்திலென் மன்னோ
மிக்கவென் னாணு நலனுமென் னுள்ளமு
மக்கா லவனுழை யாங்கே யொழிந்தன
வுக்கா ணிஃதோ வுடம்புயிர்க் கூற்றுகச்
செக்கரம் புள்ளித் திகிரி யலவனோடியா
னக்கது பன்மா ணினைந்து;

கரைகாணு னோயு ளழுந்தா தவனைப்
புரைதவக் கூறிக் கொடுமை நுவல்வீர்
வரைபவ னென்னி னகலா னவனைத்
திரைதரு முந்நீர் வளாக மெல்லா
நிரைகதிர் ஞாயிற்றை நாடென்றேன் யானு
முரைகேட்புழியெல்லாஞ்செல்வேன்புரைதீர்ந்தான்
யாண்டொளிப் பான்கொல்லோ மற்று ;

மருள்கூர் பிணைபோன் மயங்கவெந் நோய்செய்யு
மாலையும் வந்து மயங்கி யெரிநுதி
யாமந் தலைவந்தன் றாயி னதற்கென்னோய்
பாடுவென் பல்லாருட் சென்று ;

யானுற்ற வெவ்வ முரைப்பிற் பலர்த்துயிற்றும்
யாமநீ துஞ்சலை மன்;

எதிர்கொள்ளு ஞாலந் துயிலாரா தாங்கண்
முதிர்பென்மேன் முற்றிய வெந்நோ யுரைப்பிற்
கதிர்கண் மழுங்கி மதியு மதிர்வதுபோ
லோடிச் சுழல்வது மன் ;

பேஎர் மறுகிற் பெருந்துயிற் சான்றீரே
நீரைச் செறுத்து நிறைவுற வோம்புமின்
கார்தலைக் கொண்டு பொழியினுந் தீர்வது
போலாதென் மெய்க்கன லுநோய்;

இருப்பினு நெஞ்சங் கனலுஞ் செலினே
வருத்துறும் யாக்கை வருந்துத லாற்றே
னருப்ப முடைத்தென்னு ளெவ்வம் பொருத்திப்
பொறிசெய் புணைபாவை போல வறிதுயங்கிச்
செல்வேன் விழும முழந்து;

எனவாங்குப் பாட வருளுற்று
வறங்கூர் வானத்து வள்ளுறைக் கலமரும்
புள்ளிற் கதுபொழிந் தாங்கு மற்றுத்தன்
னல்லெழின் மார்பன் முயங்கலி
னல்ல தீர்ந்தன் றாயிழை பண்பே.

இதுவுமது. இதற்கும் முன்னங் கூறிய உரையைக் கூறிக் கொள்க.

(இ-ள்.) உரைசெல * * * நோய்—எ-து, அரசன் தனக்குப் புகழ் உயர்ந்து நடக்கும்படியாகத் தம்மறிவான் மிக்குச் சேர்ந்த அமைச்சரை முன்னர் நடுக்கமான மொழிகளைக் கூறிப் பின்னர் ஒருபடியிலே எல்லையில்லாத இடும்பைகளை உறுவித்துக் கொல்லுதலை இயல்பாகவுடைய கொடுங்கோல் அரசனிலுங்காட்டிற், கணவர்க்கு மகளிர்க்குண்டாகிய காமத்தாலும் அவர்மேல் நிகழும் அன்பில்லையாமாயிருந்தது; எங்ஙனமெனின் அவ்வாயிழை தன்றலைவன் அன்னத் தூவியாற் செய்த மெல்லிதாகிய சேக்கையிலே ஒளித்து இராக்காலத்தே வந்து தன்னிக் கூரிய எயிற்றினீரை நுகர்ந்து குற்றந் தீரத் தலையளிசெய்து நீங்குகையினாலே அத்தலையளிபால் ஆராமற் தன்னை நீங்கின அணிகளையுமுடையளாய்த் தனக்கியல்பாகிய நா

ணையும் நிறையென்னுங் குணத்தையுந் தாங்குதல் வேண்டுமென்று அறியாளாய்த் தன்தோள் மெலிந்து பெரிய அமர்த்த உண்கண் நீர் நிறைகையினுலே அந்நீர் தன் குவிந்த முலைமேலே வடியாநிற்க அவனைத்தேடுவதோர் கூற்றிலே நின்று மனஞ் சுழலாநிற்கும்; இனி யாம் இவளிடத்தே சென்று இவள் கூறுவனவற்றைக் கேளாது இருப்பேமோ? கேட்கக்கடவேமென்று நும்மிலே கூறி என்னிடத்தே வந்து எல்லிழாயென்று என்னை விளித்துப் பிரியேன் என்று பிரிதலை வரைந்தவனைப் பிரியானெனத் துணிந்து அவன் பிரிதலின் நாளையும் மறந்தாள் என்று கூறி எனக்கு அன்புற்றீர்போல நீ என்னுற்றனை என்று வினவுகின்றவர்களே! பின்னை இவ்வருத்தத்தை எல்லீருங் கேட்பீராக என்று கூறுகின்றவள் எனக்குச் சிறந்தவன் என்வலியறும்படி என்னைக் கைவிடுகையினுலே பெருகிவந் என் மேல் நிலைபெற்ற இக் காமநோய் கோடை உலகத்தைச் சுடும்படியாகப் பெய்யாமற் போன மேகம் வருத்துமாற்றையும்போலும், பெருகி என்னுயிரைப் போக்குவதோர் நீர் வெள்ளம் வருத்துமாற்றையும் போலுமென்று கூறினுள்; எ - று.

நக்கு * * * ணினைந்து—எ-து, அங்ஙனங் கூறி அவன் அன்பிலனுதலை அறியாதே அவனேடே புணர்ந்து தன் அழகினையும் நாணினையும் உள்ளத்தினையும் இவள் இழந்தாள் என்னுந தகுதிப்பாட்டினையுடையீர்போலே இருந்தீர்; அவன் அன்பிலனல்லன், அஃதென்னையெனில், அவன் இந்த உடம்பினின்று போகின்ற உயிர்க்கு உறுதியாம்படி, சிவந்த நிறத்தினையும் புள்ளிகளையுமுடைய தேருருள் போன்ற ஆண்பால் அலவன் பெண்பால் அலவனேடே நிகழ்த்துகின்ற பல மாட்சிமைகளையும் யான் நின்னிடத்தே நிகழ்த்தும்படி நின்னெஞ்சாலே நினைந்து அவை நிகழ்த்துகின்றவற்றையும் அவ்விடத்தே பாராய் என்றான்; அதனுல் அவன் அன்புடைமை அறிந்தே யான் அவனேடு நக்கது; அக்காலத்தே என்னுணும் என்னலமும் என்னுள்ளமும் புணர்ச்சியான் மிகுதியைப் பெற்றன; அவை அவன் நீங்கிய அப்பொழுதே அவனிடத்தே நின்றுவிட்டன; ஆதலாற்றான் நோயும் மிகவுறும், அவற்றை இகந்த தன்மையுடையேனல்லேன் என்று கூறினுள்; எ-று.

களைகாணு * * * மற்று—எ-து, அங்ஙனங் கூறி என்னைப்போல ஓர் எல்லைகாணுத காமநோயிலே மூழ்காதவனை உயர்ச்சி செடும்படி அவன் பிரிந்து நாண்முதலியவற்றைத் தாராத கொடு

மையை நாடி அவன் வந்த காலத்தன்றே நீ இவை பெறுவது என்று கூறகின்றவர்களே! யான் நினைத்த கதிர்களையுடைய ஞாயிற்றை நோக்கித் திரையைத் தருகின்ற கடல்சூழ்ந்த உலகமெல்லாந் தேடி அவனைக் கொண்டு வா என்றுஞ் சொல்லிவிட்டேன், அதுவேயன்றி யானும் அவன் இவ்விடத்தான் என்னும் வார்த்தை கேட்கலாம் இடமெல்லாஞ் சென்று தேடுவேன், இங்ஙனந் தேடுமளவின் உயர்ச்சி தீர்ந்தவன் பின்னை எவ்விடத்தே ஒளித்திருப்பான்? அவனை அகப்படுத்திக் கொண்டு அந்நாண் முதலியன வாங்கியே விடுவேன், என்னை நெஞ்சாலே வளைந்திருக்கின்றவன் என்னிடத்தினின்று நீங்கான் என்றுங் கூறினாள்; எ-று.

கொல்லும் ஒவும் அசை.

மருள்கூர் * * * மன்—எ-து, அங்ஙனங் கூறிய அளவிலே மாலையும் இரவும் வருகின்றதனை உணர்ந்து, மயக்கமிக்க மான்பிணைபோல யான் மயங்கும்படி வெவ்விய காமநோயை உண்டாக்கும் மாலைக் காலமும் வந்து, அதனோடே மயங்கி எரியின் கொழுந்துபோற் கொடிய இராக்காலமும் அவ்விடத்தே வந்ததாயின், அதனிடத்தே யான் பட்ட வருத்தத்தை என்னைப்போல வருந்தும் பலமகளிருக்குள்ளே சென்று கூறுவேன்; நினக்கு முறைப்பட்டுக் கூறிற், பலரையுந் துயிலப்பண்ணும் இராக்காலமே! நீ தானும் மிகவும் வருந்தித் துயில்கொள்ளாயாதலால் என்குறையை நினக்குச் சொல்லேனென்றேனென்றுங் கொடுமை நுகர்கின்றவர்களை நோக்கிக் கூறினாள்; எ - று.

எதிர்கொள்ளு * * * மன்—எ-து, அங்ஙனங் கூறியபின்னர்த் திங்கள் வருத்தும் என்றுணர்ந்து ஞாலத்திலுள்ளாரால் அவ்விசும்பிடத்தே பிறையானபருவத்தே எதிர்கொள்ளப்பட்டுப் பின்பு முதிர்ந்து யான் துயிலாராமல் என்மேல் வந்து வளைத்த மதியும் யானுற்ற வெவ்விய நோயை முறைப்பட்டுக் கூறிற் தன்கதிர்கள் ஒளிமழுங்கி நடுங்குவதுபோலே ஓடி மிகவுஞ் சுழன்று திரியும்; ஆதலான் நுமக்கன்றி அதற்கும் என்குறையைக் கூறேனென்றுங் கூறினாள்; எ-று.

பேரூர் * * * நோய்—எ-து, அங்ஙனங் கூறிப் பெரிய ஊரிற் தெருவிலே யான் உறுகின்ற வருத்தத்திற்குப் பரிகாரஞ் செய்யாமற் பெரிய உறக்கத்தைக் கொள்ளக் கருதிய சான்றீரோ! என் மெய்க்கண் நின்று எரியுங் காமநோய் மழை எல்லாம் என்னி

டத்தே நின்று பெய்யினும் ஆறுவதுபோல இருக்கின்றதில்லை; இது தணியும்படி உலகத்துள்ள நீரை என்னிடத்தே நிறையும்படி அடைத்துவைத்து என்னுயிரைப் பாதுகாப்பீராக என்றுங் கூறினாள்; எ - று.

இருப்பினு * * * முழந்து—எ-து, அங்ஙனங் கூறிப் பின்னர்த் தன் நோயின் செய்தி கூறுகின்றவள் அவன் என்னெஞ்சிடத்தே விடாமலிருப்பினும் அதனால் அமையாது தான் காந்தும்; நிற்குமவன் ஒருகாற்போகிற் தான் அதற்கு வருத்தமுறாநிற்கும்; அங்ஙனம் என்னெஞ்சு வருத்துதலை ஆற்றேனாய்ப் பலவுறுப்புக்களையுங் கூட்டி இயங்குவதோர் பொறியாகச் செய்த புணர்ந்த பாவைபோல இம்மையிலே அழுந்தி மயங்கிய யாக்கையோடே சிறிது செல்வேன்; அதனாற் தணியாத என்னிடத்து உண்டாகிய எவ்வமானது பிறரால் அழித்தற்கு அரிய அரணின் தன்மையையுடைத்து; இவ்வரணை அழிக்கலாவதோர் உபாயம் நாடுவீராக என்றுங் கூறினாள்; எ-று.

எனவாங்குப் * * * பண்பே—எ-து, என்று அவ்விடத்தேசொல்லாநிற்கக், கோடைக்காலமிக்க வானத்திடத்தே மேகத்தினது வளவிய துளியைப் பெறுதற்குச் சுழன்றுதிரியும் வானம்பாடிக்கு அம்மேகம் பெய்தாற்போலத் தன்னுடைய நல்ல அழகையுடைய மார்பன் அருளுதலுற்று வந்து முயங்குகையினாலே ஆயிழையுடைய அல்லலாகியகுணம் போயிற்றென்று கண்டார் வியந்து தம்மிற் கொண்டுகூறிற்றாக உரைக்க; எ - று.

இது கண்டார்க்கு அவராக்கங் கண்டு மருட்கை பிறந்தது.

'என்மேனிலைஇய நோய்' என்னுந் துணையுங் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறும் 'அழிந்திலென் மன்னோ, என வருத்தந் தோன்றாமற் கூறலின் வருத்தமிறந்தவாறும் 'ஞாயிற்றை நாடென்றேன்' என்றதனைத் தான்வியவாமையின் மருட்கையிறந்தவாறும் என்னுணும் நலனுமென்றும் மான்பிணைபோன்ற யான் இப்பொழுது 'மருள்கூர் பிணைபோன் மயங்க' என்றும் வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது * ஐஞ்சீரடிவந்ததரவும் ஐஞ்சீரடுக்கிய இடைநிலைப் பாட்டும் எனவாங்குப்பாடவருளுற்று என முச்சீரான் வந்த சொற்சீரடியும் வந்து ஆசிரியச்சுரிதகத்தால் இற்ற கலிவெண்பாட்டு. (உகூ)

* விழும முறீஇ என் இருசீராக்கினர் போலும்.

கசஎ. ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கிய
தேறுக ணறவுண்டார் மயக்கம்போற் காமம்
வேற்றுருபாற் றனது கொல்லோ சீறடிச்
சிலம்பார்ப்ப வியலியா ளிவண்மன்னோ வினிமன்னும்
புலம்பூரப் புல்லென்ற வனப்பினுள் விலங்காக
வேனுதி யுறநோக்கி வெயிலுற வுருகுந்தன்
றேனல முண்டானைக் கெடுத்தாள்போற் றெருவிற்பட்
டேண்யாது மிலளாகி யுயிரினுஞ் சிறந்ததன்
னுண்யாது மிலளாகி நகுதலு நகூஉ மாங்கே
பெண்மையு மிலளாகி யழுதலு மழூஉந் தோழியோ
ரொண்ணுத லுற்ற துழைச்சென்று கேளாமோ;

இவர்யாவ ரேமுற்றார் கண்டீரே யோஒ
வமைபுந் தவறிலீர் மற்கொலோ நகையின்
மிக்கதன் காமமு மொன்றென்ப வம்மா
புதுநலம் பூவாடி யற்றுத்தாம் வீழ்வார்
மதிமருள நீத்தக் கடை;

என்னையே மூசிக், கதுமென நோக்கன்மின் வந்து;

கலைஇய கண்புரு வந்தோ னுசுபுச்
சிலமழைபோ றாழ்ந்திருண்ட கூந்த லவற்றை
விலைவள மாற வறியா தொருவன்
வலையகப் பட்டதென் னெஞ்சு;

வாழிய கேளீர்;

பலவுஞ்சூ டேற்றித் தெளித்தவ னென்னை
முலையிடை வாங்கி முயங்கின னீத்த
கொலைவனைக் காணேன்கொல் யான்;

காணினு மென்னை யறிதிர் கதிர்பற்றி
யாங்கெதிர் நோக்குவன் ஞாயிறே யெங்கேள்வன்
யாங்குள னாயினுங் காட்டீமோ காட்டாயேல்
வானத் தெவன்செய்தி நீ;

ஆரிரு ணீக்கும் விசும்பின் மதிபோல
நீருள்ளுந் தோன்றுதி ஞாயிறே யவ்வழித்
தேனை தினைப்பட லோம்பு;

நல்கா வொருவனை நாடியான் கொள்வனைப்
பல்கதிர் சாம்பிப் பகலொழியப் பட்டீமோ
செல்கதிர் ஞாயிறே நீ;

உறூஅ வின்றரி முன்கைக் கொட்கும்
பறூஅப் பருந்தின்கட் பற்றிப் புணர்ந்தான்
கறூஅ வெருமைய காடிறந்தான் கொல்லோ
உறூஅத் தகைசெய்திவ் வூருள்ளான் கொல்லோ
செறூஅ துளனுயிற் கொள்வே னவனைப்
பெறூஅதியா னேவே னவனையெற் காட்டிச்
சுறூஅக் கொடியான் கொடுமையை நீயு
முறூஅ வனைசநின் னேலைக்கட் கொண்டீ
மறூஅ வனைசநின் மாலையும் வந்தன்
றறூஅ தணிகவிந் நோய்;

தன்னெஞ் சொருவற் கினைவித்தல் யாவர்க்கு
மன்னவோ காமநின் னம்பு;

கையாறு செய்தானைக் காணிற் கலுழ்கண்ணுற்
பையென நோக்குவென் றூழ்தானை பற்றுவெ
னையங்கொண் டென்னை யறியான் விடுவானே
லொய்யெனப் பூச விடுவென்மன் யானவனை
மெய்யாகக் கள்வனோ வென்று;

வினவன்மி னூரீ ரொன்னையெஞ் ஞான்று
மடாஅ நறவுண்டார் போல மருள
விடாஅ துயிரொடு கூடிற்றென் னுண்கண்
படாஅமை செய்தான் றொடர்பு;

கனவினற் காணிய கண்படா வாயி
னனவினல் ஞாயிறே காட்டாய்நீ யாயிற்

பனியீன்ற மாலூர்ந் தவண்வரக் காமன்
கணையிரப்பேன் கால்புல்லிக் கொண்டு;

எனவாங்கு,

கண்ணிணைபு கலுழ்பேங்கின
டோணெகிழ்பு வளைநெகிழ்ந்தன
ளன்னையோ வெல்லீருங் காண்மின் மடவரன்
மென்னடைப் பேடை துணைதரத் தற்சேர்ந்த
வன்னவான் சேவற் புணர்ச்சிபோ லொண்ணுதல்
காதலன் மன்ற வவனைவ ரக்கண்டாங்
காழ்துயர மெல்லா மறந்தனள் பேதை
நகையொழிந்து நாணுமெய் நிற்ப விறைஞ்சித்
தகையாகந் தையலாள் சேர்ந்தா ணகையக
நல்லெழின் மார்ப னகத்து.

இதுவும் அது. இதற்கும் முன்னுரையைக் கூறிக்கொள்க.

(இ-ள்.) ஆறல்ல * * * வந்து—எ-து, தோழீ ! அற நெறியல்லாத தீமொழிகளைத் தம்மிடத்தே தோற்றுவித்து அற மாகிய தொழில்களைத் தம்மிடத்துத் தோன்றுமற் கலக்கவேண்டித் தெளியுங் கள்ளையும் நறவையும் உண்டவர்களுடைய உலகியல் கெட்ட மயக்கம்போல நன்மக்கள் ஆற்றுகின்ற காமம் உலகியல் தப்பி வேறோர் பகுதியதாய் விட்டதோ ? அதற்குக் காரணமென் னெனில் இப்பொழுது மிகவுந் தன் கணவனில்லாத தனிமை பாக்கையினாலே பொலிவழிந்த அழகினையுடையளாகிய இவள் வேனு தி செய்யுங் கொடுமையையுறும்படி எதிரோநோக்காதே விலங்கு தல் உண்டாக நோக்குகையினாலே நெஞ்சுருகுங் கணவனைக் கெ டுத்தாள்போலே தெருவிலே புறப்பட்டு வெயில் தன்மேலே உறும் படி தன் சிறிய அடியிற் சிலம்பு ஒலிப்ப எங்குந் திரிதரும் நிலை மையளாயினள்; அதுவேயன்றி ஊண்சிறிதுமிலளாய் மேனி மெ லிந்து உயிரினுஞ் சிறந்த நாணுஞ் சிறிதுமிலளாய் நகுதலையுஞ் செய்யாநிற்கும்; அப்பொழுதே பெண்டன்மையுமிலளாய் அழுதலையுஞ் செய்யா நிற்கும்; இதனை நெஞ்சாலே ஓர்ந்துபார்; அங்ஙனம் ஓர்ந்து பார்த்து இவளுற்ற வருத்தத்தை யாம் இவ்விடத்தே சென்று கேளாமோ? கேட்போம் என்று கூறி மொய்த்துக் கடுகவந்து என்

னைப் பாராதே கொள்ளுங்கோள்; நுமக்கு முன்னே வந்து என்னைச் சூழ்ந்துநின்ற இவளைக் கண்டீரோ; ஓஒ! இவரோ சூழ்ந்துநிற்க அமையும்; நீர்தாம் இதற்கு முன்பு மிகவும் யானுற்ற தவறுடையீரல்லீர் போலேயிருந்தது நுமக்கும் ஒருகாலத்தே உண்டாம்; இனி யான் கூறுவதனைக் கேட்பீராக; தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறமும் ஒருகாமம் என்று நூல்களிலே கூறுவர்கள்; ஆதலால் அதனையுற்றுநின்ற என்னை இகழாதே கொள்ளுங்கோள்; ஈணடேமுற்றுரியார் யாரீதேமுற்றதென்று தாம் விரும்பப்பட்ட ஆடவர் தம்மதி மயங்கும்படி கைவிட்டவிடத்து அவர்பெற்ற நலங் கெடுகின்ற தன்மை பூ வண்டு நுகர்ந்து தன் புதிய நலஞ் சிறிது கெட்ட நிலைமைத்து, காணுங்கோள் என்று கூறினள்; எ - று.

நிறவு தேனுற்சமைத்தமைத்தது; ஆற்றுதல் நடத்துதல்.

நோக்கி என்ற எச்சங் காரணகாரியப்பொருட்டு. தோள் நலத்தைப் புணர்ந்தவன் ஒருபெயர் மாத்திரையாய் நின்றது. இவளை என்னும் இரண்டாவது *"ஒழியாது வருதலும்" என்பதனான் ஒழிந்து நின்றது. ஓஒ இரக்கக்குறிப்பு.

கலைஇய * * * நீ—எ - து, அங்ஙனங் கூறி, அவனுடே கலந்த கண் புருவந் தோள் நுசுப்புச் சிலமழைபோலே நீண்டிருண்ட கூந்தல் என்கின்றவற்றின் அழகைப்பெறும் விலையின் வளப்பத்தை அறிந்து கொடுத்தவனிடத்து உள்ளவற்றைக் கொள்ளுதல் அறியாதே ஒருவன் கூறிய பொய்யாகிய வலையிலே என் நெஞ்சு அகப்பட்டுவிட்டது; என்றுகூறிப், பின்னுஞ் சேளீர், வாழ்வீராக! என அவர்க்கு முகமன்கூறி அவன் இயற்கைப் புணர்ச்சியிலும் பல சூளுறவாலும் என்மனத்தைத் தேற்றிப் பின்னுந் தெளிவித்தவன் என்னை அணைத்து முலையிடத்தே முயங்கினன்; அங்ஙனம் முயங்கிப் பின்னர்த் தெளிவுபொய்யாம்படி கைவிட்ட கொலைத்தொழிலை வல்லவனை யான் தேடிக் காணேனோ? அவன் என்னைக் கண்டானாயினும் அவனால் யான் பெறும் பொலிவை அறியமாட்டீர் என அவரை நோக்கிக் கூறி, அவர் மறுமொழி கொடாமையின், ஞாயிற்றைநோக்கி ஞாயிறே! போக்கற்கு அரிய இருளைப்போக்கும் விசும்பிடத்து மதி தோன்றுமாறுபோல நீயும் நீருள்ளேயுந் தோன்றுவை; அங்ஙனந் தோன்றினவிடத்து ஆண்டு வாழுந் தேளை

* தொல்காப்பியம், எழுத்ததிகாரம், தொகைமரபு, கஙி-ம் சூத்.

இளை என்று இன்னப்படுதலைப் பரிகரித்துக்கொள் என அதற்கு முகமன்கூறி, ஞாயிற்றை வானிடத்தே இருந்து எவ்விடமுங் காண்கின்ற நீ எனக்கு என்ன காரியஞ் செய்வை? ஒன்றுஞ் செய்யாயாயினும் இப்பொழுது எங்கேள்வன் யாதோரிடத்தே இருந்தானாயினும் எனக்குக் கொண்டுவந்து காட்டுவாய்; நீ காட்டாயாயின், யான் நின் கதிர்களைப் பிடித்துக்கொண்டு அவ்விசும்பிலே ஏறி அவனைப் பார்ப்பேன்; அதற்கு நீ செய்யுங்காரியம் எனக்கு அருளாத ஒப்பிலாதானை நாடி யான் பிடித்துக் கொள்ளுமளவும் ஞாயிறே, நீ குவிந்துசெல்லும் பலகதிர் பகற்காலத்தோடே இவ்விடத்தே நிற்கச் சிலகதிரோடே படுவாயாக என்றுகூறினாள்; எ - று.

அறிதிர் என்றது அறியமாட்டீர் என்ற இகழ்ச்சிக்குறிப்பு.

௨௫௮ * * * னம்பு—எ - து, உலகத்தார் வேண்டிக்கொண்ட காரியங்களை மறாத ஞாயிறே! என் கையினின்று நீங்குதலின்றாய் ஐதாகிய மயிரினையுடைய என் முன்கையிலேகிடந்து சுழலும் வளையிடத்தைப் பிடித்துத் தெளிவித்துக் கூடினவன் பாற்பயன்கோடற்குச் சிலகாட்டிக் கறக்கப்படாத காட்டெருமைகளையுடையவாகிய காட்டைக் கடந்துபோயினானோ? அன்றியே என்னோடு அன்புறாததோர் தகைமையை எனக்குச் செய்து இவ்வூரிடத்தே இருந்தானோ? இரண்டும் அறிகின்றிலேன்; அவனைக் கூடப்பெறாதே நோவாநின்றேன்; அதற்குமேலே நீ உண்டாக்கும் மாலைக்காலமும் வந்தது; இனி இந்நோய் என்னிடத்தினின்று நீங்காது; அவன் இவ்விடத்துளனாயின் அவனை எனக்குக்காட்டுவாய்; காட்டினால் அவனைக் கோபியாதே மனத்தாலே கைக்கொள்வேன் என்றாள்; அது காட்டாமற்படுதலின் அதனைக்கைவிட்டு நடுவுநிலைமை செய்தலன்றி ஒருபாலுறாத கூற்றமே! சுறாக்கொடியையுடைய இக்காமன் செய்கின்ற கொடுமைகளை நீயும் நின் ஓலையிடத்தே எழுதிவைத்துக்கொண்டு தண்டிப்பை; அவன் நமக்கு வழிபடுதெய்வமாதலின் அவனைத் தண்டியாமற் றணிவாயாக என்று கூறினாள்; அங்ஙனங் கூறிக், காமனை எதிர்பெய்துகொண்டு, காமா! நின்னுடைய அம்புகள் தனக்கு உரியவாகிய நெஞ்சினைத் தன்மேல் அன்பிலாதான் ஒருவன் பொருட்டு வருத்துவித்தல் சிலர்க்கேயன்றி எல்லார்க்குமாந் தன்மையையுடையவோ அல்லவோ என்றுங் கூறினாள்; எ - று.

ஓகாரம் எதிர்மறை. பறாப்பருந்து ஈண்டுக் குருகு என்பதனை உணர்த்திநின்றது. மறுவனாசன் வரோதயன் என்னும்பொருட்டு.

தையாறு * * * வென்று—எ - து, அங்ஙனங் கூறி, இனி வருகின்ற இராக்காலத்து நின் அம்புகள் இறந்துபடுவியாமல் யான் உயிர்கொண்டு இருக்கும்படி அருளுமாயின், அவசத்தாற் சிறிது துயிலேற்றுச் சலங்கினகண்ணாலே எனக்குக் கைமாற்றைச் செய்தவனைக் கனவிலே கண்டேனாயின், அக்கண்ணைக் கடுக விழித்துப் பாராதே மெத்தெனப் பார்ப்பேன்; பார்த்தபின் தப்பிப்போகாதபடி தாழ்ந்து கிடந்த துகிலைப் பிடித்துக்கொள்வேன்; பிடித்துக்கொண்டு என்மேனி வேறுபாட்டினைக் கண்டு இவள் நந்தலைவியோ அல்லளோ என்று ஐயத்தை நெஞ்சிடத்தே கொண்டு என்னை அறியாதே கைவிடுவனாயின் என் நாண்முதலிய குணங்களையும் மேனிநலத்தினையும் மெய்யாகக் கைக்கொண்டு போன கள்வனென்று எல்லாருங் கேட்கும்படி விளிவாய்க் கூப்பிடுவேன் என்று காமனை நோக்கிக் கூறினாள்; எ-று.

ஓ அசை.

வினவன்மி * * * ரொடர்பு—எ-து, அங்ஙனங் கூறி, ஊரிலுள்ளீர்! எங்களைநோக்கிக் கூறுகின்ற நீ ஞாயிற்றையுங் காமனையும் நோக்கிக் கூறியதற்கு அவை என்செய்யுமென்று என்னைக் கேளன்மின்; எந்நாளும் என்கண் துயிலாமையைச் செய்தவன் தந்த நட்பின் உண்டான நோய் மடாநறவையுண்டாரைப்போல் மயங்கும்படி விடாதே உயிரைப்பொருந்துந்தன்மையோடே கூடிவிட்டது; இனி இவ்வுயிரைக்காக்கும்வழி உண்டாயிற் காப்பீராக என்றுங் கூறினாள்; எ-று.

கனவினற் * * * கொண்டு—எ - து, அதற்கு அவர் மறுமொழிகொடாதுநிற்றலின், முற்கூறிய ஞாயிற்றையுங் காமனையுமே பின்னும் நினைந்து, வருகின்ற இராக்காலத்துக் கனவின்கண்ணே அவனைக் கண்டு ஆற்றுதற்குக் காமன்கணை செய்கின்ற கொடுமையாலே கண் துயிலாவாயின், ஞாயிறே! எப்பொருளையுங் காட்டுகின்ற நீ நனவின்கண் வந்தாகிலும் அவனைக் காட்டாயாயில், இவ்வாறே வருத்தமுற்றுப் பனையீன்ற குதிரையையேறி அவன் என்பால் தானே வரும்படியாக அக்காமன்காலைக் கட்டிக்கொண்டு நின் அம்புகளை எனக்குத் தர வேண்டும் என்று காமனை இன்னும் இரந்துகொள்வேன் என்றுங் கூறினாள்; எ - று.

எனவாங்கு—எ-து, எனச்சொல்லி; எ-று. ஆங்கு, அசை.

கண்ணிணைபு * * * னகத்து—எ-து, இஃதொண்ணுதல் அன்னையோ! ! என்று இனைந்து கண்கலங்கி அழுதாள், தோண்மே

விந்து வளைநெகிழ்ந்தாள்; இப்பேதை, மடப்பம் வருதலினையும் மெல்லியநடையினையுமுடைய அன்னப்பெடை விரைந்து செல்ல, அதனைச் சேர்ந்த அன்னச் சேவலின் கூட்டம்போலே, பின் தன் காதலன்வர ஆங்கே அவனைக்கண்டுதான் அழுந்தின துயரமெல்லாம் அறுதியாக மறந்தாள்; மறந்து இத்தையலாள் பின்னர் ஊரிலுள்ளார் நகைத்த நகையையும் போக்கிப் போன நாணமும் தன் மெய்யிடத்தே வந்து நிற்கையாலே தலையிறைஞ்சித் தன் மெய்யிடத்தே அழகுண்டாக மனத்திடத்தே நகையுண்டாக அந்நல்லெழில் மார்பனிடத்தே சேர்ந்தாள்; இம்மகிழ்ச்சியையும் எல்லீருங்காண்பீராக எனக் கண்டார் வியந்து தம்மிற் கொண்டு கூறிற்றாக உரைக்க; எ - று.

இது கண்டார்க்கு அவராச்சங் கண்டு மருட்கை பிறந்தது.

'கொலைவனைக் காணேன்கொல் யான்', என்னுந்துணையுங் கூறத் தகாதன கூறலின் மடனிறந்தவாறுஞ் 'செறுதுளனாநிற் கொள்வேன்' என்றதனாற் தன் வருத்தந் தோன்றுமற் கூறலின் வருத்தமிறந்தவாறுங் 'காமன்கணையிரப்பேன்' என்றதனால் அவனை வருத்துவேன் என்று அவனை வியவாமையின் மருட்கையிறந்தவாறுங் 'கலைஇய கண்புருவம்' என்னும் உறுப்பான் வனப்புமிகுதி கூறலின் மிகுதியிறந்தவாறுங் காண்க.

இஃது ஐஞ்சீரடி வந்த தரவும் நெடுவெண்பாட்டும் ஐஞ்சீரான் வந்த ஓரடியானென்றும் நெடுவெண்பாட்டும் இருசீரானென்றுங் குறுவெண்பாட்டும் நெடுவெண்பாட்டும் இரண்டுகுறுவெண் பாட்டும் நெடுவெண்பாட்டுங் குறுவெண்பாட்டும் மூன்றுநெடுவெண்பாட்டுந் தனிச்சொல்லும் வஞ்சியடியிரண்டு முன்னர்விரவி யாப்பின்வேறுபட்ட கொச்சகவெண்பாவும் பெற்ற கொச்சகக்கலி. (௩௦)

சசஅ தொல்லியன் ஞாலத்துத் தொழிலாற்றி ஞாயிறு
வல்லவன் கூறிய வினைதலை வைத்தான்போற்
கல்லடைபு கதிர்நன்றிக் கண்பயங் கெடப்பெயர
வல்லது கெடுப்பவ னருள்கொண்ட முகம்போல
மல்லனீர்த் திரையூர்பு மாவிருண் மதிசீப்ப
வில்லவ ரொழுக்கம்போ லிருங்கழி மலர்கூம்பச்
செல்லுமென் னுயிர்ப்புறத் திறுத்தந்த மருண்மாலை;

மாலைநீ,

இன்புற்றார்க் கிறைச்சியா யிமைவதோ செய்தாய்ம
னன்புற்ற ரழநீத்த வல்லலுட் கலங்கிய
துன்புற்றார்த் துயர்செய்த றக்கதோ நினக்கு;

மாலைநீ,

கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்ம
னலங்கொண்டு நல்காதார் நனிநீத்த புலப்பின்க
ணலந்தவர்க் கணங்காத றக்கதோ நினக்கு;

மாலைநீ,

எங்கேள்வற் றருதலுந் தருகல்லாய் துணையல்லை
பிரிந்தவர்க்கு நோயாகிப் புணர்ந்தவர்க்குப்புணையாகித்
திருந்தாத செயினல்லா வில்லையோ நினக்கு;

எனவாங்கு,

ஆயிழை மடவர லவல மகலப்
பாயிருட் பரப்பினைப் பகல்களைந் ததுபோலப்
போயவர் மண்வெளவி வந்தனர்
சேயுறை காதலர் செய்வினை முடித்தே.

இது *"வெளிப்படை தானே கற்பினொடொப்பினு - ஞாங்கர்க் கிளந்த மூன்றுபொரு ளாக - வரையாது பிரிதல் கிழவோற் கில்லை" என்பதனான் அரசன் மண்கோடற்கு ஏவுதலின் வாளாணெதிரும் பிரிவின்கட் தலைவன் வரைவிடைவைத்து வேந்தற்குற்றுழிப் பிரிந்துழி அவள் வருத்தமிகுதி கண்டார் கூறியது.

(இ-ள்.) தொல்லியன் * * * மருண்மாலை—எ-து, ஞாயிறு தன் கதிர்களாலே ஞாலத்திடத்துப் பழைய இயல்பினையுடைத்தாய்த் தான்செய்துபோதும் பொருள்களைவிளக்குந்தொழிலிலே ஊன்றி நடத்திப், பின்னர்க் காமன் தனக்கு யான் பிரிந்திருந்தாரை வருத்துதற்கு நீ போவாயாக என்று கூறிய காரியத்தினைத் தன்றலையிலே ஏறட்டுக்கொண்டுபோவான்போலே அத்தகிரியைச் சேர்ந்து, பல்லுயிருந் தங்கண்களாற் கொள்ளும் பயன்கெடும்படி போகத், தீவினை

* தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், க0-ம் சூத்.

யைப் போக்குகின்றவனுடைய அருளைக் கொண்ட முகம்போலத் திங்கள் வளப்பத்தையுடைய கடலிற் றிரைமேலேதோன்றி அம்மயக்கத்தையுடைய இருளைப் போக்கப், பொருளில்லாதார் நிகழ்த்தும் இல்லறம்போலக் கரிய கழியின் மலர்கள் ஒழுகக் குவியத், தேய்கின்ற என்னுயிரின் புறத்தே வந்துவிட்ட மாலாய்! நீ அறிவு மயங்குதலையுடைய மாலையாய் இருந்தாய் என்றுங் கூறினாள்; எ - று.

மாலைநீ * * * நினக்கு—எ-து, அங்ஙனங் கூறி, அவள் அதற்குக் காரணமென்னெனிற், கூடி இன்பமுற்றவர்களுக்கு நேயமாய் அவர்கள் தம்மிற் கூடும் நிலைமையையோ மிகவும் முன்புசெய்து போந்தாய்; இப்பொழுது ஆடவர் தம்மேல் அன்புற்றமகளிர் அழும்படி தம்மைக் கைவிட்டதனால் உண்டான அல்லலிடத்தே நின்று கலங்கிய துன்பமுற்ற மகளிரை வருத்தஞ் செய்தல் நினக்குத் தக்கதன்றே என்றாள்; எ - று.

மேல் வருகின்றவற்றிற்கும் இங்ஙனங் கூட்டி உரைக்க.

மாலைநீ * * * நினக்கு—எ-து, மகளிரைக் கூடிய கணவருடைய மனவேட்கையை அம்மகளிர்க்குத் துணையாய் நின்று அவர் மனத்தினின்று நீங்காது கனன்றெரியுந்தன்மையையோ முன்பு மிகவுஞ் செய்தாய்; இப்பொழுது அம்மகளிர் நலத்தைக் கைக்கொண்டு பின்பு அவர்க்குக் கொடாத ஆடவராலே தந்நலம் போன தனிமையிடத்தே நின்று அலந்த மகளிர்க்குத் துணையாகாதே வருத்தமாகல் நினக்குத் தக்கதன்றே என்றாள்; எ - று.

மாலைநீ * * * நினக்கு—எ-து, எம்முடைய கேள்வரை முன்புபோல மனத்தைக் கனலப்பண்ணி ஈண்டுத் தருதலுஞ் செய்திலை; ஆதலால் நீ எமக்குத் துணையல்லை; நீதான் பிரிந்திருந்த மகளிர்க்குப் பிரிவாற் றோன்றிய நோயின்வடிவு நீதானேயாய்ச், கூடியவர்களுக்கு அவர் பெறும் இன்பத்திற்கோர் தெப்பமாய், இங்ஙனம் நன்மையாகாத காரியங்களைச் செய்தொழுகுமதல்லது நினக்கு நன்மையாகச் செய்யுங் காரியங்கள் இல்லையோ என்றாள்; எ-று.

இது கலக்கம் என்னும் மெய்ப்பாடு.

எனவாங்கு—எ-து, என்று சொல்லி; எ - று. ஆங்கு அசை.

ஆயிழை * * * முடித்தே—எ-து, திருந்தின இழையினையுடைய மடப்பம் வருதலையுடையவள் வருந்தியவிடத்தே தூரிய நிலத்

தே உறைகின்ற காதலர் பகைவரிடத்துச் செய்யும் போர்த்தொழில் களைப் போய் முடித்து அவர்மண்ணைக் கைக்கொண்டு பரந்த இருட் பரப்பினை ஞாயிறு போக்கினாற்போல அவள் வருத்தம் நீங்கவந்தார்; இஃது என்னவியப்போ எனக் கண்டார்கூறியதாக உரைக்க. எ-று.

இது கண்டார்க்கு அவர் ஆக்கங்கண்டு மருட்கைபிறந்தது.

"தானே சேறலுந் தன்னொடு சிவணிய - வேனோர் சேறலும் வேந்தன் மேற்றே" என்பதனான் முடியுடைவேந்தன் தன் பகைமேற் சென்று மண்கோடல் உரித்து என்றதனானும், வாளாணெதிரும்பிரிவு முடியுடை வேந்தர்க்குச் சிறுபான்மை என்றும் அவர் ஏவப்பிரியும் அரசர்க்குப் பெரும்பான்மை என்றுங் கூறலானும், "வெளிப்படை தானே கற்பினொ டொப்பினு - ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக-வரையாது பிரிதல் கிழவோற் கில்லை" என்றதனான் வரைவிடைவைத்து மண்கோடற்குப் பிரிதலில்லை என்று அதனை விலக்கினமையானும், கண்டார் களவிற்கூறுதலின்மையானும், இப்பாட்டும் அவள் மிகவும் வருத்தம் எய்தின நிலைமையைக்கண்டு வருந்தினோர் அவன் வந்துகூட வருத்தம் நீங்கினமை கண்டு வியந்து கூறிய பெருந்திணையாம்.

இதுவும் இடையிடை சொற்சீரடிவந்து எண்ணிடையிட்டுச் சின்னங்குன்றிய கொச்சகம். (நக)

கசகூ. நிரைதிமில் களிறாகத் திரையொலி பறையாகக்
கரைசேர் புள்ளினந் தஞ்சிறை படையாக
வரைசுகால் கிளர்ந்தன்ன வுரவுநீர்ச் சேர்ப்பகேள்;

கற்பித்தார்நெஞ்சழுங்கப் பகர்ந்துண்ணான்விச்சைக்கட்
டப்பித்தான் பொருளேபோற் றமியவே தேயுமா
லொற்கத்து ளுதவியார்க் குதவாதான் மற்றவ
னெச்சத்து ளாயினுமஃ தெறியாது விடாதேகாண்;

கேளிர்க ணெஞ்சழுங்கக் கெழுவுற்ற செல்வங்க
ளாளிலான் குடியேபோற் றமியவே தேயுமாற்
சூள்பொய்த்த மனத்தவன் வினைவாய்ப்பின் மற்றவன்
வாள்வாய்நன் றாயினுமஃ தெறியாது விடாதேகாண்;

ஆங்கு,

அனைத்தினிப் பெரும வதனிலை நினைத்துக்காண்
சினைஇய வேந்த னெயிற்புறத் திறுத்த
வினைவரு பருவரல் போலத்
துனைவரு நெஞ்சமொடு வருந்தினள் பெரிதே.

இது வரைவு நீட்டித்துழித் தலைவியது ஆற்றாமைகூறித் தலைவனை வரைவு கடாயது.

(இ-ள்.) நிரைதிமில் * * * சேர்ப்பகேள்—எ-து, நிரைத்த திமில்கள் களிறுகத் திரையொலிக்கின்ற ஓசை பறையாக இனத்தினையும் அழகிய சிறகினையுமுடைய கரையைச் சேர்ந்த புட்கள் காலாட்படையாகப் பாண்டியன் பகைவர்மேற் படையெழுச்சியாய்ச் சென்றாலொத்த செலவினையுடைத்தாகிய வலியினையுடைய கடலைச் சேர்ந்த நிலத்தையுடையவனே! யான் கூறுகின்றதனைக் கேள்; எ - று.

தான் பாதுகாக்கின்ற கரையை அரசனைப் போலே சென்று அழிக்கின்ற கடற்சேர்ப்பனென்றதனாற் தான் பாதுகாக்கப் படுகின்ற நம்மை வரைந்துகொண்டு பாதுகாவாமல் அழிக்கின்றானென உள்ளுறையுவமந் தந்தவாறுணர்க. இனிப் பகையின்றி இருக்கின்ற கடல் பகைபோற்றோன்றினாற்போல அயலார் பகைபோல அலர்கூறி வருத்துகின்றார் என்றலும் ஒன்று.

கற்பித்தார் * * * விடாதே காண்—எ-து, தனக்கோர் வருத்தமுற்றவிடத்து உதவினவர்கட்கு ஓர் வருத்தம் வந்தால் உதவாதவன், தன்னை நூன்முதலிய கற்பித்த ஆசிரியன் தன்பால் ஒன்று பெறாமல் மனம்வருந்தத், தன் கைப்பொருளை அக்கல்விப்பொருட்குக் கைம்மாறாகக் கொடுத்து உண்ணாய்த், தான்கற்ற விச்சையிடத்தே தப்புப்பண்ணிக்கொண்டவனுடைய கல்விப்பொருள் நாடோறுந் தேயுமாறுபோலத், தானே தானாகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப் பின்பு அச்செய்ந்நன்றிக் கேடாகிய அது தன்னுடம்பினை ஒழித்து உயிர்போனவிடத்தேயாயினும் நுகர்வியாமற் போகாதுகாண்; எ-று.

கேளிர்க * * * விடாதே காண்—எ-து, தான் சூளுறுகின்ற சூளுறவினைக் காண்கின்றவர் மனங்கொள்ளும்படி சூளுற்ற மனத்தையுடையவன் தான் சூளுற்ற காரியத்தினை முடிவுபோக்காது பொய்த்துவிடுவனாயிற், தன்னைச் சேர்ந்து வாழுஞ் சுற்றத்தாருடைய நெஞ்சுதான் ஒன்றை அறியாமையால் வருந்தும்படி தன்னோடே கெழு

முதலுற்ற செல்வத்திடத்தேதானின்று அச்செல்வத்தை மேலேமேலே வளர்க்கும் முயற்சிதானும் இல்லாதவனுடைய குடி நாடோறுந் தேயுமாறுபோலத் தானே தானுகத் தேயாநிற்பன்; அதுவேயன்றிப் பின்னர் அச்சூளுறவினைப் பொய்த்த தீவினை மறுமையில் விரவின் அது வாளின் வாய்கூரிதாய்ச் சுவர்க்கம் பெற்றானாயினும் நுகர்வியாமற் போகாதுகாண் ; எ - று.

இது வரைந்துசொல்வல் எனச் சூளுற்றதனைப் பொய்த்தாய் என்றாள்.

ஆங்கு அசை.

அனைத்தினிப் * * * பெரிதே—எ-து, பெருமா ! செய்ந்நன்றிக்கேடு பொய்ச்சூளுறவாகிய தீவினையின் தன்மை யாம் முற்கூறிய அத்தன்மைத்து, இனி நீதான் அத்தன்மைத்தாதலை நின் மனத்தால் நினைந்துபார்; இவள் தான் தன்பகைவனோடு சினத்த அரைசன் அவன் எயிற்புறத்தே சென்று விட்டவினையால் உழிஞையானுக்கு வந்த வருத்தம்போலே வரைவு கடிதின்முடிதற்கு விரைதல் வரும் நெஞ்சத்தாலே பெரிதும் வருந்தினாள்; இனி அவ்வருத்தம் நீங்கும்படி கடிதின் வரைவாயாக எனவரைவுகடாயினாள் ; எ-று.

இதனாற் தலைவற்கு அசைவுபிறந்தது.

இது சிறுமைக்கு எல்லைகூறிய நான்கடியின்றி மூன்றடியான்வந்த தரவும் நான்கடித்தாழிசை இரண்டும் ஆசிரியச்சுரிதகமும் வந்தமையில் யாப்பின் வேறுபட்ட பாநிலைவகைச் கொச்சகம். (ங.உ)

கருo. அலர்ந்திகழ் நறுங்கொன்றை யலங்கலந் தெரியலா
னிலங்கெயி லெய்ப்பிறந்த வெரிபோல வெவ்வாயுங்
கனைகதிர் தெறுதலிற் கடுத்தெழுந்த காமத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கழன்
மயங்கதர் மறுகலின் மலைதலைக் கொண்டென
விசும்புற நிவந்தழலும் விலங்கரு வெஞ்சுரம் ;

இறந்துதா மெண்ணிய வெய்துதல் வேட்கையா
லறந்துறந் தாயிழா யாக்கத்திற் பிரிந்தவர்
பிறங்குநீர் சடைக்கரந்தா னணியன்ன நின்னிறம்
பசந்துநீ யினையயாய் நீக்கலு நீப்பவோ ;

கரிகாய்ந்த கவலைத்தாய்க் கல்காய்ந்த காட்டகம்
வெருவந்த வாறென்னர் விழுப்பொருட் ககன்றவ
ருருவவேற் றூர்தியா னெண்ணக்க வலையனநின்
னுருவிழந் திணையையா யுள்ளலு முள்ளுபவோ;

கொதித்துராய்க் குன்றிவர்ந்து கொடிக்கொண்ட கோடையா
லொதுக்கரிய நெறியென்று ரொண்பொருட் ககன்றவர்
புதுத்திங்கட் கண்ணியான் பொற்பூண்ஞான் றன்னநின்
கதுப்புலறுங் கவினையாய்க் காண்டலுங் காண்பவோ;

ஆங்கு,

அரும்பெற லாதிரையா னணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல வொருங்கவர்
பொய்யா ராகுத றெளிந்தன
மையீ ரோதி மடமொழி யோயே.

இது பொருள்வயிற் பிரிந்த தலைவனை நினைத்து ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

(இ-ள்.) அலர்ந்திகழ் * * * வெஞ்சுரம்—எ-து, நீர்நிலைக்கருகே விளங்குகின்ற அலங்கலையுடைய கொன்றைமாலையையுடைய இறைவன் திரிபுரத்தை எய்கையினாலே தோன்றின முழங்கும் வெம்மையையுடைய நெருப்பு விசும்புற நிவந்து அழலுமாறு போலச் செறிந்த கிரணங்களையுடைய ஞாயிறு எவ்வாயுஞ் சுடுகையினாலே முளிந்த மூங்கில் தம்மிலே இழைதலைக்கொண்டதாக அதனிடத்தே கடுத்தெழுந்த முழங்கிய காட்டுத்தீ அவ்விடத்தைக் கைக்கொண்டு விசும்பிலே உற ஓங்கி வெம்மையைச்செய்யும், விலங்குகள் பலகாலுந் திரிகையினாலே மயங்கின அதரையுடைய, மலைகள் பரந்து குறுக்கிட்டுக் கிடக்கும் போதற்கு அரிய சுரத்தை; எ-று.

செய்யுஞ்சுரம்,அதரையுடையசுரம்,போதற்கரியசுரம், என்க.

விலங்கு வருவிக்க. அலங்கலையுடைய கொன்றை என்றார் தாராகப் பூத்தலின். அலங்கல் அசைவுமாம்.

இறந்துதா * * * நீப்பவோ—எ-து, ஆயிழாய்! தாம் எண்ணிய காரியங்களைப் பெறுதலானுள்ள விருப்பத்தாலே அறத்தினைக்

கைவிட்டு வெஞ்சுரத்தையிறந்து பிறங்குகின்ற நீரைச் சடையிலே மறைத்தவனை ஒத்த பொருளாக்கத்திலே பிரிந்தவர் அழகினையுடைய நின்னிறம் பசந்து நீ இத்தன்மையையாக நின்னைக் கைவிடுதலுஞ் செய்வரோ ? அங்ஙனஞ் செய்யார்காண் , எ - று.

இறைவனை ஒத்தபொருள் என்றார், பொருள் நின்றுழி நில்லாது பலரிடத்துஞ் சென்றதேனும் ஒன்றானுந் தனக்குக் கேடின்றி இருத்தலின். அணி அழகு.

கரிகாய்ந்த * * * முள்ளுபவோ—எ-து, வெந்த கரியினையுடைய பல வழியினையுடைத்தாய்க் கற்கள் காய்ந்த காட்டகத்தை வெருவுதல் வந்த வழியென்று கருதாராய் வடிவையுடைய ஏறுகிய ஊர்தியையுடையானை ஒத்த விழுப்பொருட்கு அகன்றவர் நக்க ஒள்ளிதாகிய வளையினையுடைய நின்னுருவை இழந்து நீ இத்தன்மையாக அப்பொருளையே நினைத்தலையுஞ் செய்வாரோ? அங்ஙனஞ் செய்யார் காண் ; எ - று.

நக்க என்னும்எச்சம் ஒள்ளிதாகிய என்னும் வினைகொண்டது.

கொதித்துராய்க் * * * காண்பவோ—எ-து, ஞாயிறு கீழ்த் திசையிடத்து உதயகிரியிலே வந்து தோன்றிப் பின்பு கொதித்துப் பரந்து தான்கொண்ட சோடைக் காலத்தாலே போதற்கு அரிய வழியென்று கருதாராய்ப் புதிய திங்களாகிய கண்ணியையுடையானை ஒத்த ஒள்ளிய பொருட்கு அகன்றவர் பொன்னாற்செய்த தலைக்கோலங்கள் தாழ்ந்து விளங்கின நின் மயிர் அவ்வாறன்றிக் காய்கின்ற அழகை நீயுடையையாக அப்பொருள் வேட்கையை மனத்தாற் காணுதலையுஞ்செய்வரோ ? அங்ஙனஞ் செய்யார்காண்; எ-று.

ஆங்கு அசை.

அரும்பெற * * * யோயே—எ-து, கருமையினையும் நெய்ப்பினையுமுடைய ஓதியினையும் மடப்பத்தையுடைய மொழியினையுமுடையாய்! பெறுதற்கு அரிய ஆதிரைநாளையுடைய இறைவன் திருமேனி அழகைப் பெறும்படி மலர்ந்த பெரிய குளிர்ந்த இச்சண்பகம் பருவம்பொய்யாதவாறுபோல அவர் தாங் கூறிய பருவத்தைப் பொய்யாராய் வருதலை அவர் கூறிய கூற்றால் நீயும் யானும் ஒருங்கு தெளிந்தேம்; அங்ஙனந் தெளிந்த பருவங் கழிவதற்கு முன்னே வருவர்; அவர் மொழியைத் தெளிவாயாக என ஆற்றுவித்தாள்; எ-று.

இது கைம்மிகலென்னும் மெய்ப்பாடு எய்தி[illegible] தலைவிக்கு பின்னர்ச் சூழ்ச்சி பிறந்தது. இஃது இளவேனி[illegible] பருவங்குறித்[illegible] வற்புறுத்திப் பிரிய ஆற்றியிருந்து அப்பருவம் [illegible]னர் ஆற்[illegible] ளாய் இரங்குகின்ற தலைவியைத் தோழி ஆற்று[illegible]லான் இரக்கமா கிய உரி[illegible] சிறத்தலின் அவ்வுரிப்பொருள் முதலிலுங் [illegible] விலுஞ் [illegible]ன்று இரக்கத்திற்கு உரிய [illegible]தலிற் கோத்தார். "முதல[illegible] பொருளென்ற மூன்றி - [illegible] காலை முறைசிற[illegible] தனவே - [illegible]காலை" என்றாராகலின். இது பாலைக்கு [illegible] அதற்கு உரிய உரிப்பொருள் சிறவாமல் நெய்தற்[illegible]ரிப்பொருள் சிறந்ததாயிற்று.

இது [illegible] அதனகப்பட்டுவந்த சரிதகத்தான் இற்ற ஒத்[illegible] (௩௩)

[illegible] குறிஞ்சி[illegible]நத நெய்தலெனச் - சொல்லி[illegible] முறையாற் சொல்லவும் படுமே" என்புழிச் சொல்லாதமுறையா[illegible] சொல்லவும்படுமென்றலின் இத்தொகையைப் பாலை குறிஞ்சி [illegible] தம் முல்லைநெய்தலென இம்முறையே கோத்தார் நல்லந்துவனா[illegible].

நெய்தற்கலி முற்றும்.

கலித்தொகையுரை முற்றும்.

# விளம்பரம்.

---

☞ இதன் அடியிற் குறித்த புத்தகங்கள் சென்னபட்டணத்தில் வித்தியானுபாலனயந்திரசாலையில் ந. க. சதா[illegible]வப்பிள்ளையவர்களிடத்துங், கலாரத்நாகர அ[illegible]க்கூடத்தில் ஊ. புஷ்பரதச்செட்டியாரவர்களிடத்துஞ், சிதம்பரத்திற் சைவப்பிரகாசவித்தியாசாலை விசாரணைக்கருத்த[illegible]பொன்னுசாமிப்பிள்ளையவர்களிடத்தும், யாழ்ப்பா[illegible] கம் அ. குமாரசாமிப்பிள்ளையவர்களிடத்துந், [illegible] புத்தகவியாபாரம் தா. திருவேங்கட[illegible]ள்ளையவர்கள[illegible] திருநெல்வேலியிற் புத்தகவியாபா[illegible] சொக்கலிங்கபிள்ளையவர்களிடத்தும் வாங்கிக்கொள்ளலாம்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| தொல்காப்பியம், சொல்லதிகாரம், சேனாவரையம் | ... | ௨ | ௦ |
| ௸ பொருளதிகாரம், நச்சினார்க்கினியம் | ... | ௬ | ௦ |
| * நல்லந்துவனார் கலித்தொகை | ... | ௩ | ௮ |
| * தணிகைப்புராணம் | ... | ௩ | ௦ |
| வீரசோழியம் | ... | ௧ | ௮ |
| இறையனார் அகப்பொருள் | ... | ௧ | ௮ |
| * † இலக்கணவிளக்கம் கையொப்பக்காரருக்கு | ... | ௫ | ௦ |
| ,, ஏனையோர்க்கு | ... | ௭ | ௦ |

---

* பாடசாலை மாணாக்கர் ஒருங்கு சேர்ந்து தத்தம் வித்தியாசாலைத் தலைவர் வழியாக நேரே என்னிடத்திலிருந்து ஒரே முறையில் ௨௫ - பிரதிக்குக் குறையாமல் அழைப்பித்தால் இவை மூன்றும் அரைவிலைக்குக் கொடுக்கப்படும்.

* † அச்சிலிருக்கின்றது. சர்வதாரி வருஷத்தில் வெளியாகும்.

புதுக்கோட்டை<br>சர்வஜித்து ௵ ஆடி ௴. } சி. வை. தா.